www.tntextbook.org

தமிழ்நாடு அரசு

## மேல்நிலை இரண்டாம் ஆண்டு

# அறவியலும் இந்தியப் பண்பாடும்

தமிழ்நாடு அரசு விலையில்லாப் பாடநூல் வழங்கும் திட்டத்தின்கீழ் வெளியிடப்பட்டது

## பள்ளிக் கல்வித்துறை

தீண்டாமை மனித நேயமற்ற செயலும் பெருங்குற்றமும் ஆகும்

11th Ethics Tamil_front pages.indd 1 27-03-2019 16:01:42

www.tntextbook.org

தமிழ்நாடு அரசு

முதல்பதிப்பு – *2019*

(புதிய பாடத்திட்டத்தின் கீழ்
வெளியிடப்பட்ட நூல்)

விற்பனைக்கு அன்று

பாடநூல் உருவாக்கமும்
தொகுப்பும்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம்
© SCERT 2019

நூல் அச்சாக்கம்

தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம்
www.textbooksonline.tn.nic.in



11th Ethics Tamil_front pages.indd 2 27-03-2019 16:01:42

# இந்தியக் குடிமைப் பணி முதன்மைத் தேர்வில் அறவியல்

## பொதுப்படிப்புகள் : IV அறவியல், ஒருங்கிணைந்த பண்புகள் மற்றும் திறன்கள்

மாணாக்கர்களின் மனப்பான்மை மற்றும் அணுகு முறையை அளந்தறியும் வகையில் இத்தாளில் வினாக்கள் அமையும். பொதுவாழ்வில் ஒழுங்கு, நேர்மை ஆகியவற்றைக் கடைப்பிடிப்பதில் ஏற்படக்கூடிய சிக்கல்களை எதிர்கொள்ளும் திறன், சமுதாயத்தில் நிகழக்கூடிய பல்வேறு சிக்கல்களுக்குத் தீர்வு காணும் திறன் ஆகியவற்றை அளந்தறியும் வகையிலும் வினாக்கள் அமையும். இவ்வகையான வினாக்கள், தனியாள் வாழ்வில் நடந்த நிகழ்வுகளின் அடிப்படையில் கேட்கப்படும். கீழ்க்காணும் பகுதிகளை உள்ளடக்கியதாக இத்தாள் அமையும்.

### அறவியல் மற்றும் மானுடத் தொடர்புகள்

மனிதச் செயல்பாடுகளில் அறவியல் சார்ந்த இன்றியமையாத கூறுகள், அவற்றைத் தீர்மானிக்கின்ற செயல்களும் விளைவுகளும்; அறவியலின் பரிமாணங்கள்; தனியாள் தொடர்பு மற்றும் பொது மக்கள் தொடர்பு சார்ந்த அறவியல் கருத்துகள்.

### மானுட விழுமியங்கள்

சிறந்த தலைவர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், நிர்வாகிகள் ஆகியோரின் வாழ்வில் நடைபெற்ற நிகழ்வுகளிலிருந்து பெறக்கூடிய பட்டறிப் படிப்பினைகள் வாழ்வியல் மதிப்புகளை வளர்த்தெடுப்பதில் குடும்பம், சமூகம் மற்றும் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் பங்கு.

### மனப்பான்மை

- உள்ளடக்கம், அமைப்பு, செயல்திறன்: சிந்தனையிலும் நடத்தையிலும் மனப்பான்மையின் தாக்கமும் தொடர்பும்: அறம் மற்றும் அரசியல் சார்ந்த மனப்பான்மை: சமூகத்தாக்கமும் தூண்டலும்.

**குடிமைப் பணிக்கான நாட்டமும் அடிப்படை விழுமியங்களும்**

- நேர்மை, நடுவுநிலைமை, ஒருபால் கோடாமை, பொதுப் பணியில் அர்ப்பணிப்பு, பிறர்நிலையில் தன்னை வைத்துப் பார்த்தல், சகிப்புத் தன்மை, நலிவடைந்த பிரிவினர் மீது கனிவு.

**மெய்ப்பாட்டு நுண்ணறிவு**

கருத்தாக்கங்கள் அவற்றின் பயன்பாடு மற்றும் ஆளுகையிலும் நிர்வாகத்திலும் அதனைச் செயல்படுத்துதல்.

- உலக, இந்திய அளவிலான அறவியல் சிந்தனையாளர்கள் மற்றும் தத்துவவாதிகளின் பங்களிப்புகள்.
- பொது/குடிமைப்பணி விழுமியங்கள் மற்றும் பொதுநிர்வாகத்தில் அறம்: நிலைமையும் பிரச்னைகளும்: அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் அறவியல் சார்ந்த கவலைகளும் குழப்பங்களும்:
- அறவியல் வழிகாட்டு மூலங்களாகத் திகழும் சட்டங்கள், விதிகள், ஒழுங்குமுறைகள் மற்றும் மனச்சாட்சி: பொறுப்புணர்வும் அறம் சார்ந்த ஆளுகையும்: ஆளுகையில் அறவியல் மற்றும் ஒழுக்கவியல் வலுப்படுத்துதல்.
- பன்னாட்டு உறவுகள் நிதி வழங்கல் மற்றும் நிறும ஆளுகையில் அறம் சார்ந்த பிரச்சினைகள்.
- ஆளுகையில் நேர்மை: பொதுச்சேவை குறித்த கருத்தாக்கம்: ஆளுகை மற்றும் நேர்மைக்கான தத்துவார்த்த அடிப்படை.
- அரசாங்கத்தில் தகவல் பகிர்வும் வெளிப்படைத் தன்மையும், தகவல் அறியும் உரிமை, அறம் சார்ந்த விதிகள், நடத்தை விதிகள்.
- குடிமக்கள்பட்டயங்கள், பணிப்பண்பாட்டு சேவை வழங்குதலின் தரம், பொது நிதிப் பயன்பாடு, ஊழலுக்கெதிரான சவால்கள்.

மேற்கண்ட கூறுகள் குறித்த தனியாள் ஆய்வு அடிப்படை சார்ந்த வினாக்களாக அமையும்.

## வாழ்வியல் கூறுகளின் சிறந்த வெளிப்பாடாகத் திகழும் அறத்தையும் பண்பாட்டையும் கருப்பொருளாகக் கொண்டு, நற்பண்புகளை விதைக்கும் பெட்டகமாய் இப்பாடநூல்




பாடநூலில் உள்ள விரைவு குறியீட்டைப் (QR Code) பயன்படுத்துவோம்! எப்படி?

- உங்கள் திறன்பேசியில், கூகுள் playstore /ஆப்பிள் app store கொண்டு QR Code ஸ்கேனர் செயலியை இலவசமாகப் பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்க.
- செயலியைத் திறந்தவுடன், ஸ்கேன் செய்யும் பொத்தானை அழுத்தித் திரையில் தோன்றும் கேமராவை QR Code–இன் அருகில் கொண்டு செல்லவும்.
- ஸ்கேன் செய்வதன் மூலம் திரையில் தோன்றும் உரலியைச் (URL) சொடுக்க, அதன் விளக்கப் பக்கத்திற்குச் செல்லும்.

www.tntextbook.org

# பொருளடக்கம்


| வ.எண். | பாடத்தலைப்புகள் | ப. எண் |
|---|---|---|
| 1 | இந்தியப் பண்பாட்டின் இயல்புகள் | 1 |
| 2 | வேற்றுமையில் ஒற்றுமை | 18 |
| 3 | வேத காலப் பண்பாடு | 35 |
| 4 | இந்தியப் பண்பாடும் சமயங்களும் | 57 |
| 5 | இந்தியப் பண்பாட்டிற்குப் பேரரசுகளின் கொடை | 86 |
| 6 | பக்தி இயக்கம் | 149 |
| 7 | சமூக – சமய சீர்திருத்த இயக்கங்கள் | 173 |
| 8 | யோகம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள் | 195 |
| 9 | இந்தியப் பண்பாடும் சுற்றுச்சூழலும் | 222 |
| 10 | உலகிற்கு இந்தியப் பண்பாட்டின் கொடை | 238 |


BZME12
மின் நூல்

NW98PX
மதிப்பீடு

B248_12_ETH_IND_CUL_TM
இணைய வளங்கள்



11th Ethics Tamil_front pages.indd 5 27-03-2019 16:01:43

www.tntextbook.org



11th Ethics Tamil_front pages.indd 6 27-03-2019 16:01:43

# அலகு 1

# இந்தியப் பண்பாட்டின் இயல்புகள்

DPGX4P

## கற்றல் நோக்கங்கள்

- பண்பாடு என்னும் சொல்லின் பொருளை அறியச்செய்தல்.
- பண்பாட்டிற்குரிய வரைவிலக்கணத்தைப் புரிந்துகொள்ளச் செய்தல்.
- இந்தியப் பண்பாட்டை தொன்மைச்சான்றுகள் வழியாக அறியச்செய்தல்.
- பண்பாட்டின் இயல்புகளை அறிந்துகொள்ளவும், அவற்றைப் பின்பற்றிச் சிறந்த பண்பாளர்களாக உருவாகச் செய்தல்.
- இந்தியப் பண்பாட்டின் சிறப்புகளையும் பெருமைகளையும் அறியச்செய்து, அவற்றைப் போற்றவும் பாதுகாக்கவும் செய்தல்.

## நுழைவு வாயில்

உலக நாடுகளுள் ஒன்றான இந்தியா, வளமையும், பெருமையும் மிக்கதாக விளங்குகிறது. அதன் பெருமைக்குச் சிறப்பு சேர்ப்பது இந்தியப் பண்பாடாகும். இப்பண்பாடு தனிச்சிறப்புடையது, பழைமையையும், பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் கொண்டது. உலகளாவிய பண்பாட்டுக் கூறுகளைத் தன்னிடத்தே கொண்டும், உலகிலுள்ள மற்ற நாடுகள் பின்பற்றத்தக்க வகையிலும் சிறப்புற்று விளங்குவது இந்தியப் பண்பாடாகும்.

இப்பாடப்பகுதி, பண்பாடு அதன் விளக்கம், வரையறைகள், இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் தொன்மைச் சான்றுகள், பண்பாட்டின் இயல்புகள், அதன் சிறப்புக் கூறுகள், பண்பாட்டுக் கல்வியினால் நாம் அடையும் பயன்கள் ஆகியவற்றை அறிய உதவும் வாயிலாக அமைகின்றது.

## பண்பாடு – விளக்கம்

"பண்படு" என்னும் தமிழ்ச் சொல்லிலிருந்தே பண்பாடு தோன்றியது. பண்படுத்துதல் என்பதற்குச் செம்மைப்படுத்துதல் அல்லது சீர்படுத்துதல் என்பது பொருள். பண்படுத்துதல் என்னும் சொல் வழக்கு, நிலத்தைப் பண்படுத்துவதற்கும், உள்ளத்தைப் பண்படுத்துவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

'Cultura' என்ற இலத்தீன் சொல்லுக்குச் சூழலுக்கு ஏற்ற வளர்ச்சி (In conditions suitable for growth) என்று பொருள். இச்சொல்லின் திரிபே 'Culture' என ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், 1937இல் 'Culture' என்னும் சொல்லுக்கு இணையாகப் 'பண்பாடு' என்னும் தமிழ்ச் சொல்லை டி. கே. சிதம்பரநாதனார் பயன்படுத்தியதாகப் பேராசிரியர் எஸ். வையாபுரியார் குறிப்பிடுகிறார்.

## பண்பாடு – வரையறைகள்

பண்பாடு என்பது பண்பட்ட, பக்குவப்பட்ட, சீரான, நேரிய வழியில் செல்லும் ஒழுக்கவியல் கோட்பாடாகும். இன்று நாம் பண்பாடு என்னும் சொல்லால் குறிப்பிடுவதை நம் முன்னோர்கள் பண்பு,



XII Ethics_Lesson 1.indd 1 05-04-2019 10:22:58

www.tntextbook.org

பண்பாடு என்பது, விழுமியங்களின் தொகுதி. அது கலை, இலக்கியம், சமயம், சமூக நிறுவனங்கள் மற்றும் தனிமனிதச் செயல்பாடுகள் மூலம் வெளிப்படுகிறது. (Culture is a characteristic way of life, inspired by fundamental values, according to which people live.)

பண்பாடு என்பது, மனிதனின் அகம். அதை, வெளிப்படுத்தினால் நாகரிகம். (Culture is the state of inner Man. His external expression is Civilization.) நாகரிகம் மாறுதலுக்கு உள்ளாகும். பண்பாடு, நிலைத்து நிற்கும்.

பண்புடைமை, சால்பு, சால்புடைமை, சான்றாண்மை போன்ற சொற்களால் குறிப்பிட்டுள்ளனர். இச்சொற்கள் வெவ்வேறு இடங்களில் வேறு சில பண்பாட்டுடன் தொடர்புடைய பொருள்களைக் குறித்தாலும் பல இடங்களில் பண்பாட்டையே குறிக்கிறது. கலித்தொகையில், **"பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகுதல்"** என்றும், வள்ளுவத்தில், **"பண்புடையார்ப் பட்டுண்டு உலகு"** என்றும் குறிப்பிடப்படுகின்றன. பண்பாடு உடையோரைச் சான்றோர் என்றும், ஒழுக்கமுடையோர் என்றும், மாசற்ற காட்சிகளை உடையோர் என்றும் தமிழிலக்கியங்கள் குறிப்பிடுகின்றன.

பண்பாடு என்பது, ஓர் இனத்தாரின் கொள்கைகள், கோட்பாடுகள், நோக்கங்கள், வாழ்க்கைமுறைகள், பழக்கவழக்கங்கள், சமூகச்சட்டங்கள், சமயங்கள், வழிபாட்டுமுறைகள், களவு, கற்பு, அக, புறத்திணைமரபுகள், இலக்கியமரபுகள், அரசியலமைப்புகள், ஆடை, அணிகலன்கள், திருவிழாக்கள், உணவுமுறை, பொழுதுபோக்குகள் விளையாட்டுகள் ஆகிய எல்லாவற்றையும் ஒருங்கே பெற்று அமைவதாகும்.

ஓர் இனத்தாரின் பண்பாட்டை அறிந்துகொள்ள எழுத்திலக்கியங்கள் பயன்படுவதைப் போல, நாட்டுப்புற இலக்கியங்களும் பயன்படும். அதனை நாட்டுப்புறப்பாடல்கள்,நாடோடி இலக்கியங்கள், பழமொழிகள், விடுகதைகள், முதுமொழிகள், இசை, நாடகம், நாட்டியம், செந்தமிழ், கொடுந்தமிழ் அமைப்புகள், வளர்ச்சிகள் ஆகியவற்றிலும் காணலாம். மேலும், ஓவியம், சிற்பம், கட்டடக்கலை போன்ற கலைகளிலும் அவரவரின் பண்பாடு வெளிப்படும்.

**வாழ்வியற்களஞ்சியம்:** "மக்கள் தலைமுறை தலைமுறையாகக் குழுவாகச் சேர்ந்து கற்ற நடத்தை முறைகளும், பழக்கங்களும், மரபுகளும் சேர்ந்ததே பண்பாடு".

**ஆங்கில அகராதி:** "பயிற்சி, அனுபவம் ஆகியவற்றின்மூலம் உடல், உள்ளம், உணர்வு ஆகியன அடையும் வளர்ச்சியே பண்பாடு".


## பண்பாடு பற்றிய அறிஞர்களின் வரையறை



விவேகானந்தர்

"பண்பாடு அல்லது கலாச்சாரம் என்பது, சமயம், பாரம்பரியம், பொருளாதாரம் ஆகியவற்றைக்கொண்டு நிர்ணயிக்கப்படுகிறது".

– விவேகானந்தர்



தேவநேயப் பாவாணர்

"பண்படுவது பண்பாடு. பண்படுதல் என்பது சீர்படுதல் அல்லது திருந்துதல். திருந்திய நிலத்தைப் பண்பட்ட அல்லது பண்படுத்தப்பட்ட நிலமென்றும், திருந்திய தமிழைப் பண்பட்ட செந்தமிழ் என்றும், திருந்திய உள்ளத்தைப் பண்பட்ட உள்ளமென்றும் சொல்வது வழக்கம்."

– தேவநேயப் பாவாணர்

"பண்பாடு என்பது, பொதுவாக நாகரிகத்தில் அடங்கியதாகும். காலப்போக்கில் மக்கள் தம் வளர்ச்சியின் மனநல ஆக்கமே பண்பாடாகப் பெயர் பெறுகின்றது".

– செ. வைத்தியலிங்கம்



XII Ethics_Lesson 1.indd 2 05-04-2019 10:22:58

www.tntextbook.org



ஈ. பி. டெய்லர்

"மனிதன் சமுதாயத்தில் ஓர் அங்கத்தினன். இந்நிலையில் அவன் அடைந்துள்ள அறிவு, நம்பிக்கை, கலை ஒழுக்கக் கோட்பாடுகள், சட்டம், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை தன்னுள் அடக்கிய ஒரு முழுமையான தொகுப்பே பண்பாடு".

– ஈ. பி. டெய்லர்

மக்களின் சிந்தனையும், செயலும், நடவடிக்கையும் ஒவ்வோர் இனத்தவரிடமிருந்து வேறுபட்டுக் காணப்படுவது பண்பாடாகும்.

– ரூத் பெனிடிக்ட்

"அவரவர் அன்றாடப் பணிகளை நேர்மையான மனநிலையுடனும் நேர்மையான நோக்குடனும், மகிழ்ச்சியுடனும் செய்வதில்தான் பண்பாடு மிளிர்கிறது".


– வால்டேர்

"பண்பாடு என்பது, இயற்கையின்மீதும் தன்மீதும் மனிதன் கொண்டிருக்கும் கட்டுப்பாடு, மனிதனுடைய உடை, ஆயுதங்கள், கருவிகள், மறைவிடம், ஆன்மிகம், மொழி, இலக்கியம் போன்றவற்றை உள்ளடக்கியது".

– எல்வுட் மற்றும் பிரௌன்

"மனிதன் தன்னுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக் கொள்ள உருவாக்கிய கருவி பண்பாடு".

– சி. சி. நார்த்



மேத்யூ ஆர்னால்டு

"ஒருவர் தம்குணநலன்களை நிரப்புவதிலும், தம்மைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணுவதிலும் பேரவா கொண்டிருக்கும் நிலை பண்பாடாகும்".

– மேத்யூ ஆர்னால்டு

பண்பாடு என்பது, மக்களால் ஆக்கப்பெற்ற கருவி. இந்த ஊடகத்தைக்கொண்டே மக்கள் அவர்களின் தேவைகளை நிறைவு செய்து கொள்கின்றனர்".

– மாலினோசுக்கி

"பண்பாடு என்பது மக்கள் அனைவரும் கூட்டாகச் சேர்ந்து செயற்படும்போது உண்டாகும் நடத்தை முறைகளின் சேர்மமாகும். இஃது, அந்தந்தச் சமூகத்திற்கு மட்டுமே உரியது; உயிரியல் நிலையில் மரபுரிமையாக வராதது".

– ஆடம்சன் ஒபல்

"பண்பாடு என்பது, சீரிய வாழ்வுமுறை. இவ்வாழ்வுமுறை, மக்கள் நம்பிக்கை வைத்துள்ள அடிப்படை மதிப்பீடுகளினால் ஊக்குவிக்கப்படுகிறது".

– கே. எம். முன்ஷி

"தனிச் சிறப்புக்கூறுகள் நிறைந்த தனி இனச் சமுதாயத்தினரின் பண்புகளே பண்பாடு எனக் குறிப்பிடத்தக்கனவாகும்".

– அமெரிக்க மானிடவியலாளர்கள்

## இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் தொன்மைச் சான்றுகள்

நம் இந்திய நாடு பண்பாட்டுச் சிறப்புமிக்கது. அனைவராலும் போற்றத்தக்க வகையில் காணப்படும் அதன் பண்பாட்டுக் கூறுகளை அறிந்துகொள்வதற்குப் பல சான்றுகள் உதவுகின்றன. இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் சான்றுகளில் இலக்கியங்கள், தொல்பொருள்கள் மற்றும் அயல்நாட்டுக்குறிப்புகள் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.


## இலக்கியச் சான்றுகள்

ஒவ்வொரு காலக்கட்டத்திலும் நடந்த நிகழ்வுகளை அறிந்துகொள்ள இலக்கியங்கள் துணைபுரிகின்றன. அதனால்தாம் அவை, காலக் கண்ணாடிகள் எனச் சிறப்பித்துக் கூறப்பெறுகின்றன. நம் பண்பாட்டுக் கூறுகளின் சிறந்த வாயில்களாக இலக்கியங்கள் அமைந்துள்ளன எனில், அது மிகையாகாது.



XII Ethics_Lesson 1.indd 3 05-04-2019 10:22:58

www.tntextbook.org




> *மனித வாழ்க்கையைப் பிரதிபலித்துக்காட்டும் காலக் கண்ணாடியே இலக்கியம், ஆதலால், காலத்தின் கோலத்தை அந்தந்தக் கால இலக்கியங்களில் காணலாம் – ஜி. ஈ. டெரெவெலியான்*
>
> *(Literature is allusive; each book is rooted in the soil of the time when it was written – G. E. Trev-elyan)*

*இலக்கியச் சான்றுகளை எட்டுப் பிரிவுகளாகப் பகுத்துக் காணலாம். அவை பின்வருமாறு:*

## 1. வேதங்கள்

*இலக்கியச் சான்றுகளில் மிகவும் தொன்மை வாய்ந்தவை வேதங்கள். ரிக், யஜூர், சாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்களும் அக்காலத்தில் பின்பற்றப்பட்ட சடங்குகள், முறைகள் ஆகியவற்றை விளக்கியுள்ளன.*

*வேதங்கள் மற்றும் பிராமணங்கள், ஆரியர்களின் வழிபாடு, நம்பிக்கைகள் பற்றியும் ஆரண்யங்கள், உபநிடதங்கள் முதலியன அக்கால ஞானிகள், துறவிகள் ஆகியோரின் தத்துவப் பார்வை பற்றியும் எடுத்துரைக்கின்றன. மேலும் வானநூல், மருத்துவம், மொழிநூல் போன்றவற்றில் அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கைப் பற்றியும் கூறுகின்றன. வேள்விகளின் வகைகளையும், இல்லற, துறவறத்தாரின் வாழ்க்கை நெறிமுறைகளையும் நன்கு விவரிக்கின்றன.*

## 2. இதிகாசங்கள்

*இந்தியாவின் இருபெரும் இதிகாசங்களாக, இராமாயணமும், மகாபாரதமும் விளங்கின. இவற்றின் வாயிலாக நாடோடிகளாக வாழ்ந்த ஆரியர்கள், தங்களுக்கெனக் குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொண்டு வாழ்ந்தமையை அறியமுடிகிறது. அக்கால அரசியல், சமுதாயப் போராட்டங்கள், நகர வாழ்க்கை, வரிகள், தண்டனைகள், பல்வேறு மாந்தர்களின் வாழ்க்கை முறைகள் ஆகியவற்றையும் அறியமுடிகிறது. பின்வேத காலத்தில் தோன்றிய 'நான்கு வருணமுறை' இக்காலத்தில் வலிமை பெற்றன.*

## 3. தரும சாத்திரங்கள்

*வரலாற்றுச் சான்றுகளாகவும், பண்பாட்டுச் சான்றுகளாகவும், தரும சாத்திரங்கள் விளங்குகின்றன. மனு, யஜ்ன*



XII Ethics_Lesson 1.indd 4 05-04-2019 10:22:58

வால்கியர், விஷ்ணு, பிரகஸ்பதி, நாரதர் ஆகியோர் எழுதியவற்றையே தரும சாத்திர நூல்கள் என்கிறோம். இந்நூல்களின் வாயிலாக நீதி, தண்டனை வழங்கப்பட்ட முறைகள், அக்காலச் சட்டதிட்டங்கள், சமுதாய அமைப்புக்கேற்ற நெறிமுறைகள் ஆகியவற்றை அறியமுடிகிறது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் பதினொரு நூல்கள் அறக்கருத்துகளை வலியுறுத்துகின்றன. 'உலகப்பொதுமறை' என அனைவராலும் போற்றப்படும் 'திருக்குறள்', எக்காலத்துக்கும் ஏற்புடையதாய் உலக மக்களின் வாழ்வியலுக்கு உகந்த அறநெறிகளை எடுத்துரைக்கிறது. சமணமுனிவர்களால் பாடப்பெற்ற 'நாலடியார்' என்னும் நூலும் அறக்கருத்துகளை வெளிப்படுத்துகிறது. அறநெறிச்சாரம் என்னும் நூல், பண்பாட்டுக் கருத்துகளைப் புலப்படுத்துகிறது. ஔவையாரின் நீதிநூல்களுள் ஆத்திசூடி குறிப்பிடத்தக்கதாகும். பின்பற்றத்தக்க பண்பாட்டுக் கூறுகளை எளிய ஓரடிப் பாடலாக வெளிப்படுத்துகிறது. அவருடைய பிற நீதிநூல்கள், வாழ்வில் போற்ற வேண்டிய அறநெறிகளை வலியுறுத்துகின்றன.

## 4. பௌத்த சமய இலக்கியங்கள்

புத்தரின் அறிவுரைகளையும் கருத்துகளையும் எடுத்துரைப்பவை பௌத்த சமய இலக்கியங்களாகும். பாலி, பிராகிருதம் ஆகிய மொழிகளில் இவை எழுதப்பட்டுள்ளன. பௌத்த சமய நூல்கள் முப்பிரிவாக உள்ளன. அவை **சுத்த பீடகம், விநய பீடகம், அபிதம்ம பீடகம்** என்பனவாகும். சுத்த பீடகம், புத்தரின் அறிவுரைகளைக் கூறுகிறது. விநய பீடகம், பௌத்த துறவிகளுக்கான சட்டதிட்டங்கள், ஞான ஒழுக்க முறைகள் ஆகியவற்றைப்பற்றிக் கூறுகிறது. அபிதம்ம பீடகம், புத்தரின் தத்துவங்களை மிகச்சிறந்த முறையில் ஏழு படலங்களில் விரித்துரைக்கிறது. **மிலிந்தபான்ஹா, லலிதவிஸ்தரா, வைபுல்ய சூத்திரங்கள், நேத்திபிரகர்ணம், பேதக உபதேசம்** போன்றவை சில புத்த சமய நூல்களாகும். தமிழ்நாட்டில் பௌத்த சமயம் பரவியிருந்ததை மணிமேகலை முதலான காப்பியங்கள் வாயிலாக அறிலாம்.

## 5. சமண நூல்கள்

சமண நூல்கள், ஆகம சித்தாந்தங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. இவை அங்கங்களாகப் பகுக்கப்பட்டுச் சமண சமயக் கோட்பாடுகளை விளக்குகின்றன. சமண சமயம் சுவேதம்பரர், திகம்பரர் என இரு பிரிவாகப் பிரிந்தாலும் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்த நூல்கள் தோன்றின. தமிழில் எழுதப்பட்ட சீவக சிந்தாமணி, சிலப்பதிகாரம் முதலான பல்வேறு காப்பியங்களும், இலக்கண நூல்களும் சமணத்தின் தத்துவங்களை அறிய உதவுகின்றன.

## 6. தனி இலக்கியங்கள்

சங்ககால இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகியவற்றின் வாயிலாகத் தமிழர்களின் பண்பாட்டுச் சிறப்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**புறநானூற்றின் வாயிலாக வெளிப்படும் மேலும் சில பண்பாட்டுச் செய்திகள் பின்வருமாறு:**

- 10 வகை ஆடைகள், 28 வகை அணிகலன்கள், 67 வகை உணவுகள் பற்றிய குறிப்புகள்
- கடையேழு வள்ளல்களின் கொடைத்திறம், பாணர், விறலியர், கூத்தர் போன்றோரின் கலைத்திறம்
- பாரதப்போரின்போது, உதியன் சேரலாதன் என்னும் மன்னன், வீரர்களுக்கு உணவு கொடுத்தமை
- இறந்தவரைத் தாழியில் வைத்துப் புதைத்தல், நடுகல், கணவர் இறப்பிற்குப் பின், மங்கையர் அணிகலன்களைக் களைதல், கைம்மை நோன்பு நோற்றமை, உடன்கட்டை ஏறல்.



XII Ethics_Lesson 1.indd 5 05-04-2019 10:22:58

எட்டுத்தொகையுள் ஒன்றான அகநானூற்றின் வாயிலாகத் தமிழர் திருமண முறைகளைப்பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் பொதுமை நோக்கத்தைப் புறநானூறும், அன்பின் சிறப்பை ஐங்குறுநூறும், இல்லற வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய விருந்தோம்பும் பண்பு, பெரியோரை மதித்தல், வறுமையிலும் செம்மை போன்ற பண்புகளை நற்றிணையும், மார்கழி நோன்பு குறித்த செய்திகளைக் கலித்தொகையும் (59) குறிப்பிட்டுள்ளன.

## 7. நாட்டுப்புற இலக்கியங்கள்

ஏட்டில் எழுதா இலக்கியங்கள் எனப் போற்றப்படுபவை நாட்டுப்புற இலக்கியங்களாகும். இவை, ஒரு நாட்டு மக்களின் வரலாறு, நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள் போன்றவற்றை எடுத்தியம்புகின்றன. **'இலக்கியங்கள், காலங்காட்டும் கண்ணாடிகளாக விளங்க, நாட்டுப்புற இலக்கியங்கள் சமுதாய வளர்ச்சியைக்காட்டும் கண்ணாடிகளாக விளங்குகின்றன'** என்று, பேராசிரியர் சு. சக்திவேல் தமது 'நாட்டுப்புற இயல் ஆய்வு' என்னும் நூலில் கூறுகிறார்.

> நாட்டுப்புறவியலைக் குறிக்கும் Folklore என்ற சொல்லை, 1846இல் வில்லியம் ஜான் தாமசு என்பவர் உருவாக்கினார். **'பழங்காலப் பண்பாட்டின் எச்சம் (Cultural Survival) நாட்டுப்புறவியல்'** என்பது அவரது கருத்தாகும்.

நாட்டுப்புற இலக்கியங்கள், மக்களின் நம்பிக்கைகள், தெய்வ வழிபாடுகள், திருவிழாக்கள், விளையாட்டுகள், மருத்துவ முறைகள் முதலானவற்றை அறிந்துகொள்ள உதவுகின்றன. இவ்வகை இலக்கியங்களில் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், புராணக் கதைகள் போன்றவையும் அடங்கும். இவையாவும் பண்பாட்டுச் சிறப்புகளை வெளிப்படுத்துகின்றன.

## 8. நாட்டுப்புறப் பாடல்கள்

- காலத்தால் மாறுபடாத பண்புகள், ஒவ்வொரு நாட்டிலும் உள்ளன. நம் நாட்டிலும் கடவுள் நம்பிக்கை, பாவச் செயல் செய்வதற்கு அஞ்சுதல், சமயநெறிப் பற்று போன்றவை எக்காலத்துக்கும் உரியனவாக உள்ளன.
- மக்களின் வாழ்க்கையில் தாலாட்டுப் பாடல்கள்முதல் ஒப்பாரிப் பாடல்கள்வரை அனைத்து நிகழ்வுகளும் நாட்டுப்புறப் பாடல்களில் எதிரொலிக்கின்றன. நாட்டுப்புற மக்களது உணர்வுகளையும் பாடல் புனையும் ஆற்றலையும் கற்பனை வளத்தையும் நாம் இப்பாடல்களில் காணலாம்.
- தொல்காப்பியர் குறிப்பிடும் 'பண்ணத்தி' என்பது பாமரர் பாடல்களைக் குறித்தது. பழைமையான பாடல்களிலுள்ள பொருளையே தனக்குப் பாடுபொருளாகக்கொண்டு, பாட்டும் உரையும் போன்று செய்யப்படுவனவற்றைப் பண்ணத்தி என்றனர். பண் + நத்தி = பண்ணத்தி என்பது, பண்ணை விரும்புவது எனப் பொருள்படும். (பண்= பாடல்)

நாட்டுப்புற மக்கள், இயற்கையைத் தெய்வமாகப் போற்றியுள்ளனர் என்பதற்கு எடுத்துக்காட்டாகப் பின்வரும் பாடலைக் கூறலாம்.

*'சந்திரரே சூரியரே*
*சாமி பகவானே*
*இந்திரரே வாசுதேவா*
*இப்ப மழை பெய்யவேணும்*
*மந்தையிலே மாரியாயி*
*மலைமேல மாயவரே*
*இந்திரரே சூரியரே*
*இப்ப மழை பெய்யவேணும்'*



XII Ethics_Lesson 1.indd 6 05-04-2019 10:22:58

www.tntextbook.org

சமூக நிகழ்வுகளில், சமுதாயத்தில் உள்ள அனைவரும் கூடிப் பாடும் பாடல்களைக் கொண்டாட்டப் பாடல்கள் என்பர். திருமண நிகழ்வொன்றில் பாடப்படும் பாடலொன்று பின்வருமாறு:

*பிள்ளை பதினாறும் பெற்றுப்*
*பெருவாழ்வு வாழ்ந்திருங்கள்*
*மக்கள் பதினாறும் பெற்று*
*மங்களமாய் வாழ்ந்திருங்கள்*
*ஆல்போல் தழைத்து*
*அருகுபோல் வேரூன்றி*
*நலமுடனே எல்லாரும்*
*ஞானமுடன் வாழ்ந்திடுவீர்.*

இவ்வாறு, மக்களின் வாழ்வில் ஒவ்வொரு நிகழ்விலும் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல்கள், அவர்களின் பண்பாட்டுச் சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன.

## நாட்டுப்புறக் கதைகள்

இந்திய நாட்டில் பல்வேறு இடங்களில் வாழ்ந்த தொல்பழங்குடிமக்கள், உலகத்தைப் பற்றியும் உலகத்தோற்றத்தைப் பற்றியும் கதைகளாகப் புனைந்துள்ளனர். இவையே காலப்போக்கில் கற்பனைக் கதைகளாகவும், இதிகாசங்களாகவும், புராணங்களாகவும் தோற்றம் பெற்றன. பழங்காலச் சமுதாயத்தை அறிய இவ்வகைக் கதைகள் நமக்கு உதவுகின்றன. எனவே இந்தியா ஒரு கதைக்களஞ்சியமாக திகழ்கிறது.

'பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி யானும் பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்' என்னும் தொல்காப்பிய நூற்பா, பழங்காலத்திலேயே கதைகள் வழக்கிலிருந்தன என்பதைச் சுட்டுகின்றது.

பொழுதுபோக்கிற்காக உருவாக்கப்பட்ட கதைகள், வளரும் குழந்தைகளுக்கு நன்னெறி ஊட்டுவதற்காக நீதிக்கதைகளாகவும் தோற்றம் பெற்றன. மராட்டிய வீரர் சிவாஜி, இளம்வயதில் தம் தாயிடம் கேட்ட கதைகளே அவர் சிறந்த வீரராக உருவாக உதவின. அண்ணல் காந்தியடிகள், தம் இளம்வயதில் கேட்ட அரிச்சந்திரன் கதையே அவர்தம் வாழ்நாள் முழுதும் வாய்மையைக் கடைப்பிடிக்க உதவியது.

விக்கிரமாதித்தன் கதைகள், பஞ்ச தந்திரக் கதைகள், மரியாதை ராமன் கதைகள், தெனாலிராமன் கதைகள், இராயர் அப்பாஜி கதைகள், புத்தர் ஜாதகக் கதைகள், அக்பர் பீர்பால் கதைகள், மதன காமராசன் கதைகள், தமிழக நாட்டுப்புறக் கதைகள் போன்றவை சில நாட்டுப்புறக் கதைகளாகும்.

## நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

கதையைப் பாடலாகப் பாடுவதே கதைப்பாடல். குறிப்பிட்டதொரு பண்பாட்டில், குறிப்பிட்டதொரு சூழலில் ஒரு பாடகரோ, ஒரு குழுவினரோ சேர்ந்து, மக்கள்முன் எடுத்துரைத்து இசையுடன் நிகழ்த்துகின்ற பாடலே கதைப்பாடலாகும். இவ்வகைக் கதைப்பாடல், ஒரே ஒரு கதையைக்கொண்டோ, பல உள்கதைகளைக்கொண்டோ அமையலாம். இப்பாடல்கள், மக்களின் பேச்சுவழக்கிலேயே அமைந்திருந்தன.

காப்பியங்கள் தோன்றுவதற்கு மூலகாரணமாகக் கதைப்பாடல்கள் அமைந்துள்ளன. இதிகாசத் துணுக்குகள், கிராம தேவதைகளின் கதைகள், சமூகக் கதைகள், வரலாற்றுக் கதைகள் ஆகியன கதைப்பாடல்களாக இடம்பெறுகின்றன.

கதைப்பாடலுக்குத் தமிழில் 'அம்மானை' என்றும் பெயருண்டு. சிலப்பதிகாரத்தில் 'அம்மானை' என்ற சொல் முதன்முதலாகக் கையாளப்பட்டுள்ளது. கதைப்பாடல் நான்கு பகுதிகளைக் கொண்டுள்ளது. இறைவனை வழிபட்டுப் பாடலைத் தொடங்குவது **காப்பு அல்லது வழிபாடு.** தனக்குப் பாடம் சொன்ன குருவுக்கு வணக்கம் செய்து பாடுவது **குரு வணக்கம்.** பின்னர், நடந்த நிகழ்வைக் கதைப்பாடலாகப் பாடுவது **வரலாறு.** இறுதியாகக் கதை கேட்போரும், மற்றோரும் கடவுளர் அனைவரின் அருளும் பெற்று வாழ்க என வாழ்த்துவது **வாழி.**



XII Ethics_Lesson 1.indd 7 05-04-2019 10:22:59

இந்நான்கும் நாட்டுப்புறக் கதைப்பாடல்களில் இடம்பெறுகின்றன.

முத்துப்பட்டன் கதை, நல்லதங்காள் கதை, காத்தவராயன் கதைப்பாடல், வீரபாண்டியக் கட்டபொம்மு பாடல், பஞ்சபாண்டவர் வனவாசம், கான்சாகிபு சண்டை, சுடலைமாடன் கதை, வில்லுப்பாட்டு போன்றவை சில வரலாற்றுக் கதைப்பாடல்களாகும்.

கதைப்பாடல்களில் அக்காலச் சமுதாயநிலை புலப்படுகிறது. பழங்குடி மக்களின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், ஆகியவற்றை அறிந்துகொள்ள முடிகிறது. மாந்தரின் உயர்ந்த பண்பாட்டுக் கூறுகளையும், சமூகத்தின் சீர்கேடுகளையும் இப்பாடல்கள் விளக்குகின்றன. இவை, வீரகாவியங்களாகச் சித்திரிக்கப்படுகின்றன. இப்பாடல்களில் இடம்பெறும் கதைமாந்தர்கள், இறப்புக்குப்பின் தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர்.

## பழமொழிகள்

உலக மொழிகள் அனைத்திலும் பழமொழிகள் உள்ளன. தொன்மைக்காலம் முதல் வழங்கிவரும் இப்பழமொழிகள், மக்களின் பண்பாட்டு உயர்வைக் கணக்கிட்டுக்காட்டும் அளவுகோலாக விளங்குகின்றன. மக்களைக் கட்டுக்கோப்பாக வைப்பதற்கு இக்காலத்தில் அறநூல்களும் சட்டதிட்டங்களும் உள்ளன. ஆனால், இவை எதுவுமே இல்லாத தொன்மைக் காலத்தில், கட்டுக்கோப்பான நன்னெறியில் மக்களை வாழவைப்பதற்குப் பழமொழிகளே அடிப்படையாக அமைந்தன.

சமூகப் பண்புகளுள் தலைசிறந்தது ஒழுக்கமாகும். சமுதாயத்தில் மக்கள் நல்லொழுக்கத்துடன் வாழவேண்டும் என்பதை, **'ஒழுக்கம் உயர்வுதரும், ஒழுக்கம் உயர்குலத்தினும் உயர்வு'** போன்ற பழமொழிகள் உணர்த்துகின்றன. பிறருக்குக் கொடுத்து உதவவேண்டும் என்ற நற்பண்பினைப் **'பழுத்தமரமும் செழித்தசெல்வமும் பசியாற்றவே'** என்னும் பழமொழி உணர்த்துகிறது. விருந்தோம்பலின் பண்பை, **'அன்போடு அளிக்கும் கஞ்சி, அறுசுவை உணவை மிஞ்சும்'** என்ற பழமொழி விளக்குகிறது. **'கெடுவான் கேடு நினைப்பான்', 'தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்', 'முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்'** போன்ற பழமொழிகள் நல்லெண்ணம் கொண்டு, அறநெறியில் வாழவேண்டியதன் தேவையை எடுத்துரைக்கின்றன.

பழமொழிகள், மக்களின் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்துள்ளன. உண்பதற்குமுன் இலையில் உப்பு இடுவதும், உண்ட வீட்டுக்கு இரண்டகம் (தீங்கு) செய்யக்கூடாது என்பதை உணர்த்துவதற்கு **'உப்பிட்டவரை உள்ளளவும் நினை'** என்னும் பழமொழி தோன்றியது. மேலும், **'சோற்றுக்குமுன் உப்பு, பேச்சுக்குமுன் பழமொழி'** என்பது பழங்கால வழக்கில் இருந்தது. அக்காலத்தில், பஞ்சாயத்துகளில் ஊர்த்தலைவர் பழமொழியைச் சொல்லிவிட்டுத்தான் வழக்கு பற்றி ஆராயத் தொடங்குவார். அண்ணன், தம்பிக்குள் ஏதேனும் சிக்கல் என ஒரு வழக்கை ஆராயத் தொடங்குமுன், **'கரும்பு கட்டோடு இருந்தால், எறும்பால் ஒன்றும் செய்யாது'** என்று சொல்லிவிட்டுத்தான் பேசத் தொடங்குவாராம். இதனால், தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ளும் அண்ணன், தம்பிகள் மனந்திருந்தி, ஒற்றுமையுடன் வாழ்வதற்குப் பழமொழியே துணை செய்வதாய் அமைந்திருந்தது.

பழமொழியும் பொன்மொழியும் வெவ்வேறானவை. **சிறந்த கருத்தைச் சொல்வது பொன்மொழி. உயர்ந்த பண்பாட்டை வலியுறுத்துவது பழமொழி.** பழமொழியிலும் எதுகை, மோனை நயங்கள் உள்ளதால், அவை கேட்போர் மனத்தில் ஆழமாகப் பதிந்துவிடுகின்றன. நம் நாட்டுப் பண்பாட்டுக்குச் சிறப்புச் சேர்ப்பது, முதியோர்களை மதித்தல் என்னும் பண்பாகும். முதியோர் இருக்கும் வீட்டில் கலகம் ஏற்படாது என்றும் அவர்கள் குடும்ப ஒற்றுமையைப் பாதுகாப்பார்கள் என்றும் பழமொழிகளில் கூறப்பட்டுள்ளது. **'மூத்தோர் சொல் முது நெல்லிக்கனி'** என்ற பழமொழி, மூத்தோரை



XII Ethics_Lesson 1.indd 8 05-04-2019 10:22:59

www.tntextbook.org

மதிக்க வேண்டும் என்னும் நல்ல பண்பாட்டை வலியுறுத்துகின்றது.

ஆகவே, பழமொழிகள் நாட்டின் பண்பாட்டையும் நாகரிகத்தையும் வரலாற்றையும் உள்ளடக்கிய கருத்துக் கருவூலங்களாகத் திகழ்கின்றன.


## 8. புராணங்கள்

பண்டைய தொல்கதைகளையே புராணங்கள் என்கிறோம். இவை கற்பனை கலந்து இருந்தாலும், இந்தியப் பண்பாட்டை அறிந்துகொள்ள உதவுகின்றன. வைதீக சமயத்தின் வளர்ச்சி, அதன் தத்துவங்கள், உருவ வழிபாடுகள், மூடநம்பிக்கைகள், சாத்திரங்கள் போன்றவற்றைப் புராணங்கள் வாயிலாக அறியமுடிகிறது. நம் நாட்டிலுள்ள கோவில்கள், அவற்றில் நடைபெறும் விழாக்கள், மக்கள் பின்பற்றும் நோன்புகள், சடங்குகள் ஆகிய யாவும் புராணங்களை அடிப்படையாகக் கொண்டவையே. வாயு புராணம், விஷ்ணு புராணம், மச்ச புராணம், பிரம்ம புராணம், பவிஷிய புராணம் முதலியன அவற்றுள் சிலவாகும்.

புராணக் கதைகள் குறித்துப் பல்வேறு அறிஞர்கள் வரையறை தந்துள்ளனர். ஈ. பி. டெய்லர் என்பார். 'புராணக் கதைகள், தங்களை உருவாக்கிய மக்களைப் பற்றியும் பயன்படுத்துவோரைப் பற்றியும் கூறுகிறது' என்று கூறியுள்ளார். மாக்ஸ்முல்லர் என்ற அறிஞர், 'ஒவ்வொரு புராணமும் ஏதோ ஓர் உண்மையைக் கூற விழைகிறது' என்று குறிப்பிடுகிறார்.

புராணங்களில் இயற்கை கடந்த கதைகள் இடம்பெற்றன. கடவுளர்கள், தேவர்கள், விலங்குகள், பறவைகள் ஆகிய பல்வேறு உயிரினங்களைப் பிணைத்து இயக்குகின்ற கதைகளே புராணங்கள் எனப்பட்டன. அறிவியல் வளர்ச்சியில்லாத காலத்தில் மாந்தர் எதிர்கொண்ட சிக்கல்கள், முரண்பாடுகள், இயற்கைமீது கொண்ட அச்சம் ஆகியவற்றுக்குத் தீர்வு காணும் கருவியாகப் புராணக்கதைகள் அமைந்தன.

இயற்கையாக நடைபெறும் நிகழ்வுகளான சூரியகிரகணம், சந்திரகிரகணம் போன்றவற்றைத் தங்கள் வாழ்வியல் அனுபவங்களின் அடிப்படையில் சிந்தித்துள்ளனர். வானத்தை ஆணாகவும், பூமியைப் பெண்ணாகவும், முழுநிலவை (பௌர்ணமி) வாழ்வின் குறியீடாகவும், மதிமறைவை (அமாவாசை) இறப்பின் குறியீடாகவும் கருதினர். சூரியனையும் சந்திரனையும் பாம்பு தீண்டுவதால், கிரகணம் நிகழ்வதாகத் தொன்மக் கதை வழங்குகிறது. வானவில்லைக் கடவுளின் மந்திர வில்லாகக் கருதுகின்றனர். மழை மிகுதியாகப் பெய்யும்போது, இந்த மந்திர வில் தோன்றினால் மழை நின்றுவிடும் எனப் புராணக்கதை கூறுகிறது.



வானவில்

அனைத்து உயிரினங்களும் வெள்ளத்தால் அழிக்கப்பட்டுப் பின்னர், கடவுளால் மீண்டும் படைக்கப்பட்டன எனக் கருத்துருவாக்கம் உள்ள புராணக்கதைகள் உலகெங்கும் உள்ளன. நாட்டுப்புறத் தெய்வங்கள், மக்களைவிட ஆற்றல் பெற்றவை. மனிதப் பண்புகள் கொண்டவை. மனித உருவில், மக்களோடு இணைந்து வாழ்பவை. அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களுக்குத் தீர்வுகாண உதவுபவை என்ற கருத்துருவாக்கம் புராணக்கதைகளில் மிகுதியாகக் காணப்படுகின்றன. இவை, நாட்டுப்புற மக்களின் நம்பிக்கைகள், தெய்வ வழிபாடுகள், சமயச் சடங்குகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை உணர்த்துகின்றன. அறிவியல் காலத்துக்கு முற்பட்ட செய்திகளை அறிந்துகொள்வதோடு, சமூகப்பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்யவும் இவை பயன்படுகின்றன.



XII Ethics_Lesson 1.indd 9 05-04-2019 10:22:59

www.tntextbook.org

மகாபுராணம், கந்தபுராணம், விநாயகப் புராணம், பாகவதம் போன்றவை புராணக் கதைகளுள் சிலவாகும்.

## இந்தியப் பண்பாட்டின் இயல்புகள்

ஒவ்வொரு சமுதாயத்துக்கும் குறிப்பிட்ட பண்பாட்டு இயல்புகள் உள்ளன. அவை, காலங்காலமாகப் பின்பற்றப்படும் மரபுகள், சமூக நல்லிணக்கக் கொள்கைகள், பழக்கவழக்கங்கள், கற்றல் நிலைகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன. மேலும், பன்னெடுங்காலமாகக் கடைப்பிடித்துவரும் வாழ்வியல் பண்புகளோடு கால மாற்றத்திற்கு ஏற்பப் புதிதாக உருவாக்கிக் கொள்ளப்படும் வாழ்வியல் பண்புகளையும் புறக்கணிப்பதில்லை. அதனால்தான், பண்பாடு நெகிழ்வுத்தன்மையுடையதாய் விளங்குகிறது.

சமுதாயத்திலுள்ள ஒவ்வொருவரும் உயர்ந்த எண்ணங்களுடனும் சிறந்த கொள்கைகளுடனும் வாழவேண்டும் என்பதே பண்பாட்டின் அடிப்படை நோக்கமாகும். மனித நடத்தையில் மாற்றத்தையும் பெருமையையும் உண்டாக்கும் பண்பாடு, அவனது தேவைகளையும் நிறைவு செய்கிறது. இந்தியப் பண்பாட்டின் குறிப்பிடத்தக்க இயல்புகள் பின்வருமாறு:

### 1. நிலைத்த தன்மை

பண்பாட்டுச் சிறப்புக்குப் பெருமை சேர்ப்பது, அதன் நிலைத்த தன்மையாகும். புற வளர்ச்சிஎனக் குறிப்பிடப்படும் நாகரிகம்,மாறும் தன்மையுடையது. ஆனால், அக வளர்ச்சியாகிய பண்பாடு என்றும் மாறாதது. **தலைமுறை தலைமுறையாக ஒரு சமுதாயத்தினரிடமிருந்து அடுத்த சமுதாயத்துக்குக் கொண்டு செல்லப்படுவது, பண்பாடேயாகும்.**

### 2. நெகிழுந் தன்மை

பண்பாடு நெகிழும்தன்மை கொண்டது. ஏதேனும் ஒன்றை விடாப்பிடியாகப் பற்றிக்கொள்ளாமல், சூழ்நிலைக்கு ஏற்றாற்போல் வளைந்துகொடுக்கும் தன்மையுடையது. நாகரிகம் எந்த நிலையிலும், எந்த நேரத்திலும் முழுமையாகத் தன்னை மாற்றிக்கொள்ளும். ஆனால், பண்பாடு மாற்றத்திற்கு உட்பட்டாலும் தன் அடையாளத்தை விட்டுச்செல்லும் என்பதை உணரமுடிகிறது.

### 3. நடைமுறை வாழ்விற்குப் பயன்படுதல்

அன்றாட நடைமுறைவாழ்வில் பண்பாடு உறுதுணையாக இருகிறது. தனி மனிதனையும் சமுதாயத்தையும், முன்னேற்றுவதற்கு உதவும் குறிக்கோள்களை அடையவும் பண்பாடு வழிசெய்கிறது.

### 4. முழுவளர்ச்சிக்கு உதவுதல்

ஒரு மனிதனின் முழுமையான வளர்ச்சி என்பது உடல் மற்றும் உள்ளம் சார்ந்தது. இவ்விரண்டையும் பெறுவதற்குப் பண்பாடு உதவுகிறது. இதன்மூலம், சமுதாயத்தில் உள்ளவரோடு இணக்கமாக வாழும் பண்பினையும் இயற்கையோடு பொருந்தி வாழும் இயல்பினையும் பெற்றுச் சிறந்த குடிமக்களாகத் திகழ, இந்தியப் பண்பாடு உதவுகிறது.

### 5. அனுபவ அறிவு

ஒரு தலைமுறையினர் தமக்கு முந்தைய தலைமுறையினரிடமிருந்து கற்றுக்கொண்ட வாழ்வியல் திறன்களையும் வாழ்க்கை முறைகளையும் தங்களின் செம்மையான வாழ்வியலுக்குப் பயன்படுத்த அனுபவ அறிவு உதவுகிறது. இதன் வாயிலாக இந்தியப் பண்பாட்டின் இயல்புகளை இன்றைய இளந்தலைமுறையினர் புரிந்துகொள்ள முடிகிறது.

## இந்தியப்பண்பாட்டின் சிறப்புக் கூறுகள்

இந்தியப்பண்பாடு தொன்மையானது. பன்முகத்தன்மை கொண்டது. பல நூற்றாண்டுகளாகப் பல்வேறுபட்ட சமூகங்களை, சமயங்களைச் சார்ந்த மக்கள் நல்லிணக்கத்துடனும், ஒற்றுமையுடனும் வாழும் சூழலைக் கொண்டது. பல வரலாற்று அனுபவங்களிலிருந்தும் பல்வேறு நிகழ்வுகளிலிருந்தும் இன்றையப் பண்பாடு பெறப்பட்டுள்ளது.



XII Ethics_Lesson 1.indd 10 05-04-2019 10:22:59

www.tntextbook.org


இன்றையப் பண்பாட்டுப் பரவல்களின் தன்மையும் அளவும் முந்தைய காலங்களைவிட மிகவேகமாகவளர்ந்துவிட்டன.தகவல்தொடர்பு, இணையம், மக்கள் ஊடகங்கள் போன்ற நவீனத் தொழில்நுட்பங்கள் போன்றவற்றால் பண்பாடு வளர்ச்சி பெற்றுள்ளது. நம் இந்திய நாட்டிற்குப் பெருமையும் சிறப்பும் சேர்க்கும் இன்றியமையாத பண்பாட்டுச் சிறப்புக்கூறுகளாவன:

## ஆன்மிக அடிப்படை

இந்தியப்பண்பாட்டின் ஆணிவேராக ஆன்மிகம் விளங்குகிறது. ஆன்மநேய ஒருமைப்பாட்டை உணர்த்தி, இறைத்தன்மை பெறுவதை இந்தியப்பண்பாடு வலியுறுத்துகிறது. இந்தியாவிலுள்ள ஆலயங்கள் யாவும் பக்தி இயக்கத்தின் பெருமையைப் பறைசாற்றுகின்றன. நம் நாட்டில் பல சமயங்களைப் பின்பற்றுவோரும் வாழ்கின்றனர். அவர்களின் நம்பிக்கை, பழக்கவழக்கம், வழிபடும் முறை ஆகியவையும் வேறுபடுகின்றன. ஆயினும், அனைத்துச் சமயங்களும் உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் தூய்மையை வலியுறுத்துகின்றன. அழிவுக்குக் காரணமாக விளங்கும் ஆசையை விட்டொழித்துத் தூய இறையுணர்வைப் புரிந்துகொள்ளச் செய்கின்றன. தருமம், தருமநெறி, மறுபிறவி அவதாரக் கோட்பாடு போன்றவற்றைப் புறக்கணிக்காமல் போற்றுகின்றன. 'ஒன்றே குலம், ஒருவனே தேவன்' திருமூலரின் கூற்றுப்படி ஒற்றுமையுணர்வுடன் வாழச்செய்கின்றன. ஆகவே, சமயமும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று பின்னிப் பிணைந்துள்ளன. "எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றும் அறியேன் பராபரமே"என்று தாயுமானவர் கூறுவது, ஆன்மீகநேயத்தின் உயர்சிந்தனையாகும்.

## அழியாத்தன்மை

உலகில் சிறந்த பண்பாட்டுக் கூறுகளைக் கொண்டனவாகக் கிரேக்கம், ரோம், பாபிலோன், எகிப்து, பாரசீகம் ஆகியவற்றைக் கூறுவர். எடுத்துக்காட்டாக, எகிப்தில் மிகப்பெரிய அளவில் உருவாக்கப்பட்ட 'பிரமிடுகள்' இக்காலத்தில் மீண்டும் உருவாக்கப்படவில்லை. ஆனால், நம் இந்தியப் பண்பாடு தொன்மை மிக்கது. காலங் காலமாக ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்லப்படுவதால் என்றும் நிலைபெற்று அழியாத்தன்மை கொண்டு விளங்குகிறது.



தாயுமானவர்

## சகிப்புத்தன்மையும் நல்லிணக்கமும்

இந்திய நாட்டில் பல்வேறு சமயம், மொழி, இனம், பழக்கவழக்கம், நம்பிக்கை எனப் பல வேறுபாடுகள் காணப்பட்டாலும் **அனைவரும் இந்தியர் என்னும் ஒற்றுமை உணர்வை மேலோங்கச் செய்வது, அதன் பண்பாட்டுச் சிறப்பாகும்.** நாட்டைப் பாதுகாப்பதில் ஒற்றுமையுடன் செயல்படும் எண்ணம், நல்லிணக்கத்திற்கு வழிவகுக்கிறது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழும் உயர்ந்த எண்ணம், சகிப்புத்தன்மையை உருவாக்கி அனைவரையும் ஒன்றிணைந்து செயல்பட வைக்கிறது.

## மனிதநேயம்

தம்மிடம் பிறர் அன்புகாட்டவேண்டும் என்று எண்ணுவதுபோல், தாமும் பிறரிடத்து அன்புசெலுத்தவேண்டும் என்ற இரக்க உணர்வே மனிதநேயத்திற்கு அடிப்படையாகும். இத்தகைய மனப்பக்குவம் கொண்டவரையே பண்பாடுடையோர் எனப் போற்றுவர். இனம், மொழி, சமயம் ஆகியவற்றைக் கடந்து ஒவ்வொருவரும் பிறரிடம் அன்பு செலுத்த வேண்டும் என்ற உயரிய மனிதநேயப் பண்பும், பொதுமையை வரவேற்கும் பண்பும், இந்தியப்பண்பாட்டுக்கு மேலும் சிறப்பைத் தருகின்றன.



XII Ethics_Lesson 1.indd 11 05-04-2019 10:22:59

### தத்துவக்கோட்பாடுகள்

இந்தியப் பண்பாட்டின் சிறப்புக்கு, அதன் தத்துவக் கருத்துகளும் கோட்பாடுகளும் வலிமை சேர்க்கின்றன. பழைமை வாய்ந்த பண்பாட்டுச் சிறப்புமிக்க நம் இந்திய நாட்டில் ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள், சித்தர்கள் முதலான அருளாளர்களின் உயர்சிந்தனைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன. மனிதனின் புறச்சிந்தனையையும் அகச்சிந்தனையையும் தூய்மைப்படுத்தி, அவற்றின் வளர்ச்சிக்கு தத்துவக் கருத்துகள் உதவுகின்றன.

வேதங்கள், உபநிடதங்கள், காவியங்கள், புராணங்கள், பகவத்கீதை போன்ற தத்துவ மறைகள் மனிதப் பண்பாட்டின் சிறப்புகளை வெளிப்படுத்துகின்றன. சமணம், பௌத்தம், கிறித்துவம், இஸ்லாம் முதலிய சமயங்களில் தோன்றிய பக்தி இலக்கியங்கள் தத்துவத்தின் மறைபொருளை விளக்கிச் சொல்கின்றன. "மேன்மையான சிந்தனைகள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நம்மிடம் வரட்டும்" என்று 'ரிக் வேதம்' கூறுகிறது. அதற்கேற்ப அனைத்துப் பண்பாடுகளிலும் உள்ள நல்ல கருத்துகளை உள்வாங்கி, உலக அரங்கில் உயர்ந்து நிற்பது நம் இந்தியப் பண்பாடாகும்.

### அழிவில்லாத மதிப்பீடுகளின் நிலை

#### அன்பு

ஒருவர் மீது ஒருவர் செலுத்தும் பாசமே அன்பு எனப்படும். இஃது இரக்கம், பரிவு, கருணை போன்ற பல சொற்களால் அழைக்கப்படுகின்றது. அருளின் அடிப்படையே அன்பாகும்.

#### சத்தியம்

சத்தியம் என்பது உண்மை எனப்படுகிறது. உள்ளத்திலிருந்து வருவது உண்மையெனவும், வாயிலிருந்து வருவதால் வாய்மை எனவும் அழைக்கப்படுகிறது. உடலால் வருவது மெய்மை. இம்மூன்றையும் உள்ளடக்கிய சொல் சத்தியமாகும்.

#### தர்மம்

இப்பிரபஞ்சம் இயங்கி கொண்டிருப்பதே தர்மத்தின் அடிப்படையிலேயாகும். பிறருக்கு உதவுவது (வறியவருக்கு) தமிழில் அறம், ஈகை எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

#### அகிம்சை

கொல்லாமை என்பதே அகிம்சையாகும். எண்ணம், சொல், செயல் இவைகளின் மூலம் பிறருக்குத் துன்பம் செய்யாமை.

#### சாந்தம்

மன நிம்மதியே சாந்தமாகும். மன நிம்மதியே மன அமைதிக்கு வழிவகுக்கிறது. ஒருவன் இறைவனிடத்தில் தன்னை அர்ப்பணிக்கும்பொழுது சாந்தம் கிடைக்கிறது.

#### சகோதரத்துவம்

மனித சமூகத்தில் அனைவரும் சகோதரரே. எல்லாரும் ஓரினம், எல்லாரும் ஓர்நிறை என்பது தம் சகோதரத்துவத்தை எடுத்து இயம்புவதேயாகும்."யாதும் ஊரே யாவரும் கேளிர்", என்ற கணியன் பூங்குன்றனாரின் கருத்தும் இதுவே.

#### கருணை

பிற உயிர்களிடைத்துக் காட்டும் அன்பே கருணை. மரம், செடி, கொடி, புழு, பூச்சி, விலங்கு போன்ற அனைத்து உயிர்களிடத்தும் செலுத்தப்படும் 'இரக்கமே' கருணையாகும்.

### பண்பாடும் நாகரிகமும்

#### நாகரிகம்

மனித வாழ்வில் தொடக்க காலமாகிய பழைய கற்காலம், புதிய கற்காலத்தில் மன வளர்ச்சி மற்றும் அறிவு வளர்ச்சி இல்லாமல் விலங்குகளைப் போல மனிதன் வாழ்ந்தான் பழைய கற்காலத்தில் கரடுமுரடான கற்களைக் கருவிகளாக பயன்படுத்தினான். புதிய கற்காலத்தில் கூர்மையும், வழுவழுப்பும் உடைய கற்களைக் கருவிகளாகப் பயன்படுத்த



XII Ethics_Lesson 1.indd 12 05-04-2019 10:22:59

முற்பட்டான். இதிலிருந்து மனிதரிடையே படிப்படியான அறிவு வளர்ச்சி தோன்றியதை அறியலாம்.

இத்தகைய மனிதன் அடுத்து உலோகங்களை அறிந்து உலோகங்களால் ஆன கருவிகளைப் பயன்படுத்தினான். தொடக்கத்தில் வேட்டையாடியே வாழ்ந்த மனிதன் படிப்படியாக கால்நடை வளர்ப்பு, பயிர்த் தொழில், நெசவுத் தொழில் என பல தொழில்களில் ஈடுபட்டான். பொருளாதார முன்னேற்றத்தால் வசதியான வீடுகளை அமைத்து வாழத் தொடங்கினான். மேலும் தன் புறவாழ்வைச் சிறப்புடையச் செய்யும் ஆடை, அணிகலன்கள், ஒப்பனைப் பொருள்கள், உணவு வகைகள், பாத்திரங்கள் வானளாவிய கோபுரங்கள், மாட மாளிகைகள், அழகிய நெடுஞ்சாலைகள், ஊர்திகள், தொழிற்சாலைகள், வானொலி, தொலைபேசி, தொலைக்காட்சி, மின்னஞ்சல் போன்ற துறைகளில் வளர்ச்சியடைந்துள்ளான். எனவே மனிதன் தன் அன்றாடத் தேவைகளின் அடிப்படையில் வாழ்க்கை வசதிகளை பெருக்கிக் கொண்டான். இப்புறத் தேவைகளின் வளர்ச்சியே நாகரிக வளர்ச்சியேயாகும்.



ஜம்புகேஸ்வரர் கோயில்

## நாகரிகம் –சொல் விளக்கம்

நாகரிகம் என்ற சொல் நகர் என்னும் சொல்லடியாகப் பிறந்தது. நகர் + அகம் – நகரம் – நகரிகம் –நாகரிகம். சிற்றூர் மக்களினும் நகர மக்கள் புறவாழ்விற்குரிய வசதிகள் அனைத்தும் பெற்று விளங்குபவர்கள். நகர வாழ்க்கையே நாகரிக வாழ்க்கை என்பது கருத்து. நாகரிகம் நகரும் தன்மையுடையது. புறவளர்ச்சி நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து வருவதைக் காண்கிறோம்.

## பண்பாடு – நாகரிகம் – ஒற்றுமை – வேற்றுமைகள்

நாகரிகமும் பண்பாடும் ஒன்றோடு ஒன்று தொடர்புடைய இரு மாறுபட்ட கூறுகள் எனலாம். நாகரிகம் என்பது புறவளர்ச்சியைக் கூறுகின்றது. பண்பாடு என்பது அகவளர்ச்சியாகிய ஆன்மிக உயர் வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைகிறது.

மனித வாழ்வின் இரு அடிப்படைக் கூறுகள் முறையே உடலும் உயிரும் ஆகும். இதில் நாகரிகத்தை உடல் எனலாம். புறத்தேவைகளின் வளர்ச்சியால் ஒரு நாடு இன்றுள்ள சூழலில் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் உலகப்புகழ் பெற்று முதலிடத்தைப் பெறலாம். அந்நாடு அடைந்துள்ள அறிவியல்துறை, தொழில்துறை மற்றும் பல்வேறு கண்டுபிடிப்புகள் அந்நாட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தலாம். தொழில் வளர்ச்சியால் பொருளாதார உயர்வும் ஏற்படலாம். இவ்வளர்ச்சிகள் அனைத்தும் புறவளர்ச்சியாகும்.

பண்பாடு உயிருக்கு இணையானது. இப்பண்பாடு மக்களின் அகவளர்ச்சியாகும். மக்கள் மனதில் தோன்றி ஒளிர்கின்ற உயர் குணங்களின் தொகுப்பாகும். இச்சீரிய பண்பாடு மக்களின் எண்ணம், சொல், செயல் இவற்றால் வெளிப்படுகிறது. மனித வாழ்வில் புற வளர்ச்சிக்கிடையே அகவளர்ச்சியாகிய ஒழுக்கம், பணிவு,வாய்மை, தூய்மை, இரக்கம் மனிதநேயம் முதலான அகவளர்ச்சிக் கூறுகளின் செயல் பாடே 'பண்பாடு' எனலாம்.

எனவே 'உடலின்றி உயிர் அமையாது' என்பதற்கேற்ப நாகரிகமும் பண்பாடும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய இரு அடிப்படைக் கூறுகள் எனலாம்.

## வேற்றுமைகள்


- நாகரிகம் புறவளர்ச்சி – பண்பாடு அகவளர்ச்சி.



XII Ethics_Lesson 1.indd 13 05-04-2019 10:22:59

- புறவளர்ச்சியைக் குறிக்கும் நாகரிகத்தின் காலத்தை, தன்மையை அளவிட்டுக் கூறலாம். ஆனால் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாறுபடுகின்ற அகமாற்றத்தை ஏற்படுத்தும் பண்பாட்டை அளவிட முடியாது.
- நாகரிக வளர்ச்சி வேகமானது. பண்பாடு ஒரு முறையான சீரான வளர்ச்சியைக் கொண்டது.
- நாகரிக மாற்றங்கள், வளர்ச்சிகள் உலகில் எந்த நாட்டில் எந்த இடத்தில் எற்பட்டாலும் அவற்றை எவ்வித கடினமும் இல்லாமல் எளிதாக எல்லோரும் அறிந்து பின்பற்றலாம். பண்பாடு என்பது மிகுந்த முயற்சியின் அடிப்படையில் மனம் ஒன்றியவர்கள், ஒருமித்தக் கருத்துடையவர்கள் மட்டுமே பின்பற்றக் கூடியது.

தகவல் தொடர்பு சாதனங்களின் பயன்பாடு இப்பரந்த உலகின் எந்தப் பகுதியிலும் மாறாத ஒன்று. மாற்றங்களை உடனுக்குடன் அறிந்து பின்பற்றலாம். மாறாக கலைகள், இலக்கியங்கள், சமயக்கோட்பாடுகள் ஆகிய அகக்கோட்பாடுகளில் ஒவ்வொரு நாட்டிற்கும் இனத்திற்கும் இடையே வேறுபாடுகள் நிலவுகின்றன. எனவே அவற்றை ஏற்குமிடத்து வேண்டியன, வேண்டாதனவற்றை ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளது.



வேற்றுமையில் ஒற்றுமை காணும் இந்தியா

நாகரிகத்திற்கும் பண்பாட்டிற்கு மிடையே வேறுபாடுகள் காணப்படினும் சிறந்த புற வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட நாகரிகம் இல்லையெனில் சிறந்த பண்பாட்டைக் காண இயலாது. அமைதியின்மை, அச்சம், குழப்பம், பொறாமை, பூசல், உடலிலும், உள்ளத்திலும், முதிர்ச்சியற்ற நிலை அல்லது ஒவ்வாதநிலை காணப்பட்டால் பண்பாடு வளர்ச்சியைக் காண முடியாதோ அதே நிலை தான் நாகரிக வளர்ச்சிக்கும் ஏற்படும்.

சுருங்கக்கூறின் பண்பாடாகிய அகவளர்ச்சியின் அடிப்படையில் ஆன்ம வேட்கையை நிறைவு செய்து கொண்டு புறவளர்ச்சியாகிய நாகரிகக் கூறுகளில் சிறந்தனவற்றை ஏற்று அல்லாதனவற்றை நீக்கி வாழ்ந்தால் இவ்வுலக வாழ்க்கை இனிதாகும். எடுத்துக்காட்டாக இன்று அணு சக்தித் துறையில் பெரும் மாறுதலும் வளர்ச்சியும் ஏற்பட்டுள்ளது. இந்த வளர்ச்சியை மின்சக்தி மற்றும் பல்வேறு நலப் பணிகளுக்கு பயன்படுத்தலாம். மாறாக அணுசக்தியை அழிவிற்கு பயன்படுத்த வேண்டாம்.

### வேற்றுமையில் ஒற்றுமை

நம் நாட்டில் பல்வேறு மொழி பேசுவோர் வாழ்கின்றனர். இனம், மொழி, சமயம், உணவு, உடை, பழக்கவழக்கம், வாழிடம், தொழில், விழாக்கள், வழிபாடுகள் போன்றவை வேறுபட்டாலும் தாம் இந்தியர் என்னும் உணர்வில் அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்கின்றனர். இத்தகைய பண்பாட்டுச் சிறப்பு, 'வேற்றுமையில் ஒற்றுமை' என்னும் கருத்தை வெளிப்படுத்துகிறது.

### பண்பாட்டுக் கல்வியின் பயன்கள்

இந்தியநாட்டின் பண்பாட்டுக் கூறுகளையும் சிறப்புகளையும் இளந்தலைமுறையினருக்குக் கொண்டு சேர்ப்பதில், கல்வி நிறுவனங்கள் பெரும்பங்காற்றுகின்றன. பண்பாடு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தியும் அதனைப் பாதுகாக்கும் முறைகளையும்



XII Ethics_Lesson 1.indd 14 05-04-2019 10:22:59

www.tntextbook.org

எடுத்துரைக்கின்றன. இனி பண்பாட்டுக் கல்வியினால் என்னென்ன பயன்கள் விளைகின்றன என்பதைப் பின்வரும் தலைப்புகளில் காண்போம்.

**1. வாழ்வின் உறுதிப்பொருள்களை அறியச்செய்தல்**

அறம், பொருள், இன்பம், வீடு என்பன வாழ்வின் உறுதிப்பொருள்களாகும். அவற்றை அறிந்து, அறவாழ்வு வாழ பண்பாட்டுக் கல்வி உதவுகிறது.

**2. வாழ்வியல் உண்மைகளை அறியச்செய்தல்**

பிறரை மதித்தல், கைம்மாறு கருதாது உதவுதல், எந்நிலையிலும் வாய்மையைக் கடைப்பிடித்தல், சகிப்புத் தன்மையுடன் விட்டுக்கொடுத்து வாழ்தல் போன்ற பல வாழ்வியல் உண்மைகளை அறிவதற்குப் பண்பாட்டுக் கல்வி உதவுகிறது.

**3. சரியானநெறிமுறைகளைப்பின்பற்றச்செய்தல்**

வாழ்வியல் நெறிமுறைகள், பண்பட்ட வாழ்க்கை வாழ உதவுகின்றன. தாம் செய்யும் செயல்களில் சரி எது, தவறு எது என ஆராய்ந்து, தவறான செயல்களைத் தவிர்த்தும் சரியான செயல்களை மேற்கொண்டும் வாழ உதவுகிறது.

**4. சிக்கல்களுக்குத் தீர்வு காணச்செய்தல்**

சமுதாய நிகழ்வுகளில் காணப்படும் சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் ஆற்றலைப் பண்பாட்டுக் கல்வி தருகிறது. திருக்குறள் முதலான அறநூல்களில் அரசியல், பொருளாதாரம், மருத்துவம் போன்ற பல கருத்துகள் அமைந்துள்ளன. இந்நூல்களைக் கற்பதனால், பிரச்சனைகளுக்கு எளிதாகத் தீர்வு காணச் செய்யலாம்.

**5. இயற்கையோடு இணைந்து வாழச்செய்தல்**

நம் முன்னோர்கள் இயற்கையைத் தெய்வமாகப் போற்றியும் இயற்கை உணவுமுறைகள், இயற்கை மருத்துவ முறைகள் ஆகியவற்றைக் கடைப்பிடித்தும் நெடுநாள் நோயின்றி வாழ்ந்தனர் என்பதை நம் வேதங்களும் புராணங்களும் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளன. **உணவே மருந்து மருந்தே உணவு** என்ற தமிழரின் வாழ்வியல் பார்வை இங்கு நோக்கத்தக்கது. ஆகவே, இவற்றைக் கற்கச்செய்து, இயற்கையோடு இயைந்த வாழ்வைப் பின்பற்றச் செய்யலாம். இதன்மூலம், நம் இந்தியப்பண்பாட்டின் தொன்மைச் சிறப்பை அறிவதற்கும், பழைமையில் புதுமையை இணைத்துச் சீரியவாழ்வு வாழ்வதற்கும் பண்பாட்டுக் கல்வி உதவுகிறது.



## நிறைவுரை

இந்திய நாட்டின் பண்பாட்டுச் சிறப்பை அறிந்துகொள்வதற்கு அடிப்படையாக, இப்பாடப்பகுதி அமைந்துள்ளது. இந்தியப் பண்பாட்டை அறிந்துகொள்ள உதவும் தொன்மைச் சான்றுகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தியப்பண்பாட்டின்கூறுகள்,சிறப்பியல்புகள், பண்பாட்டுக்கல்வியின் பயன்கள் ஆகியனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

இளைய சமுதாயத்தினர், நாட்டின் சிறந்த குடிமக்களாக விளங்குவதற்கு இந்தியப் பண்பாடு வழிகாட்டுகிறது. அத்தகைய இந்திய நாட்டின் பண்பாட்டுச் சிறப்புகளை அறிந்து கொள்வதோடு விட்டுவிடாமல் அவற்றைப் போற்றிப் பாதுகாக்கச் செய்வதும் நம் கடமையாகும்.



XII Ethics_Lesson 1.indd 15 05-04-2019 10:22:59

www.tntextbook.org

# பயிற்சி

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. "மனிதன் தன்னுடைய தேவைகளையும் விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொள்ள உருவாக்கிய கருவியே பண்பாடு" எனக் கூறியவர்

   அ) ஆடம்சன் ஒபல்    ஆ) வால்டேர்    இ) சி. சி. நார்த்    ஈ) ஈ. பி. டெய்லர்

2. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   அ) காப்பியம் – (1) திருக்குறள்

   ஆ) பதினெண்கீழ்க்கணக்கு – (2) மணிமேகலை

   இ) இதிகாசம் – (3) அதர்வணம்

   ஈ) வேதம் – (4) மகாபாரதம்

   அ) அ – 1, ஆ – 3, இ – 4, ஈ – 2    ஆ) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2

   இ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4    ஈ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3

3. கீழ்க்காணும் கூற்றையும் அதற்குரிய விளக்கத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று: 'கரும்பு கட்டோடு இருந்தால், எறும்பு ஒன்றும் செய்யாது' என்பது, நாட்டுப்புறத்தில் வழங்கும் ஒரு பழமொழியாகும்.

   விளக்கம்: ஒற்றுமையுடன் வாழ்பவர்களை யாராலும் பிரிக்கமுடியாது.

   அ) கூற்று சரி, விளக்கம் தவறு.    ஆ) கூற்று தவறு, விளக்கமும் தவறு

   இ) கூற்று சரி, விளக்கமும் சரி.    ஈ ) கூற்று சரி. விளக்கம் போதுமானதன்று

4. மனு, யஜ்னவால்கியர் உள்ளிட்டோர் எழுதிய தொகுப்பு நூல்கள்

   அ) வேதநூல்கள்    ஆ) உபநிடதங்கள்

   இ) தரும சாத்திரங்கள்    ஈ) ஆரண்யகங்கள்

5. ஆகம சித்தாந்தங்கள் என்றழைக்கப்படுபவை

   அ) சமண நூல்கள்    ஆ) பௌத்த நூல்கள்

   இ) இஸ்லாமிய நூல்கள்    ஈ) ஜொராஸ்டிரிய நூல்கள்

6. கீழ்க்காணும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று 1: புறவளர்ச்சி எனக் குறிப்பிடப்படும் நாகரிகம், மாறும் தன்மையுடையது.

   கூற்று 2: அகவளர்ச்சி எனக் குறிப்பிடப்படும் பண்பாடு, மாறாத தன்மையுடையது.

   அ) கூற்று 1, 2 சரியானவை.    ஆ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு.

   இ) கூற்று 1, 2 தவறானவை.    இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி.

7. "பழங்காலப் பண்பாட்டின் எச்சம், நாட்டுப்புறவியல்" என்று கூறியவர்

   அ) சு. சக்திவேல்    ஆ) வில்லியம் ஜான் தாமசு

   இ) ரூத் பெனிடிக்ட்    ஈ ) மாலினோசுக்கி



XII Ethics_Lesson 1.indd 16 05-04-2019 10:23:00

8. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| அ) விடுகதை | – | 1) அம்மானை |
| ஆ) பாமரர் பாடல் | – | 2) பொருள் மரபில்லாப் பொய்ம்மொழி |
| இ) கதைப்பாடல் | – | 3) பண்ணத்தி |
| ஈ) நாட்டுப்புறக் கதை | – | 4) பிசி |

அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4 ஆ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1
இ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3 ஈ ) அ – 4, ஆ – 3, இ – 1, ஈ – 2

9. 'மேன்மையான சிந்தனைகள் எல்லாப் பகுதிகளிலிருந்தும் நம்மிடம் வரட்டும்' என்று கூறும் வேதம்
அ) ரிக் ஆ) யஜுர் இ) சாமம் ஈ) அதர்வணம்

10 தவறான இணையைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| அ) தமிழர் திருமண முறை | – | அகநானூறு |
| ஆ) மார்கழி நோன்பு | – | கலித்தொகை |
| இ)அன்பின் சிறப்பு | – | புறநானூறு |
| ஈ) வறுமையிலும் செம்மை | – | நற்றிணை |

## II. குறுவினா

1. பண்பாடு என்னும் சொல்லுக்கு வாழ்வியற்களஞ்சியம் தரும் விளக்கம் யாது?
2. இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் சான்றுகளைக் குறிப்பிடுக.
3. ஏட்டில் எழுதா இலக்கியங்கள் எனக் குறிப்பிடப்படுவன யாவை? ஏன் அவ்வாறு குறிப்பிடப்படுகின்றன?
4. தொல்காப்பியர் குறிப்பிடும் 'பண்ணத்தி' என்பதன் பொருள் யாது?
5. கதைப்பாடல்கள்வழி வெளிப்படும் பண்பாட்டுக் கூறுகள் யாவை?
6. நாகரிகம் – வரையறுக்க.

## III. சிறுவினா

1. மக்களின் பண்பாட்டு உயர்வுக்குப் பழமொழிகள் எவ்வாறு உதவுகின்றன? எடுத்துக்காட்டுகள் தருக.
2. பண்பாடு என்பதற்கு ஈ. பி. டெய்லரும் மேத்யூ ஆர்னால்டும் தரும் வரையறைகள் யாவை?
3. கதைகள் பொழுதுபோக்குக்கு மட்டுமல்ல; நன்னெறிகளை வளர்த்துக்கொள்ளவும் உதவுகின்றன என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
4. புறநானூறு புலப்படுத்தும் பண்பாட்டுச் செய்திகள் யாவை?
5. புராணக் கதைகளுக்கு எடுத்துக்காட்டு தருக.
6. இந்தியப்பண்பாட்டின் சிறப்பு கூறுகள் யாவை ?

## IV. நெடுவினா

1. பண்பாடு குறித்து அறிஞர்கள் கூறும் வரையறுகளுள் எவையேனும் ஐந்து எழுதுக.
2. இந்தியப் பண்பாட்டை அறிய உதவும் தொல்பொருள் சான்றுகள் யாவை? அவற்றுள் எவையேனும் இரண்டை விளக்குக.
3. சமூகப் பண்பாட்டு வரலாற்றை மீட்டுருவாக்கம் செய்வதில், புராணக்கதைகளின் பங்கினை விவரித்து எழுதுக.
4. இந்தியப் பண்பாட்டின் குறிப்பிடத்தக்க இயல்புகள் யாவை?
5. பண்பாட்டுக்கல்வியின் பயன்கள் யாவை?
6. பண்பாட்டிற்கும் நாகரிகத்திற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?



XII Ethics_Lesson 1.indd 17 05-04-2019 10:23:00

# அலகு 2

# வேற்றுமையில் ஒற்றுமை

3HPLIG

## கற்றல் நோக்கங்கள்

- மொழிகளின் ஒற்றுமையையும் அவற்றின் தன்மையையும் அறிந்து கொள்ளுதல்.
- பண்பாட்டு ஒற்றுமைக்கான அடிப்படைக் காரணங்களை அறிந்து கொள்ளுதல்.
- பல்வேறு மக்களிடையே காணப்படும் மொழி, சமயம், சமூக பொருளாதார வேற்றுமைகளை அறிந்துகொள்ளுதல்.
- பல்வேறு வேற்றுமைகளுக்கிடையே அரசியல், சமூக, பண்பாட்டு ஒற்றுமைகளை புரிந்து கொள்ளுதல்.
- பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதன் அவசியத்தை புரிந்து கொள்ளுதல்.

## நுழைவு வாயில்

இந்தியாவில் மொழி, இனம், சமயம், நிறம், வாழிடச்சூழல் போன்ற பல்வேறு பிரிவுகளால் மக்கள் பிரிந்திருந்தாலும் **இந்தியர்** என்ற உணர்வு அனைவரையும் ஒன்றிணைக்கிறது. உலகளவில் மிகப்பெரிய மக்களாட்சி நாடாக இந்தியா சிறந்து விளங்கக்காரணம்; வேற்றுமையில் ஒற்றுமைகாணும் இந்திய மக்களின் மனப்பான்மையேயாகும். இந்தியாவில் மொழியும், கலாச்சாரமும், பழக்கவழக்கங்களும், விருந்தோம்பல் முறைகளும் மிகச்சிறப்பாகப் பின்பற்றப்படுகின்றன. நம் மக்கள் உயிரிரக்கத்தை (ஜீவகாருணியம்) முக்கிய நோக்கமாகக் கொண்டு வாழ்ந்தவர்கள். வர்த்தமான மகாவீரர், கௌதமபுத்தர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகியோருடைய கோட்பாடுகள் உயரிய ஆன்மிகத்தையே நோக்கமாகக் கொண்டு மக்களிடம் போதிக்கப்பட்டன.

எண்ணற்ற அதிசயங்களைத் தன்னகத்தே கொண்டது இந்தியா என்று கூறும் புகழ்மிக்க வரலாற்று அறிஞர் எ.எல். பாஷம் (A.L. Basham) அவர்கள் **"அதிசயம் அதுதான் இந்தியா"** (The wonder that was India) என்றும் குறிப்பிட்டுள்ளார். இந்நூல் இந்திய கிராம மக்களின் சடங்குகள், சம்பிரதாயங்கள் பழம்பெருமையைப் பறைசாற்றுகின்றது.

இந்தியாவிலுள்ள அனைத்துக் கிராமங்களில் ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு தனித்துவம் உண்டு என்பதையும் நாம் அறிவோம் என்பது அனைவரும் அறிந்ததே.

உலகில் காணும் பல்வேறு நாகரிகப் பண்பாடுகளின் ஒன்றிணைப்பை இங்கு காணலாம். உலகளவில் இந்தியா ஏழாவது மிகப்பெரிய பரந்து விரிந்த பழைமையான நாடாகும். இந்நாடு 29 மாநிலங்களையும் 7 யூனியன் பிரதேசங்களையும் கொண்டு திகழ்கிறது. 2011-ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி இந்திய மக்கள் தொகை 121 கோடிக்கு மேல் உள்ளது.



XII Ethics_Lesson 2.indd 18 05-04-2019 10:35:03

**கங்கை நதி**

*2008 ஆம் ஆண்டு இந்தியாவின் தேசிய நதியாகக் கங்கை அறிவிக்கப்பட்டது. இந்தியாவின் நீளமான நதி, புனிதமான நதி, மிக அதிக எண்ணிக்கையிலான துணை நதிகளைப் பெற்றுள்ள நதி என்று பல சிறப்புகளைக் கங்கைநதி பெற்றுள்ளது.*



நாம் இந்தியர் என்பதில் பெருமிதம் கொள்வதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், நம் நாட்டில் நிலவும் வேற்றுமையில் ஒற்றுமை என்னும் பண்புதான் தலைசிறந்து காணப்படுகிறது. நம்மிடையே இருக்கும் வேறுபாடுகளே ஒருவர், மற்றவர்மீது ஆர்வமும் அக்கறையும் செலுத்துவதற்குக் காரணமாக அமைகின்றது.

வேற்றுமையில் ஒற்றுமையை நிலைநாட்ட தேசியகொடி, தேசியசின்னம், தேசியகீதம், தேசியபறவை போன்றவை இந்தியா முழுமைக்கும் பொதுவாகப் பின்பற்றப்படுகின்றன.

## வேற்றுமையில் ஒற்றுமை வரையறை :–

நம்நாடு நிலவியல் அமைப்பு, இனம்,மொழி, இலக்கியம், சமயம், சமுதாய அமைப்பு, பொருளாதாரம், வாழ்க்கைச்சடங்குகள், பாரம்பரியங்களால் வேறுபட்டகூறுகளைக் கொண்டிருந்தாலும் 'இந்தியர்' என்ற ஒருமைப்பாட்டு உணர்வு மக்களிடம்உள்ளது.இதனையேவேற்றுமையில் ஒற்றுமை என்கிறோம். இவ்வுயரிய கோட்பாடே இந்தியப் பண்பாட்டின் தனிச்சிறப்பு எனலாம்.

## வேற்றுமைக் கூறுகள்

### நிலவியல் வேற்றுமைகள்

இந்தியா, வடக்கே இமயமலைமுதல் தெற்கே கன்னியாகுமரிவரை பரந்து விரிந்து காணப்படும் மிகப்பெரிய ஒரு நாடாகும். இமயமலை, இந்தியாவை ஆசியக்கண்டத்திலிருந்து பிரிக்கிறது. இந்தியாவின் மேற்கே அரபிக்கடல், கிழக்கே வங்காள விரிகுடா, தெற்கே இந்து மகா சமுத்திரம் ஆகிய மூன்று பக்கம் கடலாலும் ஒருபுறம் நிலப்பரப்பாலும் சூழப்பட்டுள்ளதால் இந்தியா தீபகற்ப நாடு என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவைத் தீபகற்ப நாடு எனவும் அழைக்கிறோம். இந்தியத் துணைக்கண்டத்தின் இயற்கை அமைப்பினைப் பொருத்தவரையில் எண்ணிலடங்காத வேற்றுமைகளை நாம் காணமுடிகிறது. இந்தியாவின் காலநிலை, தட்பவெப்பநிலை, மழைப்பொழிவு, மண்வகைகள் மற்றும் செடிகொடிகளில் வேற்றுமைக் கூறுகள் நிலவுகின்றன.

இந்தியாவில் வடபகுதி குளிர்காலத்தில் குளிர் அதிகமாக இருந்தாலும், மனிதன் வாழவே இயலாத அளவுக்கு உறைபனி நிலையைக் கொண்டிருக்கவில்லை. குளிர்மிகுந்த காஷ்மீர் போன்ற பகுதிகளில் மக்கள் வாழக் காரணம் அங்கு நிலவும் பருவநிலைக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக்கொண்டதேயாகும். இதைத் தவிர,

**ஆசியாவின் இத்தாலி இந்தியா**

புவியியலாளர்கள் இந்தியாவை இத்தாலி நாட்டோடு ஒப்பிடுகின்றனர். ஐரோப்பாவிலுள்ள இத்தாலி, ஒரு தீபகற்ப நாடாகும். அந்நாட்டின் கிழக்கே எரித்திரியன் கடலும், மேற்கே தஸ்கான் கடலும், தெற்கே நன்னிலக் கடலும், வடக்கே அபினைன் மலைத் தொடரும் உள்ளது. இத்தாலியின் தெற்கே சிசிலித் தீவு உள்ளதுபோல இந்தியாவின் அருகில் இலங்கைத் தீவு உள்ளது.

www.tntextbook.org

இந்தியாவின் வேறு எந்தப் பகுதியிலும் மக்களின் அன்றாடச் செயல்களைப் பாதிக்கும் நிலையில் காலநிலையில்லை எனலாம். இவ்வாறு மனிதன் வாழச் சாதகமான பருவநிலைகளைக் கொண்ட நாடு இந்தியா எனலாம்.

ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அந்நாட்டின் பருவநிலையே அடிப்படையாகும். இந்தியாவில் வளமான கடற்கரைகள் அயல்நாட்டு வாணிகத்திற்கும், செழிப்பான சமவெளிகள் உள்நாட்டு வாணிகத்திற்கும், பொருளாதார முன்னேற்றத்திற்கும் காரணமாகின்றன. ஒவ்வொரு நிலப்பகுதியும் அமைவிட அமைப்பில் வேறுபட்டுள்ளது என்றாலும், பொருளாதார வளர்ச்சிக் குறியீடு சீராகவே உள்ளது. கேரள நிலப்பகுதியில் மிளகு உள்ளிட்ட பிற வாசனைத் பொருள்களும், மேற்கு வங்காளம், தமிழ்நாடு போன்ற நிலப்பகுதியில் நெல்லும், குஜராத், மகாராஷ்டிரா பகுதியில் பருத்தியும், பஞ்சாபில் கோதுமையும், மத்தியபிரதேசத்தில் பருப்பு வகைகளும், அஸ்ஸாமில் தேயிலையும், கர்நாடகாவில் காப்பியும் அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. இவை இந்தியாவின் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிகின்றன.



அஸ்ஸாம் – தேயிலை

பீடபூமிகள் என்பவை மழை குறைந்த உயர் நிலங்களாகும். இப்பகுதியில், கனிம வளங்களும் சில வேளாண் பொருட்களும் விளைகின்றன. சோட்டாநாக்பூர் பீடபூமியில் கனிம வளங்களும், மாளவ பீடபூமியில் தினைப் பொருட்களும், தக்காண பீடபூமியில் பருப்பு வகைகளும், எண்ணெய் வித்துக்களும் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகின்றன.

## இன வேறுபாடு

இந்தியாவில் ஆரியர்களது வருகைக்கு முன்னரே, சிந்து நதிக்கரைப் பகுதியில் ஹரப்பா மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் நமக்கு கிடைத்துள்ளன. சிந்து கங்கை சமவெளிகளில் ஆரியர்கள் வாழ்ந்து வந்ததை வேதங்கள் கூறுகின்றன. சங்ககால இலக்கியங்கள், தமிழர் பண்பாடு மிகவும் தொன்மையானது என்று தெரிவிக்கின்றன. இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் பாரசீகர்கள், கிரேக்கர்கள், சாகர்கள், குஷாணர்கள், ஹுணர்கள் ஆகியோர் குடியேறினர். கி.மு 5 ஆம் நூற்றாண்டிலேயே இந்தியா பல இனங்களையும் அதிக மக்கள் தொகையையும் பெற்றிருந்தது என்று வரலாற்றின் தந்தை **ஹெரோடோட்டஸ்**(Herotototus)

### இந்திய இனங்கள்

1. காஷ்மீர், பஞ்சாப், இராஜபுதனம் ஆகிய பகுதியில் உள்ளவை. இந்தோ – ஆரிய இனம்.
2. தமிழகம், ஆந்திரம், மைய மாநிலங்கள், சோட்டா நாக்பூர் பகுதிகளிலும் வாழும் திராவிட இனம்.
3. அஸ்ஸாம் நேபாள எல்லையில் வாழும் மங்கோலிய இனம்.
4. ஐக்கிய மாநிலங்கள், பீகார் பகுதிகளில் வாழும் ஆரிய-திராவிட இனம்
5. வங்காளம், ஒட்டரதேசம் (ஒடிசா) பகுதியில் வாழும் மங்கோல் – திராவிட இனம்.
6. மராட்டியப் பகுதியில் வாழும் மக்கள் சிந்திய – வடமேற்கு எல்லைபுறத்தில் வாழும் துருக்கிய – இரானிய இனம்



XII Ethics_Lesson 2.indd 20 05-04-2019 10:35:04

குறிப்பிடுகிறார். இடைக்கால இந்திய வரலாற்றில் அரேபியர்களும், துருக்கியர்களும், மங்கோலியர்களும், முகலாயர்களும் இந்தியாவிற்கு வந்து ஆட்சி செய்தனர். நவீனகால இந்திய வரலாற்றில் போர்ச்சுகீசியர், டச்சுக்காரர்கள், ஆங்கிலேயர்கள், பிரெஞ்சுகாரர்கள் முதலியோர் இந்தியாவில் வணிகநோக்கில் குடியேறினர். இதன் அடிப்படையில், **டாக்டர் வின்சென்ட் ஆர்தர் ஸ்மித்**(Vincent Arthur Smith) இந்தியாவைப் **பல "இனங்களின் அருங்காட்சியகம்"** என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் வாழும் பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளே இந்தியப் பண்பாட்டிற்கான அடித்தளத்தைத் தீர்மானிக்கின்றன. இதன் அடிப்படையிலேயே வலிமையான பண்பாடு கட்டமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் இனமும் தனக்கேயுரிய தனித்தன்மையைக் கொண்டுள்ளதால், இந்தியா வேற்றுமையில் ஒற்றுமை காணும் நாடாகத் திகழ்கிறது.

இந்தியாவில் மலைவாழ் பழங்குடியினமக்களின் பண்பாட்டுப் பாரம்பரியம் தொன்மையான வரலாற்றைப் பிரதிபலிக்கின்றது. அவர்கள் கொண்டாடும் விழாக்கள் அவர்களின் பாரம்பரியத்தை வெளிப்படுத்துகின்றன. அவர்களின் உழைப்பும், திறனும் பிறருக்கு வியப்பூட்டும் வகையில் அமைந்துள்ளன. தோடர்கள், இருளர்கள், குறும்பர்கள் போன்ற பழங்குடியின மக்கள் தமிழகத்தின் தொன்மையின் அடித்தளமாக உள்ளனர். இம்மக்களின் பொருளாதார நிலைக்கும் மற்ற மக்களின் பொருளாதார நிலைக்கும் வேறுபாடுகள் உள்ளன.



பழங்குடியினர்

## மொழி வேறுபாடுகள்

மொழி என்பது, மனிதன் தமது உள்ளத்து உணர்வுகளைப் பிறருக்கு உணர்த்த உதவும் மிகச்சிறந்த ஒரு கருவியாகும். இதனையே *language is the vehicle of communication* என்று **அபெர் குரோம்பி** (Aber crombie) குறிப்பிடுகிறார். பேச்சும், எழுத்தும் மனித குலத்திற்குக் கிடைத்த மிகப்பெரிய கொடையாகும். மனிதருடைய மொழிகளில், ஒலியம், கை அசைவும் குறியீடுகளாகப் பயன்படுகின்றன. இவ்வாறான ஒலிகளை எழுத்து வடிவமாக மாற்ற முடியும் – ஆனால், சைகைகளை அவ்வாறு மாற்ற முடியாது. மனிதருடைய மொழிகளில் இக்குறியீடுகள் சொற்கள் என்றும், அவற்றைக் கையாளுவதற்கான விதிகள், இலக்கணங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?**

நம் நாட்டின் 2011–ஆம் ஆண்டில் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, மொத்த மக்கள்தொகை 121 கோடிக்கு மேல் உள்ளது. இவர்கள் 780க்கும் மேற்பட்ட மொழிகளை பேசி வருவதாக PLSI (People's Linguistic Survey of India) தெரிவிக்கிறது. இக்கணக்கெடுப்பு 2010க்கும் 2013க்கும் இடையில் எடுக்கப்பட்டது. 1961 ஆம் ஆண்டில் தோராயமாக 1650 மொழிகள் இருந்ததாகவும் ஒவ்வோர் ஆண்டிற்கும் பத்திற்கு மேற்பட்ட மொழிகள் அழிந்துவருவதாகவும் இந்நிலை தொடர்ந்தால் இன்னும் நூறு ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த எண்ணிக்கை ஐந்நூறுக்கும் குறைவாகலாம் என்று இக்கணக்கெடுப்பு தெரிவிக்கிறது.

இந்திய மக்கள் பல்வேறு மொழிகளைப் பேசுகின்றனர். ஒரு லட்சத்திற்கும் மேலான மக்கள் பேசும் மொழிகள் 33 உள்ளன. பழங்காலத்தில் இந்தியாவின் பல பகுதிகளில் பிராகிருத மொழியும், சமஸ்கிருத மொழியும் பயன்படுத்தப்பட்டன. சமஸ்கிருத மொழி வடஇந்திய மொழிகளின் தாயாகக் கருதப்படுகிறது. சமஸ்கிருதம் மற்றும் வடஇந்திய மொழிகளை எழுத **தேவநாகரி** என்னும் எழுத்து வடிவம் பயன்படுத்தப்படுகிறது. இந்தி, மராத்தி, குஜராத்தி, பஞ்சாபி, காஷ்மீரி,



XII Ethics_Lesson 2.indd 21 05-04-2019 10:35:04

www.tntextbook.org

உருது மற்றும் வங்காளம் ஆகியவை வடஇந்தியாவில் பேசப்படும் முதன்மையான மொழிகளாகும். வடகிழக்கு இந்தியாவில் அஸ்ஸாமி மொழி பேசப்படுகிறது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் தென்னிந்தியாவில் பேசப்படும் முதன்மையான மொழிகளாகும். பழங்குடி மக்கள் பேசும் பல மொழிகளுக்கு எழுத்துவடிவம் இல்லை. ஆங்கிலேயரின் இருநூறு ஆண்டுகால ஆட்சிக்குப் பின்னர், இந்தியாவில் ஆங்கில மொழி பொதுவான இணைப்பு மொழியாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இத்தனை மொழிகள் இருப்பினும் 22 மொழிகள் மட்டுமே இந்திய அரசால் அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட மொழிகளாகும்.

மனிதப் பண்பாட்டில் மொழி என்பது ஓர் இணைப்புக் கருவியாக பயன்படுகின்றது. ஏனெனில் மொழிதான் ஒருவருக்கு ஒருவர் கருத்தினைப் பரிமாறிக் கொள்ளும் கருவியாகப் பயன்படுகிறது. இந்தியாவில் தேசிய மொழி, இணைப்பு மொழி, வட்டார மொழி போன்றவை பேசப்படுகின்றன.

மொழி, அதைப் பேசுகின்ற இனத்தின் அறிவியல், கலை, வரலாறு, சமூகநிலை, பழக்க வழக்கங்கள், ஒழுக்க நெறிகள் மற்றும் எண்ணங்கள் போன்ற பல வாழ்வியல் கூறுகளையும் பண்பாட்டு நிலைகளையும் தீர்மானிக்கிறது.

உங்களுக்குத் தெரியுமா?

**இந்திய மொழிகள்**

இந்திய அரசியலமைப்பில் 22 மொழிகள் அட்டவணை மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. அவை 1. அஸ்ஸாமி 2. பெங்காலி 3. போடோ 4. டோக்ரி 5. குஜராத்தி 6. இந்தி 7. கன்னடம் 8. காஷ்மீரி 9. கொங்கணி 10. மைதிலி 11. மலையாளம் 12. மணிப்பூரி 13. மராத்தி 14. நேபாளி 15. ஒரியா 16. பஞ்சாபி 17. சமஸ்கிருதம் 18. சாந்தலி 19. சிந்தி 20. தமிழ் 21. தெலுங்கு 22. உருது ஆகியவையாகும். இம்மொழிகளில் தமிழ்மொழியே மிகவும் பழைமையானதாகும்.

வட இந்திய மொழிகள் பல இந்தோ – ஆரிய மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவை. பஞ்சாபி, சிந்தி, ஹிந்தி, உருது, குஜராத்தி, வங்காளம், ஒரியா காஷ்மீரி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளை இந்திய மக்கள் பெரும்பான்மையினர் பேசுகின்றனர். உயர்கல்வி நிலையில் பெரும்பாலும் ஆங்கிலம் பயிற்று மொழியாக உள்ளது. ஆங்கிலம் தவிர பிரெஞ்சுமொழி பாண்டிச்சேரியிலும், போர்த்துக்கீசியமொழி கோவாவிலும் பேசப்படுகின்றன. இவ்வாறு நம்நாட்டில் பல்வேறுபட்ட மொழிகளைக் காணமுடிகிறது.

## சமய வேறுபாடு

இந்திய மக்கள்தொகை கணக்கெடுப்பு 2011–இன்படி அதில் இந்தியாவின் மொத்த மக்கள்தொகை 121.09 கோடி எனவும், இதில் 79.80% இந்துக்களும், 14.23% இஸ்லாமியர்களும், 2.30% கிருத்துவர்களும், 1.72% சீக்கியர்களும், 0.07% பௌத்தர்களும், 0.37% சமணர்களும் இந்தியாவில் வாழ்வதாக புள்ளி விவரம் தெரிவிக்கிறது. இந்தியாவில் வாழும் மக்கள் அனைவரும் பல்வேறு சமயங்களைப் பின்பற்றி வருகின்றனர். இந்து, பௌத்தம், சமணம், இஸ்லாம், கிறித்துவம், சீக்கியம் மற்றும் பார்சியம் போன்ற சமயங்கள் இந்திய மக்களால் பின்பற்றப்படுகிறது. இவற்றில் இந்து சமயம், பௌத்த சமயம், சமண சமயம் மற்றும் சீக்கிய சமயம் ஆகிய நான்கு சமயங்களும் இந்தியாவில் தோன்றியவையாகும்.



சமயச் சின்னங்கள்



XII Ethics_Lesson 2.indd 22 05-04-2019 10:35:04

மக்கள் தொகை அடிப்படையில் ஜம்மு – காஷ்மீரில் இஸ்லாமிய சமயத்தைச் சார்ந்தவர்கள் அதிக அளவில் வாழ்கின்றனர். அருணாச்சலப் பிரதேசம், மிசோரம், மேகாலயா போன்ற வடகிழக்கு மாநிலங்களில் கிறித்துவ சமயத்தவர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.பஞ்சாப்மாநிலத்தில்சீக்கியர்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர். மற்ற மாநிலங்களில் இந்துக்கள் பெரும்பான்மை சமயத்தவராக வாழ்கின்றனர். அவரவர் சமயத்திற்கான வழிபாட்டுத் தலங்களை அமைத்துக்கொண்டும், திருவிழாக்களைக் கொண்டாடியும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

### சமுதாய அமைப்பில் வேற்றுமைகள்

வட இந்திய மக்களின் வாழ்க்கை முறையில் இருந்து தென்னிந்திய மக்களின் வாழ்க்கைமுறை வேறுபட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்திலும் உணவு, உடை, அணிகலன்கள், பழக்க வழக்கங்கள் போன்றவை மாறுபட்டு இருப்பதைக் காண்கிறோம். ஆடை அணிகலன்கள் அணியும் முறை, உணவு முறை ஆகியவற்றில் வேற்றுமைகள் காணப்படுகின்றன.

### பொருளாதார வேற்றுமைகள்

உலகளவில் பொருள்களை வாங்கும் திறன் அடிப்படையில் நான்காவது இடத்தில் இந்தியா உள்ளது. நிலத்தின் தன்மைக்கேற்பப் பயிர்கள் விளைகின்றன. பஞ்சாப் மாநிலத்தின் பொருளாதார நிலையையும் அதன் வளர்ச்சி, சமநிலை, வீழ்ச்சி ஆகியவற்றைக் கோதுமையின் உற்பத்தியே தீர்மானிக்கிறது. அதேபோல் மேற்கு வங்காளத்தில் நெல்லும் சணலும், குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களில் பருத்தியும், மத்தியப்பிரதேசம், கர்நாடகா போன்ற மாநிலங்களில் பருப்பு வகைகளும், எண்ணெய் வித்துக்களும், கேரளாவில் வாசனைத் திரவியங்கள் போன்றவை அந்தந்த மாநிலங்களின் பொருளாதார வளங்களைத் தீர்மானிக்கின்றன. ஒரே விதமான வேளாண்பயிர்கள் இந்தியா முழுமைக்கும் விளைவிக்கப்படுவதில்லை. பொருளாதாரக் கொள்கையின் அடிப்படையில் **கலப்புப்பொருளாதாரக் கொள்கையைப்** பின்பற்றும் நாடாக இந்தியா திகழ்கிறது. இப்பொருளாதாரக் கொள்கை அரசு, மற்றும் தனியார் துறைகளின் பங்கெடுப்பைக் குறிப்பிடுகிறது. தனிநபர் வருமானமே ஒரு குடும்பத்தின் பொருளாதார வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது. அவ்வடிப்படையில் மக்களிடையே பொருளாதார அடிப்படையில் ஏழை, பணக்காரன், முதலாளி, தொழிலாளி ஆகிய வேற்றுமைகள் நிலவுகின்றன.

## ஒற்றுமைக் கூறுகள்

### நிலவியல் அமைப்பில் ஒற்றுமை


ஆசியக் கண்டத்தின் மத்திய தென்பகுதியில் அமைந்த நாடு இந்தியா. இது வடக்கு தெற்காக 3214 கிலோ மீட்டர் நீளமும், கிழக்கு மேற்காக 2933 கிலோ மீட்டர் அகலமும் கொண்டுள்ளது. இந்தியாவின் நிலவியல் அடிப்படையில் சமவெளி நிலங்கள் (விவசாய நிலங்கள்) மிகுதியாக உள்ளன.

அயல்நாட்டவர்கள் இந்திய நிலப்பகுதிகளை ஒரே நாடாகக் கருதி வந்தனர். 'ஹிந்த்' என்ற பெயர் 'சிந்து' என்ற நதியின் பெயரிலிருந்து பெறப்பட்டது. கிரேக்கர்கள் முதன்முதலில் அறிந்த பகுதி சிந்து நதி பாயும் பகுதி என்பதால் இத்துணைக் கண்டத்தை 'சிந்து' என்று அழைத்தனர். தொடக்கக்காலத்தில் பாரசீக, கிரேக்கப் படையெடுப்புகளின் விளைவால் இந்தியா, இந்துஸ்தானம் என்ற பெயர்கள் உருவாயின. **சிந்து** என்பதை அவர்கள் ஹிந்து என்று உச்சரித்தார்கள். இதனைத் தொடர்ந்து இடைக்காலத்தில் வந்த அரேபியர்களும் நமது நாட்டை '**ஹிந்துஸ்தான்**' என்று அழைத்தனர் .

நிலவியல் கூறுகளின் அடிப்படையில் அத்தகைய வேற்றுமைகள் காணப்படினும், புராண காலந்தொட்டே நமது நாடு "**பாரத நாடு**" என்ற பெயரினைக் கொண்டுள்ளது. வடஇந்தியாவையும், தென்னிந்தியாவையும்


XII Ethics_Lesson 2.indd 23 05-04-2019 10:35:04

விந்திய சாத்பூரா மலைத்தொடர்கள் பிரித்தாலும் இந்தியாவைப் **பாரதக் கண்டம்** என்றே வழங்குகிறோம். அடிப்படையில் தான் பாரத நாட்டை பாரத மாதாவாக அனைவரும் கொண்டாடுகிறோம்.



விந்திய சாத்பூரா மலைகள்

## அரசியல் ஒற்றுமை

பண்டைய தமிழர்கள் பண்பாட்டில் சிறந்து விளங்கினர் என்பதைச் சங்க கால இலக்கியங்களாகிய எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் உணர்த்துகின்றன. இந்தியாவின் பழைமையான, உயர்வான பண்பாடே, அதன் ஒற்றுமைக்கும் வரலாற்றிற்கும் பின்னணியாக அமைந்துள்ளது. அக்காலத்தில் சாதி, சமயம் வேற்றுமைகள் காணப்பட்டாலும் அந்நியர்களை எதிர்ப்பதில் இந்தியர்கள் ஒன்றுபட்டனர். அந்த அடிப்படையில் அரசியல் மற்றும் பண்பாட்டு ஒற்றுமை இந்திய தேசத்தை வலிமைமிக்க தேசமாக்கியது என்று ஜவஹர்லால் நேரு தன்னுடைய Discovery of India என்ற நூலில் கூறியுள்ளார். மன்னர்கள் இந்தியா முழுமைக்கும் வெற்றி கொண்டு ஆட்சி செய்ததமையால் இராஜாதிராஜன், அதிராஜன், ஏக்ராட், சாம்ராட் போன்ற பட்டங்களைப் பெற்றுச் சீரும் சிறப்புமாக ஆட்சிபுரிந்தமையை அறிய முடிகிறது. மௌரியப் பேரரசில் அசோகர், முகலாயப் பேரரசர்களில் அக்பர், ஔரங்கசீப் போன்றோர் இந்தியா முழுமைக்கும் ஒரே மத்திய நிர்வாக அமைப்பை ஏற்படுத்தினார்கள். நாடு முழுமைக்கும் பொதுவான சட்டங்கள், பொது நாணயங்கள், அலுவலக மொழியாக பாரசீக மொழி, நீண்ட நெடுஞ்சாலைகள் போன்றவற்றை உருவாக்கி இந்தியா முழுமைக்கும் அரசியல் ஒற்றுமையை நிலைநாட்டினார்கள். ஆங்கிலேயர்கள் நாடுமுழுமைக்கும் பொதுவான இரயில்பாதை, தபால் தந்தித் துறையை ஏற்படுத்தி ஒற்றுமை உணர்வை வளர்த்தனர்.



மாமன்னர் அசோகர்

## சமய ஒற்றுமை

சமயங்களின் அடிப்படையில் கொண்டாப்படும் **திருவிழாக்கள்** மக்களை இந்தியர்களாக ஒன்றிணைக்கின்றன. சமயவேறுபாடுகளை மறந்து மக்கள் ஒவ்வொருவரும் தங்களுக்குள் வாழ்த்துகளைப் பரிமாறிக்கொள்கின்றனர். சமய விழாக்களைக் கொண்டாட சமயங்களைக் கடந்து உதவி செய்கின்றனர். சமத்துவம், சகோதரத்துவம், தேசப்பற்று போன்றவற்றை மக்களிடையே பரப்பும் கருவிகளாக விழாக்கள் திகழ்கின்றன. சமய விழாக்கள் மட்டுமின்றி பண்பாடு அடிப்படையிலான விழாக்களும் மக்கள் மனதில் வேற்றுமையை மறந்து ஒற்றுமையை விதைக்கும் காரணிகளாகத் திகழ்கின்றன. கிராமியவிழாக்கள் சமயங்களின் அடிப்படையில் இருந்தாலும் பண்பாட்டு வகையிலான ஒற்றுமையை மக்கள் மனதில் விதைக்கின்றன. பஞ்சாப் மாநிலத்தில் நடைபெறும் **குருநானக் ஜெயந்தி**, தமிழ்நாட்டின் **நாகூர் தர்காவில்** நடைபெறும் **கந்தூரி விழா, வேளாங்கண்ணி மாதா ஆலயக் கொடியேற்றவிழா, சிக்கல் சிங்காரவேலர் ஆலய கந்தசஷ்டி விழா** போன்றவற்றில் சமயங்களைக் கடந்து அனைத்து மதத்தவருமே கலந்து கொள்கின்றனர்.

## சமய விழாக்கள்

இந்தியாவில் பல்வேறு விழாக்கள் சமயங்கள் அடிப்படையில் ஒற்றுமையுடன் கொண்டாடப்பட்டு வருகின்றன. இந்து சமயத்தவர் தீபாவளி, நவராத்திரி, சித்திரைத் திருவிழா, ஸ்ரீஇராமநவமி, வைகுண்டஏகாதசி, விநாயகர்சதுர்த்தி, மகாசிவராத்திரி, கும்பமேளா, மாசிமகம், தைப்பூசம், கார்த்திகைதீபம், கிருஷ்ணஜெயந்தி போன்ற



XII Ethics_Lesson 2.indd 24 05-04-2019 10:35:05

www.tntextbook.org

விழாக்களைக் கொண்டாடுகின்றனர். தமிழகத்தில் கொண்டாடப்படும் பொங்கல்விழா வடஇந்தியாவில் மகரசங்கராந்தி என்ற பெயரில் கொண்டாடப்படுகிறது.

கிறித்துவர்கள் கிறிஸ்துமஸ் விழாவைக் கொண்டாடுகின்றனர். இஸ்லாமியர்கள் மிலாடி நபி, ரம்ஜான், பக்ரீத் போன்ற பண்டிகைகளையும் பௌத்தர்கள் புத்தபூர்ணிமா, சமணர்கள் மகாவீர்ஜெயந்தி, சீக்கியர்கள் குருநானக்ஜெயந்தி போன்ற விழாக்களையும் கொண்டாடுகின்றனர். இவ்விழாக்களைக் கொண்டாடும் அனைத்தும் சமய மக்களும் தூய அன்பு, சகிப்புத் தன்மை, உண்மையான பக்தி ஆகியவற்றின் மூலம் இறைவனை அடைய முடியும் என்று



கந்த சஷ்டி விழா



கந்தூரி விழா



வேளாங்கண்ணி

நம்புகின்றனர். இத்தகைய விழாக்களை ஒற்றுமையுடனும், மகிழ்ச்சியாகவும் அனைவரும் கொண்டாடுவதால் **இந்தியா ஒரு சமய சார்பற்ற நாடு** என்பதை உலகிற்கு நிலைநாட்டுகிறது.

இந்தியாவில் உள்ள சமயங்களில் **ஒருகடவுள்** கோட்பாடு, **ஆன்மாவின் அழியாத்தன்மை, அவதாரக் கோட்பாடுகள், கர்மவினைக்** கோட்பாடுகள் **வீடுபேறு** போன்ற எல்லா நிலைகளிலும் இந்தியச் சமயங்கள் ஒத்திருப்பதை அறிய முடிகிறது. சமயச்சடங்குகளிலும், பழக்கவழக்கங்களிலும் அடிப்படையான தன்மைகள் ஒன்றாகவே உள்ளன. தென்னிந்தியர்கள் வடக்கே உள்ள காசிக்கு புனிதப்பயணம் மேற்கொள்வதும், **வட இந்தியர்கள் தெற்கே உள்ள இராமேஸ்வரத்திற்குப் புனிதப்பயணம் மேற்கொள்வதும், நமது நாட்டின் சமய மற்றும் பண்பாட்டு ஒற்றுமையை வெளிப்படுத்துகிறது.**

வைதீக சமயநெறியில் சிவன், விஷ்ணு போன்ற கடவுளர்களை வணங்குவதும் இராமாயணம், மகாபாரதம் போன்ற வீரகாவியங்களைப் போற்றுவதும், வேதங்கள், பகவத்கீதை, புராணங்கள் போன்றவற்றைப் புனிதமாகக் கருதுகின்ற மனநிலை இந்தியா முழுமைக்கும் ஒன்றாகவே உள்ளது.

இந்துக்கள் தர்காவிற்கும் தேவாலயத்திற்கும் சென்று வழிபடுவதும் இந்தியாவின் சமய ஒற்றுமையைக் காட்டுகிறது. இந்திய மக்கள் பிற சமய மக்களின் நம்பிக்கைகளை மதித்து, ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி, ஒற்றுமையுடன் வாழ இந்திய அரசியலமைப்புச் சட்டம் வழிவகை செய்கிறது. பிற சமய மக்கள், தங்களுக்குரிய இறைவழிபாட்டுத் தலங்களை அமைத்துக்கொண்டு வழிபடவும் உரிமை வழங்குகிறது. சமயமும் சமயத்திருவிழாக்களும் மக்கள் மனதில் அறநெறிப்பண்புகளையும், ஒழுக்கநெறிகளையும் வளர்க்கின்றன.


## இலக்கியம்

இந்தியா **இலக்கியங்களின் கருவூலமாகத்** திகழ்கிறது. வேதங்கள்,



XII Ethics_Lesson 2.indd 25 05-04-2019 10:35:05

www.tntextbook.org



காசி



இராமேஸ்வரம்

மகாபாரதம், இராமாயணம், பகவத்கீதை, விவிலியம், திருக்குரான் மற்றும் திருக்குறள் போன்ற நூல்கள் பிற இந்திய மொழிகளிலும் கிடைக்கப்பெறுகின்றன. காளிதாசரின் மேகதூதம் மற்றும் சாகுந்தலம் ஆகிய நூல்கள் இந்தியாவின் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. சங்கரர், இராமானுஜர், கபீர், குருநானக் மற்றும் சைதன்யர் போன்றோர்களால் எழுதப்பட்ட தத்துவ கோட்பாடுகள் இந்தியா முழுமைக்கும் பின்பற்றப்பட்டு வருகின்றன.

ஆழ்வார்களாலும், நாயன்மார்களாலும் எழுதப்பட்ட நாலாயிரதிவ்யப்பிரபந்தம் மற்றும் தேவாரப் பாடல்கள் பாடப்பட்டு வருகின்றன. இத்தகைய இலக்கியப் படைப்புகள் இந்தியர்களிடையே ஒற்றுமையையும் ஒருமைப்பாட்டினையையும் வளர்க்கின்றன. எனவே இந்தியா இலக்கியங்களின் கருவூலமாக திகழ்கின்றது.

### அறுவடைத் திருவிழாக்கள்

நமது நாடு முழுவதும் விவசாயிகள் கொண்டாடும் அறுவடை திருவிழாக்கள் நமது பழைமையான நாகரிகம், பண்பாடு, பழக்கவழக்கங்கள், தேசிய ஒருமைப்பாடு ஆகியவற்றை உலகிற்கு எடுத்தியம்புகின்றன. தமிழகத்தில் பொங்கல் விழா அறுவடைத் திருவிழாவாகக் கொண்டாடப்படுவது போன்று கர்நாடகா, குஜராத், மகாராஷ்டிரா, பீகார் ஆகிய மாநிலங்களில் மகரசங்கராந்தியாகவும், கேரளாவில் ஓணம் பண்டிகை, மத்திய பிரதேசத்தில் லொஹரி, பஞ்சாபில் பைசாகி, அசாமில் போஹாலி பிஹு, வங்காளத்தில் நபன்னா என்று பல்வேறு பெயர்களிலும் அறுவடை திருவிழாக்கள் கொண்டாடப்படுகின்றன.

### பண்பாட்டில் ஒற்றுமை

இந்தியாவில் பல்வேறு இனத்தைச் சார்ந்த மக்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து உயரிய பண்பாட்டை உலகறியச்செய்துள்ளனர்.பண்பாடு என்பது ஒட்டு மொத்த மக்களின் பண்பட்ட சமுதாயத்தின் விளைவேயாகும். மொழி, இலக்கியம், சமயம், தத்துவம், நடைமுறைகள், மரபுகள், பாரம்பரியம், நம்பிக்கைகள், ஒழுக்கக்கோட்பாடுகள், நுண்கலைகள் மற்றும் கட்டடக்கலையின் வாயிலாக பண்பாட்டில் ஒற்றுமையை உணரமுடிகிறது. எனவே பண்பாடு என்பது பன்முகத்தன்மை வாய்ந்த வாழ்க்கையின் நெறிமுறையாகும்.

இந்தியப் பண்பாட்டை வெளிப்படுத்தும் இலக்கியங்களில் ஒரே சீரான பண்பாட்டுக் கூறுகள், சிந்தனைகள் இருப்பதைக் காணமுடிகிறது. நமது நாட்டிலுள்ள அனைத்து சமயத்தினரும் அவரவருக்குரிய பண்டிகைகளைக் கொண்டாடுவதனால் பண்பாட்டு ஒற்றுமையை வெளிப்படுத்துகிறோம். இப்பண்பாடு பல மாற்றங்களைக் கடந்து வந்தாலும் விட்டுக்கொடுத்தல், வந்தோரை வாழவைத்தல், சகிப்புத்தன்மை போன்ற பண்புகளால் இன்றுவரை சிதைவுறாமல் வளர்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.



XII Ethics_Lesson 2.indd 26 05-04-2019 10:35:05

## பழக்கவழக்கங்கள் மற்றும் பாரம்பரியம்

இந்திய பாரம்பரியம் மற்றும் பழக்கவழக்கங்கள் மிகவும் தொன்மையானவை. இனம், சமயம், மொழி போன்ற வேறுபாடுகளைக் கடந்து, விருந்தோம்பல், ஈகை, நட்பு, அன்பு, சுயநலமின்மை, நீதி, நன்னடத்தை, உண்மை, அமைதி, சமயநம்பிக்கை, உயிரிரக்கம், பெரியோரைப் போற்றுதல், பெற்றோர், ஆசிரியர்களை மதித்தல், சகிப்புத்தன்மை போன்ற பின்பற்றத்தக்க நற்பண்புகளை வலியுறுத்துகின்றன. மேற்கூறிய நமது பண்புகள் பழக்கவழக்கங்களையும் பண்பாட்டினையும் பாதுகாக்க உதவுகின்றன.

## கலை மற்றும் கட்டடக்கலை

இந்திய கட்டடக்கலையின் வளர்ச்சி பெரும்பாலும் சமயத் தொடர்புடையதாகும். பல்லவர்காலத்து மாமல்லபுரச் சிற்பங்கள் காஞ்சி கைலாசநாதர் கோயில், வைகுந்த பெருமாள் கோயில், தஞ்சை பீரகதீஸ்வரர் கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருவரங்கம் அரங்கநாதர் கோயில், திருவில்லிபுத்தூர் ஆண்டாள் கோயில், போன்றவை பழங்கால தென்னிந்திய கட்டடக்கலைக்குச் சிறந்த சான்றுகளாகும்.

வடஇந்தியாவில் முதன்முதலாக ஸ்தூபி என்ற கட்டட அமைப்பு முறை அறிமுகப்படுத்தப்பட்டது. சாஞ்சி, சாரநாத் உள்ளிட்ட பல இடங்களில் பழைமையான ஸ்தூபிகள் காணப்படுகின்றன. பாரசீகக் கட்டடப்பாணியில் மசூதிகள் கட்டப்பட்டன. பூரி ஜெகநாதர் கோயில், கோனார்க் சூரியனார் கோயில், காசி விஸ்வநாதர் கோயில், காஷ்மீரில் உள்ள வைஷ்ணவதேவி கோயில், தாஜ்மஹால், டெல்லி செங்கோட்டை போன்றவை வடஇந்தியக் கட்டடக்கலைக்கு சிறந்த சான்றுகளாகும்.

வடஇந்தியாவில் இந்துஸ்தானி இசையும், தென்னிந்தியாவில் கர்நாடக இசையும் மக்களை ஒன்றிணைக்கும் கருவிகளாகத் திகழ்கின்றன. ஒவ்வொரு மாநிலத்திற்கும் உரிய நடனங்கள் வேறுபட்டாலும் அவை இந்தியர் என்ற ஒருமைப்பாட்டை வலியுறுத்துகின்றன.



கோனார்க் சூரியனார் கோயில்

## மொழி ஒற்றுமை

நமது நாட்டில் பல்வேறு மொழிகள் பல்வேறு மாநிலங்களில் வாழும் மக்களால் பேசப்படுகின்றன. ஒவ்வொரு மொழிக்கும் அதற்கென தனியாக இலக்கண, இலக்கிய மொழி வளம் உண்டு. மொழிகள் பேசும் விதத்தால் வேறுபட்டாலும் நமது நாட்டின் பழைமையான பண்பாட்டையும் மக்களின் உணர்வுகளையும் பிரதிபலிக்கும் கருவியாகப் பயன்படுகின்றன. பாலி, பிராகிருதம், சமஸ்கிருதம் போன்ற மொழிகள் பழங்கால வடஇந்திய மக்களால் பேசப்பட்டன. தென்னிந்தியாவிலும் இம்மொழிகள் சமண, பௌத்தத் துறவிகளால் பரப்பப்பட்டன. இம்மொழிகளில் எழுதப்பட்ட இலக்கியங்கள் அறக்கோட்பாடுகளையும், மனிதப்பண்புகளையும் வலியுறுத்தின.

### செவ்வியல் சிறப்பு

தொன்மை, தனித்தன்மை, மொழிகளின் தாய், சொல்வளம், இலக்கிய இலக்கண வளம், சிந்தனைவளம், கலைவளம், பண்பாட்டுவளம் இவற்றுடன் பன்னாட்டு மொழியாக விளங்கும் தன்மையைப் பெற்ற மொழியே **செவ்வியல்மொழி** எனப்படும்.

இதே காலக்கட்டத்தில் தமிழ் மொழியிலும் அறம், பொருள், இன்பம், வீடு

ஆகிய நற்கருத்துகளை வலியுறுத்தும் இறவாப்புகழ் கொண்ட எண்ணற்ற இலக்கியங்கள் இயற்றப்பட்டன. திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் **உலகப்பொதுமறை** என்று அழைக்கப்படுகிறது. தொல்காப்பியம் தமிழரின் வாழ்வியலை உலகிற்கு உணர்த்துகிறது.

தென்னிந்தியாவில் மூத்த திராவிட மொழியிலிருந்து கன்னடம்,மலையாளம் ஆகிய மொழிகள் தோன்றின. இம்மொழிகளிலும் புகழ்பெற்ற பல இலக்கியங்கள் இயற்றப்பட்டன. இவை தென்னிந்திய மக்களின் பண்பாடு வாழ்வியல் நெறிமுறைகள் போன்றவற்றை உலகிற்கு உணர்த்துகின்றன.

பண்டைய சமஸ்கிருத இலக்கியங்கள் அராபிக் மற்றும் பாரசீக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டன. இந்நிலை மொழிகளுக்கிடையேயான ஒற்றுமையை நிலைநாட்டுகிறது. இந்தியாவின் வானவியல், கணிதம், அறிவியல், தத்துவநூல்களும், மேற்காசிய நாடுகளில் மொழிபெயர்க்கப்பட்டன. ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர் ஆங்கிலம் இந்தியாவின் ஆட்சி மொழியாக்கப்பட்டது. திருக்குறள், திருவாசகம் போன்ற ஒப்பற்ற தமிழ் நூல்கள் ஆங்கில மொழியில் மொழிபெயர்க்கப்பட்டன உலக மக்களால் விரும்பி படிக்கப்பட்டன. இந்தியரும் ஆங்கிலத்தைக் கற்று மேற்கத்திய தத்துவங்களையும், இலக்கியங்களையும் தங்கள் மொழியில் மொழிபெயர்த்தனர். லிட்டன் பிரபு எழுதிய The Secret Way என்ற நூலைத் தமிழில் **இரகசிய வழி** என்ற பெயரில் மனோன்மணியம் சுந்தரனார் மொழிபெயர்த்துள்ளார். இராஜாராம்மோகன்ராய், சுவாமி விவேகானந்தர் ஆகியோரின் தத்துவங்கள் மேலைநாட்டு மொழிகளில் மொழிபெயர்ப்பானது.

விடுதலைக்குப் பின்னரும் பிறமொழிகளில் உள்ள சிறந்த நூல்கள் மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளன. எனவே இந்தியாவின் பண்பாட்டு வாழ்வியல் முறைகள், புவியியலமைப்பு போன்றவற்றை வெளிப்படுத்திய மொழிகள் அரசியல் ஒற்றுமை ஏற்படவும் வழிவகுத்தன.

## திராவிட மொழிக் குடும்பம்

| தென்திராவிட மொழிகள் | நடுத்திராவிட மொழிகள் | வடதிராவிட மொழிகள் |
|---|---|---|
| தமிழ், மலையாளம், கன்னடம், குடகு, துளு, தோடா, கோத்தா, கொரகா, இருளா. | தெலுங்கு, கோண்டி, கோயா, கூயி, கூவி, கோலாமி, பர்ஜி, கதபா, கோண்டா, நாயக்கி, பெங்கோ, முண்டா. | குரூக், மால்தோ, பிராகுய். |

## இலக்கிய ஒற்றுமை

உலக செம்மொழிகளில் ஒன்றான தமிழ் மொழியில் எழுத்தப்பட்ட தொல்காப்பியம், திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, பெரிய புராணம், கம்பராமயாணம், சீறாப்புராணம், இயேசு காவியம் போன்ற இலக்கியங்களில் மொழி வளத்தைக் காணலாம். இந்நூல்கள் அறவியல் கோட்பாடுகளை முன்னிறுத்துகின்றன. இராஷ்டிரகூடர்கள் காலத்தில் கன்னட மொழியில் எழுதப்பட்ட கவிராஜமார்க்கம், விஜயநகரப்பேரரசு காலத்தில் தெலுங்கு மொழில் எழுதப்பட்ட ஆமுக்தாமால்யதா போன்ற இலக்கியங்கள் அந்தந்த மொழிகளின் வளமையை எடுத்து இயம்புகின்றன.

## உடல் அமைப்பில் ஒற்றுமை

ஆரியர்கள், கிரேக்கர்கள், சாகர்கள் ஆகியோர் இந்தியாவின் மீது படையெடுத்தனர். இவர்கள் சிவந்த மேனியையும், நீலமான கண் விழிகளையும் கொண்டிருந்தனர். மிதமான குளிர்ப்பகுதியானவடகிழக்கிந்தியாவில்வாழ்ந்த மக்கள் சிவந்த உடல் அமைப்பையும்,குள்ளமான தோற்றத்தையும் கொண்டிருக்கின்றனர். தென்னிந்தியாவில் வாழும் மக்கள் மாநிற மேனியையும், நடுத்தரமான தோற்றத்தையும் கொண்டிருக்கின்றனர். உடலமைப்பாலும் உணவுமற்றும்பழக்கவழக்கங்களாலும்தாங்கள்

வாழும் பகுதிக்கேற்ப வேறுபட்டிருந்தாலும், இந்தியர் என்ற ஒற்றுமை உணர்வுடன் இந்தியப் பண்பாட்டை பின்பற்றி ஒற்றுமையுடன் வாழ்ந்து வருகின்றனர்.

## சமுதாய அமைப்பில் ஒற்றுமை

தொடக்கக் காலத்திலிருந்தே சமுதாய அமைப்பில், தொழில் மற்றும் பொருளாதார அடிப்படையில் வேற்றுமைகள் இருந்தாலும், வாழ்வியலிலும், அதையொத்த பண்பாட்டு நிலைகளிலும் ஒரே மாதிரியான தன்மையையே இந்திய மக்கள் கொண்டிருக்கின்றனர். பல்வேறு விதமான சமூக வேறுபாடுகள் இருந்தாலும் அவற்றை மறந்து இயற்கைச் சீற்றங்கள் நிகழும் போது ஒருவருக்கொருவர் தங்களிடையேயான இந்தியர் என்ற ஒற்றுமையுடன் உதவி செய்து வாழ்ந்து வருகின்றனர்.

சமூகத்தில் தொழில்கள் கட்டமைப்பைப் பொருத்தவரையில் இன்னார்க்கு இன்ன தொழில் என்றநிலை மாறி, யார் வேண்டுமானாலும் எந்தத் தொழிலையும் செய்யலாம் என்ற நிலை வந்துள்ளது. இந்நிலை சமூக ஒற்றுமையைப் பறைசாற்றுகின்றது.

## இந்திய பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்க துணைபுரியும் காரணிகள்

நம்நாட்டின் உயரிய கோட்பாடாகிய வேற்றுமையில் ஒற்றுமை எவ்வாறு மிளிர்கிறது என்பதை அறிந்தோம். இனி ஒற்றுமையை நிலைநாட்டுகின்ற காரணிகளைப் பற்றிக் காண்போம்.

## அரசர்கள்

இந்தியப் பெருநாட்டை ஆட்சிபுரிந்து வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற பேரரசர்கள் அசோகர், சந்திரகுப்தர், சமுத்திரகுப்தர், அக்பர் போன்றவர்களாவர். இவர்கள் மண்ணாசைக் காரணமாக இந்தியாவின் பெரும்பகுதியை வெற்றிகொண்டு ஆட்சி புரிந்தனர். பல்வேறு சிற்றரசுகளை ஒன்றாக இணைத்து இந்தியாவை ஒரே குடையின்கீழ்க் கொண்டுவந்தனர். அரசர்களைத் தொடர்ந்து வீரர்களும் தங்களின் தீரச்செயல்களை நிலைநாட்டினர். இவர்களுடைய செயல்களும் நமது பண்பாட்டு ஒற்றுமையை வளர்த்தன என்பதையும் அறியமுடிகிறது.

## ஒரே சீரான நிர்வாகம்



மாமன்னர் அக்பர்

நம்நாட்டை ஆண்ட மௌரியர்கள், குப்தர்கள், முகலாயர்கள், ஆங்கிலேயர்கள் போன்றோர் ஆட்சி காலத்தில் அனைத்து மாகாணங்களையும் ஒன்றிணைத்து ஒரே சீரான ஆட்சியமைப்பினால் நிர்வாகம் செய்தனர். இந்த சீரிய நிர்வாக அமைப்பு இந்தியாவின் பண்பாட்டு ஒற்றுமைக்கு வித்திட்டது எனலாம்.

## மொழியும் சமயமும்

பழங்காலத்தில் தமிழும், வடமொழியும், தற்காலத்தில் ஆங்கிலமும், இந்தியும், தமிழும் பண்பாட்டு ஒற்றுமையைப் பேணிவளர்க்கத் துணைபுரிகின்றன. இலக்கியங்கள், காப்பியங்கள், புராணங்கள், இதிகாசங்கள் என அனைத்தும் இந்திய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டன. மூலகருத்துக்களைக் கொண்டு தத்தம் பண்பாட்டிற்கேற்ப எழுதப்பட்டன. இராமாயணம் வடமொழியில் வால்மீகி முனிவராலும், இந்தியில் துளசிதாசராலும், தமிழில் கவிச்சக்கரவர்த்தி கம்பராலும் இயற்றப்பட்டதைக் காண்கிறோம். இந்த மூவருமே மூலநூலின் மையக்கருத்து மாறாமல் தத்தம் பண்பாட்டிற்கு இணங்க தொடர்புடைய செய்திகளைக் கூறியுள்ளனர். இவற்றின் மூலம் இந்தியாவில் பண்பாட்டு ஒற்றுமையை நிலைநாட்ட முடிகிறது. உலகிலுள்ள பல்வேறு சமயங்களுக்கும் நிலைக்களனாகத் திகழும் இந்து சமயம் மக்களின் ஆன்மிக வாழ்விலும், அகச்சிந்தையிலும் உயரிய ஒற்றுமையை பேணி வளர்க்க துணைபுரிகின்றன.

## போக்குவரத்தும் செய்தித் தொடர்பும்

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கொண்டுவரப்பட்ட இருப்புப்பாதைகள்,



XII Ethics_Lesson 2.indd 29 05-04-2019 10:35:05

www.tntextbook.org

தபால் தந்தி முறை, தொலைபேசி, வானொலி, விரைவான தகவல் தொடர்பிற்கு வித்திட்டன போன்றவை பயண நேரத்தைக் குறைத்தது. இதனால் மக்கள் பல இடங்களுக்கு எளிதாக சென்று வருகின்றனர். இது பண்பாட்டு ஒற்றுமைக்குவித்திட்டது.இன்று வளர்ந்து வரும் அறிவியல் தொழில்நுட்பத்தின் காரணமாக தொலைக்காட்சி, கணினி, மின்னணுஅஞ்சல் சேவை, தொலைநகலி, குறுஞ்செய்தி மற்றும் முகநூல் இவற்றின் பயன்பாடுகளை அறிந்து, மேலும் ஒருவருடன் ஒருவர் நெருங்கிய தொடர்பு கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

## வரலாறும் நாட்டுப்பற்றும்

பொதுவாக வரலாற்று மரபுகளை நமது இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். வரலாற்று மரபுகளை அறிந்து நாமும் நமது பண்பாட்டு ஒற்றுமைக்கு உறுதுணை புரிகிறோம். விடுதலை இயக்க வரலாற்றை அறிந்து நாட்டுப்பற்று மிக்கவர்களாய் வாழ வேண்டும் என்ற உணர்வு மேம்படுகிறது. எனவே பண்பாட்டு ஒற்றுமையை நமது வரலாற்று அறிவு, நாட்டுப்பற்று, தேசிய உணர்வு ஆகியவை வளர்க்கத் துணைபுரிகின்றன.


## பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பேணிக்காத்தல்

**"வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே"** இந்தியரின் அடிப்படைக் கோட்பாடு என்பதை உணர வேண்டும். இதனை எதார்த்தமாய் உணர்ந்து நாம் நம் ஒற்றுமை உணர்வை போர் மற்றும் இயற்கைப் பேரிடர்களான புயல், வெள்ளம், பூகம்பம் போன்ற இயற்கைச் சீற்றத்தின்போது உலகறியச் செய்கிறோம். இத்தகைய நெருக்கடி காலங்களைத் தவிர்த்து அமைதி காலத்திலும் அன்றாட வாழ்விலும் அன்பு, அமைதி, சகோதர மனப்பான்மை, ஒற்றுமை, பிற சமயத்தவரை அரவணைத்துச் செல்லும் நல்லிணக்க மனப்பான்மை உடையவராய் வாழ வேண்டும்.


**"பிறப்பொக்கும் எல்லா வுயிர்க்கும்"** என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க எவ்வித வேறுபாடும் கருதாமல் அனைவரையும் சமமாகக் கருதிப் பழக வேண்டும். அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ள வேண்டும். குறிப்பாகத் தன்னால் இயன்ற உதவியை மற்றவர்களுக்குச் செய்ய வேண்டும். பிற சமயத்தவர்களின் உணர்வுகளை மதித்து நடக்க வேண்டும். **"எம்மதமும் சம்மதம்"** என்ற பரந்த சமய உணர்வு வேண்டும். **"ஒன்றே குலம், ஒருவனே தேவன்"** என்ற உயரிய கோட்பாட்டினை நடைமுறை வாழ்வில் பின்பற்ற வேண்டும்.

நாட்டுப்பற்று மிக்கவராய் 'நாடு நமக்கு என்ன செய்தது என்பதைக் கருதாமல் நாம் நாட்டிற்கு என்ன செய்தோம்' என்ற உணர்வுடன் நாட்டின் நலனுக்குப் பாடுபட வேண்டும். நமது அறிவையும், ஆற்றலையும் நம் நாட்டிற்குப் பயன்படுத்த வேண்டும். உலகின் அனைத்துத் துறைகளிலும் நம்நாடு வளம் வாய்ந்ததாகத் திகழ நாம் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும்.

## தேசியச் சின்னங்கள்


இரவீந்திரநாத் தாகூர்

இந்தியாவின் தேசியக் கொடியாக தர்மச்சக்கரத்துடன் கூடிய மூவர்ணக்கொடியும், தேசியப்பாடலாக பக்கிம் சந்திர சட்டர்ஜி இயற்றிய வந்தே மாதரம் என்ற பாடலும், தேசிய கீதமாக இரவீந்திரநாத் தாகூர் இயற்றிய ஜனகன மன என்ற பாடலும் இந்திய அரசியலமைப்பால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி தேசிய பறவையாக மயிலும், தேசிய விலங்காக புலியும், தேசிய மரமாக ஆலமரமும் இந்திய அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.


மயில்



XII Ethics_Lesson 2.indd 30 05-04-2019 10:35:06

www.tntextbook.org



புலி



ஆலமரம்

## தேசியத் திருவிழாக்கள்

இந்திய தேசிய திருவிழாக்கள் மக்களிடையே சாதி, சமயம், இனம், மொழி, வட்டார வேற்றுமைகளை கடந்து இந்தியர் என்ற ஒற்றுமை உணர்வை ஏற்படுத்துகின்றன. ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 15–ஆம் நாள் கொண்டாடப்படும் சுதந்திர தினவிழா, ஜனவரி 26–ஆம் தேதி கொண்டாடப்படும் குடியரசுதினவிழா, அக்டோபர் 2–ஆம் நாள் கொண்டாடப்படும் தேசத்தந்தை காந்தியடிகள் பிறந்த தினவிழா, நவம்பர் 14–ஆம் நாள் கொண்டாடப்படும் பண்டித ஜவகர்லால் நேருவின் பிறந்தநாள் விழா, ஜனவரி 12–ஆம் நாள் கொண்டாடப்படும் தேசிய இளைஞர் தினவிழா(விவேகானந்தர் பிறந்த நாள்) ஆகியவை இந்தியர் என்ற உணர்வுடன் கொண்டாடப்பட்டு வருகின்றன.

இன்று உலக அரங்கில் வேண்டப்படுவது **'சமாதானம்'** ஆகும். எத்தகைய வேற்றுமைகளுக்கும், உயர்வு தாழ்வுகளுக்கும் இடம் தராமல் சமாதான உணர்வுடன் விட்டுக்கொடுத்து வாழவேண்டும். 'உலக அமைதியே உயர்வுக்கு வழி' என்பதை அனைவரும் உணர்ந்து அதற்கு அயராது பாடுபடவேண்டும். சமாதான வாழ்விற்கு அடிப்படை சகோதரத்துவ மனப்பான்மையாகும். இவ்வாறாக, நாமும் நம் வேற்றுமைகளைக் களைந்து சகோதர மனப்பான்மையுடன் ஒற்றுமையாக வாழவேண்டும்.



முப்படை அணிவகுப்பு

## நிறைவுரை

புவியியல் அமைப்பு அதனையொட்டிய மக்களின் வாழ்க்கை முறை, பலதரப்பட்ட பழக்கங்கள், சமய நம்பிக்கைகள், மொழி, உணவு, உடைகள் போன்றவற்றால் மக்கள் வேறுபடுகின்றனர்.இருப்பினும் இந்தியா தேசிய உணர்வினால் ஒன்றுபடுகின்றனர்.மனிதநேயம், சமயஉணர்வு, சகோதரத்துவம், நட்பு, சகிப்புத்தன்மை போன்றவை இந்தியர்களை ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுடன் வாழச் செய்கின்றன. தேசியசின்னங்கள், தேசியகொடி மற்றும் தேசியகீதம் போன்றவை தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்கின்றன.ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற உணர்வு இந்திய ஒருமைப்பாட்டிற்கு வலிமை சேர்க்கிறது. இந்த உணர்வே ஆங்கிலேயரிடமிருந்து நாம் விடுதலை பெறக் காரணமாக அமைந்தது எனலாம்.



XII Ethics_Lesson 2.indd 31 05-04-2019 10:35:06

# பயிற்சி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. உலக நாடுகளின் பரப்பளவில் ஏழாவது பெரிய நாடு

   அ) இந்தியா ஆ) சீனா இ) அமெரிக்கா ஈ) ரஷ்யா

2. பொருத்துக.

   அ. தமிழ்நாடு – 1) பருத்தி ஆ. குஜராத் – 2) நெல்

   இ. கர்நாடகா – 3) தேயிலை ஈ. அஸ்ஸாம் – 4) காபி

   அ) அ–2, ஆ–1, இ–4, ஈ–3 ஆ) அ–3, ஆ–4, இ–1, ஈ–2

   இ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3 ஈ) அ–3, ஆ–1, இ–4, ஈ–2

3. பின்வரும் கூற்றையும் அதன் காரணத்தையும் படித்து, விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று – 1 : பீடபூமிகள் என்பவை மழை குறைந்த உயர்நிலங்களாகும்.

   கூற்று – 2 : கனிம வளங்களும் சில வேளாண்பொருட்களும் இப்பகுதிகளில் விளைகின்றன.

   அ) கூற்று – 1 சரி, கூற்று – 2 தவறு ஆ) கூற்று – 1 தவறு, கூற்று – 2 சரி

   இ) கூற்று – 1, கூற்று – 2 இரண்டும் சரி ஈ) கூற்று – 1, கூற்று – 2 இரண்டும் தவறு

4. சரியாகப் பொருந்தியுள்ளவற்றைத் தேர்ந்தெடுக்க.

   அ) அஸ்ஸாம் – மங்கோலிய இனம்

   ஆ) மராட்டியப் பகுதி – ஆரிய திராவிட இனம்

   இ) வங்கதேசம் – இரானிய இனம்

   ஈ) காஷ்மீர் – துருக்கிய இனம்

FEBG8C

5. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்க.

   அ) கிரேக்கர்கள் முதன்முதலில் அறிந்த பகுதி, கங்கைப் பகுதியாகும்.

   ஆ) கிரேக்கர்கள் இந்தியாவை இந்துஸ்தான் என்றழைத்தனர்.

   இ) கிரேக்கர்கள் சிந்துவெளிப் பகுதியில் தமது பேரரசை உருவாக்கினர்.

   ஈ) கிரேக்கர்கள் முதன்முதலில் அறிந்தது சிந்துநதி பாயும் பகுதியாகும்.

6. பொருத்துக.

   அ) பஞ்சாப் – ஓணம்

   ஆ) தமிழ்நாடு – போஹாலி பிஹு

   இ) கேரளா – பைசாகி

   ஈ) அஸ்ஸாம் – பொங்கல்

7. இந்திய அரசியலமைப்புச் சட்டம் அங்கீகரித்துள்ள மொழிகளின் எண்ணிக்கை

   அ) 17 ஆ) 20 இ) 22 ஈ) 19



XII Ethics_Lesson 2.indd 32 05-04-2019 10:35:06

8. பொருந்தாத இணையைச் சுட்டுக.

அ) கிழக்குத் திராவிட மொழி - கதபா    ஆ) நடுத்திராவிட மொழி - தெலுங்கு

இ) வட திராவிடமொழி - குரூக்    ஈ) தென்திராவிட மொழி - தமிழ்

9. இந்திய தேசிய மரமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதைத் தேர்ந்தெடுக்க.

அ) பனைமரம்    ஆ) ஆலமரம்    இ) தென்னைமரம்    ஈ) அரசமரம்

10. தவறான கூற்றைச் சுட்டிக்காட்டுக.

அ) அக்டோபர் 2ஆம் நாள், காந்திஜெயந்தி விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

ஆ) நவம்பர் 14ஆம் நாள் குழந்தைகள் தின விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

இ) அக்டோபர் 5ஆம் நாள் ஆசிரியர் தினமாகக் கொண்டாடப்படுகிறது.

ஈ) ஜனவரி 12ஆம் நாள் தேசிய இளைஞர் தின விழாவாகக் கொண்டாடப்படுகிறது.

## II. குறுவினா

1. இந்தியாவைத் தீபகற்ப நாடு என அழைக்கக் காரணம் என்ன ?
2. தமிழகத்தின் பழங்குடியின மக்கள் யாவர் ?
3. பண்டைய தமிழர்களின் பண்பாட்டை எடுத்துரைக்கும் இலக்கியங்களைக் குறிப்பிடுக.
4. வடதிராவிட மொழிகள் யாவை ?
5. இந்தியப் பெருநாட்டை ஆட்சிபுரிந்து, வரலாற்றில் சிறப்பிடம் பெற்ற அரசர்கள் யாவர் ?
6. இந்தியாவில் காணப்படும் பழைமையான ஸ்தூபிகள் யாவை ?

## III. சிறுவினா

1. கங்கை நதியின் சிறப்புகள் யாவை ?
2. இந்தியாவில் கொண்டாடப்படும் அறுவடைத் திருநாள்கள் யாவை ?
3. இந்தியாவைப் "பல இனங்களின் அருங்காட்சியகம்" எனக் கூறக் காரணம் என்ன ?
4. வட இந்தியாவில் பேசப்படும் முதன்மையான மொழிகள் யாவை ?
5. இந்தியாவில் தோன்றிய சமயங்கள் யாவை ?
6. இந்தியாவில் கொண்டாடப்படும் முக்கிய திருவிழாக்கள் யாவை ?
7. வட இந்தியக் கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

## IV. நெடுவினா

1. இந்தியாவில் காணப்படும் நிலவியல் வேற்றுமைகள் குறித்து எழுதுக.
2. இந்தியாவில் காணப்படும் மொழிவேறுபாடுகள் யாவை ?
3. இந்தியாவில் கொண்டாடப்படும் சமய விழாக்கள் பற்றித் தொகுத்தெழுதுக.
4. "இலக்கியங்களின் கருவூலமாக, இந்தியா திகழ்கிறது" – இக்கூற்றை நிறுவுக.
5. இந்தியப் பண்பாட்டு ஒற்றுமையை வளர்க்கத் துணைபுரியும் காரணிகள் யாவை ? விளக்குக.

## இணையச்செயல்பாடு

# வேற்றுமையில் ஒற்றுமை

இந்தியாவின் தேசிய சின்னங்கள் குறித்து அறிவோமா?



### படிகள்

1. கீழ்க்காணும் உரலி/விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்குச் செல்க.
2. அந்தப்பக்கத்தில் இந்தியாவின் தேசிய சின்னங்கள் தோன்றும்.
3. **தங்களுக்குத் தேவையான சின்னத்தைத் தொடும்போது, அந்தச் சின்னத்திற்கான விளக்கங்கள் திரையில் தோன்றும்.**

### செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



படி 1



படி 2



படி 3

இந்தியாவின் தேசிய சின்னங்கள் இணையப்பக்கத்தின் உரலி :
https://play.google.com/store/apps/details?id=com.cdac.tamil

B248_12_ETH_IND_CUL_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



XII Ethics_Lesson 2.indd 34 05-04-2019 10:35:07

அலகு
3

# வேதகாலப் பண்பாடு

KX41IY

## கற்றல் நோக்கங்கள்

- வேதகாலத்தை அறிவதற்கான சான்றுகள் பற்றி அறிதல்.
- முன் வேதகால அரசர்களின் ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய நிலைகளைப் பற்றி அறிதல்.
- பின் வேதகால அரசர்களின் ஆட்சி முறை, சமூக, பொருளாதார, சமய நிலைகளைப் பற்றி அறிதல்.
- இதிகாசங்களான இராமாயணம், மகாபாரதம் இந்தியப் பண்பாட்டிற்கு ஆற்றிய பணிகள் பற்றி அறிதல்.
- புராணங்களின் பண்பாட்டு முக்கியத்துவம் பற்றி புரிதல்.

## நுழைவு வாயில்

இந்தியாவில் சிந்துவெளிப் பண்பாட்டிற்குப் பின் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தது, வேதகாலப் பண்பாடு ஆகும். வேதங்களின் அடிப்படையில் சுமார் கி.மு. (பொ.ஆ.மு.) 1500ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஆரியர்களால் இப்பண்பாடு பரவியது. வேதங்கள், அவற்றின் ஒப்பற்ற நெறிகள், தத்துவங்கள் போன்றவை இந்தியப் பண்பாட்டின் தொடக்ககால அடையாளமாக இருந்ததுடன்,நவீன இந்தியாவின் வளர்ச்சிக்கும் அடித்தளமிட்டன. கூட்டுக் குடும்பமுறை, கிராம வாழ்க்கைமுறை, இயற்கையை வழிபடுதல் ஆகியவை ஆரியர்கள் அறிமுகப்படுத்திய சிறப்புப் பண்பாட்டுக் கூறுகளாகும். பிற்கால ஆன்மீக வளர்ச்சியில், வேதகாலப் பண்பாடு முக்கிய பங்காற்றியது.

### சப்த சிந்துவும், ஆரிய வர்த்தமும்

ஆரியர்களின் பூர்வீகம் எது என்பது பற்றி, வரலாற்று ஆசிரியர்களால் அறுதியிட்டுக் கூறமுடியவில்லை. ஆனால் பாரசீகத்தின் வழிபாட்டுக் கூறுகளும் ரிக்வேதத்தில் கூறப்பட்ட வழிபாட்டுக் கூறுகளும் பொருந்தியுள்ளன. மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவின் வடமேற்குப்பகுதியில் உள்ள கைபர், போலன் கணவாய்கள் வழியாக ஆரியர்கள் முதன்முதலில் குடியேறிய பகுதி **சப்தசிந்து** ஆகும். சப்தசிந்து என்ற சொல்லிற்கு 'ஏழு நதிகள் பாயும் பகுதி' என்று பொருள். சிந்து, ஜீலம், சீனாப், ராவி, பியாஸ், சட்லெஜ், சரஸ்வதி ஆகிய ஏழு நதிகள் பாயும் பகுதியே **சப்தசிந்து** என்று அழைக்கப்படுகின்றது. பிறகு, ஆரியர்கள் இந்தியாவின் கங்கைச்சமவெளியில் குடியேறினர். அப்பகுதி **ஆரிய வர்த்தம்** எனப்பட்டது. எனினும் அண்மையில் கிடைத்த தொல்பொருள் ஆராய்ச்சிகளின் மூலம் ஆரியர்கள் கைபர், போலன் கணவாய்கள் வழியாகக் குடியேறியவர்கள் என்ற கோட்பாட்டை மறுத்து பல அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்.

சப்த சிந்துப் பகுதியில், பல்வேறு இனக்குழுக்களாகப் பிரிந்திருந்த ஆரியர்கள்



XII Ethics_Lesson 3.indd 35 05-04-2019 10:38:25

கால்நடை மேய்ப்பதைத் தொழிலாகக் கொண்டிருந்தனர். இவர்கள் இந்தியாவின் கிழக்கு, வடகிழக்குப் பகுதி நோக்கிப் படிப்படியாக இடம்பெயரத் தொடங்கினர். அதன்பின், கங்கைச் சமவெளிப்பகுதியில் நிலையானதொரு வாழ்க்கையை வாழத்தொடங்கினர்.

## வேதகாலத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகள்

### வேதம் சொல் விளக்கம்

'**வித்**' என்ற சமஸ்கிருத வேர்ச்சொல்லிருந்து **வேதம்** என்ற சொல் தோன்றியது. இதற்கு **அறிவுக்களஞ்சியம்** என்று பொருள். வேதங்கள் மொத்தம் நான்கு வகைப்படும். அவை ரிக், யஜுர், சாமம், அதர்வணம் வேதங்கள் ஆகும். இவை முற்கால வேதம்(ரிக்), பிற்கால வேதங்கள்(யஜுர், சாமம், அதர்வணம்) எனப்படும். இதன் அடிப்படையிலேயே வேதகாலம் முன்வேதகாலம், பின்வேதகாலம் என்று இருவேறு பிரிவாகப் பிரிக்கப்படுகிறது.

வேதகால இலக்கியங்கள், **பிராமணங்கள்**, ஆரண்யகங்கள், உபநிடதங்கள் ஆகியவற்றைக் கொண்டதாகும். இதிகாசங்கள், புராணங்கள் முதலியன வேதகாலத்தைப் பற்றி அறிவதற்கான சான்றுகளாகத் திகழ்கின்றன.

### ரிக் வேதம்

இந்தியாவின் பண்டையகால வரலாற்றை அறிய உதவும் முதன்மையான சான்று ரிக் வேதம் ஆகும். இவ்வேதம் 10 மண்டலங்களையும் 1028 பாடல்களையும் கொண்டது. ரிக் என்ற சொல்லிற்குத் **துதித்தல்** அல்லது **வழிபடல்** என்பது பொருள். இறைவனைத் துதிப்பாடல்களால் பாடி வணங்குவதற்குரிய வழிகளைக் கூறுகிறது. அக்னி, பிரஜாபதி, ருத்ரன், வருணன், மித்ரன், இந்திரன் போன்ற தெய்வங்களை வேதகால மக்கள் வழிபட்டதாக ரிக் வேதம் கூறுகிறது. இவ்வேதத்தில்தான் '**காயத்திரி மந்திரம்**' இடம்பெற்றுள்ளது. பண்டையகால இந்தியாவின் அரசியல், சமூக, பொருளாதார சமய நிலைகளை ரிக் வேதம் குறிப்பிடுகிறது. ரிக் வேதம் சுமார் கி.மு 1200 ஆம் ஆண்டில் ஆக்கப்பட்டிருக்கலாம் என்று மாக்ஸ்முல்லர் மற்றும் ஐரோப்பிய அறிஞர்கள் கூறுகின்றனர்.

### யஜுர் வேதம்

'**யாஜ்**' என்ற சமஸ்கிருதச் சொல்லிருந்து **யஜுர்** என்ற சொல் தோன்றியது. இதற்கு **யாகம்** என்று பொருள். இந்நூலில் பாதிக்கு மேற்பட்ட பகுதிகள் உரைநடையில் அமைந்துள்ளன. இவ்வடிப்படையில் **சமஸ்கிருதத்தின் முதல் உரைநடை என்று இவ்வேதம் அழைக்கப்படுகிறது.** மிகச் சிறப்பு வாய்ந்த ருத்ரம்(செய்யுள்) இதில் இடம் பெற்றுள்ளது. வேள்வி செய்யும் முறை, அசுவமேதயாகம், இராஜசூய யாகம், சமயச் சடங்குகள் ஆகியவை பற்றியும் இவ்வேதம் கூறுகிறது. இவ்வேதம் நடைமுறை சடங்குகள் மற்றும் வேள்விக்கான பாடல்களைக் கொண்டுள்ளது. இது **சுக்ல யஜுர்வேதம், கிருஷ்ண யஜுர்வேதம்** என்ற இரு பிரிவுகளையும், நாற்பது அத்தியாயங்களையும் கொண்டுள்ளது.

### சாமவேதம்

'சாமம்' என்ற இன்னிசை அடிப்படையில் பாடப்பெற்றதால் இவ்வேதம், சாமவேதம் என்றழைக்கப்படுகிறது. இசை, தெய்வம், சோமயாகம் ஆகியவை பற்றிக் கூறுகிறது. இசை வடிவிலான வேதமந்திரங்களைக் கூறுகிறது. ஆரியர்களின் இசையார்வத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, இவ்வேதம் திகழ்கிறது. இதில் 1549 பாடல்கள் உள்ளன.

### அதர்வண வேதம்

இவ்வேதத்தில் உச்சாடனம், மாந்திரீகம் போன்றவற்றால் தீய சக்திகளை வெல்லலாம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வேதகால மருத்துவமுறைகள் பற்றிய கருத்துகளும் இவ்வேதத்தில் உள்ளன. மந்திரம் உச்சரிக்க வேண்டிய முறைகள் பற்றிய பாடல்களும் இவ்வேதத்தில் உள்ளன. இவ்வேதத்தில் 20



XII Ethics_Lesson 3.indd 36 05-04-2019 10:38:25

பகுதிகளும் 731 பாடல்களும் உள்ளன. இது '**பிரம்மவேதம்**' என்று அழைக்கப்படுகிறது.

**உபவேதங்கள்**

உபவேதங்கள் நான்கு வகைப்படும். அவையாவன

1. ஆயுர்வேதம் – இது மருந்து, மூலிகைகளைப் பற்றி குறிப்பிடுகிறது.
2. தனுர்வேதம் – இது போர்க் கலையைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
3. காந்தர்வவேதம் – இசை, நடனம் ஆகிய நுண்கலைகளைப் பற்றிக் குறிப்பிடுகிறது.
4. சில்பவேதம் – இது கட்டடக் கலையைப் பற்றி விவரிக்கிறது.

## பிராமணங்கள்

வேதங்களுக்கான விளக்க உரைகளே பிராமணங்கள் எனப்படுகின்றன. ஆரியர்கள் வேள்விச் சடங்குகள் செய்யும் முறைகளையும், வழிபாட்டு முறைகளையும் அவற்றிற்கான விளக்கங்களையும் பிராமணங்கள் குறிப்பிடுகின்றன. வேதங்களை ஓதுபவர்களின் கடமைகளையும் பிராமணங்கள் குறிப்பிடுகின்றன. இவை வேதங்களிலுள்ள துதிப்பாடல்களுக்குரிய உரைநடை நூல்கள் எனப்படுகின்றன.


## ஆரண்யகங்கள்

'ஆரண்யம் என்ற சொல்லிற்குக் '**காடு**' என்று பொருள்'. காடுகளில் இறையருள் தேடித் தவம் செய்த முனிவர்களால் எழுதப்பட்ட இலக்கியங்கள் ஆரண்யகங்கள் எனப்படுகின்றன. வேள்வியைச் செய்ய இயலாத முதியோர்கள், துறவிகள் ஆகியோரின் போதனைகள் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன. வேள்வியைவிட அமைதியான தியானமே, மிகவும் மேலானது என்று ஆரண்யகங்கள் வலியுறுத்துகின்றன. அநுபூதி நெறிகள் மற்றும் தத்துவக் கருத்துகள் அடங்கிய கருத்துப்பெட்டகம் என்று ஆரண்யகங்கள் அழைக்கப்படுகின்றன. வேதகாலப் பண்பாட்டின் உன்னத நிலையை இவை எடுத்துக்காட்டுகின்றன.

## உபநிடதங்கள்

வேதங்களின் சாரமே '**உபநிடதம்**' என்று அழைக்கப்படுகிறது. உபநிடதம் ( உபநிஷத்) என்ற சொல்லிற்கு "**அருகில் அமர்தல்**" என்று பொருள். பிரம்மச்சாரியான மாணவன் தன் குருவின் அருகில் பயபக்தியுடன் அமர்ந்து அறிவைப் பெற வேண்டுமென்பதையே இது வலியுறுத்துகிறது. உபநிடதங்கள், கடவுள், ஆன்மா, உலகம், கர்மவினை, வீடுபேறு போன்ற கருத்துகளை ஆராய்ந்து தெளிவான விளக்கங்களை உலகிற்கு அளிக்கின்றது. வேதத்தத்துவத்தின் விளக்கங்களைக் கூறும் உபநிடதங்கள், பல்வேறு காலங்களில் வாழ்ந்த பல்வேறு ரிஷிகளால் (குரு) தொகுக்கப்பட்டவையாகும். இவை மொத்தம் 108 ஆகும். அவற்றில்

பத்து உபநிடதங்கள் முக்கியமானதாகக் கருதப்படுகின்றன. அவை 1) ஈசோபநிடதம் 2) கீனஉபநிடதம் 3) முண்டக உபநிடதம் 4) மாண்டுக்ய உபநிடதம் 5) ஐத்ரேய உபநிடதம் 6) தைத்ரிய உபநிடதம் 7) பிரசனோபநிடதம் 8) கதோபோநிடதம் 9) சாந்தோக்கிய உபநிடதம் 10) பிருகதரண்யக உபநிடதம் ஆகியனவாகும்.



பிரக தரண்ய உபநிடதம் கையெழுத்து பிரதி

மேற்கூறிய பத்து உபநிடதங்களுக்கு ஆதிசங்கரர், இராமானுஜர், வித்யாரண்யர், ஆனந்ததீர்த்தர் ஆகியோர் உரை எழுதியுள்ளனர். முகலாய இளவரசர்



XII Ethics_Lesson 3.indd 37 05-04-2019 10:38:25

இந்தியப் பண்பாட்டு வளர்ச்சியின் உச்சமே உபநிடதங்கள் என்று அமுர்-டி-ரின் கோர்ட் என்பவர் கூறுகிறார். ஜெர்மானியரான ஷோபன்ஹோவர், கஜினிமுகமதுவின் அவைப்புலவர் அல்பெருனி ஆகியோரும் உபநிடதங்களைப் புகழ்ந்து கூறியுள்ளனர். பிற்கால இந்தியத் தத்துவங்கள் யாவும் உபநிடதங்களிலிருந்தே எழுந்தன. ஆதிசங்கரர், இராமானுஜர் ஆகியோரின் தத்துவங்களை இன்றளவும் லட்சக்கணக்கான மக்கள் போற்றுவதற்கு அவை உபநிடதக் கருத்துகளைக் கொண்டிருப்பதே காரணம் என்று வின்டர்நீட்ஸ் புகழ்ந்து கூறுகிறார்.

தாராஷுகோ உபநிடதங்கள் சிலவற்றைப் பாரசீக மொழியில் மொழிபெயர்த்துள்ளார்.

## முன்வேதகால அரசமைப்பு மற்றும் ஆட்சி முறை

முன் வேதகால அரசு பல்வேறு இனக்குழுக்களின் அரசாகும். அவ்வினக்குழுக்களின் அரசு, குறிப்பிட்ட நிலப்பகுதியை ஆட்சி செய்தது. ஒவ்வோர் இனக்குழுவும், தத்தம் ஆட்சிப்பகுதிக்குத் தலைவனைத் தேர்ந்தெடுத்தன. அவ்வினக்குழுக்களின் தலைவன், அரசன் ஆவான். அவன் இனக்குழுக்களால் **இராஜன்** என்றழைக்கப்பட்டான். கிராமங்களில் வாழ்ந்த குடும்பங்கள், குலங்கள் எனப்பட்டன. அதன் தலைவர் **குலா, குலாபதி** என்ற பல பெயர்களில் அழைக்கப்பட்டார்.

தமது குடிமக்களைக் காப்பது மன்னரின் கடமையாகும். தமது கடமையிலிருந்து தவறிய மன்னனை பதவியிலிருந்து இனக்குழுவே திரும்ப அழைத்துக் கொள்ளும். அரசனின் அன்றாடப் பணிகளின் எல்லை வரையறுக்கப்பட்டது. மன்னனின் அதிகாரம், அவரது கடமையின் எல்லை, விதிமுறைகள் ஆகியவை **இராஜ்யதர்மம்** எனப்பட்டது. அரசன் தன்னிச்சையாகச் செயல்படமுடியாமல் செய்ய ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டது. நிலங்கள் மன்னனுக்கு மட்டுமே சொந்தமானதல்ல அவரது இனக்குழுவிற்குச் சொந்தமானது. ஆனால், பிற்காலத்தில் இனக்குழு மன்னனை தேர்ந்தெடுக்கும் நிலைமாறி அரசப்பதவி பரம்பரைப் பதவியானது. மன்னனின் முடிசூட்டுவிழா மக்களால் முக்கிய விழாவாகக் கொண்டாடப்பட்டது.

## முன்வேதகால அரசனின் ஆலோசகர்கள்

முன் வேதகாலத்தில் அரசனுக்கு நிருவாகத்தில் உதவ புரோகிதர் என்ற அரசகுரு, சேனானி என்ற படைத்தலைவர், கிராமணி என்ற கிராமநிர்வாக அதிகாரி ஆகியோர் கொண்ட ஆலோசனைக் குழு ஏற்படுத்தப்பட்டது. முன் வேதகாலத்தில் வசிஷ்டர், விஸ்வாமித்திரர், போன்றோர் தலைசிறந்த அரசகுருவாகத் திகழ்ந்தனர். அரசவையின் விழாக்களைக் கொண்டாடுவது முதல், அரசன் போருக்குக் செல்லும் நாள் எது என்பதைத் தீர்மானிக்கும் வரையிலான திட்டத்தை இவர்கள் வகுத்தனர்.

## படைகளின் அமைப்பு

முன் வேதகாலத்தில் அரசரின் படைகள் சிறப்பாக நிருவகிக்கப்பட்டன. தன் இராணுவத்தின் மேலாண்மைப் பணியில் மன்னர் தன் முழு கவனத்தையும் கொண்டிருந்தார். காலாட்படையும், தேர்ப்படையும் அரசரின் படைகளில் அதிக முக்கியத்துவம் பெற்றன. போர்க்காலங்களில் இரண்டு, மூன்று, நான்கு குதிரைகள் பூட்டிய தேர்களை மன்னர்கள் பயன்படுத்தினர். மன்னரும் அவரது படைவீரர்களும் போர்களில் வில், அம்பு, ஈட்டி, வேல் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தினர்.

## முன் வேத கால நீதிமுறை

மன்னனே நீதி வழங்கும் முறைக்குத் தலைவன். நிருவாகத்தில் மன்னன் நீதி வழங்க புரோகிதர்கள் அவருக்கு உதவினர். திருடுதல், கொள்ளையடித்தல், வழிப்பறி



XII Ethics_Lesson 3.indd 38 05-04-2019 10:38:25

www.tntextbook.org

செய்தல், பசுவைத் கடத்துதல் போன்றவை பெருங்குற்றங்களாகக் கருதப்பட்டு, அத்தகைய குற்றங்களைச் செய்தோர் கடுமையாகத் தண்டிக்கப்பட்டனர்.

## சபைகள்

முன் வேதகாலத்தில் அரசனுக்கு நிர்வாகத்தில் உதவ **விதாதா, சபா, சமிதி** போன்ற சபைகள் இருந்தன. விதாதாவில் ஆண், பெண் ஆகிய இருபாலரும் முக்கியத்துவம் பெற்றனர். இச்சபையில் கலை நிகழ்ச்சிகளும் சமய விவாதங்களும் நடைபெற்றன. சபா என்பது, மூத்தோர் சபையாகும். பலதுறைகளிலும் சிறந்து விளங்கிய அனுபவமிக்க அறிஞர்கள், இச்சபையில் இடம் பெற்றிருந்தனர். அரசனுக்கு இவர்கள் ஆலோசனைகளையும் கூறினர். சமிதி என்பது பொதுமக்களின் பிரதிநிதிகள் கொண்ட சபையாகும். இம்மூன்று சபைகளில் சமிதியே அதிகாரமிக்கதாகும். இது ஆட்சி நிருவாகத்தின் அதிகார மையமாகத் திகழ்ந்தது. இம்மூன்று சபைகளும் அரசனுக்கு ஆலோசனைகளை வழங்கியதன் மூலம் சிறப்பான நிருவாகத்திற்கு வழி வகுத்தன எனலாம்.

## முன் வேதகாலச் சமூக நிலை

முன் வேதகாலச் சமூகத்தின் அடிப்படை, குடும்பம் ஆகும். குடும்பத்தின் தலைவனான தந்தை **கிருகபதி** எனப்பட்டார். கிராம நாகரிக அடிப்படையிலான ஆரிய சமூகத்தில் ஆண்வழி மரபிற்கு அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. குடும்பத் தலைவர் இறந்தாலோ, நோய்வாய்ப்பட்டாலோ குடும்பத்தின் மூத்த ஆண் வாரிசு குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தவேண்டும். பல குடும்பங்கள் சேர்ந்த பகுதி, **கிராமம்** எனப்பட்டது. கிராமத்தின் தலைவர் **கிராமணி** எனப்பட்டார். ஆரிய மக்கள் சமூகம், கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையைப் பின்பற்றியது. அரசக்குடும்பங்களைத் தவிர, பெரும்பாலும் ஒருதார மணமுறையே வழக்கத்திலிருந்தது. முன் வேதகாலச் சமூகத்தில் பெண்ணடிமை முறையோ, சதி என்ற உடன்கட்டையேறுதல் செயலோ, குழந்தைத் திருமணமோ வழக்கில் இல்லை.

முன் வேதகாலத்தில் சமூக நிலையைப் பொருத்தவரை, தொழிலின் அடிப்படையில் சமுதாய பிரிவுகள் இருந்தன என ரிக் வேதத்தின் பத்தாவது மண்டலத்திலுள்ள புருஷசூக்தம் என்ற பாடல் கூறுகிறது. **மக்கள் செய்த தொழில்களின்** அடிப்படையில், **நான்கு பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தன.**

## முன் வேதகால பெண்களின் நிலை

வேதகாலச் சமூகத்தில் ஆண்களுக்கு நிகராகபெண்கள் மதிக்கப்பட்டனர்.ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் பொதுநிகழ்ச்சிகளிலும் அரச சபை விவாதங்களிலும் கலந்து கொண்டனர். **அபலா, கோசா, விஸ்வவாரா, லோபமுத்ரா** போன்ற பெண்கள் கல்வி, கேள்விகளில் சிறப்பான நிலையில் முன்னேறி இருந்தனர். திருமணம், தூய்மையான சமயச் சடங்காகவும், புனிதமாகவும் பிரிக்க முடியாத ஒன்றாகவும் மதித்துப் போற்றப்பட்டது. பெற்றோர் மற்றும் மணப்பெண்ணின் இசைவு பெற்றே திருமணம் நடைபெற்றது. அரச குடும்பத்தில் சுயம்வரத் திருமணமுறை வழக்கிலிருந்தது. இக்கால மகளிர் அறிவும் பண்பாடும் ஒருங்கே அமையப்பெற்றவராக விளங்கினர். மணமக்கள் அக்னி சாட்சியாக வலம் வருதல், திருமணத்தில் முக்கிய நிகழ்வாகக் கருதப்பட்டது.

## முன் வேதகாலக் கல்வி நிலை

முன் வேதகாலக் கல்விமுறை, மனப்பாட முறையிலான கல்வி முறையாகும். அதாவது, துதிப்பாடல்களை வாய்வழியே ஒப்புவிப்பதாகும். எழுத்தைவிட ஒலி முக்கியமானதாகக் கருதப்பட்டது. இக்காலக் கல்வியானது, இருவிதமான குறிக்கோள்களை மையமாகக் கொண்டு செயல்பட்டது. அதன்படி,

தன்னைத்தானே அறிந்துகொள்ளுதல். மனக்கட்டுப்பாட்டின் மூலம் அறியாமை யிலிருந்து விடுபடுதல்; அவ்வாறு விடுபட ஆன்மிகத்தின் வழியை நாடுதல்.



XII Ethics_Lesson 3.indd 39 05-04-2019 10:38:25

ஆன்மிகக் கல்வியைப் போதிக்கும் குருக்களுக்குப் பயிற்சியளித்தல்; அவ்வடிப்படையில் முன் வேதகாலக் கல்வியானது மாணவர்களின் உடல், உயிர், உள்ளம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கு வழி வகை செய்தது. இவ்வேதகாலக் கல்வியின் குறிக்கோள் பேரறிவு மற்றும் ஆன்ம விடுதலை போன்றவற்றை அடைவதாகும்.

## முன் வேதகாலத்தின் பொழுது போக்கு

முன் வேதகாலத்தில் நடனமாடுதல், இசை, வேட்டையாடுதல், தேர்ப்பந்தயம் போன்றவை முக்கியமான பொழுதுபோக்குகளாகத் திகழ்ந்தன. முரசு, தாரை, மத்தளம், யாழ், புல்லாங்குழல் போன்றவை இசைக் கருவிகளாகத் திகழ்ந்தன.

## முன் வேதகால மக்களின் உணவு மற்றும் உடைகள்

முன்வேதகால மக்கள் எளிய வாழ்க்கை முறையை மேற்கொண்டனர். கோதுமை, பார்லி முதலான தானியங்கள், பழவகைகள், பால் மற்றும் பால் பொருள்களான தயிர், நெய், வெண்ணெய் அவற்றுடன் இறைச்சி போன்றவற்றை உண்டனர். தேன் அவர்களின் உணவில் சேர்க்கப்பட்டது. இமயமலையில் இருந்த **முஜாவத்** என்ற பகுதியிலிருந்து வளரும் ஒருவிதச் செடியிலிருந்து **சோம, சுரா** ஆகிய பானங்களைத் தயாரித்து அருந்தினர். யாகங்களிலும் இத்தகைய பானங்கள் முக்கிய இடம்பெற்றன. முன் வேத கால மக்கள் பருத்தி, கம்பளி,விலங்குகளின் தோல் ஆகியவற்றாலான ஆடைகளை அணிந்தனர். ஆடைகளை வாசஸ், பரிதானா, வஸ்திரம் போன்ற பெயர்களில் அழைத்தனர். மேலாடை **அதிவாசஸ்** எனவும், கீழாடை **நிவி** எனவும் அழைக்கப்பட்டன. ஆடைகளில் தங்க வேலைப்பாடுகள் செய்யப்பட்டன. அழகிய பூவேலைப்பாடுகள், வண்ணச்சாயங்கள் முக்கியத்துவம் பெற்றன.

முன்வேதகாலத்தில் மக்கள் தங்கத்தாலான அட்டிகை, காப்பு, ஒட்டியாணம், காதணிகள், கழுத்தணிகள், போன்ற ஆபரணங்களை அணிந்தனர். வெள்ளி, போன்ற உலோகங்களாலும் ஆபரணங்கள் செய்யப்பட்டன. முன் வேதகால மக்கள் அணிந்த காதணி **கர்ணசோபனா** எனப்பட்டது. ஆண்களைப் போல் பெண்களும் கை கால்களில் அணிகலன்களை அணிந்திருந்தனர். கை வளையல்கள் சிலம்பு போன்றவைகளும் முன் வேத கால ஆபரணங்களில் முக்கியத்துவம் பெற்றன. பெண்கள் கைப்பட்டைகள், கணுக்காலில் அணியும் அணிகலன்கள் போன்றவற்றை அணிந்திருந்தனர்.

## முன் வேதகாலப் பொருளாதார நிலை



வேதகால கால்நடை மேய்த்தல்

முன்வேதகால மக்கள் கால்நடைகளுடன் ஒவ்வொரு பகுதியிலுள்ள மேய்ச்சல் நிலங்களைத் தேடி அலைந்தனர். கால்நடைகளின் எண்ணிக்கையை வைத்தே அவர்களின் பொருளாதார மதிப்பு நிருணயிக்கப்பட்டது. முன் வேதகால மக்கள் வைத்திருந்த கால்நடைகள் பண்டமாற்றுமுறை அடிப்படையில் வியாபாரப் பொருளாகவும் பயன்படுத்தப்பட்டன. பசுக்கள், குதிரைகள், ஆடுகள் போன்றவை முன் வேதகால மக்களால் வளர்க்கப்பட்டன. கால்நடைகளைக் கவர்வதற்காகவே போர்கள் நடத்தப்பட்டதாக ரிக் வேதம் கூறுகிறது. **காவிஸ்தி** என்ற சொல் பசுக்களைத் தேடி அலைபவர்களைக் குறிக்கிறது. பசுக்களின் உரிமையாளர் **கோமத்**



XII Ethics_Lesson 3.indd 40 05-04-2019 10:38:25

www.tntextbook.org

எனப்பட்டார். (**சமஸ்கிருதத்தில் கோ என்றால் பசு, மத் என்றால் வைத்திருப்பவர்**) அடர்ந்த காடுகளைத் திருத்திய முன் வேதகால மக்கள், அவற்றை வேளாண் நிலங்களாக மாற்றினர். கால்நடைகளுக்குத் தேவையான தீவனங்களின் மூலப்பொருட்களையும் கோதுமை, பார்லி போன்ற தானியங்களையும், பருத்தி, எண்ணெய்வித்துக்கள் போன்றவற்றையும் அவர்கள் பயிரிட்டனர்.

வேளாண்மை செய்யக்கூடிய நிலம் **ஷேத்ரா** என்றழைக்கப்பட்டது. **க்ருஷி (Krishi)** என்ற சொல் உழவைக்குறிக்கிறது. விவசாயி **சார்கனி** எனப்பட்டார். விதைத்தல், அறுவடை செய்தல் பற்றியும் முன்வேதகால மக்கள் அறிந்திருந்தனர். எருதுகளை நுகத்தடியில் இணைத்து நிலத்தை நன்கு உழுது வேளாண்மை செய்தனர். நீர்ப்பாசனத்திற்குரிய நீர், கிணறுகள், கால்வாய்கள், ஏரிகள் மூலம் பெறப்பட்டது. மக்கள் பெரும்பாலும் மழையையே நம்பியிருந்தனர்.

ரிக் வேதத்தில் குறிப்பிடப்படும் **அயஸ்** என்ற சொல் செம்பு போன்ற உலோகங்களைக் குறிப்பிடுகிறது. **கர்மரா** என்ற சொல் உலோக வேலைப்பாட்டுத் தொழில்களைச் செய்வோரைக் குறிப்பிடுகிறது. மாட்டுவண்டியில் ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குச் சென்று வாணிகம் செய்யும் வணிகர்கள் **பாணி** எனப்பட்டனர். நெசவுத்தொழில், தச்சுத்தொழில், மட்பாண்ட உற்பத்தித் தொழில் போன்றவையும் முக்கியத்துவம் பெற்றன. வணிகத்தின் பெரும்பகுதி நிலவழியே நடைபெற்றது.

**குஜராத் அருகில் பகவான்புரா** என்ற இடத்தில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் முன் வேத காலத்தைச் சேர்ந்த மட்பாண்டங்கள் கிடைத்துள்ளன. இதன் மூலம் மட்பாண்டங்களை உற்பத்தி செய்வதில் முன் வேதகால மக்கள் தேர்ச்சிபெற்றிருந்தனர் என்று அறிய முடிகிறது.

## முன் வேத காலச் சமயநிலை

முன் வேதகாலத்தில் மக்கள் இயற்கையை மையப்படுத்திச் சமய நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். அதன்படி இக்காலத்தில் மூன்று வகையாகக் கடவுள்களை வகைப்படுத்தினர்.

1. விண்ணுலகத் தெய்வங்கள்
2. வாயுமண்டலத் தெய்வங்கள்
3. மண்ணுலகத் தெய்வங்கள்

**இந்திரன், வாயு, மாருதி, பர்ஜனியன்** ஆகியோரை அண்டவெளிக் கடவுளராகவும், **வருணன், அஸ்வினி, சூரியன், சாவித்ரி, மித்ரன், பூஷன்** ஆகியோரை வாயுவெளிக் கடவுளராகவும், **பிருத்வி, சோமன், அக்னி** ஆகியோரை மண்ணுலகக் கடவுளராகவும் முன்வேதகால மக்கள் வழிபட்டனர்.

இந்திரனைப் பற்றி ரிக் வேதத்தில் சுமார் 250 பாடல்கள் உள்ளன. இந்திரனுக்கு அடுத்த நிலையில் அக்னி முன்வேத கால மக்களால் வழிபடப்பட்டார். ரிக் வேதத்தில் அக்னி பற்றி 200 பாடல்கள் உள்ளன. தேவர்களையும் மக்களையும் இணைக்கும் இணைப்புப்பாலமாக அக்னியை வழிபட்டனர். இந்திரனுக்கும், அக்னிக்கும் அடுத்த நிலையில் வருணன் முன் வேதகால மக்களால் வழிபடப்பட்டார்.

**அதிதி, உஷஸ்** (விடியலின் கடவுள்) போன்ற பெண் கடவுளர்களும் இவ்வேதகால மக்கள் வழிபட்டனர் என்று ரிக்வேதம் கூறுகிறது. **ருத்ரன்** என்ற சிவன் பற்றியும் சில குறிப்புகள் வேத இலக்கியங்களில் காணப்படுகின்றன. **மாருதி** வலிமையின் கடவுளாக வழிபடப்பட்டார். முன் வேதகால மக்கள் நடத்தும் வேள்விகளில் இந்திரனுக்கும் அக்னிக்கும் அதிக முக்கியத்துவம் தரப்பட்டது. பால், நெய், தானியங்கள், இறைச்சி, சோமபானம் போன்றவற்றை முன் வேதகால மக்கள் இறைவனுக்கு வைத்துப் பூசை செய்தனர்.

கிராம தெய்வ வழிபாடும் முன் வேதகால மக்களால் பின்பற்றப்பட்டது. நம்பிக்கைப் பண்பிற்கு **சாரதா**, கோபப்பண்பிற்கு **மன்யூ** ஆகியோர்



XII Ethics_Lesson 3.indd 41 05-04-2019 10:38:25

கடவுளராக வழிபடப்பட்டனர். இந்திரனைக் காளையாகவும், சூரியனைக் குதிரையாகவும் உருவகப்படுத்தும் வழிபாட்டு முறையும் முன்வேதகால மக்களால் பின்பற்றப்பட்டது. ரிக்வேதத்தில் கூறப்பட்ட இரட்டையர் துதிப்பாடல்கள் தயா, பிருத்வி, வித்ரா, வருணன், அஸ்வினி தேவதைகள் ஆகிய கடவுளர்கள் பற்றிக் கூறுகின்றன. சூரியனை மனமுருகி வழிபடும் துதிப்பாடலான காயத்ரி மந்திரம் முக்கியத்துவம் பெற்றது.

## பின் வேதகாலப் பண்பாடு

### இலக்கியங்கள்

ரிக்வேதத்தைத் தொடர்ந்து சாம, யஜுர், அதர்வணவேதங்களும்இலக்கியச்செறிவுமிக்க பிராமணங்கள், ஆரண்யகங்கள், உபநிடதங்கள் தோன்றிப் பண்பாட்டை உயர்வடையச் செய்தகாலமே பின் வேதகாலமாகும்.

> **வேத அங்கங்கள்**
>
> வேத அங்கங்களான இலக்கியங்கள் ஆறும் தோன்றி வளர்ச்சியடைந்தன.
>
> 1. **சிட்சை** எனப்படும் ஒலியியல்
> 2. **கல்பம்**-எனப்படும் சடங்கியல், சமய ஒழுக்கம்
> 3. **வியாகரணம்**-எனப்படும் இலக்கணம்
> 4. **நிருக்தம்**-எனப்படும் சொல்லாக்க விளக்கம்
> 5. **ஜோதிடம்**-எனப்படும் வானநூல்
> 6. **சந்தம்**-எனப்படும் சீர் என்ற ஆறாகும்.

ஆரியர்கள் காலத்தில் எழுத்துமுறை இல்லாமையால் மனப்பாடமாகவே இலக்கியங்களைப் பயின்றனர். நினைவாற்றல் வழியாக வரும் அறிவுக் கருவூலமாக வந்தவை சூத்திரங்கள். இவை வேதங்களின் ஒரு பகுதி அல்ல.வேதங்களோடுநெருங்கியஉறவுடையவை. இவை மூன்று வகைப்படும்.அவையாவன.

1. தரும சூத்திரம் – ஆரியர்களின் நம்பிக்கைகளைக் குறிப்பிடுகின்றது.
2. ச்ரௌத்த சூத்திரம் – இது யாகங்கள் மற்றும் சடங்குகள் செய்யும் முறைகளைக் குறிப்பிடுகின்றது.
3. கிருஹ்ய சூத்திரம் – இது ஆரியர்களின் வாழ்க்கை முறையைக் குறிப்பிடுகின்றது.

### ஸ்மிருதிகள்

"இவை உயர்ந்த உள்ளங்களின் சிந்தனைத் தொகுப்புகள்" சூத்திரங்கள், தரும சாஸ்திரங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்பன ஸ்மிருதிகளாகும். இவை எழுதப் பெற்றவை.இதில்தருமசாஸ்திரம்என்பதுசட்டம், சமுதாய நடைமுறைகளை விவரிக்கின்றன. பல்வேறு சாதிக் கடமைகளையும், பல்வேறு நிறுவனங்களையும் (அமைப்புகளை) விளக்குகின்றன. நடைமுறை வாழ்வில் குற்றம், குற்றங்களுக்குரிய தண்டனை முறை, குழந்தை தத்தெடுப்பு(adoption), மரபுரிமையாகச் சொத்தைப் பெறும் சட்ட உரிமைகள் போன்றவை இவற்றுள் விவரிக்கப்பட்டுள்ளன.

### பின்வேதகால ஆட்சிமுறை

இவ்வேதகாலத்தில் இந்திய நிலப்பரப்பு, மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவை

1. **ஆரியவர்த்தம்** (கங்கைச் சமவெளிப் பகுதி மற்றும் வட இந்தியா)
2. **மத்ய தேசம்** (மத்திய இந்தியா)
3. **தட்சிணபதம்** (தென்னிந்தியா)

இம்மூன்று பகுதிகளிலுள்ள அரசுகள் **ஜனா, ஜனபதா** போன்ற பெயர்களில் அழைக்கப்பட்டன. அரசர்கள் மிகுந்த அதிகாரங்களைப் பெற்றிருந்தனர். பின்னர் ஏற்பட்ட பரந்து விரிந்த அரசுகளின் உருவாக்கம், தலைவன் அல்லது அரசனின் பெருஞ்செல்வாக்கையும் அதிகாரத்தையும் அதிகப்படுத்தி அவனை வல்லாட்சியாளனாக வெளிப்படுத்தியது. அரசர்களும் இனக்குழுக்கள் மற்றும் சிற்றரசர்கள் மீது தங்களின் அதிகாரத்தைச் செலுத்தினர். அரசன்



XII Ethics_Lesson 3.indd 42 05-04-2019 10:38:25

www.tntextbook.org

ஆட்சி செய்த ஒவ்வொரு பகுதியின் பெயரும் இனக்குழுவின் பெயரும் நாளடைவில் அது அவர்கள் ஆட்சி செய்த பகுதியின் பெயராக மாற்றப்பட்டது. பிரதேசத்தைக் குறிக்கும் '**இராஷ்டிரம்**' என்ற பகுதியைப் பின் வேத காலத்தில் மிகச் சிறந்த மன்னர்களான பரிஷத், ஜனமேஜயன் போன்றோர் ஆட்சிசெய்தனர். பாஞ்சாலப் பகுதியை ஆட்சி செய்த **பிரவாஹன ஜெய்வலி**, பின் வேதகாலத்தின் தலைசிறந்த மன்னராகத் திகழ்ந்தார்.

முன் வேதகாலத்தில் செல்வாக்கு பெற்றிருந்த விதாதா, சபா, சமிதி ஆகிய சபைகள் பின் வேத காலத்தில் செல்வாக்கிழந்தன. அதே நேரத்தில் அமைச்சரவை ஏற்படுத்தப்பட்டது. அதில் **புரோகிதர்** (அரசகுரு), **சம்ஹரஹத்ரி** (கருவூல அதிகாரி), **பகதூகன்** (வரி வசூலிப்பவர்), **சுதன்** (தேரோட்டி), **ஷத்ரி** (அரண்மனைக் காவல் அதிகாரி), **கிராமணி** (கிராமத்தின் தலைவன்), **சேனானி** (படைத்தளபதி), **சடபதி** (நூறு கிராமங்களை ஆள்பவர்), **சட்சிவன்** (அமைச்சர் ) போன்றோர் முக்கியத்துவம் பெற்றிருந்தனர்.

மக்களின் வருமானத்தில் அரசால் ஆறில் ஒரு பங்கு வரி வசூல் செய்யப்பட்டதாக அதர்வண வேதம் கூறுகிறது.

அமைச்சரவை மட்டுமின்றி அரசனுக்கு அலுவலர்கள் நிருவாகத்தில் உதவி செய்தனர். அரசனின் கிராம நிருவாக முறைகளைக் கிராம சபைகளே மேற்கொண்டன. இந்தச் சபைகள் உள்ளூர் வழக்குகளை விசாரணை செய்து தீர்ப்பு கூறின.

அரசன் தன் அதிகாரத்தையும் செல்வாக்கையும் நிலைநாட்ட யாகங்களை மேற்கொண்டார். அவற்றில் **இராஜசூயயாகம், அசுவமேதயாகம், வாஜபேயயாகம்** போன்றவை முக்கியமானவையாகும்.

## இராஜசூயயாகம்

அரசன் தன் செல்வாக்கைத் தொடர்ந்து நிலைநாட்ட ஆண்டின் முக்கிய நாட்களான அவரது பிறந்தநாள், திருமணநாள், போரில் வெற்றிபெற்ற நாட்களில் செய்த யாகமே இராஜசூய யாகம் ஆகும்.

## அசுவமேதயாகம்

**அசுவம்** என்ற வடமொழிச் சொல் குதிரையைக் குறிக்கும். அரசனின் பட்டத்துக் குதிரை எங்கெல்லாம் தங்கு தடையின்றி ஓடுகிறதோ அப்பகுதிகள் அனைத்தும் அரசனது ஆட்சிக்குட்பட்ட பகுதியாக கருதப்பட்டது. இவ்வெற்றியை யாகம் வளர்த்துக் கொண்டாடுவது அசுவ மேதயாகமாகும்.

## வாஜபேயயாகம்

வாஜபேயம் என்பது, தேர்ப்பந்தயத்தைக் குறிக்கும். இத்தேர்ப்பந்தயத்தில் அரசன் செலுத்தும் தேரே வெற்றிபெறும். இந்த யாகங்களைப் பற்றி **சதபத பிராமணம்** என்ற நூல் விளக்குகிறது.

## பின் வேதகாலச் சமூக நிலை

பின் வேதகாலச் சமூகம், வர்ணாஸ்ரம முறைச் சமூகமாகக் காணப்பட்டது. அம்முறையின்படி மக்களிடையே

1. பிராமணர்
2. சத்ரியர்
3. வைசியர்
4. சூத்திரர் ஆகிய சமூகப் பிரிவினர் இருந்தனர்.

## பிராமணர்கள்

கல்வி கற்பது, சமயச் சடங்குகள் செய்வது, வெகுமதிகளைப் பெறுவது, சமுதாயத்திற்கு நல்வழி, உலக நன்மைக்காக இறைவனை தியானிப்பது இவர்களது வாழ்வியல் ஒழுக்கமாகும் .

## சத்திரியர்கள்

நாட்டை ஆள்வதும், நாட்டைக் காப்பதும் இவர்களுக்குரிய கடமைகளாகும். இவர்கள் வீரம் பொருந்தியவராகவும் ஆளுந்தன்மை உடையோராகவும் திகழ்ந்தனர். தன்னலம்



XII Ethics_Lesson 3.indd 43 05-04-2019 10:38:25

கருதாமல் பிறரைக் காக்கும் கடமை உணர்வு மிக்கவர்களாக திகழ்ந்தனர்.

### வைசியர்கள்

வாணிகத்திலும், பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபாடுஉடையவர்கள். நேர்மையாக வாணிகம்செய்து அறவழியில் பொருளீட்டுவதைக் குறிக்கோளாகக் கொண்டு வாழ்ந்தனர்.

### சூத்திரர்கள்

முதல் மூன்று பிரிவினகளுக்கும் வேண்டிய பணிகளைச் செய்வது இவர்களது பணிகளாகும். தமக்கு இடப்பட்ட பணியை நிறைவேற்றி முடித்தனர்.

### ஆசிரம முறை

மனிதனின் நிறை வாழ்வு என்பது நூறு ஆண்டுகளாகக் கருதப்பட்டது. அதனாலேயே பெரியோர்கள் ஆசீர்வதிக்கும்போது சமஸ்கிருதத்தில் "ஸதமானம் பவது" சதம் – என்றால் நூறு – நூறாண்டுகள் வாழ்வாயாக! என்று வாழ்த்துகின்றனர்.இந்நூற்றாண்டுக்கால வாழ்வு நான்கு பகுதிகளாக அல்லது நிலைகளாகப் பிரிக்கப்படுகிறது. இதனை ஆசிரமம் என்று குறிப்பிட்டனர்.அவை முறையே

1. பிரம்மச்சரியம்
2. கிருகஸ்தம்
3. வனப்பிரஸ்தம்
4. சன்னியாசம்

### பிரம்மச்சரியம்

தன்னடக்க நிலை அல்லது மாணவப் பருவம் ஆசிரியர்களுக்குக் கட்டுப்பட்டு, அவர்களுக்குப் பணிவிடைகளைச் செய்து, பயின்று, சமயச் சடங்குகளைச் செய்து, நன்னடத்தை உடையவராய் திகழும் மாணவப் பருவமே பிரம்மச்சரியமாகும்.

### கிருகஸ்தம்

இல்லற வாழ்வில் ஈடுபட்டு அறம் பிறழாமல் தான தர்மங்களைச் செய்து வாழ்தல், மக்களைப் பெற்றெடுத்துக் கல்வி புகட்டி நன்னிலை அடையச் செய்தல், அவர்களுக்கு மணம் செய்வித்து நல்வாழ்வு வாழச் செய்வதுமான காலம் இருபத்தைந்துக்கு மேற்பட்டு ஐம்பது வயதிற்கு உட்பட்ட காலமாகும்.

### வனப்பிரஸ்தம்

இல்லற வாழ்வில் கடமைகளை முறையாகச் செய்து முடித்தபின் காட்டிற்குச் சென்று தவ வாழ்வினை மேற்கொள்ளுதல். பொருளாசையை முற்றும் துறத்தலும், பாச பந்தங்களிலிருந்து படிப்படியாக விடுபடுதலும் இக்காலத்தில் ஆற்ற வேண்டிய கடமைகளாகும். சுருங்கக் கூறின் இந்நிலை துறவற வாழ்க்கைக்கு ஆயத்தப்படுத்துதல் ஆகும். ஐம்பது வயதிற்குமேல் எழுபத்தைந்து வயதுக்கு உட்பட்ட காலமாகும்.

### சந்நியாசம்

பந்த பாசங்களினின்று விடுபட்டுத் தன்னை வருத்தித் துறவு மேற்கொள்ளுதல் ஆகும். இக்காலத்தில் இடம்விட்டு இடம்சென்று, இல்லற வாழ்க்கையைத் துறந்து, கடவுளைத் தியானிப்பதும், தான் அறிந்த உண்மைகளையும் நீதிகளையும் மக்களுக்கு உபதேசிப்பதும் ஆகும். சமய வாழ்வில் மக்களை ஈடுபடச் செய்தல்' முற்றும் துறந்த நிலையே' சந்நியாசமாகும். இது எழுபத்தைந்து வயதிற்கு மேற்பட்ட காலமாகும்.

### குடும்ப வாழ்வும் மண முறையும்

பின் வேதகாலத்தில் குடும்ப முறையில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டன. இதன்படி பின் வேத காலத்தில் குழந்தைத் திருமணம் வழக்கிலிருந்தது. சாதியக் கட்டுப்பாடுகள் அதிகரித்தன. கலப்புத் திருமணங்களும் அதிகரித்தன. முன்வேதகாலத்தைவிட மிக அதிகமாகச் சமூகத்திலும், குடும்பத்திலும் ஆணாதிக்கம் அதிகரித்தது. பலதாரத் திருமணமுறை முன்பை விட அதிகரித்தது. எண்வகைத் திருமணமுறை வழக்கிலிருந்தாலும் **பிரஜாபத்யம்** என்ற



XII Ethics_Lesson 3.indd 44 05-04-2019 10:38:25

நிச்சயிக்கப்பட்ட திருமணமுறையே சமூகத்தால் மதிக்கப்பட்டது.

உங்களுக்குத் தெரியுமா?

பின்வேதகாலத்தில் எண்வகை திருமண முறைகள் வழக்கிலிருந்தன. அவையாவன,

1. பிரம்மம், 2. பிரஜாபத்யம், 3. தெய்வம், 4. அர்ஷம், 5. காந்தர்வம், 6. அசுரம், 7. பைசாசம், 8. இராட்சசம்.

## பெண்கள் நிலை

முன் வேதகாலத்தை ஒப்பிடும்போது, பின் வேதகாலத்தில் பெண்கள்நிலை தாழ்ந்திருந்தது. பெண்களுக்குக் கல்வி கற்கும் உரிமை, சொத்துரிமை, வீட்டிற்கு வெளியே நடைபெறும் பொது விழாக்களில் பங்கேற்கும் உரிமை கணவனைத் தானே தேர்ந்தெடுக்கும் உரிமை ஆகியவை மறுக்கப்பட்டன. பெண்களின் கற்புநெறி போற்றப்பட்டது. அரச குடும்பத்தினருக்கும் உயர்குடிப் பெண்களுக்கும் அனைத்து உரிமைகளும் கிடைத்தன. அக்குடும்பங்களைச் சேர்ந்த **கார்கி, மைத்ரேயி** போன்ற பெண்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினர்.

## பின் வேதகாலப் பொருளாதார நிலை

பின் வேதகாலத்தில் வேளாண்மை முக்கியத் தொழிலாகும். அடர்ந்த காடுகள் அழிக்கப்பட்டு, அவை விளைநிலங்களாக ஆக்கப்பட்டன. இவ்விளைநிலங்களில் நெல், கோதுமை, பார்லி போன்றவை பயிரிடப்பட்டன. நெல் **விரிஹி** என்ற சொல்லாலும், பார்லி **யவா** என்ற சொல்லாலும் குறிப்பிடப்பட்டன. இயற்கை உரமிடும் முறை, பெருங்கலப்பையைக் கொண்டு உழவு செய்யும் முறை போன்றவை பின்வேதகாலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. இப்பெருங்கலப்பைகளில் ஆறு, எட்டு, பன்னிரண்டு, இருபத்துநான்கு எருதுகளைப் பூட்டி உழவை மேற்கொள்ளும் வசதி இருந்தது. பின் வேதகால மக்கள் உழவு செய்யும் முறையினைப் பற்றி **சதபத பிராமணம்** என்ற நூல் கூறுகிறது. ஆண்டுக்கு இரு போகச் சாகுபடி செய்யும் முறையை பின் வேதகால மக்கள் பின்பற்றினர். பின் வேதகால மக்கள் நெல் பயிரிடத்தற்கான ஆதாரங்கள் அஸ்தினாபுரத்தில் கிடைத்துள்ளன. பின் வேதகால மக்களின் சமயச்சடங்குகளில் அரிசி முக்கியத்துவம் பெற்றது.

வேளாண்மைக்கு அடுத்த நிலையில் நெசவுத்தொழில் முக்கியத்துவம் பெற்றது. பருத்தி, கம்பளி ஆகியவற்றால் ஆடைகள் தயாரிக்கப்பட்டன. **கர்பசா** என்ற சொல்லால் பருத்தி அழைக்கப்பட்டது. ஆடைகளை நெய்யும் நெசவாளர்கள் **வர்னா** என்றழைக்கப்பட்டனர். மட்பாண்டங்கள் உற்பத்தியும் பின் வேதகாலத்தில் முக்கியத்துவம் பெற்றது.

கால்நடைகளான ஆடுகள், செம்மறியாடுகள், பசுக்கள், எருதுகள் போன்றவற்றை வளர்க்கும் தொழிலும் மக்களால் மேற்கொள்ளப்பட்டது. ஒருவனிடம் இருக்கும் கால்நடைகளை வைத்தே அவனது செல்வம் நிர்ணயிக்கப்பட்டது. கால்நடை மேய்த்தல் வேளாண்மையின் துணைத் தொழிலாகக் கருதப்பட்டது. **அஷ்டகர்ணி** எனப்பட்ட காதோரம் துளையிடப்பட்ட பசுக்களுக்கு அதிக மதிப்பிருந்தது. யானைகள், அவற்றின் பயன்பாடுகள் பற்றி அதர்வண வேதம் குறிப்பிடுகிறது.

பின் வேதகாலத்தில் வில், அம்பு செய்வோர், கயிறு திரிப்போர், தோலாடை செய்வோர், கல்லுடைப்போர், உலோக வேலை செய்வோர், சலவை செய்வோர், முடித்திருத்துவோர், மருத்துவர் போன்ற பல பிரிவினர் வாழ்ந்தனர். **பிஸ்காஜ்** எனப்பட்ட மருத்துவர், **வப்தா** எனப்பட்ட முடி திருத்துவோர் முக்கியத்துவம் பெற்றனர். ராஜஸ்தானில் **கேத்ரி** என்ற இடத்திலிருந்த சுரங்கத்திலிருந்து பின் வேதகால மக்கள் தாமிரத்தைப் பெற்றனர். தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களின் பயனை அறிந்திருந்தனர்.

பின் வேதகாலத்தில் பண்டமாற்று முறையிலான வாணிபம் நடைபெற்றது. இம்முறை **பிரபனா** என்றும் அழைக்கப்பட்டது. **ஸ்ரஸ்தின்** என்றழைக்கப்பட்ட செல்வந்த வணிகர்கள் வைசியராக இருந்தனர். அவர்கள் கணங்கள், சிரணிகள் போன்ற வாணிகச் சங்கங்களை



XII Ethics_Lesson 3.indd 45 05-04-2019 10:38:25

ஏற்படுத்திக் கொண்டனர். மக்களின் வரி மூலமே அரசு நடைபெற்றதாக **அதர்வணவேதம்** கூறுகிறது. வாசனை திரவியங்கள், சர்க்கரை, தந்தம், மெல்லியதுணிகள் போன்ற பொருள்களைப் பின் வேதகால மக்கள் அரேபியா, பாரசீக வளைகுடா, இந்தோனேஷியா போன்ற பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்தனர். அயல்நாட்டு வாணிகத்தில் **நிஷ்கா, சதமானா** போன்ற நாணயத்துண்டுகள் பின் வேத காலத்தில் முக்கியத்துவம் பெற்றன.

## பின் வேதகாலச் சமய நிலை

இக்காலத்தில் சடங்குகள், ஆன்ம தத்துவக் கோட்பாடுகள் துறவுநிலை போன்றவை சமய வாழ்க்கையில் மாற்றங்களைத் தோற்றுவித்தன. பின் வேதகால மக்கள், வேதகால மக்கள் "பிரம்மா" "விஷ்ணு" "சிவன்" மும்மூர்த்திகளை வணங்கினர்.

## தவம்

இவ்வேதகால மக்கள் மனத்தையும், ஆன்மாவையும் தூய்மைப்படுத்த தவம் பெருந்துணை புரிவதாகக் கருதினர். பேரறிவையும், மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட நிலையையும் அடைய தவம் உதவுவதாகக் கருதினர். எனவே, தவம் செய்வது சிறப்பானதாகக் கருதப்பட்டது.

## தத்துவம்

பின் வேதகால மக்களின் வழிபாட்டில் சடங்குகளுடன் தத்துவக் கருத்துகளும் பெருகின. ஆன்மா, இறைவன், நரகம், மறுபிறவி, கர்மவினை, சொர்க்கம், வீடுபேறு போன்றவை இவர்களின் தத்துவத்தில் இடம்பெற்றன. மக்கள் இத்தகைய தத்துவக் கருத்துகளை உணர்ந்து பின்பற்றி நற்கதியடைந்தனர். அரசர்களும், ஆட்சியாளர்களும் இதில் ஈடுபாடு கொண்டிருந்தனர். மேலும் இத்தத்துவக் கருத்துகள் வளரத் துணை புரிந்தனர்.

## ஆன்மாவும் பிரம்மமும்

ஆன்மா உயிரின் அழியாத அடிப்படைக்கூறு. இவ்வுண்மையை உபநிடதங்கள் ஏற்றுக்கொள்கின்றன. உபநிடதங்கள் சடங்குகளையும் வேள்விகளையும் ஏற்கவில்லை. 'ஆன்மாவின் முக்கிய குறிக்கோள் அழிவற்ற பரப்பிரம்மத்தை அடைவது'. இதை உபநிடத வாக்கியமான "தத்வமஸி" "நீ தான் அது" என்பதும் அகம் பிரம்மாஸ்மி "நான் பிரம்மம்" என்பதுமாகும். இவ்வேதகாலத்தில் இப்பேருண்மையை அடைய உலக ஆசைகளும் ஆணவமுமே தடைகளாக உள்ளன என்ற கருத்து நிலவியது.

## வினை, வீடுபேறு, மறு பிறவி

இக்காலத்தில் அவரவர் செய்கின்ற வினைக்கேற்ப வாழ்வு அமையும் என்ற கருத்து நிலவியது. வினையாவது நல்வினை, தீவினை என இருவகைப்பட்டது. இவ்விரு வினைகளில் இருந்து விடுபட்டு, வீடுபேற்றை அடைவதே இன்றியமையாதது எனக்கருதப்பட்டது. இந்நிலை அடையாதவருக்குச் செய்வினைக்கேற்ப மறுபிறவி உண்டு என்ற கோட்பாடு இருந்தது.

இவ்வாறு பின்வேத காலத்தில் மக்களின் வாழ்க்கை முறைகள் சமய, தத்துவக் கோட்பாடுகள் அக்கால மக்களின் பண்பாட்டுக் கருவூலங்களாக அமைந்திருந்தன.

## இதிகாசக்காலப் பண்பாடு


பின் வேத காலத்திற்குப் பிறகு ஆரியர்களின் வாழ்வியலைப் படம் பிடித்துக் காட்டுவது சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட இதிகாசங்களான இராமாயணமும், மகாபாரதமும் ஆகும். இராமாயணம் வால்மீகி என்பவராலும், மகாபாரதம் வேதவியாசர் என்பவராலும் இயற்றப்பட்டன. இவை கி.மு.500 –க்கும் கி.மு.200–க்கும் இடையில் தோன்றியிருக்கக்கூடும் என மெக்டொனால்டு என்ற ஐரோப்பிய அறிஞர் கூறுகிறார். மகாபாரதம் ஆரியர்களுக்கிடையேயான பூசல்களை விவரிக்கின்றது. இவ்விரு இதிகாசங்களும் அக்காலத்தில் இந்தியாவில் நிலவிய அரசியல், சமூக, பொருளாதார, சமய நிலைகளைப் பற்றிய குறிப்புகளைக் கொடுக்கின்றன.



XII Ethics_Lesson 3.indd 46 05-04-2019 10:38:26

www.tntextbook.org

## இராமாயணம்


வால்மீகி

இவ்வுலகில் பண்பாட்டை வெளிப்படுத்தியுள்ள இலக்கியங்களுள் இராமாயணம் தலைசிறந்ததாகக் கருதப்படுகிறது. மகாவிஷ்ணுவின் அவதாரமான இராமனுக்கும் மிகச்சிறந்த சிவபக்தனான இராவணனுக்கும் இடையே நிலவிய போராட்டங்களும், இவ்விருவருக்கும் இடையேயான போர்களும் இராமாயணத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. **சரயு** நதிக்கரையில் கோசல நாட்டின் தலைநகரான அயோத்தியை ஆட்சி செய்த தசரதனுக்குக் கோசலை, சுபத்ரை, கைகேயி ஆகிய மனைவியர் இருந்தனர். தன் மகன் பரதன், நாட்டை ஆட்சி செய்ய வேண்டுமென கைகேயி விரும்பினாள். ஏற்கெனவே தசரதன் தனக்குக் கொடுத்த வாக்குறுதியைத் தக்க நேரத்தில் பயன்படுத்திய கைகேயி, அயோத்தியின் மன்னனாகப் பரதன் முடி சூட்டப்படக் காரணமானாள்.

இராமன் மிதிலையின் மன்னன் ஜனகரின் மகளான சீதையைச் **சிவதனுசு** என்ற வில்லுடைக்கும் போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்றுத் திருமணம் செய்து கொண்டார். வால்மீகி இராமாயணத்தில் சீதை மகாவிஷ்ணுவின் மனைவி மகாலட்சுமியின் அவதாரமாகப் போற்றப்படுகிறார். இராமன் மற்றும் அவரது மனைவி சீதை, இராமனின் தம்பி லட்சுமணன் ஆகியோர் பதினான்காண்டுகள் வனவாசம் மேற்கொள்கின்றனர். இராவணனின் தங்கை சூர்ப்பனகை இராமன்மீது கொண்ட காதலால் சீதையை இராவணன் கவர்ந்து சென்றான். இதற்கிடையில் சூர்ப்பனகையின் மூக்கினை இராமனின் தம்பி லட்சுமணன் அறுத்தாகவும் கூறப்படுகிறது. இராவணனால் கடத்தப்பட்டத் தன் மனைவி சீதையைப் பல்வேறு இடங்களில் இராமனும், அவர் தம்பி லட்சுமணனும் தேடினர். கிட்கிந்தைப் பகுதியின் அரசனாகிய வாலியின் சகோதரன் சுக்ரீவன், வாயு அஞ்சனை தம்பதிகளின் வானர புத்திரன் அனுமன் ஆகியோர் உதவியாக இருந்தனர். சீதை இலங்கையில் இராவணனின் காவலில் அசோகவனத்தில் சிறை வைக்கப்பட்டதை அனுமன் கண்டறிந்ததுடன் இராவணனின் அவைக்கே சென்று அவனை எச்சரித்துவிட்டு சீதை இருக்குமிடத்தை இராமனிடம் கூறினார். இராவணனின் தகாத செயலை வெறுத்த அவன் சகோதரன் வீடணன் அவனை விட்டுப் பிரிந்து இராமனிடம் தஞ்சமடைந்தான். அதன்பின் இராமனின் படை இலங்கைக்குச் சென்று இராவணனை போரில் வென்று தன் மனைவி சீதையை மீட்டதாக இராமாயணம் கூறுகிறது.

வால்மீகி எழுதிய இந்நூலை கவிச்சக்கரவர்த்தி கம்பர் தமிழில் கி.பி. (பொ.ஆ.) 12ஆம் நூற்றாண்டில் கம்பராமாயணம் என்ற நூலாக மொழி பெயர்த்தார். கம்பர் தொடக்கத்தில் இந்நூலிற்கு இட்டபெயர் இராமாவதாரம் என்பதாகும். இதே நூலை துளசிதாசர் என்பவர் இராமசரிதமானஸ் என்ற பெயரில் ஹிந்தியில் மொழி பெயர்த்தார்.

## இராமாயணம் கூறும் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு நெறிகள்

- இராமன், தசரதன் என்ற அயோத்திய மன்னனுக்கு மகனாகப் பிறந்தாலும் ஆடம்பர வாழ்க்கை, இளவரசனுக்குரிய அதிகாரப் போக்கு இவற்றை விரும்பாமல் எளிய வாழ்க்கை வாழ்ந்தார். சாதாரண மக்களுக்குரிய அனைத்து துன்பங்களையும் அனுபவித்தார். தமது நாட்டின் குடிமக்களை மிகவும் நேசித்தார். **எவ்வளவு உயர்ந்த நிலையில் இருந்தாலும் பணிவு கொள்ளுதல் அவசியம் அதுவே மேன்மையைத் தரும் என்ற வாழ்வியல் பண்பாட்டு நெறியை இராமாயணம் உணர்த்துகிறது.**
- தன் குலகுருவான வசிஷ்டர், தன் வாழ்வின் குரு (குருகுல வாழ்வு) விசுவாமித்திரர் ஆகியோரிடம் இராமன் கற்றுக் கொண்ட விதம் **ஆசிரியர் – மாணவர் உறவுமுறை எவ்வாறு இருக்க வேண்டுமென்பதற்கான முன்னுதாரணமாகத் திகழ்கிறது.**



XII Ethics_Lesson 3.indd 47 05-04-2019 10:38:26

- தசரதன் தன் மகன் இராமனை வனவாசம் செய் என உத்தரவிட்டதும் மறுப்பேதுமின்றி இராமன் காட்டுக்குச் சென்ற நிகழ்வு, **தந்தையின் வாக்கிற்கு ஒரு மகன் எவ்வாறு மதிப்பளிக்க வேண்டும்? எவ்வாறு மகன் தந்தைக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும்? என்ற வாழ்வியல் பண்பாட்டு நெறியைப் போதிக்கிறது.**

- இராமனுக்குமுறைப்படிகிடைக்கவேண்டிய அயோத்தியின் அரசப் பதவியைத் தன் தம்பி பரதனுக்கு விட்டுக்கொடுத்த செயல், பரதன் மீது இராமன் கொண்டிருந்த நம்பிக்கையையும் சகோதரப்பாசத்தையும் வெளிக்காட்டுகிறது. **சகோதரர்களுக்குள் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை வேண்டும். பதவிக்காகாகச் சண்டையிட்டு நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தக்கூடாது என்ற உயர்ந்த வாழ்வியல் பண்பாட்டு நெறியைக் கூறுகிறது.**

- தனக்குக் கிடைத்த அரசப் பதவிக்குரிய அரியணையில் தான் அமராமல் இராமனின் **பாதுகையை** (காலணி) அதன் மேல் வைத்து அரசாட்சி செய்த பரதனின் செயல், அவன் இராமனின் மீது கொண்டிருந்த பணிவையும், அரச நெறிமுறைகளின்படி தான் நாட்டை ஆளத்தகுதியற்றவன் என்ற உண்மை நிலையை அவன் உணர்ந்ததைத் தெரிவிக்கின்றது. **பதவி ஒருவருக்குத் தகுதியின் அடிப்படையில் மட்டுமே வரவேண்டும் என்ற வாழ்வியல் நெறியை இராமாயணம் உணர்த்துகிறது.**

- அண்ணனின் மனைவியைத் தாய்க்கு நிகராக பாவிப்பது இந்தியப் பண்பாடு ஆகும். தன் அண்ணன் இராமனின் மனைவியான சீதையை, இராமனின் தம்பி லட்சுமணன் தாயாகவே பாவித்தான். **பெண்களைத் தாயாக மதித்துப் போற்றவேண்டும் என்ற வாழ்வியல் நெறியை இராமாயணம் உணர்த்துகிறது.**

- வாயு, அஞ்சனை தம்பதிகளின் மகனான அனுமன், இராமன் மீது அளவற்ற பக்தியும் அன்பும் கொண்ட நிகழ்வு நெகிழ்ச்சியானது. அசோகவனத்தில் சீதையிடம், தான் இராமனின் தூதன் என்பதை நிருபிக்க தன் மார்பைப் பிளந்து மனத்தில்(இதயத்தில்) இராமனை பூஜித்த நிகழ்வினைக் காட்டிய அனுமனின் செயல் **கடவுள் மீது பக்தன் கொண்டிருக்கும் உண்மையான அன்பும் பக்தியும் வீடுபேற்றிற்கு வழி என்னும் வாழ்வியல் நெறியை உணர்த்துகின்றது.**

- **பிறர் மனைவியை நேசிப்பவன் யாராக இருந்தாலும் அவனுக்கும் அவன் வம்சத்தின் அழிவிற்கும் அதுவே காரணமாகிவிடும்** என்பதற்கு இராவணனின் செயலே உதாரணம். இராவணன் சீதை மீதான மோகத்தால் அழிந்தான் என்ற உண்மை இராமாயணம் மூலம் உணர்த்தப்படுகிறது.

- பதினான்காண்டுகள் வனவாசம் முடிந்து அயோத்திக்குத் திரும்பிய இராமனை அவரது தம்பி பரதன் வரவேற்ற நிகழ்வு, பதவி ஆசை தனக்கில்லை என்ற பரதனின் பெருந்தன்மையையும் **எந்தப் பதவியும் யாருக்கும் நிலையானதல்ல என்ற வாழ்வியல் நெறியையும் இராமாயணம் நமக்குக் குறிப்பிடுகிறது.**

- சீதையை இராவணன் கடத்தித் தன் அரண்மனையின் அருகில் உள்ள அசோக வனத்தில் சிறை வைத்தவுடன் தாங்கள் செய்வது தவறு என அவனுக்கு அவன் மனைவி மண்டோதரி அறிவுரை கூறித் திருத்த முயன்றாள். இந்த நிகழ்வு **தவறு செய்யும் கணவனைத் திருத்த வேண்டியது மனைவியின் கடமை என்ற வாழ்வியல் பண்பாட்டு நெறியை நமக்குப் உணர்த்துகிறது.**

இவ்வாறு இராமாயணம் பல வாழ்வியல் நெறிகளை மக்களுக்குப் போதிக்கிறது.

### மகாபாரதம்

வேதங்களில் காணப்படும் கருத்துகள் யாவும் மகாபாரதத்தில் இடம்பெற்றிருப்பது இதன் சிறப்பிற்குச் சான்றாகும். வேதவியாசர்



XII Ethics_Lesson 3.indd 48 05-04-2019 10:38:26

www.tntextbook.org

என்பவரால் எழுதப்பட்ட நூல் மகாபாரதம் ஆகும். பாண்டவர்கள் ஐந்து பேருக்கும் கௌரவர்கள் நூறு பேருக்குமிடையேயான போராட்டத்தை இந்நூல் விளக்குகிறது. தருமன், வீமன், அர்ஜுனன், நகுலன், சகாதேவன் ஆகிய ஐவரும் **பஞ்ச பாண்டவர்கள்** என்றழைக்கப்படுகின்றனர். துரியோதனன், துச்சாதனன் உள்ளிட்ட நூறு பேரும் **கௌரவர்கள்** எனப்படுகின்றனர். பஞ்ச பாண்டவர்களில் மூத்தவனான தருமன் சகுனியுடன் சூதாடித் தோற்று, தான் சேர்த்த செல்வங்களைச் சகுனியிடம் இழந்தான். தன் மனைவி பாஞ்சாலியையும் பந்தயமாக வைத்துத் தருமன் சூதாட்டத்தில் இழந்தான். துரியோதனனின் சொல் கேட்டுப் பாஞ்சாலியைத் துச்சாதனன் சபையிலேயே துகிலுரிந்தான். பாஞ்சாலி, தன் மானம் காக்க, கடவுளான கண்ணனைப் பிரார்த்திக்கிறாள். கண்ணனும் அவளுக்கு அருள்பாலித்து துச்சாதனன் அவளது ஆடைகளைக் களையக்களைய தொடர்ந்து கண்ணன் அருளால் அவ்வாடை நீளமாகிக்கொண்டே போனதால் துச்சாதனன் சோர்வடைகிறான். பாஞ்சாலியை அவமானப்படுத்திய கௌரவர்களைப் பாண்டவர்கள் ஐவரும் கண்ணன் அருளோடும் உதவியோடும் குருஷேத்திர போரில் பழிவாங்கிய நிகழ்வை மகாபாரதம் கூறுகிறது.


வேதவியாசர்

மகாபாரதம் இந்தியாவின் ஈடு இணையற்ற இருபெரும் இதிகாசங்களில் ஒன்று, 18 பருவங்கள் ஒரு லட்சம் செய்யுள்கள், கொண்ட மிகப்பெரிய நூலாகும். சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட இந்நூலைத் தழுவி வில்லிப்புத்தூரார் வில்லிபாரதம் என்ற பெயரில் தமிழில் எழுதினார். மகாபாரதத்தில் பஞ்ச பாண்டவர்களின் மனைவியான பாஞ்சாலியின் கதாப்பாத்திரத்தை மையமாக வைத்து மகாகவி சுப்பிரமணிய பாரதியார் **பாஞ்சாலி சபதம்** என்ற நூலை எழுதினார். மூதறிஞர் ராஜாஜி **வியாசர் விருந்து** என்ற நூலை மகாபாரதத்தை மையமாகக் கொண்டு எழுதினார். இறைத்தத்துவங்களையும், ஒழுக்கங்களையும் கிளைக்கதைகள் மூலம் உணர்த்தும் இந்நூல் நமது பண்பாட்டை வெளிப்படுத்துகிறது.

### மகாபாரதம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

- அரசனிடம் நற்பண்பு இல்லையென்றால் அவனும் கெட்டு அவனது நாடும் கெட்டழியும் என்பதற்குத் தருமனின் வாழ்வே உதாரணம் ஆகும். சகுனியுடன் சூதாடி செல்வங்களையெல்லாம் இழந்த அவன் தன் நாட்டையும் இழந்தான்.
- உடல் வலிமை கொண்ட ஒருவன் அவ்வலிமையை மட்டும் வைத்துக்கொண்டு எதுவும் செய்யமுடியாது. சிறந்த சிந்தனையுடன் கூடிய மனவலிமை அவசியம் என்று பீமனின் வாழ்க்கையை மற்றவர்க்கு ஒரு வாழ்க்கை நெறியாக மகாபாரதம் கூறுகிறது.
- துரோணரின் தலைசிறந்த மாணவர்களில் அர்ஜுனன் வில்வித்தையில் சிறந்த வீரன் மட்டுமின்றி மிகச்சிறந்த விவேகியாகவும் இருந்தார். **வீரம், விவேகம், குரு பக்தி,** இறை பக்தியுடையோருக்கு வெற்றிமேல் வெற்றி கிடைக்கும் என்ற வாழ்வியல் நெறியை அர்ஜுனன் வாழ்க்கை மூலமாக மகாபாரதம் உணர்த்துகிறது.
- சூரியன், குந்திதேவி தம்பதியின் மகனாகப்பிறந்து, அவர்களாலேயே புறக்கணிக்கப்பட்டு, தேரோட்டி ஒருவரால் வளர்க்கப்பட்ட கர்ணன் மிகச்சிறந்த வீரரும், கொடைவள்ளலுமாவார். தன் திறமையால் துரியோதனின் ஆதரவைப் பெற்று அங்க நாட்டு மன்னனாக்கப்பட்டார். துரியோதனன் தீய குணமுடையவனாக இருந்தாலும் செஞ்சோற்றுக்கடனைத் தீர்க்க குருஷேத்திரப் போரில் (அர்ஜுனனை எதிர்த்து நடைபெற்ற போரில்) கர்ணன் வீரமரணமடைந்தார். **தன் நற்குணம், கொடைத்திறனை நல்லவர் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தலாம் தீயோர்களிடத்தில்**



XII Ethics_Lesson 3.indd 49 05-04-2019 10:38:26

www.tntextbook.org

**நற்பண்புடையவர்களின் செயலானது விழலுக்கிறைத்த நீர்போலாகும் என்ற கருத்து கர்ணனின் வாழ்க்கை மூலம் மகாபாரதத்தில் உணர்த்தப்படுகிறது.**

- பீஷ்மர், துரோணர் ஆகிய இருவருமே சிறந்த ஆசிரியர்கள். ஆனால், துச்சாதனன் பாஞ்சாலியின் துகிலுரித்தபோது அவனைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்ததாலும் துரியோதனனுக்கு உதவியதாலும் குருஷேத்திரப் போரில் அர்ஜுனனால் பீஷ்மர் தோற்கடிக்கப்பட்டார். **ஓர் ஆசான் தனக்குத் தெரிந்த கலையைத் தீயவர்க்குப் பயன்படுத்தியதன் வினையை பீஷ்மர் அனுபவித்தார் என்ற வாழ்வியல் பண்பாட்டு நெறியை மகாபாரதம் நமக்குத் தெரிவிக்கின்றது.**
- **தலைசிறந்த குருவால் எத்தனை மாணவர்களையும் நற்பண்புடையவர்களாக மாற்றமுடியும் என்ற உயரிய தத்துவத்தைத் துரோணாச்சாரியர் வழி நின்று மகாபாரதம் வாழ்வியல் பண்பாட்டு நெறியாக விளக்குகிறது.** அர்ஜுனனின் ஆசிரியராக இருந்த துரோணாச்சாரியார் குருஷேத்திரப்போரில் அவனது வெற்றிக்கு உதவினார்.
- தன் சகோதரன் திருதராஷ்டிரனுக்கு விதுரன் கூறிய அறிவுரைகளின் தொகுப்பே **விதுரநீதி** எனப்படுகிறது.
- சகுனி தன்னுடைய சூழ்ச்சியால் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே போர் ஏற்படுத்திய செயலால் தானே அழிந்தான். இதன் மூலம் தருமத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் இறுதியில் தருமம் வெல்லும் என்பது புலனாகிறது.
- அர்ஜுனனுக்குக் கண்ணன் கூறிய அறிவுரைகளின் தொகுப்பு பகவத்கீதையாகும். இந்நூல் இந்துக்களின் ஒப்பற்ற புனித நூலாகப் போற்றப்படுகிறது. மனித வாழ்விற்குத் தேவையான ஒப்பற்ற வாழ்வியல் மற்றும் பண்பாட்டு நெறிகளைப் பகவத்கீதை கூறுகிறது.

**அ) பிறர் போற்றும்போது மகிழ்ச்சியும், தூற்றும்போது வருத்தமும் அடையாமல் யார் இருக்கிறார்களோ அவர்களே பண்டிதர்கள் ஆவர்.**

**ஆ) அடங்கிப்போன பகையைத் தூண்டி வளர்க்கக்கூடாது.**

**இ) அதிகம் பேசுபவரால் பொருட்செறிவுடனும் புதுமையுடனும் பேச முடியாது.**

**ஈ) பாணங்களால் பட்ட புண் ஆறிவிடும்; ஆனால், கொடிய வார்த்தைகளால் சொல்லப்பட்ட சிந்தனையாகிய புண் எப்போதும் ஆறாது.**

**உ) அதிக அகந்தை, அதிக கோபம் ஆகியவை பெருங்குற்றம் ஆகும். இதுபோன்ற அறிவுரைகள் மகாபாரதத்தில் விதுரநீதியாக இடம்பெற்று வாழ்வியல் பண்பாட்டு நெறியாக அமைந்துள்ளன.**

மனித வாழ்வை நெறிபடுத்தவே பாரதம் எழுந்தது எனலாம். அறவழியில் நடக்கவும், மனிதனைச் சிந்திக்கவைக்கவும் செய்கிறது. சான்றோர்கள் இன்பத்தையும், துன்பத்தையும் ஒன்றாக எண்ணுவர். எப்போதும் அறவழியைக் கைவிடக்கூடாது என்றும் கடமையைச் செய் பலனை எதிர் பாராதே என்ற வாழ்வியல் தத்துவ நெறியை மகாபாரதம் வெளிப்படுத்துகிறது.

## புராண காலப்பண்பாடு

காப்பியங்களுக்குப் பின் இந்தியாவின் பண்பாட்டைச் சிறப்படையச் செய்தவை புராணங்கள் ஆகும். புராணங்கள் உபநிடதங்களைப் போல பழைமையானவை என்று கூறப்படுகிறது. புராணங்களின் தோற்றமும், அவற்றின் காலமும் பலவாறாகக் கூறப்படுகின்றன.

## புராணம் சொல் விளக்கம்

**புராணம்** என்ற சொல் சமஸ்கிருத மொழியிலிருந்து பெறப்பட்டதாகும். இதற்குப்



XII Ethics_Lesson 3.indd 50 05-04-2019 10:38:26

**பழைமை** எனப்பொருள். புராணத்தில் பழைய தெய்வக்கதைகள், வரலாற்றுச் செய்திப் பட்டியல்கள், மரபுரைக் கோவைகள் ஆகியவை அடங்கியுள்ளன. மேலும் ஆன்மிக உணர்வைப் பெறுவதற்கான சமயம், தத்துவம், யோகம், அநுபூதி நெறிகள் போன்றவற்றைப் பற்றிய உரையாடல்கள் நிரம்பிய அறிவுக் கருவூலமாகவும் புராணங்கள் திகழ்ந்தன.

## புராணங்கள் எழுதப்பட்ட காலம்

புராணங்கள் எப்போது தோன்றின என்று அறுதியிட்டுக் கூற இயலாது. புராணக் காலம் கி.பி.300லிருந்து கி.பி.1000த்திற்கு உட்பட்டது என்று ஆர்.எஸ். சர்மா குறிப்பிடுகிறார். கி.பி. நான்காம் நூற்றாண்டிற்கும், கி.பி. (பொ.ஆ.) ஆறாம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலம் புராணங்களின் காலம் என்று வேறு சிலர் கருதுகின்றனர். இப்புராணங்களில் மிகவும் பழைமையானதாகக் கருதப்படும் வாயு புராணம் கி.பி.நான்காம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்ற கருத்து நிலவுகிறது.

## புராணங்கள் எழுதப்பட்டதன் நோக்கம்

மனித வாழ்வியலில் தத்துவ உண்மைகள் பாமரர்கள் புரிந்துகொள்ள கடினமானவையாக இருந்தன. எனவே, அவை பாமரர்களையும் எளிமையாகச் சென்றடையும் வகையில் நீதிக் கதைகள் வடிவில் தொகுக்கப்பட்டன. அவ்வாறு தொகுக்கப்பட்ட கதைகள் வாழ்வில் பேருண்மைகளை அனைவருக்கும் உணர்த்தின. இக்கருத்துகளே உண்மையை வெளிக்கொணர்தல் என்ற அடிப்படையில் புராணங்களாகத் தொகுக்கப்பட்டன.

## புராணத்திற்குரிய பண்புகள்

புராணம் ஐந்து வகைப் பண்புகளைக் (பஞ்ச லட்சணங்களை) கொண்டதாகக் கூறப்படுகிறது. அவை

- அக்காலச் சம்பவங்கள் (வரலாறு)
- படைப்பு (அண்டப்படைப்பியல்)
- உலகப்படைப்பின் விரிவும், ஒடுக்கமும் (அண்டப்படைப்பிற்குக் கீழுள்ள படைப்பு)
- சூரியகுல, சந்திரகுல அரசர்களின் வம்ச விளக்கம் (அரசப் பரம்பரைகளின் பட்டியல்)
- ஆதி வம்சாவழி (பரம்பரை வம்சாவழி)

## புராணங்களின் எண்ணிக்கையும் எழுதியவரும்

வேதவியாசர் என்ற முனிவர் புராணக் கதைகளைத் தொகுத்தார் என்றும், புராணங்களை எழுதியவரும் இவரே என்ற மற்றொரு கருத்தும் நிலவுகிறது. புராணங்களின் தொகுப்பை உலகிற்குத் தெளிவுபடுத்தியவர். **சுதபுராணிகர்** எனக் கூறுகின்றனர்.

பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய மூன்று கடவுளர்களும் மற்றும் அக்னி, சூரியன் போன்ற கடவுளர்களும் வேதங்களிலும், காப்பியங்களிலும் பேசப்பட்டனர். எனவே, புராணங்கள் மும்மூர்த்திகளின் அடிப்படையில் சிவபுராணம், விஷ்ணுபுராணம், பிரம்மபுராணம் எனப் பிரிக்கப்பட்டன.

புராணங்கள் மொத்தம் **பதினெட்டு** ஆகும். அவற்றில் சிவபுராணம் பத்து, விஷ்ணு புராணம் நான்கு, பிரம்ம புராணம் இரண்டு, அக்னி மற்றும் சூரியன் தலா ஒரு புராணம் என்று பதினெட்டுப் புராணங்களும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

## சிவ புராணங்கள் பத்து

சிவ புராணங்கள் பத்தும் சிவபெருமானின் பெருமைகளைக் கூறுகின்றன. அவையாவன

1. சிவபுராணம் (எ) வாயு புராணம்
2. பவிஷ்ய புராணம்
3. மார்க்கண்டேய புராணம்
4. இலிங்க புராணம்
5. வராக புராணம்
6. மத்சய புராணம்
7. ஸ்கந்தப் புராணம்
8. கூர்மபுராணம்



XII Ethics_Lesson 3.indd 51 05-04-2019 10:38:26

9. வாமன புராணம்
10. பிரம்மாண்ட புராணம் ஆகியனவாகும்.

திருமாலின் பெருமைகளைக் கூறும் நான்கு புராணங்கள் விஷ்ணு புராணம் எனப்படுகிறது. அவையாவன.

1. வைணவம் எனப்படும் விஷ்ணு புராணம்
2. பாகவதம் எனப்படும் பாகவதபுராணம்
3. நாரதீயம் எனப்படும் நாரத புராணம்
4. காருடம் எனப்படும் கருடபுராணம் ஆகியவையாகும்.

**பிரம்ம புராணங்கள்** – பிரம்மாவின் பெருமையை இரண்டு புராணங்கள் கூறுகின்றன. அவையாவன

1. பிரம்மம் எனப்படும் பிரம்ம புராணம்
2. பதுமம் எனப்படும் பத்ம புராணம் ஆகியவையாகும்.

மேலும் அக்னியின் பெருமையைக் கூறும் **ஆக்னேயம்** எனப்படும் அக்னி புராணமும், சூரியனின் பெருமையைக் கூறும் **பிரமை வர்த்தம்** எனப்படும் பிரமை வர்த்த புராணம் போன்றவையாகும்.

## தமிழ்ப் புராணங்கள்

பிற்காலத்தில் தமிழில் தோன்றியவை தமிழ்ப்புராணங்கள் என்றழைக்கப்படுகின்றன. சிவபெருமான் மனித உருவில் தோன்றி, சிவனடியார்களுக்குத் தீட்சை அளித்தும், துயரங்களைப் போக்கவும் செய்தார். அவரது இச்செயல்களைத் திருவிளையாடல் எனவும் இவற்றை இனிய தமிழில் நான்கு புராணங்களாக சுவாமி சிவானந்தர் கூறுகிறார். அவை முறையே சிவபுராணம், பெரிய புராணம், சிவபராக்கிரமம், திருவிளையாடற்புராணம் என்பனவாகும்.

பதினெண் புராணங்களை மகா புராணங்கள் என்றும் அழைப்பர். இவற்றைத் தவிர பதினெட்டு புராணங்கள் உபபுராணங்களும் உள்ளன. அவையாவன,

1. சூரிய புராணம்
2. கல்கி புராணம்
3. துர்வாச புராணம்
4. கபில புராணம்
5. நந்திகேஸ்வர புராணம்
6. பசுபதி புராணம்
7. கணேச புராணம்
8. சனத்குமார புராணம்
9. வாசிஷ்ட புராணம்
10. பராசர புராணம்
11. பிருகத்தர்ம புராணம்
12. மானவ புராணம்
13. காளிகா புராணம்
14. நரசிம்ம புராணம்
15. பார்க்கவ புராணம்
16. கம்ப புராணம்
17. பராண புராணம்
18. முத்கலா புராணம்

## புராணங்களின் நோக்கம்

புராண இலக்கியமானது ஆழ்ந்த இந்து சமயக் கருத்துகளைக் கொண்டதாகவும் பருப்பொருள் தத்துவமாகவும், அறிவியலாகவும் போற்றப்படுகிறது. **சமயம், தத்துவம், அறிவியல் இவை சம்மந்தமாக வெளிப்பட்ட பழங்கால மக்களின் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் அவற்றில் புரியாத கடினமான கருத்துகளையும் மிகச் சுவையாகவும், உவமான, உவமேயங்களின் மூலமும் விளக்கி மக்களின் மனத்தில் பதியச் செய்வது புராணங்களின் முக்கிய நோக்கமாகும்.**

வேதக் கட்டளைகளான 'உண்மை பேசு' (ஸ்த்யம் வத), தருமத்தைச் செய் ( தர்மம் சர) என்பனவற்றை நீதிக்கதைகள் மூலம் விளக்கிக் கடைப்பிடிக்கச் செய்தன. வாழ்வைச் சீர்படுத்துவதும் சமய ஞானமும், கடவுள்



XII Ethics_Lesson 3.indd 52 05-04-2019 10:38:26

பக்தியும் கலந்த தெய்வீக உணர்வினைத் தருவதும் புராணங்களாகும்.

## புராணங்களின் இன்றியமையாமை

புராணங்கள் பழைமைவாய்ந்தவை என்றும் சமயக் கருத்துகளை மட்டுமே பிரதிபலித்தன எனவும் கொள்ளுதல் தவறு. புராணங்கள் வாழ்வின் பல்வேறு நிலைகளில் மக்களுக்குப் பயன்படும் அரிய உண்மைகளை எளிமையாக ஏற்றுக் கொள்ளும் வண்ணம் கூறியுள்ளன.

- புராணங்களில் குறிப்பிடப்படும் தெய்வங்கள் அவற்றின் அவதாரங்கள் மூலம் நிகழ்த்திய அருஞ்செயல்களைக் கூறுகின்றன. அத்துடன் அரசியல், மருத்துவம், சடங்குகள், சமூக விதிமுறைகள், வேதாந்தம், தத்துவம், சமயம் என்ற பல்வேறு நிலைகளுக்கு நீண்ட விளக்கங்களைத் தருகின்றன.
- பண்டைய நாகரிகத்தின் சிறப்புக் கூறுகள் எனப்போற்றப்படும் உறுதிப் பொருள்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றைப் பற்றித் தெளிவான கருத்துகளைத் தருகின்றன.
- படைப்பு, அநுபூதி நெறி விஷ்ணு புராணத்தில் கூறப்படும் "பரமாத்மாவிற்கு மேலானது எதுவுமில்லை" என்ற உயரிய கருத்துகள் புராணங்களில் இடம்பெற்றுள்ளன.
- கர்ம வினைகளிலிருந்தும், அவற்றின் விளைவுகளிலிருந்தும் விடுபட்டு, அமைதி பெறுவதற்கான வழிமுறைகளைப் புராணங்கள் கூறுகின்றன.
- அக்கால மக்களின் வாழ்க்கைமுறை, அரசு முறை முதலியவற்றை அறிய பெருந்துணை புரிகின்றன.
- புராணங்கள் கடவுள் எங்கும் இருக்கிறார், அவருக்குப் பல திருநாமங்கள் உண்டு, மனித இதயத்தில் கடவுள் இருக்கிறார் என்ற கருத்தை விளக்கிக் கூறுகின்றன. பக்தன், சத்தியம், தருமம், புலனடக்கம், தெய்வபக்தி, சகிப்புத்தன்மை, தன்னம்பிக்கை ஆகிய குணங்களை வளர்த்துக் கொள்ளவேண்டும். இக்குணங்களுக்கு எடுத்துக்காட்டுகளாக இராமன், கண்ணன், அர்ஜுனன், அனுமன், சபரி, கஜேந்திரன் போன்ற பாத்திரங்கள் படைக்கப்பட்டுள்ளன.
- இத்தகைய நல்ல நூல்களைப் படிப்பதன் மூலம் நல்ல குடிமக்கள், உருவாக்கப்படுகிறார்கள். அரிச்சந்திர நாடகத்தைப் பார்த்து மகாத்மா காந்தியும், புராணக் கதைகளைக் கேட்டு இராமகிருஷ்ணரும், விவேகானந்தரும் சிவாஜியும் சிறந்த மனிதர்களாக உருவானதாக வரலாறு கூறுகின்றது. பொதுவாக மக்கள் தம் வாழ்வின் உயரிய நெறிகளை எளிதாகப் புரிந்துகொண்டு, பின்பற்ற உதவுவன புராணங்களே என்றால் அது மிகையாகாது.
- 

  கண்ணப்பர்

  நாயன்மார்களுள் ஒருவரான திண்ணனார், தம் இறை பக்தி மிகுதியால் சிவபெருமானின் கண்ணில் இருந்து வழியப் பெற்ற இரத்தத்தை நிறுத்த, தம் ஒரு கண்ணைப் பெயர்த்து வைத்ததாகவும், மேலும் மற்றொரு கண்ணிலிருந்து இரத்தம் வர, உடனே மறு கண்ணைப் பெயர்த்து அப்பி இறைவனின் துயரைப் போக்கியதால் கண்ணப்பர் எனப் பெயர்பெற்றதாகவும் அறிகிறோம்.

## நவீன காலத்திற்கு வேதங்களின் ஏற்புடைமை

வேதங்களில் கூறப்பட்டுள்ள அரிய உண்மைகள் இன்றைய உலகில் அறிவியல் உண்மைகளோடு மிகவும் ஏற்புடையதாய் காணப்படுகின்றன. மேலும், இன்றைய வாழ்வின் அடிப்படைப் பண்பாட்டுக் கூறுகளையும் பிரதிபலிக்கின்றன.

- புவியின் வயது, விண்வெளியின் எல்லைகள், சூரியனின் உட்பகுதி,



XII Ethics_Lesson 3.indd 53 05-04-2019 10:38:26

வானநூல் பற்றிய கருத்துகளை வேதங்கள் கூறியுள்ளன. இவை அனைத்தும் இன்றைய அறிவியல் உலகால் ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மையாகும்.

- ஆயுர்வேதம் எனப்படும் மருத்துவ இயல், தனுர்வேதம் எனப்படும் போர்க்கலை, காந்தர்வ வேதம் எனப்படும் நுண்கலை ஆகிய மூன்றும் வேதங்களாலும், இதிகாசங்களாலும் விளக்கப்படுகின்றன. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளும் இதனை ஏற்றுக் கொள்கின்றன.
- ஆயுர்வேத மருத்துவம் என்ற முறை ஆன்மிகத்தையும் மருத்துவத்தையும் இணைக்கிறது.
- மூலிகை மருத்துவம் பற்றிய தெளிவான அறிவை ஆயுர்வேதம் கூறுகிறது.
- உலோகவியல் பற்றிய கருத்துகள் வேதங்களில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன.
- காலக் கணக்கிற்கு உதவும் கணித அறிவும் வேதத்தில் கூறப்பட்ட அறிவாகும்.
- விண்வெளியில் காணப்படும் பல்வேறு கிரகங்கள், நட்சத்திரங்கள் பற்றி விளக்கமான செய்திகள் வேதத்தில் கூறப்பட்டுள்ளன.
- நியாய வைசேடிகம் என்ற தத்துவம் அணு விஞ்ஞானம், அணுவின் அமைப்பையும், தன்மையையும், ஆற்றலையும் குறிப்பிடுகிறது.
- வேதத்தில் இந்தியாவின் இருப்பிடம் புவியியல் வல்லுநர்களால் கூறப்பட்டுள்ள அட்ச, தீர்க்க ரேகைகள் பற்றி கூறப்பட்டுள்ளன. கிரகணங்கள் நடைபெறும் காலத்தை முன் கூட்டியே கணக்கிடும் கலையை வேதங்கள் விளக்கிக் கூறுகின்றன.
- தனிமனித வாழ்க்கை, சமூகவாழ்க்கை, தனிமனிதன் சமூகத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும், பொதுமக்களின் கடமைபற்றியெல்லாம் வேதங்கள் விளக்கியுள்ளன. இத்தகைய மேன்மை பொருந்திய வேதத்தைக் கற்றுணர்ந்து, நல்வாழ்வில் பின்பற்றி உயர்வதே மனித வாழ்வின் குறிக்கோளாக இருக்கவேண்டும்.

வேத உபநிடதங்களை ஏற்கும் சனாதன தர்மம் என்கிற இந்து மதத்திற்கு ஒரு குறிப்பிட்ட நூல் மட்டுமே புனித நூலாக அமையவில்லை. வேதம், உபநிடதம், பகவத்கீதை, புராணங்கள், இதிகாசங்கள் என்ற நீண்ட பட்டியலே உண்டு. ஒவ்வொன்றும் மனித இயல்புகளுக்குத் தக்கபடி வாழ்க்கை நெறிமுறை மற்றும் தத்துவங்களைப் போதிக்கிறது. வேதங்களில் யாகங்களும் சடங்குகளும் முக்கியத்துவம் பெற்றன. உபநிடதங்களில் எளிதில் புரிந்துகொள்ள முடியாத தத்துவ உண்மைகள் காணப் படுகின்றன. எனவே, உபநிடதங்களை அனைவரும் புரிந்துகொண்டு, நடைமுறை வாழ்க்கை மேற்கொள்ள பகவத்கீதை, புராணங்கள் மற்றும் இதிகாசங்கள் வழிகாட்டுகின்றன.



## நிறைவுரை

இந்தியப் பண்பாட்டிற்குக் கிராம வாழ்க்கைமுறை, கூட்டுக்குடும்பமுறை போன்றவற்றைக் கொடையாகத் தந்தது வேதகாலப் பண்பாடாகும். சிந்துவெளி நாகரிகத்தின்பழைமையானவேளாண்மைமுறை வேதகாலத்தில் தான் புதிய பரிணாம வளர்ச்சி பெற்றது எனலாம். அரசன், அரசமைப்பு, நிருவாக முறை, போன்றவை புதிய வளர்ச்சிபெற வேதகாலமே வித்திட்டது. இந்திய இலக்கிய வளர்ச்சியை வேதகாலமே தொடங்கிவைத்தது. கிரேக்கர்கள், அரேபியர்கள், துருக்கியர்கள், ஐரோப்பியர்கள் இந்தியாவை ஆட்சி செய்தாலும், இந்தியப் பண்பாட்டிற்கு அடித்தளம் அமைத்தது வேத காலப் பண்பாடாகும்.



XII Ethics_Lesson 3.indd 54 05-04-2019 10:38:26

www.tntextbook.org

# பயிற்சி

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ரிக் வேதத்திலுள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை

அ) 1025 ஆ) 1028 இ) 1100 ஈ) 1000

2. ஆரியர்களின் இசையார்வத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக உள்ள வேதம்

அ) ரிக் ஆ) யஜுர் இ) சாமம் ஈ) அதர்வணம்

3. பொருத்துக

| | | |
|---|---|---|
| அ. ஆயுர்வேதம் | – | 1. போர்க்கலை |
| ஆ. தனுர்வேதம் | – | 2. இசை, நடனம் |
| இ. காந்தர்வ வேதம் | – | 3. சிற்பம், கட்டடக்கலை |
| ஈ. சில்ப வேதம் | – | 4. மருத்துவம் |

அ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3 ஆ) அ–2, ஆ–3, இ–4, ஈ–1

இ) அ–3, ஆ– 4, இ–1, ஈ–2 ஈ) அ–1, ஆ–2, இ–3, ஈ–4

4. உபநிடதங்களில் சிலவற்றைப் பாரசீக மொழியில் மொழிபெயர்த்த முகலாய இளவரசர்

அ) ஷாஷுஜா ஆ) தாராஷுகோ இ) மூரத் ஈ) தவார்பக்ஷ்

5. கீழ்க்காண்பனவற்றில் பொருந்தாத இணையைக் கண்டறிக.

அ) சபா – மூத்தோர் அவை ஆ) சமிதி – சமய விவாத அவை

இ) விதாதா – மக்கள் பிரதிநிதிகளின் அவை ஈ) சேனானி – இளவரசர்

6. "சமஸ்கிருதத்தின் முதல் உரைநடை" என்று அழைக்கப்படும் வேதம்

அ) ரிக் ஆ) யஜுர் இ) சாமம் ஈ) அதர்வணம்

7. கீழ்க்காண்பனவற்றுள் பின்வேதகாலத்திற்குப் பொருந்தாத கூற்றைச் சுட்டிக்காட்டுக.

அ) வேளாண்மையே முக்கிய தொழில்

ஆ) அரச குடும்பப் பெண்களுக்கு மட்டுமே கல்வி கற்க வாய்ப்பு

இ) தங்கம், வெள்ளி போன்ற உலோகங்களின் பயன்பாடு அறியாமை

ஈ) வீடுபேறு அடையாதவருக்குச் செய்வினைக்கேற்ப மறுபிறவி உண்டு

8. கீழ்க்காணும் கூற்றையும் காரணத்தையும் படித்துச் சரியான விடையைக் கண்டறிக.

கூற்று: நால்வகை வேதங்களுள் சாமவேதம் காரணப்பெயராக அமைந்துள்ளது.

காரணம்: 'சாமம்' என்ற இசையின் அடிப்படையில் பாடப்பட்டதால், அது 'சாம' வேதமாயிற்று.

அ) கூற்று சரி, காரணம் பொருத்தமானதன்று ஆ) கூற்று, காரணம் இரண்டும் சரி.

இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

9. இராமாயணத்தை இராமசரிதமானஸ் என்ற பெயரில் இந்திமொழியில் மொழி பெயர்த்தவர்

அ) துக்காராம் ஆ) மீராபாய் இ) துளசிதாசர் ஈ) நாமதேவர்



XII Ethics_Lesson 3.indd 55 05-04-2019 10:38:26

10. பொருத்துக

| | | |
|---|---|---|
| அ. வேதங்கள் | – | 1) 108 |
| ஆ. உபநிடதங்கள் | – | 2) 18 |
| இ. புராணங்கள் | – | 3) 4 |
| ஈ. இதிகாசங்கள் | – | 4) 2 |

அ) அ–4, ஆ–2, இ–1, ஈ–3 ஆ) அ–3, ஆ–1, இ–2, ஈ–4

இ) அ–4, ஆ–1, இ–2, ஈ–3 ஈ) அ–3, ஆ–4, இ–2, ஈ–1

## II. குறுவினா

1. ரிக் வேதம் –வரையறுக்க.
2. முன்வேதகால நீதிமுறையைக் கூறுக ?
3. அசுவமேதயாகம் என்றால் என்ன ?
4. ஆசிரம நிலைகள் – வரையறுக்க.
5. விதுரநீதி கூறும் அறக்கருத்துகள் யாவை ?
6. புராணம் என்றால் என்ன ?
7. தமிழ்ப் புராணங்கள்பற்றிச் சிறுகுறிப்பு வரைக.

## III. சிறு வினா

1. சப்தசிந்துக்களின் பெயரினைக் குறிப்பிடுக.
2. முன்வேதகால அரசமைப்பு, ஆட்சிமுறை குறித்து நீவிர் அறிவன யாவை?
3. பின்வேதகாலச் சமயநிலை பற்றிக் குறிப்பு வரைக.
4. "வாழ்வியல் மற்றும் பண்பாட்டு நெறிகளின் இருப்பிடமாக இராமாயணம் திகழ்கிறது" இக்கூற்றைப் புலப்படுத்துக.
5. ஐவகைப்பண்புகள் எனப் புராணம் எவற்றைக் கூறுகிறது?

## IV. நெடுவினா

1. உபநிடதங்கள் பற்றி விவரித்து எழுதுக.
2. முன்வேதகாலத்துடன் பின்வேதகாலத்தின் பொருளாதார நிலையை ஒப்பிடுக.
3. கர்ணன், அர்ஜுனன் ஆகியோரின் வாழ்க்கை நிகழ்வுமூலம் மகாபாரதம் உணர்த்தும் பண்பாட்டு நெறிகளைப் பட்டியலிடுக.
4. முன்வேதகாலத்தின் சமயநிலைபற்றித் தொகுத்தெழுதுக.
5. மக்களுக்குப் பயன்படும் அரிய உண்மைகளை எளிமையாக எடுத்துக் கூறுவன புராணங்கள் – இக்கூற்றை மெய்ப்பிக்க.



XII Ethics_Lesson 3.indd 56 05-04-2019 10:38:26

www.tntextbook.org

அலகு
4

# இந்தியப் பண்பாடும் சமயங்களும்

AQBPXQ

## கற்றல் நோக்கங்கள்

- சமயம் – பொருள்விளக்கம் அறிதல்.
- சமயங்களின் நோக்கம் பற்றி அறிதல்.
- இந்துசமயம் பற்றியும், அச்சமயத்தின் பண்பாட்டுக் கொடை பற்றியும் தெரிந்து கொள்ளுதல்.
- சமணசமயம் மற்றும் அச்சமயத்தின் பண்பாட்டுக் கொடை பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- இஸ்லாமிய, கிறித்துவ சமயத்தின் பண்பாட்டைப் புரிந்துகொள்ளல்.
- இந்தியப்பண்பாட்டிற்குச் சமயங்களின் கொடை பற்றி தெரிந்து கொள்ளுதல்.

## நுழைவு வாயில்

நம் நாட்டின் பண்பாட்டுயர்வுக்கு அடிப்படையாகத் திகழ்வன சமயங்களாகும். நாட்டுமக்களின் பழக்கவழக்கங்கள், வாழ்வியல்முறைகள், மனப்பக்குவம், ஆன்மிக அறிவு போன்றவற்றைச் சமயங்களே தீர்மானிக்கின்றன. எது நல்லது? எது கேட்டது? என்பதைத் தெளிவுபடுத்தும் சமயங்கள், அவர்களுக்கு வாழ்வின் மெய்ப்பொருளை உணர்த்துகின்றன. இவை மக்களுக்கு அறம், பொருள், இன்பம் ஆகியவற்றைவிட வீடுபேறே அவசியமானது என்று வலியுறுத்துகின்றன. கடவுள் நம்பிக்கை மட்டுமின்றிச் சமூக பணிகளையும் சமயங்கள் ஊக்குவிக்கின்றன. உலகின் ஒரே பரம்பொருள் கடவுள் என்று இவை கூறுகின்றன. பரம்பொருள் ஒன்றே என்றாலும், ஒவ்வொரு சமயத்தவரும் ஒவ்வொரு விதமாக அப்பரம்பொருளை வழிபடுகின்றனர்.

## சமயம்

தமிழறிஞர்கள் சமயம் என்ற சொல், **சமை** என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகக் குறிப்பிடுகின்றனர். சமைத்தல் என்றால் மூலப்பொருள்களைக் கொண்டு சமைக்கும்போது உண்பதற்குப் பக்குவப்படுவதுபோல, சமயத்தில் இணையும் மனிதன் மனப்பக்குவம் அடைகிறான் எனக் கருதலாம். Religion – என்ற சொல் இலத்தீன் மொழியில் Religio என்ற சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதில் இருசொற்கள் அடங்கியுள்ளன. Re (திரும்ப) ligion (கொணர்தல்). இதைக்கட்டுண்ட ஆன்மா மீண்டும் இறைவனை அடைதல் என இந்து சமயம் விளக்குகிறது.

## சமயத்தின் நோக்கம்

சமயம், மனிதனை அறநெறிப்பட்டவனாக்குகிறது; அன்புடையவனாக்குகிறது; அமைதிக்கு வழிவகுக்கின்றது; கட்டுப்பாட்டுடன் இருக்கச் செய்கிறது; அனைத்துக்கும் மேலாக மனிதனை மனிதனாக மாற்றுகிறது. தன்னை உணரும்படி செய்து, தன்னிடம் உள்ள அன்பை உலகிற்கு உணர்த்தி உலக உயிர்களைப் பாதுகாக்கின்றது. மேலும், சமயச் சடங்குகள் மூலம் மனிதனின் கலை உணர்வுகளுக்கு வடிவம்



XII Ethics_Lesson 4.indd 57 05-04-2019 10:42:55

கொடுக்கப்படுகின்றது. அவனது ஆன்மிகப் பயணத்திற்கு உந்துதலாக அமைகிறது. மனிதர்களது அறிவுப் பசிக்குத் தத்துவக் கோட்பாடுகள் மூலம் உணவளிப்பது சமயமே ஆகும்.

## இந்திய சமயங்கள்

இந்தியாவில் இந்து, சமணம், பௌத்தம், சீக்கியம் போன்ற சமயங்கள் தோன்றின. மேலும் இஸ்லாம், கிறித்துவம், ஜொராஸ்டிரியம் போன்ற சமயங்கள் இந்தியர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுகின்றன.

நமது பண்பாட்டில் சமயங்கள் செல்வாக்குடன் இன்றளவும் விளங்குகின்றன. இந்தியா, பல சமயங்களின் தாயகமாகும். இவ்வாறு சமய வேற்றுமையில் ஒற்றுமை காண்பதே இந்தியாவின் தனித்த அடையாளமாகும்.

## இந்து சமயம்

இந்தியாவில் தோன்றிய சமயங்களில் முதன்மையானது இந்துசமயமாகும். இஃது, உலகச் சமயங்களுள் தொன்மையான சமயமாகக் கருதப்படுகிறது. பெரும்பாலான இந்துக்கள் இந்தியாவிலும் நேபாளத்திலும் வசிக்கின்றனர். பிற சமயங்களைப்போல் அல்லாது, இந்து சமயத்தைத் தோற்றுவித்தவர் என்று எவருமில்லை. பல்வேறு வகையான நம்பிக்கைகள், சடங்குகள், சமயநூல்கள் என்பனவற்றை உள்வாங்கி உருவான ஒரு சமயமே, இந்து சமயமாகும்.

## இந்து என்னும் சொல்லின் தோற்றம்

கிரேக்கர், அராபியர், பாரசீகர் போன்ற அயல்நாட்டினர், பாரத நாட்டைச் சிந்து ஆற்றின் பெயரால் (ஸிந்து) ஹிந்து என்று அழைத்தனர். அது நாளடைவில் ஹிந்து என்று மாறியது. இது தமிழில் இந்து என்று வழங்கப்படுகிறது. இப்பெயர் இந்திய துணைக்கண்டமாகிய நிலப்பரப்பு மட்டுமின்றி, இங்கு வாழ்கின்ற மக்கள், பண்பாடு போன்றவற்றிற்கும் இவர்களது சமயத்திற்கும் பெயராகி உள்ளது.

## இந்து என்னும் சொல்லின் பொருள்

இந்து அல்லது 'ஹிந்து' என்ற சொல்லை ஹிம்+து எனப் பிரிக்கலாம். ஹிம் – ஹிம்சையில், து–துக்கிப்பவன் எனப் பொருள்படும். ஓர் உயிர் எந்த காரணத்தினாலாவது வருந்துவதாகவே இருந்தால், அத்துயரத்தைத் தனக்கேற்பட்ட துயரமாகக் கருதி, அகற்ற முன் வருபவனே இந்து ஆவான். அப்பண்புமிக்க மக்களைக் கொண்ட சமயமே இந்து சமயமாகும்.

இந்து சமயம், **சனாதன தருமம் என்றும், வேத சமயம், வைதிக சமயம்** போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிறது. '**சனாதன தருமம்**' என்றால் அழிவில்லாத நிலையான அறம் எனப் பொருள். வேதங்களை அடிப்படையாகக் கொண்டு இயங்குவதால் **வேதசமயம்** என்றும், வேதநெறிகளையும் சாத்திரங்களையும் மையமாகக் கொண்டுள்ளதால் **வைதீக சமயம்** எனவும் அழைக்கப்படுகிறது.

## இந்து சமயத்தின் அடிப்படை

இந்து சமயத்தின் அடிப்படைக் கோட்பாடு கடவுளை அடைவதாகும். எல்லாவற்றையும்விட மேலானவராக இருப்பதால், கடவுளைப் பரம்பொருள் என்று இந்து சமயம் கூறுகிறது. கடவுள் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் செய்கிறார். படைக்கும்போது அவர் பிரம்மன் என்றும், காக்கும்போது விஷ்ணு என்றும், அழிக்கும்போது சிவன் என்றும் அறியப்படுகிறார். இந்த வெவ்வேறு மூன்று தொழில்களைச் செய்யும் பரம்பொருளையே மும்மூர்த்திகள் என்று கூறுகின்றனர். ஆன்மா, வினைப்பயன், மறுபிறப்பு, வீடுபேறு போன்றவை இந்துசமயத்தின் அடிப்படை கருத்துகள் ஆகும்.

## ஆன்மா (உயிர்)

ஆன்மா உடலுடன் வாழும்போது ஜீவாத்மா என்றழைக்கப்படுகிறது. அஃது அழிவில்லாதது. **உடலுக்கு அழிவு உண்டு; ஆன்மாவுக்கு அழிவில்லை** என்று இந்துசமயம் குறிப்பிடுகிறது.



XII Ethics_Lesson 4.indd 58 05-04-2019 10:42:55

## கர்மா (வினைபயன்)

பாவம், புண்ணியம் என கர்மா இருவகைப்படும். உயிர்கள் வினைப்பயனின் அடிப்படையில் செயலாற்றுகின்றன. அதனால், அவ்வினைப்பயனின் அடிப்படையிலேயே அவர்களின் வாழ்க்கை நிகழ்வுகள் அமைகின்றன.

## புனர் ஜென்மம் (மறுபிறப்பு)

மறுபிறப்பு உண்டு என்று இந்துசமயம் நம்புகிறது. மேலும் இறப்பு என்பது, பிறப்புக்குச் செல்லும் வழியாகும். அவரவர்கள் செய்த பாவ, புண்ணியத்தின் அடிப்படையில் மறுபிறவி உண்டு என்று நம்பப்படுகிறது. தொடர்ந்து பிறவிச்சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கும், ஆன்மா வீடுபேறு அடையும்போது பிறவிச்சக்கரத்தின் சுழற்சி நிற்கும் என்றும் நம்பப்படுகிறது.

## வீடுபேறு (மோட்சம்)

இந்துசமயத்தின் உறுதிப்பொருள்களில் இறுதியானது வீடுபேறு ஆகும். வினைப்பயனில் பற்றின்றித் தியாக மனப்பான்மையுடன் வாழ்ந்தால் மறுபிறவி எடுக்க வேண்டிய நிலை வராது. இதுவே வீடுபேறு அல்லது மோட்சம் எனப்படுகிறது. உயிர்களின் மறுபிறவியற்ற நிலையை இது குறிப்பிடுகிறது.

இந்து சமயம் மனிதனை இயற்கையிலிருந்து பிரிக்க முடியாத ஒன்றாகக் கருதுகிறது. இந்த உண்மையின் அடிப்படையில், இந்து சமயத்தவர் ஐந்து கடமைகளை வேள்வியாக செய்யக் கடமைப்பட்டுள்ளனர். அவை

## ஐந்து வேள்விகள்– (பஞ்ச யக்ஞம்)

- **தெய்வ வழிபாடு** (தேவ யக்ஞம்) கடவுளை நாள்தோறும் வழிபடுதல் வேண்டும்.
- **வேதம் ஓதுதல்** (பிரம்ம யக்ஞம்) நாள்தோறும் வேதங்களையும், அறநூல்களையும் ஓதுதல் வேண்டும்.
- **முன்னோர் வழிபாடு** (பித்ரு யக்ஞம்) இறந்த மூதாதையர்கள் தெய்வங்களாக உள்ளனர் எனக் கருதி அவர்களை வழிபட வேண்டும்.
- **உயிரினங்கள் வழிபாடு** (பூத யக்ஞம்) செடி, கொடி, மரம், விலங்கு, உள்ளிட்ட அனைத்து உயிரினங்களையும் கடவுளாகக் கருதி அவற்றுக்கு உணவு அளித்துப் பேணவேண்டும்.
- **மனித வழிபாடு** (மனுஷ்ய யக்ஞம்) அறவோரையும், துறவிகளையும் வணங்கி உதவிட வேண்டும்.

## இந்து தர்மம்

இந்து சமயம் ஒவ்வொரு இந்துவுக்கும் தனிமனித கடமைகள் (ஆசிரம தர்மம்), சமூகக் கடமைகள் (வர்ணாஸ்ரம தர்மம்) என இரு கடமைகளை வலியுறுத்துகிறது.

**1. தனிமனித கடமைகள் (ஆசிரம தர்மம்)**

மனித வாழ்க்கையின் படிநிலைகளில் ஒவ்வொரு காலத்திலும் அவன் ஆற்றவேண்டிய கடமைகளைப் பற்றி கூறுகிறது. அவை **1. பிரம்மச்சரியம், 2. கிருகஸ்தம், 3. வனப்பிரஸ்தம், 4. சன்னியாசம்.** இவை படிப்படியாக மனிதன் வாழ்வு முழுமை பெற ஏற்படுத்தப்பட்டவையாகும்.

**2. சமூகக் கடமைகள் (வர்ணாஸ்ரம தர்மம்)**

இந்துசமயம் ஒவ்வொரு மனிதனும் அவன் சார்ந்துள்ள சமூகத்திற்கெனச் சில கடமைகளை ஆற்றவேண்டும் எனக் குறிப்பிடுகிறது. அதன் அடிப்படையில் சமூகம் நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவையாவன

1. பிராமணர், 2. சத்திரியர், 3. வைசியர், 4. சூத்திரர் ஆவார். இவை சமூகத்திற்கான தொழில் கடமைகளேயாகும். இவற்றில் உயர்வு தாழ்வு கிடையாது.

## அறுவகைச் சமயங்கள்

இந்து சமயம் முறையே **சைவம், வைணவம், காணாபத்யம், கௌமாரம்,**



XII Ethics_Lesson 4.indd 59 05-04-2019 10:42:55

**சாக்தம், சௌரம்** என ஆறு பிரிவுகளை உள்ளடக்கியதாகும்.

## சைவம்

சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு வழிபடுகிற சமயம் சைவமாகும். இச்சமயத்தைப் பின்பற்றுவோர் சைவர் என்றழைக்கப்படுகின்றனர். சைவ சமயம் **பதி, பசு, பாசம்** என்னும் மூன்று பொருள்களை அடிப்படையாகக் கூறி, அவை மூன்றும் தொடக்கமும் முடிவுமின்றி அழியாமல் இருப்பவை எனக் கூறுகிறது. இதனால் இச்சமயத்திற்கு "**முப்பொருள் உண்மை**" என்ற வேறுபெயரும் உள்ளது.

1. **பதி**

சைவம், கடவுளைப் பதி என்று கூறுகிறது. பதி என்றால் தலைவன் என்று பொருள். சிவன் உருவமாகவும், அருவமாகவும், அருவுருவமாகவும் உள்ளார் என்று கூறுகிறது.

2. **பசு**

சைவசித்தாந்தம், உயிரைப் "பசு" எனக் குறிப்பிடுகிறது. உயிர்கள் எண்ணற்றவை, நிலைத்திருப்பவை என்ற தத்துவத்தை இது கூறுகிறது.

3. **பாசம்**

ஆணவம், கன்மம், மாயை போன்ற இச்சைகளைக் கடக்கும்போது, உயிர் இறைவனை அடைய இயலும் என்று கூறுகிறது.

## சிவன்

சைவர்கள் சிவனை உருவ நிலையிலும், அருவநிலையிலும் வழிபடுகின்றனர். சிவனுடைய உருவநிலைகளில் நடராசர் வடிவம் குறிப்பிடத்தக்கது. இவ்வடிவத்தில் நடனம் ஆடும் நிலையில் சிவன் காணப்படுகிறார்.

சிவனுடைய அருவ வடிவமாகச் சிவலிங்கம் கருதப்படுகிறது. அது (1) நிலத்திற்குள் உள்ள பகுதி பிரம்ம பாகம் (2) மேலுள்ள ஆவுடை என்னும் விரிந்தபகுதி சிவபாகம் (3)அதன் மேல் உள்ள பகுதி விஷ்ணுபாகம் என்னும் மூன்று பகுதிகளைக் கொண்டது.

## வைணவம்

விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக் கொண்ட சமயம், வைணவமாகும். (வைஷ்ணவம்) இச்சமயத்தைப் பின்பற்றும் மக்கள், வைணவர் எனப்படுகின்றனர். விஷ்ணு பரமாத்மா (பேருயிர்), நாராயணன், திருமால், கிருஷ்ணன் போன்ற பல்வேறு பெயர்களால் போற்றப்படுகிறார்.

## விஷ்ணு உருவம்

விஷ்ணுவின் உருவ அமைப்பு, நான்கு கைகளைக் கொண்டது. கைகளில் சங்குச் சக்கரம், கதாயுதம், தாமரை ஆகியன காணப்படும். இவை முறையே, வானம், காற்று, தீ, நீர் ஆகிய தத்துவங்களை உணர்த்துகிறது. அவதாரம் என்பது, கடவுள் தன்னிலையிலிருந்து உயிரினங்களின் பிறப்பாகக் கீழிறங்குதலாகும்.

## விஷ்ணுவின் பத்து அவதாரங்கள்

- மச்ச அவதாரம் (மீன்)
- கூர்ம அவதாரம் (ஆமை)
- வராக அவதாரம் (பன்றி)
- நரசிம்ம அவதாரம் (சிங்கத்தலை + மனித உடல்)
- வாமன அவதாரம் (குள்ள மனித வடிவம்)
- பரசுராம அவதாரம் (மனித உருவம்)
- பலராம அவதாரம் (மனித உருவம்)
- ராம அவதாரம் (மனித உருவம்)
- கிருஷ்ண அவதாரம் (மனித உருவம்)
- கல்கி அவதாரம் (மனித உருவம்)

இவ்அவதாரங்கள் அறிவியல் முறைப்படி உயிரினங்களில் பரிணாம வளர்ச்சியை விளக்குகின்றன எனலாம்.

விஷ்ணுவின் வாகனம் கருடன் ஆகும். இது, வேதங்களின் அடையாளமாகக் கருதப்படுகிறது. கருடன் **பெரிய திருவடி**



XII Ethics_Lesson 4.indd 60 05-04-2019 10:42:55

என்றும் அனுமன் **சிறிய திருவடி** என்றும் வைணவர்களால் அழைக்கப்படுகிறது.

## வைணவப் பிரிவுகள்

வைணவ சமயத்தில் **வடகலை, தென்கலை** என்னும் இரண்டு பிரிவுகள் உள்ளன. வைணவக் கொள்கைகளை இராமானுஜர் நெறிபடுத்தி விளக்கியுள்ளார். அவருக்கு பின்வந்தவர்களிடையே கொள்கைகளை விளக்குவதில் கருத்து வேறுபாடு எழுந்தது. இவ்வேறுபாடு வடகலை, தென்கலை என்ற இரு பிரிவினர் தோன்றக் காரணமானது.

வடகலைப் பிரிவினர் வேதாந்ததேசிகரின் கொள்கைகளையும், தென்கலைப் பிரிவினர் மணவாள மாமுனிகளின் கொள்கைகளையும் பின்பற்றுகின்றனர்.

| | **வடகலை (காஞ்சிபுரம்)** | **தென்கலை (ஸ்ரீரங்கம்)** |
|---|---|---|
| 1 | திருமண் அணியும்போது பாதமின்றி அணிவர். | திருமண் அணியும்போது பாதமிட்டு அணிவர். |
| 2 | வேதங்களே முதன்மையானது என்பர். | நம்மாழ்வாரின் பாடல்களே முதன்மையானது என்பர். |
| 3 | வேள்விகளுக்கு முக்கியத்துவம் அளிப்பர். | வேள்விகள் இன்றியமையாதது அன்று என்பர். |

## 3. காணாபத்யம்

இது கணபதியை முழுமுதற் கடவுளாக வழிபடும் சமயமாகும். இச்சமயத்தைப் பின்பற்றும் மக்கள் **காணாபத்யர்கள்** என்று அழைக்கப்படுகின்றனர். கணபதி எல்லாத் தெய்வங்களுக்கும் முதன்மையானவராகக் கருதப்படுகிறார். பக்தர்கள், பிள்ளையாரைப் போற்றிப் பாடிய பின்னரே, ஏனைய தெய்வங்களை வழிபடும் மரபு உள்ளது. இவர் மூஷிகத்தை வாகனமாகக் கொண்டுள்ளார்.

## கௌமாரம்

முருகனை முழுமுதற்கடவுளாக வழிபடுகின்ற சமயம் கௌமாரம். இச்சமயத்தினர் கௌமாரர், ஸ்கந்தர் என அழைக்கப்படுகின்றனர். முருகன் எனத் தமிழகத்தில் வணங்கப்படும் குமரன், மயிலை வாகனமாகவும், சேவலைக் கொடியாகவும் உடையவர். முருகன் தமிழ்க்கடவுளாகவும் கருதப்படுகிறார். சங்க இலக்கியங்கள் முருகனைச் **சேயோன்** என்று குறிப்பிடுகின்றன. குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடமாக நம்பப்படுகிறது. உலகில் எங்கெல்லாம் தமிழர்கள் வசிக்கிறார்களோ, அங்கெல்லாம் முருகக்கடவுளுக்குக் கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. மலேசியாவில் உள்ள பத்துமலை முருகன் சிற்பம் சிறப்பு மிக்கது.



பத்துமலை முருகன்

## சாக்தம்

சக்தி என்ற பெண் தெய்வத்தை முழுமுதற் கடவுளாக வழிபடுகிற சமயம் சாக்தமாகும். இச்சமய மக்கள் சாக்தர் என்று அழைக்கப்படுகின்றனர். சக்தி, பண்புகளுக்கு ஏற்பப் பல்வேறு வடிவங்களில் காட்சியளிக்கிறார். இவர் சிங்கத்தின் மீது வீற்றிருக்கிறார். சினங்கொண்ட உருவத்துடன் விளங்கும் சக்தியை வழிபடுவதே காளி வழிபாடாகும். இக்காளியைப்(கொற்றவை)



XII Ethics_Lesson 4.indd 61 05-04-2019 10:42:56

பாலைநிலக் கடவுளாகச் சங்ககால மக்கள் வழிபட்டனர். சக்தி, கிராமங்களில் மக்கள் மனப்பான்மைக்கு ஏற்ப கிராம தேவதையாக வழிபடப்படுகிறார்.

### மரபு தெய்வங்கள்

கிராமங்களில் மக்களின் வாழ்க்கை முறைக்கு ஏற்ப பல்வேறு தெய்வங்களை வழிபடுகின்றனர். அவை மரபு தெய்வங்கள், சிறுதெய்வங்கள் என்றும் நாட்டார் தெய்வங்கள் என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றன.

இந்தச் சிறுதெய்வ வழிபாட்டில் கிராம தெய்வங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவை ஊருக்கு ஊர் வேறுபட்டு காணப்படுகின்றன. இதில் ஆண், பெண் தெய்வங்கள் இணையான மதிப்புகொண்டவை. பெரிய கோயில்களில் இல்லாது மரத்தடி, திறந்தவெளிகள் போன்ற இடங்களில் எளிமையாகவே காணப்படுகின்றன.

தன்னுடைய ஊரை, கால்நடைகளை, கண்மாய் நீரை, பெண்களை, அறுவடைப் பயிரை காக்கும்போதும், போரில் இறந்த ஆண்களையும், ஊருக்காகவும், குடும்பத்திற்காகவும், கணவனோடு உயிர்நீத்த பெண்களையும் கிராமப்புற மக்கள் தெய்வங்களாக வழிபட்டு வருகின்றனர்.

ஐயனார், முனீஸ்வரர், சுடலைமாடன், கருப்பசாமி, காத்தவராயன், மதுரைவீரன் போன்ற ஆண் தெய்வங்களும், முத்தாலம்மன், பெரியநாச்சி, இசக்கியம்மன், மாரியம்மன், காளியம்மன் போன்ற பெண் தெய்வங்களும் வணங்கப்படுகின்றன. மக்கள் உருவமில்லாத இயற்கை சக்திகள் போன்றவற்றையும் தெய்வமாக வழிபடுகின்றனர்.

### சௌரம்

சௌரம் என்பது, சூரியனை முழுமுதற்கடவுளாக வழிபடுகிற சமயமாகும். இதனைப் பின்பற்றுவோர் சௌரர் என்றழைக்கப்படுவர். சூரியன் ஏழு குதிரைகள் பூட்டப்பட்ட தேரில் அமர்ந்திருப்பார். சூரியனுக்கு நன்றிகூறும் விதமாகவே நாம் பொங்கல் பண்டிகையைக் கொண்டாடுகிறோம்.

### இந்து சமய இலக்கியங்கள்

ஒவ்வொரு சமயத்திற்கும் முக்கியமான சமய நூல்கள் உள்ளன. இந்து சமயத்திற்கும் வேதம், ஆகமம், தோத்திரம், சாத்திரம், இதிகாசம், புராணம் எனப் பல நூல்கள் உள்ளன.

### வேதங்கள்

வேதம் என்ற சொல்லுக்கு அறிவுக் களஞ்சியம் என்று பொருள். வேதங்கள் நான்கு அவை, ரிக், யஜுர், சாம, அதர்வண வேதம் என்பனவாகும். ரிக் பழைமையான வேதமாகும். "**மந்திரங்களின் அரசி**" எனப் போற்றப்படும் காயத்ரி மந்திரம் ரிக் வேதத்தில் இடம்பெற்றுள்ளது. வேதங்களின் தொகுப்பு சம்கிதைகள் ஆகும். பிராமணங்கள் என்பவை யாகங்களில் செய்யவேண்டிய சடங்குகள் பற்றிக் கூறும் நூலாகும்.

### உபநிடதங்கள் (உபநிஷத்)

உபநிஷத் என்ற சொல் குருவின் அருகில் சீடன் அமர்ந்து அவரின் உபதேசம் கேட்டறிதலைக் குறிப்பிடுகிறது. இவை பண்டைய இந்திய தத்துவ இலக்கியமாகும். வேதங்களில் இவையே இறுதியானவை. எனவே வேதாந்தம் என்றும் கூறப்படுகிறது.

அழிவில்லாத மெய்ப்பொருள் ஒன்று உண்டென்றால் அதன் சுபாவம் என்ன? அதுதான் கடவுளா? இவ்வுலகம் எப்படி தோன்றியது? போன்ற கேள்விகளை உபநிடதம் எழுப்புகிறது.

எதையும் ஒரே முடிந்த முடிவாகச் சொல்லிவிடாமல், கேள்விகளை எழுப்புவதும்

மாற்றுத்தத்துவங்களை வெளிக்கொணர்வதும் உபநிடதத்தின் தனிச்சிறப்பாகும்.

> மனிதன் தோன்றிய காலம் முதலே சமயம் தோன்றியது எனலாம். சமயமே மனிதனின் வாழ்க்கை. சமயத்தின் மூலமாகத்தான் மனிதன் தன் ஆன்மாவின் உண்மை நிலையையும் வாழ்க்கையின் பயனையும், மனத்தின் ஆனந்தத்தையும், முழுமையான அமைதியையும், நிலைத்த தன்மையையும் பெறமுடியும்.
>
> – தைத்திரிய உபநிடதம்

## ஆகமங்கள்

சமய வழிபாட்டு முறைகளே ஆகமங்கள் எனப்படும். இவை மனத்தை ஒருமுகப்படுத்திக் கடவுளை அடைய வழிகாட்டுகின்றன. சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சாதனங்களால் இறைநிலையை அடையலாம் என ஆகமங்கள் உரைக்கின்றன. சைவ ஆகமங்களைப் பின்பற்றிச் **சிவாச்சாரியார்கள் சைவக் கோவில்களில்** அர்ச்சகர்களாகவும், **பாஞ்சராத்ர** ஆகமங்களைப் பின்பற்றி வைணவக் கோவில்களில் **'நம்பி'** (பட்டாச்சாரியார்) எனப்படும், சாத்தரத ஸ்ரீவைஷ்ணவர்கள் அர்ச்சகர்களாகவும் பணியாற்றுகின்றனர்.

> ### சைவ ஆகமங்கள்
>
> சிவ வழிபாட்டின் முக்கியத்துவம், சிவாலயம் அமைக்கும் விதம், பூசை முறைகள், சிவாச்சாரியார்களைத் தேர்ந்தெடுக்கும் முறை போன்றவற்றை விளக்கும் சைவ நெறிகளே சைவ ஆகமங்களாகும். இவ்வாகமங்கள் இரண்டு பெரும்பிரிவுகளாகவும், 28 உட்பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.

## திருமுறைகள்

தமிழில் திருமுறை என்பதற்குத் தம்மை அடைந்தவர்களைச் சிவமேயாக்குகின்ற முறையென பொருள் கூறுவர். **சைவத்திருமுறைகள்** பன்னிரண்டாகும். இவற்றைத் தொகுத்தவர் **நம்பியாண்டார் நம்பி** ஆவார். ஒன்று முதல் ஏழு வரையிலான திருமுறைகள் தேவாரம் எனப்படும். அவற்றை முறையே திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய **சைவமூவர்** அருளினர்.

எட்டாம் திருமுறையான **திருவாசகத்தை மாணிக்கவாசகரும்**, ஒன்பது, நாயன்மார்கள் எழுதிய ஒன்பதாம் திருமுறையும், பத்தாவது திருமுறையான **திருமந்திரத்தைத் திருமூலரும்** இயற்றினர். காரைக்காலம்மையார் உட்பட பன்னிருவர் வழங்கியவை பதினோராம் திருமுறையாகும். சேக்கிழார் அருளியது, **பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணமாகும்.** இது பன்னிரண்டாம் திருமுறை என்றழைக்கப்படுகிறது; அக்கால நாயன்மார்களின் வரலாற்றைக் கூறுகிறது.

## நாலாயிரத்திவ்யபிரபந்தம்



நாதமுனிகள்

வைணவ சமயத்தில், விஷ்ணுவைத் தமிழ்ப் பாமாலைகளால் வழிபட்ட பன்னிரு ஆழ்வார்கள் அருளியவை, **நாலாயிரத் திவ்யபிரபந்தமாகும்.** பன்னிருவரில் பெண் ஆழ்வார் ஆண்டாள் ஒருவரே. இவர் **"சூடிக்கொடுத்த சுடர்க்கொடியாள்"** என்றும் புகழப்படுகிறார். நாலாயிரத்திவ்ய பிரபந்தத்தைத் தொகுத்தவர் **நாதமுனிகள்** ஆவார்.

## சைவ சித்தாந்த சாத்திரங்கள்

சைவ சித்தாந்த சாத்திரங்கள் 14 ஆகும். இவற்றை **மெய்கண்ட சாத்திரங்கள்** என்பர். இவற்றில் தலை சிறந்தது சிவஞான போதமாகும். இந்நூலை இயற்றியவர் மெய்கண்ட தேவராவார். இதில் சைவ சித்தாந்த மெய்யியல் கருத்துகளைக் காணலாம்.



XII Ethics_Lesson 4.indd 63 05-04-2019 10:42:56

www.tntextbook.org

## வேதாந்த நெறிகள்



ஆதிசங்கரர்

வேதாந்த நெறிகள் முறையே **அத்வைதம், விசிஷ்டாத்வைதம், துவைதம்** என்பவனவாகும்.

### 1. அத்வைதம்

அத்வைத கோட்பாட்டை உலகிற்களித்தவர் **ஆதிசங்கரர்** ஆவார். இவர் கேரளாவில் உள்ள காலடி என்னும் ஊரில் பிறந்தார். சங்கரர் பௌத்த சமண சமயங்களின் எழுச்சியால் குன்றிப் போயிருந்த இந்து சமயத்திற்குச் சங்கரர் புத்துயிர் ஊட்டினார். இவர் இந்தியா முழுவதும் பயணம் செய்து **சிருங்கேரி, பூரி, துவாரகை, ஜோஷி** போன்ற இடங்களில் அத்வைத மடங்களை நிறுவி இந்து சமயத்திற்கு அரும் தொண்டாற்றினார்.

அத்வைதம் என்பது இரண்டு அல்ல ஒன்றே என்பதாகும். (அ-இல்லை, துவைதம்- இரண்டு) பிரம்மமும் ஆன்மாவும் இரண்டல்ல, அவை ஒன்றேயாகும் எனப் பொருள்படும்.

பிரம்மம் ஒன்றைத் தவிர, காணப்படுகின்ற அனைத்தும் வெறும் மாயத்தோற்றங்களே. ஜீவாத்மா, தான் பிரம்மம் என்பதை உணர்ந்து பற்றற்ற செயல் புரிவதன் மூலம் பிரம்மமாக மாறமுடியும் என்பதே அத்வைதமாகும். ஞான மார்க்கத்தின்வழி பிரம்மத்தை அறிய விழைதலே அத்வைதம் எனச் சங்கரர் வலியுறுத்துகிறார்.

### 2. விசிஷ்டாத்வைதம்

விசிஷ்டாத்வைதக் கருத்தைக் கூறியவர் **இராமானுஜர்** ஆவார். இவர் திருவரங்கத்தின் தலைமை ஆச்சாரியராகப் பொறுப்பேற்றார். இந்தியா முழுவதும் வைணவத்தைப் பரப்புவதில் தீவிரமாக ஈடுபட்டார். இந்துக்களிடம் நிலவிய சாதி வேற்றுமையைக் களைய முற்பட்டார். பிரம்மம் ஒருவரே அவர் சத்து என்றும், பிரம்மம் என்றும் ஈஸ்வரன் என்றும் விஷ்ணு என்றும் பெயர் பெருகிறார். அவர் சித்து என்னும் ஆத்மாவுடனும், அசித்து எனப்படும் சடத்தோடும் எப்போதும் சேர்ந்திருக்கிறார். பரமாத்மாவே நிலையானவர். சுதந்திரம் உடையவர். சித்தும், அசித்தும் அவரை சார்ந்திருப்பவை. ஆசாரிய அன்பு, ஸ்ருதி, ஸ்மிருதி – நம்பிக்கை, மோட்ச விருப்பம், உலக ஆசை அறுத்தல், தர்மசிந்தனை, வேதபாராயணம், சாது, சங்கமச்சேர்க்கை முதலானவற்றால் கர்ம பந்தத்தைவிட்டு முக்தி பெறலாம். சத் என்னும் உயிர், அசித் என்னும் உடலுடன் இணைவதால் பரமாத்மா ஒன்றாகவே காணப்படுகிறது. **பரமாத்மா, ஜீவாத்மா, உலகம் இம்மூன்றிற்கும் பிரிக்க இயலாத ஒரு பந்தம் இருக்கிறது என்று இராமானுஜர் கூறினார்.**

### 3. துவைதம்

இந்நெறியைப் பரப்பியவர் **மத்துவர்** ஆவார். இவருடைய தத்துவக் கோட்பாடு துவைதமாகும். துவி என்றால் இரண்டு என்று பொருள்படும். அதாவது பிரபஞ்சமும், பரமாத்மாவும் வேறானவை. பரமாத்மா தனி, மற்றவை அதில் சேராதவை என்பதாம். பரமாத்மா, ஜீவாத்மா, ஜடவுலகம் – இவை எவராலும் உண்டாக்கப்படாத நித்தியப் பொருளாகும். உலகம் ஒரு தோற்றம் அன்று. சுதந்திரம் இறைவனுக்கு மட்டும் உண்டு. கருமத்தை நீக்கினால் வீடுபேற்றை அடையலாம்.

## கீதை உணர்த்தும் நான்கு மார்க்கங்கள்

இந்து மதத்தில் ஆன்மிகவழிகள் சாதனம் என்றழைக்கப்படுகின்றன. இறைவனை அடையும் வழியே மார்க்கமாகும். அவற்றுக்குப் பல்வேறு வகையான சாதனங்கள் உதவுகின்றன. பகவத்கீதை இறைவனை அடைய நான்கு மார்க்கங்களைக் காட்டுகிறது. அவையாவன

**1) ஞான மார்க்கம், 2) இராஜ மார்க்கம் 3) கர்ம மார்க்கம் 4) பக்தி மார்க்கம் என்பனவாகும்.**

### 1. ஞானமார்க்கம்

அறிவுக்கூர்மையுடையவர்கள் நல்லதையும், கேட்டதையும் அறிந்து என்றும் நிலைத்திருப்பதையும், விரைவில் அழிந்து விடுவதையும் சிந்தித்து உணரும் ஆற்றல் உடையவர்கள். இவ்வறிவின் துணைகொண்டு



XII Ethics_Lesson 4.indd 64 05-04-2019 10:42:57

சத்தியத்தையும் முழுமையான பரம்பொருளையும் தேடும் வழியே 'ஞானமார்க்கம்' எனப்படும். நல்லறிவுக்கு வழிகாட்டுவன முறையே வேதாந்தங்கள், உபநிடதங்கள், பகவத்கீதை ஆகியனவும், இரமணமகரிஷி, அரவிந்தர், தாயுமானவர் மற்றும் திருமூலர் போன்ற ஆன்றோர்களின் உபதேசங்களாகும்.

*2.* **இராஜ மார்க்கம்**

மனிதன் சுய உணர்வுடன் உடம்பு, மூச்சு, மனம், இவற்றைக் கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்தித்தனக்குள்ளேஒளிந்துகிடக்கும் சக்திகளைத் தூண்டி வெளிப்படுத்துவது இராஜ மார்க்கம் எனப்படும். "ஓம்" என்னும் பிரணவம் இங்கு வழிபடப்படுகிறது.

*3.* **கர்ம மார்க்கம்**

வாழ்க்கையில் மனிதன் செய்கின்ற ஒவ்வொரு செயலிலும் இரண்டு விதமான பயன்கள் இருக்க வேண்டும்.

- அச்செயல் அவனுடைய தெய்வ பக்தியை வளர்க்க வேண்டும்.
- அச்செயலினால் சமுதாயத்திற்கு பயன் கிடைக்க வேண்டும்.

சமுதாயத்தின் அங்கத்தினராகிய ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை முறையாகவும், திறமையாகவும் ஆற்றுவதே கர்ம மார்க்கம் ஆகும்.

*4.* **பக்தி மார்க்கம்**

கடவுள்மீது பக்தி கொண்ட மனிதன் அகந்தையை ஒழித்து, சிறுமையை தவிர்த்து, தியாகம் அன்பு, வாயிலாக உயரிய நிலையை அடைவதே பக்தி **மார்க்கமாகும்.**

"நீ எதுவாக விரும்புகிறாயோ அதுவாகவே மாறிவிடுகிறாய்" எனக் கீதை குறிப்பிடுகிறது. நற்குணங்களைக் கொண்ட பரம்பொருளை வணங்கும்போது நாமும் நற்குணங்களை கொண்டவராகவே மாறிவிடுகிறோம்.

**பகவத் கீதை**

இது, மாபெரும் இதிகாசமான மகாபாரதத்தின் ஒரு பகுதியாகும். பகவத் கீதை என்பதற்குக் கடவுளின் பாடல் என்று பொருள். இஃது எழுநூறு ஸ்லோகங்கள் பதினெட்டு அத்தியாயங்களாலானது.

மகாபாரதத்தில் குருஷேத்ரப் போர் தொடங்கும் முன் எதிரணியை பார்வையிட்ட அர்ஜுனன் அங்கே அவனது உறவினர்கள், நண்பர்கள், குரு போன்றோர் இருப்பதால் போரிட மறுத்தார். இதைக்கண்ட அவரது தேரோட்டியாக வந்த பகவான் ஸ்ரீகிருஷ்ணர், தருமத்திற்காகப் போரிடும்போது உறவுமுறைகள் குறுக்கிடக்கூடாது போன்ற அறிவுரைகளை வழங்கினார்.

கீதை அர்ஜுனனுக்கு மட்டும் கூறப்பட்டதன்று; மனிதர்கள் அனைவருக்குமானது என இந்து சமயம் நம்புகிறது. ஏனெனில், **இது கடவுளால் மனிதனுக்கு வழங்கப்பட்டதாக நம்பப்படுகிறது .**

## இந்துசமய விழாக்கள்

இறைவனது பரிபூரண அருள் பக்தனுக்குக் கிடைக்கும் என்பதை நினைவூட்ட, விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. இவ்விழாக்கள் மக்கள் மனத்தில் அன்பு, இரக்கம், ஈகை, மனிதநேயம் முதலான நற்பண்புகளை வளர்த்து ஆன்மீக அறிவைப் பெருக்கி, வளமான வாழ்க்கை வாழ உதவுகின்றன. இந்துக்கள் கொண்டாடக்கூடிய விழாக்களில் விநாயகர் சதுர்த்தி, நவராத்திரி, தீபாவளி, கந்த சஷ்டி, திருகார்த்திகை, சிவராத்திரி, மாசிமகம், பங்குனி உத்திரம், சித்திராபௌர்ணமி, வைகாசி விசாகம், ஆனி திருமஞ்சனம், ஆடிபூரம், பிரதோஷம் போன்ற விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர்.



XII Ethics_Lesson 4.indd 65 05-04-2019 10:42:57


## இந்து சமயத்தின் பெருமைகள்

- இந்துசமயம் காலத்தால் மிகவும் தொன்மையானது. அஃது உலகெங்கும் பரவி இருந்ததை நவீன கால ஆய்வுகள் மூலம் அறியமுடிகிறது.
- இந்துசமயத்தில் இடம்பெற்றுள்ள முக்கியகருத்துகள் பிற சமயங்களிலும் இடம்பெற்றுள்ளன.
- இந்துசமயம் பிற சமயங்களை இழிவுபடுத்தாமல், அவற்றின் கோட்பாடுகளை மதித்து அரவணைத்துச் செல்கிறது.
- இந்து சமயத்தின் மீது பல்வேறு தாக்குதல் நிகழ்ந்தபோதும் அது தாழாமல் உயர்ந்து திகழ்கிறது.
- இந்து சமயம் வெறும் நம்பிக்கை உணர்வோடு நின்றுவிடாமல் நம்பிக்கைகளுக்கான அறிவியல் காரணங்களையும் தன்னகத்தே கொண்டது.
- மனித உணர்வுகளைக் கட்டுப்பாட்டுக்குள் உட்படுத்தாது சுதந்திரமாக வாழும் உரிமையை வழங்குகிறது. நமது சமூகங்களில் கட்டுப்பாடு நிலவினாலும் சமயத்தில் அளப்பரிய சுதந்திரம் வழங்கப்படுகிறது.
- இல்லறத்தில் இருப்பினும் துறவறத்தில் இருப்பினும் நல்வாழ்வின் வாயிலாக வீடுபேறு அடையலாம் எனக்கூறுகிறது.
- மக்கள் செய்த நல்வினை தீவினைகளுக்கு ஏற்ப மறுபிறவி உண்டெனக் கூறி, மக்களின் வாழ்வை நெறிப்படுத்தித் துன்பமற்ற வாழ்க்கைக்கு வழிசெய்கிறது.

## இந்தியப்பண்பாட்டிற்கு இந்து சமயத்தின் கொடை

- இந்து சமயத்தில் காணப்படும் இல்லறம், மனிதாபிமான உணர்வு, சகிப்புத்தன்மை, உயர்ந்த ஆன்மிகக் கோட்பாடுகள் போன்றவை இந்தியப் பண்பாட்டின் அடையாளமாகத் திகழ்கின்றன.
- இந்து சமய இலக்கியங்களான வேதங்கள், உபநிடதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் போன்றவை இந்தியாவிற்கு மட்டுமல்ல உலகிற்கே வழங்கப்பட்ட கொடைகளாகும்.
- யோகா என்னும் அற்புதமான அறிவியல் உண்மையை, மிகப்பெரிய கொடையாக இந்து சமயம் உலகிற்கு அளித்துள்ளது.
- கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, இசைக்கலை இவற்றில் மனிதனின் ஆன்மிக உணர்வுகள் பொதிந்து கிடக்கின்றன என்பதை உலகிற்குக் காட்டிய சமயம், இந்து சமயமேயாகும்.
- உருவ வழிபாட்டுமுறை, வீடுபேறு அடைவதற்கான அறநெறி கோட்பாடுகள் அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சைவ, சித்தாந்த நெறிகள் போன்ற தத்துவக்கோட்பாடுகளையும் இந்தியப் பண்பாட்டிற்கு அளித்திருப்பது இந்து சமயம்தான் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

## சமணம்


மகாவீரர்

இந்தியாவின் பழம்பெரும் சமயங்களுள் சமண சமயமும் ஒன்றாகும். இந்திய மக்களால் இச்சமயம் பின்பற்றப்படுகிறது. இருபத்திநான்கு தீர்த்தங்கரர்களின் போதனைத் தொகுப்பே 'சமணமாகும்'. **சமணமதம், ஜைன மதம், அருக மதம், பிண்டி மதம், நிகண்ட மதம்** என்று பல பெயர்களால் அழைக்கப்படுகிறது. ஜீனரின் வழி செல்பவர்கள் ஜைனர் – சமணர் எனப்பட்டனர். ஜீன் என்பது ஜீத் என்ற பகுதியின் அடியாகப் பிறந்தது. ஜீத் என்பதற்கு ஜெயித்தல், வெற்றிபெறுதல் என்று பொருள். ஜீனர் என்றால் புலன்களை வெற்றி கண்டவர். அதாவது, தனது மனத்தையும், பொறிகளையும் அடக்கி வெற்றி கண்டவர் என்பது பொருளாகும். அத்தகைய ஜீனர்களைக் கொண்ட சமயமே சமண சமயமாகும்.



XII Ethics_Lesson 4.indd 66 05-04-2019 10:42:57

### சமண சமயப்பிரிவுகள்

சமணசமயத்தில் **திகம்பரர்,சுவேதம்பரர்** என்ற இருபெரும் பிரிவுகள் உள்ளன.

**திகம்பரர்** – திக் + அம்பரர் – திக் என்றால் திசை, அம்பரம் என்றால் ஆடை = திசைகளையே ஆடைகளாக அணிபவர்கள் எனப்பொருள்படும். (ஆடையே அணியாதவர்கள்)

**சுவேதம்பரர்** – ஸ்வேதம் + அம்பரம் ( சுவேதம் – வெள்ளை, அம்பரம் – ஆடை) வெண்ணிற ஆடை அணிபவர்கள் என பொருள்படும்.

### தீர்த்தங்கரர்கள்

இச்சொல்லிற்குப் (தீர்த்தங்கரர்) **பிறவிப் பெருங்கடலைக் கடந்த ஞானி** என்று பொருள். தெய்வத் தன்மையும் மெய்யுணர்வும் பெற்ற தீர்த்தங்கரர்கள் மக்கள் மனத்தில் உள்ள அறியாமை பற்றிய அஞ்ஞானமாகிய இருளை அகற்றி, ஆன்ம ஒளி வீசிக் கரையேற்றுபவர்கள் ஆவர். சமண சமயத்தில் 24 தீர்த்தங்கரர்கள் தோன்றியதாகக் குறிப்பிடுவர். முதலாவது தீர்த்தங்கரர் **ரிஷபர்** என்பவராவார். 23 ஆவது தீர்த்தங்கரரான **பார்சவநாதர்** பற்றியும் 24 ஆவது தீர்த்தங்கரரான **வர்த்தமானர்** என்ற **மகாவீரர்** பற்றியும் அறியமுடிகிறது. வர்த்தமான மகாவீரரே சமய சமண சமயத்திற்குப் புத்துயிர் அளித்து அதைச் செம்மைபடுத்திச் சீரிய அமைப்புடையதாக்கினார்.

| | தீர்த்தங்கரர் | இயக்கியவர்கள்(மூல பெண் தெய்வங்கள்) | சின்னம் |
|---|---|---|---|
| 1. | ஆதிநாதர்(ரிஷபர்) | சக்கரேஸ்வரி | காளை |
| 2. | அஜிதநாதர் | ஆஜிதபலா | யானை |
| 3. | சம்பவனநாதர் | துரிதாரி | குதிரை |
| 4. | அபிநந்தநாதர் | காளி(வச்சர சாருங்கலா) | குரங்கு |
| 5. | சுமதிநாதர் | முகாகாளி | சிகப்பு வாத்து |
| 6. | பத்ம பிரபர் | சியாமா | தாமரை மலர் |
| 7. | சுபார்க்கவநாதர் | சாந்தி | ஸ்வஸ்திகா |
| 8. | சந்திரபிரபா | ப்ருகுடி(ஜீவாலா மாலினி) | சந்திரன் |
| 9. | புஷ்பதந்தர் | சதாரி | முதலை |
| 10. | சிதலநாதர் | மானவி (கந்தர்ப்ப) | கற்பகமரம் |
| 11. | ஸ்ரேயாம்சின்நாதர் | கௌரி | காண்டாமிருகம் |
| 12. | வசுபூஜ்யர் | கருடயக்கி | பெண் எருமை |
| 13. | விமலநாதர் | வைரோதி | பன்றி |
| 14. | அனந்தநாதர் | அனந்தமதி | முள்ளம்பன்றி |
| 15. | தர்மநாதர் | மானவி | வஜ்ராயுதம் |
| 16. | சாந்திநாதர் | முகாமானிசி | மான் |
| 17. | குந்துநாதர் | விஜயா | ஆடு |
| 18. | அறநாதர் | விஜயாதேவி | மீன் |
| 19. | மல்லிநாதர் | ஆபராஜிதா | கலசம் |
| 20. | மனிசுவிரதர் | பகுரூபினி(காரதத்தா) | ஆமை |
| 21. | நமிநாதர் | சாமுண்டி(கந்தாரி) | நீலத்தாமரை |
| 22. | நேமிநாதர் | அம்பிகா(குஸ்மாண்தினி) | சங்கு |
| 23. | பார்சவநாதர் | பத்மாவதி | பாம்பு |
| 24. | வர்த்தமான மகாவீரர் | சித்தாக்கியா | சிங்கம் |

### வர்த்தமான மகாவீரர்

இவரது இயற்பெயர் வர்த்தமானர். இவரே சமண சமயத்தின் **கடைசி தீர்த்தங்கரர்** ஆவார். தேடலின் விளைவாய்ச் சுகங்களைத் துறந்து, துறவறம் மேற்கொண்டார். பன்னிரண்டு ஆண்டுகள் கடந்து **ரிஜுபாலிகா**



XII Ethics_Lesson 4.indd 67 05-04-2019 10:42:57

என்னும் இடத்தில் **சால்** மரத்தினடியில் கைவல்யா எனப்படும் உயரிய **ஆன்மீக ஞானத்தை** அடைந்தார். அதன் பிறகு மகாவீரர் என அழைக்கப்பட்டார். கங்கைச் சமவெளியில் குறிப்பாக மகதம், கோசலம் போன்ற பகுதிகளில் சமண சமய கருத்துகளைப் பரப்பினார்.

## சமணக் கோட்பாடுகள்

வினைப் பயனிலிருந்து விடுதலை பெற்று, நற்கதி அடைவதே சமணத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சமயம் கடவுள் கொள்கை அவசியமில்லை என்று கருதுகிறது. வீடுபேறு அடைய மூன்று மணிகளைக் கடைபிடிக்க வேண்டும் என்று கூறுகிறது.

## மும்மணிகள் (திரி ரத்தினங்கள்)

1. **நன்னம்பிக்கை** – வீடுபேற்றினை அடைய மகாவீரர் போதித்த தத்துவங்களில் முழுமையான நம்பிக்கை கொள்ள வேண்டும். இதுவே நல்ல நம்பிக்கை (**சம்யக் தரிசனம்**) என்பர்.

2. **நல்லறிவு** – இந்த உலகத்தை யாரும் படைக்கவில்லை. இது இயற்கையாகத் தோன்றியது என்ற முழுமையான அறிவு பெற வேண்டும். அது நல்லறிவு (**சம்யக் ஞானம்**) எனக் கூறப்படுகிறது.

3. **நற்செயல்** – கொல்லாமை, பொய் பேசாமை, திருடாமை, சொத்து சேர்க்காமை, கற்புடைமை ஆகிய ஐந்து நற்செயல்களையும் பின்பற்றவேண்டும். இவை (**சம்யக் சரித்திரம்**) எனப்படுகிறது.

## சமண சமயத்தில் ஐந்து பெரும் நோன்புகள் (அல்லது) பஞ்ச மஹாவிரதம்

### அகிம்சை

1. தீங்கிழைக்காமை – அகிம்சை (Ahimsa)
2. உண்மைபேசுதல் – வாய்மை (Satya)
3. திருடாமை – பிறர் பொருளைக் கவராமை (Asteya)
4. சொத்துகள் சேர்த்தலை விடுதல் – பற்றுகளிலிருந்து விடுபடல் (Abarigraha)
5. தன்னடக்கம் – பிரம்மச்சரியம் (Brahamacharya)

## சமணக் கொள்கைகள்

சமணசமயத்தின் மிக உயர்ந்த கொள்கை **"சியாத்வாதம்"** அல்லது **அநேகாந்தவாதமாகும்.** ஒரே பொருள் பல இயல்புகள் பொருந்தியதாய் இருப்பதே அநேகாந்தம். ஒரே பொருள் பல்வேறு கோணங்களில் பார்க்கும்போது அநேக இயல்புகள் உள்ளதாகக் காணப்படுகிறது. எப்பொருளைக் குறித்தும் திட்டவட்டமான முடிவான கருத்தினை வெளியிட முடியாது என்பதே இதன் விளக்கமாகும்.

எடுத்துக்காட்டாக, இராமன் என்பவன் ஒருவனுக்கு மகன் என்றால் இன்னொருவனுக்கு தந்தையாகவும், மூன்றாமவனுக்கு அண்ணன் அல்லது தம்பியாகவும், நான்காமவனுக்கு மாமானாகவும் இருக்கலாம். மேலும் ஒருவன் மற்றவனுக்கு நண்பனையும் வேறு ஒருவனுக்கு பகைவனாயும் காட்சியளிக்கிறான். இவ்வாறு ஒவ்வொரு பொருளையும் அநேகக்கோணங்களில் பார்ப்பது **'அநேகாந்த வாதம்'** ஆகும். ஒரு பொருள் ஏழுவகையாக இருக்கலாம் என வாதிடுவது **சியாத்வாதமாகும்.**

சமணர்களின் அடிப்படைக் கோட்பாடுகளாக இன்னா செய்யாமை, அருளுடைமை, கொல்லாமை, புலால் மறுத்தல் ஆகிய நான்கும் இணைந்த அகிம்சையே சமணத்தின் மையக் கருத்தாகும். சமண சமயத்தின் வாழ்வியல் நெறிகள் (நவபதார்த்தங்கள்) என்றழைக்கப்படுகின்றன. அவையாவன

1. ஜீவன் – நல்வினை, தீவினை அகற்றித் தானாகவே அனைத்தையும் உள்ளது உள்ளபடி அறியும் ஜீவன்.
2. அஜீவன்– உடலோடு கட்டுண்ட நிலையில் இன்ப, துன்பங்களைத் துய்ப்பவை.
3. புண்ணியம் – நல்லெண்ணம், நல்லசெயல், நல்லசொல் இவற்றால் விளைபவை.
4. பாவம் – தீய எண்ணம், தீய செயல், தீய சொல் இவற்றால் விளைபவை.

5. ஊற்று (ஆசிரமம்) – உயிரிகள் செய்த புண்ணிய பாவங்களுக்கேற்பப் பயன்கள் வந்து சேரும்.
6. செறிப்பு – (சம்வளர்) – மனம், வாக்கு, காயங்களை அடக்கி நல்வினை தீவினை உயிரை வந்து அடையாமல் தடுக்கும்.
7. உதிர்ப்பு – இரு வினைகளும் உயிருடன் சேராமல் தடுத்தபின்பு, எஞ்சிய வினைகளை நீக்கும்.
8. பந்தம் – சிந்தை, சொல், செயல், ஐம்புலன்கள் ஆகியவற்றால் உண்டான வினைகள் உயிரோடு கலப்பது பந்தம்.
9. மோட்சம் – ஐம்புலன்களின் ஆசைகளையும் அறவே அழித்து, இரு வினைகளிலும் நீங்கி உயர்ந்த வீடுபேறு அடைவது மோட்சமாகும்.

## சமணம் கூறும் துறவிகளுக்கான வாழ்வியல் நெறிகள்

1. சமணத் துறவிகள் கடுந்துறவற (Tapas) வாழ்க்கை மேற்கொள்ள வேண்டும்.
2. எளிமையான பற்றற்ற நிலையை (celibacy) மேற்கொண்டு உலக வாழ்க்கையைத் துறக்கவேண்டும்.
3. அடிக்கடி உண்ணா நோன்பு இருந்து இறுதியில் முழுப்பட்டினி (starvation) இருந்து உயிர் துறக்கவேண்டும்.
4. தீங்கிழையாமையைத் (Ahimsa) தங்களின் வாழ்வில் ஒவ்வொரு நாளும் கட்டாயம் கடைப்பிடித்தே ஆகவேண்டும்.
5. மூக்கைத் திரையிட்டு (veil) மூடிக் கொள்ள வேண்டும்.
6. மயில் பீலியை எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும். தங்களின் பாதம்பட்டு சிறு உயிரினங்கள் கூட இறக்கக்கூடாது என்பது சமண சமயம் கூறும் துறவிகளுக்கான வாழ்வியல் நெறிகளாகும்.

## சமண சமயத்தின் தத்துவங்கள்

உலகம் அழியக்கூடியப் பொருளாலும், அழியாத்தன்மையாலும் ஆத்மாக்களாலும் (Jiwas (or) souls) உருவானதாகும். மனிதன் மட்டுமன்றி விலங்குகள். தாவரங்கள் மற்றும் கல்லுக்கும் உயிர் இருப்பதாகக் நம்பப்படுகிறது. உயிர்கள் மீண்டும் மீண்டும் பிறக்கின்றன. அதற்குக் காரணம் உயிர்கள் செய்யும் வினையும் (karma) வினைப்பயனுமே (samskara) ஆகும். தூய்மையான உயிர், வினைப்பயனால் கறைபடிந்திருக்கிறது. வினைப்பயன்களைக் களைய கடுமையான தவவாழ்வை மேற்கொள்ள வேண்டும். தன்னை உண்மையில் உணர்ந்தவனே ஜீவ முக்தி அடைந்தவனாவான் என்று சமணத்தத்துவங்கள் கூறுகின்றன.

**சமணம் கூறும் ஐந்து வகையான அறிவு நிலைகள்**

1. மனம் மற்றும் புலன்களால் கிடைக்கும் அறிவு – (Mati Jnana)
2. சமண நூல்கள் மூலமும், துறவிகள் மூலம் கிடைக்கும் அறிவு – (Sruthi Jnana)
3. கடந்த காலம், எதிர்காலம் தொலைவில் உள்ளவற்றைப் பற்றிய அறிவு – (Avadi Jnana)
4. அடுத்தவர் மனத்தில் உள்ளவற்றை அறிவது – (Mana prayaya-jnana)
5. அனைத்துப் பந்தங்களும் வினையால் ஏற்பட்ட தடைகள் நீங்கிய பிறகு, ஆன்மாவிற்குக் கிடைக்கும் முழுமையான உண்மையான அறிவு – (Kevala-jnana) கைவல்யா.

## சமண சங்கம்

மகாவீரரின் சீடர்களுள் முக்கியமானவர் **பத்ரபாகு** ஆவார். அவரின் சீடர்கள் 11 பேர் எனக் கூறுவர். சாதி, ஆண், பெண் வேறுபாடின்றி சீடர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அவர்கள் நிர்கிரந்தர்கள் (நிர்கிந்தர் – தளைகளிலிருந்து விடுபட்டோர்) எனப்பட்டனர்.

**சமண சமய மாநாடு**

***முதல் சமண சமய மாநாடு*** – இம்மாநாடு கி.மு. (பொ.ஆ.மு.) 3-ஆம் நூற்றாண்டில் பாடலிபுத்திர நகரில் ஸ்தூலபத்திரர் தலைமையில் நடைபெற்றது. இங்கு சமண சமய நூல்களான 12 அங்கங்கள் தொகுத்தளிக்கப்பட்டன. இம்மாநாட்டில் சமண சமயம் ஸ்வேதாம்பரர், திகம்பரர் என்று இரு பிரிவுகளாகப் பிரிந்தது.

***இரண்டாவது சமண சமய மாநாடு*** – இம்மாநாடு வல்லபி நகரில் தேவாதி க்ரஷ்மர்மனா என்பவர் தலைமையில் கி.பி.(பொ.ஆ)512 – ஆம் ஆண்டு நடைபெற்றது. இதில் சமண சமய நூல்களான 12 அங்கங்கள், 12 உபஅங்கங்கள் ஆகியவை இறுதி செய்யப்பட்டன.

## சமண சமய இலக்கியங்கள்

சமணப் புனித நூலான **ஆகமசித்தாந்தம்** என்பது 12 அங்கங்களைக் கொண்டது. அது அர்த்த மகதி என்னும் பாலி மொழியில் எழுதப்பட்டது. இவை உரைநடையும் செய்யுள் நடையும் கலந்தவையாகும். **கல்ப சூத்திரம்** என்னும் நூல் **பத்ரபாகு** என்னும் சமணத்துறவியால் எழுதப்பட்டது. இது தீர்த்தங்கரர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றிக் கூறுகிறது.

தமிழில் உள்ள நூல்களாகிய சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, வளையாபதி, யாப்பருங்கலக்காரிகை, நன்னூல், நாலடியார், நான்மணிக்கடிகை, பழமொழி போன்றவை சமணர்களின் படைப்பேயாகும். மேலும் இந்தி, குஜராத்தி, மராத்தி, கன்னடம், சமஸ்கிருதம் போன்றவற்றிலும் சமணர்கள், இலக்கியங்களையும் தத்துவங்களையும் அளித்துள்ளனர்.

## கலை

சமணக் கட்டடக்கலை என்பது இந்தியக் கலையுடன் இணைந்தது. இராஜஸ்தானின் **மவுண்ட் அபுவிலுள்ள தில்வாரா கோயில்** புகழ்பெற்ற ஒன்றாகும். இது சோலங்கி வம்ச மன்னர்களால் கட்டப்பட்டது.

**ரனக்பூர் ஜெயின் கோயில் இது ஆதிநாதர் கோயிலாகும். இக்கோயில் பழுப்பு நிற பளிங்குக் கற்களால் கட்டப்பட்டது. 1444 மார்பிள் தூண்களைக் கொண்டது. ஒவ்வொரு தூணும் கலைநுணுக்கத்துடன் வடிவமைக்கப்பட்டவை. இது சேத் தர்னாஷா என்பரால் மன்னர் ரானாகும்பாவின் உதவியுடன் கட்டப்பட்டது.**



கர்நாடக மாநிலத்தில் உள்ள சிரவணபெலகொலாவில் உள்ள **கோமதீஸ்வரர் சிலை** உலகிலேயே ஒரே கல்லால் செதுக்கப்பட்ட மிகப்பெரிய சிலையாகும். இது 57 அடி உயரம் கொண்டதாகும். அது **பாகுபலி** என்ற பெயராலும் அழைக்கப்படுகிறது. இது கங்க வம்சத்து மன்னரின் படைத்தளபதியான **சாமுண்டராயா** என்பவரால் நிறுவப்பட்டது. உதயகிரியில் உள்ள **புலிக்குகை**, எல்லோரா **இந்திர சபை** போன்றவை குறிப்பிடத்தக்கவை.



கோமதீஸ்வரர்



XII Ethics_Lesson 4.indd 70 05-04-2019 10:42:57

**உங்களுக்குத் தெரியுமா?** கோமேதகா என்ற திகம்பர சமணத் துறவியின் புகழை உலகறியச் செய்யவே கோமதீஸ்வரர் சிலை உருவாக்கப்பட்டது.

பவங்கஜா ஆதிநாதர் சிலை (ம.பி) போன்றவையும், இராஜஸ்தான், பந்தல்கண்ட் போன்ற இடங்களில் சமணக் கலையின் சிதைவுகள் காணப்படுகின்றன.

தமிழ்நாட்டில் **கழுகு மலை, மதுரை, சித்தன்னவாசல், சீயமங்கலம், காஞ்சிபுரம், எண்ணாயிரம், மேல்சித்தாமூர்** போன்ற இடங்களிலும் சமண தீர்த்தங்கரர்களின் புடைப்புச் சிற்பங்களும் சமணப் படுக்கைகளும் காணப்படுகின்றன.

## இந்தியப்பண்பாட்டிற்குச் சமண சமயத்தின் கொடை

- கல்வி மறுக்கப்பட்டவர்களுக்கு சமணக் கல்வி போதிக்கப்பட்டது.
- சமணசமயத்தின் இலக்கியமான ஆகமசித்தாந்தம் 12 அங்கங்களைக் கொண்டது. இந்நூல் அர்த்தமகதி என்ற பாலிமொழியில் தேவாதி என்பவரால் திருத்தியமைக்கப்பட்டது.
- பிராகிருதம், பாலி, தமிழ் ஆகிய மொழிகளில் பல இலக்கியங்கள் படைக்கப்பட்டன. தமிழில் நன்னூல், சீவகசிந்தாமணி, வளையாபதி, நாலடியார் போன்ற நூல்களை அளித்தவர்கள் சமணர்களே ஆவர்.
- வட மொழியிலும் இலக்கணம், அகராதி, குறியீட்டுமுறை (exicography) மற்றும் கணிதம் ஆகிய துறைகளில் இவர்களுடைய பணி சிறப்பானதாகும்.
- சமண சமயக் கலைகளில் கட்டடக்கலை மிகவும் சிறப்பு வாய்ந்தது. இவர்கள் ஸ்தூபிகள், கோயில்கள் போன்றவற்றைக் கட்டினர். கோயிலில் முழு உருவச் சிலையையும் வைத்து வழிபட்டனர். கோமதீஸ்வரின் முழுஉருவச் சிலை சிரவணபெலகோலா என்னுமிடத்தில் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளது.
- குவாலியருக்கு அருகில் உள்ள பாறைகளில் மிகப்பெரிய அளவில் செதுக்கப்பட்ட சிற்பங்களும், உதயகிரி, எல்லோரா, அதிகும்பா ஆகிய இடங்களிலுள்ள சிற்ப வேலைப்பாடுகளும் சமண சமயச்சிற்பக் கலைக்கு எடுத்துக்காட்டாகும்.
- பவபுரியிலுள்ள கோயில், இராஜகிரி மற்றும் அபுமலையில் உள்ள தில்வாராகோயில், சித்தூர் சமணக் கோபுரம் போன்றவை, சமணர்களின் கலை, கட்டடக்கலையின் சிறப்பினை எடுத்துக்காட்டுகின்றன.
- சமணம் அகிம்சையை வலியுறுத்தியதால் விலங்குகள் பலியிடப்படுவது குறையத் தொடங்கியது .


## பௌத்தசமயம்

இந்தியாவில் தோன்றிய பழைமையான சமயங்களில் இதுவும் ஒன்று. ஜப்பான், சீனா, கொரியா, இலங்கை, தாய்லாந்து, மியான்மர் போன்ற நாடுகளில் இச்சமயம் பெரும்பான்மைச் சமயமாக விளங்குகின்றது. இக்காலசமூகத்தில்நிலவியமூடநம்பிக்கைகள், சடங்குகள், சிக்கலான நடைமுறைகள், ஏற்றத்தாழ்வுகள் போன்றவை பௌத்த சமயம் தோன்றக் காரணமாயிற்று. புத்தரின் ஆளுமையும், எளிமையான கொள்கைகளும், மன்னர்களின் ஆதரவும் கிடைத்தமையால் பௌத்த சமயம் எளிதில் பரவியது எனலாம். பௌத்தம் என்பது புத்தரின் போதனைகளின் அடிப்படையில் அவரால் தோற்றுவிக்கப்பட்ட சமயமாகும். இது **சாக்கிய மதம்** என்று அழைக்கப்படுகிறது. பௌத்த சமயமானது **பாலிபௌத்தம், திருமறைபௌத்தம், தென்னாட்டுப் பௌத்தம், தேரவாதம்** மற்றும் **ஸ்தவிரவாதம்** என்றும் பல பெயர்களாலும் அழைக்கப்படுகிறது.



XII Ethics_Lesson 4.indd 71 05-04-2019 10:42:57

## புத்தர்



புத்தர்

இவரின் இயற்பெயர் **சித்தார்த்தர்.** இவர் இன்றைய நேபாள நாட்டில் கபிலவஸ்துவில் உள்ள லும்பினி வனத்தில் சுத்தோதனருக்கும் மாயாதேவிக்கும் மகனாகப் பிறந்தார். அவரது தாய் மாயாதேவியின் மரணத்திற்குப் பிறகு சிற்றன்னை **கௌதமிபிரஜாபதி** என்பவரால் வளர்க்கப்பட்டார். எனவேதான், **கௌதமர்** என அழைக்கப்பட்டார். சாக்கிய வம்சத்தைச் சார்ந்தவர் என்பதால் **"சாக்கியமுனி"** என்றும், மெய் ஞானம் பெற்றதால் ஆன்மிகத்துறையில் **புத்தர்** எனவும் அழைக்கப்படுகிறார்.



புத்தகயா

அவர் ஒருநாள் நகர்வலத்தின்போது கண்ட **நான்கு காட்சிகள்** வாழ்வை மாற்றின எனலாம். வயது முதிர்ந்த மனிதன், நோயாளி, பிணம், துறவி போன்றவர்கள் படும் துன்பத்தைக்கண்டு அதனைப் போக்க வழிகாண முயன்றார். இதனால் அனைத்தையும் துறந்து துறவியானார். மெய்யறிவைத் தேடிப் பயணம் செய்தார். கயா என்னும் இடத்தில் போதிமரத்தடியில் (அரசமரம்) அறிவொளி (ஞானம்) பெற்றார். நீண்ட தியானத்தின் விளைவாக ஞானம் பெற்றதால் புத்தர் என அறியப்பட்டார். தமது முதல் உரையை சரநாத்திலுள்ள **மான் பூங்காவில்** நிகழ்த்தினார். அது **தர்மசக்கர பரிவத்தனா** அல்லது **சட்டச்சக்கரம்** எனப்படுகிறது.

## புத்தமத கொள்கைகள்

**ஆரிய சத்தியங்கள்-நான்கு பேருண்மைகள்** (Four Noble Truths)

1) இவ்வுலக வாழ்க்கை **துன்பமயமானது.** நோய், பிணி மூப்பு, சாக்காடு ஆகிய துன்பங்கள் நம்மைத்தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

2) தான் இன்பமாக வாழவேண்டும் என்ற தன்னல **ஆசையே** துன்பத்திற்குக் காரணம்.

3) தன்னல **ஆசைகளை ஒழித்தால்** துன்பங்கள் அறவே நீங்கும்.

4) **எண்வகை நல் வழிகளை** மேற்கொண்டால் ஆசைகளை ஒழித்து, துன்பங்களிலிருந்து விடுபட்டு, நிர்வாணம் (மெய்யறிவு) என்னும் உயரிய நிலையை அடையலாம்.

## அஷ்டாங்க மார்க்கம் – எட்டு நல்வழிகள்– (Eight Fold Paths)

பௌத்த சமயத்தில் உலகத்தின் அமைப்பிற்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மாறாக, மனிதனின் ஒழுக்க நடைமுறைகளே முக்கியத்துவம் பெற்றுள்ளது. ஆசையே துன்பத்துக்குக் காரணம் என்று கூறினால் மட்டும் போதாது. அதை அகற்றவேண்டிய வழியையும் காட்டவேண்டும். எனவே துன்பத்தைப் போக்குவதற்காகப் புத்தர் காட்டியவையே எண்வகை நல்வழிகளாகும்.

அவை பின்வருமாறு:

1. நன்னம்பிக்கை (Right Faith)
2. நல்லெண்ணம் (Right Thought)
3. நல்வாக்கு (Right Speech)
4. நற்செயல் (Right Action)
5. நல்வாழ்க்கை (Right Livelihood)
6. நன்முயற்சி (Right Effort)
7. நற்சிந்தனை (Right Mindfullness)
8. நல்தியானம் (Right Concentration)

## வாழ்வியல் இடைவழி அல்லது மத்திய மார்க்கம் (Golden Path)

பௌத்த சமயத்தில் அதிகம் உண்டு உறங்கிவாழும்இன்பவாழ்க்கைக்குஇடமில்லை.



XII Ethics_Lesson 4.indd 72 05-04-2019 10:42:58

உண்ணாமல் உறங்காமல் தன்னைத் தானே வருத்தி வாடுதலும் கூடாது என்ற கோட்பாட்டை வலியுறுத்தியது. கடுமையான நிலைப்பாட்டைத் தவிர்த்து எளிய வழியில் நற்கதி அடைய வேண்டும் என்கிறது. இதுவே இடைவழி (மத்திய மார்க்கம்) என வழங்கப்படுகிறது.

### பௌத்தத்தின் சில கோட்பாடுகள்

பௌத்தம் மனித இனத்தை ஒட்டுமொத்தமாக அறநெறிப்படுத்துவதிலேயே பெரிதும் முனைந்துள்ளது. **புத்தர், கடவுள் இருப்பதை ஏற்கவும் இல்லை. மறுக்கவும் இல்லை. மேலும் கடவுள், உயிர், சடங்கு பற்றி வரையறுத்துக் கூறவில்லை.** தம்மை வழிபடும்படியும் கூறவில்லை. தமது கருத்துகளை நல்வாழ்க்கைக்கான பாதையாக மட்டும் வழங்கினார்.

### நிர்வாணம்:– (மெய்யறிவு)

ஆசையை அகற்றுவதே மகாநிர்வாணம் என சுத்தபீடகம் கூறுகிறது. பிறப்பு, இறப்பு போன்ற துன்பங்களிலிருந்து விடுபட்டு, நிர்வாண நிலையை அடைய எண்வழி மார்க்கங்களைப் பின்பற்ற வேண்டும் என பீடகங்கள் குறிப்பிடுகின்றன.

### கர்மவினை

கர்மவினை கோட்பாட்டிலும், மறுபிறப்பிலும் புத்தர் நம்பிக்கைக் கொண்டிருந்தார். வினைப்பயனிலிருந்து யாரும் தப்பமுடியாது என்றார். இல்லறத்தாரும் துறவத்தாரும் பின்பற்ற வேண்டிய பத்து ஒழுக்கங்கள் பற்றியும் பௌத்தத்தில் கூறப்பட்டுள்ளது.

**இல்லறத்தார் பின்பற்ற வேண்டிய ஐந்து ஒழுக்கங்கள்**

1. பிறர் பொருள் விரும்பாமை
2. பொய்யாமை
3. கொல்லாமை
4. பிறன் மனை விழையாமை
5. கள்ளுண்ணாமை

### பௌத்த சமய மாநாடுகள்

முதல் பௌத்த சமய மாநாடு; இராஜகிருகத்தில் மகாகசபர் தலைமையில் அஜாதசத்ருவின் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் புத்தரின் போதனைகளுக்கு வடிவம் தரப்பட்டது.

இரண்டாவது பௌத்தசமய மாநாடு; வைசாலி என்ற இடத்தில் சபாசமிகா தலைமையில் காலசோகன் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றது.

மூன்றாம் பௌத்த சமய மாநாடு; பாடலிபுத்திரம் என்ற இடத்தில் மொக்காலி புத்ததிசா தலைமையில் அசோகர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பௌத்த தத்துவவிளக்கங்களைக் கூறும் அபிதம்மபீடகம் என்ற நூல் தொகுக்கப்பட்டது.

நான்காம் பௌத்த சமய மாநாடு; குந்தல்வனம் (காஷ்மீர்) என்ற இடத்தில் வசுமித்திரர் தலைமையில் கனிஷ்கர் ஆட்சிக்காலத்தில் நடைபெற்றது. இம்மாநாட்டில் பௌத்தசமய நூல்களின் (பீடகங்கள்) விளக்கஉரையான விபாஷங்கள் தொகுக்கப்பட்டன. இம்மாநாட்டில் பௌத்த சமயம் மகாயானம், ஹீனயானம் என்று இரு பிரிவுகளாகப் பிரிந்தது.

### துறவறத்தார் பின்பற்ற வேண்டிய ஐந்து ஒழுக்கங்கள்

1. ஆடல்பாடல்களில் பங்குகொள்ளாமை
2. நறுமணப்பொருள்கள் போன்ற ஆடம்பரப் பொருட்களைப் பயன்படுத்தாமை
3. அகாலத்தில் உண்ணாமை
4. ஆடம்பரப் படுக்கைகளில் உறங்காமை
5. செல்வத்தை வைத்துக் கொள்ளாமை

## பௌத்த இலக்கியங்கள்

பௌத்த இலக்கியங்கள் பெரும்பாலும் **பாலி மொழியில்** எழுதப்பட்டன. பௌத்த சமயத்தின் புனித நூல் **திரிபீடகம்** என அழைக்கப்படுகிறது. திரிபீடகம் என்றால் **மூன்று கூடைகள்** எனப் பொருள்படும்.

அவை முறையே

**சுத்த பீடகம்** : புத்தரின் போதனைகள் அடங்கிய தொகுப்புகள்

**வினய பீடகம்** : ஆண், பெண் துறவிகள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள்

**அபிதம்ம பீடகம்** : பௌத்த தத்துவ விளக்கங்கள்

இவை பல்வேறு காலங்களில் தொகுக்கப்பட்டது பெற்றது, **வட்டக் காமினி அபயன்** என்ற இலங்கை மன்னர் காலத்தில்தான் நூல் வடிவம் பெற்றன என மகாவம்சம் என்னும் பௌத்த நூல் பீடகங்கள் பற்றிக் குறிப்பிடுகிறது.

**மகாவம்சம், தீபவம்சம்** என்ற பாலிமொழி நூல்கள் இலங்கையைச் சார்ந்தவையாகும். **ஜாதகக் கதைகள்** – புத்தரின் முற்பிறப்பு அவருடைய வாழ்வில் நிகழ்ந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளன. **தேராகதைகள்** பௌத்தபிக்குகள் மூலம் எழுதப்பட்டது. **தேரி கதைகள்** பௌத்தப் பிக்குணிகளால் எழுதப்பட்டது. தமிழ்மொழியில் மணிமேகலை, வீரசோழியம், குண்டலகேசி போன்றவை பௌத்த சமய படைப்புகளாகும்.

## பௌத்த சமயத்தின் பிரிவுகள்

பௌத்த சமயம் கனிஷ்கரது ஆட்சிக் காலத்தில் **ஹீனயானம், மஹாயானம்** என இரு பிரிவுகளாகப் பிளவுப்பட்டது. ஹீனயானம் என்றால் **சிறிய வாகனம்** எனவும், மகாயானம் என்றால் **பெரிய வாகனம்** எனவும் பொருள்படும். இரண்டும், புத்தரைக் குறித்தும் அவர்தம் கொள்கைகள் குறித்தும் வேறுபடுகின்றன.

| ஹீனயானம் | மகாயானம் |
|---|---|
| புத்தருக்கு உருவ வழிபாடு இல்லை | புத்தருக்கு உருவ வழிபாடு உண்டு |
| வீடுபேறு அடைவதற்காகத் துறவறம் சிறந்தது என்கிறது. | துறவறத்தை வலியுறுத்தவில்லை |
| தன் முயற்சியிலேயே ஒருவன் மெய்யறிவு பெற வேண்டும் என்கிறது. | போதிசத்துவர்களின் துணையோடுதான் மெய்யறிவை அடைய முடியும் என்கிறது. |
| பாலிமொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. | சமஸ்கிருதமொழிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. |
| ஆன்மா உண்டு என நம்பவில்லை. | ஆன்மாவை நம்புகிறது. |
| புத்தரின் கருத்துகளைப் பெரிதும் கடைப்பிடிக்கிறது. | இந்து சமயம் போன்று சடங்குகள் செல்வாக்கு மிகுந்து காணப்படுகிறது. |

### ஜென் பௌத்தம்

பௌத்தத்தின் ஒரு வழிமுறையே ஜென்பௌத்தமாகும். இதுதனிசமயமல்ல. ஜென் என்ற சீனமொழிச் சொல்லின் பொருள் தியானம் என்பதாகும். ஜென் எதை போதிக்கிறது என்றால் ஏதுமில்லை என்பதே பதில். இதன் பொருள் நீ நீயாக இரு என்பதே ஆகும்.

பின்னர் **வஜ்ராயனம்** என்ற பிரிவும் தோன்றியது. வஜ்ராயனம் என்றால் **வைர வாகனம்** என பொருள்படும். அது பௌத்தத்தில் மாந்திரீக யோகத்தை பரிந்துரைத்தது. திபெத், பூட்டான் போன்ற நாடுகளில் கடைபிடிக்கப்படுகிறது.

## பௌத்த சங்கம்

புத்தரின் கொள்கைகளை பரப்பிய சமய நிறுவனங்களே சங்கம் எனப்பட்டது.

www.tntextbook.org

பௌத்த சங்கத்தில் புத்தரது தர்மம் போதிக்கப்பட்டது. ஆண்துறவிகள் **பிக்குகள்** என்றும் பெண் துறவிகள் **பிக்குணிகள்** என்றும் அழைக்கப்பட்டனர். இச்சங்கத்தில் குடும்ப உறுப்பினர்களுக்கும் இடம் அளிக்கப்பட்டது. அவர்கள் **உபாசகர்கள்** எனப்பட்டனர்.

## பௌத்தக் கட்டடக்கலை

புத்தர், போதிசத்துவர் இவர்களின் நினைவுச் சின்னங்களின்மீது கல்லால் கட்டப்பட்ட ஸ்தூபிகள் போன்றகட்டடக்கலைகள், விஹாரங்கள், நினைவுச் சின்னங்கள் ஆகியவற்றில் அழகிய வேலைப்பாடுகளோடு புத்தரின் வாழ்க்கை வரலாறுகள் செதுக்கப்பட்டுள்ளன. குகைக்கோயிலை உருவாக்கியவர்களும் இவர்களேயாவர். **பர்கூத், சாஞ்சி, அமராவதி** போன்ற இடங்களிலுள்ள ஸ்தூபிகளும் **கன்ஹேரி, கார்லே** போன்ற இடங்களிலுள்ள குகைக்கோயில்களும் பௌத்த சமயச் சிற்பக் கலையினைப் பறைசாற்றும் மிகச் சிறந்த கலைச் சின்னங்களாக விளங்குகின்றன. கனிஷ்கர் காலத்தில் தான் **"காந்தாரக் கலை"** தோன்றியது.

புத்த சமயம் இந்தியாவில் தோன்றியதால், இந்தியப் பண்பாட்டின் தனித்தன்மை வெளிநாடுகளிலும் பரவியது. பௌத்தபிக்குகளும், அறிஞர்களும், பௌத்த சமயத்தைப் பரப்ப வெளிநாடுகள் சென்றபோது, இந்தியப் பண்பாட்டையும் தங்களோடு சுமந்து சென்றதால் சீனா, மங்கோலியா, மஞ்சூரியா, கொரியா, ஜப்பான், பர்மா, சாவகம் சுமத்திரா, இந்தோசீனா போன்ற நாடுகளில் இந்தியப் பண்பாடு பரவியது. பௌத்த சமயத்தைத் தழுவிய அந்நியர்கள் புண்ணிய பூமியான, வேற்றுமையில் ஒற்றுமை கண்ட இந்தியாவிற்குப் புனிதப் பயணம் மேற்கொண்டதாலும் இந்தியப்பண்பாட்டின் சிறப்பு மேலும் வெளிநாட்டில் பரவக் காரணமாயிற்று.

## ஜாவா

ஜாவாவிலுள்ள **போராபுதூர் ஸ்தூபி** ஆசியாவிலேயே சிறந்த பௌத்த சமய கலைச்சின்னமாகும். பௌத்த கட்டடக்கலைக்கும், சிற்பக்கலைக்கும் உன்னதமாக இது திகழ்கிறது. இங்குத் தங்கம், வெள்ளி, தந்தம், மரம் போன்றவற்றிலான பௌத்தச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.



போராபுதூர் ஸ்தூபி

## தாய்லாந்து

பௌத்தச் சிற்பங்களின் உறைவிடமாகவும் பௌத்த பூமியாகவும் கருதப்படுகிறது. தாய்லாந்தில் பௌத்தச் சிற்பக்கலை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது.

## இலங்கை

மாமன்னர் அசோகர் காலத்தில் இலங்கையில் பௌத்த சமயம் பரப்பப்பட்டது. கி.பி.(பொ.ஆ) நான்காம் நூற்றாண்டைச் சேர்ந்த சுண்ணாம்புக் கல்லால் ஆன புத்தரின் நின்றகோல சிற்பம் இலங்கை அனுராதபுரம் அருங்காட்சியத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## பௌத்தம் வழங்கிய கொடைகள்

- இன்று உலகப் பெருஞ்சமயங்களில் ஒன்றாக பௌத்த சமயம் திகழ்கிறது.

### பௌத்த பல்கலைக்கழகங்கள்

1. நாளந்தா 2. விக்ரமசீலா 3. ஓதாந்தபுரி 4. சோமபுரா 5. ஜகத்தாலா 6. வல்லபி ஆகியவை இந்தியாவிலிருந்த பௌத்த சமய பல்கலைக்கழகங்களாகும்.



XII Ethics_Lesson 4.indd 75 05-04-2019 10:42:58

www.tntextbook.org

- விலங்குகளை பலியிடும் கொடியப்பழக்கத்தை பௌத்தர்கள் வெறுத்தனர். கடவுளை மனிதவடிவில் வணங்கினர்.
- பௌத்த விகாரங்களின் பிரதிபலிப்பே சைவ, வைணவ சமயத்தாரின் மடாலயப்பணிகளில் எதிரொலிக்கிறது.
- பாலி, தமிழ் போன்ற மொழிகளில் பௌத்த இலக்கியங்கள் அதிகமாக எழுதப்பட்டன. குண்டலகேசி, மணிமேகலை, வீரசோழியம் உட்பட பல இலக்கியங்கள் தமிழில் இயற்றப்பட்டு பௌத்தத்தின் கொடைகளாக திகழ்ந்தன.
- மகாவம்சம், தீபவம்சம் போன்ற இலங்கை பௌத்த நூல்கள் பழங்கால இந்திய, இலங்கை வரலாற்றை அறிய உதவுகின்றன.
- காந்தாரக்கலை, மதுராக்கலை பாணிகள் பௌத்தம் இந்தியாவிற்களித்த கொடைகளாகும்.
- புத்தரின் உயர்ந்த அறக்கோட்பாடுகள், கொள்கைகள் போன்றவை இந்தியப் பண்பாட்டின் அடித்தளமாகத் திகழ்கின்றன.
- வைதிக சமயத்திற்கெதிரான மறுப்பியக்கமாக மட்டுமல்லாமல், அது சமுதாய மாற்றத்தையும் ஏற்படுத்தியது. புத்தர் சாதி வேறுபாட்டைக் கண்டித்தார்.
- அடித்தட்டு மக்களுக்கு புரியாத சாத்திரங்களுக்கு எதிராக, மக்களுக்குப் புரியக்கூடிய வாழ்வியல் வழிகாட்டியாகப் பௌத்த சமயம் திகழ்கிறது.
- பௌத்தமே முதன்முதலில் கட்டமைக்கப்பட்ட ஓர் அமைப்பு முறையை உருவாக்கியது. அதன் விளைவே சங்கம், அச்சங்கங்கள் கல்வியை அனைத்து பிரிவுக்கும் கொண்டு சேர்த்தது. நாளந்தா, தட்சசீலா, விக்கிரமசீலா போன்ற பல்கலைக் கழகங்கள் உலகப் புகழ்பெற்றன.
- பௌத்தம் வெளிநாடுகளுக்குப் பரவியதால் சீனா, இலங்கை போன்ற நாடுகளுடன் உறவு ஏற்பட்டது. இது மிகப்பெரிய பண்பாட்டுப் பாலமாகத் திகழ்கிறது.

## ஜொராஸ்டிரியம்

ஜொராஸ்டிரிய சமயத்தைத் தோற்றுவித்த ஜொரஸ்டர் பெயராலேயே அழைக்கப்படுகிறது. இது **மஸ்தாநெறி** என்றும் **பார்சி சமயம்** என்றும் அழைக்கப்படுகிறது. ஜொராஸ்டிரர், ஈரானிய மக்களின் நம்பிக்கையின்படி இறைத்தூதர் ஆவார். ஸ்பிதமெ என்ற இயற்பெயர் கொண்ட இவர் இறைவனைத் தரிசித்த பிறகு **தங்க ஒளி** எனப் பொருள்படும் ஜொராஸ்டிரர் என அழைக்கப்பட்டார்.



அகூரமஸ்தா

### அகூரமஸ்தா (உயிரும், உள்ளமும் எனப் பொருள்)

ஜொராஸ்டிரர் வலியுறுத்திய தெய்வமே **அகூரமஸ்தா.** சூரியன் – நெருப்பு – ஒளி ஆகியவற்றின் உருவமாக மஸ்தா தெய்வம் உள்ளது. நல்லவை – தீயவை என்பவற்றிற்கு இடையேயான தொடர் போராட்டமே ஜொராஸ்டிரிய சமயத்தின் மையமான கருத்தாகும்.

## சமயக் கொள்கைகள்

### இறைவன்

பழைமையான மத நம்பிக்கையின்படி, பார்சிக்கள் முதலில் பல தெய்வங்களை வழிபட்டனர். ஜொராஸ்டிரர் இதைக் கண்டித்து அகூரமஸ்தா என்னும் ஒரு கடவுள்



XII Ethics_Lesson 4.indd 76 05-04-2019 10:42:58

வழிபாட்டை நிலை நிறுத்தினார். இறைவன் நிகரற்றவர், சொர்க்கம், பூமி அனைத்தையும் படைத்து இயற்கை முழுமைக்கும் மையமாக விளங்குகின்றார்.

### உயிர்

இன்பத்திற்கும் துன்பத்திற்கும் உயிரே காரணம். நல்லுயிர் வீடுபேற்றை அடையும் என்றார்.

### வீடுபேறு

உயிர்கள் வீடுபேறு அடைய மூன்று கட்டளைகளை ஜொராஸ்டிரியம் குறிப்பிடுகின்றது.

- நற்சிந்தனை (ஹீமாதா)
- நற்சொல் (ஹிக்தா)
- நற்செயல் (ஹீவர்ஷ்தா)

இவை மூன்றும் இறைவனால் கண்காணிக்கப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்படும். சிந்தனை, சொல், செயல் இம்மூன்றும் பெற்ற புனிதமான ஒருவனே வீடுபேறு அடைய முடியும் என்கிறது.

### ஜென்ட் அவஸ்தா

இந்நூல் அகூரமஸ்தாவால் அருளப்பட்டதாக நம்பப்படுகிறது. இப்புனித நூல் ஜொராஸ்டரின் சீடரான **விஸ்தபா** மூலம் உலகத்திற்குக் கிடைத்தது.

'அவஸ்தா' என்றால் புத்தகம். ஜென்ட் எனில், கட்டளைகள் எனப் பொருளாகும். 'ஜென்ட்' அவஸ்தா என்றால் **கட்டளைகள் அடங்கிய புத்தகம்** என்பது பொருள். இப்புத்தகம் அவாஸ்தா மொழியில் **பஹலவி** எழுத்துகளில் எழுதப்பட்டது.

### பார்சிக்களின் தனித்த அடையாளங்கள்

- பார்சிக்கள் இந்தியாவின் ஏனைய மக்களோடு கலந்து வாழ்ந்த போதிலும் அவர்களின் பண்பாடும் சமய வழிபாட்டு முறையும் பெரிதும் பாதிப்பின்றித் தனித்தே காணப்படுகின்றது.
- நெருப்புக் கோயில் வழிபாடு பின்பற்றப்படுகிறது. வீடுகளில்கூடத் தீயைமூட்டி, நெருப்பை உண்டாக்கித் தெய்வமாக வழிபாடு செய்கின்றனர்.
- பார்சிக்கள் இறந்துவிட்டால் அவர்களை எரிக்கவோ, புதைக்கவோ செய்யாமல் அமைதிகோபுரம் என்னும் இடுகாட்டுப் பகுதிகளில் விலங்குகள், பறவைகள் உண்ண செய்கின்றனர். ஆனால், தற்போது இதில் மாற்றங்கள் காணப்படுகின்றன.

### இந்தியப் பண்பாட்டிற்குப் பார்சிகளின் கொடைகள்

- வெளிநாட்டிலிருந்து வந்திருந்தாலும் இந்தியப் பண்பாட்டைச் சிதைக்காதவாறு நம் நாட்டு பண்பாட்டுடன் ஒன்றிணைந்து வாழ்கின்றனர்.
- இந்தியர்கள் என்ற உணர்வுடனே நாட்டுப்பற்றுடன் திகழ்கின்றனர்.
- இந்தியாவில் குறிப்பிடத்தக்க ஓர் தொழில் சமூகமாக உருவெடுத்துத் தொழில் அறத்துடன் வாழ்கின்றனர்.
- பார்சி (ஜொராஸ்டிய சமய) இயக்கங்கள் 19 –ஆம் நூற்றாண்டின் இந்திய சமூக சீர்திருத்தத்தில் முக்கியப் பங்காற்றின.
- தாதாபாய் நௌரோஜி, நௌரோஜி பர்டூன்ஜி ஆகியோர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றினர்.

## இஸ்லாம்


### இஸ்லாம் விளக்கம்

இஸ்லாம் என்பது ஓர் அரபுச் சொல். அதன் பொருள் பணிதல், சரணடைதல், கீழ்ப்படிதல் என்ற மூலக்கூறுகளை உள்ளடக்கியது. இஸ்லாம் என்ற சொல்லின் நேர்ப்பொருள், அமைதி என்பதாகும். ஒருவன் உடலையும், உள்ளத்தையும் அல்லாவிடம் பணிவாக ஒப்படைக்கும்போது அமைதியைப் பெறுகிறான் எனப்பொருள்படும். அல்லாவின் விதிமுறைகளுக்கு ஏற்பப் பணிந்து செயல்படுபவர்கள், இஸ்லாமியர்கள் ஆவர்.



XII Ethics_Lesson 4.indd 77 05-04-2019 10:42:58

மேற்காணும் பண்புகளைப் பெற்றிருப்பவன் எந்த இனத்தையும், சமூகத்தையும், நாட்டையும், குலமரபையும் சேர்ந்தவனாக இருப்பினும் அவன் ஒரு முஸ்லிம் என அபுல் – அலா – மௌருடி கூறுகிறார்.



மெக்கா

இஸ்லாம் இரண்டு அடிப்படை மூலாதாரங்களைக் கொண்டுள்ளது.

1. அல்லாவின் வேதம் (குர் ஆன்)
2. முகமது நபி (ஸல்) அவர்கள் அறிமுகப்படுத்திய மார்க்கம் (ஹதிஸ்).

## முகமது நபி

இஸ்லாம் சமயத்தின் தீர்க்கதரிசியாக முஸ்லிம்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டவர் முகமது நபி ஆவார். இவர் மெக்காவில் அப்துல்லா – அமீனா என்ற தம்பதியருக்கு மகனாய்ப் பிறந்தார். கதீஜா என்ற செல்வ சீமாட்டியை மணந்த பிறகு, மெக்கா நகரத்திற்கு அப்பால் இருந்த **ஹீரா** என்ற குகையில் தவம் செய்தார். அப்போது இறைதூதராகிய **காபிரில்** தோன்றி, அல்லாவின் புனித வார்த்தைகளாகிய உண்மைகளை அவரிடம் கூறினார். இதன் தொகுப்பே இஸ்லாமியத்தின் புனித நூலான **திருக்குரான்** ஆகும்.

## கோட்பாடுகள்

### கடவுள் (அல்லாஹ்)

கடவுள் ஒருவரே, அவரே அல்லாஹ். அவரைத் தவிர, வேறு கடவுள் இல்லை என்பது இஸ்லாமின் அடிப்படை நம்பிக்கை. **இறைத்தூதர்கள் (நபிமார்கள்).** உலகின் **முதல் இறைத்தூதர் ஆதாம். இறுதியான இறைத் தூதர் முகமது நபி** என இஸ்லாம் நம்புகிறது.

### விதி

விதி என்பது அறிவுக்கு அப்பாற்பட்டது. அதன் புரிதல் இறைவனுக்கு மட்டுமே உண்டு என்பதே இசுலாமின் ஆழ்ந்த நம்பிக்கையாகும். விதியைப் பற்றிச் சிந்திப்பதையோ அதைப்பற்றி தர்க்கம் செய்வதையோ குரான்மறுக்கிறது.

### கடமைகள்

தன்சமயத்தவர் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டிய கடமைகள் என ஐந்தைக் குறிப்பிடுகிறது. இவை **"இஸ்லாத்தின் ஐந்து தூண்கள்"** என அழைக்கப்படுகின்றன.

அவையாவன

1. கலிமா
2. தொழுகை
3. நோன்பு
4. ஸக்காத்
5. ஹஜ்

### கலிமா (உறுதிமொழி)

அல்லாஹ் ஒருவரே, முகமது நபி அவரது இறைத்தூதர் என முழு நம்பிக்கை கொண்டு உறுதிமொழி கொடுப்பது, முதல் கட்டாய கடமையாகும்.

### இறைவணக்கம் (நமாஸ்) தொழுகை

ஒவ்வொரு இஸ்லாமியரும் தினமும் ஐந்துமுறை இறைவனைத் தொழுகை செய்ய வேண்டியது, இரண்டாவது கடமையாகும். மெக்காவில் உள்ள **புனித காபாவை** நோக்கி வணங்க வேண்டும்.

### நோன்பு

ஒவ்வொரு வருடமும் இஸ்லாமிய நாட்காட்டியின்படி ரமலான் மாதத்தில் நோன்பு இருப்பது, மூன்றாவது கடமையாகும். சூரிய உதயம் முதல் அஸ்தமனம் வரை உணவு,



XII Ethics_Lesson 4.indd 78 05-04-2019 10:42:58

நீர் எதுவும் எடுத்துக்கொள்ளுதல் கூடாது. இந்நோன்பு ஒரு மாதம் கடைப்பிடிக்கப்படுகிறது.

### ஸக்காத் (பொருள் தானம்)

ஸக்காத் எனப்படுவது கட்டாய பொருள் தானம். இஃது இஸ்லாமின் நான்காவது கடமையாகும். ஒவ்வொரு இஸ்லாமியரும் தமது செல்வத்தில் ஒரு பங்கினை ஆண்டுக்கு ஒருமுறை எளியோர்களுக்கு தானம் வழங்க வேண்டும்.

### ஹஜ் (புனிதப் பயணம்)

ஒவ்வொரு இஸ்லாமியரும் தமது வாழ்நாளில் ஒரு முறையாவது, மெக்கா நகரிலுள்ள காபாவைத் தரிசிப்பது இஸ்லாமின் ஐந்தாவது கடமையாகும்.

### இஸ்லாமியப் பிரிவுகள்

இறைத்தூதரான காபிரில் அல்லாவின் வார்த்தையாக முகமது நபியிடம் கூறியதை ஏற்கும் **சன்னிப்பிரிவும்**, அல்லாவின் புனிதவார்த்தைகளை ஏற்று, அதைப் பின்பற்றி, இறைத்தன்மையை அடைந்த தீர்க்கதரிசி எவரோ அவரை மதத்தலைவர், அதாவது, இமாம் என ஏற்றுக்கொண்டு வழிநடத்தும் **ஷியா பிரிவும்** இஸ்லாமிய சமயத்தில் ஏற்பட்ட இருபிரிவுகளாகும்.

### இஸ்லாமியப் பண்டிகைகள்



இரம்ஜான் தொழுகை

இரம்ஜான், பக்ரீத், மிலாடிநபி போன்ற பண்டிகைகள் இஸ்லாமியர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன.

### இந்தியப்பண்பாட்டிற்கு இஸ்லாம் சமயத்தின் கொடை

- இறைவன் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு, இஸ்லாம் சமயத்தின் முக்கிய கொடையாகும்.
- இந்தியப்பண்பாட்டின் ஒற்றுமைக்கு, முஸ்லீம் அறிஞர்கள் **சூபி இயக்கத்தைக்** கொடையாக வழங்கி, இந்து முஸ்லிம் ஒற்றுமையை நிலைநாட்டினர்.
- சூபி இயக்கத்தின் மூலம் சாதி ஒழிப்பு, மூடநம்பிக்கைகளுக்கு முடிவு கட்டுதல், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கொள்கைகள் நமது இந்தியப் பண்பாட்டிற்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதமாகும்.
- இவர்களது கலையம்சமான பூச்சித்திர, தையல் வேலைப்பாடுகள், பூவேலைபாடுகள் அமைந்த மணிமண்டபங்கள், உலோகம் மற்றும் தங்கவேலைப்பாடுகள் போன்ற கவின்மிகு கலைகள் இந்தியப்பண்பாட்டிற்குப் பெருமை சேர்ப்பதாக அமைந்தது.
- விளையாட்டரங்கங்கள் (டெல்லியிலுள்ள பெரோஷா கோட்லா) நகர நுழைவாயில்கள் (ஹைதராபாத் சார்மினார்) பூந்தோட்டங்கள் (ஆக்ரா-ஷாலிமார்த் தோட்டங்கள்) அரண்மனைக் கோட்டைகள் (டெல்லி செங்கோட்டை) மசூதிகள் (டெல்லி-ஜும்மா மசூதி, முத்து மசூதி) கட்டடக்கலை (ஆக்ரா- பதேப்பூர் சிக்ரி, உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மஹாலில் பியூட்ரா டியூரா என்ற முறையால் ஆக்கப்பட்டது. வண்ணகற்கள், ஓடுகள் போன்றவற்றால் உருவாக்கப்பட்ட பொருள்கள் ஆகியவை இந்தியப் பண்பாட்டின் சிறப்புக் கூறுகளாகத் திகழ்கின்றன.
- இந்தியப் பண்பாட்டின் சிறப்புக்கூறுகளாக விளங்கும் இயற்கணிதம், வானநூல், மருத்துவம், கணிதம் (Algebra) போன்ற



XII Ethics_Lesson 4.indd 79 05-04-2019 10:42:59

நூல்கள் அரேபியர் மூலம் ஐரோப்பா முழுவதும் பரவி, இந்தியாவின் பெருமையை மேலோங்கச் செய்தது.

- யுனானி என்ற மருத்துவ முறையை இந்தியாவிற்கு இஸ்லாமியர்கள் அறிமுகப்படுத்தினர்.

## கிறித்துவம்

உலகம் முழுவதும் பெரும்பான்மையான நாடுகளில் பரவியிருக்கும் சமயம் கிறித்துவமாகும். கிறித்துவம் என்பது கிறிஸ்து அதாவது ஏசுகிருஸ்து என்ற இயற்பெயரிலிருந்து பெறப்பட்ட சொல்லாகும். ஏசுகிறிஸ்துவின் உயர்ந்த கோட்பாட்டு அம்சங்களைக் குறித்துக் கூறுவது கிறித்துவம் எனலாம்.

## ஏசுகிறிஸ்து

கிறித்தவத்தின் முன்னோடி ஏசுகிறிஸ்து ஆவார். இவரை **ஜீஸஸ்** என்றும் அழைப்பர். இவர் இஸ்ரேல் நாட்டில் உள்ள **பெத்லஹேம்** என்னும் இடத்தில் ஜோசப் - கன்னிமேரியின் குழந்தையாகத் தோன்றினார்.

## சமயக்கோட்பாடுகள்

மனித உயிர்கள் இறைவன்மீது இதயப்பூர்வமாகவும், தூய எண்ணத்துடனும் அன்பு செலுத்தவேண்டும் எனவும், பரலோகத்தில் இருக்கும் பரமபிதா அல்லது சொர்க்கம் என்பதை அடைய அன்பு, நீதி, கடமை போன்றவற்றைக் கடைப்பிடித்து ஒழுகவேண்டும் என்பதும் கிறித்துவ சமயத்தின் கொள்கை எனக் கூறப்படுகிறது. எனவே, அன்பு, கடவுள், நீதி, நம்பிக்கை போன்றவை முக்கிய கோட்பாடுகளாகக் கொள்ளப்படுகின்றன. மேலும், உலகத்தில் பேசப்படும் வார்த்தைகள் யாவும் இறைவனையே சார்ந்தது என்பதும் கிறித்துவ சமயத்தின் கோட்பாடாகும். கிறித்துவக் கோட்பாடுகள் அடங்கிய புனித நூல் பைபிள்(விவிலியம்) ஆகும்.

## கிறித்தவ சமய விழாக்கள்



வேளாங்கண்ணி தேவாலயம்

ஏசு கிறிஸ்து பிறந்த நாளான டிசம்பர் 25- ஆம் நாள் ஒவ்வோர் ஆண்டும் கிறிஸ்துமஸ் தினமாகக் கொண்டாப்படுகிறது. மேலும் புனித வெள்ளி, ஈஸ்டர், ஆங்கிலப் புத்தாண்டு போன்ற விழாக்கள் கொண்டாடப்படுகின்றன. விழாக்களின் மூலம் அன்பு, நட்பு, சகோதரத்துவம், சமத்துவம் ஆகிய பண்புகளை வலியுறுத்துகின்றன.

## கிறித்துவ சமயத்தின் பணிகள்

1. ஆதரவற்றோர் இல்லங்கள், முதியோர் காப்பகங்களை நிறுவி சேவை புரிகின்றன.
2. வெள்ளம், பூகம்பம், பஞ்சம் போன்ற இயற்கைச் சீற்றங்களின்போது நிவாரணப் பணிகளை செய்து வருகின்றன.
3. இச்சமயக்குழுக்கள் நாடெங்கும் மருத்துவமனைகளை நிறுவி, நலவாழ்வுப் பணிகளைச் செய்து வருகின்றன.
4. பட்டிதொட்டிகளிலும் கல்விக்கூடங்கள் நிறுவி இலவசக்கல்வி, உணவு, உறைவிடம் வழங்கியும் ஒழுக்கம், கட்டுப்பாடு நீதிபோதனைகளையும் புகட்டி வருகின்றன.
5. இக்குழுக்கள் வட்டார மொழிகளைக் கற்றுப் பல்வேறு நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து, இந்திய மொழி வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் தொண்டாற்றியுள்ளன.
6. இச்சமயக் குழுக்களால் இங்கு அச்சுப் பொறி இயந்திரம் அறிமுகப்படுத்தப்பட்டது.

இவ்வாறு கிறித்துவத் தொண்டு நிறுவனங்கள் கல்வி வளர்ச்சிக்கும் சமூக நல வாழ்வுக்கும் பல அரிய பணிகளைச் செய்து வருகின்றன.

### கிறித்துவ சமயத்தின் கொடை

- கிறித்துவம் சமயப் பணி மட்டுமின்றிச் சமூக சேவையிலும் கவனம் செலுத்தியது. கல்வி நிலையங்கள், கல்லூரிகள், மருத்துவமனைகள் போன்றவை மக்களிடம் மிகப் பெரிய வரவேற்பைப் பெற்றன.
- கிறித்துவச் சமயப் பரப்பாளர்கள் மதப்பணியை மட்டுமின்றி, இலக்கியத்திற்கும் சேவையாற்றினர். **கால்டுவெல்**, திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்ற நூலை எழுதினார். **ஜி.யூ.போப்**, திருவாசகம் மற்றும் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். **வீரமாமுனிவர் (பெஸ்கி)** எழுதிய பரமார்த்தகுரு கதைகள் போன்றவை குறிப்பிடத்தகுந்தவை.
- இந்தியப் பண்பாட்டை மேற்குலகப் பண்பாட்டோடு இணைத்ததில் கிறித்துவ சமயம் முக்கிய பங்காற்றியுள்ளது. எனினும்கிறித்துவம்இந்தியப்பண்பாட்டின் சில பழக்க வழக்கங்களையும் தம்முள் இணைத்துக் கொண்டது.

### சீக்கிய சமயம்

சீக்கியம் என்பது, சீக் என்ற பஞ்சாபி வார்த்தையில் இருந்து தோன்றியது. சீக் என்றால் சீடர் அல்லது பின்பற்றுபவர் எனப்பொருள். இந்தியத் துணைக்கண்டத்தில் 15–ஆம் நூற்றாண்டில் இறுதியில் தோன்றியச் சமயமாகும். சீக்கியர்கள் தங்கள் சமய குருவைப் பின்பற்றவேண்டும். அவர்களே, சீக்கியர்களின் வழிகாட்டிகளாவர்.

### சீக்கிய சமயம் தோன்றக் காரணங்கள்

- சமூக அமைப்பில் நிலவிய ஏற்றத்தாழ்வுகள்.
- குருநானக் கபீர் போன்றோர் கருத்துக்கள் மக்களிடம் வரவேற்பை பெற்றது.
- பக்தி இயக்கங்களின் செல்வாக்கு.

பல்வேறு அந்நியப் படையெடுப்புகள் பஞ்சாப் வழியாகவே நடைபெற்றன. இது பஞ்சாப் மக்களின் வாழ்வில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனால் அவர்கள் தனித்த அடையாளத்துடன் வீரம் செறிந்தப் பிரிவினராகவும் தோன்ற காரணமாக அமைந்தது.

### குருநானக் கி. பி. (பொ. ஆ) 1469–1538)


குருநானக்

சீக்கிய சமயத்தை நிறுவியவர் **குருநானக்** ஆவார். இவர் ஒருநாள் **"பெய்ன்"** என்னும் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தபோது ஆன்மிக ஞானம் பெற்றார். இவர் அனைத்து மக்களுக்கும் பொதுவான ஒரு சமயநெறியை உருவாக்க எண்ணியதன் விளைவாகத் தோன்றியதே சீக்கிய சமயமாகும்.

### குரு நானக்கின் போதனைகள்

- கடவுள் ஒருவரே.
- அனைத்து மனிதர்களும் சமமானவர்கள், சாதி வேறுபாடு கூடாது.
- இராமன், கிருஷ்ணன், முகமது நபி போன்றோர் இறைவனின் தூதர்கள் என்றார்.
- உருவ வழிபாடு செய்வதாலோ, நோன்பு இருப்பதாலோ, புனித தலங்களுக்கு செல்வதாலோ எந்தப் புண்ணியமும் கிடைக்காது. உடன் இருப்பவர்களுக்கு உதவுங்கள், ஏழைகளுக்குக் கொடுங்கள் அதுவே இறைவனை அடையும் வழியாகும்.
- நேர்மையான வழியில் பிறரை ஏமாற்றாமல் பொருளீட்டுங்கள்.

### சமயக்கொள்கைகள்

சீக்கிய சமயக் கொள்கைகள் **குர்மத், குர்தர்ஷன்** என்று பிரித்து விளக்கப்படுகிறது.



XII Ethics_Lesson 4.indd 81 05-04-2019 10:42:59

www.tntextbook.org

குர்மத் என்பது சீக்கிய சமயத்தையும், குர்தர்ஷன் என்பது சீக்கிய தத்துவத்தையும் குறிக்கும். ஒழுக்கம், பணிவு, நேர்மை, தருமம், உண்மை, கருணை போன்றவை இவர் போதனைகளில் முக்கிய இடம் பெற்றன. இறைவனின் பெயரை எப்போதும் உச்சரித்தல், உடலாலும், உள்ளத்தாலும் குருவிற்கு கீழ்ப்படிந்து நடத்தல் போன்றவை சீக்கியர்களின் முக்கிய கடமையாகும். இறைவனின் திருநாமங்களை இனிய பாடல்களால் இசையுடன் பாடி இதயத்தைத் தூய்மை செய்ய வேண்டும் என்பது இவரது கொள்கையாகும்.

### கடவுள் (சத்நாம்)

கடவுள் ஒருவரே, அவர் இரண்டாகவோ, மூன்றாகவோ பலவாகவோ இல்லை. அவர் வடிவமற்றவர் எனினும் அவரது ஒளி அனைத்து படைப்புகளிலும் உள்ளும், புறமுமாக விளங்குகின்றது. அவர் **ஏக் – ஓம்கார** என அழைக்கப்படுகிறார்.

### குரு

சீக்கியம் குருவின் மூலமாக மட்டுமே கடவுளின் அருளைப் பெறமுடியும் எனக்குறிப்பிடுகிறது. குருவைக் கடவுளுக்கு அடுத்த நிலையில் உள்ள சக்தியாகக் கருதுகிறது.

### வீடுபேறு

சீக்கிய சமயத்தில் "ஸச், கண்ட, சூன்ய," போன்ற பல பெயர்களால் வீடுபேறு குறிக்கப்படுகிறது. வீடுபேறு என்பது, மனிதன் கடவுளாக மாறுகின்ற இறைநிலையைக் குறிப்பதாகும். உண்மையான வாழ்க்கையின் மூலம் மனிதன் வீடுபேறு அடையமுடியும் என இச்சமயம் கூறுகிறது.

### புனித நூல் ஆதிகிரந்தம்

குருநானக்கின் போதனைகளும் வழிபாட்டுப்பாடல்களும் வாய்வழியாகவே இருந்தன. அதை சீக்கிய சமயத்தின் 5வது சமயகுருஅர்ஜுன்சிங் **ஆதிகிரந்தம்** என்றபெயரில் தொகுத்தார். **கடவுளின் சொல்** என்ற பெயரால் இந்நூல் வழங்கப்படுகிறது. இது குர்முகி எழுத்து வடிவத்தில் உள்ளது. தற்போது குரு கிரந்தசாகிப் என்ற பெயராலும் வழங்கப்படுகிறது. இதற்குக் "குருவின் சொல்" எனப்பொருள்.

> **சீக்கிய சமயத்தின் தனித்த அடையாளங்கள்**
>
> 10ஆவது குருவான குருகோவிந்த்சிங், சீக்கியர்களின் சின்னங்களாகக் கீழ்க்காண்பனவற்றை அறிவித்தார்.
>
> "பஞ்ச காக்கர்" என்னும் ஐந்து அடையாளங்கள் (5K 's)
>
> 1. கேஷ் – வெட்டப்படாதமுடி
> 2. கங்க – மரத்தாலான சீப்பு
> 3. கச்சாஹெரா – அரைக்கால்சட்டை
> 4. கரா – இரும்புக் கைவளையல்
> 5. கிர்பான் – குறுவாள்

### குருத்துவாரா

சீக்கியர்களின் வழிபாட்டுத் தலங்கள் குருத்துவாராக்கள் என அழைக்கப்படுகின்றன. குருத்துவாராக்கள் என்ற சொல்லிற்குக் குருவை அடையும்வழி என்று பொருள். அங்கு ஆதிகிரந்தம் வைக்கப்பட்டிருக்கும். அதில் **லாங்கர்** என்னும் சமபந்தி உணவுக் கூடங்களும் அமைந்திருக்கும்.

### சீக்கிய சமயத்தின் இரு பிரிவுகள்



அமிர்தசரஸ் பொற்கோயில்



XII Ethics_Lesson 4.indd 82 05-04-2019 10:43:00

www.tntextbook.org

சீக்கிய சமயத்தில் இரு பிரிவுகள் காணப்படுகிறது. அவை 1. நாம்தாரி, 2. நிரங்காரி ஆகும்.

- நாம்தாரி (குருவிடமிருந்து வார்த்தைகளைப் பெற்றவர்கள்) – நிறுவியவர்:பாபா ராம்சிங்
- நிரங்காரி (உருவமற்ற இறைக்கொள்கை) – நிறுவியவர்: பாபா தயாள்தாஸ்

## கால்சா அமைப்பு

**கால்சா** என்றால் **தூய்மை** எனப்பொருள். இதில் சேருபவர்கள் அகாலி (இறவாதவன்) என அழைக்கப்பட்டனர்.

பத்தாவது குரு கோவிந்தசிங் இவ்வமைப்பைத் தோற்றுவித்தார். ஒன்பதாவது குரு தேக்பகதூரை முகலாய அரசர் ஔரங்கசீப் கொன்றதால், கோபமடைந்த கோவிந்த்சிங் சீக்கிய சமயத்தினரை இராணுவ அமைப்பாக மாற்றினார். இதுவே கால்சா எனப்படுகிறது.

## இந்தியப் பண்பாட்டிற்குச் சீக்கிய சமயத்தின் கொடைகள்

- இந்து, இஸ்லாமிய ஒற்றுமையே சீக்கிய சமயத்தின் முக்கியக் கொடையாகும். இந்தியாவின் பன்முகப் பண்பாட்டிற்குச் சீக்கிய சமயம் ஓர் அடையாளமாகத் திகழ்கிறது.
- கடுமையான போராட்ட வாழ்க்கைமுறையைக் கொண்ட இனமாதலால், இவர்கள் நாட்டுப்பற்றுடன் இந்திய இராணுவத்தில் முக்கியப் பங்கு வகிக்கின்றனர்.
- அன்பு, கொடை, சகிப்புத்தன்மை, சடங்குகளை மறுத்தல் போன்றவற்றை இச்சமயம் போதிக்கிறது.
- இந்தியப்பண்பாட்டு அடையாளங்களை அந்நியர்களிடமிருந்து பாதுகாத்து, இன்றும் அவற்றைப் போற்றுவது சீக்கிய சமயமாகும்.
- இன்று உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் சீக்கியர்கள், இந்தியப்பண்பாட்டின் பெருமைகளைப் பறைசாற்றுகின்றனர். இங்கிலாந்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் இவர்களின் வழிபாட்டுத் தலங்கள் உள்ளன.

## நிறைவுரை

சமயங்கள் மனிதவாழ்வின் அடித்தளமாக அமைகின்றன. இந்தியப்பண்பாட்டை வடிவமைத்த இந்து, சமணம், பௌத்தம், இஸ்லாம், சீக்கியம் போன்ற மதங்கள் மக்களிடம் அன்பு, கொடைத்தன்மை, ஒழுக்கம், சகிப்புத்தன்மை, தேசியஒருமைப்பாடு போன்றவற்றைப் போதித்து நல்வழிபடுத்துகின்றன. சமயங்களின் வளர்ச்சியால் இந்தியாவில் இசை, ஓவியம், நடனம், சிற்பம், கட்டடக்கலை போன்ற துறைகள் வளர்ச்சி பெற்றுவருகின்றன. சமயங்களே மக்களின் தனிமனிதக் கடமை, சமூகக் கடமை போன்றவற்றைக் கற்பித்து அவர்களை நல்வழிபடுத்துகின்றன.



XII Ethics_Lesson 4.indd 83 05-04-2019 10:43:00

www.tntextbook.org

# பயிற்சி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. 'Religio' என்பது எந்த மொழியிலிருந்து பெறப்பட்ட சொல்

   அ) கிரேக்கம் ஆ) இலத்தீன் இ) ஆங்கிலம் ஈ) வடமொழி

2. சைவசமயத் தத்துவத்தின்படி 'பசு' என்பது, இதனைக் குறிக்கும்.

   அ) உடல் ஆ) கன்மம் இ) உயிர் ஈ) மாயை

3. கீழ்க்காணும் கூற்றையும் அதன் விளக்கத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று: 'அத்வைதம்' என்பதற்கு இரண்டு அல்ல, ஒன்றே என்பது பொருள்.

   விளக்கம்: பிரம்மமும் ஆன்மாவும் இரண்டல்ல, அவை ஒன்றே என்பதை அத்வைதம் வலியுறுத்துகிறது.

   அ) கூற்று சரி, விளக்கம் தவறு ஆ) கூற்று, விளக்கம் இரண்டும் சரியானவை

   இ) கூற்று தவறு, விளக்கம் சரி ஈ) கூற்று, விளக்கம் இரண்டும் தவறானவை

4. பொருந்தாத இணையைச் சுட்டிக்காட்டுக.

| சமயம் | | வழிபடப்படுபவர் |
|---|---|---|
| அ) காணாபத்யம் | – | கணபதி |
| ஆ) கௌமாரம் | – | சந்திரன் |
| இ) சாக்தம் | – | சக்தி |
| ஈ) சௌரம் | – | சூரியன் |

MLXJML

5. பின்வருவனவற்றுள் மகாயானத்திற்குப் பொருந்தாத கூற்றைக் கண்டறிக.

   அ) புத்தருக்கு உருவ வழிபாடு உண்டு

   ஆ) துறவறம் வலியுறுத்தப்படவில்லை

   இ) பாலி மொழிக்கு முதன்மை அளிக்கப்பட்டது

   ஈ) ஆன்மா உண்டு என நம்புகிறது

6. மந்திரங்களின் அரசி எனப்படுவது

   அ) காயத்ரி மந்திரம் ஆ) யஜுர் வேத மந்திரம்

   இ) உபநிடதம் ஈ) சம்ஹிதைகள்

7. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்புகளைக் கண்டறிக.

| சமயம் | | புனித நூல் |
|---|---|---|
| 1. பௌத்தம் | – | ஆதிகிரந்தம் |
| 2. இஸ்லாம் | – | திருக்குரான் |
| 3. சமணம் | – | திரிபீடகம் |
| 4. ஜொராஸ்டிரியம் | – | ஜென்ட் அவஸ்தா |

   அ) 1, 2 சரியானவை ஆ) 2, 3 சரியானவை இ) 1, 4 சரியானவை ஈ) 2, 4 சரியானவை

8. கீதை உணர்த்தும் மார்க்கங்களின் எண்ணிக்கை

   அ) ஒன்று ஆ) இரண்டு இ) மூன்று ஈ) நான்கு

9. ஜீனர் என்ற சொல்லின் பொருள்

   அ) புலன்களை அடக்கியாள்பவர் ஆ) திசைகளை ஆடைகளாக அணிபவர்

   இ) பிறவிப் பெருங்கடலை நீந்துபவர் ஈ) வெண்ணிற ஆடை அணிபவர்



XII Ethics_Lesson 4.indd 84 05-04-2019 10:43:00

www.tntextbook.org

10. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ. அகிம்சை | – | 1. பிரம்மச்சரியம் |
| ஆ. வாய்மை | – | 2. தீங்கிழைக்காமை |
| இ. அஸ்தேயம் | – | 3. உண்மையே பேசுதல் |
| ஈ. தன்னடக்கம் | – | 4. திருடாமை |

அ) அ – 3, ஆ – 4, இ – 2, ஈ – 1
ஆ) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2
இ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1
ஈ) அ – 4, ஆ – 1, இ –2, ஈ – 3

## குறுவினா

1. சமயம் என்றால் என்ன ? சிறுகுறிப்பு வரைக.
2. ஐந்து வேள்விகள் (பஞ்சயக்ஞம்) பற்றிக் குறிப்பு வரைக.
3. அறுவகைச் சமயங்கள் யாவை ?
4. துவைதம் – சிறு குறிப்பு வரைக.
5. பஞ்ச மஹாவிரதம் என்பவை யாவை ?
6. திரிரத்தினங்கள் என்பவை யாவை ?
7. புத்தர் கூறிய நான்கு பேருண்மைகளைக் குறிப்பிடுக.
8. ஜென்ட் அவஸ்தா குறிப்பு வரைக.
9. கலிமா என்றால் என்ன ?
10. குருநானக்கின் போதனைகள் யாவை ?

## சிறுவினா

1. இந்து என்ற சொல்லின் பொருள் யாது ? இச்சமயத்தின் வேறு பெயர்களைக் குறிப்பிடுக.
2. சைவ சமயத்தின் முப்பெரும் உண்மைகள் யாவை ?
3. விஷ்ணுவின் பத்து அவதாரங்கள் யாவை ?
4. ஆகமங்கள் – குறிப்பு வரைக.
5. சமண சமயம் கூறும் ஒன்பது வாழ்வியல் நெறிகள்(நவபதார்த்தங்கள்) யாவை ?
6. பௌத்த சமயத்தின் அஷ்டாங்க மார்க்கங்கள் யாவை ?
7. பௌத்தசமய மாநாடுகள் யாருடைய ஆட்சிக்காலத்தில் நடைபெற்றன? அம்மாநாடுகளில் நடைபெற்ற நிகழ்வுகள் யாவை?
8. கிறித்துவ சமயக் கோட்பாடுகள் யாவை ?
9. இஸ்லாம் சமயத்தின் பிரிவுகள் யாவை ?
10. இந்தியப் பண்பாட்டிற்குச் சீக்கிய சமயம் அளித்த கொடைகளைக் குறிப்பிடுக.

## நெடுவினா

1. இந்தியப் பண்பாட்டிற்கு இந்து சமயத்தின் கொடைகள் பற்றி விவரிக்க.
2. இந்தியப்பண்பாட்டிற்கு சமண சமயத்தின் கொடைகள் பற்றி விவரிக்க.
3. பௌத்த சமயத்தின் இருபிரிவுகளான மகாயானத்திற்கும் ஹீனயானத்திற்கும் உள்ள வேறுபாடுகளைப் பட்டியலிடுக.
4. மரபு தெய்வங்களுக்கு அளிக்கப்பட்ட இன்றியமையாமை குறித்து எழுதுக.
5. இந்தியப் பண்பாட்டிற்கு இஸ்லாமிய சமயத்தின் கொடைகள் யாவை ?
6. கிறித்தவ சமயத் தொண்டு நிறுவனங்களின் பணிகள் யாவை ?



XII Ethics_Lesson 4.indd 85 05-04-2019 10:43:00

# அலகு 5

# இந்தியப் பண்பாட்டிற்குப் பேரரசுகளின் கொடை

ZIJECH

## கற்றல் நோக்கங்கள்

- மௌரியப் பேரரசு– ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய, கலை, கட்டடக்கலை ஆகியவற்றைப் பற்றி மாணவர்கள் அறிதல்.
- குஷாணர்கள், குப்தர்கள் கால ஆட்சிமுறை, சமூக பொருளாதார, சமயநிலை, கலை, கட்டடக்கலை பற்றி மாணவர்கள் அறிதல்.
- சாளுக்கியர்கள், பல்லவர்கள், சோழர்கள், ராஷ்டிரகூடர்கள், பிற்காலப் பண்டியர்கள், ஹொய்சாளர்கள் கால ஆட்சிமுறை மற்றும் அவர்களின் சமூக, பொருளாதார, சமய, கலை, கட்டடக்கலை, பண்பாட்டுக் கொடை பற்றி மாணவர்கள் அறிதல்
- டெல்லி சுல்தானியர்கள் கால ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய, கலை, கட்டடக்கலை, பண்பாட்டுக் கொடை பற்றி மாணவர்கள் அறிதல்
- பாமினி, விஜயநகர அரசுகள் கால ஆட்சிமுறை மற்றும் அவர்களின் சமூக, பொருளாதார, சமய, கலை, கட்டடக்கலை, பண்பாட்டுக்கொடை பற்றி மாணவர்கள் அறிதல்
- முகலாயப் பேரரசு கால ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய, கலை, கட்டடக்கலை, பண்பாட்டுக்கொடை பற்றி மாணவர்கள் அறிதல்.

## நுழைவு வாயில்

இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட முதல் பேரரசான மௌரியப் பேரரசு காலத்திலிருந்து கலை, கட்டடக்கலை, ஆட்சிமுறை போன்றவற்றில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. மேலும், புதிய ஆட்சிமுறையைத் தொடங்கி வைத்தனர். குப்தப் பேரரசு, மௌரியப் பேரரசுக் கூறுகளை விரிவுபடுத்துவதில் முக்கிய பங்காற்றியது. இந்தியப் பண்பாட்டிற்கும் இந்து சமயத்திற்கும் அளப்பரிய பணியினை ஆற்றியுள்ளது. குப்தர்களின் அறிவியல்நோக்கு இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு வித்திட்டன. குஷாணர்கள் காலத்தில் பௌத்த சமயமும், கலை, கட்டடக் கலையும் உலகநாடுகளுக்குப் பரவியது. சாளுக்கிய நாட்டிலிருந்து தமிழகத்தில் கணபதி வழிபாடு, காணபத்யம் என்ற புதிய சமயப்பிரிவாக அறிமுகப்படுத்தப்பட்டது. பல்லவர்கள் குடைவரைக் கோயில்கள், ஒற்றைக்கல் இரதங்கள் ஆகியவற்றை உருவாக்கி, இந்தியப் பண்பாட்டுப் பாரம்பரியத்தைப் பாதுகாத்தனர். இவர்களுக்குப்பின் வந்த சோழர்கள் ஆட்சிமுறை, கலை, கட்டடக்கலை, இலக்கியம், சமயச் சகிப்புத்தன்மை போன்றவற்றைப் பரப்புவதில் மற்றப் பேரரசுகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தனர்.

பிற்காலப் பாண்டியர் காலத்தில், பொருளாதாரத்தில் வியக்கத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டது. வாணிபக் குழுக்கள், அயல்நாட்டு வாணிபம் மூலம் உள்நாட்டு வருவாயைப் பெருக்கின. இன்று நாம் பின்பற்றும் அளவை முறைகளுக்கு(Measurement)முன்னோடி, பாண்டியர் கால அளவைகளே ஆகும்.




XII Ethics_Lesson 5.indd 86 05-04-2019 11:12:20

ராஷ்டிரகூடர்கள், ஹொய்சாளர்கள் காலத்தில் கன்னடமொழி மறுமலர்ச்சி பெற்றது. முகலாயப் பேரரசின் நிருவாகக் கூறுகளே தற்கால இந்தியாவின் பிர்கா, பஞ்சாயத்து போன்ற நிருவாக முறைக்கு காரணமாகும்.

## 5.1 மௌரியர் காலப் பண்பாடு

பழங்கால இந்தியாவின் ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய நிலைகளின் வளர்ச்சிக்கும் நுண்கலைகளின் உருவாக்கத்திற்கும் மௌரியர்களே அடித்தளமிட்டனர். மௌரிய மன்னர்களுள் சந்திரகுப்தர், பிந்துசாரர், அசோகர் ஆகியோர் இந்தியப் பண்பாட்டிற்கு அளித்த கொடை குறிப்பிடத்தக்கது.

### சான்றுகள்


சாணக்கியர்

மௌரியர்களின் ஆட்சியைப் பற்றி அறிய **கௌடில்யர்** (சாணக்கியர்) எழுதிய **அர்த்தசாஸ்திரம், விசாகதத்தர்** எழுதிய **முத்ரா ராட்சசம், தேவி சந்திரகுப்தம்,** கிரேக்கப் பயணி **மெகஸ்தனிஸ்** எழுதிய **இண்டிகா,** மகாவம்சம், தீபவம்சம் போன்ற பௌத்த நூல்கள், மாமன்னர் அசோகரின் கல்வெட்டுகள், நாணயங்கள் போன்றவை சான்றுகளாக உள்ளன.

### மௌரியர்களின் ஆட்சிமுறை

**அர்த்த சாஸ்திரம்** என்ற நூல் மௌரியர்களின் ஆட்சிமுறை குறித்த தகவல்களைத் தெரிவிக்கிறது. இந்நூல், மௌரிய ஆட்சிமுறையின் 'வேதம்' எனப்படுகிறது. அர்த்த சாஸ்திரம், மன்னனின் நிர்வாகமுறை எவ்வாறு இருக்க வேண்டுமென்று வரையறையைத் தருகிறது. நாட்டில் தர்மத்தையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டியது மன்னனின் கடமையாகும். அரசனின் இக்கடமைகள் **இராஜ்ய தர்மம்** எனப்பட்டது. அரசனுக்கு நிர்வாகத்தில் உதவி செய்ய 12 உறுப்பினர்கள் கொண்ட குழு இருந்தது. மௌரியப் பேரரசு நான்கு பெரும் மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. தட்சசீலம், உஜ்ஜயினி, தோசாலி, சுவர்ணகிரி ஆகிய நகரங்கள் அம்மாகாணங்களின் தலைநகரங்களாக விளங்கின. **மகாமாத்திரர்கள்** என்றழைக்கப்பட்ட ஆளுநர்கள் இம்மாகாணங்களை ஆட்சி செய்தனர். அரசனுக்கு உதவ அமைச்சரவைக் குழு ஒன்று இருந்தது. அதில் புரோகிதர் (அரசகுரு), சேனாதிபதி (படைத்தலைவர்), சன்னிதத்தா (கருவூல அதிகாரி), சம்ஹர்தர் (வரி வசூல் செய்பவர்), பிரதிஹாரா (மன்னனின் தனி உதவியாளர்), பிரசஸ்தா (காவல்துறைத் தலைவர்), நியாயாதீஷ் (தலைமை நீதிபதி), அந்தபாலா (எல்லைப்புறப் பாதுகாவல் அதிகாரி), பௌர் (தலைநகர ஆளுநர்), அத்வர்வம்சிகா (பெண் பாதுகாவல் அதிகாரி), துர்க்கபாலா (கோட்டைப் பாதுகாவல் அதிகாரி) ஆகியோர் முக்கிய இடம் வகித்தனர்.

மாகாண வருவாய்த்துறை அதிகாரி **ராஜுகர்கள்** எனப்பட்டனர். மௌரிய மாகாணங்கள் பல மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. அம்மாவட்டங்களை **ஸ்தானிகர்** என்ற தலைமை அதிகாரியும் நிர்வகித்தார். மாவட்ட ஆட்சியருக்கு உதவ **யுக்தர்கள்** என்ற துணை அதிகாரிகள் இருந்தனர்.


நகரங்களின் நிர்வாகத்தைக் கண்காணித்த அதிகாரி **நகரிகா** எனப்பட்டார். நகரத்தலைமை அதிகாரிகளின் பணிகள் பற்றி மெகஸ்தனிஸ், கௌடில்யர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். மௌரியர்களின் தலைநகரான பாடலிபுத்திரம் தலா ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட ஆறு குழுக்களால் நிர்வகிக்கப்பட்டது. கிராம நிர்வாகத்தைக் கிராமணி என்ற அதிகாரி கவனித்தார். பத்து முதல் பதினைந்து கிராமங்களைச் சேர்த்து நிர்வகித்தவர் **கோபன்** எனப்பட்டார்.

### படை நிர்வாகம்

படை நிர்வாகத்தைச் **சேனாதிபதி** என்ற தலைமைத்தளபதி கவனித்தார். யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை போன்ற



XII Ethics_Lesson 5.indd 87 05-04-2019 11:12:20



பிளினி

படைகள் முக்கியத்துவம் பெற்றன. கிரேக்க நாட்டறிஞர் **பிளினி**(Pliny) என்பவர் மௌரியர்களின் படையில் ஆறு லட்சம் காலாட்படையினரும், முப்பதாயிரம் குதிரைப்படை வீரர்களும், ஒன்பதாயிரம் யானைப்படைவீரர்களும், எட்டாயிரம் தேர்ப்படைவீரர்களும் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். கடற்படை மற்றும் போக்குவரத்து நிலைப்படை ஆகியவையும் இருந்தன. சேனாதிபதியின் கீழ் படைகளை **ஆயுதகரஅத்யக்ஷா** என்ற அதிகாரிகள் மேற்பார்வையிட்டனர்.

## நீதி மற்றும் காவல் நிர்வாகம்

மௌரியர் கால நீதிமன்றங்கள் பற்றிக் கௌடில்யர், தமது நூலில் குறிப்பிட்டுள்ளார். மௌரியர் காலத்தில் நிறுவப்பட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் **தர்மஸ்தானியம்** என்றும், குற்றவியல் நீதிமன்றங்கள் **கண்டக சோதனங்கள்**(Civil Court) என்றும் அழைக்கப்பட்டன. நீதிபதிகள் தர்மாதிகாரி என்றழைக்கப்பட்டனர்.

## வருவாய் நிர்வாகம்

நிலவரியே முதன்மையான வரியாக இருந்தது. விளைச்சல் வருவாயில் ஆறில் ஒரு பங்கு வரியாக விதிக்கப்பட்டது. நீர்ப்பாசனவரி, படகுவரி, வனவரி, சுரங்கவரி என்று பலவரிகள் விதிக்கப்பட்டன. அயல்நாட்டு வாணிகத்தை முறைப்படுத்தும் விதமாகச் சுங்கவரி விதிக்கப்பட்டது. நிலவரி **பாகா** என்ற பெயரிலும், பழங்கள் மீதான வரி **பலி** என்ற பெயரிலும் அழைக்கப்பட்டன.

## ஒற்றர்முறை

மௌரிய மன்னர்களான சந்திரகுப்த மௌரியர், பிந்துசாரர் ஆகியோர் ஒற்றர்களை(Spy) நியமித்து நாட்டைக் கண்காணித்தனர். அசோகர் ஒற்றர் முறையைப் பரவலாக்கினார். மௌரியர் கால ஒற்றர்களைக் **குதபுருஷர்கள்** என்றழைத்தவர் கௌடில்யர் ஆவார்.

## மௌரியர்கள் காலச் சமூகநிலை

மௌரியர்கள் காலத்தில், சமூகத்தில் நிலவியிருந்த வர்ணாஸ்ரமமுறை மேலும் வலுவடைந்தது. இந்தியாவில் அலெக்சாந்தரின் படையெடுப்பிற்குப் பின்னர், கிரேக்கர்கள் இந்தியர்களுடன் மண உறவு கொண்டனர். இதனால் இந்தோ – கிரேக்க என்ற புதிய சமூகப் பிரிவு தோன்றியது. இதனால் கிரேக்கப் பண்பாட்டுக் கூறுகள் இந்தியப் பண்பாட்டுக் கூறுகளுடன் ஒன்றிணைந்தன. மெகஸ்தனிஸ் இந்தியச் சமூகத்தில் தத்துவஞானிகள், தோட்டக்காரர்கள், கால்நடை வளர்ப்போர், கைவினைஞர்கள், இராணுவ வீரர்கள், கண்காணிப்பாளர்கள், மதிப்பீட்டாளர்கள் ஆகிய 7 பிரிவினர் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். மௌரியர் காலத்தில் புகழ்பெற்றிருந்த தட்சசீலப்பல்கலைக்கழகம் பல கல்வியாளர்களையும் ஆட்சியாளர்களையும் உருவாக்கியது. மௌரியர் காலத்தில் ஆணாதிக்கச் சமூகம் வலுபெற்றது. ஆனால், உயர்குடிப் பெண்கள் சுயம்வரம் உள்ளிட்ட உரிமைகளைப் பெற்றிருந்தனர். பருத்தி, கம்பளி போன்ற ஆடைகளையும் தங்கம், வெள்ளி போன்ற அணிகலன்களையும் மக்கள் அணிந்தனர்.

## மௌரியர்கள் கால பொருளாதார நிலை

வேளாண்மை முக்கியத் தொழிலாக இருந்தது. விளைச்சல் அடிப்படையில் மக்களின் பருவ மற்றும் ஆண்டு வரிகள் விதிக்கப்பட்டன. அரசின் விவசாயப் பண்ணைகளைச் **சித்தியக்ஷா** என்ற அதிகாரி நிர்வகித்தார். நியார்கஸ்(Nearchus) என்ற கிரேக்கர் மௌரியர் கால கைத்தொழில்கள், மட்பாண்ட உற்பத்தித் தொழில் போன்றவை பற்றிப் புகழ்ந்து குறிப்பிடுகிறார். பெண்கள் பல்வேறு விதமான காதணிகளை அணிந்ததாகவும், உற்பத்தி செய்ததாகவும் **அர்ரியன்** (Arrian) என்பவர் குறிப்பிடுகிறார். கனிம வளங்கள் நிறைந்திருந்த



XII Ethics_Lesson 5.indd 88 05-04-2019 11:12:20

சோட்டாநாக்பூர் பீடபூமியிலிருந்து வெட்டியெடுக்கப்பட்ட இரும்பு, செம்பு, வெள்ளி போன்ற உலோகங்களைக் கொண்டு ஆயுதங்களும், அணிகலன்களும் தயாரிக்கப்பட்டன. உலோக வேலை செய்வோர், தச்சுவேலை செய்வோர். மீன்பிடித் தொழில் செய்வோர் போன்றோர்கள் சமூகநிலையிலும், பொருளாதார நிலையிலும் முக்கியத்துவம் பெற்றிருந்தனர். சுரங்கத் தொழிலை அரசே ஏற்று நடத்தியது.

வணிகர்கள் தங்களுக்குள் **'ஸ்ரேனி'** என்ற வணிகக் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டனர். தட்சசீலம், கௌசாம்பி, பாடலிபுத்திரம், உஜ்ஜயினி போன்ற நகரங்கள், மௌரியர் கால முக்கிய வணிக மையங்களாகத் திகழ்ந்தன. **தாமிரலிப்தி** என்ற துறைமுகம் சிறப்பு பெற்றது. பருத்தி, கம்பளியாலான ஆடைகள் முத்துகள் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. தங்கம், வெள்ளி போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன. வணிகர்கள் கிரீஸ், சிரியா, எகிப்து போன்ற நாடுகளுடன் வாணிப உறவு வைத்திருந்தனர். வணிகப் பரிமாற்றத்தில் **'நிஷ்கா'** என்ற தங்க நாணயமும், மயில், குன்று, வளர்பிறை பொறிக்கப்பட்ட **'பனா'** என்ற வெள்ளி நாணயமும், **கர்சபனா** என்றழைக்கப்பட்ட செப்பு நாணயமும் வழக்கத்திலிருந்தது.

## மௌரியர்கள் கால சமயநிலை

இந்து, சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களை மக்கள் பின்பற்றினர். இந்துக்களிடத்தில் உருவ வழிபாட்டு முறை அதிகரிக்கத் தொடங்கியது. கிருஷ்ணர், பலராமன், சிவன், இந்திரன் போன்ற கடவுளை மக்கள் வழிபட்டனர். கங்கை, யமுனை போன்ற நதிகளைத் தாயாகக் கருதி மக்கள் வழிபட்டனர். சந்திரகுப்த மௌரியர் பத்ரபாகு என்ற சமணத்துறவியால் சமணத்திற்கு மதமாற்றம் செய்யப்பட்டபின் அரசப்பதவியைத் துறந்து நாடு முழுவதும் சமண சமயத்தைப் பரப்பினார். அவர் தற்போதைய கர்நாடகத்திலுள்ள **சிரவணபெலகோலா** (மைசூருக்கருகில்) என்ற இடத்தில் உண்ணா நோன்பிருந்து உயிர் துறந்தார். அவரது இறப்பிற்குப்பின் **'சந்திரபாஸ்டி'** என்ற இடத்தில் அவருக்குக் கோயில் கட்டப்பட்டது.

**சல்லேகனம்** – இது சமணத்துறவிகள் பின்பற்றும் உண்ணா நோன்பு முறையாகும். தம் வாழ்வைத் தாமாகவே முடித்துக் கொள்ள விரும்பும் சமணத்துறவிகள் வடதிசையை நோக்கி உண்ணாநோன்பிருந்து உயிர்நீங்கும்வரை கடுந்தவம் செய்வதை இந்நோன்பு முறை குறிப்பிடுகிறது.

கி.மு. (பொ.ஆ.மு.) 261 இல் நடைபெற்ற **கலிங்கப்போர்** வெற்றிக்குப்பின் அசோகர், உபகுப்தர் என்ற சமயத்துறவியால் பௌத்த சமயத்திற்கு மாற்றப்பட்டார். இவர் பௌத்த சமயத்தையும் அறக்கருத்துக்களையும் பரப்ப **தர்மமகாமாத்திரர்கள்** என்ற அதிகாரிகளை நியமித்தார். பௌத்த சமயத்தை மக்களின் சமயமாகப் பரப்புவதில் ஈடுபட்டார். தன் தலைநகரான பாடலிபுத்திரத்தில் **மொக்காலி புத்ததிசா** என்பவர் தலைமையில் அசோகர் மூன்றாம் புத்த சமய மாநாட்டைக் கூட்டினார். திபெத், சீனா, பர்மா போன்ற நாடுகளுக்குப் பௌத்த சமயத்தைப் பரப்பத் துறவிகளை அனுப்பினார். இலங்கையில் பௌத்த சமயத்தைப் பரப்ப தன் மகன் மகேந்திரனையும் மகள் சங்கமித்திரையையும் அனுப்பினார். பௌத்த சமயம் உலக சமயமாக மாற்றப்படுவதில், அசோகர் முக்கிய பங்கு வகித்தார். தாமும் புத்தரின் வாழ்வுடன் தொடர்புடைய லும்பினி, ரும்மிண்டி, நீக்லிவா, கயா, குசிநகரம் ஆகிய இடங்களுக்குச் சென்று வழிபட்டார். அசோகர் பரப்பிய அவரது கோட்பாடுகள் **அசோக தம்மம்** எனப்பட்டன. அதன்படி ஒவ்வொருவரும்,

- தாய் தந்தைக்குப் பணிவிடை செய்தல். அகிம்சையைக் கடைப்பிடித்தல், உண்மையை நேசித்தல், ஆசிரியர்களைப் போற்றுதல், உறவினரை மதிப்புடன் நடத்துதல்



XII Ethics_Lesson 5.indd 89 05-04-2019 11:12:20

- சமயச் சடங்குகளைத் தவிர்ப்பதுடன், திருவிழாக்களில் விலங்குகள் பலியிடப்படுவதைத் தடுத்தல்
- தர்மயாத்திரை மேற்கொண்டு தர்மத்தைத் பரப்புதல்
- பணியாளர்களையும், கைதிகளையும் அரசின் அதிகாரிகள் மனிதாபிமானத்துடன் நடத்துதல்.
- மன்னரையும், பிராமணர்களையும், சான்றோர்களையும் போற்றுதல்
- சமய சகிப்புத் தன்மையைக் கடைபிடித்தல்
- போரைத்தவிர்த்துத் தர்மத்தின்வழி நடந்து, வாழ்வில் வெற்றி பெறுதல் போன்றவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றார்.

## இலக்கியம்

மௌரியரின் ஆட்சிக்காலத்தில் சமஸ்கிருதம், பாலி, பிராகிருதம் போன்ற மொழிகள் வட இந்தியா முழுதும் சிறப்புப் பெற்றிருந்தன. தமிழ் தென்முனையில் வழக்கிலிருந்தது. இந்திய கிழக்குப் பகுதியில் பிராகிருத மொழியே அரசாங்க மொழியாக இருந்தது. இலக்கியத்திற்குச் சமஸ்கிருதமும், பேச்சுவழக்கிற்குப் பாலி மொழியும் மக்களிடத்தில் எளிமையாகக் கையாளப்பட்டன.

உங்களுக்குத் தெரியுமா?

**மௌரியக் காலத்தில் இலக்கியப் படைப்புகள்**

| | |
|---|---|
| கௌடில்யர் | – அர்த்த சாஸ்திரம் |
| பத்ரபாகு | – கல்பசூத்திரம் |
| வ்யாதி | – வியாக்கரணம் (இலக்கணம்) |
| பாணினி | – அஸ்டத்யாயி |
| சுபந்து | – வாசவதத்தா நாட்டிய தாரா (நாட்டிய கலை) |
| பிங்கலர் | – சந்த சூத்திரங்கள் |
| வாமனர் | – காவியலங்கார சூத்திரவிருத்தி |
| சிலாலின் கிருசாஸ்வர் | – நாடக சூத்திரங்கள் |
| பௌத்த சமயநூல் | – திரிபீடகங்கள் |
| வேதாந்த நூல்கள் | – கிருஹ்ய சூத்திரம் |

## நுண்கலைகள்

ஸ்தூபிகள், சைத்தியங்கள், விகாரங்கள் போன்றவை மௌரியர் கால கட்டடக் கலையில் முக்கியத்துவம் பெற்றன. இறந்தவர்கள் (பௌத்த ஞானிகள், பௌத்த சமயத்தைப் பின்பற்றிய அரசர்கள்) நினைவாக எழுப்பப்பட்ட வட்ட வடிவக் குவிமாடம்கொண்ட கட்டிடங்களே **ஸ்தூபிகள்** எனப்பட்டன. பௌத்தர்களின் தியானக் கூடங்கள் '**சைத்தியங்கள்**' எனப்பட்டன. பௌத்த குருமார்களின் விடுதிகள் '**விகாரங்கள்**' எனப்பட்டன. மௌரியர்கள் ஸ்தூபிக்களை அமைப்பதில் அதிக ஆர்வம் காட்டினர். அவர்கள் காலத்தில் ஸ்தூபிகள் கட்டப்பட்டன.



ஸ்தூபி



சைத்தியங்கள்



விகாரங்கள்

இவற்றில் அசோகர் காலத்தில் போபால் அருகே சாஞ்சி என்ற இடத்தில் கட்டப்பட்ட ஸ்தூபி புகழ்பெற்றதாகும்.



XII Ethics_Lesson 5.indd 90 05-04-2019 11:12:20

இந்த ஸ்தூபி அடர்வெண்சாம்பல் நிறக்கற்களால் கட்டப்பட்டது. இது 121 ½ அடி அகலம், 77 ½ அடி உயரமும் கொண்டது. இதன் நான்கு பக்கங்களிலும் உயரமான நுழைவாயில்கள் அமைக்கப்பட்டுள்ளன. இத்தூண்கள் யாவும் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும். கல்லாலான ஸ்தூபிகளையும், குகைக் கோயில்களையும் கட்டடங்களையும் மெருகேற்றிப் பளபளப்பாக இன்றும் கண்ணாடிபோல் மின்னும் வகையில் செய்துள்ளனர்.

அசோகர் தம்முடைய 7ஆவது தூண் கல்வெட்டில் "தர்மமானது நெடுநாள் வாழும் பொருட்டு எங்கெல்லாம் கற்றூண்களும், கற்பாறைகளும் காணப்படுகின்றனவோ அங்கெல்லாம் தர்மம் ஆணைகள் பொறிக்கப்படுவதாக" என்று கூறியுள்ளார். ஆகவே, பல இடங்களில் காணப்படும் தூண்களின் அமைப்பையும், இடத்தையும் கருதி, அங்கெல்லாம் கல்வெட்டுகளைப் பொறிக்கச் செய்தார். சாஞ்சி ஸ்தூபியைப் பின்பற்றி மற்றொரு ஸ்தூபி இலங்கையிலுள்ள அனுராதபுரத்தில் கட்டப்பட்டது. சாரநாத், லௌரியாநந்தன்கர், இராம்பூர்வா போன்ற இடங்களில் எழுப்பப் பெற்றக் கற்றூண்கள் சிறப்பானவையாகும். இத்தூண்களில் திமிலுடன் கூடிய எருது, சிங்கம், போன்றவற்றிலான உருவங்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

## மௌரியர் கால கலை, கட்டடக்கலை



சாரநாத் கற்றூண்

மௌரியர் தங்கள் கலை, கட்டடக்கலையால் மிகவும் புகழ்பெற்றனர். **சாரநாத்தில்** காணப்படும் கற்றூண் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இத்தூணின் அடிப்பகுதி கவிழ்ந்த நிலையில் உள்ள ஒரு தாமரை மலர் அல்லது மணி போல் காணப்படுகிறது. அதற்கு மேல் நான்கு சக்கரங்களைப் பக்கவாட்டில் கொண்ட வட்ட வடிவ முரசு போன்ற அமைப்பு காணப்படுகிறது. தர்ம சக்கரம் என்று அழைக்கப்படும் அந்தச் சக்கரங்களில் 24 ஆரங்களும் நான்கு பக்கங்களிலும் சிங்கம், குதிரை, எருது மற்றும் யானை உருவங்களும் காணப்படுகின்றன. முரசின் மேல்பகுதியில் நான்கு சிங்கங்கள் ஒன்றையொன்று பின்புறம் ஒட்டி நிற்பதுபோல அமைந்துள்ளன. மௌரியர்கால புகழை வெளிப்படுத்தும் இந்தக் கலைப்படைப்பு, நமது நாட்டின் தேசிய சின்னத்திலும் பணத்தாள் மற்றும் நாணயங்களிலும் இடம்பெற்றுள்ளது. தர்மசக்கரம் நம் தேசியக் கொடியை அலங்கரிக்கின்றது.

**சாரநாத் கற்றூண்:** இக்கற்றூணில் யானை, திமிலுடன் கூடிய எருது, குதிரை, சிங்கம் ஆகிய விலங்குகளின் உருவங்கள் ஓடும் நிலையில் பொறிக்கப்பட்டுள்ளன. இவை மூலம் புத்தரின் வாழ்வில் நடந்த நான்கு முக்கிய நிகழ்வுகள் குறிப்பிடப்படுகின்றன. அவை

- யானை – புத்தரின் அன்னை மாயாதேவி கனவில் வெள்ளையானையைக் கண்டதை நினைவுபடுத்துகிறது.
- எருது – இளவரசர் சித்தார்த்தரின் (புத்தர்) இளமைக்கால ஆசைகளைத் தெரிவிக்கிறது.
- குதிரை – சித்தார்த்தர் (புத்தர்) ஆசைகளைத் துறந்து, அரண்மனையை விட்டு வெளியேறிய நிகழ்வைக் குறிக்கிறது.
- சிங்கம் – சாக்கியர்களின் சின்னமாக விளங்கும் இது, புத்தரின் சாதனைகளைக் குறிக்கிறது.



XII Ethics_Lesson 5.indd 91 05-04-2019 11:12:20



பராபர்குகை

அசோகர் மற்றும் அவரது பெயரன் தசரதன் ஆகியோரால் அவர்களுக்குக் கொடையாக அளிக்கப்பட்டுள்ள பராபர்குகைகள் நம் நாட்டின் பாரம்பரியச் சின்னங்களில் ஒன்றாகத் திகழ்கின்றன.

### இந்தியப் பண்பாட்டிற்கு மௌரியர்களின் கொடை

- மௌரியர்களின் ஆட்சி முறையில் மைய அரசு, தலைமைச் செயலகம், மாநில அரசுகள், நிதி, நீதி நிருவாகம், பொதுப்பணித்துறை, நகராட்சி முறை போன்றன நமக்கு அளிக்கப்பட்டுள்ள கொடைகளாகும்.
- தட்சசீலம், உஜ்ஜயினி, காசி போன்ற மௌரியர் கால பல்கலைக்கழகங்கள் இன்றும் நமது இந்தியப் பண்பாட்டு மையங்களாகச் சிறந்து விளங்குகின்றன.
- இந்து தர்மக் கோட்பாடுகளையும் அன்பு, அஹிம்சை போன்ற பௌத்த சமய நெறிகளையும் வெளிநாடுகளில் பரப்பி, இந்தியப்பண்பாட்டிற்குப் பெருமை சேர்த்தவர்கள் மௌரியப் பேரரசர்களே ஆவர்.
- மௌரியர்கள் கல்வி, கலை, இலக்கிய வளர்ச்சியில் கவனம் செலுத்தியது போன்று, பிராகிருதம் (ஆட்சிமொழி) சமஸ்கிருதம் (இலக்கியமொழி) பாலி (எளிய மக்கள் பேசும் மொழி) போன்ற மொழிகளின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் கொடுத்தனர்.
- கௌடில்யரின் அர்த்தசாஸ்திரம், இலக்கண நூலான வியாக்கரணம் போன்ற நூல்கள் இந்தியப் பண்பாட்டிற்கு மௌரியர் காலத்தில் வழங்கப்பட்ட கொடைகளாகும்.
- அசோகரின் தர்மக்கோட்பாடுகளான அகிம்சை,சத்தியம்,தயை(இரக்கம்),தானம் போன்றவை இந்தியப் பண்பாட்டிற்கு வழங்கப்பட்ட கொடையாகும்.

## 5.2 குஷாணர்காலப் பண்பாடு

குஷாணர்கள் என்போர் யூச்சி என்ற மரபைச் சார்ந்தவர்கள். இவர்களின் காலம் இந்தியப் பண்பாட்டு வரலாற்றில் கட்டடக்கலையில் சிறப்புற்று விளங்கிய காலமாகும். இம்மரபின் தலைசிறந்த மன்னர் **கனிஷ்கர்** ஆவார். இவரது காலத்தில் இந்தியப் பண்பாட்டில் **காந்தாரக்கலையும்** (Gandhara Art), பௌத்த சமயமும் வளர்ச்சி பெற்றிருந்தன.

### சான்றுகள்

- குஷாணர்கள் காலவரலாற்றைஅறிவதற்கு அவர்கள் வெளியிட்ட நாணயங்கள் சான்றுகளாக அமைந்துள்ளன.
- பௌத்த சமயநூலான மகாவிபாஷம், குஷாணர்களின் சமய நிலையைப் பற்றித் தெரிவிக்கிறது.
- காந்தாரக்கலை குஷாணர்களின் கலையையும், பண்பாட்டையும் வெளிப்படுத்துகிறது.
- சீனப்பயணி யுவான்சுவாங்கின் பயணக்குறிப்புகள், குஷாணர்களின் காலவரிசையை அறிந்துகொள்ள உதவியாக உள்ளன.

### முக்கிய அரசர்கள்

- முதலாம் காட்பீசஸ் (மரபைத் தோற்றுவித்தவர்)
- கனிஷ்கர் (புகழ்பெற்ற மன்னர்)
- வாசுதேவர் (கடைசி மன்னர்)



XII Ethics_Lesson 5.indd 92 05-04-2019 11:12:21

## குஷாணர்களின் ஆட்சி முறை

அரசனே நாட்டின் தலைவனாக விளங்கினார். அரசர்கள் **மகேசுவரன், தேவபுத்திரன்** போன்ற விருதுப் பெயர்களைச் சூட்டிக்கொண்டனர். அரசனுக்குப் பின் மூத்த மகன் அரசனாவது **பிறங்கடை** (வாரிசு) உரிமையாகும். பரந்த பேரரசு **சத்ரப்புகள், அகாரா, ஜனபதா, தேசா** என்ற பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. மதுரா, காசி, கௌசாம்பி, அயோத்தி ஆகிய பகுதிகள் சிறப்புற்று விளங்கின. மகாசேனாதிபதி என்பவர், நிர்வாகத்தில் முக்கிய இடம் வகித்தார்.

## சமுதாயம்

குஷாணர் கால சமுதாயத்தில், வருணாசிரமமுறை நடைமுறையில் இருந்தது. இருப்பினும், சமுதாயத்தில் பல தரப்பட்ட தொழிலாளர்களும் வணிகர்களும் இருந்துள்ளனர். சமூகத்தில் பெண்கள் உயர்ந்த நிலையில் காணப்பட்டனர். வீரக் கழலணிதல், கையில் கங்கணம் கட்டுதல், காதணி போன்றவற்றை ஆண்கள் அணிந்திருந்தனர். மற்போர் செய்தல் மற்றும் உடல் வலிமையை வளர்க்கும்விளையாட்டுகள்விளையாடப்பட்டன.

## பொருளாதார நிலை

நாட்டின் முக்கிய தொழிலாக வேளாண்மை விளங்கியது. வேளாண்மை சார்ந்த பிற தொழில்களும் வளர்ச்சி பெற்றிருந்தன. குஷாணர்கள் காலத்தில் உள்நாட்டு வாணிகமும் அயல்நாட்டு வாணிகமும் தடையின்றி நடந்தன. உரோம நாட்டுடன் நடந்த வணிகத்தால் அந்நாட்டுத் தங்கம் இந்தியச் சந்தைகளில் மிகுதியாகக் காணப்பட்டன. இந்தியாவின் மஸ்லீன் துணி, ரோம் நாட்டில் மிகுதியாக விற்பனையாயிற்று. தொழிற்கழகங்களும், வாணிகக்கழகங்களும் செயல்பட்டன. இவ்வணிகக் குழுவின் தலைவனாகப் **பிரமுக்** என்பவர் செயல்பட்டார்.

## சமயநிலை

குஷாணர் காலத்தில் பௌத்தசமயம், இந்துசமயம், சமண சமயம் ஆகியவை செல்வாக்குப் பெற்றிருந்தன. இவர்கள் சமயப்பொறையைக் கடைப்பிடித்தனர். இக்காலத்தில்தான், மகாயான பௌத்த சமயத்தின் மொழியாகச் சமஸ்கிருதம் இருந்தது. இந்து சமயத்திற்கு நிகராகப் பௌத்த சமயமும் வளர்ச்சி பெற்றது.

## நான்காவது பௌத்த சமய மாநாடு

இப்பௌத்த சமய மாநாடு, காஷ்மீரிலுள்ள குந்தல் வனத்தில் **வசுமித்திரர்** தலைமையில் நடைபெற்றது. அஸ்வகோசர் முன்னிலை வகித்தார். இம்மாநாட்டில் பௌத்த பீடகங்களுக்கான விளக்க உரை தொகுக்கப்பட்டுள்ளது. இவ்விளக்கவுரை **விபாஷங்கள்** எனப்பட்டன. மேலும், மகாயான பௌத்த கருத்துகளைப் பரப்ப நெறிமுறைகள் வகுக்கப்பட்டன. புத்த சமயம் இருபிரிவுகளாகப் பிரிந்தது. (ஹீனயானம் – மகாயானம்) ஹீனயானத்தைப் பின்பற்றியவர்கள் மகாவிபாஷம் என்ற பௌத்த சமய தத்துவ நூலை செப்புப் பட்டயத்தில் எழுதினர். இவர்கள் பௌத்த ஸ்தூபிகளை எழுப்பினர். மகாயானம் மத்திய ஆசியா, சீனா, ஜப்பான் ஆகிய நாடுகளிலும் ஹீனயானம் இலங்கை, பர்மா, தாய்லாந்து மற்றும் தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவின.

## மொழியும் இலக்கியமும்

குஷாணர்கள் காலத்தில் சமஸ்கிருதமொழி செல்வாக்குப் பெற்றிருந்தது. இவர்கள் காலத்தில் பல சமஸ்கிருத நூல்கள் எழுதப்பட்டன. அஷ்வகோஷரால் எழுதப்பட்ட **புத்தசரிதம், சௌந்தரநந்தம்** சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்டவையாகும். **நாகார்ஜுனர்** எழுதிய **மத்தியமிகசூத்திரம்**, வசுமித்திரர் எழுதிய மகாவிபாசசரித்திரம் போன்ற நூல்கள் இக்காலத்தவையாகும்.

## கலை, கட்டடக்கலை

கனிஷ்கர் பெஷாவர் என்ற நகரில் ஸ்தூபிகளை எழுப்பினார். கனிஷ்கபுரம் (புருஷபுரம்) என்ற புதிய நகரை நிர்மாணித்தார்.



XII Ethics_Lesson 5.indd 93 05-04-2019 11:12:21

கனிஷ்கர் காலத்தில் காந்தாரக்கலையும் மதுரா சிற்பக்கலையும் சிறப்புப் பெற்று விளங்கின.

## காந்தாரக்கலை



மதுரா கலைபாணி

காந்தாரப்பகுதியில் தோன்றி வளர்ந்த கலையே காந்தாரக்கலையாகும். இந்தியச் சிற்பக்கலையும் கிரேக்கக்கலையும் ஒன்றிணைந்து உருவான கலையே **காந்தாரக்கலை** ஆகும்.

## காந்தாரக்கலையின் சிறப்பம்சங்கள்

- மனித உருவத்தில் தசைகள், மீசை, சிகை தெரியும்படி உருவத்தை வடித்தல்.
- தடித்த ஆடைகள் அவற்றின் மடிப்புகள் தெரியும்படி வடிவமைத்தல்.
- அழகான சிற்பங்கள், அழகான ஆபரணங்கள் மற்றும் சிற்ப நுணுக்கங்கள் மூலமாக கருத்துகளை உணர்த்துதல்.
- இக்கலையின் முக்கிய கருப்பொருள், 'சிற்பக்கலை வாயிலாகவே மகாயான பௌத்த சமயக் கோட்பாடுகளைப் பரப்புதலாகும்'.
- நின்ற வடிவில் புத்தரது சிலை(Mathura Art) வடிவமைக்கப்பட்டிருத்தல்.
- காந்தாரக் கலையில் சிலையின் தலைக்குப் பின்னால் வட்ட வடிவ ஞான ஒளியை இடம்பெறச் செய்தல்.

## மதுரா கலைபாணி



காந்தாரக்கலை

தற்போதைய உத்திரப்பிரதேசத்திலுள்ள மதுரா என்னுமிடத்தில் தோன்றி வளர்ந்த கலையே மதுராகலையாகும். தொடக்கக் காலத்தில் மதுரா கலைபாணி, உள்நாட்டு கலைநயத்துடன் வளர்ச்சி பெற்றது. புத்தரது உருவங்களில் குறிப்பாக அவரது முகம் ஆன்மிகப் பொலிவு நிறைந்து காணப்பட்டது. இத்தகைய பொலிவு காந்தாரக்கலைச் சிற்பங்களில் இல்லை எனலாம். இவ்வகைக் கலைபாணியில் அமைக்கப்பட்ட சிவன், பார்வதி, விஷ்ணு, லட்சுமி போன்ற கடவுளர்களின் உருவங்கள், மதுராவில் கலைநயத்துடன் செதுக்கப்பட்டன. யக்சினிகள், அப்சரஸ்கள் ஆகிய உருவங்கள் மதுரா கலைபாணியின் சிறப்புக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன.

## இந்தியப் பண்பாட்டில் குஷாணர்களின் கொடை

- குஷாணர்கள் காலத்தில் பௌத்த சமயம் சீனா, ஜப்பான், தென் கிழக்காசிய நாடுகளில் பரவியது.
- இந்தியாவில் காந்தாரக்கலை, மதுராகலை போன்றவை புதிதாகத் தோன்றின.
- பாலிமொழிக்கு பதிலாகச் சமஸ்கிருத மொழியில் பல நூல்கள் இயற்றப்பட்டன.



XII Ethics_Lesson 5.indd 94 05-04-2019 11:12:22

www.tntextbook.org

- கனிஷ்கர் காலத்தில், நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைந்ததால் இவரை **இரண்டாம் அசோகர்** என்றழைத்தனர்.
- இந்து சமயம், பௌத்த சமயம் மற்றும் பிறசமயங்களும் வளர்ச்சி பெற்றன.
- இக்காலத்தில் புத்தரது உருவ சிலைகள் நின்ற நிலையில் வடிக்கப்பட்டன.
- இச்சிலையின் தலைக்குப் பின்னால் வட்டவடிவ ஞானச்சுடர் இக்காலம் முதல் செதுக்கப்பட்டது. இம்முறை பிற்காலத்தில் இந்துக் கடவுளர் சிலை உருவாக்கத்தில் பின்பற்றப்பட்டது.

## 5.3 குப்தர்கால பண்பாடு

கி.பி. (பொ.ஆ.) 3-ஆம் நூற்றாண்டின் இறுதியில் குப்தப்பேரரசு **ஸ்ரீகுப்தர்** என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. முதலாம் சந்திரகுப்தர், முதலாம் சமுத்திரகுப்தர், இரண்டாம் சந்திரகுப்தர், முதலாம் குமாரகுப்தர் போன்றோர்கள் இப்பேரரசின் சிறந்த மன்னர்களாகத் திகழ்ந்தனர். இந்தியப் பண்பாட்டிற்குக் குப்தர்கள் பல வகையிலும் உதவினர். ஆட்சிமுறை, சமூக, பொருளாதார, சமய, நுண்கலைகள், இலக்கியங்கள், அறிவியல் தொழில்நுட்பம் போன்ற பல்வேறு வகையான பண்பாட்டுக் கூறுகளில் தங்களின் முத்திரையைப் பதித்துள்ளனர்.

### சான்றுகள்



மெஹ்ரோலி இரும்புத்தூண்

விசாகதத்தர், காளிதாசர் ஆகியோரின் இலக்கியங்களும், அலகாபாத் கற்றூண் கல்வெட்டு, மெஹ்ரோலி இரும்புத்தூண் போன்றவை சீனப்பயணி பாஹியானின் '**போகோகி**' எனப்பட்ட பயணக்குறிப்புகளும், நாணயங்கள் மற்றும் வரலாற்றுச் சின்னங்களும் குப்தர்களைப் பற்றிஅறிவதற்கான சான்றுகளாகத் திகழ்கின்றன.

> **பாஹியானின் குறிப்புகள்**
>
> இந்தியாவிற்கு வந்த முதல் சீனப்பயணி பாஹியான் ஆவார். இவர் பெஷாவர், காசி, கயா உள்ளிட்ட இடங்களுக்குச் சென்று பார்வையிட்டார். இவர் இந்தியாவில் 9 ஆண்டுகள் தங்கியிருந்தார். பாடலிபுத்திரத்தில் 3 ஆண்டுகளிருந்து சமஸ்கிருத மொழியையும், பௌத்த இலக்கியங்களையும் கற்றார். இவருடைய குறிப்புகள் இரண்டாம் சந்திரகுப்தரின் கால அரசியல், சமூக, பொருளாதார சமய நிலைகளைப் பற்றிக் கூறுகின்றன.

### ஆட்சிமுறை

குப்தப் பேரரசர்கள் பரம பட்டாரகா, மகாராஜாதிராஜா, பரமேஸ்வரா, சாம்ராட் போன்ற விருதுப் பெயர்களைச் சூட்டிக் கொண்டனர். பேரரசருக்குக் கீழ் முதலமைச்சர், படைத்தலைவர் உள்ளடக்கிய அமைச்சரவையும் இருந்தது. இந்த அமைச்சர்கள் அரசனுக்கு ஆலோசனை வழங்கினர். குப்தர் காலத்தில் குமாரமாத்யர்கள் என்ற வருவாய்த்துறை உயரதிகாரிகள் பற்றியும் மகாசந்திவிக்ரஹா என்ற வெளியுறவுத் துறை அமைச்சர் பற்றியும் குப்தர் காலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. நீதித்துறை மற்றும் ராணுவத்துறையில் பொறுப்பு வகித்த அமைச்சர்களை முறையே தண்டநாயகர், மகாதண்டநாயகர் என்ற பெயர்களால் குறிப்பிட்டதை அலகாபாத் கற்றூண் கல்வெட்டு மூலம் அறியமுடிகிறது. குப்தர்கள்கால



XII Ethics_Lesson 5.indd 95 05-04-2019 11:12:22

குதிரைப்படைத் தலைவர், **மகாஅஸ்வபதி** என்றழைக்கப்பட்டார்.

**அலகாபாத் கற்றூண் கல்வெட்டு**

இக்கல்வெட்டு அரிசேனர் என்பவரால் 33 வரிகளில் பொறிக்கப்பட்டது. இதில் முதலாம் சமுத்திரகுப்தரின் போர் வெற்றிகள், படைத்திறன் ஆகியவை பற்றியும், குப்த பேரரசின் ஆட்சி எல்லைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன.

## குப்தர்களின் ஆட்சிப் பிரிவுகள்

குப்தர்களின்பேரரசு தேசம்அல்லதுபுக்தி என்ற பெயர்களைக் கொண்ட மாநிலங்களாகப் பிரிக்கப்பட்டது. இம்மாநிலங்களை **உபாரிகா** என்ற ஆளுநர்கள் ஆட்சி செய்தனர். இவர்கள் பேரரசரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். உபாரிகா மற்ற அதிகாரிகளை நியமித்தார். **உபாரிகா** மாநில நிர்வாகத்துடன் யானைப்படை, குதிரைப்படை வீரர்களையும் படைத்துறை நிர்வாகத்தை மாநில அளவில் நிர்வகித்தார். லோகபாலா என்ற அலுவலரைப் பற்றி ஈரன் என்ற கல்வெட்டுச் செய்தி குறிப்பிடுகிறது. மாநிலங்கள் விஷயம் என்ற மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. இவற்றை ஆட்சி செய்தவர்கள் விஷயபதிகள் எனப்பட்டனர். இவர்கள் மாநில ஆளுநரால் நியமிக்கப்பட்டனர்.

மாவட்டங்கள் பூமி, பதாகா, பீடா போன்ற பல்வேறு வித ஆட்சிப்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. இவற்றை ஆயுக்தகா, மகதரா போன்ற அதிகாரிகள் ஆட்சி செய்தனர். மகதராவின் கீழ் எட்டு உறுப்பினர்களைக் கொண்ட குழு செயல்பட்டது. இரண்டாம் சந்திர குப்தர் காலத்தில் **பஞ்ச மண்டலி** என்ற குழுமத்தைப் பற்றிய குறிப்புகள் சாஞ்சிக் கல்வெட்டில் காணப்படுகின்றன. மாவட்ட அளவிலிருந்து, ஆலோசனைக் குழு விஷயபதிகளுக்கு நிர்வாக முறையில் ஆலோசனை கூறியது. இக்குழுவிற்கு அத்யக்ஷா என்று பெயர். கிராமப் பஞ்சாயத்துகளும் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தன. வங்காளம், பீகார், உத்திரப்பிரதேசத்தின் பெரும்பாலான பகுதிகள், மன்னரின் நேரடி நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டன. குப்தர்கள் ஆட்சி முறை வாகாடகர்கள், காலச்சூரிகள், சாளுக்கியர்கள், ராஷ்டிரகூடர்கள் போன்றோர்க்கு முன்னோடியாகத் திகழ்ந்தது எனலாம். குப்தப்பேரரசின் பல்வேறு நிர்வாக முறைகளை இவர்கள் பின்பற்றினர்.

## படை நிர்வாகம்

குப்தர்கள் காலத்தில் காலாட்படை, குதிரைப்படை, தேர்ப்படை, யானைப்படை ஆகிய படைகள் இருந்தன. மன்னரால் சிறப்பாக வழி நடத்தப்பட்ட இப்படை நிர்வாகம் குப்தர்களின் வெற்றிக்குக் காரணமாகத் திகழ்ந்தது. காலாட்படையின் தலைவர் **பாலாதிகிருதியா** என்றழைக்கப்பட்டார். குதிரைப்படைத் தலைவர் **சேனாதிபதி** என்றழைக்கப்பட்டார். ராணுவக் கிடங்குகளின் தலைமை அலுவலகம் **ரணபந்தகர்** எனப்பட்டது.

மகாபிரதிஹாரா என்ற அரண்மனைக் காவலர்களும், கத்யதபகிதா என்ற அரச சமையலறைக் கண்காணிப்பாளரும் முக்கிய இடம் பெற்றனர். அமாத்யா, சச்சிவா போன்ற அலுவலர்கள் நிர்வாக அதிகாரிகளாகப் பணியாற்றினர். ஒற்றர்களைக் கொண்ட உளவு அமைப்பு **துடாகா** என்றழைக்கப்பட்டது.

## சமூக நிலை

குப்தர் கால சமூகநிலை சிறந்து விளங்கியது. குடும்பங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தன. வர்ணாஸ்ரமமுறை அடிப்படையிலான குப்தர்கள்கால சமூகத்தில், பல்வேறு தொழிற்பிரிவு மக்களும் வாழ்ந்தனர். உயர்குடியினர்கள் சமூகத்தில் அனைத்து உரிமைகளையும் பெற்றிருந்தனர். பெண்கள் உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கப்பட்டனர், இவர்கள் கல்வியறிவு பெற்றுச் சமூகத்தில் சிறந்து விளங்கினர். **ஆச்சார்யா** எனப்பட்ட ஆசிரியர்களுக்குச் சமூகத்தில் உயர்ந்த மதிப்பிருந்தது. பெண்கள் காதணிகள், கழுத்தணிகள், வளையல்கள்



XII Ethics_Lesson 5.indd 96 05-04-2019 11:12:22

www.tntextbook.org

போன்றவற்றை அணிந்தனர். தங்கம், வெள்ளி போன்றவற்றினாலான ஆபரணங்களுக்கும் மக்களிடையே பெரும் வரவேற்பு இருந்தது. போர்க்கைதிகள், கடனாளிகள், சூதாட்டத்தில் தோற்றவர்கள் அடிமைப்படுத்தப்பட்டனர்.

## குப்தர்கள் கால பொருளாதார நிலை

குப்தர்கள் காலத்தில் வேளாண்மையே முக்கிய தொழிலாக விளங்கியது. நெல், கோதுமை, பார்லி போன்ற தானியங்கள் பயிரிடப்பட்டன. விளைச்சல் மற்றும் நிலத்தின் தன்மை அடிப்படையில் நிலம் ஐந்து வகைகளாகப் பிரிக்கப்பட்டது. நீர்ப்பாசனத்திற்கு முக்கியத்துவம் தரப்பட்டது. ஜலநிர்கமா என்ற வடிகால்கள் மூலம் நீர்ப் பாசனப் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டது. சுதர்சன ஏரி குப்தர்கள் கால நீர்ப்பாசனத்தில் முக்கிய இடம் பிடித்தது. விளைச்சலில் ஆறில் ஒருபங்கு மக்களிடமிருந்து வரியாகப் பெறப்பட்டது. அவ்வரி **பாகா** எனப்பட்டது. **கரா** என்ற வரி, கிராமங்களில் வாழ்வோர் மீது விதிக்கப்பட்டது. **ஹிரண்யா** என்ற வரி, தங்க நாணயங்கள் வைத்திருப்போர் செலுத்தும் வரியாகும். குப்தர்கள் காலத்தில் சிறந்து விளங்கிய உலோகத் தொழில், சுரங்கத் தொழில் பற்றிய செய்திகளை வராகமிகிரர், காளிதாசர் ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். இக்காலத்தில் பீகாரிலிருந்து இரும்புப் படிவுகளும் ராஜஸ்தானிலிருந்து செம்புப் படிவுகளும் கண்டறியப்பட்டன.

வணிகர்களுக்குள் **வணிக், சிரேஷ்டி, சார்த்தவஹா** என்ற மூன்று பிரிவினர் இருந்தனர். சார்த்தவாஹா இலாபம் வேண்டி ஊரெங்கும் வாணிகம் செய்தனர். வணிக், சிரேஷ்டி என்போர் உள்ளூர் வணிகர்களாவர்.

உஜ்ஜயினி, காசி, வைசாலி, கயா, பிரயாகை (அலகாபாத்) மதுரா ஆகிய இடங்கள் குப்தர்கள் கால முக்கிய வணிக மையங்களாகத் திகழ்ந்தன. கங்கை, கிருஷ்ணா, காவிரி, பிரம்மபுத்திரா ஆகிய நதிகள் உள்நாட்டு நீர்வழி வாணிகத்திற்குப் பயன்பட்டன. கல்யாண், புரோச், காம்பே, தாமிரலிப்தி ஆகிய துறைமுகப் பகுதிகளிலிருந்து அரேபியா, பாரசீகம் போன்ற நாடுகளோடு அயல்நாட்டு வாணிபம் நடைபெற்றது.

## சமய நிலை

குப்தர்கள் காலத்தில் இந்து சமயம் முழுமையடைந்தது. சமண பௌத்த சமயங்களும் மக்களால் பின்பற்றப்பட்டன. தசாவதாரக் கதைகள் போன்றவற்றைக் கேட்டறிந்த மக்களுக்கு, இந்து சமயத்தின் மீது மிகுந்த மதிப்பு ஏற்பட்டது. புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவை கதைகளாகக் கூறப்பட்டன.

கங்கைச்சமவெளிப் பகுதிகளைப் பாஹியான் என்ற சீனப்பயணி, '**பிராமணர்களின் பூமி**' என்று குறிப்பிட்டுள்ளனர். குப்த மன்னர்கள் பெரும்பான்மை இந்துவாக இருந்தாலும் சமய சகிப்புத் தன்மையுடன் வாழ்ந்தனர்.

இந்து சமயத்தில் புதிய ஆன்மீக நம்பிக்கைகள் குப்தர்கள் காலத்தில் தோன்றின. மகாவிஷ்ணுவின் வாகனமாகக் கருடனையும் வணங்கினர். பாகவதம் என்ற பெயரில் மஹாவிஷ்ணு வழிபாடும் லட்சுமி வழிபாடும் புதிய சமயச் சடங்குகளுடன் வட இந்தியா முழுவதும் பரவின.

மஹாவிஷ்ணுவின் தசாவதாரக் கருத்துகள், மக்களிடையே மிகுந்த செல்வாக்கு பெற்றிருந்தன. மேலும், இராமாயணத்தின் நாயகனான 'இராமனை' மக்கள் கடவுளாக வழிபட்டனர். சிவ வழிபாடும் மக்களால் பின்பற்றப்பட்டது. வாகாடக, கடம்பவம்ச மன்னர்கள் சிவ வழிபாட்டைப் பெரிதும் பின்பற்றினர். பாசுபதம் என்ற சிவ வழிபாட்டுப் பிரிவு வட இந்தியாவில் பரவியது. பிரம்மன், சூரியன், கார்த்திகேயன், கணேசன், துர்க்கை, சரஸ்வதி போன்ற கடவுளரும் மக்களால் வழிபடப்பட்டனர். பசு, பாம்பு (நாகவழிபாடு) போன்ற விலங்குகளையும் மக்கள் வழிபட்டனர். கங்கை, யமுனை போன்ற நதிகளையும் புனிதமாகக் கருதி வழிபட்டனர். பிரம்மா, விஷ்ணு, சிவன் என்ற மும்மூர்த்தி வழிபாடும், இந்திரன், வருணன், எமன் போன்ற கடவுளர் வழிபாடும் சிறப்புப்பெற்றிருந்தன. காசி, பிரயாகை போன்ற இடங்கள் புண்ணியத்



XII Ethics_Lesson 5.indd 97 05-04-2019 11:12:22

தலங்களாகக் கருதப்பட்டன. புனிதத் தலங்களுக்கு யாத்திரை செல்லும் வழக்கம், மக்களிடையே பரவலாக இருந்தது.

குப்தர்கள் காலத்தில் இந்து சமயம் மெசபடோமியா பகுதிகளிலும், ஜாவா, சுமத்ரா, போர்னியோ ஆகிய தென்கிழக்காசிய நாடுகளிலும் பரவியது. குப்தர்கள் காலம் இந்தியச் செவ்வியல் கலைகளின் காலம் என்றழைக்கப்படுகிறது. இந்துக் கடவுளர்களுக்குக் கோயில்கள் கட்டப்பட்டன.

**பாலித்தீவு**

குப்த பேரரசில் இந்துசமயம் இந்தியாவிலிருந்து பாலித்தீவிற்குப் பரவியது. இந்தியப் பண்பாடும் விழாக்களும் இன்றளவும் அங்குள்ள மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. கி.பி. (பொ.ஆ.) 7–ஆம் நூற்றாண்டில் இந்தியப் பண்பாடு சிறப்புற்று இருந்ததாகச் சீனப்பயணி இட்சிங், தமது குறிப்பில் குறிப்பிடுகிறார்.

## பௌத்த சமணசமயங்கள்

குப்தர்கள் காலத்தில், இந்து சமயம் செல்வாக்கு பெற்றிருந்தாலும் பௌத்தமும், சமணமும் மக்களால் பின்பற்றப்பட்டு வந்தன. வங்காளம், பீகார், உத்திரப்பிரதேசம் ஆகிய பகுதிகளில் பௌத்த சமயம் செல்வாக்குடன் திகழ்ந்தது. **வசுபந்து** என்ற பௌத்த சமய அறிஞரை முதலாம் சமுத்திரகுப்தர் ஆதரித்தார். புத்தகோசர் என்ற இலங்கை நாட்டுப் பௌத்தசமய அறிஞர், குப்தர்காலத்தில் புகழ்பெற்றிருந்தார். காஷ்மீர், காந்தாரம் போன்ற பகுதிகளில் இந்து சமயமும், பௌத்த சமயமும் செல்வாக்கு பெற்றிருந்தன. அஜந்தா, எல்லோரா குகை ஓவியங்களும் வட இந்தியாவில் ஸ்தூபிகளும் பௌத்த சமயத்தை மக்கள் பின்பற்றியதற்கான ஆதாரமாகத் திகழ்கின்றன.

## சமண சமயம்

சமணசமயம் மதுரா, வல்லபி, உதயகிரி போன்ற இடங்களில் செல்வாக்கு பெற்றிருந்தது.

## இலக்கியம்

குப்தர் காலத்தில் பல கவிஞர்கள் பல்வேறு வகையான இலக்கியங்களைப் படைத்து வடமொழியில் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தினர்.

- காளிதாசர் – சாகுந்தலம், விக்கிரமோர்வசியம், மாளவிகாக்னிமித்திரம், ரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதம், ரிதுசம்ஹாரம்.
- விசாகதத்தர் – முத்ரா ராக்ஷஸம், தேவி சந்திரகுப்தம்.
- வாத்ஸ்யாயனர் – காமசூத்திரம்
- வராகமிகிரர் – பிருகத் சம்கிதை
- சந்திரர் – சந்திராச்சாரிய வியாக்கரணம்
- அமரர் – அமரகோசம்
- வாக்பட்டர் – அஷ்டாங்க சங்கிரக, அஷ்டாங்க கிருதய சம்ஹிதை (மருத்துவம்)
- ஆரியபட்டர் – கணித நூல்கள், வானவியல்
- சாமண்டகர் – நீதிசாஸ்திரம்
- வீரசேனர் - வியாகரணம்

## அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சி

குப்தர்கள் காலத்தில் அறிவியல் தொழில்நுட்பம் படிப்படியாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. **ஆரியபட்டர்** குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த அறிஞராவார். இவர் கணிதம், வானவியல் போன்ற துறைகளில் சிறந்து விளங்கினார். இவர் **ஆரியபட்டீயம்** என்ற நூலை எழுதினார். ஒன்று முதல் ஒன்பது வரையிலான எண்ணிற்கு முன்னும் பின்னும் சுழியத்தைப் (0) பயன்படுத்தும் முறை இவரால் கண்டுபிடிக்கப்பட்டது. கணிதத்தில் இயற்கணிதம் (Algebra), வர்க்கமூலம்



XII Ethics_Lesson 5.indd 98 05-04-2019 11:12:23

www.tntextbook.org

போன்றவற்றை இவரே கண்டறிந்தார். சூரியனைப் பூமி வலம் வருகிறது என்றும், கோள்களின் சுழற்சியைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

**மெஹ்ரோலி இரும்புத் தூண்**

குப்தர் காலத்தில் எழுப்பப்பட்ட மெஹ்ரோலி இரும்புத் தூண் இன்று வரை பல்வேறு இயற்கை சீற்றங்களுக்கிடையேயும் துருப்பிடிக்காமல் உள்ளது. இது குப்தர்களின் உலோகக் கலைக்குச் சிறந்த சான்றாகத் திகழ்கிறது.

குப்தர் காலத்தில் வாழ்ந்த மற்றோர் அறிவியல் மேதை வராகமிகிரர் ஆவார். இவர் **பிருகத்சம்ஹிதை** என்ற நூலை எழுதினார். இவர் விண்வெளி, கோள்கள், தாவரங்கள், நிலஅமைப்பு போன்றவற்றைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். அஸ்வசாஸ்திரத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் பற்றியும் அவற்றிற்கான சிகிச்சை முறைகள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளன. சரகர் புகழ்பெற்ற மருத்துவராகத் திகழ்ந்தார். **சரகசம்ஹிதா** என்ற மருத்துவ நூலை எழுதினார். தன்வந்திரி என்பவர் குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த தலைசிறந்த ஆயுர்வேத மருத்துவ மேதையாவார். இவர் மனிதனுக்கு ஏற்படும் நோய்கள் பற்றியும் அதற்கான சிகிச்சை முறைகள் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

## கட்டடக்கலை

குப்தர்கள்கால கட்டடங்கள் மற்றும் கோயில்கள் பின்வரும் ஐந்து வகையான சிறப்பம்சங்களுடன் காணப்படுகின்றன.

**அவையாவன**

- தட்டையான கூரை கொண்ட சதுரக் கோயில்கள்
- விமானத்துடன் கூடிய (இரண்டாம் மாடி) தட்டையான கூரை கொண்ட சதுரக் கோயில்கள்
- வளைகோட்டுக் கோபுரம் (சிகரம்) கொண்ட சதுரக் கோயில்கள்
- செவ்வக வடிவிலான கோயில்கள்
- வட்ட வடிவக்கோயில்கள்

இக்கோயில்கள் வட இந்தியாவில் நாகர கட்டடக்கலைப் பாணியிலும் தென்னிந்தியாவில் திராவிடக் கட்டடக்கலைப் பாணியிலும் பின்னர் கட்டப்பட்டன.

தியோகர் என்ற இடத்தில் பஞ்சயாதன முறைப்படி மகாவிஷ்ணுவின் பத்து அவதாரங்களை மையப்படுத்தித் தசாவதாரக் கோயில் கட்டப்பட்டது. மேலும், அங்கு சாந்தி நாதர் என்ற சமணத்துறவிக்கு கோயிலும், ஜபல்பூர் அருகில் திகாவா என்ற இடத்தில் மகாவிஷ்ணுவிற்குக் கோயிலும் கட்டப்பட்டன. பூமரா என்ற இடத்திலும், நச்சனக்குதாரோ என்ற இடத்திலும் நகரப் பாணியில் கோயில்கள் கட்டப்பட்டன. கான்பூர் அருகில் பிதார்கன் என்ற இடத்தில் செங்கற்களால் கட்டப்பட்ட கோயில், குப்தர்களின் கட்டடக் கலைக்குச் சான்றாகத் திகழ்கிறது. குப்தர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோயில்களில் நான்குவகை மண்டபங்கள் இடம்பெற்றிருந்தன. குப்தர்களின் பெரும்பாலான கோயில்கள் ஹுணர்களின் படையெடுப்பின்போது இடிக்கப்பட்டன. ராஜகிருகம், சாரநாத் போன்ற இடங்களில் அழகிய பௌத்த ஸ்தூபிகள் அமைக்கப்பட்டன.

## சிற்பக் கலை

குப்தர்கள் காலத்தில் சிற்பக்கலை சிறப்புற்றிருந்தது. மதுராவில் குப்தர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையில் கிரேக்கக்கலையின் சாயல் உள்ளது. சாரநாத்தில் நின்ற வடிவிலுள்ள புத்தர் சிலை சிறப்பாக அமைக்கப்பட்டது. சாரநாத் கலை பாணி இந்தியாவில் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. இது கனிஷ்கர் காலத்தின் காந்தாரக் கலையை நினைவூட்டுகிறது. விஷ்ணு, கார்த்திகேயர், துர்க்கை, நாகர் போன்ற கடவுளர்களுக்குச்




XII Ethics_Lesson 5.indd 99 05-04-2019 11:12:23

சுடுமண்ணால் செய்யப்பட்ட சிற்பங்கள் சிறப்பான வேலைப்பாடுடையனவாகும். உதயகிரி கோயிலிலுள்ள மகாவிஷ்ணுவின் வராக அவதாரச் சிற்பமும், தியோகர் கோயிலிலுள்ள தசாவதாரச் சிற்பங்களும், பரத்பூர் கோயில்களிலுள்ள சிற்பங்களும் குப்தர் காலத்தில் சிறப்பு பெற்றவையாகும்.

சைவ, வைணவ (பாகவத) சமய நம்பிக்கைகளும் தத்துவங்களும் கோயில்களில் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டன. பிதாரி என்ற இடத்திலுள்ள ஸ்கந்த குப்தரின் ஒற்றைக் கற்றூண் சிறப்பாக வடிவமைக்கப்பட்டது. சிவன், விஷ்ணு, ராமன், கிருஷ்ணன் ஆகிய கடவுளரின் சிலைகள் அழகாகவும் நேர்த்தியாகவும் இவர்கள் காலத்தில் வடிக்கப்பட்டுள்ளன.

## ஓவியக்கலை



அஜந்தா ஓவியம்

குப்தர்கள் காலத்தில் அஜந்தா, பாக்(குவாலியர் அருகில்) ஆகிய இடங்களில் ஓவியங்கள் அழகுற தீட்டப்பட்டன. அஜந்தாவிலுள்ள 16, 17-ஆவது குகை ஓவியங்கள் புத்தரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுகின்றன. போதிசத்துவர்களின் ஓவியங்களும் அழகிய பறவைகளின் ஓவியங்களும் சிறப்புப் பெற்றிருந்தன.

**உங்களுக்குத் தெரியுமா?**

யுனெஸ்கோ(UNESCO) (ஐக்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார நிறுவனம்), 1983ஆம் ஆண்டில் அஜந்தா குகையை உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்தது.

## இசைக்கலை

**குப்தர்கள் காலம் இசையும், நடனமும் செழித்தோங்கிய காலமாகும்.** குப்தர்கள் இசைக்கலைக்குப் பேராதரவு தந்து, இசைக் கலைஞர்களை ஊக்குவித்தனர். மத்தளம், யாழ், சங்கு போன்ற இசைக்கருவிகளைப் பயன்படுத்தினர். குப்த மன்னரான முதலாம் சமுத்திரகுப்தர் வீணைவாசிப்பது போன்று உருவம் பொறித்த நாணயங்கள் காணப்பட்டன. இதன்மூலம், இவர் இசைக்கலைக்கு ஆதரவு தந்தார் என்று அறியமுடிகிறது.

## நடனக்கலை

திருவிழா நேரங்களில், கோயில்களில் நடன நிகழ்ச்சிகள் நடத்தப் பெற்றன. அரசவையிலும் நடனங்கள் இடம்பெற்றன. நடனக்கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டனர். நடனக்கலைக்கும் குப்தர்கள் பேராதரவு தந்தனர்.

## நாடகக்கலை

சாகுந்தலம், ரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதம் ஆகியவை காளிதாசர் இயற்றிய நாடகங்களாகும். தேவிசந்திரகுப்தம், கௌமுகிமகோத்சவம் போன்ற நாடகங்களும் நடைபெற்றன. எனவே, இவர்களின் காலம் இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய காலகட்டமாக அறிஞர்களால் கருதப்படுகிறது; செவ்வியல்கலைகளின் காலம் எனவும் போற்றப்படுகிறது.

## இந்தியப் பண்பாட்டிற்குக் குப்தர்களின் கொடை

- மத்திய அரசு நிருவாகத் துறைகள், மாநில அரசு நிருவாகத் துறைகள், மாவட்ட ஆட்சிமுறை, நகர மற்றும் கிராம நிருவாக சபைகள் போன்றவை இந்திய பண்பாட்டிற்குக் குப்தர்கள் வழங்கிய கொடைகளாகும்.
- காளிதாசரின் சாகுந்தலம், விக்கிரமோர்வசியம், இரகுவம்சம், குமாரசம்பவம், மேகதூதம் மற்றும்



XII Ethics_Lesson 5.indd 100 05-04-2019 11:12:23

பல இலக்கிய படைப்புகள் குப்தர்காலக் கொடையாகும்.


- ஆரியபட்டரின் 'கணிதநூல்', வானவியல், வாக்பட்டரின் அஷ்டாங்க சங்கிரகம் (மருத்துவம்) வராகமிகிரரின் பஞ்சசித்தாந்தகம் (வானவியல்) சந்திரரின் சந்திராச்சாரிய வியாக்கரணம் (இலக்கணம்) மற்றும் அமரரின் நிகண்டு போன்ற நூல்கள் இந்தியப் பண்பாட்டு மற்றும் அறிவியல் வளர்ச்சிக்குக் குப்தர்கள் அளித்த கொடையாகும்.
- குப்தர் கால நீதித்துறை, இன்றைய நீதித்துறை வளர்ச்சிக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.
- குப்தர் காலத்தின் சமயச்சார்பற்ற ஆட்சிமுறையானது, தற்போதைய இந்திய பண்முக பண்பாட்டிற்கு அடிகோலியது எனலாம்.
- குப்தர்கால குகைக் கோயில்கள் மற்றும் கட்டுமானக் கோயில்கள் கலை வளர்ச்சிக்கும், சமயவளர்ச்சிக்கும் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்வதுடன் இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் துணை புரிந்தன.
- சாரநாத், மதுரா, அஜந்தா, எல்லோரா, பாக் (Bagh) போன்ற இடங்களில் உள்ள சிற்பங்கள், ஓவியங்கள் போன்ற கலை நுட்பங்கள் யாவும் இந்தியப் பண்பாட்டின் சிறந்த கூறுகளாக விளங்குகின்றன. எனவே, **குப்தர் காலம் செவ்வியல் கலைகளின் காலம்** என்று அழைக்கப்படுகிறது.

## 5.4 சாளுக்கியர் காலப் பண்பாடு

தென்னிந்தியாவை ஆட்சிபுரிந்த சிறந்த அரச வம்சங்களுள் சாளுக்கிய வம்சமும் ஒன்றாகும். முதலாம் புலிகேசி, இரண்டாம் புலிகேசி ஆகியோர் இவ்வம்சத்தின் சிறந்த மன்னர்களாகத் திகழ்ந்தனர். பில்ஹணர் எழுதிய **விக்ரமாங்கசரிதம்** என்ற நூல் சீனப்பயணி யுவான்சுவாங்கின் **சியூக்கி** என்றழைக்கப்படும் பயணக் குறிப்புகள், ஐஹோலே கல்வெட்டு ஆகியவை சாளுக்கிய வம்சத்தைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாக உள்ளன.

### ஆட்சி முறை

மன்னரே நாட்டின் தலைவராவார். அவருக்கு உதவ அமைச்சரவை இருந்தது. நாடு பல மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டது. மாகாணத்தின் தலைவராக ஆளுநர் நியமிக்கப்பட்டார். சாளுக்கிய வம்சத்தில் மன்னர் பதவி பரம்பரைப் பதவியாக அங்கீகரிக்கப்படவில்லை; தந்தைக்குப் பின் மூத்த மகன் ஆட்சிக்கு வரும் நிலையில்லை. அண்ணன் இறந்த பின், தம்பி அரியணையேறும் வழக்கம் இருந்தது என்பது இவ்வம்சத்தின் சிறப்பம்சமாகும். மன்னர்கள் போர்க்கலை மட்டுமின்றி மனுசாஸ்திரம், தர்மசாஸ்திரம், வேதங்கள் போன்றவற்றையும் அறிந்திருந்தனர். சாளுக்கியர்களின் ஆட்சி சிறப்புகளை வெளிப்படுத்தும் வகையில் மகாராஜன், சத்யாசிராயன், ஸ்ரீ பிருத்தி வல்லவன், பரமேஸ்வரன் போன்ற பட்டங்களை மன்னர்கள் சூட்டிக் கொண்டனர். அரசர்கள் சிறப்பாக ஆட்சி செய்ததைஹிரகதஹள்ளிஎன்றசெப்புப்பட்டயம் கூறுகிறது. சாளுக்கிய இளவரசிகள் மாநில ஆளுநர்களாக நியமிக்கப்பட்டனர். அரசர், ஆளுநர், தலைமை அமைச்சர், அமாத்தியா என்ற வருவாய்த்துறை அமைச்சர், சமகர்த்தா என்ற கருவூல அமைச்சர் ஆகியோர் பற்றி ஐஹோலே கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.



ஐஹோலே கல்வெட்டு



XII Ethics_Lesson 5.indd 101 05-04-2019 11:12:23

பேரரசு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவை விஷயம், ராஷ்டிரம், நாடு, கிராமம் ஆகியவையாகும். விஷயபதி, சமந்தா, கிராமபோகி, **மபத்ரா** ஆகிய அதிகாரிகள் அரசனுக்கும் ஆளுநருக்கும் நிர்வாகத்தில் உதவினர். சமந்தா என்பவர்கள் நிலப்பிரபுக்களாவர். கிராமபோகி கிராம நிர்வாகத்தைக் கண்காணித்தார். அவருக்குக் கர்ணா என்ற கணக்கர் உதவினார். விஷயா எனப்பட்ட மாவட்டத்தின் தலைவர் விஷயபதி ஆவார். மகாஜனம் எனப்பட்ட கிராம மக்கள்குழு, கிராமங்களின் சட்டம் ஒழுங்கை பராமரித்து வந்தது.

## சமூக நிலை

சாளுக்கியர்கள் காலத்தில் சமூகமானது வர்ணாசிரம முறையின்படியே இருந்தது. ஆனால், சாதிய வேற்றுமைகள் காணப்படவில்லை. உயர்குடிப் பெண்கள் உரிமை பெற்றுக் காணப்பட்டனர்.

## பொருளாதார நிலை

சாளுக்கியர்கள் காலத்தில் வேளாண்மை முக்கியத் தொழிலாக இருந்தது. நெசவு, உலோக, தச்சுத் தொழிலாளர்கள் சிறப்பிடம் பெற்றிருந்தனர். காவிரி, நர்மதை நதிகளால் வளம்பெற்ற நிலங்களில் உற்பத்தி செய்யப்பட்ட தானியங்களை வணிகர்கள் வட இந்தியாவிற்குக் கொண்டு சென்று விற்பனை செய்தனர்.

## சமய நிலை

இந்து, சமணம், பௌத்தம் ஆகிய சமயங்களைப் பின்பற்றும் மக்கள் இருந்தனர். சாளுக்கிய மன்னர்கள் சமய சகிப்புத்தன்மையைப் பின்பற்றினர். இரண்டாம் புலிகேசியின் ஆட்சிக்காலத்தில் இந்து, சமண பௌத்த சமயங்களும் வளர்ச்சி பெற்றன. இரண்டாம் புலிகேசியின் அவையிலிருந்த **ரவி கீர்த்தி** என்ற அறிஞர் சமண சமயத்தைப் பின்பற்றினார். ஐஹோலே கல்வெட்டைப் பொறித்தவரும் இவரேயாவார். சீனப் பயணி யுவான்சுவாங் இரண்டாம் புலிகேசியின் அவைக்கு வருகை புரிந்தார். இவர் சாளுக்கிய நாட்டில் மகாயானம், ஹீனயானம் ஆகிய பிரிவுகளைப் பின்பற்றும் பௌத்தர்கள் வாழ்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

## கட்டடக்கலை

சாளுக்கியர்கள், கலைவளர்ச்சிக்கு முக்கிய பங்காற்றியுள்ளனர். கோயில்களைக் கட்டுவதற்கு அவர்கள் வேசர கலைபாணியைப் பின்பற்றினர். ஐஹோலே, பாதாமி, பட்டாடக்கல் ஆகிய இடங்களில் சாளுக்கியர்களின் கட்டுமானக் கோயில்களைக் காணலாம். அஜந்தா, எல்லோரா, நாசிக் ஆகிய இடங்களில் இவர்களது குடைவரைக் கோயில்கள் உள்ளன. பாதாமி குகைக்கோயிலும் இவர்களது காலகட்டத்தில் உருவாக்கப்பட்டது. ஐஹோலே நகரில் 70 கோயில்கள் சாளுக்கியர்கள் காலத்தில் கட்டப்பட்டன. இதனால், இந்நகரம் **கோயில் நகரம்** என அழைக்கப்பட்டது. ஐஹோலே நகரில் சமதளக் கூரையுடன் நிறைய தூண்களைக்கொண்டுகட்டப்பட்டுள்ளலட்கான் கோயிலும், ஒரு பௌத்த சைத்தியத்தைப்போல (சைத்தியம் பௌத்தர்களின் தியானக் கூடம்) அமைக்கப்பட்ட துர்க்கையம்மன் கோயிலும், ஹுச்சிமல்லிக்குடிக்கோயிலும் புகழ்பெற்றவை. ஐஹோலே அருகிலுள்ள மெகுடி என்ற இடத்திலுள்ள சமணர் கோயிலும் அழகாக அமைக்கப்பட்டுள்ளது.

ஐஹோலே நகரம்போல் பாதாமி என்ற இடத்திலும்சாளுக்கியர்கள் பலகோயில்களைக் கட்டினர். அவற்றில் முக்தீஸ்வரர் கோயிலும், மேலக்குட்டி சிவன் கோயிலும் அவற்றின் கட்டடக்கலை நுணுக்கத்தால் புகழ் பெற்றன.



பட்டாடக்கல்



XII Ethics_Lesson 5.indd 102 05-04-2019 11:12:23

பாதாமி அருகில் ஒரே இடத்திலுள்ள நான்கு குடைவரைக் கோயில்கள், கலை நயத்துடன் அமைக்கப்பட்டன. அவற்றின் சுவர்களும்,தூண்கள் தாங்கும் மண்டபங்களும், கடவுளர் மற்றும் மனிதர்களின் அழகான சிற்பங்கள் போன்றவையும் இக்குடைவரைக் கோயில்களில் இடம்பெற்றுள்ளன.

சாளுக்கியர்கள் காலத்தில் **பட்டாடக்கல்** என்ற இடத்தில் பத்துக் கோயில்கள் கட்டப்பட்டன. இவற்றில் ஆறு கோயில்கள் திராவிட கலைபாணியிலும் நான்கு கோயில்கள் வட இந்தியக் கலை பாணியிலும் கட்டப்பட்டன. வட இந்தியக் கலை பாணியில் கட்டப்பட்ட பாபநாதர்கோயில் சிறப்பான கலை நுணுக்கங்களுடன் அமைக்கப்பட்டது. திராவிட கலை பாணியிலமைந்த சங்கமேஸ்வரர் கோயிலும், விருபாக்ஷர் கோயிலும் சிறப்புப் பெற்றவையாகும். விருபாக்ஷர் கோயிலைக் கட்டுவதற்குக் காஞ்சிபுரத்திலிருந்து சிற்பிகள் சென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயில் போன்றே இக்கோயிலும் கட்டப்பட்டது. பட்டாடக்கல் நகரில் கோயில்களை அமைத்த கட்டடக் கலை வல்லுநர்களுக்குத் ***திரிபுவனச்சாரியா*** (மூவுலகையும் உருவாக்கியவன்) என்ற பட்டம் வழங்கப்பட்டது.

> விருபாக்ஷர் கோயிலின் அடித்தளக் கட்டுமானத்தின்படி கட்டப்பட்ட பாபநாதர் கோயிலில், இராமாயணத்தின் முக்கிய காட்சிகள் சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. ரேவதி ஓவஜா என்பவர் இக்கோயிலின் கருவறையை வடிவமைத்தார் என்று இங்குள்ள கன்னட கல்வெட்டு குறிப்பிடுகிறது.

### ஓவியக்கலை

ஓவியக் கலையில் சாளுக்கியர்கள், வாகாடகர்கள் என்ற அரச வம்ச கலை பாணியைப் பின்பற்றினர். விஷ்ணுவின் தசாவதாரங்கள் சாளுக்கியர்களால் ஓவியங்களாக வரையப்பட்டன. பாதாமி நகரில் உள்ள குகைக்கோயிலில் அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டன. சாளுக்கிய மன்னன் மங்களேசன் கட்டிய அரண்மனையிலும் ஓவியங்கள் இடம்பெற்றுள்ளன.

### சாளுக்கியர்களின் பண்பாட்டுக் கொடை

- சாளுக்கியர்கள் சமய சகிப்புத் தன்மையைக் கடைப்பிடித்தனர். இந்து , பௌத்தம், சமணம் போன்ற சமயத்திலிருந்த அறிஞர்களை ஆதரித்தனர்.
- இரண்டாம் புலிகேசி தலைசிறந்த கலை, இலக்கிய புரவலராகத் திகழ்ந்தார். இவருடைய அவைப்புலவரான ரவிகீர்த்தி ஐஹோல் கல்வெட்டைப் பொறித்தார். இக்கல்வெட்டு இரண்டாம் புலிகேசியின் வெற்றிச் சிறப்புகளையும், அரசியல், சமூகம், பொருளாதார, சமய நிலையையும் குறிப்பிடுகிறது.
- சாளுக்கியர்கள் ஐஹோல் நகரில் 70-க்கும் மேற்பட்ட கோயில்களைக் கட்டினர். இந்நகரம் சாளுக்கிய நாட்டின் கோயில் நகரம் என்று அழைக்கப்படுகிறது.
- காஞ்சிபுரத்தின் கைலாசநாதர் கோயிலைப் போன்று கட்டப்பட்ட விருபாக்ஷர் கோயில், சாளுக்கியர்கள் அளித்த பண்பாட்டுக் கொடையாகும்.

## 5.5 இராஷ்டிரகூடர்காலப் பண்பாடு

இராஷ்டிரகூடர் கி.பி. (பொ.ஆ.) 6 முதல் 10-ஆம் நூற்றாண்டுவரை இந்தியாவை ஆண்ட அரச மரபினர் ஆவர். கி.பி. (பொ.ஆ.) 7-ஆம் நூற்றாண்டில் கிடைத்த, நிலக் கொடை குறித்த செப்புப் பட்டயமே இவர்களின் ஆட்சி பற்றி நமக்குக் கிடைத்த முதல் ஆவணமாகும்.

### ஆட்சிமுறை

நாட்டின் எல்லாதுறைகளுக்கும் அரசனே தலைவன். பட்டத்து இளவரசன் தகுதியின் அடிப்படையிலேயே தேர்ந்தெடுக்கப்பட்டான். அரசர், தம் நிருவாக வசதிக்காக அமைச்சரவையை ஏற்படுத்தினார். பேரரசு ராஷ்டிரம், விஷயம், புக்திகள் எனப் பிரிக்கப்பட்டு

ஆட்சி செய்யப்பட்டது. இராஷ்டிரத்தின் தலைவர் **ராஷ்டிரபதி** என்று அழைக்கப்பட்டார்.

### சமயநிலை

இராஷ்டிரகூடர் காலத்தில் சைவமும், வைணவமும் பெரும்பாலான மக்களால் பின்பற்றப்பட்டன. இவர்களின் முத்திரைகளில் சிவன் அமர்ந்திருக்கும் காட்சியும், கருடனின் உருவமும் காணப்படுகின்றன. **துலாபாரம், இரண்யகர்ப்பம்** போன்ற இந்து சமய விழாக்கள் கொண்டாடப்பட்டன. சமண சமயமும், இந்து கோயில்களும் சிறப்புடன் வளர்ச்சி பெற்றன.

### பொருளாதாரநிலை

இராஷ்டிரகூட அரசர்களுக்குப் பல துறைகளிலிருந்து வருவாய் கிடைத்தது. தம் மேலாண்மையை ஏற்றுக்கொண்டவர்களிடமிருந்தும், காடுகள், நிலங்கள் மூலமாகவும் வரிகள் வசூலிக்கப்பட்டன. விளைநிலத்திற்கு வசூலிக்கப்பட்ட வரி **உத்தரங்கம்** என்றழைக்கப்பட்டது. இது விளைச்சலில் 1/4 வசூலிக்கப்பட்டது. (நான்கில் 1 பங்கு)

### இலக்கியங்கள்

சமணசேனர் **ஆதிபுராணம்** என்ற நூலையும், மகாவீர ஆச்சரியார் என்பவர் கணித சாரசம்கிரகம் என்ற நூலையும், கத்தியானர் **அமோகவிருத்தி** என்ற நூலையும் எழுதியுள்ளனர். இராஷ்டிரகூட அரசன் அமோகவர்ஷன் **கவிராஜமார்க்கம்** என்னும் கன்னட நூலை எழுதியுள்ளார். இவர்கள் வடமொழியைப் பெரிதும் ஆதரித்தனர். நலிசம்பு என்ற நூலைத் திருவிக்ரமன் என்பவர் எழுதினார். ஹாளாயூதா என்பவர் கவிரஹஸ்யம் என்ற நூலையும் எழுதினார். பம்பா என்பவர், கன்னட மொழிக் கவிஞர்களுள் தலைசிறந்தவராவார். பொன்னா என்ற மற்றொரு கவிஞர் சாந்திபுராணம் என்ற நூலையும் எழுதினார்.

> **ஜீனசேனர்**
>
> இவர் புகழ்பெற்ற சமண அறிஞர் ஆவார். இவர் பார்சவநாதரின் வாழ்க்கை வரலாற்றையும் சமண போதனைகளையும் தொகுத்துப் பார்சவபூதயா என்ற நூலாக எழுதினார். இவர், புகழ்பெற்ற இராஷ்டிரகூட மன்னரான முதலாம் அமோகவர்ஷரின் ஆசிரியராவார்.

### இராஷ்டிரகூடர்களின் கலைப்பணி

### எல்லோரா



எல்லோரா கைலாசநாதர் கோயில்

எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயில் மகாராஷ்டிரா மாநிலத்தில் அமைந்துள்ளது. இக்கோயில், முதலாம் கிருஷ்ணர் காலத்தில் பாறையைக் குடைந்து உருவாக்கப்பட்டதாகும். இக்கோயில் **தக்காணப் பாறை படிவு** என்று அறியப்படும் மகாராஷ்டிராவின் எரிமலைப் பாறை உருவாக்கங்கள் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. 'இந்தியக் கலை வரலாற்றில் ஈடிணையற்ற பொக்கிஷமான' இக்கோயில் கட்டுமான கோயில் போன்றே செதுக்கப்பட்ட அழகிய ஒற்றைக் கற்றளி குடைவரைக் கோயிலாகும். இவ்வகை குடைவரைகளில் மிக பெரியதான ஏதென்ஸின் புகழ்மிக்க பாத்தினன் கட்டுமானத்தின் மரபையும், அதனைவிட ஒன்றரை மடங்கு உயரத்தையும் உடையதாகும். இக்கோயிலின் வெளிமுற்றமானது, 276 அடி நீளமுடையதாய் அமைந்துள்ளது. மரபுப்படியான கல்கட்டுமான



XII Ethics_Lesson 5.indd 104 05-04-2019 11:12:23

கோயில் போன்றே நான்கு அடிப்படைப் பகுதிகளைக் கொண்டது. இக்கோயிலில் கோபுரத்துடன் கூடிய நுழைவுவாயில், நந்தி மண்டபம், பெரிய அளவிலான தூண்கள் உள்ள முகமண்டபம், விமானத்துடன் கூடிய கருவறை போன்றவை அமைந்துள்ளன.

### எலிபெண்டா குகை

எலிபெண்டா குகைகள் மும்பை துறைமுகத்திலிருந்து 10 கி.மீ தொலைவில் அரபிக் கடலில் தீவாக அமைந்துள்ளன. பெரிய யானையின் சிற்பங்களைக் கண்ட போர்ச்சுகீசியர்கள் இத்தீவிற்கு **எலிபெண்டா தீவு** (Elephenda Caves) எனப் பெயரிட்டனர். எலிபெண்டா குகைக்குக் காராபுரி என்ற பழைய பெயரும் உண்டு. இக்குகையின் மேற்கூரையை ஒரு கற்றூண் தாங்கி நிற்பதுபோல், குடைந்து இருப்பது இக்குகையின் தனிச்சிறப்பாகும். குகைக்குள் உள்ள சுவரில் சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மும்மூர்த்திச் சிற்பங்கள் ஒரே கல்லில் செதுக்கப்பட்டுள்ளன. இறைவனின் முத்தொழிலைக் குறிக்கும் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய குண இயல்புகளைக் கொண்ட மகேசுவரமூர்த்தியின் வடிவம் அழகுமிக்கதாகும்.

### ஓவியக்கலை



எலிபெண்டா குகை கோயில்

எல்லோராவில் உள்ள ஓவியங்கள் பௌத்தசமய ஓவியங்களாகும். கைலாசநாதர், தசாவதார கோயில்களில் காணப்படும் ஓவியங்கள் சிறப்பு வாய்ந்தவை. மேலும் சிவன், பார்வதி, முருகன், கணபதி ஆகியோரின் ஓவியங்களும் வரையப்பட்டுள்ளன.

### இந்தியப் பண்பாட்டிற்கு இராஷ்டிரகூடர்களின் கொடை

- எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோயில், மகாராஷ்டிராவிலுள்ள எலிபெண்டா குகைகள் போன்றவை உலகப் பாரம்பரியச் சின்னமாக அங்கீகரிக்கப்பட்ட இடங்களாகும்.
- இராஷ்டிர கூடர்கள் சுவர்ணா, திரம்மா என்ற தங்க நாணயத்தையும், வெள்ளி நாணயத்தையும் வெளியிட்டனர்.
- இவர்களுடைய காலத்தில் ஒற்றைக்கல்லில் வரையப்பட்ட குகை ஓவியங்கள் சிறந்தவையாகக் கருதப்படுகின்றன.
- இவர்கள் சமயப் பொறையுடன் இருந்ததற்குச் சான்றுகளாகக் குகைகளில் இந்து, சமண சமயச் சிற்பங்களைக் காணலாம்.
- இவர்கள் காலத்தில் வடமொழி இலக்கியங்களும், கன்னடமொழி இலக்கியங்களும் வளர்ச்சி பெற்றன.

## 5.6 ஹொய்சாளர்காலப் பண்பாடு

இன்றைய கர்நாடக மாநிலத்திலுள்ள மைசூர் பகுதியை ஆட்சி செய்தவர்கள் ஹொய்சாளர்கள் ஆவர். இவர்களுடைய தலைநகரம் முதலில் **சோசவூரிலும்** பின் ஹளபேட்டுக்கும் மாற்றப்பட்டது. இம்மரபில் நிர்பகாமா கி.பி. (பொ.ஆ.) 1026 – 47 முதல் மூன்றாம் வீர பல்லாளர் (கி.பி. (பொ.ஆ.) 1292 – 1343 வரையிலான மன்னர்கள் ஆட்சி புரிந்தனர். ருத்ரபட்டா என்ற கவிஞர் இரண்டாம் வீர பல்லாலரால் ஆதரிக்கப்பட்டார். இவருடைய குறிப்புகள் அரசியல்நிலை, சமூக, பொருளாதார, சமயநிலைகளைப் பற்றி குறிப்பிடுகின்றன.



XII Ethics_Lesson 5.indd 105 05-04-2019 11:12:24

### ஆட்சிப்பிரிவுகள்

ஹொய்சாளர்கள் தம்முடைய நிர்வாக வசதிக்காக நாடு, விஷயம், கம்பணா, தேசம் என்று பிரித்து ஆட்சி செய்தனர். ஒவ்வொரு மாகாணமும் மகாபிராதனா, நீதி நிர்வாகம் 'தண்டநாயகா' என்பவரின் கீழ் செயல்பட்டன.


### கலை கட்டடக்கலைக்கு ஆற்றிய தொண்டு

இக்காலத்தில் கட்டப்பட்ட கோயில்கள் நட்சத்திர வடிவாகவோ (அ) பல கோணங்கள் கொண்டவையாகவோ விளங்குகின்றன. உச்சியில் பூந்தொட்டி போன்ற அலங்கார வேலைப்பாடு கொண்டு காணப்படுகிறது. பல கட்டடங்களில் ஒன்று, இரண்டு (அ) நான்கு கோபுரங்கள் காணப்படுகின்றன.

### பேளூர் (பேளூர்) கோவில்



பேளூர் கோயில்



ஹொய்சாளர் அரசு சின்னம்

பேலூர் சென்னக்கேசவா கோவிலில் எங்கு நோக்கினும் சிற்பங்கள் காணப்படுகின்றன. இக்கோயிலில் மாதனிக்கச் சிற்பங்கள் உயிருள்ள மனிதர்களை போன்றே காணலாம். மொத்தம் 42 மாதனிக்க சிற்பங்கள் காணப்படுகின்றன. ஒவ்வொரு சிற்பமும் கோபம், பெருமை, மகிழ்ச்சி, துக்கம், அன்பு போன்ற பண்புகளை வெளிப்படுத்தும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வகை சிற்பங்கள் **மாக்கல்** என்ற ஒரு வகை கல்லால் உருவாக்கப்பட்டவை.


### ஹளபேடு



ஹளபேடு கோயில்

ஹொய்சாளர் அரசர்களின் தலைநகரம் ஹளபேடு (துவாரசமுத்திரம்) ஆகும். ஹளபேட்டில் அமைந்துள்ள ஹொய்சாளேஸ்வர் கோயில் கேதரோஜா என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயிலில் உள்ள சிற்ப வேலைப்பாடுகள், தூண்கள், கட்டட அமைப்பு ஹொய்சாளர் கால கட்டடக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. இக்கோயிலில் காணப்படும் போருக்குத் தயாரான நிலையிலிருக்கும் போர்வீரர்கள், இரதங்கள் போன்றவை கலைநயத்திற்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளன. கேதாரீஸ்வரர் கோயில் **தெய்வீக ஆபரணம்** என்றழைக்கப்படுகிறது. இக்கோயிலின் அனைத்துப் பகுதிகளிலும் காணப்படும் நுண்ணிய சிற்ப வேலைப்பாடுகள் வியப்பிற்குரியவை.

### சென்னக் கேசவன் கோயில் (பேளூர்)



சென்ன கேசவன் கோயில்



XII Ethics_Lesson 5.indd 106 05-04-2019 11:12:24

பேலூரில் உள்ள விஜயநாராயணன் கோயில் (சென்னக்கேசவன் கோயில்) விஷ்ணு வர்த்தன் என்பவரால் கட்டப்பட்டது. இக்கோயில் பச்சை, கருநீலநிற மாக்கல் எனப்படும் நுண் மணற்பாறைக் கற்களைப் பயன்படுத்திக் கட்டப்பட்டது.

### பஸ்திஹள்ளி பார்சுவநாதர்

பார்சுவநாதருக்காக பஸ்திஹள்ளியில் சமணர் கோயில் கட்டப்பட்டது. இங்குள்ள தூண்களை மாயாஜால தூண்கள் எனலாம். இவை நம்முடைய உருவத்தைப் பிரதிபலித்துக் காட்டும் தன்மை உடையன.

### கேசவன் கோயில் – சோம்நாத்பூர்

ஹொய்சாளர்களின் கலைப்பாணிக்குச் சான்றாக சோம்நாத்பூரில் உள்ள கோயிலைக் கூறலாம். இக்கோயில் ஸ்ரீரங்கப்பட்டணத்திலிருந்து 20 மைல் தொலைவில் உள்ளது. இக்கோயில் **திரிகுடசலம்** என்றழைக்கப்படும் மூன்று சன்னதி கோயில் ஆகும்.

வேசரா கலைப்பாணியில் கட்டப்பட்ட லட்சுமிநரசிம்மன் கோயில், நுகுஹள்ளி கோயில், ஈஸ்வர கோயில் (அரிகேசரி) போன்றவை ஹொய்சாளர் கால கட்டடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

### மொழி

ஹொய்சாளர்கள் கன்னட மொழிக்கு முக்கியத்துவம் அளித்தனர். இவர்கள் காலத்தில் கன்னட மொழியில் பல இலக்கியங்கள் தோன்றின. சமஸ்கிருத மொழியும் வளர்ச்சிபெற்றிருந்தது.

### இலக்கியங்கள்

விஷ்ணுவர்த்தனால் ஆதரிக்கப்பட்ட நாகச்சந்திரா என்ற சமணர், இராமாயணம் எழுதினார். இராசாத்தியன் கணித நூற்சட்டங்களைச் செய்யுட்களாக்கினார். நேமிசந்திரன் என்ற சமணர் லீலாவதி என்னும் முதல் புதுமைக் கதையை எழுதினார். இவர்கள் அனைவரும் சமணர்கள் ஆவர். கிரிஜா கல்யாணம் எழுதிய அரீஸ்வரன், அரிச்சந்திரா காவியம் எழுதிய இராகவாங்கன் ஆகியோர் வீரசைவர்களாவர்.

### ஹொய்சாளர்களின் இந்தியப் பண்பாட்டுக் கொடை

- ஹொய்சாளர்களின் அனைத்துக் கோயில்களிலும் கர்ப்பகிருகம், மண்டபம், முகமண்டபம் காணப்படுகின்றன.
- ஹொய்சாளர் கால கட்டடக்கலை நட்சத்திர வடிவ கட்டடக்கலையாகும்.
- நடனம், நாடகம், இசை போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தனர்.
- பக்தி இலக்கியவாதிகளான இராமானுஜர், மத்துவர் ஆகியோர் ஹொய்சாளர்கள் காலத்தில் வாழ்ந்தவர்கள். மத்துவர் எழுதிய ரிக்பாஷ்யம் இக்காலத்தில் எழுதப்பட்டது.
- கன்னட மொழியில் சிறப்புப் பெற்ற ஹரிஹரர், ராகவங்கா, ஜனா போன்றோர் இக்காலத்தில் வாழ்ந்தவர்கள்
- இக்காலத்தில் வீரசைவம் சிவ வழிபாட்டுப் பிரிவு வளர்ச்சி பெற்றது.
- ஹொய்சாளர்களின் நிர்வாக அமைப்பு பஞ்சபிரதான் எனப்பட்டது. இதில் ஐந்து அமைச்சர்கள் இடம்பெற்றனர். பிற்காலத்தில் சிவாஜி ஆட்சியில் அஷ்டபிரதான் முறை கொண்டு வருவதற்கு இதுவே முக்கிய காரணமாக அமைந்தது எனலாம்.
- யுனெஸ்கோவால் அங்கீகரிக்கப்பட்ட புராதனச் சின்னங்களாகப் பேளூர், ஹளபேடு கோயில்கள் உள்ளன. இவை, ஹொய்சாளர்களின் கலைப் பண்பாட்டிற்கு எடுத்துக்காட்டுகளாகத் திகழ்கின்றன.

## 5.7 பல்லவர்காலப் பண்பாடு

தொண்டை மண்டலப் பகுதிகளை ஆட்சி செய்தவர்கள் பிற்காலப் பல்லவர்களாவர். சிம்மவிஷ்ணு, முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இராஜசிம்மன், மூன்றாம் நந்திவர்மன் போன்றோர் சிறந்த மன்னர்களாவர்.



XII Ethics_Lesson 5.indd 107 05-04-2019 11:12:24

## சான்றுகள்

காசக்குடி செப்புப்பட்டயம், முதலாம் மகேந்திரவர்ம பல்லவனின் மத்தவிலாச பிரகசனம், மூன்றாம் நந்திவர்மனைப் பற்றிய நந்திக்கலம்பகம் தேவாரப் பாடல்கள், சீனப்பயணி யுவான்சுவாங்கின் குறிப்புகள், ஆம்பூர் மற்றும் ஒலிக்கூரிலுள்ள வீரக்கற்கள், மாமல்லபுரத்துப் பஞ்சபாண்டவ இரதங்கள், கடற்கரைக்கோயில், குடைவரைக் கோயில்கள் ஆகியவை பிற்காலப் பல்லவர்களைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாகத் திகழ்கின்றன.

## ஆட்சிமுறை

பல்லவ நாட்டின் தலைவர் மன்னராவார். அவர் 'இறை', 'கோன்' ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டார். நீதி, நிர்வாகம், இராணுவம் போன்றவற்றிக்கு அரசரே தலைவனாக இருந்தார். அரசனுக்கு ஆலோசனை வழங்க அமைச்சரவைக்குழு இருந்தது. இவ்வமைச்சரவை '**மந்திரிமண்டலம்**' எனப்பட்டது. அமைச்சர்களுக்குப் '**பிரம்மராஜன்**' '**பேரரையன்**' போன்ற பட்டப்பெயர்கள் வழங்கப்பட்டன. அரசனுக்கு உதவியாகத் தனி ஆலோசகர், வாயில் காப்போர், பட்டய எழுத்தர், காரணிகர்,தமிழ்மாணிக்கம்பிள்ளைக் காப்பான் என்ற கருவூலக் காப்பாளர், கொடுக்காப்பிள்ளை என்ற நன்கொடைகளுக்கான அதிகாரி, அதிகருணீகர் ஆகியோர் இருந்தனர். மேலும் வருவாய்த்துறை, நிலவரித்துறை, நிலஅளவைத்துறை, காவல்துறை, வனத்துறை, இராணுவத்துறை எனப் பல்வேறு துறைகளாகப் பிரித்து நிர்வகிக்கப்பட்டன.

பல்லவ நாடு பல ராஷ்டிரங்களாகப் (மண்டலம்) பிரிக்கப்பட்டது ராஷ்டிரங்கள், கோட்டங்களாகவும் (வளநாடுகள்) கோட்டங்கள் நாடுகளாகவும், நாடு ஊர்களாகவும் பிரிக்கப்பட்டது. பல்லவர்களின் நிர்வாகத்தின் கீழ் 24 கோட்டங்கள் இருந்தன. ராஷ்டிரிகர் என்பவர் மாநில ஆளுநராகத் திகழ்ந்தார். நாடு என்பது சிற்றூர்களைவிடப் பெரியதாகவும் கோட்டங்களைவிடச் சிறிதாகவும் இருந்தது. இதனை ஆட்சிசெய்தோர் 'நாட்டார்' என்றழைக்கப்பட்டனர். ஊர் என்ற பகுதியை ஊரார் என்பவரும் சிற்றூர்களை 'ஆழ்வார்' எனப்பட்ட அவையினரும் ஆட்சி செய்தனர். மன்னர் அறிவிக்கும் ஆணைகளை பொதுமக்களுக்கு அறிவிப்பது நாட்டார்களின் முக்கியப் பணியாகும். இவ்வாணை '**அறை ஓலை**' எனப்பட்டது.

சிற்றூர்களே ஆட்சிப் பிரிவின் கடைசி அங்கமாகும். இச்சிற்றூர்கள் பிரம்மதேயச் சிற்றூர்கள், தேவதானச் சிற்றூர்கள் என்றும் அழைக்கப்பட்டன. ஒவ்வொரு சிற்றூரிலும் கிராமசபையே கிராமப் பணிகளை மேற்கொண்டன.

## நீதிமுறை

பல்லவர்கள் காலத்தில் நகரங்களிலிருந்த அறங்கூறும் அவையங்கள் **அதிகரணங்கள்** என்றழைக்கப்பட்டன. இதன் தலைவர் அதிகரணிகர் மற்றும் அதிகரண போசகர் எனப்பட்டனர். இவர்கள் நீதி வழங்குமிடம் **அதிகரணமண்டபம்** எனப்பட்டது. சிறிய ஊர்களிலிருந்த நீதிச்சபை 'கரணம்' எனப்பட்டது. இதன் தலைவர் கரணத்தார் எனப்பட்டார். பல்லவர் கால நீதிமன்றங்கள் சாட்சி, ஆவணம், அயலார் சாட்சி ஆகிய மூன்று ஆதாரங்களின் அடிப்படையில் வழக்குகளை விசாரித்தன. தலைமை நீதிமன்றம் '**தருமாசனம்**' எனப்பட்டது. இஃது அரசரின் நேரடிக்கண்காணிப்பில் இருந்தது. மன்னரே தலைமை நீதிபதியாகவும் செயல்பட்டார். பல்லவர் காலத்தில் விதிக்கப்பட்ட அபராதங்களைப் பற்றி நந்திவர்மப் பல்லவனின் காசக்குடி செப்பேடுகள் கூறுகின்றன. **மேல்நிலை** நீதிமன்றங்களில் விதிக்கப்பட்ட அபராதங்கள் '**கர்ணதண்டம்**' எனவும் **கீழ்நிலை** நீதிமன்றங்களால் விதிக்கப்பட்ட அபராதங்கள் '**அதிகரண தண்டம்**' என்றும் அழைக்கப்பட்டன.

## படையமைப்பு

பல்லவ மன்னர்கள் யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்ப்படை, கடற்படை ஆகிய ஐவகைப் படைகளைக் கொண்டிருந்தனர். பல்லவர்களின்



XII Ethics_Lesson 5.indd 108 05-04-2019 11:12:24

படைவலிமை, போர் முறை போன்றவை பற்றிக் **கூரம் பட்டயம்** தெரிவிக்கிறது. பல்லவர்களின் போர்க்கருவிகள் பற்றி **வேலூர் பட்டயம்** கூறுகிறது. தங்களின் வலிமையான கடற்படையால் முதலாம் நரசிம்மவர்மன், தம் நண்பன் மானவர்மனுக்காக இலங்கை மீது படையெடுத்து வென்றார். இராஜசிம்ம பல்லவனும் தம் கடற்படை வலிமையால் இலட்சத்தீவை வென்றார்.

## சமூகநிலை

பல்லவர் காலச் சமூகத்தில் வர்ணாசிரம முறை பின்பற்றப்பட்டது. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பிரிவுகள் சமுதாயத்தில் இருந்தன. சமூக அமைப்பில் இந்து சாஸ்திரக் கோட்பாடுகள் முக்கியத்துவம் பெற்றன என்று முதலாம் பரமேஸ்வரனின் கூரம் பட்டயமும், நந்திவர்மனின் காசக்குடிப்பட்டயமும் குறிப்பிடுகின்றன. உழவர்கள், வணிகர்கள், கலைஞர்கள், பொற்கொல்லர், கருமார், தச்சர், மீனவர், கைவினைஞர்கள், கால்நடை வளர்ப்போர் உட்பட பல பிரிவினர் பல்லவர் கால சமுதாயத்தில் வாழ்ந்தனர்.

> **பிரம்ம தேயங்கள்**
>
> நான்கு வேதங்களையும் கற்றுத் தேர்ந்த அந்தணர்களுக்கு, அரசன் கொடையாக வழங்கும் நிலம் பிரம்மதேயம் எனப்படும். இந்நிலங்கள் இறையிலி நிலங்களாக வழங்கப்படுவதால், அந்தணர்கள் இந்நிலத்திற்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டனர்.

வணிகர்கள் தங்களுக்கெனச் **சுதேசி, நானாதேசிகன், ஐந்நூற்றுவர்** போன்ற பெயர்களில் வாணிகக் குழுக்களை ஏற்படுத்திக் கொண்டனர். நானா தேசிகன் என்ற குழு வெளிநாடுகளுடன் வாணிகத்தில் ஈடுபட்டது.

## சமயநிலை

சைவம், வைணவம், சமணம் ஆகிய சமயங்கள் மக்களால் பின்பற்றப்பட்டன. திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் போன்றோர் தமிழகம் முழுவதும் சைவ சமயத்தைப் பரப்பினர். மக்களும் இவர்களின் பாடல்களையும், போதனைகளையும் பின்பற்றினர்.பொய்கையாழ்வார்,பூதத்தாழ்வார், பேயாழ்வார் திருமழிசை ஆழ்வார், திருமங்கையாழ்வார் போன்றோர் வைணவ சமயத்தின் கருத்துகளைப் பரப்பினர். சப்தமாதர், மற்றும் ஜேஷ்டா வழிபாடுகளும் சிறப்பு பெற்றிருந்தன. சாக்தம் என்ற சக்திவழிபாடு, கௌமாரம் என்ற முருகவழிபாடு, சௌரம் என்ற சூரிய வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகள் இருந்தன. இக்காலத்தில்தான் **காணாபத்யம்** என்ற கணபதி வழிபாடு, சாளுக்கிய நாட்டிலிருந்து பல்லவ நாட்டிற்கு அறிமுகமாயிற்று. இவர்கள் காலத்தில் இந்து சமயத்தில் அறுவகை வழிபாடுகள் நடைமுறையில் இருந்தன.

சைவ, சமண சமயத்தார்களிடையே அடிக்கடி சமய கருத்து மோதல்கள் இருந்து வந்தன. காஞ்சிபுரம், வள்ளிமலை, பொன்னூர், திருக்காட்டுப்பள்ளி, செந்தலை, திருப்பாதிரிப்புலியூர் போன்ற இடங்களில் சமணர்கள் வசித்தனர். பல்லவ நாட்டில் பௌத்த சமயமும் மக்களால் பின்பற்றப்பட்டதை சீனப்பயணி யுவான்சுவாங்கின் பயணக் குறிப்புகளிலிருந்து அறிகிறோம். மேலும், காஞ்சியில் 100 பௌத்த மடங்களும் 1000 பௌத்தத்துறவிகளும் இருந்ததாக இக்குறிப்புகள் தெரிவிக்கின்றன. போதிமங்கை, பழையாறை, நாகப்பட்டினம் போன்ற இடங்களில் பௌத்தசமயம் செல்வாக்கு பெற்றிருந்தது.

## பெண்கள் நிலை

பல்லவர் காலத்தில் பெண்கள் உயர்வாகக் கருதப்பட்டனர், சமயத்திலும், கோயிற்பணிகளிலும் அவர்கள் ஈடுபட்டனர். பெண்களுக்குச் சொத்துரிமை இருந்தது. அரசியர், அரசகுலப் பெண்கள்



XII Ethics_Lesson 5.indd 109 05-04-2019 11:12:24

www.tntextbook.org

கோயிற்பணிகளில் ஈடுபட்டனர். கோயில்களுக்கு நிவந்தங்களும் அளித்தனர். நெசவுத்தொழில், பூவிற்றல், பால்விற்றல் போன்ற வியாபாரத்தில் பெண்கள் ஈடுபட்டனர்.

## பொருளாதார நிலை

பல்லவர்கள் காலத்தில் வேளாண்மை முக்கிய தொழிலாக விளங்கியது. மக்கள் மீது இருவகைப்பட்ட வரிகள் விதிக்கப்பட்டன. அவற்றில் முதல் வகை விளைச்சலில் ஆறில் ஒரு பங்கு வரியை கிராம அதிகாரிகள் வசூல் செய்து அரசிடம் செலுத்தினர். இரண்டாவது வகை உள்ளூர் அளவில் வசூலிக்கப்பட்டது. இவ்வரி கிராமத்தின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்ய பயன்படுத்தப்பட்டது.(நீர்ப்பாசனம்,கோயில் விளக்கேற்றுதல் போன்றவற்றிற்கு) கால்நடை வளர்ப்போர், திருமண வீட்டார், மட்பாண்டம் செய்வோர், நெசவுத்தொழில் செய்வோர் ஆகியோரும் அரசிற்கு வரி செலுத்தினர்.

வாணிகத்தில் பொதுவாகப் பண்டமாற்றுமுறை நடைமுறையிலிருந்தது. அதே நேரத்தில் தங்கம்,வெள்ளி நாணயங்களும் புழக்கத்திலிருந்தன. பருத்திஆடைகள், நறுமணப்பொருட்கள், விலையுயர்ந்த கற்கள்,மூலிகைகள் போன்றவை ஜாவா, சுமத்ரா, கம்போடியா, இலங்கை, சீனா, பர்மா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. மாமல்லபுரம் முக்கிய துறைமுக நகரமாக விளங்கியது. தலைநகரான காஞ்சிபுரம் முக்கிய வாணிக மையமாகத் திகழ்ந்தது.

## இலக்கியங்கள்

பல்லவர்கள் காலத்தில் தமிழிலும், வடமொழியிலும் இலக்கியங்கள் இயற்றப்பட்டன. பல்லவ மன்னனான முதலாம் மகேந்திரவர்மன் **மத்தவிலாச பிரகசனம்** என்ற வடமொழி நாடக நூலை எழுதினார். போதயானர் என்பவர் பாகவஜீகம், தண்டின் என்பவர் தசகுமார சரிதம், அவந்திசுந்தரி கதச்சாரம், சர்வநந்தி என்பவர் லோகவிபாகம் போன்ற நூல்களை வடமொழியில் இயற்றினர். அவர்தம் கல்வெட்டுகள், பட்டயங்கள் ஆகியவற்றின் பெரும்பகுதி தமிழ்மொழியிலும் இடம்பெற்றிருந்தது.

- சேரமான் பெருமாள் நாயனார் – ஞானவுலா, பொன்வண்ணத்து அந்தாதி, மும்மணிக் கோவை
- கங்கநாட்டு மன்னன் கொங்கு வேளிர் – கொங்கு வேளிர் மாக்கதை (பெருங்கதை)
- மூன்றாம் சிம்மவர்மன் – சிவத்தளி வெண்பா
- தோலா மொழித்தேவர் – சூளாமணி
- பெருந்தேவனார் – பாரத வெண்பா
- திருஞான சம்பந்தர், அப்பர், சுந்தரர் – தேவாரம் மற்றும் 'நந்திக்கலம்பகம் (3 ஆம் நந்திவர்மனைப் பற்றியது) முத்தொள்ளாயிரம் (மூவேந்தர்களைப் பற்றியது), மற்றும் இலக்கண நூல்களாக சங்கயாப்பு பாட்டியல் நூல், மாபுராணம் போன்றவை இக்காலத்தைச் சார்ந்தவையாகும்.

## கட்டடக்கலை

பல்லவர்கள் கால கட்டடக்கலை மூன்றுபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. அவை:

1. குடைவரைக் கோயில்கள் – முதலாம் மகேந்திரவர்மன் பாணி
2. ஒற்றைக்கல் ரதங்கள் – முதலாம் நரசிம்மவர்மன் பாணி
3. கட்டுமானக் கோயில்கள் – ராஜசிம்மன் பாணி, நந்திவர்மன் பாணி

## குடைவரைக் கோயில்கள்

தென்னிந்திய வரலாற்றில் முதல்முறையாகப் பல்லவ மன்னரான முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில், மலைகளைக் குடைந்து கோயில்கள் உருவாக்கப்பட்டன. இவை **குடைவரைக் கோயில்கள்** எனப்பட்டன. மண்டகப்பட்டு, பல்லாவரம், வல்லம், மாமண்டூர், மகேந்திரவாடி, சீயமங்கலம், தளவானூர், திருச்சி ஆகிய இடங்களில் முதலாம் மகேந்திரவர்மன் காலத்தில்



XII Ethics_Lesson 5.indd 110 05-04-2019 11:12:24

குடைவரைக் கோயில்கள் உருவாக்கப்பட்டன. கோயில்கள் கட்டும் கலையில் வல்லவனாக இருந்ததால் முதலாம் மகேந்திரவர்மன் **'சேத்தகாரி'** என்றழைக்கப்பட்டார். **மாமல்லன்** என்றழைக்கப்பட்ட முதலாம் நரசிம்மவர்மன் காலத்தில், மாமல்லபுரத்தில் குடைவரைக் கோயில்கள் கட்டப்பட்டன. இக்கோயில்களுடன் இரதங்கள் உருவாக்கப்பட்டன. இவர் காலத்து மண்டபங்களில் காணப்படும் தூண்களில் சிங்கம் முன்னங்கால்களில் நின்று, பின்னங்கால்களில் அமர்ந்துள்ளது போலக் காணப்படுகிறது.

## ஒற்றைக்கல் ரதங்கள்



பல்லவர் கால சிங்கமுகத்தூண்

முதலாம் நரசிம்மவர்மனின் சாதனை மாமல்லபுரத்தில் ஒற்றைக்கல்லால் செதுக்கப்பட்ட ரதங்களை உருவாக்கியதாகும். ஒரே இடத்தில் அமைக்கப்பட்ட ஐந்து ரதங்கள் **பஞ்சபாண்டவ ரதங்கள்** என்று அழைக்கப்படுகின்றன.

அவையாவன

1) திரௌபதிரதம்

2) அர்ச்சுனரதம்

3) பீமரதம்

4) தர்மராஜரதம்

5)நகுல,சகாதேவரதம்ஆகியவையாகும்.

அர்ச்சுனரதத்தில் கலைநுணுக்கத்துடன் சிவன், விஷ்ணு, மிதுனா, துவாரபாலகர் ஆகியோர் சிலைகள் செதுக்கப்பட்டுள்ளன. பஞ்சபாண்டவ ரதங்களில் நேர்த்தியானதும், அளவில் பெரியதும் தர்மராஜரதமாகும். இது சதுர வடிவிலான அடித்தளத்தையும், மூன்றடுக்கு விமானத்தையும் கொண்டுள்ளது. பீமரதம் செவ்வக வடிவிலான அடித்தளத்தையும் மூன்றடுக்கு விமானத்தையும் கொண்டுள்ளது. ஹரிஹரர், பிரம்மா, விஷ்ணு, ஸ்கந்தர் (முருகன்), சிவன், அர்த்தநாரிஸ்வரர், கங்காதரர் ஆகியோரின் சிற்பங்கள் அழகுற செதுக்கப்பட்டுள்ளன. இங்குள்ள ரதங்களில் சிறியது திரௌபதி ரதம் இது துர்க்கைக்கு அர்ப்பணிக்கப்பட்டதாகும்.



மாமல்லபுரம் திறந்தவெளிப் பாறை

மாமல்லபுரத்தில் திறந்தவெளிப் பாறையில் செதுக்கப்பட்டுள்ள சிற்பங்கள், கலை வெளிப்பாட்டில் முக்கியமானவையாகும். இவற்றில் கங்கை நதி ஆகாயத்திலிருந்து இறங்கிவரும் கங்காதரர் காட்சி, சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளது. இது பகீரதன் தவம் அல்லது அர்ஜுனன் தவம் என்றும் அழைக்கப்படுகிறது.

## கட்டுமானக்கோயில்கள்

பல்லவ மன்னான ராஜசிம்மன் இவ்வகையிலான கட்டடக்கலைப் பாணியை அறிமுகப்படுத்தினார். இதன்படி, கற்கள் செதுக்கப்பட்டு அவற்றைக் கொண்டு கருவறை, அதன் மேல் விமானம், அர்த்தமண்டபம், முகமண்டபம், சுற்றுப்புறச்சுவர் போன்றவை ஏற்படுத்தப்பட்டன.



XII Ethics_Lesson 5.indd 111 05-04-2019 11:12:25

www.tntextbook.org

ஐ.நா.வின் யுனெஸ்கோ அமைப்பு, 1984 ஆம் ஆண்டு மாமல்லபுரத்திலுள்ள கோயில்களை உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவித்தது. மாமல்லபுரம் இந்தியாவின் முக்கிய சுற்றுலாத் தலங்களில் ஒன்றாகத் திகழ்கிறது.

### மாமல்லபுரம் கடற்கரைக் கோயில்



வைகுண்ட பெருமாள் கோயில்

இக்கோயில் இராஜசிம்மன் காலத்தில் மூன்று கருவறைகளுடன் கட்டப்பட்டது. சிவன், விஷ்ணு ஆகிய கடவுளர்களுக்குத் தனித்தனியே கருவறைகள் அமைக்கப்பட்டுள்ளன. விஷ்ணுவின் கருவறைப்பகுதியில் சுற்றுச்சுவரின் வெளிப்பக்கமும், சுற்றுச்சுவரிலும் புடைப்புச் சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. தென்னிந்தியாவிலுள்ள கட்டுமானக் கோயில்களில் இதுவே முதன்மையானதாகக் கருதப்படுகிறது. இக்கடற்கரைக் கோயில், பாறையில் செதுக்கப்பட்ட நான்கு அடுக்குகளைக் கொண்டுள்ளது. காஞ்சி முத்தேஸ்வரர் கோயில், கூரம் பெருமாள் கோயில், திருத்தணி வாடாமல்லீஸ்வரர் கோயில், குடிமல்லம் பரமேஸ்வரர் கோயில் போன்றவை நந்திவர்மன்காலகோயில்களாகும்.

### சிற்பக்கலை

பல்லவர்களது சிற்பங்களில் பெரும்பாலானவை புடைப்புச் சிற்பங்களாகும். அவர்களது கட்டுமானக் கோயில்களில் **சோமாஸ்கந்த புடைப்புச்** சிற்பமும், 16 பட்டைகளை உடைய நன்கு மெருகூட்டப்பட்ட சிவலிங்கமும் அமைந்திருப்பது பல்லவர்கால சிற்பக்கலையின் தனிச்சிறப்பாகும். இக்காலச் சிற்பங்களில், உயிரோட்டத்தையும் இயக்க நிலையையும் காணலாம். தமிழகத்தில் முதன்முதலில் அரசர், அரசியரின் முழு உருவச் சிற்பங்கள் செதுக்கப்பட்டதும் இவர்களது காலத்தையே சாரும். மாமல்லபுரத்தில் காணப்படும் ஒற்றைக்கல் சிங்கம், யானை, குரங்கு பேன்பார்க்கும் காட்சி, மகிஷாசுரமர்த்தினியின் போர்க்கோலக் காட்சி, திரௌபதி ரதத்தில் காணப்படும் சிற்பங்கள், கோவர்த்தனகிரியைக் கண்ணன் தாங்கிப் பிடிக்கும் காட்சி ஆகியவை சிற்பங்களாகச் செதுக்கப்பட்டுள்ளன. இவை, பல்லவர்களின் சிற்பக்கலைச் சிறப்புகளை எடுத்தியம்புகின்றன.

### இசைக்கலை

பல்லவர்கள் இசைக்கலைக்கு ஊக்கம் அளித்தனர். சித்தம் நமசிவாய எனத் தொடங்கும் குடுமியான்மலை இசைக்கல்வெட்டு பல்வேறு விதமான இசை நுணுக்கங்களையும் இராகங்களையும் பற்றிக் குறிப்பிடுகிறது. **உருத்திராச்சாரியார்** என்பவரின் மாணவனான பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன், பரிவாதினி என்ற வீணையை மீட்டுவதில் வல்லவனாக இருந்தார். இதனால், இவருக்குச் '**சங்கீரணசாதி**' என்ற விருதுப்பெயர் கிடைக்கப் பெற்றது. வாத்ய வித்யாதரன், ஆதோத்ய தம்புரு ஆகிய விருதுப் பெயர்களை இராஜசிம்மன் பெற்றிருந்தார். (ஆதோத்ய என்ற வீணையை வாசிப்பதில் வல்லவன்)

யாழ், குழல், கின்னரி, கொக்கரி, வீணை, தக்கை, முழவம், மொந்தை, மிருதங்கம், மத்தளம், துந்துபி, தமுருகம், துடி, தாளம், உடுக்கை, கொடுகெட்டி, தத்தலம், குடமுழா, முரசம் ஆகிய இசைக்கருவிகள் பயன்படுத்தப்பட்டதாகத் தேவாரப்பாடல்கள் கூறுகின்றன. இசை நுணுக்கங்களைப் பற்றிக் குடுமியான் மலை இசைக்கல்வெட்டு குறிப்பிடுகின்றது.



XII Ethics_Lesson 5.indd 112 05-04-2019 11:12:25

## நடனம், நாடகக்கலை

காஞ்சிபுரம் வைகுந்தப் பெருமாள் கோயிலின் சுவர் சிற்பங்கள், காஞ்சி கைலாசநாதர் கோயில் சிற்பங்கள், ஓவியங்கள் போன்றவை பல்லவர்கள் கால நடனக்கலையின் சிறப்பைக் கூறுகின்றன.

நடனக்கலையுடன் நாடகக்கலையும் சிறப்புப் பெற்றிருந்தது. பல்லவமன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் **மத்தவிலாச பிரகசனம்** என்ற வடமொழி நாடகநூல் சமயக் கருத்தோடு மக்களின் வாழ்க்கை முறையையும் கூறுகிறது.

## ஓவியக்கலை



காஞ்சிகைலாசநாதர் கோயில்

காஞ்சிகைலாசநாதர் கோயில், பனைமலை தாளகிரீஸ்வரர் கோயில் போன்றவற்றின் சுவர்களிலும், தூண்களிலும் மிக அழகிய வண்ண ஓவியங்கள் காணப்படுகின்றன. முதலாம் மகேந்திரவர்மன் ஓவியக்கலையில் வல்லவனாக இருந்ததால் '**சித்திரகாரப்புலி**' என்ற விருதுப்பெயர் பெற்றார். பிரான்ஸ் நாட்டைச் சார்ந்த மு.வே துப்ரெய்ல் என்பவர் பல்லவர் காலத்து ஓவியங்களைக் கண்டறிந்து வெளிப்படுத்தினார். காஞ்சி கைலாசநாதர் கோயிலில் காணப்படும் சிற்பங்கள் நடராஜரின் பல்வேறு நடனக் கோலங்களை வெளிப்படுத்துகின்றன.

## கல்வி

பல்லவர் காலத்தில் காஞ்சி பாகூர், பழம்பதி போன்ற இடங்களில் கல்விக் கூடங்கள் இருந்தன. இவை உயர்கல்வி போதிக்கும் இடமாகவும், வடமொழி கற்பிக்கும் கூடங்களாகவும் திகழ்ந்தன. காஞ்சியில் கல்வி கற்ற தர்மபாலர் நாளந்தா பல்கலைக் கழகத்தின் பேரசிரியராகப் பணிபுரிந்தார்.

"கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகர்" என்று, காஞ்சிபுரத்தின் கல்வி நிலையை அப்பர் புகழ்ந்து பாடியுள்ளார். கோயில்கள், மடங்கள், அக்ரஹாரங்கள் போன்றவை கல்வி மையங்களாகத் திகழ்ந்தன. காஞ்சிகைலாசநாதர் கோயிலில் சிற்பம், ஓவியம், இசை நடனம், நாடகம், இராமாயணம், மகாபாரதம் போன்றவை கற்பிக்கப்பட்டன. காஞ்சியில் இருந்த பௌத்தக் கல்விநிறுவனங்கள் 'கடிகை' என்றழைக்கப்பட்டன.

## பல்லவர்களின் பண்பாட்டுக் கொடைகள்

- தமிழ் இலக்கியமும் வடமொழி இலக்கியமும் ஒருங்கே சிறப்புப் பெற்றன.
- தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நாயன்மார்கள், ஆழ்வார்கள் பெரும் பங்காற்றினர், இதனால் சைவமும் – வைணவமும் தழைத்தோங்கின.
- கலம்பகம் என்ற சிற்றிலக்கியப் பகுதி புதியதாகத் தோன்றியது. இவ்விலக்கிய வகைக்கு நந்தி கலம்பகம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.
- திராவிட கலை பாணியிலமைந்த கோயில்கள், பிற்காலச் சோழர்கால கட்டடக்கலைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன.
- பல்லவ மன்னர்கள் கலை, இலக்கியங்களை ஆதரிக்கும் புரவலர்களாகத் திகழ்ந்தனர்.
- சப்தமாதர், ஜேஷ்டாதேவி போன்ற பெண் தெய்வ வழிபாட்டுமுறை சிறப்பு பெற்றிருந்தன.
- குடைவரைக் கோயில்களும், ஒற்றைக்கல் ரதங்களும் இவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்டன.
- காணபதீயம் என்ற கணபதி வழிபாடு, இவர்கள் காலத்தில் தமிழகத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.



XII Ethics_Lesson 5.indd 113 05-04-2019 11:12:25

www.tntextbook.org

## 5.8 சோழர்காலப் பண்பாடு

பழந்தமிழ்நாட்டை ஆண்ட மூவேந்தர்களுள் ஒருவர் சோழர்களாவர். காவிரிப் பகுதியில் நெல் மிகுதியாக விளைந்த நாடு சோழ நாடெனப்பட்டது. 'சோழ நாடு சோறுடைத்து' என்பது முதுமொழி. எனவே, 'சோறுடைத்த நாடு' பின் சோழ நாடாகியது. கி.பி. (பொ.ஆ.) 9 –ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வலிமை பெற்று விளங்கிய சோழமன்னர்கள் பிற்காலச் சோழர்கள் எனப்படுகின்றனர். இந்திய வரலாற்றில் முதலாம் இராஜராஜ சோழனும், அவரது மகன் முதலாம் இராஜேந்திர சோழனும் குறிப்பிடத்தக்க சோழ மன்னர்களாவர். இவர்களுடைய எல்லை வடக்கே ஒடிசா வரையிலும், கிழக்கில் ஜாவா, சுமத்ரா, மலேசியா வரையிலும் தெற்கே மாலத்தீவுகள் வரையிலும் பரந்து விரிந்திருந்தது.

கடல் தாண்டி கடற்படை மூலம் வெற்றிகொண்டவர்கள் பிற்காலச் சோழர்களேயாவர். இவர்களது கொடியில் புலிச்சின்னம் இடம் பெற்றிருந்தது. இராஜேந்திரசோழனது காலத்தில் வடஇந்தியாவிலுள்ள கங்கை வரை படையெடுத்தும், கப்பற்படை மூலமாக மலாய் தீபகற்பத்திலுள்ள கடாரம், ஸ்ரீ விஜயம் வரை சென்றும் வெற்றி கண்டது.

### சான்றுகள்

பிற்காலச் சோழர்களின் வரலாற்றை அறிந்துகொள்வதற்கு வரலாற்றாசிரியர்கள் வெங்கையா, உல்ச், கிருஷ்ணசாஸ்திரி ஆகியோர்கள் தொகுத்த கல்வெட்டுகளும், அன்பில் பட்டயங்கள், திருவாலங்காட்டுச் செப்பேடுகள், கரந்தை செப்பேடுகள், ஆனைமங்கலம் செப்பேடுகள், லெய்டன் செப்பேடுகள் போன்றவையும் சான்றுகளாகத் திகழ்கின்றன. மேலும் இலக்கியங்கள், மெய்க்கீர்த்திகள், நாணயங்கள், கட்டடக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை, படிமக்கலை முதலியனவும் சோழர்களின் ஆட்சிமுறையைப் பற்றி அறிய உதவும் சான்றுகளாக உள்ளன.

### மெய்க்கீர்த்திகள்

மெய்க்கீர்த்தி என்பது, அரசனின் புகழுக்குரிய சாதனைகளை விளக்கிக் கூறும் ஆவணமாகும். இவை முதலாம் இராஜராஜ சோழன் காலத்தில் முக்கியத்துவம் பெற்றன. இவருக்குப் பின் வந்த சோழ மன்னர்கள், தங்கள் சாதனைகளைக் குறிப்பிடும் அரச ஆவணமாக இவற்றை உருவாக்கினர்.

### ஆட்சிப் பிரிவுகள்

சோழப் பேரரசு, ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது. சோழப்பேரரசின் சிறிய பிரிவு கிராமம் ஆகும். பல கிராமங்கள் கொண்டது நாடு எனவும் பல நாடு கொண்டது வளநாடு எனவும், பல வளநாடுகள் கொண்டது ஒரு மண்டலம் எனவும் அழைக்கப்பட்டன.

#### சோழர் காலத்து மண்டலங்கள்

சோழர் காலத்துப் பேரரசு ஒன்பது மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது.

- சோழ மண்டலம் – திருச்சி, தஞ்சை பகுதிகள்
- இராஜாராஜ பாண்டி மண்டலம் – பாண்டிய நாடு
- ஜெயங்கொண்ட சோழ மண்டலம் – தொண்டை நாடு
- மும்முடி சோழ மண்டலம் – இலங்கை
- முடிகொண்ட சோழ மண்டலம் – கங்கபாடி
- நிகரிலி சோழ மண்டலம் – நுளாம்பாடி
- அதிராஜராஜ சோழ மண்டலம் – கொங்கு நாடு
- மலை மண்டலம் – கேரளம்
- வேங்கை மண்டலம் – கீழை சாளுக்கிய நாடு



XII Ethics_Lesson 5.indd 114 05-04-2019 11:12:25

### சோழர் ஆட்சி முறை

சோழர்கள் முடியாட்சி முறையைப் பின்பற்றினார்கள். மன்னர்கள் தங்களுக்குப் பிறகு புதல்வர்களில் மூத்தோருக்கு இளவரசர் பட்டம் சூட்டினர். சோழ மன்னர்கள் முடிசூட்டி அரச உரிமைபெறும் நன்னாளில் சக்கரவர்த்திகள், திரிபுவன சக்கரவர்த்திகள், இராஜகேசரி வர்மன், பரகேசரி வர்மன், இராஜாதி ராஜன், போன்ற பட்டங்களைச் சூட்டிக் கொண்டனர். மன்னரின் கீழ் செயல்பட்ட அதிகாரிகள் **சிறுதனம்** மற்றும் **பெருந்தனம்** என அழைக்கப்பட்டனர். இவர்களில்

- திருவாய் கேள்வி – அரசனின் ஆணைகளை வெளியிடுபவர்
- திருமந்திர ஓலை நாயகம் – அரசின் ஆணைகளை ஓலையில் எழுதுபவர்
- கருமவிதிகள் – ஆணைகளை நாட்டின் பல இடங்களுக்குக் கொண்டு செல்பவர்.
- புரவுவரி திணைக் களத்தார் – நிலவரிக் கழகம்
- வரிப்பொத்தகக் கணக்கு– தணிக்கை அதிகாரி
- திருமுகக் கணக்கு – அரண்மனைக் கணக்காளர்
- நாடுவகை செய்வார் – விளை நிலத்தின் தரத்தைப் பிரிப்பவர்
- நாடு காவல் அதிகாரி – நாட்டில் அமைதியை நிலைநாட்டுபவர்.

போன்றோர் அரசவையில் இடம்பெற்றிருந்தனர்.

### கிராம ஆட்சிமுறை

சோழர் காலத்தில் கிராம ஆட்சிமுறை சிறப்புப் பெற்றிருந்தது. கிராம சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, அதன் செயல்பாடுகள் குறித்து உத்திரமேரூர் கல்வெட்டில் குறிப்பிடப்படுள்ளது.


### குடவோலை முறை

முதலாம் பராந்தகன் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் குடவோலை முறையின் மூலம் சபை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமுறைகள் பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

### சபை உறுப்பினராவதற்குத் தகுதிகள்

- உறுப்பினராவதற்குக் கால்வேலி நிலம் சொந்தமாக இருக்க வேண்டும்.
- சொந்த நிலத்தில் வீடு இருக்க வேண்டும்.
- 35 வயது முதல் 70 வயதிற்குள் நிரம்பியவராக இருத்தல் வேண்டும்.
- வேதங்கள், புராணங்கள் கற்றுத்தேர்ந்தவராக இருக்கவேண்டும்.
- ஒரு முறை உறுப்பினராய் இருந்தோர், அடுத்த ஐந்து ஆண்டுக்குப் பிறகே உறுப்பினராக முடியும்.

### தேர்ந்தெடுக்கும் முறை




குடவோலை முறை

ஊர் பல குடும்புகளாகப்(Ward) பிரிக்கப்படும். ஒவ்வொரு குடும்பிலும் தகுதியுடையவர்களின் பெயர்களைப் பனை ஓலையில் எழுதி அதனைக் குடத்தில் இடுவார்கள். தேர்தல் நாளன்று அக்குடத்தைச் சபையோர்முன் நன்றாகக் குலுக்கிய பின், 5 வயதுக்குட்பட்ட சிறுவனைக் குடத்திலுள்ள ஓர் ஓலையை எடுக்கச் செய்வர். அதில், யார் பெயர் வருகிறதோ, அவரையே உறுப்பினராகத் தேர்ந்தெடுப்பர். இவ்வாறு, சபையின் உறுப்பினர்கள் குடவோலை முறையால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



XII Ethics_Lesson 5.indd 115 05-04-2019 11:12:25

### படைகள்

கடல் கடந்த நாடுகளைக் கைப்பற்றியவர்கள் சோழர்களே. எனவே, சோழப் பேரரசில் ஆற்றல்மிக்க தரைப்படை, யானைப்படை, கப்பற்படை ஆகியன இருந்தன. முதலாம் இராசராசன், முதலாம் இராசேந்திரன் ஆகியோர் காலத்தில் '**மூன்று கை மகாசேனை**' என்ற சிறப்புப் படை இருந்தது. அப்படை உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் வெற்றிகளைப் பெற்றுத் தந்தது.

### சமுதாய வாழ்க்கை

சோழர்கால சமூகத்தில் சாதிமுறை குறிப்பிடத்தக்க இடத்தைப் பெற்றிருந்தது. சோழர்காலத்தில் அந்தணர், வணிகர், வெள்ளாளர், படைவீரர் தவிர அவரவர் செய்யும் தொழிலின் அடிப்படையில் தனித்தனி சாதிகளாகப் பிரிக்கப்பட்டனர். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற வேறுபாடுகள் நிலவின.

சோழமன்னர்கள் அந்தணர்களுக்கு பிரம்மதேயம், சதுர்வேதிமங்கலம் போன்ற இறையிலி நிலங்களைக் கொடுத்துக் கோயில்களில் பணியமர்த்தினர். இவர்கள் பெற்ற நிலங்கள் **இறையிலி நிலங்கள்** எனப்பட்டன. மக்களுக்கு வேதங்களை விளக்கி உரைப்போருக்கு வேதவிருத்தி, பாரதக்கதை கூறுவோர்க்கு பாரதவிருத்தி, புராணங்களை உரைப்போருக்கு புராண விருத்தி போன்ற நிலங்கள் தானமாக வழங்கப்பட்டன. கோயில் பணிகளும் அவற்றின் அறக்கட்டளைகளும் அந்தணர்களிடமே ஒப்படைக்கப்பட்டன. இவற்றை ஏற்று நடத்துபவர்களுக்கு '**மூலப்பருடையோர்**' என்று பெயர்.

### பெண்கள் நிலை

சமூக வாழ்க்கையில் பெண்கள் உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தனர். 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நியதி நடைமுறையில் இருந்தது கணவரை இழந்த பெண் பிரிவாற்றாமல் உடன்கட்டை ஏறுவதைப்பற்றிச் சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன. முதலாம் பராந்தகன் ஆட்சிக் காலத்தில் வீரச்சோழ இளங்கோவேள் என்ற கொடும்பாளூர் சிற்றரசனின் மனைவி கங்காதேவியார் தீக்குளித்த செய்தியும், இராசராச பேரரசனின் தாயாரும் சுந்தர சோழனின் மனைவியுமான வானவன் மாதேவியார் உடன்கட்டை ஏறிய செய்தியும் திருவாலங்காட்டு செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### பொருளாதார நிலை

வேளாண்மைசெய்வோர் சமுதாயத்தின் முக்கிய நபராகக் கருதப்பட்டனர். இவர்களைச் **சித்திரமேழிய பெரிய நாட்டார்** என்று குறிப்பிட்டனர். வணிகம் செய்வோர் வாணியர் என்று அழைக்கப்பட்டனர். இவர்கள் காலத்தில் நகரத்தார், மணிக்கிராமத்தார், வலஞ்சியர், நானாதேசிகள், திசையாயிரத்து ஐந்நூற்றாவர் என்று பல வணிக குழுக்கள் இருந்தன.

### கல்வி

சோழர்காலத்தில் தமிழ் மற்றும் சமஸ்கிருத மொழியில் கல்வி போதிக்கப்பட்டன. கோயில்கள் கல்விக் கூடங்களாகத் திகழ்ந்தன. முதலாம் பராந்தகன் வேத பாட சாலை நடத்துவதற்காக, மான்யம் அளித்துள்ள செய்தியைக் காமப்புல்லூர் கல்வெட்டு பகர்கின்றது. முதலாம்இராஜராஜன் காலத்தில் வேதங்களையும், இலக்கணங்களையும் கற்பிக்கும் ஆசிரியரின் தகுதிகளை அணியூர் கல்வெட்டு குறிப்பிடுகிறது. இராஜேந்திரன் காலத்தில் வேதங்களைப் போதிக்கும் கல்விக்கூடங்கள் திரிபுவனம், எண்ணாயிரம், திருவொற்றியூர், வேம்பந்தூர் போன்ற இடங்களில் இருந்தன. பிற்காலச் சோழர்கள் காலத்தில் தமிழிலக்கியம் அதன் உச்சத்தை அடைந்தது. இறவாப் புகழ் பெற்ற தமிழிலக்கியங்கள் இவர்கள் காலத்தில் இயற்றப்பட்டன. அவை

### இலக்கியம்

- ஔவையார் – ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, மூதுரை
- சேக்கிழார் – பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர் புராணம்



XII Ethics_Lesson 5.indd 116 05-04-2019 11:12:25

- கம்பர் – கம்பராமாயணம், ஏரெழுபது, சடகோபரந்தாதி, சரஸ்வதி அந்தாதி, இலக்குமி அந்தாதி, சிலை எழுபது
- புகழேந்திப்புலவர் – நளவெண்பா
- ஒட்டக்கூத்தர் – மூவருலா, பிள்ளைத் தமிழ் (குலோத்துங்க சோழன்)
- ஜெயங்கொண்டார் – கலிங்கத்துப்பரணி
- கச்சியப்ப சிவாச்சாரியார் – கந்த புராணம்

போன்ற நூற்படைப்புகள் சோழர்கால இலக்கியத்திற்குப் பெருமை சேர்ப்பவையாகும்.

**மூவருலா**

உலா என்ற சிற்றிலக்கிய வகையைப் பின்பற்றி ஒட்டக்கூத்தரால் இயற்றப்பட்ட நூல் மூவருலா ஆகும். விக்கிரமசோழன், இரண்டாம் குலோத்துங்கசோழன், இரண்டாம் இராஜராஜசோழன் ஆகிய மூன்று சோழ மன்னர்களைப் புகழ்ந்து பாடியதால், இந்நூல் மூவருலா எனப்பட்டது.

நம்பியாண்டார் நம்பி என்பவர் சைவத் திருமுறைகளைத் தொகுத்தார். மேலும், சைவ சமயச் சாத்திரங்கள் பதினான்கு நூல்களும் சேக்கிழார் காலத்தைத் தொடர்ந்து இயற்றப்பட்டுள்ளன.

பேரரசு முழுவதும் கோயில்களிலும், மடங்களிலும் திருப்பாவை, திருவெம்பாவை ஓதப்பட்டன. சைவ சித்தாந்த நூல்களும் இக்காலத்தே மலர்ந்தன. மெய்கண்டார் சிவஞானபோதம் என்ற நூலை இயற்றினார். வாகீச முனிவரின் ஞானாமிர்தம், திருவிய்யலூர் உய்யவந்த தேவநாயனார் எழுதிய திருவுந்தியார். அருள்நந்தி சிவாச்சாரியார் எழுதிய சிவஞானசித்தியார், உமாபதி சிவாச்சாரியாரின் எட்டு நூல்கள் சோழர்காலத்தில் இயற்றப்பட்டன.

### சமயம்

சோழர் சைவசமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். இவர்கள் காலத்தில் சைவசமயம் உயர்ந்த நிலையிலிருந்தது. வைணவமும் சிறப்புப் பெற்றிருந்தது. சைவ, வைணவ மடங்களும் கோயில்களும் அமைக்கப்பட்டன. இம்மடங்களில் உணவிடுதல், விளக்கேற்ற எண்ணெய் வழங்குவது, நோய்க்கு மருத்துவம் செய்வது ஆகியன மேற்கொள்ளப்பட்டன.

### கட்டடக்கலை

சோழப் பேரரசின் தொடக்கக் கால கட்டடங்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. திருக்கட்டளை என்னும் இடத்திலுள்ள சுந்தரேஸ்வரர் கோயில், நார்த்தாமலையில் உள்ள விஜயாலய சோழீஸ்வரம் கோயில், கொடும்பாளூரிலுள்ள மூவர் கோயில் என்பன குறிப்பிடத்தக்கன. இன்றும் நிலைத்து நிற்கும் சோழர்கால கோயில்கள் கற்றளிகளால் ஆனவை.

### தஞ்சை பிரகதீஸ்வரர்கோயில்



தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில்

இக்கோயில் **முதலாம் இராஜராஜ சோழனால்** கி.பி. (பொ.ஆ.) 1003–ஆம் ஆண்டில் தொடங்கி, கி.பி. (பொ.ஆ.) 1010–ஆம் ஆண்டில் கட்டி முடிக்கப்பட்டது. தஞ்சாவூரில் உள்ள தஞ்சைப் பெருவுடையார் கோயில், (பிரகதீஸ்வரர் கோயில்) சோழர்கள் காலத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சோழர் கால கட்டடக்கலையின் முதிர்ச்சியை



XII Ethics_Lesson 5.indd 117 05-04-2019 11:12:25

www.tntextbook.org

இக்கோயில் வெளிப்படுத்துகிறது. சோழர்கால கட்டடக்கலையின் மணிமகுடமாக இக்கோயில் திகழ்கிறது. 90 அடி அகலம் 90 அடி நீளமுடைய கருவறைக்குமேல் நிலத்திலிருந்து 216 அடி உயரமுடைய விமானத்தைக் கொண்டது. இதனை **'இராசராசன் தக்கணமேரு'** என்பர். இதன் பொருள் **தென்னகத்தின் இமயமலை** என்றும் **இராஜராஜேஸ்வரம்** என்றும் அழைக்கப்படுகிறது.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்பதன் வடமொழியாக்கமே பிரகதீஸ்வரர் கோயில். இக்கோயில் தொடக்கக் காலத்தில் இராஜராஜேஸ்வரம் என்றும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் என்றும் மராட்டிய மன்னர்கள் காலத்தில் பிரகதீஸ்வரம் என்றும் அழைக்கப்பட்டது. இக்கோயிலின் நந்தி ஒரே கல்லால் ஆனது. தஞ்சைப் பெரியகோயிலில் ஆயிரமாவது ஆண்டுவிழா 2010 செப்டம்பர் 25 –ஆம் நாள் சிறப்பாக நடைபெற்றது.

## கங்கைகொண்டசோழபுரம்



கங்கை கொண்ட சோழபுரம் கோயில்

முதலாம் இராஜேந்திர சோழன் தனது கங்கை வெற்றியின் நினைவாக உருவாக்கிய கங்கைகொண்ட சோழபுரத்தில் கட்டிய கோயில், கங்கைகொண்ட சோழீஸ்வர கோயில் என்று அழைக்கப்படுகிறது. இக்கோயிலின் விமானம் 150 அடி உயரமுடையது. இக்கோயிலின் உட்பகுதியில் தெற்கில் நடராசர் கோயிலும், வடக்கில் சண்டிகேசுவரக் கோயிலும் மேற்கில் சுடரி லிங்கமும் அமைந்துள்ளன. அம்மனுக்குத் தனிக் கோயில் அமைந்துள்ளது. இவ்வூரில் இவர் ஏற்படுத்திய ஏரி, சோழ கங்கம் எனப்பட்டது.

## தாராசுரம் – ஐராவதேஸ்வரர் கோயில்

இக்கோயில் இரண்டாம் இராசராசன் காலத்தில் கட்டப்பட்ட கோயிலாகும். இதில் சக்கரங்களை அமைத்துத் தேரை இழுத்துச் செல்வது போன்ற கல்தேர் அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தை உற்று நோக்கினால் நாகரம், திராவிடம், வேசரம் ஆகிய மூன்று கலைபாணிகளை உள்ளடக்கியுள்ளதைக் காணலாம். இக்கோயிலின் விமான சுவர்களில் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றுச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.



தாராசுரம் – ஐராவதேஸ்வரர் கோயில்

## திரிபுவனம் – கம்பகரேசுவரர் கோயில்

மூன்றாம் குலோத்துங்கன் பாண்டியரை வென்று, மதுரையில் திரிபுவன வீரத்தேவன் என்ற பட்டம் சூட்டியதன் விளைவாக இக்கோயிலை கட்டினான்.

## சிற்பக்கலை

சோழர்காலச் சிற்பங்கள், கோயில் சுவர்களிலும் தூண்களிலும் காணப்படுகின்றன. பொதுவாகச் சிவன் கோயில்களில் கருவறையின் மேற்குப் பகுதியில் லிங்கோத்பவர், தெற்குப் பகுதியில்



XII Ethics_Lesson 5.indd 118 05-04-2019 11:12:25

www.tntextbook.org

தட்சிணாமூர்த்தி, வடக்கே பிரம்மா ஆகியோரின் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

### படிமக்கலை

கல்லில் சிலை வடித்ததைப் போன்று உலோகங்களினால் வார்ப்புச் சிலைகள் உண்டாக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. அவை செம்பு, வெண்கலம், வெள்ளி போன்றவற்றால் வடிவமைக்கப்பட்டன. நடராசர் சிலை, சோழர் காலச் செப்புத் திருமேனிகளில் தலை சிறந்ததும் உலகப் புகழ்பெற்றதுமாகும்.

### ஓவியக்கலை

சோழர்கள் காலத்தில் தஞ்சைகோயிலின் கருவறைச் சுவரில் காணப்படும் ஓவியங்கள் மிகச் சிறப்புடையனவாகும். அவற்றில் தடுத்தாட்கொண்ட சுந்தரர் வரலாறும் சிவபெருமான் புலித்தோல்மீது அமர்ந்துள்ள கைலாயக் காட்சியும், சுந்தரர் வெள்ளை யானைமீது அமர்ந்து செல்லும் காட்சியும் மிகவும் சிறப்பானதாகும்.

### நடனக்கலை

சிதம்பரம், தஞ்சை, காஞ்சி போன்ற கோயில்களில் காணப்படும் நடன மாந்தர்களின் சிற்பங்களும், பெரியபுராணம், கம்பராமாயணம் காட்டும் நடனக்கலையும் சோழர்கால நடனக்கலைக்குச் சான்றாகும். சோழர் கால நடனக் கலைஞர்களுக்கு **மாணிக்கம், காவிதி, தலைக்கோலி**, ஆகிய பட்டங்கள் வழங்கப்பட்டன.

### இசைக்கலை

சோழர்கால இசைக்கலையில் ஆய்ச்சியர் குரவை குறிப்பிடத்தக்கது. ஏழுபண்களை மாறிமாறிப்பாடி இசை எழுப்புபவர், நமசிவாயா என்பதை மாற்றி உச்சரித்து ஓசைநயம் காட்டிப்பாடுவர். இதுவே ஆய்ச்சியர் குரவை எனப்பெறும். கலிங்கத்துப்பரணி, சீவகசிந்தாமணி, பெரியபுராணம், திருவிசைப்பா முதலியன சிறந்த இசைப்பாடல்களாகும். தேவாரப்பாடல்களை ஓதவும் திருப்பதிகங்களை விண்ணப்பிக்கவும் இசைக் கலைஞர்களுக்குத் திருத்தாண்டகம் என்ற நிலம் அளிக்கப்பட்டது.

### இந்தியப் பண்பாட்டிற்குச் சோழர்களின் கொடை

- மன்னருக்கு வாரிசு இல்லாதபோது, அரச குடும்பம் சார்ந்த/சாராத ஒருவர் மன்னராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முறை, நல்லாட்சிக்கு சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகும்.
- கிராமசபை உறுப்பினர்களைக் குடவோலைமுறையில் தேர்ந்தெடுக்கப் பட்ட தேர்தல் முறையானது, இந்தியப் பண்பாட்டிற்குச் சோழர்கள் நல்கிய சிறந்த கொடையாகும்.
- சோழர்காலத்தில் கொண்டு வரப்பட்ட குடும்புகள் முறை, தற்கால கிராம ஊராட்சி உறுப்பினர்களுக்கு அடிப்படையானது.
- சோழர் காலத்தில் நிலங்கள் அளக்கப்பட்டு தரம் வாரியாக வரிவிதிக்கப்பட்டது. முதலாம் இராஜராஜ சோழன் நிலம் அளந்து தரம் பிரித்ததால் '**உலகளந்த சோழன்**' என்று புகழப்பட்டார்.'
- ஐம்பெரு மற்றும் ஐஞ்சிறு காப்பியங்கள், இலக்கண நூல்கள், நிகண்டுகள் போன்றவை தமிழ் இலக்கியப் படைப்பிற்கும் இந்தியப் பண்பாட்டிற்கும் சிறந்த கொடைகளாகும்.
- நாதமுனிகள் தொகுத்தளித்த நாலாயிரத் திவ்விய பிரபந்தம், சோழர் காலத்தில் வழங்கப்பட்ட சிறந்த இலக்கியக் கொடையாகும்.
- குலோத்துங்க சோழப் பேரேரி, இராசேந்திர சோழப் பேரேரி போன்றவை சோழர் காலத்தில் வெட்டப்பட்ட ஏரிகளாகும்.
- ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையும் அவர்களின் தகுதியும் கடமையும் பற்றிச் சோழர்கால கல்வெட்டில் குறிப்பிடப்படுகிறது.
- சோழர்காலத்தில் வேதக்கல்வி மற்றும் மருத்துவக்கல்வி போன்றவை இந்தியப் பண்பாட்டிற்கு அளித்த நன்கொடையாகும்.



XII Ethics_Lesson 5.indd 119 05-04-2019 11:12:25

## 5.9 பாண்டியர்காலப் பண்பாடு

பிற்காலப் பாண்டியர்கள் கி.பி. (பொ.ஆ)12–ஆம் நூற்றாண்டின் இறுதியில் முதலாம் சடையவர்மனின் தலைமையில் எழுச்சி பெற்றனர். முதலாம் மாறவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் சடையவர்மன் சுந்தரபாண்டியன், முதலாம் மாறவர்மன் குலசேகர பாண்டியன் ஆகியோர் பிற்காலப் பாண்டியவம்சத்தின் சிறந்த மன்னர்களாகத் திகழ்ந்தனர். கோப்பெருஞ்சிங்கனின் வயலூர் கல்வெட்டு, பிற்காலப் பாண்டியர்களைப் பற்றி அறிய உதவும் சான்றாக உள்ளது.

### ஆட்சி முறை

பிற்காலப் பாண்டியப் பேரரசு மண்டலம், வளநாடு, ஊர் என்று மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டது. கல்வெட்டுச் சான்றுகள் மதுரோதய வளநாடு, ஸ்ரீவல்லப வளநாடு, பராந்தக வளநாடு, சுமிதரணவளநாடு ஆகிய வளநாடுகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. நாட்டின் தலைவன் மன்னன் ஆவார். மன்னனுக்கு ஆட்சியில் உதவுவதற்கு **மகாமந்திரர்** எனப்பட்ட அமைச்சரவை இருந்தது. படைத்தலைவர் சேனாதிபதி என்றும், அனைத்துப் படைகளுக்கும் பொதுவான தலைவர் **மகாசாமந்தன்** எனவும் அழைக்கப்பட்டனர். மேலும், பல அரண்மனைப் பணிகளைக் கண்காணித்தவர்கள் அகப்பரிவர முதலி, திருவாசல் முதலி என்றழைக்கப்பட்டனர்.

வரிவசூல் செய்வதற்குப் **புரவுவரித் திணைக்களத்து முகவெட்டி** என்ற வருவாய் அதிகாரி நியமிக்கப்பட்டார். தலைமை அதிகாரி **திணைக்களநாயகம்** என்றழைக்கப்பட்டார். வரி நிர்ணயம் செய்வோர் நாடு வகை செய்வோர் எனவும் வரித்தண்டல் செய்த அதிகாரி 'முதலி' எனவும் அழைக்கப்பட்டனர்.

### படைப்பிரிவுகள்

பிற்காலப் பாண்டியர்கள் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை ஆகிய நான்கு படைப்பிரிவுகளைப் பெற்றிருந்தனர். இவற்றைத் தவிர அவசர காலத்தில் பயன்படும் முனையெதிர்மோகர், தென்னவன் உதவிகள் என்ற படைப்பிரிவுகளும் இருந்தன. படைப்பாசறையைக் கண்காணிக்கும் அதிகாரி **ஆராய்ச்சி நாயகம்** எனப்பட்டார்.

### நீதித்துறை

பிற்காலப் பாண்டியர்களின் நீதித்துறை '**தருமாசனம்**' என்றழைக்கப்பட்டது. அதற்கு அரசரே தலைவராக இருந்தார். உள்ளாட்சி அமைப்புகள் (ஊரவை) குற்றங்கள் தொடர்பாக விசாரணை செய்தன. ஊரவை நிராகரித்த வழக்குகள் அரசவைக்குக் கொண்டு செல்லப்பட்டன.

### ஊராட்சி முறை (உள்ளாட்சி முறை)

பாண்டியர்களின் ஆட்சியில் உள்ளாட்சி அமைப்புகள் வலிமை பெற்றுத் திகழ்ந்தன. இதில் மூன்று வகை சபைகளிருந்தன.

- பிராமணர்கள் இருந்த பிரம்மதேயச் சபை
- பிரம்மதேயமல்லாத ஊர்களிலிருந்த சபை
- வணிகர்கள் வாழ்ந்த நகரசபை

மேற்காணும் சபைகளைப் பற்றி, **மானூர்** கல்வெட்டு குறிப்பிடுகிறது. சபை உறுப்பினர்கள் 'குடவோலை' முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டுத் தகுதிக்கேற்ப வாரியப் பணிகளில் நியமிக்கப்பட்டனர்.

### சமூக நிலை

பாண்டியர்கள் காலத்தில் அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் ஆகிய நான்கு பிரிவு மக்கள் வாழ்ந்தனர். மறவர், தச்சர், ஆயர், கொல்லர், மருத்துவர், நெசவாளர், முத்துக்குளிப்போர் போன்ற பிறபிரிவு மக்களும் வாழ்ந்து வந்தனர். முதலாம் மாறவர்மன் காலத்தில் அந்தணர்களுக்கென அக்ரஹாரங்கள் என்ற குடியிருப்புகள் ஏற்படுத்தப்பட்டு, அதற்கு **அவனி வேந்த சதுர்வேதி மங்கலம்** என்று பெயரிடப்பட்டது.

பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் முத்துக்குளித்தல் முக்கிய தொழிலாக இருந்தது. கடலில் மூழ்கி முத்துக் குளிப்போர் மிகுதியாயிருந்தனர். வணிகர்கள் வாழ்ந்த



XII Ethics_Lesson 5.indd 120 05-04-2019 11:12:26

பகுதிகள் நானாதேசிகப்பெருந்தெரு, ஐந்நூற்றுவர்பெருந்தெரு என்றழைக்கப்பட்டன. ஆலயங்களுக்குத் திருப்பணி செய்வதிலும் வணிகர்கள் ஈடுபட்டனர். வேளாளர்கள் வேளாண்மைத் தொழிலைச் செய்தனர். இவர்கள் தங்களை **பூமிபுத்திரர்கள்** என்றும், நாட்டு மக்கள் என்றும் அழைத்துக் கொண்டனர். நிலக்கிழார்களும் வேளாளர்களும் இணைந்த சமூகப் பிரிவு **சித்திரமேழி பெரிய நாட்டார்** எனப்பட்டது. ஏர் உழவர்கள் '**மேழிச் செல்வம்**' எனப்பட்டனர். பதினெட்டு வகையான தொழில்களைச் செய்வோர் '**இரதகாரர்கள்**' எனப்பட்டனர்.

பிற்காலச் சமூகநிலை பற்றி மார்க்கோபோலோ மற்றும் வாசப் ஆகிய அயல்நாட்டுப்பயணிகள் பின்வரும் செய்திகளைத் தங்கள் குறிப்புகளில் பதிவு செய்துள்ளனர். அவையாவன:

- பாண்டிய நாட்டில் வாழும் மக்கள் பசுக்களைப் போற்றி வணங்குவர்.
- தங்களின் வீட்டினைச் சுத்தமாக வைத்திருந்தனர். வீட்டின் தரைகளைச் சாணத்தால் மெழுகிச் சுத்தப்படுத்தினர்.
- உயர்வு-தாழ்வின்றி அனைவரும் தரையிலேயே அமர்ந்தனர்.
- சாதாரண மக்களின் ஆடைகள் எளியனவாகவும் அரச குடும்பத்தினரின் ஆடைகள் ஆடம்பரமாகவும் இருந்தன.
- குளித்த பிறகே காலை உணவுண்ணும் பழக்கத்தை மேற்கொண்டனர்.
- மது அருந்துதல் பெருங்குற்றமாகக் கருதப்பட்டது. அவ்வாறு மது அருந்திவிட்டுப் பேசுவோரின் வாக்கினைப் புறக்கணித்தல் சமூக மரபாயிற்று
- பெண்கள் சமூகத்தில் உயர்ந்த நிலையில் இருந்தனர்.
- அரசகுலப் பெண்கள் கோயில்களுக்காக நிலங்களைத் தானமாக வழங்கினர்.
- மார்கழி மாதம் விடியற்காலையில், பெண்கள் வீட்டு வாசலில் கோலமிட்டு நோன்பிருந்தனர்.
- பெண் வீட்டார் மணமகனுக்குச் சீதனம் தந்து திருமணம் செய்யும் வழக்கம் இருந்தது.
- பெண்கள் கோயில்களிலேயே தங்கி, இறைப்பணி செய்தனர்.
- பதின்மூன்று வயதுடைய ஆண்மகன், தன் தாய்க்குத் தன் உழைப்பில் பொருளீட்டி உணவளித்தான். தந்தையின் உழைப்பில் அவன் வாழவில்லை.

## கல்வி

பிற்கால பாண்டியர் காலத்தில் வேதபாடசாலைகள் இருந்தன. இப்பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியர்களுக்கு '**பட்டவிருத்தி**' என்ற விருதும் '**சாலபோகம்**' என்ற மானியமும் வழங்கப்பட்டன. அந்தணர்கள் நடத்திய பாடசாலைகள் **கடிகை, வித்யாஸ்தானம்** என்றழைக்கப்பட்டன. இங்குக் கணிதம், வேதம், தத்துவம், சமயம் போன்றவை போதிக்கப்பட்டன. மாணவர்களின் ஒழுக்கம், கட்டுப்பாடு போன்றவற்றிற்குக் கல்விச் சாலைகள் முக்கியத்துவம் அளித்தன. சைவ சித்தாந்த வல்லுநர்கள் சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் மடத்தில் தங்கிப் பாடம் கற்பித்தனர். ஸ்ரீவல்லபப் பெருஞ்சாலை என்ற உயர்கல்விக் கூடம் கன்னியாகுமரியிலும், காந்தளூர் சாலையிலும் (திருவனந்தபுரம்) நிறுவப்பட்டன. மாணவர்களுக்கு இலவச உணவு வழங்க நிலதானம் அரசர்களால் வழங்கப்பட்டன. இவர் காலத்திலிருந்த நூலகங்கள் **சரஸ்வதி பண்டாரங்கள்** என அழைக்கப்பட்டன. சிதம்பரம், சேரன்மாதேவி போன்ற இடங்களிலும் நூலகங்கள் இருந்தன. தமிழ் வளர்ச்சிக்குப் பாண்டியர் பேராதரவு தந்தனர்.

## பொருளாதார நிலை

நெசவுத் தொழில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. நெசவாளர்கள் தங்கள் வருமானத்திற்கேற்றார்போல் தறியிறை, பஞ்சுபீலி ஆகிய வரிகளைச் செலுத்தினர். நானாதேசிகன், மணிக்கிராமம், திசையாயிரத்து ஐந்நூற்றுவர்,



XII Ethics_Lesson 5.indd 121 05-04-2019 11:12:26

நகரத்தார்சபை, அஞ்சவண்ணத்தார் ஆகிய வாணிகச்சங்கங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். சீனா, இலங்கை, நேபாளம், சுமத்ரா, அரேபியா, ஏடன் போன்ற நாடுகளுடன் பிற்காலப் பாண்டிய நாட்டு வாணிகர்கள் வாணிகம் செய்தனர். நவமணிகள், மிகவும் அரிய வகைக் கற்கள், மிளகு,இலவங்கம்,ஏலம்,கிராம்பு,மூலிகைகள், உணவு தானியங்கள் போன்றவற்றை ஏற்றுமதி செய்தனர். அஞ்சுவண்ணத்தார் என்ற இஸ்லாமிய வணிகக் குழுவினர் நாகப்பட்டினத்தில் தங்கி வாணிகம் செய்தனர். இவர்கள் மூலமாகவே அரேபிய நாட்டிலிருந்து குதிரைகள் இறக்குமதி செய்யப்பட்டன. பாண்டிய நாட்டில் குதிரை வியாபாரம் மிகச் சிறப்பாக நடைபெற்றதாக மார்க்கோபோலோ, வாசப் ஆகிய அயல்நாட்டுப்பயணிகள் தமது குறிப்புகளில் பதிவுசெய்துள்ளனர்.

நிலவரியே நாட்டின் முக்கிய வருவாய் ஆகும். மொத்த வருவாயில் ஆறில் ஒரு பங்கு, வரியாகப் பெறப்பட்டது. இளஞ்சினைப் பேறு, உழுதுக்குடி, பாடிகாவல், தட்டாரப்பாட்டம், இடைவெளி, பொன்வரி, தறிக்கிறை, செக்கிறை போன்ற வரிகளும் பாண்டியர்கள் காலத்தில் வசூலிக்கப்பட்டன.

### ஐந்து வண்ணத்தார்

ஐந்து வகை வண்ணப்பொருள்களை விற்பனை செய்த இஸ்லாமிய வணிகர், 'ஐந்து வண்ணத்தார்' என அழைக்கப்பட்டனர். இவர்கள் பாண்டிய நாட்டில் தீதாண்டதான புரத்திலும், சோழ நாட்டிலுள்ள நாகப்பட்டினத்திலும் தங்கி வாணிபம் செய்தனர்.

நிலங்கள் முறையாக அளக்கப்பட்டன. நிலங்களை அளப்பதற்குக் குடிதாங்கி, அருள்நீதி ஊர்க்கோல் என்ற அளவுகோல்கள் பயன்படுத்தப்பட்டன. நிலவரி கடமை, காணிக்கடன் ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டது. இவர்கள் காலத்தில் **புதுக்களிகைப் பணம், அன்றாட நற்புதுக்காசு, தனபாலன்குளிகை** ஆகிய நாணயங்கள் வாணிகத்தில் பயன்படுத்தப்பட்டன.

மாறவர்மன் குலசேகரப் பாண்டியன்சீனஅரசன்குப்ளாய்கானுடன் நட்புறவு கொண்டிருந்தார். அதன் காரணமாக அவர் கி.பி. (பொ.ஆ.) 1281–இல் ஒரு தூதுக் குழுவைச் சீனாவிற்கு அனுப்பினார்.

## சமயநிலை

சைவம், வைணவம் போன்ற சமயங்கள் மக்களால் பின்பற்றப்பட்டன. இக்காலத்தில்தான் மெய்கண்டதேவர், சிவஞானபோதம் என்ற நூலை எழுதினார். கி.பி.(பொ.ஆ)13 ஆம் நூற்றாண்டில் சைவ சித்தாந்த மடங்கள் ஏற்படுத்தப்பட்டன. திருநெல்வேலி நெல்லையப்பர் கோயிலில் சைவ சித்தாந்த நூல்களை ஓதுவதற்காகப் பதினொரு துறவி ஓதுவார்கள் (தபஸ்விகள்) அமர்த்தப்பட்டனர் என்று இரண்டாம் மாறவர்மன் சுந்தர பாண்டியனின் கல்வெட்டு கூறுகிறது. இத்துறவிகள்

- தேவசந்தானமடம்
- பட்டவீர சந்தானமடம்
- திருவாரூர் மடம்
- பிட்சாமடம்
- மதுரை மடம்
- அழகிய நாயக சந்தான மடம் (நெல்லை) ஆகியவற்றைச் சேர்ந்தவர்களாவர்.

பாண்டிய மன்னர்கள் காலத்தில் வைணவ சமயமும் சிறப்புப் பெற்றிருந்தது. இவர்களில் சுந்தரபாண்டியன் வைணவ சமயத்தை ஆதரித்தார். இவரது கோயில் திருப்பணிகளை விளக்கும் வகையில் **'கோயிலொழுகு'** என்ற நூலும் வெளியிடப்பட்டது. திருவைகுண்டம் என்ற



XII Ethics_Lesson 5.indd 122 05-04-2019 11:12:26

இடத்தில் உள்ள பெருமாள் கோயில் கோபுரத்தைச் சுந்தரபாண்டியன் கட்டினார். இவரே திருப்பதியிலுள்ள ஏழுமலையான் கோயிலுக்குப் பொன்னாலான கலசத்தைச் செய்வித்தார். சடையவர்மன் குலசேகரப் பாண்டியன், விக்கிரம பாண்டியன், முதலாம் மாறவர்மன் முதலிய மன்னர்களும் வைணவத் திருத்தலங்களுக்கு நிவந்தம் அளித்தனர். திருவிழாக்கள் நடைபெற உதவி செய்தனர். அகோபில மடம், வானமாமலை மடம் போன்ற வைணவ மடங்கள் சிறப்புப் பெற்றன. தர்மகீர்த்தி என்பவர், பிற்காலப் பாண்டியர்கள் காலத்தில் வாழ்ந்த பௌத்த சமய அறிஞராவார்.



நெல்லையப்பர் கோயில்

## கட்டடக்கலை

பிற்காலப் பாண்டியர் காலத்தில், கோயில் கட்டடக்கலையினை விரிவாக்கும் புதிய அமைப்பு முறைகள் தொடங்கின. வெளிப்புறத்தில் உயர்ந்த அளவிலான கோபுரங்கள், கருவறை, அர்த்த மண்டபம், மகாமண்டபம், சுற்றுப்புறப் பிரகாரங்கள், பல தூண்களைக் கொண்ட மண்டபங்கள் போன்றவை எழுப்பப்பட்டன. இக்காலக் கோயிலின் நுழைவாயிலில் உயர்ந்த கோபுரங்களை எழுப்பி, கட்டடக்கலையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தினர். சிதம்பரம், ஸ்ரீரங்கம் போன்ற இடங்களிலுள்ள கோயில்களில் துணைக் கோயில்களையும், மண்டபங்களையும் கோபுரங்களையும் கட்டினர். மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருநெல்வேலி நெல்லையப்பர் கோயில், தென்காசி அழகர் கோயில் போன்றவை குலசேகரப் பாண்டியர் காலத்தில் சிறப்படைந்தன. இவற்றில் அர்த்த மண்டபம், மணிமண்டபம், சன்னதி, முன்கோபுரம் போன்றவை கட்டப்பட்டன.

## சிற்பக்கலை

திருப்பரங்குன்றத்தில் காணப்படும் சோமாஸ்கந்தர், திருமால், துர்க்கை, கணபதி ஆகியோரின் சிற்பங்களும், நரசிம்மர், வராகர், நடராஜர் போன்றோரின் சிற்பங்களும் முக்கியத்துவம்பெற்றன.மதுரை,திருநெல்வேலி, தென்காசி, சிதம்பரம் போன்ற இடங்களில் உள்ள சிற்பங்களும் சிற்பக்கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகத் திகழ்ந்தன. பிற்காலப் பாண்டியர்களின் இறுதி காலச் சிற்பங்கள் விஜயநகர அரசு காலச் சிற்பங்களுடன் ஒத்திருந்தன.

## வார்ப்புக்கலை

உற்சவ மூர்த்திகள் மற்றும் ஆழ்வார்கள், நாயன்மார்களின் செப்புப்படிமங்கள், சிதம்பரம் நடராசரின் சிலை போன்றவை வார்ப்புக்கலை வளர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

## நடனக் கலை



சதுரத்தாண்டவத் திருக்கோலம்

நடனக்கலைஞர்கள் அரண்மனையிலும், தேவரடியார் கோயில்களிலும் நடனம் ஆடினர். நடனக்கலையின் சிறப்பு மற்றும் அதன் வளர்ச்சியினைக் கோயில்களில் காணப்படும் நடனச்சிற்பங்கள் மூலம் அறியலாம். சிதம்பரம் மற்றும் திருப்பரங்குன்றத்தில் உள்ள நடராஜரின் **சதுரத்தாண்டவத் திருக்கோலம்** நடனக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

www.tntextbook.org

### இசைக்கலை

இசைக்கலை இவர்கள் காலத்தில் முக்கியத்துவம் பெற்றது. வீரமத்தளம், மத்தளம், திபிலை, சேமக்கலம், திருச்சின்னம் போன்ற இசைக்கருவிகள் யாவும் கோயிற்சிற்பங்களில் காணப்படுவதின் மூலம் பாண்டியர் இசையைப் போற்றி வளர்த்தனர் என்பதை அறிய முடிகிறது.

### நாடகக்கலை

பாண்டிய மன்னர்கள் நாடகக்கலையைப் போற்றி வளர்த்தனர். கோயில்களில் நாடகங்கள் நிகழ்த்தப்பட்டன. **அழகிய பாண்டியன் கூடம்** என்று நாடக அரங்கம் அழைக்கப்பட்டது. நாடகத்தில் நடிப்போருக்குக் **'கூத்துக்காணி'** வழங்கப்பட்டன. ஆடல் மகளிருக்கு **'தலைக்கோல்'** என்ற பட்டம் வழங்கப்பட்டது. 'சாந்திக்கூத்து' 'வினோதக்கூத்து' என இரு வகைக் கூத்துகள் இருந்தன என்று ஆத்தூர் கோயில் கல்வெட்டு குறிப்பிடுகின்றது.

### இந்தியப் பண்பாட்டிற்குப் பிற்காலப் பாண்டியர்களின் கொடை

- கோபுரக் கட்டடக்கலையில் புதிய மாற்றங்களைக் கொண்டுவந்தனர்.
- கல்விச் சாலையில் இலவச உணவுடன் மாணவர்களுக்கு அரச நிர்வாகப் பயிற்சி அளித்தனர்.
- சரஸ்வதி பண்டாரம் போன்ற நூலகங்கள் ஏற்படுத்தப்பட்டதன் மூலம் வேதங்கள், புராணங்கள் பயிற்றுவிக்கப்பட்டு, இந்தியப் பண்பாட்டு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை புரிந்தன.
- பாண்டியர்கள் காலத்தில் இசை, நடனம், ஓவியம், சிற்பம் போன்ற நுண்கலைகள் வளர்ச்சி பெற்றன.

## 5.10 டெல்லி சுல்தானியர்காலப் பண்பாடு

இந்திய வரலாற்றில் டெல்லி சுல்தானியர்களின் தோற்றமும், வளர்ச்சியும் புதிய பரிமாணத்தைக் கொடுத்தது. இம்மாற்றம் இந்தியஆட்சிமுறையில்கலாச்சாரமாற்றத்தைக் கொண்டுவந்தது. கி.பி.(பொ.ஆ)1206 முதல் கி.பி1526 வரை ஐந்து மரபினர் ஆட்சி செய்தனர். இவர்களுடைய ஆட்சியில் சமயம் சார்ந்த ஆட்சி நடைமுறைப்படுத்தப்பட்டது. சமயமும் அரசியலும் இவ்வாட்சி என்ற நாணயத்தின் இருபக்கங்களாகும். சுல்தான் என்பது, முஸ்லீம் ஆட்சியாளர்கள் சூட்டிக் கொண்ட பட்டப்பெயராகும். இவர்கள் பெயரளவுக்குக் கலிபாவிற்குக் கட்டுப்பட்ட அரசர்களாகத் திகழ்ந்தனர்.

### சான்றுகள்

டெல்லி சுல்தானியர்கள் காலத்து இலக்கியங்கள் அக்கால வரலாற்றை அறிய ஆதாரமாக உள்ளன. அல்பெருனி எழுதிய தாரிக்-உல்.ஹிந்து,ஹாசன் நிசாமி எழுதிய தாஜ் – உல்-மாசீர், மின்ஹஜ் – சிராஜ் – உஸ் எழுதிய தபகத் –இ-நாசீரி, அமீர்குஸ்ரு எழுதிய 'துக்ளக் நாமா' போன்ற நூல்கள் அக்கால மன்னர்கள், வரிசை மக்கள் வாழ்க்கை நிலை, பண்பாடு போன்றவை பற்றி அறிய உதவுகின்றன.

இடைக்காலஇந்தியாவிற்குவருகைபுரிந்த அயலவர்களின் பயணக்குறிப்புகள் அரசியல், முன்னேற்றம், சமூக – பண்பாட்டு வரலாறு பற்றிக் குறிப்பிடுகின்றன. இபின் பதூதாவின் பயணக் குறிப்புகள், டெல்லி மற்றும் மதுரையில் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை நிலையினை விளக்குகிறது. அப்துர் ரசாக் தன்னுடைய பயணக் குறிப்பில் தென்னிந்திய மக்களின் வாழ்க்கை, அவர்களின் நிலை, பண்பாட்டு நிலை ஆகியவற்றைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மேலும் மார்க்கோபோலோ, நிக்கோலோ கோண்டி, பார்போசா, பயஸ் ஆகியோரின் குறிப்புகளும் குறிப்பிடத்தக்கவையாகும். "தமிழ்க் கூடல் நகர்" என்று மதுரையைச் சிவகாசி செப்பேடு புகழ்கிறது.

### ஆட்சிமுறை

#### மைய அரசு

மைய அரசு அதிகாரக் குவியல் முறையில் அமைக்கப்பட்டதாகும். மைய



XII Ethics_Lesson 5.indd 124 05-04-2019 11:12:26

அரசின் தலைவர் சுல்தான் ஆவார். இவரிடம் சட்டம், நீதித்துறை, ராணுவத் தலைமை போன்ற அதிகாரங்கள் இருந்தன.

## ஆட்சிப் பிரிவுகள்

**இக்தா**என்பதுஆட்சியில்முக்கியபிரிவாக இருந்தது. இக்தா ஷிக்குகளாக(மாவட்டம்) பிரிக்கப்பட்டன. ஷிக்குகளின் தலைவர் ஷிக்தார் ஆவார். ஷிக்குகளுக்கு அடுத்த பிரிவு பர்கானா(வட்டம்) ஆகும். பர்கானாவிற்கு அடுத்த நிலையில் கிராமங்கள் இருந்தன. இராணுவத்துறை அதிகாரி தன் ஆட்சிக்குட்பட்ட பகுதியில் சட்டம், ஒழுங்கை நிலை நிறுத்துதல் இவரது கடமையாகும்.

## அமைச்சர்கள்

சுல்தான் தன் கடமைகளை நிறைவேற்றுவதற்காகவும், அவருக்குத் தக்க ஆலோசனைகள் வழங்கவும் அமைச்சர்கள்துணைபுரிந்தனர்.

1. நயிப் –சுல்தான் – சுல்தானுக்கு அடுத்தவர். ஆனால், எல்லா உரிமைகளையும் பெற்றவர்
2. வாசீர் – நிதி அமைச்சர்
3. அரிஸ் – இ. மாமலிக் – தலைமைத் தளபதி
4. திவான் இன்ஷா – செய்தி மற்றும் ஆவணக் காப்பகம்
5. திவானி ரிசாலத் – சமயத்துறை
6. தலைமை காஸி – நீதித் துறைத் தலைவர்
7. பாரித்–ஐ–முமலிக் – உளவுத்துறை

இவர்களின்றி வேறுபல அதிகாரிகளும் சுல்தானுக்கு உதவியாக இருந்தனர்.

## சமுதாயம்

முகமது கோரியோடு வந்த துருக்கியர் இந்தியாவில் குடியேறினர். அவர்களைத் தொடர்ந்து குத்புதீன் ஐபெக்கின் படையெடுப்பின்போது வந்த துருக்கியர் குர்தியார், சொராசனர்கள், கில்ஜிகள் போன்றோர் இந்தியாவில்தங்கினர்.மங்கோலிய படையெடுப்பின்போது, பலர் இந்தியாவில் தங்கினர். இஸ்லாமிய மதமாற்றமடைந்த இவர்கள் **புதிய முஸ்லீம்கள்** என்றும் பார்சியர் என்றும் அழைக்கப்பட்டனர். துருக்கியர், அரேபியர்கள், அபிசீனியர்கள், எகிப்தியர்கள் ஆகியோர் ஆட்சி வகுப்பினராக இருந்தனர். கி. பி. 13–ஆம் நூற்றாண்டில் மூன்று வகையான ஆட்சி வகுப்பைச் சேர்ந்த பிரபுக்கள் இருந்தனர். அவர்கள் 1) கான்கள் 2) மாலிக்குகள் 3)அமீர்கள் போன்றோர்களாவர்.

## பெண்கள் நிலை

அரச குடும்பத்துப் பெண்களும், உயர் வகுப்பினப் பெண்டிரும் கல்விகற்று, சில அரச சலுகைகளுடன் செல்வாக்கு பெற்றிருந்தனர். இஸ்லாமியப் பெண்கள் **பர்தா முறையைப்** பின்பற்றினர். சமுதாயத்தில் கீழ்நிலை மக்கள் கிராமங்களில் கணவருக்குக் கட்டுப்பட்டும் விவசாயத் தொழில்களுக்கு உதவியாகவும் இருந்தனர். பல பெண்கள் குடிசைத் தொழில்களில் சிறப்புற்றிருந்தனர்.

## பொருளாதாரம்

சுல்தான்களின் ஆட்சிக் காலத்தில் நான்கு பிரிவுகளாக நிலம் பிரிக்கப்பட்டது. அவை:

இக்தா (Igta) – இ ந் நி ல ங் க ள் அதிகாரிகளுக்கு ஊதியத்திற்குப் பதிலாக வழங்கப்பட்டன

காலிசா(Kalisa) – அரச நிலங்கள் (மைய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள நிலங்கள்)

மரபு வழி ஜமீன்தார் நிலங்கள் – சுல்தானுக்குக் கட்டுப்பட்ட நிலங்கள்.

இனாம் – ச ம ய அறக்கட்டளைகளுக்கு வழங்கப்பட்ட நிலங்கள் போன்றவை

## அலாவுதீன் கில்ஜியின் அங்காடி சீர்திருத்தம்

அலாவுதின் கில்ஜி அங்காடி சீர்திருத்த முறையை அறிமுகப்படுத்தினார். இதன்படி பொருள்கள் நியாயமான முறையில் விற்கப்பட்டன. அங்காடி விற்பனையாளர்கள், எடை குறைவாக விற்றாலோ, அதிக விலைக்கு



XII Ethics_Lesson 5.indd 125 05-04-2019 11:12:26

விற்றாலோ கடுமையாக தண்டிக்கப்பட்டனர். அனைத்து அங்காடிகளிலும் ஒரே விலையில் கலப்படமற்ற பொருள்கள் விற்பனை செய்யப்பட்டன. **சகானா–இ–மண்டி** அங்காடிகளை நிர்வகித்தார்.

அலாவுதின் கில்ஜி நில மேலாண்மை, நில அளவை மற்றும் நிலவரி வசூல் முறையை ஒழுங்குபடுத்தினார். முகமதுபின்துக்ளக் நிலவரியை அதிகமாக உயர்த்தினார். பெரோஸ் துக்ளக் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்கி, விவசாய வளர்ச்சிக்கான முயற்சிகளை மேற்கொண்டார்.

## தொழில்கள்

வேளாண்மை முக்கிய தொழிலாக கருதப்பட்டாலும் பிற தொழில்களும் வளர்ச்சியடைந்தன. விலையுயர்ந்தகற்கள் உடைய ஆபரணங்கள் செய்தல், நெசவு, சாயம் தோய்த்தல், காலிக்கோ அச்சிடுதல் போன்ற துணி சார்ந்த தொழில்கள், செம்பு, பித்தளை, இரும்பு போன்ற உலோகம் சம்பந்தப்பட்ட தொழில்கள், தோல்தொழில்கள், கப்பல் கட்டும் தொழில் போன்ற தொழில்களும் வளர்ச்சியடைந்தன.

## உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகம்

உள்நாட்டு வர்த்தகம் சந்தைகள் மூலம் நடைபெற்றது. அரிசி, சர்க்கரை, வெண்ணெய் போன்ற பொருட்களைச் சோழ மண்டலத்துக்கு அனுப்பினர். ஆக்ரா முக்கிய வர்த்தக மையமாக விளங்கியது. வெளிநாட்டு வாணிம் வடமேற்குக் கணவாய்கள் மூலம் நடைபெற்றது. லாகூரும், முல்தானும் வாணிக மையங்களாக திகழ்ந்தன. கடல்வழி வாணிகத்தின் மூலம் ஆக்ராவிலிருந்த பல பொருட்கள் உலகின் பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டன. காஷ்மீரத்திலிருந்து, குங்குமப்பூ, சால்வை, ஆக்ராவிலிருந்து நீலச்சாயம் போன்றவை ஏற்றுமதி செய்யப்பட்டன. அலாவுதீன் கில்ஜி விவசாய, வர்த்தகக்கொள்கை மூலம் விவசாயத்தையும், வர்த்தகத்தையும் நவீனமாக்கிச் **சந்தைப் பொருளாதாரத்தை** உருவாக்கினார்.

## சமயம்

டெல்லி சுல்தானியர்கள் காலத்தில் இந்து சமுதாயத்தின் மீது, இஸ்லாமிய சமயத்தின் தாக்கம் இருந்தது. இஸ்லாமிய சமயச் சட்டப்படி இந்துக்கள் மாற்று சமயத்தவர்கள், இந்துக்கள் மீது **ஜெசியா** என்ற வரி விதிக்கப்பட்டது. (சமயவரி) இதனால் இந்துக்கள் தனிமைப் படுத்தப்பட்டனர். பெரோஸ்துக்ளக் – சிக்கந்தர்லோடி போன்றோர் மதமாற்றத்தை வெகுவாக ஊக்குவித்தனர்.

## இலக்கியம்

சுல்தான்களின் ஆட்சிக்காலத்தில் அரசாங்க உதவியுடன் கவிதை, உரைநடை, இலக்கியம் போன்றவை வளர்ச்சி பெற்றன. குறிப்பாக வரலாறு சார்ந்த இலக்கியத்திற்குச் சிறப்பிடம் அளிக்கப்பட்டது. டெல்லி சுல்தான்கள் தத்துவம், நாடகம், மருத்துவம், சோதிடம் பற்றிய நூல்கள் எழுதப்படுவதை ஆதரித்தனர். இந்தி வங்காளம், மராத்தி, பஞ்சாபி, தமிழ், தெலுங்கு, கன்னட, மலையாள மொழிகளில் பிராந்திய இலக்கியங்களும் இயற்றப்பட்டன.

## அமிர்குஸ்ரு

அபுல் ஹாசன் யாமினித் குஸ்ரு என்ற இயற்பெயர் கொண்ட இவர் மிகச்சிறந்த கவிஞராகவும் இசை வல்லுநராகவும் திகழ்ந்தார். இவர் பாரசீக மொழிக் கவிஞராகத் திகழ்ந்தார். அலாவுதீன் கில்ஜி பற்றி எழுதிய **தாரிக்–இ–அலாய்** என்னும் நூல் மிகச் சிறந்த நூலாகும். இந்நூல் அலாவுதீனைப் பற்றிய செய்திகள், அங்காடி சீர்திருத்தங்கள், நிர்வாகத் திறன், மக்களின் வாழ்க்கைநிலை பற்றிக் குறிப்பிடுகின்றது. இவர் எழுதிய பாரசீக மொழி கவிதை 'கஜல்' என்ற புதிய இசை தொடங்குவதற்கு வழிகோலியது.

## இபின் பதூதா

அபு அப்துல்லா முகமது இபின்பதூதா என்ற இயற்பெயர்கொண்ட இவர், முகமது பின் துக்ளக்காலத்தில் இந்தியாவிற்குவருகைபுரிந்தார். இவருடைய பயணக் குறிப்புகள் '**ரெகிலா**' என்று அழைக்கப்படுகின்றன. இக்குறிப்புகள் முகமது



XII Ethics_Lesson 5.indd 126 05-04-2019 11:12:26

பின் துக்ளக் கால அரசியல் சமூக, பொருளாதார மற்றும் சமயநிலை பற்றிக் குறிப்பிடுகின்றன. தினமும் சிலர் கைகால்களில் விலங்கிடப்பட்டு அவைக்குக் கொண்டு வரப்படுதல், துன்புறுத்தப்படுதல் போன்றவை நடைபெற்றதாக இவர் குறிப்பிடுகிறார். இந்தியாவில் காணப்பட்ட பல்வேறு பழக்கங்கள், புது வழக்காறுகள் பற்றியும் குறிப்பிடுகிறார். சதி என்னும் உடன் கட்டை ஏறும் பழக்கம் இந்துக்களிடையே காணப்பட்டதை விளக்குகிறார். கடிதங்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு கொண்டு சென்ற ஒட்டக்காரர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார்.

## கலை கட்டடக்கலை

இந்திய இஸ்லாமியக் கலையின் ஒருங்கிணைப்பே டெல்லிசுல்தானிய கலை கட்டடக்கலை என்று பெர்கூசன் குறிப்பிடுகின்றார். இந்தியக் கலையில் இஸ்லாமிய கலை கலந்தமைக்குக் பல காரணங்கள் குறிப்பிடப்படுகின்றன. அவையாவன:

- துருக்கியர்கள் இந்தியக் கைவினைஞர்களையும் தச்சர்களையும் பயன்படுத்தினர்
- இந்துக்கள் மற்றும் சமணர்களின் கோயில்களை அழித்து அவற்றின் கட்டிடங்களின் மீது பல கட்டடங்களைக் கட்டினர்.
- சில இந்துக்கோயில்களை மசூதிகளாக மாற்றினர். எனவே, சுல்தான்கள் கலைபாணியில் இந்தியக் கலைபாணியைக் காணமுடிகிறது.

## சுல்தானியர் கால கட்டடங்களின் சிறப்பம்சங்கள்

- தூண்கள், உயர்மாடிகள், மலர் வேலைப்பாடுகள் ஏராளமாக இருந்தன.
- முகடுகள் உயரமாகவும், சமமான அளவிலும் அமைக்கப்பட்டுள்ளன.
- முன் சுவர்கள் தாழ்வாகவும் பின்னால் உள்ள கட்டடங்களுக்குப் பொருத்தமாகவும் அமைந்திருக்கின்றன.
- பிரம்மாண்டமான வளைவுகள் (Arche) இவர்கள் காலத்தில் கலை நுட்பத்துடன் எழுப்பப்பட்டன.

## குதுப்மினார்



குதுப்மினார்

பள்ளிவாயில்களில் தொழுகைக்குக் கூவி அழைப்பவர்களுக்கு **மூயாசின்** என்று பெயர். இவர்கள் பள்ளிவாயில் அருகில் இருந்த உயர்ந்த கோபுரங்களிலிருந்து கூவி அழைத்தனர். இந்த உயர்ந்த கோபுரங்களை **மினார்** என்பர். இக்கட்டடத்திற்குக் கலையழகு கூட்ட வாயிலில் இருமருங்கிலும் இருகோபுரங்கள் அமைத்தனர். டெல்லியில் உள்ள குதுப்மினார் குத்புதீன் ஐபக்கால் கட்டத் தொடங்கப்பட்டு இல்துமிஷ் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இதன் உயரம் 232 அடியாகும். இது சிவந்த மணற்கற்களால் கட்டப்பட்டது. இதில் குரானிலுள்ள இறைவசனங்கள் செதுக்கப்பட்டுள்ளன. யுனஸ்கோவால் கி.பி. (பொ.ஆ.) 1993 –இல் இது உலகப் பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டது.

## அலாய் தர்வாசா

அலாவுதீன் கில்ஜி காலத்தில் கட்டப்பட்டவையாகும். இது செல்சக் – துருக்கியர் கலைபாணியில் கட்டப்பட்டவை யாகும். மிக உயரமான மேடையில் இருந்து செம்மணற் கற்களாலும், வெள்ளைச் சலவைக் கற்களாலும் உருவாக்கப்பட்ட இக்கட்டடம்



XII Ethics_Lesson 5.indd 127 05-04-2019 11:12:26

www.tntextbook.org

அருகில் காணும்போது வண்ணங்களின் கோப்புகளாகக் காணப்படுகின்றது.



அலாய் தர்வாசா

முகமது பின் துக்ளக்கிற்குப் பின் வந்த பிரோஸ் துக்ளக் கட்டடப்பிரியர், கட்டடக்கலைவேந்தர். இவர் காலத்தில் 1200 மலர்வனங்களை டில்லியைச் சுற்றி அமைத்தார். இவரை பூங்கா பிரியர், நீர்ப்பாசனத்தின் தந்தை என்றழைப்பர்.

பிரோஷா துக்ளக் **பிரோஷாபாத்** என்னும் நகரை அமைத்தார். இந்நகருக்குள் பிரோஸ் ஷா கோட்லா என்னும் அரண்மனைக் கோட்டை உள்ளது.

### இந்தியப் பண்பாட்டிற்கு டெல்லி சுல்தானியர்கள் பங்களிப்பு

- அமிர்குஸ்ரு கவாலி என்ற இசை பாணியில் சித்தார், காயல் போன்ற இசைக்கருவிகளைக் கண்டறிந்தார் இந்தோ – அரேபிய சங்கீதக் கலைகள் ஒன்றுபட்டு **இந்துஸ்தானி** என்ற சங்கீதமாகப் புது வடிவம் பெற்றது.
- டெல்லி சுல்தான் காலத்தில் கோரா, சானம் போன்ற புதிய ராகங்களையும், இந்து மற்றும் ஈரானிய முறைகளை ஒன்றிணைத்து **குவாலிஸ்** என்றபுதிய வகை மெல்லிசைகளும் உருவாக்கப்பட்டன.
- பிரோஸ் துக்ளக் ஆட்சிக் காலத்தில் **ராகதர்பன்** என்ற இந்திய இசை நூல் பாரசீக மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்டது.
- இந்தியாவில் திராவிட கலைபாணி வளர்ச்சி குறைந்து இந்தோ – அராபிக் கலை வளர்ச்சி பெற்றது.
- அலாவுத்தின் கில்ஜியின் காலத்தில் **சக்ரா**(Chahra) என்ற பட்டியல் முறையும், **தாக்** என்ற குதிரைகளுக்குச் சூடுபோடும் முறை (அரச விலங்குகள் என்பதற்கு அடையாளமாக) அங்காடி சீர்திருத்தமும், தற்கால உணவுத் துறை அதிகாரி பணியிடங்களுக்கு மிகச் சிறந்த கொடையாகும்.
- வேளாண்மை முறையை மேம்படுத்த, முகம்மது பின் துக்ளக் ஏற்படுத்திய துறை திவான்-இ-கோஹி ஆகும்.
- டெல்லியில் உள்ள பிரோஷ்ஷா கோட்லா மைதானம், ஆக்ரா நகரம் மற்றும் அழகிய பூங்காக்கள் இவர்கள் காலத்திற்கு எடுத்துக்காட்டுகளாகும்.
- பிரோஷ் துக்ளக் ஆட்சிகாலத்தில் வேலைவாய்ப்பு அலுவலகம் உருவாக்கப்பட்டது.
- பிரோஷ் துக்ளக் காலத்தில் அனாதை மற்றும் கைம்பெண்களுக்கு நல வாழ்வுத் துறை ( திவானி கெய்ரத்) உருவாக்கப்பட்டது.
- டெல்லி சுல்தானியர் ஆட்சியில் பெண் அரசாள்வது (ரஷியா சுல்தானா) இந்து, இஸ்லாமிய ஆட்சி மரபில் மாற்றத்தை உருவாக்கின.
- டெல்லி சுல்தானியர்கள் வெளியிட்ட நாணயங்கள் பிற்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன.

### 5.11 விஜயநகரகால பண்பாடு

**ஹரிஹரர், புக்கர்** என்ற இரு சகோதரர்கள் **மாதவ வித்யாரண்யர்** என்பவரின் உதவிகொண்டு 1336இல் துங்கபத்திரா நதிக்கரையில் விஜயநகரப் பேரரசை உருவாக்கினர். இப்பேரரசு சுமார் நான்கு நூற்றாண்டுக் காலம் தென்னக வரலாற்றில் பெரும் சாதனைகளைப் புரிந்தது



XII Ethics_Lesson 5.indd 128 05-04-2019 11:12:26

எனலாம். இப்பேரரசை சங்கம, சாளுவ, துளுவ, ஆரவீடு வம்சத்தினர் போற்றி வளர்த்தனர். இந்துசமயம், கோவில்கள், கலாச்சாரங்களைப் பாதுகாப்பதற்கென இப்பேரரசு ஏற்படுத்தப்பட்டது என்று வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

**விஜயநகர விளக்கம்**

பெரிஸ்டாவின் கூற்றுப்படி – மூன்றாம்வல்லாளதேவன் தம் நாட்டின் வடக்கு எல்லையை இஸ்லாமிய படையெடுப்புகளின்றிக் காப்பதற்குத் துங்கபத்திரை நதியின் தென்கரையில் தம்முடைய மகன் வீரவிஜயவல்லாளின் பெயரில் விஜயநகரத்தை அமைத்தார் எனவும் இந்நகரமே பிற்காலத்தில் **விருபாட்சபுரம், ஹோசப்பட்டணம், வித்திய நகரம், விஜய நகரம்** என அழைக்கப்படுகிறது.

## சான்றுகள்

விஜய நகர கால இலக்கியச் சான்றுகள் வடமொழி, தெலுங்கு, கன்னடம், தமிழ் ஆகிய மொழிகளில் காணப்படுகின்றன. **கிருஷ்ணதேவராயரின் ஆமுக்தமால்யதம், கங்காதேவி எழுதிய மதுராவிஜயம், அல்லசானி பெத்தன்னாவின் மனுசரிதம்** போன்றவை விஜயநகரப் பேரரசைப் பற்றி அறிவதற்கான முக்கிய சான்றுகளாகும்.

விஜயநகர ஆட்சிகாலத்தைப் பற்றி அறிய, ஹம்பியில் உள்ள விருபாக்ஷர் கோயில், பெனுகொண்டா, சந்திரகிரி, வேலூர், செஞ்சி ஆகிய இடங்களில் காணப்படும் கோட்டைகளும், திருவண்ணாமலை, சிதம்பரம், மதுரை, திருப்பதி போன்ற இடங்களில் காணப்படும் கோபுரங்களும் முக்கிய தொல்பொருள் சான்றுகளாகத் திகழ்கின்றன.

விஜயநகரப் பேரரசுக்குப் பல்வேறு அயல்நாட்டுப் பயணிகள் வருகை புரிந்தனர். மெரோக்கோ நாட்டைச் சார்ந்த **இபின்பதூதா**, வெனிஷியப் பயணி **நிக்கோலோ கோண்டி**, பாரசீகப் பயணி **அப்துர்ரசாக்** போன்ற பயணிகள் விஜயநகர காலச் சமூக, பொருளாதார நிலையைப் பற்றி தங்களது பயணக்குறிப்புகளில் விவரித்துள்ளனர்.

## ஆட்சிமுறை

விஜயநகரப் பேரரசின் கீழ் ஆட்சித்துறை நன்கு சீரமைக்கப்பட்டிருந்தது. வாரிசுரிமை நிர்வாகம், நீதி, சட்டம் ஆகியவற்றில் அரசர் முழு அதிகாரம் பெற்று விளங்கினார். பரம்பரை வழக்கத்திலிருந்தது. சில சமயம் அரியணையைக் கைப்பற்றிக் கொள்ளும் வழக்கமும் இருந்தது, பேரரசு பல மண்டலங்களாகவும், மண்டலங்கள் பல நாடுகளாகவும்,நாடுஸ்தலங்களாகவும்,ஸ்தலம் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு மண்டலமும் மண்டலேஸ்வரர் என்ற ஆளுநரின் கீழ் செயல்பட்டது.

## சமூக வாழ்க்கை

சமூகத்தில் பிராமணர், சத்ரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பிரிவுகள் இருந்ததாக அல்லசானி பெத்தண்ணா தனது மனுசரிதத்தில் குறிப்பிட்டுள்ளார். பட்டு, பருத்தி ஆடைகளை மக்கள் அணிந்தனர். நடனம், இசை, மல்யுத்தம், சூதாட்டம், சேவல் சண்டை போன்றவை இவர்களது பொழுது போக்குகளாகும்.

## சமயம்

சங்கம மரபினர் சைவர்களாகத் திகழ்ந்தனர். விருப்பாக்ஷர் அவர்களின் குலதெய்வம் மற்ற மரபைச் சேர்த்தவர்கள் வைணவர்கள். எல்லா அரசர்களும் பிற சமயங்கள் மீது சகிப்புத்தன்மையுடன் நடந்து கொண்டனர். மக்கள் அனைவரும் சமயச் சுதந்திரம் பெற்று திகழ்ந்தனர் என போர்ச்சுகீசியப் பயணி பார்போசா குறிப்பிடுகிறார்.

## மகளிர் நிலை

பெண்கள் பழைமையில் அதிகநம்பிக்கை கொண்டிருந்தனர். அரசகுலப்பெண்கள்



XII Ethics_Lesson 5.indd 129 05-04-2019 11:12:26

கல்வியிற் சிறந்து விளங்கினர். குமாரகம்பணரின் மனைவி கங்காதேவி, மற்றும் ஹன்னம்மா, திருமலம்மா ஆகியோர் அக்காலத்தில் புகழ் வாய்ந்த பெண்பாற் புலவர்கள் ஆவர். ஆலயங்களுக்குச் சேவை செய்ய மகளிர் இருந்தனர். தேவதாசிமுறை வழக்கத்திலிருந்ததாகவும், அரசகுடும்பங்களில் பலதாரமணம் வழக்கத்திலிருந்ததாகவும் சதிவழக்கம் பெருமையாக கருதப்பட்டதாகவும் போர்ச்சுகீசியப் பயணி நூனிஸ் விளக்கமாக கூறியுள்ளார்.

### விஜய நகர அரசு சின்னம்

விஜய நகர அரசசின்னம் வராகன் ஆகும். வராகன் என்பது திருமாலின் வராக அவதாரத்தை குறிப்பிடும் வகையில் இவர்களால் பின்பற்றிப் பட்ட அரச சின்னமாகும். இம்மன்னர்களில் பெரும்பாலனோர் வைணவர்களாவர்.

## பொருளாதார நிலை

### விஜய நகர நாணயங்கள்

விஜய நகர அரசர்கள் **வராகன்** என்ற தங்கநாணயத்தை அதிகளவில் வெளியிட்டனர். தங்கத்தாலான இந்நாணயங்களில் இந்து தெய்வஉருவமும், **காளை, யானை, கண்டபெருண்டா** என்ற கற்பனை பறவையும் இடம்பெற்றிருந்தன. மேலும் **பக்கோடா** என்ற நாணயமும் புழக்கத்திலிருந்தது.



வேளாண்மையே நாட்டின் முக்கிய தொழிலாகக் கருதப்பட்டன. நீர்ப்பாசனத்தைப் பெருக்க எரிகள், கால்வாய்கள், துங்கபத்திரா ஆற்றின் குறுக்கே தடுப்பணைகள் அமைக்கப்பட்டன. பல்வேறு தொழில்கள் சிறந்து விளங்கின. நில வருவாய்த் துறை **அதவானே** என்று அழைக்கப்பட்டது. கர்நூல், அனந்தப்பூர், மாவட்டங்களில் வைரச் சுரங்கங்கள் இருந்தன. விஜயநகரம் புகழ்மிக்க ஒரு வர்த்தக மையமாகத் திகழ்ந்தது. தங்க நாணயம் **வராகன்** என்றழைக்கப்பட்டது. இந்நாணயங்களில் கன்னட, தேவநாகரி எழுத்துகள் பொறிக்கப்பட்டிருந்தன. வைணவச் சமயச்சின்னங்களும் பொறிக்கப்பட்டிருந்தன.

மலபார் கடற்கரையில் பல துறைமுகங்கள் இருந்தன. அவற்றில் கண்ணனூர் மிக முக்கியமான துறைமுகமாகும். இத்துறைமுகத்தில் அரேபியா, பாரசீகம், தென்ஆப்பிரிக்கா போர்ச்சுக்கல் நாடுகளுடன் வாணிகத் தொடர்பு இருந்தது. பருத்தி, பட்டு, நறுமணப் பொருட்கள், அரிசி, வெடியுப்பு, சர்க்கரை போன்றவை முக்கிய ஏற்றுமதி பொருள்களாகும். குதிரைகள், முத்து, செம்பு, பவழம், பாதரசம், சீனத்துப்பட்டு, வெல்வெட் துணிகள் முதலியவை இறக்குமதி செய்யப்பட்டன. கப்பல் கட்டும் தொழில் வளர்ச்சியடைந்திருந்தது.

## நீதி முறை

தண்டனைகள் தருமசாஸ்திரங்களின் அடிப்படையில் அமைந்திருந்தன. கிராமங்களில் கிராமத்து மகாஜனங்கள் தலைமை வகித்த நீதிமன்றங்களும், கோயில்களில் ஸ்தானிகர்கள் வழங்கிய கோயில்நீதிமன்றங்களும், வியாபார நீதிமன்றங்களும் வழக்கத்திலிருந்தன. சிவில் வழக்குகள், ஆவணம், சாட்சி, வாக்குமூலத்தின் அடிப்படையில் தீர்ப்பு அளிக்கப்பட்டன. அரச துரோகத்திற்கு மிகக் கொடிய தண்டனையாக நஞ்சு கொடுப்பதும், கண்களைக் குருடாக்குவதும் இருந்தது. கோயில் சொத்துகளைத் திருடியவருக்கு உடல்



XII Ethics_Lesson 5.indd 130 05-04-2019 11:12:26

உறுப்புகள் குறைத்தல் போன்ற கடுமையான தண்டனைகள்வழங்கப்பட்டன.

### நாயன்கார முறை

விஜயநகர ஆட்சிக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்ட நாயன்காரா முறை தென்னாட்டில் நிலவிய கிராம சுயாட்சி முறையின் அடிப்படையைத் தகர்ந்து எறிந்தன. சோழ மன்னர்கள் காலத்தில் நிலவிய **கணபோகம், ஏகபோகம்** என்ற இருவகையான நிலவுடைமை உரிமைகள் இருந்தன. கணபோக நிலங்கள் அனைத்தும் **படைப்பற்று** நிலங்களாக மாற்றப்பட்டு நாயக்கர்களுக்கு வழங்கப்பட்டன. நில மானிய முறையில் படைப்பற்றாக நிலங்களைப் பெற்றுக் கொண்ட நாயக்கர்கள் வரிவசூல் செய்வதிலும் படை வீரர்களைத் திரட்டுவதிலும் ஆர்வம் கொண்டனர். இவர்கள் மன்னருக்குத் தேவையான படைகளைக் கொடுத்தும் உதவினர்.

### ஆயக்காரர் முறை

கி.பி. 15–ஆம் நூற்றாண்டின் இறுதியில் தென்னிந்தியாவில் தோற்றுவிக்கப்பட்ட முறை **ஆயக்காரர்** முறை (அ) கிராம அதிகாரிகள் முறையாகும். இவை விஜய நகர அரசர்களால் அமைக்கப்பட்டது. கிராம அரசியல் அமைப்புகளான சபைகள், ஊர், நாடு முதலியவைகள் மாற்றப்பட்டு இம்முறைப்படி ஆயக்காரர் என்ற அதிகாரிகளும், கிராமத் தொழிலாளர்கள் கொண்ட அமைப்பாக மாறியது. விஜயநகர ஆட்சிக்காலத்தில் ஏரி வாரியம், தோட்டவாரியம், பஞ்சவார வாரியம் போன்றவற்றைக் கர்ணம் என்பவர் செய்ய வேண்டியிருந்தது. இவரிடம் கிராமத்தில் உள்ள நன்செய், புன்செய் நிலங்கள், தோப்புகள், சுடுகாடு, மேய்ச்சல் நிலங்கள், நிலவரி போன்ற தகவல்கள் அடங்கிய அட்டவணை (அ) **அடங்கல்** என்றும் புத்தகமும் **சிட்டா** என்ற குறிப்பேடும் இருந்தது.

ஆயக்காரர்களோடு சேர்ந்து கிராம மக்களுக்குச் சேவை புரிவதற்கு புரோகிதர், பொற்கொல்லர், தச்சர், குயவர் போன்ற தொழிலாளர்களும் நியமனம் பெற்றனர். இவர்கள் செய்த தொழிலுக்கு **இறையிலி நிலங்கள்** வழங்கப்பட்டன. பரம்பரை பரம்பரையாக இந்நிலங்கள் அனுபவித்துக் கொண்டு கிராம மக்களுக்குச் சேவைகள் புரிந்தனர். விவசாயிகள் அறுவடை காலங்களில் மகசூலின் சிறு பகுதியை இவர்களுக்கு அளிப்பதும் உண்டு. இம்முறை, கிராம அமைப்புகளாகிய கிராம சபைகள் மறைவதற்குக் காரணங்களாக இருந்தன.

### கல்விக் கூடங்கள்

கிராமங்களில் திண்ணைப் பள்ளிகள் மூலம் அடிப்படைக் கல்வி கற்பிக்கப்பட்டது. புத்தகங்களும், காகிதங்களும் பயன்பாட்டில் இல்லாத காலத்தில் மணலின் மீது எழுதுவதும் வாய்ப்பாட்டினை மனப்பாடம் செய்வதும் வழக்கத்திலிருந்தன. ஹோனவர் என்னுமிடத்தில் ஆண் பிள்ளைகளுக்கு பள்ளிகளும் பெண் பிள்ளைகளுக்கு பள்ளிகள் செயல்பட்டதாக இபின்பதூதா குறிப்பிடுகிறார்.

வைணவக் கோயில்களில் வேதங்களையும், பிரபந்தங்களையும், வேதாந்த சாத்திரங்களையும் பாராயணம் செய்வதற்குக் கிருஷ்ண தேவராயர் ஆட்சியில் நிலங்கள் தானமாக அளிக்கப்பட்டன. வானநூல், சோதிடம், மருத்துவம் முதலிய கலைகளையும் விஜயநகர அரசர்கள் ஆதரித்தனர். வேதங்கள், சாத்திரங்கள், புராணங்கள் ஆறுவகையான தர்சனங்கள் முதலியவற்றில் புலமைபெற்ற ஆதித்தராயன் என்ற அந்தணருக்குத் தேவராயபுரம்(விருஞ்சிபுரம்) என்ற கிராமத்தை மல்லிகார்ச்சுனராயர் பட்ட விருத்தியாக அளித்துள்ளார்.

### இலக்கியங்கள்

விஜயநகர மன்னர்களின் ஆட்சிக்காலத்தின்போது, வடமொழியிலும் மற்ற திராவிட மொழிகளிலும் இலக்கியம் வளர்ச்சி பெற்றது. விஜய நகர அரசர்கள் சமய வேற்றுமை பாராமல் இலக்கியத்தில் புலமை பெற்ற சான்றோர்களை ஆதரித்தார்கள். இந்து சமயத்தில் ஆழ்ந்த பற்றுள்ள இரண்டாம் ஹரிஹரதேவர், **நானார்த்த ரத்தினமாலை**



XII Ethics_Lesson 5.indd 131 05-04-2019 11:12:27

என்ற வடமொழி நூலை இயற்றிய இருகப்ப தண்டநாதர் என்ற சமண சமயத்தைச் சேர்ந்தவரை ஆதரித்துள்ளார். அத்வைத கோட்பாட்டில் பற்றுள்ள அப்பய்ய தீட்சிதரை வைணவ பற்றுள்ள இரண்டாம் வேங்கட தேவர் ஆதரித்தார்.

குமார கம்பணருடைய அரசியார் **கங்காதேவி மதுராவிஜயம்** என்ற நூலையும், **இராம பத்திராம்பாள், இரகுநாத ஆப்யூதயமும், திருமலாம்பாள் வரதாம்பிகா பரிணயம்** என்ற நூலையும் இயற்றியுள்ளனர். இவர்கள் இலக்கியச் செல்வம் படைத்த அரசிகளாவர். **விஜயநகரப் பேரரசின் ஆட்சியில் தெலுங்கு மொழி மறுமலர்ச்சியடைந்தது எனலாம்.** கிருஷ்ணதேவராயர் அவையில் **அஷ்டதிக்கஜங்கள்** எனப்பட்ட எட்டுப் புலவர்கள் இருந்தனர். கிருஷ்ணதேவராயரே உஷாபரிணயம், ஜாம்பவதி கல்யாணம் ஆகிய நூல்களை இயற்றியுள்ளார்.

- அல்லசானி பெத்தண்ணா (ஆந்திரக் கவி பிதாமகன்) – மனுசரிதம்
- நந்தி திம்மண்ணா – பாரி ஜாதப கரணமு
- துர்ஜாதி – காளத்தி மகாத்மியம்
- பிங்காலி சூரன்னா – பிரபாவதிபிரத்யும்
- தெனாலிராம கிருஷ்ணர் – விகட கவி
- மதகிரி மல்லார்ணா – இராஜசேகர சரித்திரமு
- ஹயலாராஜீபத்ரடு – ராமபுத்யாமு
- இராமராஜபூஷணர் – வசுசரித்திரம்

போன்றோர் புகழ்பெற்றவர்களாகத் திகழ்ந்தார்கள்.

## கட்டடக்கலை

விஜயநகர ஆட்சிக்காலத்தில் கலைநயத்துடன் கோயில்கள் கட்டப்பட்டன. சோழ மன்னர்கள் காலத்தில் கோயிலின் கர்ப்பகிரகத்தின் மேலுள்ள விமானமே சிறந்து விளங்கியது. அந்நிலைமாறி கோயில்களில் நடைபெறும் வழிபாடுகளும், திருவிழாக்களுக்கு ஏற்ப கல்யாண மண்டபங்களும், நூற்றுக்கால், ஆயிரங்கால் மண்டபங்களும், பரிவாரத் தெய்வங்களுக்கு ஏற்பச் சிறு கோயில்களும், அம்மனுக்குத் தனிக் கோயில்களும் அமைக்கப்பட்டன. குதிரை மண்டபங்களும், வசந்தமண்டபங்களும் காணப்படுகின்றன. ஆயிரங்கால் மண்டபத் தூண்களில் முன் கால்களை தூக்கிப் பாய்ந்து செல்வது போன்ற குதிரைகளும், யாளிகளும் காணப்படுகின்றன. தூண்களின் உச்சியில் அலங்காரத்துடன் தொங்குகின்ற தாமரை மொட்டு போன்ற அமைப்புகளும் காணப்படுகின்றன. தூண்களில் காணப்படும் **நாகபந்தம்** என்ற அமைப்பு விஜய நகர ஆட்சிக்காலத்தில் பின்பற்றப்பட்டது. **கூடு** என்ற கட்டுமானத்தில் வரையப்பட்ட செடி, கொடிகளை இக்காலத் தூண்களில் காணலாம்.

## ஓவியக்கலை

விஜயநகர ஆட்சிக்காலத்தின் ஓவியக்கலைச் சிறப்பைக் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவாரூர், திருவரங்கம், கும்பகோணம், உத்திரமேரூர், திருவெற்றியூர், சிதம்பரம், மதுரை, அழகர்கோயில், கோவில்பட்டி, ஸ்ரீவில்லிப்புத்தூர், ஸ்ரீவைகுண்டம் போன்ற இடங்களில் காணலாம்.

## விருபாக்ஷர் கோயில்



விருபாக்ஷர் கோயில்

ஹொய்சாளர் காலத்தில் கட்டப்பட்டுக் கிருஷ்ணா தேவராயர் ஆட்சிக்காலத்தில் மெருகூட்டப்பட்டது. கோயிலின் மேற்குப் பகுதியில், கர்ப்ப கிரகமும் அம்மன் சந்நிதியும், பரிவார தெய்வங்களின் கோயில்களும் உள்ளன. துங்கபத்திரா நதிக்கரையிலிருந்து சிறிய ஒரு கோபுர வாயிலின் வழியாக இக்கோயிலுக்குள்



XII Ethics_Lesson 5.indd 132 05-04-2019 11:12:27

வரமுடியும்.கிழக்கிலுள்ள கோபுரம் புறங்குவிந்த (convex) முறையில் கட்டப்பட்டுள்ளது.

விஜயநகரகாலத்துக் குதிரை மண்டபங்கள், திருவரங்கம் அரங்கநாதர்கோயிலிலும், காஞ்சி வரதராஜர்கோயிலிலும், வேலூர் ஜலகண்டேஸ்வரர் கோயிலிலும் காணப்படுகின்றன.



குதிரை மண்டபம்

## ஹம்பி



ஹம்பி

விஜயநகர ஆட்சிக்காலத்தில் தலைநகரமாக இந்நகரம் விளங்கியது. பன்னாட்டு வாணிகத் தளமாகவும் விளங்கியது. விஜயநகர ஆட்சிக்கால சிதைப்பாடுகள் இந்நகரில் காணப்படுகின்றன. கி.பி.16 ஆம் நூற்றாண்டில், இங்குக் கட்டப்பட்ட விட்டாலா சுவாமி கோயில்களும், ஹசாரா இராமசுவாமி கோயில்களும் சிறப்புப்பெற்றவையாகும். தலைக்கோட்டைப்போரில் (பொ.ஆ 1565) அழிக்கப்பட்ட இந்நகரம் உலக பாரம்பரியச் சின்னமாக **யுனெஸ்கோவால்(UNESCO)** அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

## ஹசாரா இராமசுவாமி கோயில்



ஹசாரா கோயில்

பாரசீக மொழியில் **ஹசாரா என்றால் ஓராயிரம் எனப் பொருள்படும்.** ஹசாரா இராமசுவாமி கோயிலில், இராமாயணம் தொடர்புடைய காட்சிகள் அதிகமாக காணப்படுகின்றன. இராமாயணத்திலும், பாகவதத்திலும் வரும் கதைகளைச் சிற்ப வடிவில் இங்கே காணலாம். ரிஷி சிருங்கேரிமுனிவர், புத்திர காமேட்டி யாகம் செய்வது, தாடகையை இராமன் கொல்வது, இராமர், சீதை, இலக்குவன் ஆகிய மூவரும் கங்கை நதியைக் கடப்பது, சீதையைத் தூக்கிச் சென்ற இராவணனைத் தடுப்பதற்கு ஜடாயு போர்புரிவது போன்ற காட்சிகளையும் இங்குக் காணலாம்.

விஜயநகர ஆட்சிக்காலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்ட மகாநவமி திருவிழாக் காட்சிகள் பாகவதத்தில் கூறப்படும் கிருஷ்ண பகவானுடைய திருவிளையாடல்கள் போன்றவை இங்குக் காணப்படுகின்றன.



XII Ethics_Lesson 5.indd 133 05-04-2019 11:12:27

## திருவிழாக்கள்

விஜய நகர ஆட்சிக்காலத்தில் முக்கிய திருவிழாக்களாக மகாநவமி, தீபாவளி, மகரசங்கராந்தி, யுகாதி, கார்த்திகைத் திருவிழா, கல்யாண உற்சவம், சிவராத்திரி, திருவாதிரைத் திருவிழா, ராமநவமி, வைகாசிவிசாகம், கிருஷ்ணஜெயந்தி, ஏகாதசி, மார்கழிநீராடல், தசமி மகாஉற்சவம் போன்ற முக்கிய திருவிழாக்கள் கொண்டாடப்பட்டன.

## விட்டலர் சுவாமிகோயில்



விட்டலர் சாமி கோயில்

மராட்டியபகுதியில்கிருஷ்ணபகவானை விட்டலர், விட்டோபா, பாண்டுரங்கன் என்ற பெயர்களுடன் வழிபட்ட முறைக்கு (வித்தலர்) **விட்டலர் வழிபாடு** என்று பெயர். இக்கோயிலில் மகாமண்டபத்தில் 12 அடி உயரமுள்ள 56 தூண்கள் எழுப்பப்பட்டுள்ளன. தூண்களில் உச்சிப்பகுதியின் அடுக்குப் பேழைகளில் நாகபந்தமும், தாமரை மொட்டுகளும் காணப்படுகின்றன. இங்குள்ள மகாமண்டபம் திராவிடக் கோயில் அமைப்புக்கலைக்கு ஓர் அணிகலன் போல் விளங்குகிறது என்று பெர்ஸி ப்ரௌன் குறிப்பிடுகிறார்.



திருவண்ணாமலை கோபுரம்

## கோபுரங்கள்

விஜயநகர அரசர்கள் தமிழ்நாட்டில் காணப்படும் கோயில்களை விரிவுபடுத்தி ஆயிரங்கால் மண்டபம், நூற்றுக்கால் மண்டபங்கள், திருக்குளங்கள், இராஜகோபுரங்கள் முதலியவற்றை உருவாக்கினர். காஞ்சிபுரத்தில் ஏகாம்பரநாதர் கோயில் கோபுரத்தையும், காளஹஸ்தி, திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோபுரங்களும் கிருஷ்ண தேவராயர் காலத்தில் கட்டப்பட்டன. சிதம்பரம் நடராஜர் கோயிலில் வடக்குக் கோபுரம் இவர்கள் காலத்தில் கட்டப்பட்டது. விஜயநகர அரசர்கள் காலத்தில் அமைக்கப்பட்ட கோபுரங்கள் **இராயகோபுரங்கள்** என்றழைக்கப்படுகின்றன. இவர்கள் காலத்து கோபுரங்கள், ஒன்பதுமுதல் பதினோரு தளங்கள்வரை எழுப்பப்பட்டன. மேலும் சமயம்சாரா கட்டடங்கள் கட்டப்பட்டன.

## இந்தியப் பண்பாட்டிற்கு விஜயநகரப் பேரரசின் கொடை

- விஜயநகர ஆட்சியாளர்கள் ஐரோப்பாவில் நிலவி வந்த நிலமானிய முறையைத் தென்னகத்தில் **நாயன்கார முறையாக** அறிமுகப்படுத்தினர்.
- விஜயநகர ஆட்சியாளர்கள் இராமநவமி, புத்தாண்டு போன்ற பண்டிகைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.
- தமிழகத்தில் தெலுங்கு மொழி பரவவும், தெலுங்கு இலக்கியம் வளரவும் முக்கிய காரணமாக இருந்தார்கள்.
- திருப்பதி திருமலையிலுள்ள வெங்கடாசலபதி கோயிலை நவீனப்படுத்தியதுடன் மலையில் பாதைகளைச் சீரமைத்தது இவர்கள் செய்த முக்கிய பணியாகும்.
- வடஇந்தியாவிலிருந்தும் இஸ்லாமியப் படையெடுப்பாளர்களிடமிருந்தும் பழைமையான இந்தியப் பண்பாட்டுக் கூறுகளான கோயில்கள், கலைகள் போன்றவற்றைப் பாதுகாத்தது இவர்கள் பண்பாட்டிற்குத் தந்த கொடையாகும்.



XII Ethics_Lesson 5.indd 134 05-04-2019 11:12:28

- இவர்கள் காலத்தில் கோயில்களில் மிக உயர்ந்த இராயகோபுரங்கள் கட்டப்பட்டன.
- கோயில்களில் திருச்சுற்றுகள் (பிரகாரங்கள்) எண்ணிக்கை பெருகின.
- கல்யாணமண்டபம், குதிரைமண்டபங்கள், யாளிமண்டபங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள் எழுப்பப்பட்டன.

## 5.12 பாமினிஅரசின் காலப் பண்பாடு

**அலாவுதீன் ஹாசன் பாமன்ஷா** என்றழைக்கப்பட்ட ஹாசன்கங்கு பாமினி அரசைத் தோற்றுவித்தார். இவர் டெல்லி சுல்தான் முகமதுபின் துக்ளக் ஆட்சியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு, சுதந்திர அரசை நிறுவினார். பாமினி அரசின் தலைநகர் **குல்பர்க்கா** ஆகும்.

### சான்றுகள்

பாமினி அரசைப் பற்றி அறிந்துகொள்வதற்குக் கன்னடம், தெலுங்கு, தமிழ் ஆகிய மொழிகளிலுள்ள கல்வெட்டுகளும், சமஸ்கிருத மொழியிலுள்ள செப்புப்பட்டயங்கள், இலக்கியச் சான்றுகள் கோயில்கள், அரண்மனைகள், கோட்டைகள் ஆகிய தொல்லியல் சான்றுகளும் உதவுகின்றன. மேலும், அயல்நாட்டுப் பயணிகளான இபின்பதுதா, அப்துர்ரசாக், நிகிடின், நூனிஸ் ஆகியோரின் குறிப்புகளும் பாமினி அரசைப் பற்றி அறிய உதவுகின்றன.

### பாமினி அரசின் நிர்வாகம்

#### மையஅரசு

பாமினிசுல்தான் அரசின் நிர்வாகமுறை, இஸ்லாமிய ஆட்சிமுறையை முன் மாதிரியாகக் கொண்டிருந்தது. மன்னர் அனைத்து அதிகாரங்களையும் கொண்டிருந்தார். சுல்தான் அமைச்சர்களின் கருத்துப்படி, நிர்வாகத்தை நடத்தி வந்தார். பாமினி சுல்தான் **கலீபாவின்** மேன்மையான அதிகாரத்தை ஏற்றார்.

#### அமைச்சர்குழு

- வகில்–உஸ் சுல்தான் – நாட்டின் துணைத் தலைவர்
- வசீல் குல் - அமைச்சர்களின் பணியைமேற்பார்வையிடுபவர்
- அமீர்–இ. ஜும்லா - நிதியமைச்சர்
- வசீர்–இ. அஸ்ரப் - வெளியுறவு அமைச்சர்
- நசீர் – நிதித்துறை அமைச்சர்
- பேஷ்வா - அரசப் படை பொறுப்பாளர்
- கொத்வால் - காவல் துறைத் தலைவர்
- சதர்–இ. ஜஹான் - தலைமை நீதிபதி

போன்ற எட்டு அமைச்சர்களைக் கொண்டு ஆட்சி புரிந்தனர். இம்முறை பிற்காலத்தில் மராட்டிய ஆட்சியாளர்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்ந்தது.

#### மாநில நிர்வாகம்

அலாவுதின் ஹாசன் பாமன்ஷா பாமினி அரசை **ஆசானாபாத், தௌலதாபாத் பீரார், பீடார்** என நான்கு முதன்மை பிரிவுகளாகப் பிரித்தார். நிர்வாகத்தை ஆளுநர்கள் நடத்தினர். முகமதுஷாவின் காலத்தில் பேரரசு **தரப்புகள்** என்றபகுதிகளாகபிரிக்கப்பட்டுஆட்சிபுரிந்தனர். தரப்புகள் சர்க்கார்களாவும், சர்க்கார்கள் பர்கானாக்களாகவும், பர்கானாக்கள் கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டன. ஆட்சியின் அடிப்படை அலகு கிராமம் ஆகும்.

#### சமூக நிலை

பாமினி அரசு இந்து–இஸ்லாமிய சமயங்களின் இணைப்பாக இருந்தது. சமூகத்தில் வேளாண்மை செய்வோர், நெசவாளர்கள், உலோக வேலை செய்வோர், கைத்தொழில் செய்வோர் போன்றோர் முக்கிய இடம் வகித்தனர்.

#### வருவாய்த்துறை

முகமது கவான் என்னும் அமைச்சர், நிலங்களை அளந்து எல்லைகளை நகர, கிராமிய நிலங்களின் எல்லைகள் எனச் சரியாகக் கணக்கிட்டு, அதனை அரசுக் குறிப்பேட்டில் இடம் பெறச் செய்தார். ஒவ்வொரு



XII Ethics_Lesson 5.indd 135 05-04-2019 11:12:28

மாநிலத்திலும் அரசருக்கென நிலங்கள் ஒதுக்கப்பட்டன. அவை **காசா-இ-சுல்தானி** எனப் பெயரிடப்பட்டன. அரசிற்கு நிலங்கள் மூலம் வருவாய் கிடைக்கப்பெற்றது.

## கல்வி

பாமினி சுல்தான்கள் கல்வியில் ஆர்வம் உடையவர்களாகத் திகழ்ந்தனர். இவர்கள் பல பள்ளிகள் தொடங்கினார்கள். முஜாஹித் ஷா என்பவர் ஆதரவற்றவர்களுக்கு ஒரு பள்ளியை ஏற்படுத்தினார். குல்பர்க்கா, பீடார் போன்ற இடங்களில் கல்விக் கூடங்கள் நிறுவப்பட்டன. சுல்தான் பிரோஷ் ஷா இறையியல், அறிவியல், ஜியோமிதி, கணிதம், ஆகியவற்றில் புலமை பெற்றிருந்தார். அரபு, பாரசீகம் போன்ற நாடுகளிலிருந்து கல்வியாளர்களை வரச் செய்து மக்களுக்குக் கல்வி போதித்தார்.

பாரசீகத்தில் பிறந்த முகமது கவான் பாரசீக மொழியிலும், கணிதத்திலும் புலமை பெற்றவராகத் திகழ்ந்தார். மேலும், சிறந்த கவிஞராகவும் மற்றும் எழுத்தாளராகவும் விளங்கினார். பீடாரில் மதராசாவை என்ற பள்ளியை நிறுவி அதில் பெரிய நூலகத்தை அமைத்தார். அதில் 3000 கையெழுத்துப் பிரதி நூல்கள் இடம்பெற்றிருந்தன என்று பதிவு செய்யப்பட்டுள்ளது.

## கட்டடக்கலை

பாமினி அரசர்கள் காலத்தில் கட்டடங்கள் மிகுந்த எண்ணிக்கையில் கட்டப்பெற்றன. குல்பர்காவில் கட்டப்பட்ட ஜாமிமசூதி பாரசீக முஸ்லீம் கைவினைஞர்களால் கட்டப்பட்டதாகும். இவர்கள் காலத்தில் கட்டப்பட்ட கோல்கொண்டா, கோல்கும்பாஸ் போன்றவை மிகச் சிறந்த கட்டடங்களாகும்.

## குல்பர்காவின் ஜாமி மசூதி

இம்மசூதி முதலாம் முகமதுஷா காலத்தில் தொடங்கப்பட்டு, கி.பி(பொ.ஆ) 1367 – இல் முடிக்கப்பட்டது. இம்மசூதி 63 அரை கோளவடிவக் குவிமாடங்கள் கொண்ட விதான அமைப்பால் முற்றிலும் மூடப்பட்டுள்ளது. மைய மைதானம் விதானத்தின் கிழக்கு, வடக்கு, தெற்கு விளிம்புகளில் இடம்பெற்றிருக்கும் உருளை வடிவ விதானத்துடன்கூடிய அழகும், வளைவு அணி நடைபாதை அமைப்பு மிக அகலமாகவும் உள்ளன. இவை பாமினி கட்டக்கலைக்குச் சிறந்த சான்றாக அமைந்துள்ளன.

## கோல்கொண்டா கோட்டை



கோல்கொண்டாகோட்டை

**இராஜாகிருஷ்ணதேவ்** என்ற காகத்திய அரசரால் கட்டப்பட்ட கோட்டை ஆகும். இக்கோட்டை இருந்த பகுதி முகம்மது நகர் எனப்பட்டது. குதுப்ஷா வம்சத்தின் தலைநகரமாக விளங்கியது. கோட்டையின் ஒலிஅமைப்பு அடிப்படையில் இது சிறந்த கட்டடக்கலையின் அம்சமாகும். இக்கோட்டையின் உயர்ந்தபகுதி பாலாஹிசார் என்றழைக்கப்படுகிறது. பீரங்கிகள், அரச அரண்மனைகள், அறைகள், மசூதிகள் உட்பட நான்கு சிறிய கோட்டைகளும் இதனுள் அடங்கும். இக்கோட்டையின் நுழைவாயில் பதேதர்வாசா என்றழைக்கப்படுகிறது. 17-ஆம் நூற்றாண்டில் கோல்கொண்டா ஒரு சிறந்த வைரச் சந்தையாக திகழ்ந்தது.


## கோல் கும்பாஸ் மசூதி

கர்நாடகா மாநிலத்தில் பீஜப்பூர் மாவட்டத்தில் உள்ள அடக்கத் தலக் கட்டடம் ஆகும். இது **தக்காண சுல்தானகம்** கட்டடக்கலை பாணியில் கட்டப்பட்டது கோல்கும்பாஸ் கனசதுர வடிவ கட்டடமாகும். ஒவ்வொரு பக்கமும் நீளம், அகலம் மற்றும் உயரம் 47.5 மீட்டர் சமமாகக் கொண்டுள்ளது. இந்த அடக்கத்தலம் உலகின் மிகப்பெரிய ஒற்றை அறை இடைவெளிகள் கொண்டதாகும்.



XII Ethics_Lesson 5.indd 136 05-04-2019 11:12:28

இக்கட்டடத்தின் மையத்திலிருந்து சாதாரணமாகப் பேசினாலும் அனைத்துப் பகுதிகளுக்கும் தெளிவாகக் கேட்கும்படி ஒலியமைப்பு இருப்பது இதன் சிறப்பம்சமாகும்.



கோல்கும்பாஸ் சமாதி

**தக்காண சுல்தானகக் கலை**

பாரசீக கட்டடக்கலையை மையமாகக் கொண்டு, பாமினி சுல்தான்கள் கட்டடங்களைக் கட்டினர். இக்கலையில் வட்டவடிவ கட்டடங்கள், கனசதுர வடிவ கட்டடங்கள் கட்டப்பட்டன. இக்கலையே தக்காண சுல்தானகக் கலையாகும்.

### ஒவியக்கலை

**முணுமுணுக்கும் அரங்கம்**

பீஜப்பூரிலுள்ள கோல்கும்பாஸ் முணுமுணுக்கும் அரங்கம் என்ற சிறப்பைப் பெற்றுள்ளது. ஏனெனில், இங்குள்ள அரங்கத்தின் ஒரு மூலையில் நின்று, மெல்லப் பேசினாலே அதன் எதிரொலியை எதிர்முனையில் துல்லியமாகக் கேட்க முடியும் என்ற கட்டடக்கலை அமைப்பு முறையில் கட்டப்பட்டது.

பீஜப்பூரில் கட்டப்பெற்ற இப்ராகீம் ரௌஸாவிற்கும், அகமத் நகரிலுள்ள பாரபாக் ஆகியவற்றிற்கும் தக்காண சுல்தானகக்கலையே அடிப்படையாகும். பாமினி சுல்தான்கள் பரந்த மனப்பான்மையுடன் விளங்கினர். பாமினி சுல்தான்கள் ஆட்சிக் காலம், இந்தியக்கலை, கட்டடக்கலை போன்றவற்றில் மாற்றத்தை உருவாக்கியது எனலாம்.

### பாமினி அரசு அளித்த கொடை

- பாமினி அரசு காலத்தில் எண்ணற்ற மசூதிகள், நூலகங்கள் கட்டப்பட்டன. தென்னிந்தியாவில் மதராசாக்கள் மூலம் முஸ்லீம்களுக்கு முதன்முதலில் கல்வியை கற்பித்தவர்கள் இவர்களே ஆவர்.
- முகமது கவானின் நிர்வாக சீர்திருத்தங்கள் பிற்கால இஸ்லாமிய சுல்தானுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன.
- குல்பர்க்காவில் உள்ள ஜிம்மா மசூதி, கோல்கொண்டா கோட்டை கோல்கும்பாஸ் கட்டடம் ஆகியவை இந்திய கட்டடகலைக்குப் பாமினி அரசின் கொடையாகும்.
- நிலமானிய முறைப்படி தென்னிந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட முதல் இஸ்லாமிய அரசு இதுவாகும்.
- முதலாம் முகமது ஷாவின் சீர்திருத்தங்கள் பிற்கால பாமினி சுல்தான்கள் மற்றும் மராத்தியர்களுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தன.

## 5.13 முகலாயர்காலப் பண்பாடு

பாபர் என்பவரால் கி.பி. (பொ.ஆ.) 1526 ஆம் ஆண்டில் இந்தியாவில் முகலாயப் பேரரசு தோற்றுவிக்கப்பட்டது. ஹுமாயூன், அக்பர், ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப் ஆகியோர் முகலாயர்களின் முக்கிய மன்னர்களாவர். இவர்களின் ஆட்சி முறை, சமூக, பொருளாதார, சமய நிலை, நுண்கலைகள் போன்றவற்றில் வியத்தகு முன்னேற்றங்கள் ஏற்பட்டன.

### சான்றுகள்

பாபர் எழுதிய சுயசரிதையான பாபர் நாமா, அவரது மகள் குல்பதான் பேகம்



XII Ethics_Lesson 5.indd 137 05-04-2019 11:12:29

www.tntextbook.org

எழுதிய ஹுமாயூன் நாமா, அபுல்பாசல் எழுதிய அயினி அக்பரி, அக்பர் நாமா ஆகிய நூல்களும் டாவர்னியர், பெர்னியர், மனூச்சி ஆகிய வெளிநாட்டவர்களின் குறிப்புகளும், பதேபூர்சிக்ரி, தாஜ்மஹால், ஜும்மா மசூதி, டெல்லி செங்கோட்டை போன்ற கட்டடங்களும் முகலாயர்களைப் பற்றி அறிவதற்கான சான்றுகளாகத் திகழ்கின்றன.

## ஆட்சிமுறை

பேரரசு எனப்பட்ட பரந்த நிலப்பரப்பை ஆட்சி செய்த மன்னர் 'பாதுஷா' என்றழைக்கப்பட்டார்.

1. வகீல் – தலைமை அமைச்சர்
2. திவானி ஆலா – நிதியமைச்சர்
3. மீர்பக்ஷி – இராணுவத் தலைவர்
4. சதர் –உஸ்–சுடூர் – சமயத்துறை அமைச்சர்
5. கான்–இ–சாமன் – உயர் அரண்மனை அலுவலர்
6. தலைமை காஸி – தலைமை நீதிபதி ஆகியோர் ஆவர்.

பிற அமைச்சர்களும் இவர்களின் கீழ் பணியாற்றினர். தரோகா–இ–தாக் – சௌகி என்ற ஒற்றர் துறையின் தலைவர், மீர்–ஐ–அடிஷ் என்ற பீரங்கிப் படைத்தலைவர் மீர்–ஐ– பஹரி என்ற சிறுகப்பற்படையின் தலைவர், மீர்பார் என்ற காடுகளின் பொறுப்பாளர். மீர்தோசக் என்ற அவைச்சடங்குகளின் பொறுப்பாளர்ஆகியோரும் இருந்தனர்.

## நிலவருவாய்

> மைய அரசின் எட்டுவகை வருவாய்கள் 1)நிலவரி 2) சுங்கவரி 3) அன்பளிப்பு 4)அக்கசாலை 5)ஸகாத் 6) வாரிசற்ற மன்சப்தார் சொத்து 7)உப்பு வரி 8)கர்காணா மூலம் பெறப்பட்ட வருவாய்

முகலாயப் பேரரசின் நிலவருவாய் முறையை அக்பர் வரையறுத்தார். ராஜா தோடர்மால் என்ற நில வருவாய்த் துறையின் ஆலோசனையின்படி, ஜப்தி என்ற முறையை அக்பர் செயல்படுத்தினார். விளைச்சலின் அடிப்படையில் நிலங்கள் **பொலாஜ், பரௌதி, சச்சார், பான்சார்** ஆகிய நான்கு பிரிவாகப் பிரிக்கப்பட்டு, வரி வசூல் செய்யப்பட்டது.

## படை நிர்வாகம்

முகலாய மன்னர்கள் குதிரைப்படை, காலாட்படை, பீரங்கிப்படை, கடற்படை, யானைப்படை ஆகிய படைகளைப் பெற்றிருந்தனர். மன்சப்தாரி என்ற முறையை அக்பர் அறிமுகப்படுத்தினார். இம்முறையின்படி படைகள் முறைப்படுத்தப்பட்டன. குதிரைப்படை வீரர்கள் **சில்லேஷ்தா** எனப்பட்டனர்.

> **மன்சப்தாரி முறை**
>
> கி.பி(பொ.ஆ) 1571 –ஆம் ஆண்டு அக்பர் ஏற்படுத்திய படைநிர்வாக முறை மன்சப்தாரி முறையாகும். 'மன்சப்' என்ற அரபுச் சொல்லுக்கு '**தரம்**' அல்லது '**தகுதி**' என்று பொருள். பத்து முதல் பத்தாயிரம் வரையிலான தரவரிசை அடிப்படையில் வீரர்கள் பிரிக்கப்பட்டனர்.

## சமூக நிலை

இந்துக்கள், இஸ்லாமியர்கள் கொண்ட புதிய சமூகக் கட்டமைப்பு முகலாயர்கள் காலத்தில் நிலைபெற்றது. இந்துக்களில் ரஜபுத்திரர்கள், பிராமணர்கள் வணிகர்கள் போன்றோர் உயர்ந்த நிலையிலிருந்தனர். இவர்கள் தத்தம் தொழில்களைச் சிறப்பாகச் செய்தனர். போர் வீரர்கள், மதகுருமார்கள் கைவினைஞர்கள், உலோகத் தொழில் செய்வோர், சமூகத்தில் முக்கிய இடம் பெற்றனர். இஸ்லாமியர்களின் அரசு நடைபெற்றதால் அரேபிய, துருக்கிய, மங்கோலிய, அபிசீனிய, ஆப்கானிய முஸ்லீம்கள் முக்கியத்துவம் பெற்றனர். ஷேக்சதாஸ் எனப்பட்ட இந்திய முஸ்லீம்களுக்குச் சமூகத்தில் உயர் மதிப்பு இருந்தது.



XII Ethics_Lesson 5.indd 138 05-04-2019 11:12:29

## மகளிர் நிலை

சமூகத்தில் ஆணாதிக்கம் முக்கியத்துவம் பெற்றாலும் ரஜபுத்திர, முகலாய அரசகுலப் பெண்களுக்கு அடிப்படைக்கல்வி மற்றும் சமயம் சார்ந்த கருத்துக்கள் போதிக்கப்பட்டன. இக்காலப் பெண்கள் குழந்தைத் திருமணமுறையால் பாதிக்கப்பட்டனர். விதவைகள் மறுமணம் அங்கீகரிக்கப்படவில்லை.

## கல்வி

இந்துக்களுக்கு என்று தொடக்கக் கல்வி நிறுவனங்களிலும், பாடசாலைகளிலும் அரசகுடும்பத்தினருக்கு அரண்மனையிலும் கல்வி பயிற்றுவிக்கப்பட்டது. **மக்தப், மதரசா** என்ற உயர் கல்வி நிறுவனங்களும் இஸ்லாமியர்களுக்குக் கல்வியைப் போதித்தன. பனாரஸ், நாதியா, அயோத்தி, மதுரா, அலகாபாத், உஜ்ஜயினி போன்ற இடங்களில் இந்துக்களுக்கான கல்வி நிறுவனங்கள் இருந்தன. டெல்லி, ஆக்ரா, பதேபூர்சிக்ரி, லாகூர் ஆகிய இடங்களில் இஸ்லாமிய உயர்கல்வி நிலையங்கள் இருந்தன. பாரசீக மொழி அரசவை மொழியாகவும் இஸ்லாமியக் கல்வி முறையின் பயிற்று மொழியாகவும் இருந்தது.

## பொருளாதார நிலை

முகலாயர்கள் காலத்தில் வேளாண்மை முக்கிய தொழிலாக இருந்தது. கோதுமை, நெல், பருப்பு வகைகள், பார்லி, பருத்தி, கரும்பு, அவுரி, எண்ணெய் வித்துக்கள் ஆகியவை பயிரிடப்பட்டன. பதினேழாம் நூற்றாண்டில் புகையிலை, மக்காச்சோளம் உருளைக்கிழங்கு, மிளகாய் போன்ற வேளாண்மைப் பயிர்கள் இவர்கள் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. அயல்நாட்டு வாணிகத்தில் ஈடுபட்ட வணிகர்கள் 'சேத்' மற்றும் 'போரா' என்றும், உள்நாட்டு வாணிகத்தில் ஈடுபட்ட வணிகர்கள் 'பானிக்' என்றும், மொத்த தானிய வாணிபத்தில் ஈடுபட்ட வணிகர்கள் 'பஞ்சாராக்கள்' என்றும் அழைக்கப்பட்டனர். வங்காளத்தில் சர்க்கரை, அரிசி, மெல்லிய மஸ்லின் துணிகள், பட்டாடைகள் உற்பத்தி செய்யப்பட்டு மத்திய ஆசிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஜவுளி ஏற்றுமதி மையமாகச் சோழ மண்டலக் கடற்கரை திகழ்ந்தது. காஷ்மீர் சால்வைகள், கம்பளவிரிப்புகள், ஆடம்பரப் பொருட்கள் போன்றவற்றின் விற்பனை மையமாகக் குஜராத் திகழ்ந்தது. காரீயம், செம்பு, போர்க்குதிரைகள், தந்தம் போன்றவை இறக்குமதி செய்யப்பட்டன.

> டெல்லி, பனாரஸ், சூனார் ஆகிய இடங்களில் அழகிய மட்பாண்டங்களும், குஜராத் பகுதிகளில் பருத்தி ஆடைகளும் தயாரிக்கப்பட்டன. இவை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

அக்பர் காலத்தில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கர்க்காணாக்கள் என்ற தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டதாக அபுல்பாசல் கூறுகிறார். இந்தியப் பருத்தியாடைகளைச் சீனா, ஜப்பான், பாரசீக, எகிப்திய, அரேபிய, ஐரோப்பிய வாணிகர்கள் விரும்பி வாங்கினர்.

பேரரசு சுபாக்கள் என்ற மாநிலங்களாகவும், சுபாக்கள் சர்க்கார்கள் என்ற மாவட்டங்களாகவும், சர்க்கார்கள் பர்கானாக்கள் என்ற வட்டங்களாகவும் பிரிக்கப்பட்டன. சுபாக்கள் என்ற மாநிலங்களைச் **சுபேதார்** என்பவர் ஆட்சி செய்தார். அவருக்கு உதவிதிவான் என்ற மாநில நிதியமைச்சர், மாநில சதர் என்ற சமயத்துறை அமைச்சர், மாநில பக்ஷி என்ற வழக்கு அலுவலர், கொத்வால் என்ற நகரச் சிறப்பு நிர்வாக அலுவலர் போன்றோர் கொண்ட மாநில அமைச்சரவை செயல்பட்டது. சர்க்கார்களை பாஜ்தார் என்பவரும், பர்கானாக்களை ஷிக்தார் என்பவரும் ஆட்சி செய்தனர். பிடிக்க்ஷி, பொட்தார், அமால் குஜார் போன்ற அலுவலர்கள் மாநில, மாவட்ட அரசு நிர்வாகத்திற்கு உதவினர்.

## சமயநிலை

முகலாயர்கள் காலத்தில் இஸ்லாமிய சமய அடிப்படையிலான அரசு நடைபெற்றது என்றாலும் அக்பர் சமய சார்பற்றவராகவே இருந்தார். ரஜபுத்திரர்களுடன் கொண்டிருந்த



XII Ethics_Lesson 5.indd 139 05-04-2019 11:12:29

www.tntextbook.org

நட்பின் காரணமாகக் கி.பி 1563-இல் புனிதப் பயணிகள் மீதான வரியையும் கி.பி 1564-இல் இஸ்லாமியரல்லாதோர் செலுத்திய ஜிசியா என்ற வரியையும் நீக்கினார். இந்துக்களின் தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடினார். இந்துக்களிடத்தில் **சதி முறை, ஜௌஹார்** என்ற முறைகளை (இந்துப்பெண்கள் தீக்குளிக்கும் முறை) எதிர்த்தார். கி.பி. (பொ.ஆ.) 1575 இல் இபாதத்கானா என்ற சமய பிரார்த்தனை மற்றும் விவாதக் கூடத்தை நிறுவிய இவர் கி.பி. (பொ.ஆ.) 1579ல் தவறுபடா ஆணையை வெளியிட்டார்.

சமய விவகாரத்தில் மன்னர் தவறிழைக்கமாட்டார் என்று மன்னர் வெளியிடும் அறிவிப்பே தவறுபடா ஆணையாகும்.

இந்து, இஸ்லாம், கிறித்தவம், சமணம் உள்ளிட்ட பல சமய அறிஞர்களுடன் கலந்துரையாடலில் அக்பர் ஈடுபட்டார்.

இவ்வுரையாடலில் புருஷோத்தம், தேவி (இந்துமதம்), மெகர்ஜிராணா (ஜொராஸ்டிரிய மதம்) அக்வாவிபா, மான்சரேட் (கிறித்துவமதம்) ஹிர விஜய சூரி (சமண மதம்) ஆகியோர் பங்கு பெற்றனர். உரையாடலின் விளைவாக அக்பர் **தீன் இலாகி** (தெய்வீக சமயம்) என்ற புதிய சமயத்தைத் தோற்றுவித்தார். அக்பர் இந்து, இஸ்லாம், சீக்கிய சமயத்தவரைச் சமமாக நடத்தினார். சீக்கியர்களுடன் நல்லுறவு கொண்டிருந்ததன் அடையாளமாக அவர்களுக்குப் பொற்கோயில் (அமிர்தசரஸ்) கட்ட நிலம் தானமாக வழங்கப்பட்டது. ஜஹாங்கீர், ஷாஜஹான், ஔரங்கசீப் ஆகியோர் சமய விவகாரங்களில் அக்பரைப்போல் தாராள மனத்துடன் செயல்படாததால், இஸ்லாமியரல்லாத மக்களின் ஆதரவை இழந்தனர்.

## கட்டடக்கலை

பாபர், ஹுமாயூன் ஆகியோர் காலத்தைவிட அக்பர், ஷாஜஹான் காலத்தில்தான் கட்டடக்கலை வளர்ச்சிபெற்றது. செங்கற்களாலான கட்டடங்கள் அக்பர் காலத்தில் கட்டப்பட்டன. கட்டடங்கள் கட்டுவதில் பாரசீக பாணி பின்பற்றப்பட்டது. அக்பர் காலத்தில் ஹுமாயூனிற்குக் கல்லறை, பதேபூர் சிக்ரியில் பல அழகிய கட்டடங்கள், புலந்தர்வாசா (பதேபூர் சிக்ரியின் நுழைவாயில்) போன்றவை கட்டப்பட்டன. அக்பருக்குப்பின் ஆட்சிக்கு வந்த ஜஹாங்கீர், சிக்கந்தரா என்ற இடத்தில் அக்பரின் கல்லறையைக் கட்டினார்.



தாஜ்மஹால்

ஷாஜஹான் காலத்தில் முகலாயக் கட்டடக்கலை அதன் புகழின் உச்சத்தை அடைந்தது. **இவரது காலம் முகலாயக் கட்டடக்கலையின் பொற்காலம்** என்றழைக்கப்பட்டது. ஷாஜஹான் காலத்தில் கட்டப்பட்ட மிகச்சிறந்தக் கட்டடம் தாஜ்மஹால் ஆகும். இது அர்ஜுமன் பானு பேகம் என்ற இயற்பெயர் கொண்ட அவரது மனைவி மும்தாஜ் மஹாலின் நினைவாக ஆக்ராவில் யமுனை நதியோரத்தில் கட்டப்பட்டது. இந்திய, பாரசீக, ஆப்கன், துருக்கி, உள்ளிட்ட நாடுகளின் கட்டடக்கலை வல்லுநர்கள் தாஜ் மஹாலின் கட்டுமானப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். தாஜ்மஹாலின் கட்டுமானப் பணியை ஒருங்கிணைத்துத் தந்தவர் **உஸ்தாத் அகமதுலஹாவரி** என்பவராவார். தாஜ்மஹாலின் கட்டுமானப் பணியை சாதுல்லாகான் என்ற அதிகாரி மேற்பார்வையிட்டார். இது வெள்ளைப்பளிங்குக் கற்களால் கட்டப்பட்டது. இப்பளிங்குக் கற்கள் மெகர்க்ரானா என்ற பகுதியிலிருந்து பெறப்பட்டன. இதிலுள்ள அழகிய பூ வேலைப்பாடுகளுக்கு **பியட்ராடியூரா** என்று பெயர். டெல்லியில் செங்கோட்டை, ஜும்மாசூதி போன்றவையும் ஷாஜஹான் காலத்தில் கட்டப்பட்டன. மோதிமசூதி முத்துமசூதி, திவானிகாஸ், திவானி ஆம்



XII Ethics_Lesson 5.indd 140 05-04-2019 11:12:30

போன்றவையும் இவரது காலத்தில் கட்டப்பட்ட பிற கட்டடங்களாகும்.



செங்கோட்டை

## இலக்கியங்கள்

**'தாரிக் இ ரஷீதி'** என்ற நூலை மிர்சா ஹைதர் என்பவர் எழுதினார். இந்நூல் பாபர் ஹுமாயூன் ஆகியோர் பற்றிய தகவல்களைத் தருகிறது. நிஜாம் உத்தீன் பக்ஷி என்பவர் எழுதிய தபாகத் –இ– அக்பரி என்ற நூல் அக்பரின் ஆட்சிமுறையைக் குறிப்பிடுகிறது. முகலாய மன்னரான ஜஹாங்கீர் துசுக்– இ– ஜஹாங்கீரி என்ற சுயசரிதை நூலை எழுதினார். அப்துல்ஹமீதுலாகூரி எழுதிய 'பாதுஷா நாமா' என்ற நூலும், இனாயத்கான் எழுதிய 'ஷாஜஹான் நாமா' என்ற நூலும் ஷாஜஹானின் ஆட்சிக் காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றன. மிர்சா முகம்மதுகான் எழுதிய ஆலம்கீர் நாமா என்ற நூல் ஔரங்கசீப்பின் ஆட்சிக் காலத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?** தாஜ்மஹாலை உலகப் பாரம்பரியச் சின்னமாக யுனெஸ்கோ (UNESCO) கி.பி. (பொ.ஆ.) 1983–இல் அங்கீகரித்துள்ளது.

## இசைக்கலை

முகலாய மன்னரான அக்பர் ஆட்சிக்காலத்தில் இசைக்கலை முக்கியத்துவம் பெற்றது. **நக்காரா** என்ற இசைக் கருவியை வாசிப்பதில் அக்பர் வல்லவராகத் திகழ்ந்தார். இவரது அரசவையை மியான்தான்சேன் என்ற இசைக்கலைஞர் அலங்கரித்தார். ஜகாங்கீர் மற்றும் ஷாஜகான் காலத்தில் இசைக்கலைஞர்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.

**பாபர்நாமா** – இந்நூல் பாபரால் துருக்கி மொழியில் எழுதப்பட்டது. பாபர் தமது இளமைக்காலம், தாம் சந்தித்த வெற்றிகள், தோல்விகள் போன்றவற்றையும் அக்காலத்தைய இந்திய சமூக, சமய நிலைமையையும், தாவரங்கள் விலங்குகள் பற்றியும் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். இந்நூலை அக்பரின் வேண்டுகோளுக்கிணங்க அப்துல் ரஹீம் பாரசீக மொழியில் மொழிபெயர்த்தார். வில்லியம் எர்ஸ்கின், லெய்டன் ஆகியோரால் இந்நூல் ஆங்கிலத்திலும், பாவெட்டி – கோர்ட்லி என்பவரால் பிரெஞ்சு மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டது.

## ஓவியக்கலை

**மீர்சையது அலி, அப்துல்சமது** ஆகிய இரு ஓவியர்கள். ஹுமாயூனால் பாரசீகத்திலிருந்து இந்தியாவிற்கு அழைத்துவரப்பட்டனர். அக்பர் காலத்தில் இந்த ஓவியர்கள் புகழ் பெற்றனர். பல்வேறு இலக்கிய மற்றும் சமய நூல்களுக்கு உருவங்கள் (வரையப்பட்ட ஓவியம்) மூலம் விளக்கமளிக்கும் பணியை அக்பர் தொடங்கி வைத்தார். **பஸ்வான், மிஸ்கினா, தஸ்வந்த்** ஆகிய ஓவியக் கலைஞர்களையும் ஆதரித்தார்.

இவரது காலத்தில் இராமாயணத்திலும், மகாபாரதத்திலும் இடம்பெற்றுள்ள கருத்துகளும், காட்சிகளும் ஓவியங்களாகத் தீட்டப்பட்டன. ஹம்சா நாமா என்ற ஓவியத் தொகுப்பு உருவாக்கப்பட்டது. இத்தொகுப்பில் ஆயிரத்திற்கு மேற்பட்ட ஓவியங்கள் இடம்பெற்றிருந்தன. ஓவியர்கள் நீலம், சிகப்பு ஆகிய வண்ணங்களைத் தமது ஓவியங்களில் மிகுதியாகப் பயன்படுத்தினர். ஜஹாங்கீர் காலத்தில் ஓவியக்கலை அதன் புகழின் உச்சியை அடைந்தது. அபுல்ஹசன், பிஷன்தாஸ், மது, ஆனந்த், கோவர்தன், உஸ்தாத் மன்சூர் ஆகிய ஓவியர்கள் இவர் காலத்தில் புகழ்பெற்றுத்



XII Ethics_Lesson 5.indd 141 05-04-2019 11:12:30

www.tntextbook.org

திகழ்ந்தனர். அரசன், அரசியர், அரசவை, வேட்டையாடுதல், போர்க்காட்சிகள், விலங்குகள் போன்றவை இவர்கள் வரையும் ஓவியங்களில் முக்கியத்துவம் பெற்றன. **செருகேடுகள்** (ஆல்பம்) தயாரிக்கும் முறையும் முகலாயர்கள் காலத்தில் உருவாக்கப்பட்டன. ஓவியக்கலையின் மீதுள்ள ஆர்வத்தால் பாரசீகத்திலிருந்து மீர்சையது அலி, அப்துல் சமது ஆகிய இரு ஓவியர்களை ஹுமாயூன் அழைத்துவந்தார். இவ்விருவரும் அக்பர் காலத்தில் புகழ் பெற்றனர்.

> முகலாய மன்னரான பாபரால் இந்தியாவில் முதன்முதலில் **பீரங்கிப்படை** அறிமுகப்படுத்தப்பட்டது. இது இந்தியாவின் படையமைப்பில் புதிய மாற்றத்தை உருவாக்கியது. இவரது **துலுக்மா** என்ற போர் முறை மராத்தியரின் கொரில்லாப் போர் முறைக்கு அடிப்படையாக அமைந்தது.

### இந்தியப் பண்பாட்டிற்கு முகலாயர்களின் கொடை

- முகலாயர்கள் காலத்தில் அரேபிய பாரசீக, துருக்கிய மொழிகள் வளர்ச்சி பெற்றன.
- அக்பரது நிலவருவாய் முறை, ஜப்திமுறை பிற்காலத்தில் இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர்களின் நிலவருவாய் முறைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது.
- அக்பர் அவையில் குவாலியரைச் சேர்ந்த இசைக் கலைஞரான தான்சேன் இடம்பெற்றிருந்தார். பிற்காலத்தில் எழுந்த இந்திய இசையின் பரிணாம வளர்ச்சிக்கு இவர் வித்திட்டார்.
- ஜஹாங்கீரின் மனைவியான நூர்ஜஹான் ரோஜா இதழ்களாலான வாசனை திரவியத்தை அறிமுகப்படுத்தினார். முகலாயர்களின் வாணிகத்தில் இத்திரவியம் முக்கியத்துவம் பெற்றது.
- பிரியாணியையும், மைதாவினாலான உணவு வகைகளையும் முகலாயர்கள் அறிமுகப்படுத்தினர்.
- காஷ்மீரிலுள்ள நிஷத்பாக், லாகூரிலுள்ள ஷாலிமார் தோட்டம், பஞ்சாப்பிலுள்ள பங்க்சோர் தோட்டப்பூங்கா ஆகியவை இந்தியாவிற்கு முகலாயர்களின் கொடையாகும். அவை இன்றளவும் நிலைத்துள்ளன.
- ஜஹாங்கீரின் நீதிச் சங்கிலி முறை பிற்கால நீதி வழங்கும் முறைக்கு வழிகோலியது எனலாம்.

### நிறைவுரை

மௌரியர்கள் காலத்தில் கல்வி, ஆட்சிமுறை, பண்பாடு, நுண்கலைகள் போன்றவை வியத்தகு வளர்ச்சியைப் பெற்றன. அசோகர் காலத்தில் பரப்பப்பட்ட பௌத்தம், ஆசிய நாடுகளில் பரவி இந்தியாவின் பண்பாட்டை உலகிற்கே பறைசாற்றியது. குப்தர்கள் காலத்தில் இந்துசமயம் மறுமலர்ச்சி பெற்றதாலும் கலை, கட்டடக்கலை, அறிவியல் போன்றவற்றில் வியத்தகு முன்னேற்றம் ஏற்பட்டதாலும் இக்காலம் இந்தியாவின் செவ்வியல் காலம் என்றழைக்கப்பட்டது. குஷாணர்கள் காலத்தில் காந்தாரக் கலையின் சிறப்பம்சங்கள், இந்தியக் கலையில் தாக்கத்தை ஏற்படுத்தின. சாளுக்கியர்கள், பல்லவர்கள் போன்றோர் காலத்தில் இலக்கியங்கள், கட்டடக்கலைகள் வளர்ச்சியடைந்தன. சோழர்கள் காலத்தில் இலக்கியம், கலை, கட்டடக்கலை, போன்றவற்றில் வியத்தகு மாற்றம் ஏற்பட்டது. சோழர்களது கிராம ஆட்சிமுறை, இன்றைய உள்ளாட்சி நிருவாகத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது. பாண்டியர்கள் காலத்தில் சைவ, வைணவ சமயங்கள் முக்கியத்துவம் பெற்றன. விஜயநகர காலத்தில், நாயன்கார, ஆயக்கார முறை கிராம வளர்ச்சிக்கு அடித்தளமாக அமைந்தது. உலக அதிசயங்களில் ஒன்றாகத்திகழும்தாஜ்மஹால் முகலாயர்களின் கட்டடக்கலை நுட்பத்திற்குச் சான்றாகத் திகழ்கிறது. முகலாயர் காலத்தில் கட்டப்பட்ட பல கட்டடங்கள், இந்தியாவின் கட்டடக்கலையின் சிறப்பை உலகிற்கு எடுத்தியம்புகின்றன. இவ்வாறு பேரரசுகள் இந்தியப் பண்பாட்டிற்கு வியத்தகு கொடைகளை அளித்துள்ளன.



XII Ethics_Lesson 5.indd 142 05-04-2019 11:12:30

www.tntextbook.org

# பயிற்சி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. மௌரியர் காலத்தில், உரிமையியல் நீதிமன்றம் இப்பெயரால் அழைக்கப்பட்டது

   அ) கண்டக சோதனங்கள்    ஆ) தருமஸ்தானியம்    இ) தருமசானம்    ஈ) ரணபந்தகர்

2. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   அ. பாணினீ – 1. அஸ்டத்யாயி
   ஆ. வ்யாதி – 2. வியாக் கரணம்
   இ. பத்ராபாகு – 3. கல்ப சூத்திரம்
   ஈ. கௌடில்யர் – 4. அர்த்த சாஸ்திரம்

   அ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1    ஆ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4
   இ) அ – 2, ஆ – 1, இ – 3, ஈ – 4    ஈ) அ – 3, ஆ – 2, இ – 1, ஈ – 4

3. நாகார்ஜுனரால் எழுதப்பட்ட நூலைத் தேர்ந்தெடுக்க.

   அ) புத்த சரிதம்    ஆ) மகாவிபா சரித்திரம்    இ) மத்தியமிக சூத்திரம்    ஈ) சௌந்தர நந்தம்

4. நான்காவது பௌத்த சமய மாநாடு நடைபெற்ற இடத்தைக் குறிப்பிடுக.

   அ) காஷ்மீர்    ஆ) இராஜகிருகம்    இ) பாடலிபுத்திரம்    ஈ) வைசாலி

5. குப்தர் காலத்தில் முக்கிய வணிகமையமாக விளங்கிய இடங்களுள் ஒன்று.

   அ) பிரயாகை    ஆ) புரோச்    இ) காம்போ    ஈ) தாமிரலிப்தி

6. பின்வரும் கூற்றுகளில் ஆரியபட்டருக்குப் பொருந்தாதைச் சுட்டிக்காட்டுக.

   அ) கணிதத்திலும் வானவியலிலும் சிறந்து விளங்கிய அறிஞர்
   ஆ) கோள்களின் சுழற்சியைப்பற்றிக் குறிப்பிட்டவர்
   இ) இயற்கணிதம், வர்க்கமூலம் போன்றவற்றைக் கண்டறிந்தவர்
   ஈ) சரகசம்ஹிதா என்ற மருத்துவ நூலை எழுதியவர்

CF692D

7. பின்வருவனவற்றுள் கோயில் நகரமாகச் சுட்டப்படுவதைத் தேர்ந்தெடுக்க.

   அ) ஐஹோலே    ஆ) பாதாமி    இ) பட்டாடக்கல்    ஈ) அஜந்தா

8. இராஷ்டிராகூடர்கள் காலத்தில் விளைநிலத்திற்கு விதிக்கப்பட்ட வரி

   அ) பாகா    ஆ) பலி    இ) துடாகா    ஈ) உத்தரங்கம்

9. ஹொய்சாளர்களின் நிருவாக அமைப்பிற்கு வழங்கப்பட்ட பெயரைக் கண்டறிக.

   அ) அஸ்டபிரதான்    ஆ) நவபிரதான்    இ) பஞ்சபிரதான்    ஈ) தசபிரதான்

10. பொருத்துக.

   அ. குடைவரைக் கோவில்கள் – 1. நந்திவர்மன் பாணி
   ஆ. ஒற்றைக்கல் ரதங்கள் – 2. கிருஷ்ணதேவராயர்
   இ. கட்டுமானக் கோவில்கள் – 3. முதலாம் மகேந்திரவர்மன்
   ஈ. இராயகோபுரங்கள் – 4. முதலாம் நரசிம்மவர்மன்

   அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4    ஆ) அ – 2, ஆ – 4, இ – 1, ஈ – 3
   இ) அ – 3, ஆ – 1, இ – 4, ஈ – 2    ஈ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1



XII Ethics_Lesson 5.indd 143 05-04-2019 11:12:30

www.tntextbook.org

11. பின்வரும் கூற்றையும் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று: முதலாம் மகேந்திரவர்மன் 'சங்கீரணசாதி' என்ற விருதுப்பெயர் பெற்றிருந்தார்.

காரணம் : அவர், பரிவாதினி என்ற வீணையை மீட்டுவதில் வல்லவர்.

அ) கூற்று மட்டும் சரி ஆ) காரணம் மட்டும் சரி

இ) கூற்று, காரணம் இரண்டும் தவறு ஈ) கூற்று, காரணம் இரண்டும் சரி

12. "கல்வியிற் கரையிலாத காஞ்சிமா நகர்" என்று கூறியவர்

அ) திருநாவுக்கரசர் ஆ) திருஞானசம்பந்தர் இ) சுந்தரர் ஈ) வள்ளலார்

13. முதலாம் இராஜராஜன் காலத்தில் வேதங்களையும் இலக்கணங்களையும் கற்பிக்கும் ஆசிரியரின் தகுதிகளைக் கூறும் கல்வெட்டு,

அ) காமப்புல்லூர் ஆ) அணியூர் இ) திரிபுவனம் ஈ) எண்ணாயிரம்

14. பிற்காலப் பாண்டியர்கள்பற்றி அறிய உதவும் கல்வெட்டுச் சான்றுகள்

அ) உத்திர மேரூர் ஆ) வயலூர் இ) மாமண்டூர் ஈ) தாராசுரம்

15. பாண்டியர் காலத்தில் நூலகத்திற்கு வழங்கப்பட்ட பெயர்

அ) சாலபோகம் ஆ) தருமாசனம் இ) சரஸ்வதி பண்டாரம் ஈ) பட்ட விருத்தி

16. பின்வருவனவற்றுள் தவறாகப் பொருந்தியுள்ள இணையைச் சுட்டுக.

முகலாயர் கால ஆட்சிமுறை

அ) வகீல் – தலைமை அமைச்சர்

ஆ) திவானி ஆலா – நிதியமைச்சர்

இ) மீர்பக்ஷி – இராணுவத் தலைவர்

ஈ) கான்–இ–சாமன் – தலைமை நீதிபதி

17. அமிர்குஸ்ரு எழுதிய பாரசீக மொழி கவிதை

அ) கஜல் ஆ) ரெகிலா இ) தாரிக் – உல் – ஹிந்து ஈ) தாஜ் – உல் – மாசீர்

18. விஜயநகர காலத்தில் வருகைபுரியாத, அயல்நாட்டுப் பயணியைத் தேர்ந்தெடுக்க.

அ) இபின் பதூதா ஆ) நிக்கோலோ கோண்டி இ) அப்தூர் ரசாக் ஈ) சர்தாமஸ் ரோ

19. கோல்கொண்டா கோட்டையைக் கட்டியவர்

அ) கிருஷ்ணதேவராயர் ஆ) இராஜ கிருஷ்ணதேவ்

இ) இரண்டாம் கிருஷ்ண தேவராயர் ஈ) இரண்டாம் கிருஷ்ணதேவ்

20. பொருத்துக.

அ. பாபர் – 1. ஷாஜகான்நாமா

ஆ. குல்பதன் பேகம் – 2. பாபர் நாமா

இ. அபுல் பாசல் – 3. ஹுமாயூன்நாமா

ஈ. இனாயத்கான் – 4. அக்பர்நாமா

அ) 4, 2, 1, 3 ஆ) 4, 1, 2, 3 இ) 3, 2, 1, 4 ஈ) 4, 2, 1, 3



XII Ethics_Lesson 5.indd 144 05-04-2019 11:12:30

www.tntextbook.org

21. பீரங்கியை முதன்முதலில் இந்தியாவில் அறிமுகப்படுத்திய முகலாய மன்னர்

அ) பாபர் ஆ) ஹுமாயூன் இ) அக்பர் ஈ) ஜகாங்கீர்

22. தாஜ்மகாலின் கட்டுமானப் பணியை ஒருங்கிணைத்தவர்

அ) சாதுல்லாகான் ஆ) உஸ்தாத் அகமதுலஹாவரி

இ) உஸ்தாக் அலி ஈ) பைராம்கான்

23. முகலாயர் கால ஓவியங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்பட்ட வண்ணங்கள்

அ) நீலம், பச்சை ஆ) சிவப்பு, மஞ்சள் இ) நீலம், சிவப்பு ஈ) சிவப்பு, கருப்பு

24. சீக்கியர்களுக்கு அமிர்தசரஸில் பொற்கோவில் கட்டுவதற்கு, நிலத்தைத் தானமாக வழங்கியவர்

அ) பாபர் ஆ) ஹுமாயூன் இ) ஷாஜகான் ஈ) அக்பர்

25. முகலாயர் காலத்தில் நீதிசங்கிலி முறை அறிமுகப்படுத்தியவர்

அ) அவுரங்கசீப் ஆ) ஷாஜகான் இ) ஜஹாங்கீர் ஈ) அக்பர்

26. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ) சோழ மண்டலம் | – | கேரளா |
| ஆ) ஜெயங்கொண்ட சோழ மண்டலம் | – | இலங்கை |
| இ) மும்முடிசோழ மண்டலம் | – | திருச்சி, தஞ்சை |
| ஈ) மலை மண்டலம் | – | தொண்டைநாடு |

27. முதலாம் சமுத்திரகுப்தரின் போர் வெற்றிகள், படைத்திறன்பற்றிக் குறிப்பிடும் கல்வெட்டு.

அ) அலகாபத் தூண் ஆ) சாரநாத்

இ) ஐஹோலே ஈ) அசோகரின் பாறைக் கல்வெட்டு

## குறுவினா

1. சல்லேகனம் என்றால் என்ன ?
2. அசோகரின் 7–ஆம் தூண் கல்வெட்டு செய்தி யாது ?
3. காந்தாரக்கலை என்றால் என்ன ?
4. காளிதாசரின் நாடக நூல்கள் யாவை ?
5. பிரம்மதேயம் என்றால் என்ன ?
6. பல்லவர் கால கட்டடக்கலைக்கு எடுத்துக்காட்டுகள் தருக.
7. கம்பர் எழுதிய நூல்கள் யாவை ?
8. பாண்டியர் கால சைவமடங்கள் இரண்டைக் கூறுக.
9. விஜய நகரப் பேரரசு யாரால் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டது ?
10. கிருஷ்ண தேவராயர் இயற்றிய நூல்கள் யாவை ?
11. பாமினி காலத்தில் கட்டப்பட்ட சிறப்பு வாய்ந்த கட்டடங்கள் யாவை ?
12. ஹுமாயூனால் பாரசீகத்திலிருந்து அழைத்துவரப்பட்ட ஓவியர்கள் யாவர்?



XII Ethics_Lesson 5.indd 145 05-04-2019 11:12:30

www.tntextbook.org

13. பியட்ராடியூரா என்றால் என்ன ?

14. தக்காண சுல்தானக கலை பற்றி நீவிர் அறிவன யாவை ?

15. இராயகோபுரங்கள் என்றால் என்ன ?

## சிறுவினா

1. சாரநாத் கற்றூண் – குறிப்பு வரைக.
2. மதுரா கலை பாணி பற்றி எழுதுக.
3. குஷாணமரபின் முக்கிய மன்னர்கள் யாவர் ?
4. காந்தாரக் கலையின் சிறப்பம்சங்கள் யாவை ?
5. குப்தர் கால இலக்கியங்கள் நான்கைக் கூறுக.
6. பஞ்சபிரதான் – குறிப்பு வரைக.
7. பல்லவர் கால கூரம் பட்டயம் தெரிவிக்கும் செய்திகள் யாவை ?
8. பல்லவர் கால கட்டடக்கலை பிரிவுகள் யாவை ?
9. பல்லவர் கால இசைக்கருவிகள் யாவை ?
10. பிற்காலச் சோழர்கள் பற்றி அறிய உதவும் ஆதாரங்கள் யாவை ?
11. குடவோலை முறை என்றால் என்ன ?
12. டெல்லி சுல்தானியர் கால நிலப்பிரிவுகள் யாவை ?
13. ரெகிலா என்றால் என்ன ?
14. 'நீர்ப்பாசனத்தின் தந்தை', 'பூங்கா பிரியர்' என்று அழைக்கப்பட்ட டெல்லி சுல்தானிய மன்னர் யார்? ஏன் அவ்வாறு அழைக்கப்பட்டார்?
15. விஜய நகரப் பேரரசு காலத்தில் வருகை புரிந்த அயல் நாட்டு பயணிகள் யாவர் ?
16. நாயன்கரமுறை என்றால் என்ன ?

## நெடுவினா

1. இந்தியப் பண்பாட்டிற்கு மௌரியர்களின் கொடைகள் யாவை ?
2. குப்தர்கள் காலம் இந்திய வரலாற்றில் செவ்வியல் காலம் என்று அழைக்கப்படுவது ஏன் ?
3. பல்லவர்கால கலை, கட்டடக்கலை பற்றி எழுதுக.
4. சோழர்கள் கால இலக்கியங்கள் யாவை ?
5. இந்தியப் பண்பாட்டிற்கு விஜய நகர அரசின் கொடைகள் யாவை ?
6. டெல்லி சுல்தானிய கால ஆட்சிமுறையை விவரிக்க.
7. இந்தியப் பண்பாட்டிற்கு முகலாயர்களின் கொடைகள் யாவை ?




XII Ethics_Lesson 5.indd 146 05-04-2019 11:12:30

**இணையச்செயல்பாடு**

# இந்தியப் பண்பாட்டிற்குப் பேரரசுகளின் கொடை


**இந்தியாவின் பலவகைப்பட்ட வரலாற்றை ஒரே இடத்தில் தெரிந்து கொள்வோமா ?**




## படிகள்

1. கீழ்க்காணும் உரலி/விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க. இது தமிழ் இணைய கல்விக் கழகம் பக்கத்திற்குச் செல்லும்.
2. அங்கு, ஒருபக்கம் பலவகைப்பட்ட மலைகள் விருப்பத்தேர்வுகளோடு தோன்றும்.
3. **தங்களுக்குத் தேவையான இடத்தைத் தொட்டு, அதைக் குறித்து மேலும் அறிந்து கொள்க. வண்ணப் படங்கள் கண்ணைக் கவரும்.**

## செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



படி 1



படி 2

இந்தியப் பேரரசுகளின் வரலாற்றுக்கான இணையப்பக்கத்தின் உரலி :
**http://www.tamilvu.org/ta/tdb-tdbindex-tdbindex-09-340506**

B248_12_ETH_IND_CUL_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



XII Ethics_Lesson 5.indd 147 05-04-2019 11:12:31

## இணையச்செயல்பாடு

# இந்தியப் பண்பாட்டிற்குப் பேரரசுகளின் கொடை

தமிழ் நாட்டிலுள்ள
திருத்தலங்களைப் பற்றி
அறிந்து கொள்வோமா ?



## படிகள்

1. கீழ்க்காணும் உரலி/விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க. இது தமிழ் இணையக் கல்விக் கழகம் பக்கத்திற்குச் செல்லும்
2. அங்கு, ஒருபக்கம், பலவகைப்பட்ட விருப்பத்தேர்வுகளோடு தோன்றும் எ.டு. திருத்தலங்கள், திருவிழாக்கள்
3. **அதில் திருத்தலத்தைத் தொட்டு, அதைக் குறித்து மேலும் அறிந்து கொள்ளலாம். வண்ணப் படங்கள் கண்ணைக் கவரும்.**


## செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :



படி 1



படி 2



படி 3

தமிழ் நாட்டில் உள்ள திருத்தலங்களுக்கான இணையப்பக்கத்தின் உரலி :
**http://www.tamilvu.org/ta/stream-culgal-html-index-279642**

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

B248_12_ETH_IND_CUL_TM



XII Ethics_Lesson 5.indd 148 05-04-2019 11:12:31

அலகு
6

# பக்தி இயக்கம்

HXXTCZ

## கற்றல் நோக்கங்கள்

- பக்தியின் விளக்கம், வகைகள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுதல்
- பக்தி இயக்கம் தோன்றக் காரணங்கள், பக்தி இயக்கத்தின் சீரிய தன்மை போன்றவற்றைத் தெரிந்துகொள்ளுதல்
- நாயன்மார்களின் சமயப்பணி மற்றும் தமிழ்ப்பணி ஆகியவற்றை அறிந்து கொள்ளுதல்
- ஆழ்வார்களின் சமயப்பணி மற்றும் தமிழ்ப்பணி ஆகியவற்றை மாணவர்கள் அறிந்துகொள்ளுதல்
- இடைக்கால இந்தியாவின் பக்தி இயக்க ஞானிகள் பரப்பிய பக்திக் கோட்பாடுகளைப் புரிந்துகொள்ளுதல்
- சூபியிசம் அதன் தன்மைகள் பற்றிப் புரிந்துகொள்ளுதல்
- நாதயோகா பற்றி மாணவர்கள் தெரிந்து கொள்ளுதல்

### நுழைவு வாயில்

மனிதன் மனிதனை நல்வழிப்படுத்துவதற்கு, இந்துசமயம் பல்வேறு நெறிமுறைகளை உருவாக்கித் தந்துள்ளது. இந்நெறிமுறைகள் மனிதனின் உள்ளம், சிந்தனை, செயல்திறன் ஆகியவற்றிற்கேற்ப வேறுபடுகின்றன. அவரவர் மனநிலைக்கு எந்த நெறி எளியது, இனியது என்று தோன்றுகிறதோ அதனைப் பின்பற்றி நல்வழி அடையலாம். இத்தகைய பல நெறிகளுள் மிகச் சிறப்பாகக் கருதப்படுவன 1) பக்திநெறி 2) கருமநெறி 3) ஞானநெறி 4) யோக நெறி ஆகியனவாகும். இந்நெறிகளுள் மிகவும் எளிமையானது பக்திநெறியாகும்.

இறைவனிடத்தில் நாம் செலுத்தும் 'ஆழ்ந்த அன்பே' பக்தி எனப்படுகிறது. பக்தி என்ற சொல் '**பஜ்**' என்ற சொல்லிலிருந்து தோன்றியதாகக் கருதப்படுகிறது. இதற்கு 'வழிபாடு' என்று பொருள். மேலும் பக்தி என்பது, உள்ளார்ந்த அன்போடு இறைவனை வழிபடுதல் என்ற பொருளைத்தரும். எனவே, பக்திநெறி ஆன்மிகத்தை அடிப்படையாகக் கொண்டது எனலாம்.

பக்திநெறிக்கு அடிப்படையாகத் திகழ்வன சமயங்களாகும். எல்லாச் சமயங்களுக்கும் பொதுவான கொள்கைகள் உண்டு. மனிதனுக்குப் பிறப்பால் மட்டுமே உயர்வில்லை என்று எல்லா சமயங்களும் கூறுகின்றன. சடங்குகள், சம்பிரதாயங்கள் மனிதர்களுக்குத் தேவையில்லை. இறைவன்மீது தூய பக்தி கொள்ளுதலே வாழ்வின் சிறந்த வழியாகும். தூய பக்தியும் ஆழ்ந்த நம்பிக்கைகளும் பக்தி மார்க்கத்தின் கோட்பாடுகளாகும். இந்தப் பக்தியே அன்பு, எளிமை போன்றவற்றைப் போதித்து, மனிதன் வீடுபேறு அடைய வழிவகுக்கிறது.



XII Ethics_Lesson 6.indd 149 05-04-2019 11:09:34

### பக்தியின் வகைகள்

பக்தி இருவகைப்படும் அவை 1) அபரபக்தி 2) பரபக்தி என்பதாகும். இவ்விருவகைகளும் பக்தனின் இருவேறுபட்ட மனநிலையைப் பிரதிபலிக்கின்றன.

- **அபரபக்தி:–** பக்தன் தெளிவில்லாமல் குறுகிய சிந்தனையுடன் குறிப்பிட்ட ஒரு கடவுளை மட்டுமே வழிபாடு செய்வது அபரபக்தி ஆகும். தன் சுயநலத்தையோ, தன்னைச் சார்ந்தோரின் சுயநலத்தையோ மையப்படுத்தி, ஒருவன் பக்தி என்ற பெயரில் மற்றவர்களை வெறுக்கிறான். தான் வழிபடும் தெய்வத்தையும், வழிபாட்டு முறையையும் தவிர பிற தெய்வத்தையும், வழிபாட்டு முறையையும் அபரபக்தியினர் ஏற்பதில்லை.
- **பரபக்தி:–** இந்நிலையில் பக்தன் அனைத்துத் தெய்வங்களையும் வழிபடுவதுடன் பக்தியின் உயர்ந்த நிலையில் செயல்படுகிறான். உலகம் தழுவிய அன்பு நெறியே பரபக்தியாகும். இவ்விரு நெறிகளும் தொன்றுதொட்டு வந்தவையாகும்.

### பக்தி இயக்கம் தோன்றக் காரணங்கள்

- இந்து சமயம், தன் செல்வாக்கை படிப்படியாக இழக்கத் தொடங்கியது.
- உயர் குடியினராகக் கருதப்பட்டவர்கள், பிற பிரிவினரிடம் பாகுபாடு காட்டினர்.
- சமண, பௌத்த சமயங்கள் இந்து சமயத்தில் காணப்பட்ட சடங்குகளை வெறுத்தன. எளிதாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நெறிகளை எடுத்துக் கூறிப் பின்பற்றச் செய்தன.
- சமயக் கோட்பாடுகள், பாமர மக்கள் புரிந்துகொள்ளும்படி அமையவில்லை.
- பிற சமயத்தவர்கள் வெளிப்படையாக அறிவித்துச் செயல்பட்ட 'ஒரு கடவுள் கோட்பாடு', 'உலகில் பிறந்தவர்கள் அனைவரும் உடன் பிறந்தோரே' என்ற கொள்கைகள் மக்களைக் கவர்ந்திழுத்தன.
- பிற சமயங்களில் காணப்பட்ட சமத்துவக் கோட்பாடுகள், இந்து சமயத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களையும் கவர்ந்தன.

### பக்தி இயக்கத்தின் சீரிய தன்மை

- பல்வேறு வடிவங்களில் கடவுளை வணங்கினாலும் அவை அனைத்தும் 'கடவுள் ஒருவரே' என்று பக்தி இயக்கம் வெளிக்காட்டியது.
- தெளிவான ஆன்மிகக் கோட்பாடுகள், முறையான பக்திநெறி ஆகியவற்றின் வாயிலாக, ஒழுக்கமான வாழ்க்கையை மேற்கொள்பவர்கள், வீடுபேற்றை அடையலாம் என்று பக்தி இயக்கம் வலியுறுத்தியது.
- இறைவனை அடைய நல்வழிகாட்டலும், நல்லுபதேசமும் வழங்கும் குருவின் துணை அவசியம்.
- கடவுளின் முன் அனைவரும் சமம், மனிதர்களிடையே பிறப்பால் உயர்வு தாழ்வில்லை என்பதை உணர்த்துகிறது.
- சமூகத்தில் நிலவிய சாதி வேறுபாடுகள், மூடப்பழக்கவழக்கங்கள் ஒழிக்கப்படுவதற்குப் பக்தி இயக்கம் காரணமாயிற்று.
- பக்தி இயக்கஞானிகள், வேத இலக்கியங்களை வட்டார மொழியில் மொழிபெயர்த்ததன் மூலம் அவற்றைப் பாமர மக்களும் அறியும்படி செய்தனர்.
- ஒற்றுமை உணர்வு, சமய நல்லிணக்கம் ஆகியவை வலிமைபெற, பக்தி இயக்கம் பெரும் பங்காற்றியது.
- பக்தி நெறியைப் பின்பற்றுவதன் மூலம் மக்களிடையே மன அமைதி ஏற்பட்டது.
- மக்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களின் இன்ப, துன்பங்களில் எவ்வித வேற்றுமையுமின்றிப் பங்கேற்றனர்.
- இறைவனிடம் பக்தன், தன்னையே அர்ப்பணிக்கும் சரணாகதித் தத்துவக்கோட்பாடு பக்தி இயக்கத்தால் வலுப்பெற்றது.

www.tntextbook.org

- ஞானநெறி, கர்மநெறி, யோகநெறி ஆகிய நெறிகளைவிடப் பக்திநெறியே சிறந்தது என்ற ஆன்மிகக் கருத்து வலியுறுத்தப்பட்டது.
- கடவுளை இடைவிடாது வழிபடவேண்டும், அவரின் திருநாமத்தை ஓதுதல் வேண்டும் என்ற நன்னெறியைப் பக்தி இயக்கம் பரப்பியது.
- துறவிகளால் பக்திநெறியைப் பரப்ப ஏற்படுத்தப்பட்ட மடங்கள் பக்தி இயக்கத்தின் கோட்பாடுகளால் முறைப்படுத்தப்பட்டன.

## நாயன்மார்கள்

சைவ சமயத்தைப் பின்பற்றிச் சிவ வழிபாட்டையும், தமிழ் மொழியையும் வளர்த்த 63 சிவனடியார்கள், 'நாயன்மார்கள்' எனப்பட்டனர். இவர்கள் பல்வேறு காலங்களில் பல்வேறு பகுதிகளில் வாழ்ந்தவர்கள். இவர்களுள் திருநாவுக்கரசர். திருஞானசம்பந்தர். சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வர் **சமயாச்சாரியார்கள்** என்றும் **சைவ சமயக் குரவர்கள்** என்றும் அழைக்கப்பட்டனர். தேவாரத் தொகுப்பில் முதல் எட்டுத் திருமுறைகளை இவர்கள் பாடியுள்ளனர். நாயன்மார்களின் பாடல்களைத் தொகுத்தவர் நம்பியாண்டார் நம்பி என்பவராவார். பிற்காலச் சோழர்கள் காலத்தில் வாழ்ந்த சேக்கிழார் 63 நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து அருளினார்.

இத்தொகுப்பே பெரியபுராணம் அல்லது திருத்தொண்டர்புராணம் என்றழைக்கப்படுகிறது. இவர்கள், தம் எளிய வாழ்க்கைமுறையால், தியாக மனப்பான்மையால் மக்களிடம் அன்புநெறி, அருள்நெறியினைப் பரப்பியவர்கள் ஆவர்.

## பன்னிரு திருமுறைகள்

திருஞான சம்பந்தர் – **1, 2,3 திருமுறைகள் (திருக்கடைக்காப்பு)**

திருநாவுக்கரசர் – **4,5,6 திருமுறைகள்**

சுந்தரர் – **7–ஆம் திருமுறை**

} **தேவாரம்**

மாணிக்கவாசகர் – **8–ஆம் திருமுறை – திருவாசகம்**

திருமாளிகைத்தேவர், சேந்தனார் மற்றும் அருளாளர்கள் பாடல்கள். – **9–ஆம் திருமுறை – திருவிசைப்பா, திருப்பல்லாண்டு**

திருமூலர் – **10–ஆம் திருமுறை – திருமந்திரம்**

திருவாலவாயுடையார், பட்டினத்தடிகள், காரைக்காலம்மையார், நம்பியாண்டார் நம்பி பாடல்கள் – **11–ஆம் திருமுறை – தோத்திரப் பாடல்கள்**

சேக்கிழார் – **12–ஆம் திருமுறை – பெரியபுராணம்.**

## திருஞானசம்பந்தர்

சோழநாட்டில் சீர்காழியில் சிவபாத இருதயர் என்பாரின் மகனாகத் திருஞானசம்பந்தர் பிறந்தார். தமது மூன்றாவது வயதில், இறைவி உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்றார். சைவ சமயத்தைப் பரப்ப, இவர் தமிழகத்தின் பல இடங்களுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். வடமொழி வேதங்களின் முக்கிய கருத்துகளைத் தாம் இயற்றிய பக்திப் பாடல்களில் பயன்படுத்தினார். இந்த அடிப்படையில் வேதத்தின் சாரங்கள் தமிழில் கொண்டுவரப்படுவதில் முக்கியப் பங்காற்றினார். தேவாரத்தில் முதல் மூன்று திருமுறைகளைப் பாடியுள்ளார். இவர் சமணர்களை வென்று சைவசமயத்தை நிலைநாட்டினார்.

## திருஞான சம்பந்தரின் அற்புதங்களாகக் கீழ்க்காணும் நிகழ்வுகளைச் சைவ மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. அவையாவன:

- மயிலாப்பூரில் இறந்த பெண்ணின் எலும்பை எடுத்து பெண்ணுருவாக்குதல்.
- சம்பந்தர் பதிகத்தால் திருமறைக்காடு (வேதாரண்யம்) சிவாலயத்தின் கதவுகள் திறக்கப்படுதல்.
- திருவோத்தூரில் (செய்யாறு) ஆண்பனையைப் பெண்பனையாக்குதல்.



XII Ethics_Lesson 6.indd 151 05-04-2019 11:09:34

- திருக்கொள்ளம்புதூரில் பதிகம்பாடி ஓடத்தை ஓடச்செய்தல்.
- வைகையாற்று நீரினை எதிர்த்தோடும்படி செய்தல்.
- பாண்டிய நாட்டிற்குச் சென்று, மாறவர்மன் அரிகேசரியைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றியதுடன் சமணர்களை அனல்வாதம், புனல்வாதம் ஆகியவற்றில் வெற்றி பெறுதல்.
- மதுரையில் போதிமங்கை என்ற இடத்திற்கு சென்று, பௌத்தர்களை வாதத்தால் வெல்லுதல். இதுவே பௌத்தர்கள் பலரைப் பௌத்தத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறக் காரணமாயிற்று.

திருஞான சம்பந்தரின் பாடல்கள் இசைத்தமிழின் வளர்ச்சிக்கு உதவுகின்றன. இவர் தம் பக்திமார்க்கத்தைக் கையாண்ட நிகழ்வு '**ஞானமார்க்கம்**' எனப்படுகின்றது.

சிவபெருமான் பற்றிக் கீழ்க்காணும் செய்திகளை இவரது பாடல்கள் கூறுகின்றன.

### அவையாவன:

- சிவபெருமானே முழுமுதற்கடவுள்
- அவர் பிறப்பு, இறப்பு இல்லாதவர்
- உலகத்திலும் உயிர்களிடத்திலும் ஒன்றாகவும், வேறாகவும், உடலாகவும் இருப்பவர்.
- உயிர்களின் பிறவிப் பிணியைத் தீர்ப்பவர்.
- தம்மை வந்தடைவர்களின் இன்னல்களை நீக்கி, வீடுபேறு தருபவர்
- தாம் இன்புறுவதுபோல், பிற உயிர்களையும் இன்புறச் செய்பவர்.
- தம்மை (சிவனை) எந்நேரமும் நினைக்கும் மனப்பாங்கைத் தரக்கூடியவர்.

## திருநாவுக்கரசர்

மருள்நீக்கியார் என்ற இயற்பெயர் கொண்ட இவர், திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனார் – மாதினியார் தம்பதியினருக்கு மகனாகப் பிறந்தார். சமண சமயத்தைத் தழுவிய பிறகு **தருமசேனர்** என்றும் அழைக்கப்பட்டார். சம்பந்தரால் **அப்பர்** எனவும் அழைக்கப்பட்டார். சூலைநோயால் தாக்கப்பட்ட இவர், தம் சகோதரி திலகவதியாரால் சமணத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாற்றப்பட்டு சூலைநோய் நீங்கப்பெற்றார். பல அற்புத செயல்களுக்குப் பின், பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்றினார். பல்வேறு சிவாலயங்களுக்குச் சென்று, பதிகங்கள் பாடி, சைவ சமயத்தையும் தமிழிலக்கியத்தையும் வளர்த்தார்.

### திருநாவுக்கரசரின் அருஞ்செயல்கள்

- திருமறைக்காட்டில் அடைக்கப்பட்டிருந்த சிவாலயக் கதவினைப் பதிகம்பாடி திறந்தார்.
- பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மன், இவரைச் சுண்ணாம்பு நீற்றறையில் வைத்தும், விஷம் கொடுத்தும், யானையை விட்டு இடறச்செய்தும், கல்லில் கட்டி கடலில் எறிந்தும் கொடுமைப்படுத்தினார். ஆனால், சிவனருளால் அத்தனை கொடுமைகளிலும் திருநாவுக்கரசர் உயிர் பிழைத்தார். பிறகு உண்மையறிந்த மன்னனே சமணத்திலிருந்து சைவத்திற்கு மாறினார். பின், இம்மன்னன் திருப்பாபுலியூரில் இருந்த சமணப்பள்ளியை இடித்து, அக்கற்களைக் கொண்டே திருவதிகையில் குணபர ஈஸ்வரம் என்ற சிவாலயத்தைக் கட்டினார்.
- திருத்தூங்கானை மாடத்தில் தமது தோளில் ரிஷப, சூல முத்திரைகளைப் பொறித்தார்.
- அப்பூதி அடிகளாரின் மகனைப் பாம்பு தீண்ட, சிவனருளால் திருநாவுக்கரசர் அவ்விஷத்தை நீக்கி அருளினார்.
- திருவையாற்றில் சிவபெருமானின் கைலாயக் காட்சியைக் கண்டுகளித்தார்.

### திருநாவுக்கரசரின் சமயப்பணி

இவருடைய பக்தி நெறி 'தொண்டுநெறி' எனப்படுகிறது. ஆலயத்திற்கும், மக்களுக்கும்,



XII Ethics_Lesson 6.indd 152 05-04-2019 11:09:34

தொண்டு செய்வதன் மூலம் சிவனருளைப் பெறலாம் என்றார். பாழடைந்து காணப்பட்ட சிவாலயங்களையும், அவற்றின் சுற்றுப்புறத்தையும் தூய்மைப்படுத்த **உழவாரப்படை** என்ற குழுவை அக்காலத்திலேயே ஏற்படுத்தினார். இதன் மூலம் திருநாவுக்கரசர் பக்தி நெறிக்குத் **தொண்டு வடிவம்** கொடுத்தார். "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற கருத்தைத் தெரிவித்ததன் மூலம் சைவ சமயத்தின் வளர்ச்சியை அடுத்த கட்டத்திற்குக் கொண்டு சென்றார். திருப்பூந்துருத்தியில் ஒரு சைவ மடத்தை நிறுவினார்.

> உங்களுக்குத் தெரியுமா?
>
> வடம் என்ற சொல்லிற்கு ஆலமரத்தடி என்று பொருள். கோயிலின் ஆலமரத்தடியில் ஓம் என்ற பிரணவ மந்திரத்துடன் நடைபெறும் பூசையே வடதளிபூசை என்பார் உ.வே. சாமிநாதர்.

## திருநாவுக்கரசர் தமிழிலக்கியத்திற்கு ஆற்றிய பணி

திருநாவுக்கரசர் தேவாரத்தில் 4, 5, 6 – ஆம் திருமுறைகளைப் பாடியுள்ளார். இவர் தாண்டகம் என்ற இலக்கிய வகையைக் கையாண்டதால் '**தாண்டகவேந்தர்**' என்று அழைக்கப்பட்டார். இவர் நாகப்பட்டினம் அருகே திருப்புகலூர் என்ற இடத்தில் முக்தியடைந்தார். இவர் சைவ சமய வளர்ச்சிக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் உதவும் வகையில் பதிகங்களைப் பாடியுள்ளார். தம் பதிகங்களில், பத்து வகைப் பண்களைப் பயன்படுத்தியுள்ளார். இவர் எழுதிய '**நாமார்க்கும் குடியல்லோம்**' என்று தொடங்கும் பாடல் பிற்காலத்தில் மகாகவி பாரதியார் அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே என்ற பாடல் எழுதக் காரணமாக அமைந்தது எனலாம். சிவபெருமானைத் தவிர, வேறு யாருக்கும் தான் தலைவணங்குவதில்லை என்று தம் பாடல்களில் பாடியுள்ளார். சிவபெருமான் தம்முள் இருப்பதால் நரகத்தையும், எமனையும் ஒரு பொருட்டாகவே தாம் கருதுவதில்லை என்று கூறினார். இறைவனின் திருவடியே தமது நிழல் என்கிறார். அந்த அடிப்படையில் இவர் பாடிய பாடல்

*மாசில் வீணையும் மாலை மதியமும்*
*வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்*
*மூசு வண்டறைபொய்கையும்போன்றதே*
*ஈசன் எந்தை இணையடி நீழலே*

சுண்ணாம்பு நீற்றறையிலிருந்து வெளியேறிய பின், இப்பாடலிலிருந்து இவர் சிவபெருமானின் மீது கொண்டிருந்த பற்றை அறியமுடிகிறது.

## சுந்தரர்

இவர், சடையனார் – இசைஞானியார் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தவர். இளமையிலேயே சிவபக்தியிலும் தமிழ்ப்பற்றிலும் சிறந்து விளங்கினார். இவரது திருமணத்தின்போது, இறைவன் அடிமை ஓலையைக் காட்டி இவரைத் தடுத்தாட்கொண்டார். பக்தி மார்க்கத்தில் '**சகமார்க்கம்**' என்ற நட்பு மார்க்கத்தைப் பின்பற்றினார். இறைவனையே தம்தோழராகக் கருதியதால் '**தம்பிரான் தோழர்**' என்றழைக்கப்பட்டார். இவர் தேவாரத்தின் ஏழாம் திருமுறையைப் பாடியுள்ளார். இவருடைய பதிகங்கள் ஆழ்ந்த இறைபக்தியையும், தமிழின் இலக்கியச் சிறப்பையும் வெளிப்படுத்துகின்றன. இவர் திருத்தொண்டத் தொகையையும் அருளினார். இந்நூல் 60 தனியடியார்களையும், 9 தொகையடியார்களையும் பற்றிக் குறிப்பிடுகிறது. பிற்காலத்தில் இந்நூலை மூலமாகக் கொண்டே சேக்கிழாரால் பெரியபுராணம் இயற்றப்பட்டது. சித்தவமடம் என்ற இடத்தில் இறைவனின் திருவடி சூட்டப்பெற்ற இவர் தமிழகத்தின் பல இடங்களுக்குச் சென்று சிவாலயங்களில் பதிகங்களைப் பாடியுள்ளார்.

## சுந்தரரின் அருஞ்செயல்கள்

- நாகப்பட்டினம் அருகே திருக்குண்டையூரில் இவர் நெல்மலை பெற்றார்.



XII Ethics_Lesson 6.indd 153 05-04-2019 11:09:34

- திருப்புகலூரின் செங்கல்லை பொன்னாக்கினார்.
- திருமுதுகுன்றத்தில் இறைவன் அளித்தபொன்னை ஆற்றில் போட்டுத் திருவாரூர் கமலாலய குளத்தில் எடுத்துக்கொண்டார்.
- திருவொற்றியூரில் சங்கிலியாரையும், திருவாரூரில் பரவை நாச்சியாரையும் மணந்தார்.
- திருவையாற்றில் காவிரி நீரின் வெள்ளத்தைத்தடுத்து வழிவிட பதிகம் பாடினார்.
- அவிநாசியில் முதலைவாய் பிள்ளையை மீட்டருளினார். சுந்தரர், தம்மைச் சிவபெருமானின் அடிமை என்று கூறுகிறார். அவருடைய இக்கருத்தைப் பின்வரும் பாடல் குறிப்பிடுகிறது.

*பித்தாபிறை சூடிபெருமானே அருளாளா*

*எத்தான்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை*

*வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூர் அருள்துறையுள்*

*அத்தாவுனக் காளாய்இனி அல்லேன் எனலாமே*

*பாடல் எண்: 7.1.1*

## சுந்தரரின் பதிகங்கள் மூலம் அறியலாகும் செய்திகள்

- சிவபெருமானே எல்லா உயிர்களுக்கும் தலைவர்.
- அருளையே செல்வமாக உடையவர்.
- பிறப்பில்லாத அவர் பிறவிப் பிணியையும் தீர்ப்பவர்.
- தான், இன்ன தன்மை என்று உயிர்களால் அறியப்படாதவர்.
- ஓராயிரம் பேரும் உடையவர்.
- ஆண், பெண் என எந்த வடிவமும் இல்லாதவர்
- சிவனடியார் செய்யும் பிழைகளைப் பொறுத்துக் கொள்பவர்

## மாணிக்கவாசகர்



மாணிக்கவாசகர்

திருவாதவூரில் பிறந்து வரகுணப் பாண்டியன் என்ற மன்னனிடம் அமைச்சராக இருந்தவர். திருப்பெருந்துறையில் குருவருள் பெற்றுத் **திருவாசகம்**, **திருக்கோவையார்** ஆகிய நூல்களை இயற்றியுள்ளார். சைவ சமயத்தின் சிறப்பைப் பரப்ப, தமிழகத்தின் பல பகுதிகளுக்குச் சென்று பதிகம் பாடினார். சிவபெருமானே

**சப்தவிடங்கத்தலங்கள்:** சோழநாட்டில் நாயன்மார்களால் பாடல்பெற்ற ஏழு சிவத்தலங்கள் சப்தவிடங்கத் தலங்கள் எனப்படுகின்றன. அவை:

| தலம் | விடங்கர் | இறை நடனம் |
|---|---|---|
| 1. ஆரூர்(திருவாரூர்) | வீதி விடங்கர் | அஜபா நடனம் |
| 2. திருநள்ளாறு | நகரவிடங்கர் | உன்மத்தநடனம் |
| 3. திருநாகைகாரோகணம்(நாகை) | சுந்தரவிடங்கர் | வீசிநடனம் |
| 4. திருகாறாயில் (திருக்காரவாசல்) | ஆதிவிடங்கர் | கூக்குடநடனம் |
| 5. திருகோளிலி(திருக்குவளை) | அவனிவிடங்கர் | பிருங்க நடனம் |
| 6. வாய்மூர் (திருவாய்மூர்) | நீலவிடங்கர் | கமல நடனம் |
| 7. திருமறைக்காடு (வேதாரண்யம்) | புவனவிடங்கர் | ஹம்சபாதநடனம் |



XII Ethics_Lesson 6.indd 154 05-04-2019 11:09:34

www.tntextbook.org

முதன்மையான கடவுள் என்ற கருத்தையே தன் பக்திமார்க்கமாகக் கொண்டார். சிவபெருமானே பஞ்சபூதமாக இருப்பவன். எங்கும் நிறைந்திருப்பவன் என்பதைப் பின்வரும் தமது பதிகத்தின் மூலம் உணர்த்துகிறார்.

*வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி*

*ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்*

*கோனாகி யான் எனது(என்(று)அவர் அவரைக் கூத்தாட்டு*

*வான்ஆகி நின்றாயை என் சொல்லி வாழ்த்துவனே*

*(பாடல் எண்: திருவாசகம் -14)*

## மாணிக்கவாசகரின் அருஞ்செயல்கள்

- தில்லையில் பௌத்தர்களை வாதத்தில் வென்றார்
- ஊமைப்பெண்ணைப் பேசுமாறு செய்தார்
- நரிகளைப் பரி (குதிரை)களாக்கினார்
- வைகை நதியை வெள்ளப் பெருக்கெடுக்கச் செய்தார்.
- பிட்டுக்கு மண் சுமந்து பிரம்படிபட்டார்.

## மாணிக்கவாசகரின் பாடல்களின் வாயிலாக அறியலாகும் செய்திகள்

- சிவன் முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருள்
- பிறரால் இன்ன தன்மையன் என அறியமுடியாதவன்
- ஆண்,பெண் என்ற வடிவில்லாதவன்; ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற தொழில்களைச் செய்பவன்.
- உயிர்களின் பிறப்பை நீக்குபவன்
- பிறப்பு இறப்பு இல்லாதவன்

## திருநீலகண்டர்

திருநீலகண்டர் தில்லையில் வாழ்ந்தவர். இளமையும் அருந்ததிக்கு நிகரான கற்புமிக்க மனைவியிருந்தும், இன்பத் துறையில் எளியராய் பரத்தைபால் சென்று வந்தார். அதைக் கண்ட அவர் மனைவியார், "தீண்டுவீராயின் எம்மைத் திருநீலகண்டமென்றார்".

இறைவன் மீது ஆணை கேட்ட பெரியவர், எம்மை என்றதனால் மற்ற பொது மாதர்களையும் என் மனத்தினாலும் தீண்டேன் என்று கூறி விலகினார். மாதர் மீது வைத்த காதலை அறவே துறந்து இறைவன் மீது வைத்த பேரன்பினைப் பெரிதாய் மதித்ததால் இவர் போற்றப்பட்டார். இவ்விரதத்தை இனிது பேணிய இவரது இறை அன்பின் திறத்தை, உலகிற்கு அறிவித்து இறைவன் அருள் புரிந்தான். உலக இன்பங்களில் இறையின்பமே ஏற்றமுடையது என்பதை, இவரது வரலாறு நமக்கு விளக்குகிறது.

**திருவாசகம்:** மாணிக்கவாசகர் எழுதிய ஒப்பற்ற சைவ நூல் திருவாசகம். இந்நூல் எட்டாம் திருமுறையாகும். இந்நூலில் 51 திருப்பதிகங்களும் 656 பாடல்களும் உள்ளன. சிவபுராணம், கீர்த்தித் திரு அகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திரு அகவல் என்று நான்கு பெரும் பகுதிகளைத் திருவாசகம் கொண்டுள்ளது. ஜி.யு.போப் என்ற மேலைநாட்டு அறிஞர் இந்நூலை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார். **"திருவாசகத்திற்கு உருகார், ஒரு வாசகத்திற்கும் உருகார்"** என்ற முதுமொழி இந்நூலின்பெருமையைஉணர்த்துகின்றது. இந்நூல், இறையாகிய பரம்பொருளை நாடுபவர்கள் பெறவேண்டிய பேரியல்புகள், அவற்றை வளர்க்கும் முறைகள், அருள் வேட்கை கொள்ளுதல், அருளைப் பெறுதல், பக்தியைப் பெருக்கி இறைவனோடு இரண்டறக்கலத்தல் ஆகிய நிலைகளைக்கூறுகிறது.

புல்லாகிப் பூடாய்...... என்ற பாடல் வரிகள் பல்வகை உயிரிகளின் பரிணாம வளர்ச்சியை விரிவாகக் கூறுகின்றன. 'மானுடப் பிறப்பினுள் மாதா உதிரத்து ஈரமில் கிருமி செறிவினில் பிழைத்தும்' எனத் தொடங்கும் பாடலடிகள் கருவியல்(Embrology) அறிவை நன்கு தெரிவிக்கின்றன.



XII Ethics_Lesson 6.indd 155 05-04-2019 11:09:34

## மெய்ப்பொருள் நாயனார்

இவர் சிவனடியாரைப் போன்று மாறுவேடம் பூண்டுவந்த முத்தநாதனை வரவேற்று அவனிடம் உபதேசம் பெறக் காத்திருந்தார். ஆனால் அவன் தன் புத்தகப்பையினை அவிழ்ப்பது போன்று அதிலிருந்த ஆயுதத்தால் இவரைத் தாக்கியபோதும் சிவனடியார் போல் வந்ததன் காரணத்தால், அப்போதும் உடலில் ரத்தத்துடன் சிவமெனக்கூறி அவனைத் தொழுது நின்றதிலிருந்து சிவனடியார்களைச் சிவனாகவே கருதும் இவரது உயர்ந்த பண்பு வெளிப்படுகிறது. இவரை **'வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்'** என்று திருத்தொண்டத்தொகை கூறுகிறது.

## அதிபத்தநாயனார்

அதிபத்தர் என்ற சொல்லிற்குச் சிறந்த பக்தர் என்று பொருள். இவர் திருநாகைக்காரோகணம் (நாகப்பட்டினம்) என்ற ஊரில் பிறந்தவர். இளமை முதலே சிவபெருமானின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தார். தாம் பிடித்த மீன்களில் ஒன்றைத் தினமும் சிவபெருமானுக்கு அர்ப்பணம் செய்வதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். ஒருநாள் ஒரு மீன் மட்டுமே கிடைக்கிறது. (சிவபெருமானின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று) அம்மீனையும் சிவனுக்கே அர்ப்பணம் செய்த அதிபத்த நாயனார் சிவனருள் பெற்றதாகவும் சைவ மரபுவழிச் செய்திகள் கூறுகின்றன. வறுமையிலும் பசியிலும் வாடிய பொழுதும் தான் பிடித்த ஒற்றை மீனைக்கூட சிவபெருமானிற்கு அர்ப்பணம் செய்து இறையருள் பெற்றார்.

> அதிபத்தர் இறைவனுக்கு தங்கமீனை அர்ப்பணிக்கும் விழா – நாகப்பட்டினம் காயாரோகணசுவாமி கோயிலில் ஆவணி மாதம் இவ்விழா நடைபெறுகிறது. அன்று அதிபத்தர் உற்சவர் சிலையை ஒரு கட்டுமரத்தில் எழுந்தருளச் செய்கிறார்கள். கட்டுமரத்தில் உற்சவர் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்கிறார். அப்போது மீனவர்கள் வலையில் தங்கமீனை வைத்து கட்டி கடலில் பிடித்தது போன்று கூறுவார்கள். இது அதிபத்தர் தங்கமீனைப் பிடித்ததாகக் கொள்ளப்படும். அவ்வேளையில் சிவபெருமான் கடற்கரையில் எழுந்தருளும்போது தங்கமீனை அவருக்குப் படைத்துப் பூசைசெய்வார்கள். இறுதியில் சிவபெருமான் அதிபத்தருக்கு முக்தி தரும் நிகழ்வு நடைபெறும்.

## கண்ணப்ப நாயனார்

திண்ணன் என்ற இயற்பெயர் கொண்டவர். இவர் நாணன், காடன் ஆகியோரோடு வேட்டையாடச் சென்றபோது சிவலிங்கம் ஒன்றைக் கண்டு, அச்சிவலிங்கத்திற்கு நீரால் அபிஷேகம் செய்தும், மலர்கள், இலைகளைக் கொண்டு அர்ச்சனை செய்து இறைச்சியை லிங்கத்திற்குப் படைத்தும் வந்தார். இதனைக் கண்ட அந்தணர் ஒருவர், திண்ணனின் செய்கையை எதிர்த்தார். திண்ணனின் உண்மையான பக்தியை அந்தணனுக்கு உணர்த்த விரும்பிய சிவபெருமான், சிவலிங்கத்தின் கண்ணிலிருந்து குருதி வரச்செய்தார். அதைக் கண்ட திண்ணன் தன் இரு கண்களையும் பிடுங்கி, அந்த லிங்கத்தின் மீது வைத்துப் பொருத்தியதால், கண்ணப்பன் என்று சிவபெருமானால் அழைக்கப்பட்டதையும், அவருக்குச் சிவனருள் கிடைத்தாகவும் சைவ சமய மரபு வழிச் செய்திகள் கூறுகின்றன.

## காரைக்கால் அம்மையார்

புனிதவதி என்ற இயற்பெயர் கொண்டவர். காரைக்காலில் பிறந்து பரமதத்தன் என்பவரை மணந்தார். இவர் சிவத்தொண்டிலும் சிறந்து விளங்கினார். இவர் இசைத்தமிழால் இறைவனை வணங்கினார். தமிழுக்கு **'அந்தாதி'** என்ற இலக்கியமுறையை அறிமுகம் செய்தார். **அற்புதத் திருவந்தாதி, திருவாலங்காட்டு மூத்தத்திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை**



XII Ethics_Lesson 6.indd 156 05-04-2019 11:09:34

www.tntextbook.org

போன்ற நூல்களை அருளினார். கணவன் ஒரு நாள் கொடுத்தனுப்பிய மாம்பழத்தைச் சிவனடியார்க்குப் படைத்துவிட்டார். அந்த மாம்பழத்தினை கணவன் கேட்க, இறைவனிடம் வேண்டி மாம்பழத்தைப் பெற்றார். இந்நிகழ்வு காரைக்காலில் **மாங்கனித் திருவிழாவாக** ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

### மங்கையர்க்கரசியார்

காரைக்காலம்மையாரைப் போல இவரும் ஒரு பெண் நாயன்மார் ஆவார். திருஞானசம்பந்தரை திருமறைக்காட்டிலிருந்து பாண்டிய அரசவைக்கு அழைத்ததில் இவரே முக்கிய பங்கு வகித்தார். திருஞானசம்பந்தர், பாண்டிய மன்னனான தம் கணவன் மாறவர்மன் அரிகேசரியைச் சமணத்திலிருந்து சைவத்திற்கு மாற்ற இவரே காரணமாவார்.

### இசைஞானியார்

சுந்தரின் தாயாரான இவர், சிவனருள் பெற்ற பெண்மணியாவார். சுந்தரர் இறைநெறிப்படி வளர்க்கப்பட்டதில் இவருக்கு முக்கிய பங்குண்டு.

### சந்தனாச்சாரியார்கள்

மெய்கண்டார், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவம் ஆகிய நால்வரும் சந்தனாச்சாரியார்கள் என்றழைக்கப்படுகின்றனர். '**சந்தானம்**' என்ற சொல்லிற்கு வம்சாவழி, பரம்பரை என்று பொருள்படும். சந்தானம் அகச்சந்தானம், புறச்சந்தானம் என்று இரு வகைப்படும்.

### அகச்சந்தானம்

அகச்சந்தானத்தார் கயிலைமலையில் வாழ்வோராவர். இவர்கள் ஸ்ரீகண்ட பரமசிவனிடம் சிவஞான உபதேசம் பெற்றவர்கள். நந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞான தரிசனங்கள், பரஞ்சோதியார் ஆகியோர் அகச்சந்தான பிரிவை சார்ந்தவர்களாவர்.

### புறச்சந்தானம்

பரஞ்சோதி முனிவரிடம் மெய்கண்டதேவரும், மெய்கண்டதேவரிடம் அருணந்தி சிவமும், அருணந்தி சிவத்திடம் மறைஞான சம்பந்தரும் ஆன்மிக அறிவு பெற்றனர். மெய்கண்ட தேவர் **சிவஞானபோதம்** என்ற நூலையும், அருணந்தி சிவாச்சியாரியார் **சிவஞான சித்தியார், இருபா இருஃபது** ஆகிய நூல்களையும், உமாபதிசிவம் சிவப்பிரகாசம் முதலிய '**சித்தாந்த அஷ்டகம்**' என்ற எட்டு நூல்களையும் எழுதினர்.

### நாயன்மார்களின் சமயத் தொண்டு

- பக்தி நெறியை வளர்க்க, நாயன்மார்கள் பெருந்துணை புரிந்தனர்.
- திருநாவுக்கரசர் போன்ற நாயன்மார்கள் சமயப்பணிக்கே தம்மை அர்ப்பணித்ததுடன் சமூகப் பணியும் செய்தனர். ஆலயங்களின் தூய்மையிலும், சமயச் சடங்குகளுடன் குடமுழுக்கு நடத்துவதிலும் நாயன்மார்கள் முக்கிய பங்கு வகித்தனர்.
- ஆண், பெண் சமத்துவத்தைச் சைவ சமயத்தில் நிலவச்செய்ததன் மூலம் சமூகத்திலும் சமத்துவம் நிலவ வழிகாட்டினர்.
- சைவ சமய நெறிமுறைகளையும் அவற்றைப் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும் நாயன்மார்கள் தமிழகமெங்கும் பரப்பினர்.
- நாயன்மார்களின் சிவ வழிபாட்டைப் பின்பற்றியே, கர்நாடகாவில் **பசவர்** லிங்காயத் என்னும் புதிய சமயப் பிரிவைத் தோற்றுவித்தார். இடைக்காலத்தில் இவரது சீடர்கள் இந்தியா முழுவதும் சிவ வழிபாட்டைப் பரப்பினர். இந்த அடிப்படையில் சிவ வழிபாடு தமிழகத்திலிருந்தே வட இந்தியாவிற்குச் சென்றது.
- நாயன்மார்கள் சைவ சமயத்தை வளர்த்ததுடன் தமது பதிகங்களால் தமிழ்மொழியையும் வளர்த்தனர்.



XII Ethics_Lesson 6.indd 157 05-04-2019 11:09:34

தமிழிலக்கியத்தை இந்தியா முழுவதும் பரப்பினர்.

- நாயன்மார்கள் பல்வேறு சாதிப் பிரிவுகளைச் சார்ந்தவர்கள்; ஆனால், சாதி வேறுபாடின்றி இறைவனை வழிபட்டனர். இதனால் கடவுளின் முன் அனைவரும் சமம் என்ற சமூகக் கோட்பாடு வலுப்பெற இவர்கள் காரணமாயினர்.
- நாயன்மார்களின் சமூக நல்வாழ்வுப் பணிகள், ஆலயப் பணிகள் ஆகியவை மக்கள் மனத்தில் ஆன்மிக மற்றும் சமூகச் சேவை உணர்வை வளர்த்தது.
- பக்தி இயக்கத்தில் புதிய கோட்பாடுகளான ஞான மார்க்கக்கோட்பாடு, தொண்டு மார்க்கக்கோட்பாடு, நட்பு மார்க்கக்கோட்பாடு போன்றவை தோன்ற இவர்கள் காரணமாயினர்.
- தமிழகத்தின் பண்பாட்டைப் பாதுகாக்க இவர்கள் பல்வேறு விழாக்களைக் கொண்டாடினர். அயல்நாடுகளில் சைவ மரபு பரவ, மன்னர்கள் உதவினர். பிற்காலச் சோழர்கள் சைவ சமயத்தை இலங்கை உட்பட பல நாடுகளில் பரப்பினர். இதனால் தமிழர் பண்பாடும், சைவ மரபும் அயல்நாடுகளில் பரவியதன் மூலம் உலக ஆன்மிக நெறிக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தனர்.

## ஆழ்வார்கள்

இறைவனின் அருள் வெள்ளத்தில் ஆழ்ந்து கிடப்பவர்கள், இறைவனின் அன்பிலும் இன்பத்திலும் மூழ்கி இருப்பவர்களை ஆழ்வார் எனப்பட்டனர். திருமாலின் புகழையும், தத்துவத்தையும் வாழ்வியலோடு பொருத்தி, நாடு முழுவதும் பரப்பியவர்கள். வைணவ மரபுப்படி சிந்தையின் அடிப்படையில் திருமாலைப் பற்றிய ஆழ்ந்த தேடல்கள் கொண்டவர்கள். திராவிட வேதமென போற்றப்பட்ட நாலாயிரதிவ்யப்பிரபந்தத்தை அருளியதால் **திராவிடாச்சாரியார்கள்** என்றும் அழைக்கப்பட்டனர். இவர்கள் மொத்தம் பன்னிருவராவர்.

**ஆழ்வார்களின் காலம்** – ஆழ்வார்கள் அவதரித்த கால அடிப்படையில் 1) முற்காலத்தவர்கள் 2) இடைக்காலத்தவர்கள் 3) பிற்காலத்தவர்கள் என்று மூன்று நிலைகளில் பிரிக்கப்படுகின்றனர்.

### முற்காலத்தவர்கள்

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகியோர் முற்கால ஆழ்வார்கள் ஆவார்.

இடைக்காலத்தவர்கள் – நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் ஆகியோர் இடைக்காலத்தவராவர்.

### பிற்காலத்தவர்கள்

தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமழிசையாழ்வார் ஆகியோர் பிற்காலத்தவர்களாவர்.

### 1. பொய்கையாழ்வார்

காஞ்சிபுரத்தில் திருவெஃகா என்ற ஊரில் யதோத்தகாரி என்ற திருமால் கோயிலின் பொற்றாமரைக் குளத்தில் தோன்றினார். இதனால் பொய்கையார் என்றழைக்கப்பட்டார். திருமாலின் கையிலுள்ள பஞ்சசன்யம் என்ற திருச்சங்கின் அவதாரமாக அவதரித்தார். ஆழ்ந்த இறைநிலையைப் போதித்ததால் பொய்கையாழ்வார் எனப்பட்டார். இவர் திருமாலின் பத்து அவதாரங்களைப் பற்றிய பாசுரங்களை இயற்றினார். இவர் பாடிய பாசுரங்கள் நாலாயிரதிவ்யப்பிரபந்தத்தின்

**உங்களுக்குத் தெரியுமா?**

மங்களாசாசனம் என்பது வைணவத் திருத்தலங்களில் பக்திப் பாடல்களை இயற்றி அங்கேயே இறைவன் முன் அரங்கேற்றுவதாகும். தமிழகத்தில் மங்களாசாசனம் செய்தவர்களில் பொய்கையாழ்வாரே முதன்மையானவராகக் கருதப்படுகிறார்.



XII Ethics_Lesson 6.indd 158 05-04-2019 11:09:35

www.tntextbook.org

**முதல் திருவந்தாதி** எனப்படுகின்றது. இத்திருவந்தாதி நூறு பாடல்களைக் கொண்டது. இவர் பல வைணவத் திருத்தலங்களில் மங்களாசாசனம் செய்துள்ளார்.

இவர்தம் இயல்புகளையும்,பக்தியையும் முதல் திருவந்தாதியில் கூறுகிறார். இவர் தான் பிறர்பொருளை விரும்பமாட்டேன், குணத்தால் தீயவருடனும். கீழ்க்குணமுடையவருடனும் சேரமாட்டேன். தான் யாருக்கும் எந்தத் தீங்கும் இழைக்க மாட்டேன். திருமாலைத் தவிர வேறெந்த இறைவனையும் வழிபடமாட்டேன் என்று கூறுகிறார். உயர்ந்த வைணவ சமயத்தின் தத்துவக் கருவூலங்களாகப் பொய்கையாழ்வாரின் பாடல்கள் திகழ்கின்றன. பன்னிரு ஆழ்வார்களில் இவரே முதன்மையானவராகக் கருதப்படுகிறார்.

## 2. பூதத்தாழ்வார்

மாமல்லபுரத்தில் குருக்கத்தி மலரில் தோன்றினார். இவர் அங்குள்ள ஸ்தல சயனப் பெருமாளைப் புகழ்ந்து பாடிய பிறகு காஞ்சிபுரம் சென்று அங்குள்ள திருமாலைப் புகழ்ந்து பாடினார். தமிழை இவர் **ஞானத்தமிழ்** என்று புகழ்ந்து பாடுகிறார். இவர் பாடிய நூறு பாசுரங்கள் நாலாயிரதிவ்யப்பிரபந்தத்தில் இரண்டாவது திருவந்தாதியாகப் போற்றப்படுகின்றன. திருமால் மீதான பக்தியும், தமிழ் மீதான பக்தியும் இவரது இரண்டு கண்களாகத் திகழ்ந்தன. இவர் திருமாலின் கையிலுள்ள கௌமோதகி என்ற கதையின் (ஆயுதம்) அம்சமாகக் கருதப்படுகிறார். அன்பு, சிந்தனை இவற்றால் இவர் ஞானத்தைப் பெற்ற நிலையைப் பின்வரும் பாடலால் அறியலாம்.

*"அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக,*

*இன்புருகுஞ் சிந்தை இடுதிரியா – நன்புருகி*

*ஞானச் சுடர்விளக்கு ஏற்றினேன் நாரணற்கு*

*ஞானத் தமிழ் புரிந்த நான்" (நா. தி.பி: 2182)*

என விளக்குகிறார். அறிவைப் பெருக்கும் தமிழை விரும்பிய நான் அன்பையே அகலாக எண்ணெய், திரி முதலியவற்றைத் தாங்கும் கருவியாக அமைத்து அறிவாகிய சுடர்விளக்கை ஏற்றினேன். ஆசையை நெய்யாக்கிக் கொண்டேன். எம்பெருமானை எண்ணி, இன்பத்தால் உருகுகின்ற உள்ளத்தையே எண்ணெய்யில் இட்ட திரியாக்கிக் கொண்டேன். நன்றாக மனமுருகி ஞான ஒளியாகிய விளக்கைத் திருமாலுக்காக ஏற்றினேன் என்பது இப்பாடலின் கருத்தாகும்.

## 3. பேயாழ்வார்

இவர் சென்னையிலுள்ள மயிலாப்பூரில் பிறந்தவர். திருமாலின் ஐந்து ஆயுதங்களில் ஒன்றான **நாந்தகம்** என்ற வாளின் அம்சமாகக் கருதப்படுகிறார். இவர் பாடிய பாசுரங்கள் **மூன்றாம் திருவந்தாதி** ஆகும். திருமாலின் மீது மிகுந்த பக்தி கொண்டு மனம் சோர்ந்து, கண் சுழன்று, அழுது, சிரித்து, ஆடிப்பாடி பேய்பிடித்தார் போல, இறைவனைத் தொழுது மகிழ்ந்ததால் பேயாழ்வார் என்றழைக்கப்படுகிறார்.இவருடையபாசுரங்கள் மூலம், எல்லாவற்றிற்கும் சரியானது எது என்ற தீர்வு துளசிமாலையணிந்த திருமாலிடமே உள்ளது என்றார்.

## 4. திருமழிசையாழ்வார்

இவர் தொண்டை நாட்டில் திருமழிசை என்ற ஊரில் பிறந்தவர். திருமாலின் **சுதர்சன சக்கரத்தின்** அம்சமாகக் கருதப்படுகிறார். பேயாழ்வாரிடம் உபதேசம் பெற்ற இவர் வளர்ப்புப் பெற்றோருக்குப் பிறந்த **கணிக்கண்ணன்** என்பவரை தம் சீடராகக் கொண்டு காஞ்சிபுரம் சென்று, அதனருகிலுள்ள திருவெஃகா என்ற இடத்திலுள்ள திருமாலைத் தரிசித்தார். அதன் பிறகு கும்பகோணம் சென்று அங்குள்ள திருமாலையும் தரிசித்தார். இவர் **பக்திசாரர்,திருமழிசைபிரான்,குடமுக்கிற்புலவர்** என்று பல பெயர்களில் அழைக்கப்படுகிறார். இவர் அருளிய நூல்கள் 1) **நான்முகன் திருவந்தாதி** 2) **திருச்சந்த விருத்தம்** ஆகியவை ஆகும்.

## 5. நம்மாழ்வார்

இவர் பாண்டிய நாட்டிலுள்ள ஆழ்வார் திருநகரி என்ற ஊரில் பிறந்தவர். இவர் நான்கு வேதங்களைத் தமிழில் பாடியதால்



XII Ethics_Lesson 6.indd 159 05-04-2019 11:09:35

www.tntextbook.org

**தமிழ் செய்த மாறன்** எனப்படுகிறார். திருவிருத்தம், **திருவாசிரியம், பெரிய திருவந்தாதி, திருவாய்மொழி** ஆகிய நூல்களை இயற்றினார். இந்நூல்கள் ரிக், யஜுர், சாம, அதர்வண வேதங்களுக்கு இணையானவை என்று வைணவ சமய அறிஞர்களால் கருதப்படுகின்றன. இவரின் இயற்பெயர் **சடகோபன்**, **குடிபெயர்மாறன்** ஆகியனவாகும். சிறப்புப்பெயர்கள் **குருகூர்நம்பி,வகுளாபரணன், பராங்குசன், காரிமாறன், வழுதிவளநாடன்** என்பவனாகும்.

### 6. மதுரகவியாழ்வார்

இவர் பாண்டிய நாட்டின் திருக்கோளூர் என்னும் ஊரில் பிறந்தார். இளம் வயதிலேயே கவிதைபாடும் திறமை பெற்றவராதலால் **மதுரகவி** எனப் புகழ்ப் பெற்றார். யோக நிலையில் இருந்த நம்மாழ்வாரைக் கண்ட மதுரகவி **"இவர் எல்லாமறிந்த ஞானி"** என்பதை உணர்ந்தார். பின்னர் அவரையே குருவாக ஏற்றுக்கொண்டார். இறைவனைப் பாடாமல் தம் குருவாகிய நம்மாழ்வாரையே இறைவனாகக் கொண்டு **'கண்ணிநுண் சிறுதாம்பு'** என்ற பாசுரத்தைப் பாடியுள்ளார்.

### 7. குலசேகர ஆழ்வார்

இவர் சேரநாட்டில் 'திருவஞ்சைக்களம்' என்னும் இடத்தில் அரச குலத்தில் பிறந்தவர். அரச பதவியைவிடப் பக்தியும் இறைத்தொண்டுமே சிறந்தன என்னும் நோக்கில் வைணவ அடியார் ஆனார்.

*'ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ*

*வானாளும் செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன்*

*தேனார் பூஞ்சோலைத் திருவேங்கடச் சுனையில்*

*மீனாய்ப் பிறக்கும் விதியுடையேன் ஆவேனே'*

என்று நாடாளும் மன்னனாக இருப்பதைவிடத் திருவேங்கடச்சுனையில் மீனாக இருத்தலே மேல் என்று திருவேங்கடப் பெருமாள் மீதுள்ள தமது ஈடுபாட்டை வெளிப்படுத்துகிறார். இவர் இறைவனைக் குழந்தையாகப் பாவித்துப் பாடியுள்ளார். "அடியாரும் வானவரும் அரம்பையரும்கிடந்தியங்கும்படியாய்க்கிடந்துன் பவளவாய்க் காண்பேனே" எனக் குலசேகரர் பாடியதால் இன்றும் திருமால் கோயில்களில் உள்ள கருவறையின் படி, **"குலசேகரப்படி"** எனக் கூறப்படுகின்றது. இவர் இயற்றிய பாசுரங்கள் **பெருமாள் திருமொழி** ஆகும்.

> நம்மாழ்வார் – நம் ஆழ்வார்: "நம்மாழ்வார் ஒரு நாட்டிற்கோ, ஒரு சமயத்திற்கோ, ஓர் இனத்திற்கோ மட்டும் உரியவர் அல்லர். அவர் எல்லா நாட்டிற்கும், எல்லா சமயத்தார்க்கும், எல்லா இனத்தார்க்கும் உரியவர்; எல்லாரும் 'நம்மாழ்வார்' என்று போற்றும் ஒரு பெரியாரை அளித்த தமிழ்நாட்டை மனத்தால் நினைக்கிறேன்; வாயால் வாழ்த்துகிறேன்; கையால் தொழுகிறேன்"
>
> – திரு.வி.க

### 8. பெரியாழ்வார்

பெரியாழ்வார் திருவில்லிபுத்தூரில் பிறந்தவர். இவருக்கு **விஷ்ணுசித்தன், பட்டர்பிரான்** ஆகிய பெயர்களுமுண்டு. இவர் பெருமாளைத் தமது குழந்தையாகக் கருதிப் பாசுரங்கள் பாடினார். இப்பாசுரங்களின் அமைப்பைப் பின்பற்றியே பிற்காலப் பிள்ளைத்தமிழ் இலக்கியங்கள் தோன்றின எனத் தமிழ் அறிஞர்கள் கூறுவர்.

*"கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்*

*எடுத்துக் கொள்ளில் மருங்கை யிறுத்திடும்*

*ஒடுக்கிப் புல்கில் உதரத்தே பாய்ந்திடும்*

*மிடுக்கிலாமையால் நான் மெலிந்தேன் நங்காய் "*

எனத் திருமாலின் குழந்தைச் செயல்பாட்டைத் தாயின் நிலையிலிருந்து எண்ணிப் பாடுகிறார். **திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி** ஆகிய பாசுரங்களைப் பாடியுள்ளார்.



XII Ethics_Lesson 6.indd 160 05-04-2019 11:09:35

www.tntextbook.org

## 9. ஆண்டாள்

பெரியாழ்வார் தமது நந்தவனத்தில் துளசிச் செடியின் அருகில் கண்டெடுத்து வளர்த்த பெண் குழந்தையே ஆண்டாள் என்பர். இவருக்குப் பெரியாழ்வார் சூட்டிய பெயர் **கோதை நாச்சியார்.** கோதை, பெருமாளுக்குத் தொடுக்கப்பட்ட மலர் மாலைகளைத் தாம்சூடி அழகுபார்த்தபின், பெருமாளுக்கு அளித்ததால் **சூடிக்கொடுத்த சுடர்க்கொடி** என அழைக்கப்பட்டார்.

திருமால்மீது கொண்ட அன்பையும் காதலையும் இவர் படைப்புகளில் காணமுடிகிறது. இவர் **திருப்பாவை, நாச்சியார் திருமொழி** முதலிய பாசுரங்களைப் படைத்துள்ளார். பண்டைய தமிழகத்தில் திருமணமாகாத பெண்கள் மார்கழி மாதத்தில் பாவை நோன்பு மேற்கொள்வர். இதனை அடிப்படையாகக் கொண்டு திருப்பாவையை ஆண்டாள் இயற்றினார். மார்கழி மாதத்தில் இப்பாசுரங்கள் வைணவத் திருத்தலங்களில் இன்றும் பாடப்படுகின்றன. இவரது பாடல்கள் நாயக – நாயகி பாவத்தை உணர்த்துகின்றன.

*'ஆழிமழைக் கண்ணா ஒன்று நீ கை கரவேல்*
*ஆழியுள் புக்கு முகந்து கொடு ஆர்த்தேறி*
*ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கருத்து*
*பாழியந் தோளுடை பத்மநாபன் கையில்*
*ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து*
*தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்*
*வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும்*
*மார்கழி நீராட மகிழ்தேலோர் எம்பாவாய்'.*

என மழை, கருக்கொண்டு பொழிவதைத் தமது பாசுரங்களில் காட்சிப் படுத்தியுள்ளார்.

## 10. தொண்டரடிப் பொடியாழ்வார்

இவர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள திருமண்டங்குடி என்னும் ஊரில் பிறந்தவர். '**விப்ரநாராயணர்**' என்பது இவருடைய இயற்பெயராகும். திருவரங்கம் சென்று நந்தவனம் அமைத்து அரங்கநாதப் பெருமாளுக்குத் தொண்டு புரிந்து வந்தார். இதனால் 'தொண்டரடிப்பொடி' என்று பெயர் பெற்றார். திருமலைப் பாசுரத்தில் பல நீதிக் கருத்துகளைக் கூறுகிறார்.

*ஊரிலேன் காணி இல்லை உறவு மற்றொருவர் இல்லை*
*பாரில்நின் பாத மூலம் பற்றிலேன் பரம மூர்த்தி*
*காரொளி வண்ணனே! என் கண்ணனே! கதறுகின்றேன்*
*ஆருளர் களைகண் அம்மா! அரங்கமா நகர் உளானே!*

இதில் தமக்குக் கடவுளைத் தவிர, வேறு துணையில்லை என்று குறிப்பிடுகிறார். இவர் இயற்றிய பாசுரங்கள் **திருமாலை, திருப்பள்ளியெழுச்சி** என அழைக்கப்படுகின்றன. "திருமலை அறியாதார் திருமாலை அறியாதாரே" என்ற முதுமொழி இப்பிரபந்தத்தின் பெருமைக்குச் சான்றாகும்.

## 11. திருப்பாணாழ்வார்

இவர் 'திருச்சியை அடுத்துள்ள உறையூரில் பிறந்தவர். இவர் இயற்றியது **அமலனாதிபிரான் பாசுரங்கள்** ஆகும். இப்பாசுரங்கள் திருவரங்கத்து அரங்கனின் அழகை விவரிக்கிறது.

*"கொண்டல் வண்ணனைக் கோவல*
*னாய்வெண்ணெய்*
*உண்ட வாயன்என் னுள்ளம் கவர்ந்தானை*
*அண்டர் கோன் அணியரங்கன் என்அமுதினைக்*
*கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே"*

## 12. திருமங்கையாழ்வார்

இவர் சோழ நாட்டில் திருவாலி திருநகரியில் பிறந்தவர். சோழ மன்னனிடம் படைத்தளபதியாக இருந்து பல போர்களில் வெற்றி பெற்று (பரகாலன்) எதிரிகளுக்கு எமன் என்ற சிறப்புப் பெயர் பெற்றார். இவரைச் சிறப்பிக்க விரும்பிய மன்னன் திருமங்கை நாட்டிற்கு மன்னராக்கி '**திருமங்கை மன்னன்**' என்னும் பெயரைச் சூட்டினான். இவர் இயற்றியவை **பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுக்கூற்றிருக்கை, சிறிய திருமடல்,** பெரிய திருமடல் ஆகியனவாகும்.



XII Ethics_Lesson 6.indd 161 05-04-2019 11:09:35

### தமிழகப் பண்பாட்டிற்கு ஆழ்வார்களின் கொடை

- ஆழ்வார்கள் தாங்கள் இயற்றிய பாசுரங்கள் மூலம் வைணவ பக்தி இயக்கத்தை, மக்களிடையே பரப்பினர். வாழ்வியலில் பக்திநெறியை இணைப்பதிலும் முக்கிய பங்காற்றினர்.
- தமிழிலக்கிய வளர்ச்சிக்கு ஆழ்வார்களின் பங்களிப்பு போற்றத்தக்கது.
- வைணவ சமயத்தைத் தமிழ்மயமாக்கியதில் ஆழ்வார்களின் பங்கு மகத்தானது.
- ஆழ்வார்களின் ஆன்மிகக் கோட்பாடுகள், தத்துவங்கள் தமிழகத்தில் சங்ககாலத் திருமால் வழிபாட்டு முறையைச் சில மாற்றங்களுடன் பரப்பி, வைணவ சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர்.
- தமிழகத்தில் சாதி, சமய வேறுபாடுகளைக் கடந்த ஆன்மிகம், இடைக்காலத்தில் வளர ஆழ்வார்களே வித்திட்டனர்.
- ஆழ்வார்களால் அக இலக்கியங்களுக்குப் புதிய வடிவம் தரப்பட்டது. அதன்படியே கடவுளையே கணவனாக, மகனாக நண்பனாக நினைக்கும் மனநிலை வளர்ந்தது.
- இறைவனிடம் சரணாகதி அடையும் தத்துவத்தைப் போதித்தவர்கள் ஆழ்வார்களேயாவர்.
- தமது பாசுரங்கள் மூலம் பக்திநெறியுடன் இசைக்கலை, நாடகக்கலை, நடனக்கலை வளர்ச்சியடைய ஆழ்வார்கள் உதவினர்.
- வேதங்கள், உபநிடதங்கள்,புராணங்கள், காப்பியங்கள் உள்ளிட்ட பலவற்றை மக்களின் மொழியான தமிழிலேயே ஆழ்வார்கள் விளக்கிக் கூறினர்.
- ஆழ்வார்களின் வழிபாட்டுமுறை, சமூகத்தில் பல மாற்றங்களைக் கொண்டுவந்தது.
- உலக இன்பங்கள் நிலையற்றவை; பிறப்பு, இறப்பு எல்லா உயிர்களுக்கும் பொதுவானவை. பொருளாசை தேவையற்றது; எனவே, மறுபிறவியற்ற நிலை வேண்டும் அதற்குத் திருமாலின் அருள் தேவை என்று ஆழ்வார்கள் எடுத்துக்கூறி மக்களை நல்வழிப்படுத்தினர்.
- **ஆலயப்பணியே சமூகப்பணிக்கு அடிப்படை** என்ற உயரிய தத்துவத்தை ஆழ்வார்களே ஏற்படுத்தினர்.
- ஆழ்வார்களின் சமய, சமூகப்பணியே பிற்காலத்தில், இராமானுஜர் வழியாகப் பக்தி இயக்கம் வடஇந்தியாவில் பரவ வழிவகுத்தது எனலாம். அந்த அடிப்படையில் ஆன்மிகம், மற்றும் சமூக அரும்பணிகள் தமிழகத்தில் தோன்றி, அதன் பிறகே வடஇந்தியாவிற்குச் சென்று, பக்தி இயக்கமாக உச்சநிலையடைந்தன.
- ஆழ்வார்கள் உருவ வழிபாட்டில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். இது பாமர மக்களை நல்வழிப்படுத்த உதவியது.

## இடைக்கால இந்தியாவில் பக்தி இயக்கம்

### ஆச்சாரியர்கள்



திருவரங்கம் அரங்கநாதர் கோயில்

வைணவ ஆச்சாரியர்கள் என்போர், கடவுள்மீது கொண்ட அன்பின் உணர்வுகளை அறவழியில் விளக்கியவர்கள் ஆவர். வைணவ பக்தி தழைக்க ஆழ்வார்கள் காரணம் எனில், வைணவ நடைமுறையும் தத்துவமும் தோன்ற ஆச்சாரியர்களே காரணமாக இருந்தனர். ஆச்சாரியர்கள் வடமொழி, தமிழ்மொழி ஆகிய



XII Ethics_Lesson 6.indd 162 05-04-2019 11:09:36

இருமொழிப் புலமையும் பெற்றிருந்தனர். ஆழ்வார்களின் பாசுரங்களில் பொதிந்துள்ள வைணவத் தத்துவக் கருத்துகளை விளக்கி, வேதத்தோடு ஒப்பீடு செய்து உரை எழுதியுள்ளனர்.

### மணிப்பிரவாளநடை

மணி என்பது முத்துமணி. பிரவாளம் என்பது பவளமணி. வெண்ணிற முத்துமணியையும், சிவந்த பவளமணியையும் சேர்த்து கோர்த்தார் போல் அமைந்தது மணிப்பிரவாளம். அதுபோல தமிழ்ச்சொற்களும் வடமொழிச் சொற்களும் கலந்து எழுதப்பட்ட உரைநடையே மணிப்பிரவாள நடை எனப்பட்டது.

இவ்விளக்க உரைகளின் விளைவால் வடமொழியும், தமிழ்மொழியும் கலந்த **மணிப்பிரவாளநடை** புதிதாகத் தோன்றியது. வைணவம் தழைக்கப் பாடுபட்டவர்களுள் **நாதமுனிகள், ஆளவந்தார், வேதாந்த தேசிகர், பிள்ளை லோகாச்சாரியார், இராமானுஜர்** ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். ஆழ்வார்கள் விட்டுச்சென்ற பணியைத் தொடர்ந்துசெய்தபெருமைஆச்சாரியர்களையே சாரும்.

## நாதமுனிகள்

இவர் காட்டுமன்னார்கோயிலில் பிறந்தவர். தமது ஊர்க்கோயிலில் இருவர் திருவாய்மொழிப் பாசுரங்கள் பாடியதைக் கேட்டார். அப்பாடல்கள்மீது கொண்ட ஈர்ப்பால் நம்மாழ்வாரிடம் இருந்து பிரபந்தங்களைப் பெற்றார். இவர், ஆழ்வார்களின் பிரபந்தங்களுக்கு இசை அமைத்து அளித்தவர் ஆவார். இவரே நாலாயிரதிவ்யப்பிரபந்த பாசுரங்களைத் தொகுத்தவர் ஆவார்.

நாதமுனிகள் பக்தி யோகத்தைத் தம் மாணாக்கர்களுக்குக் கற்பித்தார். வைணவத்தையும் பிரபந்தத்தையும் பரப்பும்படி மாணவர்களிடம் கூறினார். **நியாயத்தத்துவம், யோக இரகசியம்** ஆகியவை இவர் இயற்றிய நூல்களாகும்.

## இராமானுஜர்


இராமானுஜர்

இராமானுஜர் திருப்பெரும்புதூரில் பிறந்தவர். இவர் ஆளவந்தாரின் மாணவர். பிரம்ம சூத்திரத்திற்கு உரை எழுதினார். திருக்குருகைபிரான் பிள்ளையைக் கொண்டு திருவாய் மொழிக்கு 'ஆறாயிரப்படி' உரை எழுதினார்.

இவர் யமுனாச்சாரியார் மற்றும் திருக்கோட்டியூர் நம்பிகளிடமிருந்து மறை பொருளாகிய திருவெட்டெழுத்தைக் கற்றார். இதனை அனைவரும் அறியும்படி கோபுரத்தின் மீதேறி நின்று உரக்க மொழிந்தார். இவர் **விசிஷ்டாத்வைதத்** தத்துவத்தை தோற்றுவித்தவர். இந்தியத் தத்துவங்களில் விசிஷ்டாத்வைதம் மட்டுமே தத்துவத்துடன் பக்தியையும் இணைத்துள்ளது. இவர் எழுதிய நூல்கள் வேதாந்தசாரம், வேதாந்ததீபம், **வேதாந்த சங்கிரகம், ஸ்ரீபாடியம் (ஸ்ரீபாஷ்யம்), கீதாபாடியம் (கீதாபாஷ்யம்), கத்யதிரயம் சரணாகதி கத்தியம், திருவரங்க கத்தியம், வைகுண்ட கத்தியம்** என்பனவாகும். இராமானுஜரின் காலத்திற்குப் பின் வைணவம் **வடகலை, தென்கலை** என இரு பிரிவுகளாகப் பிரிந்தது.

### ஆலய நுழைவு போராட்டத்தின் முன்னோடி

ஆலயவழிபாட்டில் அனைத்து மக்களையும் பங்கேற்கச் செய்ய, இராமானுஜர் முதன் முதலில் ஆலய நுழைவுப் போராட்டத்தை நடத்தினார். இவர் தென்னிந்திய சமூக மற்றும் சமயச்சீர்திருத்தத்தின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார்.




XII Ethics_Lesson 6.indd 163 05-04-2019 11:09:36

'ஆன்மாவே பரம்பொருளின் சாரம்' என்று கூறிய இராமானுஜர், அறிவாகவுள்ள ஆன்மா மாற்றமடைவதில்லை என்றார். இறைவனையே தஞ்சமடைந்து அவனை முற்றிலும் சரணடைதலே விசிஷ்டாத்வைதம்(பிரபத்தி மார்க்கம்) என்று இராமானுஜர் கூறினார். இராமானுஜர் திருச்சியின் ஒருபகுதியான திருவரங்கத்தில் அரங்கநாத சுவாமி கோயிலில் இறுதிவரை இறைப்பணி செய்தார்.

## நிம்பார்க்கர்

இராமானுஜருக்குப் பிறகு புகழ்பெற்ற பக்தி இயக்க ஞானி நிம்பார்க்கர். இவர் வடஇந்தியாவில் தன் பக்திக் கருத்துகளைப் பரப்பினார். மகாவிஷ்ணுவின் அவதாரமான கிருஷ்ணர், இராதை ஆகியோரே பரம்பொருள் என்றார். இராதாகிருஷ்ணரை அடைய ஆழ்ந்த பக்தி அவசியம் என்றார். உத்திரப்பிரதேசத்தில் இவருடைய இராதாகிருஷ்ண வழிபாட்டைப் பலர் பின்பற்றினர். இவருடைய கொள்கை **பேதாபேதம்** என்று அழைக்கப்படுகிறது.

## மத்துவர்



மத்துவர்


இவர் கர்நாடகத்தில் உடுப்பி மாவட்டத்தில் கல்யாண்பூர் என்ற இடத்தில் பிறந்தவர். இவர் மஹாவிஷ்ணு, லட்சுமி அவதாரத்தைத் தம் பக்திக் கோட்பாட்டின் ஆதாரமாகக் கொண்டவர். இவர் தென்னிந்தியாவின் பல பகுதிகளுக்குச் சென்று தம்முடைய பக்திக் கோட்பாட்டைப் பரப்பியவர். இவர் அறிமுகப்படுத்திய பக்திக் கோட்பாடு துவைதம் எனப்படுகிறது. **துவைதம் என்ற சொல்லிற்கு இருமைக் கொள்கை** என்று பொருள். (பரம்பொருள் ஒன்றே; அவரை அடைய மக்களின் முயற்சிகள் பல்வேறானவை). ஆதிசங்கரரின் அத்வைதம், இராமானுஜரின் விசிஷ்டாத்வைதம் ஆகியவற்றிலிருந்து இக்கோட்பாடு மாறுபட்டது. மத்துவரால் எழுதப்பட்ட துவைத வேதாந்த நூல்கள் **"சர்வமூலம்"** என்ற தலைப்பில் தொகுக்கப்பட்டன. ஹரி என்ற கடவுளின் உண்மைத்தன்மையை அறிய முயற்சிப்பது ஒவ்வொருவரின் கடமை என்றார். தன் பக்திக் கோட்பாடுகளை மையமாக வைத்து மத்துவர் 37 நூல்களை எழுதியுள்ளார்.

## ஜெயதீர்த்தர்

மத்துவருக்குப் பின் அவருடைய சிந்தனைகளைப் பரப்பிய அவரது சீடராவார். இவர் வேதாந்த சூத்திரங்களுக்குப் "பாஷ்யம்" என்ற விளக்கவுரையை எழுதினார். **ஜெயதீர்த்தர் திகாச்சாரியா** என்றும் அழைக்கப்பட்டார். அத்வைதத்தை உருவாக்கிய ஆதிசங்கரருக்கு **வசஸ்பதி மிஸ்ரா** (அத்வைதப் பரப்பாளர்) எவ்வாறு முக்கியமோ அதேபோல் மத்துவருக்கு ஜெயதீர்த்தர் முக்கியமானவர் என்று பக்தி இயக்கத்தவர்கள் கூறுகின்றனர். ஆன்மிகம் தொடர்பான ஆழ்ந்த அறிவு அவரிடம் இருந்தது. **வதவாலி** என்ற நூலை எழுதிய இவர் மத்துவரின் 18 நூல்களுக்கும் விளக்கவுரை எழுதியுள்ளார்.

**உங்களுக்குத் தெரியுமா?** ஜெயதீர்த்தரின் நியாயசுதா என்ற நூலிற்கு புவனகிரியில் பிறந்த இராகவேந்திரர் விளக்கவுரை எழுதினார்.

## இராமானந்தர்



இராமானந்தர்

தென்னிந்தியாவையும் வடஇந்தியாவையும் தமது பக்திநெறியின் மூலம் இணைக்கும் பாலமாகத் திகழ்ந்தவர். அலகாபாத் என்ற இடத்தில் பிறந்த இவர் இராமானுஜரின் விசிஷ்டாத்வைதக் கோட்பாட்டை நன்கு கற்று அவரையே தமது குருவாகக் கொண்டவர். இராமர், சீதை வழிபாட்டையும், தமது கொள்கையையும் இந்தி மொழியில் பரப்பினார். இவர் சாதி முறையையும் குலப் பிரிவுகளின்



XII Ethics_Lesson 6.indd 164 05-04-2019 11:09:36

வேறுபாடுகளையும் வெறுத்தார். அன்பான உள்ளமே இறைவனின் இருப்பிடம் என்றும், கடவுளுக்கு முன் ஆண், பெண், உயர்ந்தோர், தாழ்ந்தோர் என வேறுபாடு கிடையாது என்றும் கூறினார். அன்பான உள்ளம் கொண்ட எவரிடத்திலும் இறைவன் இருக்கிறார் என்று கூறிய இவர் பல்வேறு சமூகப் பிரிவுகளைச் சேர்ந்த பன்னிருவரைச் சீடராக்கிக் கொண்டார்.

**இராமானந்தரின் சீடர்கள்**

1. கபீர் – முஸ்லீம் நெசவாளி 2. ராய்தாசர் – செருப்பு தைக்கும் தொழிலாளி 3. சேனா – முடிதிருத்தும் தொழிலாளி 4. சாதனா – மாமிசம் வெட்டுபவர் 5. தன்னா – ஜாட் இனக் குடியானவர் 6. நரஹரி – பொற்கொல்லர் 7. ஃபிபர் – இரஜபுத்திர இளவரசர் 8. ஆனந்தனந்தர் 9. சுர் சுரானந்தர் 10. சூர் ஆனந்த் 11. சர்கரி 12. பத்யாவதி

### வித்யாபதி

இவர் தம் பக்திப் பாடல்கள் மூலமும் கவிதைகள் மூலமும் வங்காளப் பகுதிகளில் சிவ வழிபாட்டைப் பரப்பியவர். புருஷபக்சா என்ற நீதிபோதனைக் கதைகளை எழுதிய இவர், மைதிலி மொழியில் கோரக்ச விஜயா என்ற நாடக நூலையும் எழுதினார்.

### ஞானேஷ்வர்

இவர் மகாராஷ்டிராவில் பக்தி இயக்கத்தைப் பரப்பியவர். இவரது பக்திக் கோட்பாடுகள் '**மகாராஷ்டிர தர்மம்**' எனப்பட்டது. பகவத் கீதையின் விளக்கவுரையாக "**ஞானேஷ்வரி**" என்ற நூலை எழுதினார். அத்வைத சித்தாந்தத்தை விளக்கும் 'அம்ருதானுபவ' என்ற நூலையும் எழுதிய இவர் மகாராஷ்டிரம் முழுவதும் சென்று தமது பக்திக் கோட்பாடுகளைப் பரப்பினார்.

### பசவர்

கர்நாடகாவில் தோன்றிய பசவர், சாளுக்கிய மன்னனிடம் அமைச்சராகப் பணியாற்றினார். 'சிவபெருமானே முழுமுதற் கடவுள்' என்பதை இவரது பக்திநெறி வலியுறுத்தியது. சாதிப் பாகுபாடுகள், சமயச் சடங்குகள், உருவ வழிபாடு ஆகியவற்றைக் களையப் பாடுபட்டார். இதுவே மோட்சம் அடையும் வழி என்று கூறினார்.இவரது சமயத்தைப் பின்பற்றுபவர்கள் புலால் உண்ணுதல், மது அருந்துதல் போன்றவற்றைப் புறக்கணிக்கவேண்டுமென்றும் அப்பழக்கங்கள் ஒழிக்கப்பட வேண்டுமென்றும் கடுமையாக நிபந்தனை விதித்தார். குழந்தைத் திருமணத்தை எதிர்த்த இவர் விதவைகள் மறுமணத்தை ஆதரித்தார். இவரைப் பின்பற்றுபவர்கள் **வீரசைவர்கள் (லிங்காயத்துகள்)** என்றழைக்கப்படுகின்றனர். நதியின் சங்கமத்தலைவன் என்று சிவபெருமானைப் பசவர் போற்றுகிறார். அனைத்து பிரிவினரும் இவரது சமயப் பிரிவில் இணைந்தனர். தமது போதனைகளைக் கன்னட மொழியில் பரப்பினார்.

### நாமதேவர்

மகாராஷ்டிராவின் பண்டரிபுரத்தில் பிறந்த நாமதேவர் "**விதோபா**" என்ற பக்திக் கோட்பாட்டைப் பின்பற்றினார். பல்வேறு இனத்தவர்களைத் தமது சீடராக்கிக் கொண்டார். இவரது கருத்துகள் '**மகாராஷ்டிரதங்கம்**' எனப்பட்டது. சாதியை, உருவ வழிபாட்டை, பொருளற்ற சடங்குகளை வன்மையாக எதிர்த்தார். உண்மையான பக்தியும், கடவுள் வழிபாடும் இவரது முக்கிய கொள்கையாகும்.

### கபீர்



கபீர்

இராமானந்தரின் புகழ்பெற்ற சீடர்களில் ஒருவர். தொடக்கம் முதலே இந்து முஸ்லீம் ஒற்றுமையை வளர்த்தவர். கடவுள் ஒருவரே என்று போதித்த இவர்



XII Ethics_Lesson 6.indd 165 05-04-2019 11:09:36

**'இராமனும் இரஹீமும் ஒன்றே, கிருஷ்ணரும் கரீமும் ஒன்றே', அல்லாவும் ஈஸ்வரனும் ஒன்றே** என்று மக்களுக்குப் போதித்தார். இந்துவும் முஸ்லீமும் ஒரே களிமண்ணால் செய்யப்பட்ட இருவேறு பானைகள் போன்றவர்கள் என்றார். மனத்தூய்மையில்லாமல் கங்கையில் நீராடுவதாலோ, கல்லாலான உருவங்களை வணங்குவதாலோ, நோன்பிருந்து மெக்கா செல்வதாலோ எந்தப் பயனுமில்லை என்று கபீர் போதித்தார். இவருடைய போதனைகளில் உயர்ந்தது, இந்து – முஸ்லீம் மெய்யுணர்வுக் கோட்பாடுகளும், உயர்ந்த மரபுத் தத்துவங்களும் ஆகும். இவர் சமயச் சடங்குகளையும், மூடநம்பிக்கைகளையும் எதிர்த்தார். அன்புநெறியைப் பின்பற்றி, இந்து – முஸ்லீம் ஒற்றுமைக்கு வித்திட்டார். கபீருடைய பாடல் தொகுப்பு **தோஹாக்கள்** எனப்படுகிறது.

## குருநானக்

பஞ்சாபில் உள்ள லாகூர் மாவட்டத்தில் தால்வண்டி என்ற இடத்தில் கி. பி. (பொ. ஆ) 1469 –ஆம் ஆண்டில் பிறந்த குருநானக் இளம்வயதிலேயே சமயநெறியில் நாட்டம் கொண்டார். கபீரைத் தமது குருவாக ஏற்றுக்கொண்ட இவர், **கடவுள் ஒருவரே** என்று கூறினார். டெல்லி சுல்தானியர் காலத்திலிருந்த இந்து – முஸ்லீம் சமய வெறுப்பைத் தணிக்கும் பொருட்டுதம் பக்திக் கொள்கையை வகுத்துக் கொண்டார். அதனடிப்படையில், பிற்காலத்தில் அவர் சீக்கிய சமயத்தைத் தோற்றுவித்தார். இந்துப் புராணங்களையும் இஸ்லாமியர்களின் புனிதநூலான குரானில் உள்ள கருத்துகளையும் படித்த இவருக்கு, இந்து – முஸ்லீம் வேற்றுமை பயனற்றது எனத் தோன்றியது. உருவமற்ற ஒரே கடவுளை வணங்குமாறும் தேவையற்ற சமயச் சடங்குகளைத் தவிர்க்குமாறும் குருநானக் போதித்தார். **லங்கர்** என்ற உணவுக் கூடத்தை நிறுவி, சமபந்தி உணவருந்தும் முறையைத் தொடங்கி வைத்தார்.

அறம் நிறைந்த வாழ்வைப் பின்பற்றுமாறும், பிற கோட்பாடுகளின் மீது சகிப்புத்தன்மை காட்டுமாறும் தமது போதனையில் கூறினார். எல்லாரையும் சமமாகக் கருதுபவரே உண்மையான பக்தர் என்று கூறிய குருநானக், ஞானிகளின் கல்லறைகளுக்குச் செல்வதாலோ, கடுந்தவம் செய்வதாலோ மட்டுமே இறையருள் பெறமுடியாது. அறத்தூய்மையற்ற இவ்வுலகில் மனத்தூய்மையுடன் வாழ்பவரே இறையருள் பெறமுடியும் என்று கூறினார். இவருடைய போதனைகள் அடங்கிய தொகுப்பு ஆதிகிரந்தம் ஆகும். இதுவே சீக்கிய சமயத்தின் புனித நூலாகும். சீக்கிய சமயத்தின் முதல் குருவான இவரைப் பின்பற்றி, ஒன்பது சீக்கிய சமயகுருமார்கள் இவரது போதனைகளை உலகறியச் செய்தனர்.

## வல்லபாச்சாரியார்

இவர் காசியில் பிறந்து தென்னிந்தியாவிற்கு பெற்றோருடன் குடிபெயர்ந்தார். விஜயநகரப் பேரரசின் தலைசிறந்த மன்னரான கிருஷ்ணதேவராயரின் அவைக்குச் சென்று, கிருஷ்ண வழிபாட்டின் அவசியத்தை எடுத்துரைத்தார். அதன்பின் வாரணாசிக்குச் சென்று, பல ஆண்டுகள் அங்கேயே தங்கியிருந்து, கிருஷ்ணர் வழிபாட்டைப் பரப்பினார். மக்களிடையே நிலவிய சமூக ஏற்றத்தாழ்வுகளை அகற்றப் பாடுபட்டார். முக்தியடைய கிருஷ்ணர் வழிபாட்டோடு கூடிய உலகியல் வாழ்வு அவசியம் என்றார். **'புஷ்டிமார்க்கம்'** என்ற ஆன்மிகக் கோட்பாட்டை உருவாக்கினார். இவருடைய பக்தி மார்க்கம் **சுத்த அத்வைதம்** எனப்படுகிறது. இவர் வடமொழியிலும், **ப்ரிஜ்** (Parji) மொழியிலும் நூல்களை எழுதினார்.

இவர் உருவாக்கிய கிருஷ்ண பக்திப் பாடல்கள் இன்றும் இராஜஸ்தான், குஜராத் பகுதிகளில் பாடப்படுகின்றன. உணர்ச்சி மிகுந்த ஆழ்ந்த இறை பக்தியை இவரது பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. **சுபோதினி, சித்தாந்த ரகசியா** ஆகிய நூல்களையும் இவர் எழுதினார்.

## சைதன்யர்

வங்காளத்தில் பிறந்த இவர் தம் 25–ஆம் வயதிலேயே துறவியானவர். இவர் **ஸ்ரீசைதன்ய மகாபிரபு** என்றும் அழைக்கப்பட்டார். சிறந்த



XII Ethics_Lesson 6.indd 166 05-04-2019 11:09:36

www.tntextbook.org

மொழியறிவையும், இலக்கிய அறிவையும் பெற்றவர். கிருஷ்ணர் மீதான பக்தியே முக்திக்கு வழி என்று போதித்தவர். அன்பு, பக்தி ஆகிய நெறிகளின் மூலமே பரம்பொருளான கிருஷ்ணரை அடைய முடியும் என்றார். சமூகத்தில் நிலவிய சாதி, சமய வேறுபாடுகளை எதிர்த்த இவர் மனிதரில் ஏற்றத்தாழ்வு கிடையாது. கிருஷ்ணரின் முன் அனைவரும் சமம் என்று கூறினார். கிருஷ்ண பக்தி தொடர்பான இவரது தத்துவம் '**அசிந்திய பேதா பேதம்**' எனப்படுகிறது.


## துளசிதாசர்

கோஸ்வாமி துளசிதாஸ் என்றழைக்கப்பட்ட இவர் வைணவ சமயத்தின் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந்தார். வட இந்தியாவில் இராமவழிபாட்டு, முறையைப் பரப்பியதுடன் இராமாயணத்தை ராமசரித மானஸ் என்ற பெயரில் இந்தி மொழியில் மொழியாக்கம் செய்தார். இவர், வினயபத்திரிக்கா,கீதாவளி,தோகாவளி,பார்வதி மங்கள், ஜானகி மங்கள் ஆகிய நூல்களை இயற்றினார். இவருடைய படைப்புகளில் மகன் தம் பெற்றோர்க்கு ஆற்ற வேண்டிய கடமை, ஒரு மாணவன் தம் குருவிற்கு புரிய வேண்டிய கடமை ஒரு அரசன் தம் குடிமக்களுக்கு புரிய வேண்டிய கடமை போன்றவை முக்கியத்துவம் பெற்றுள்ளன.

## சூர்தாசர்

கிருஷ்ணர், ராதை வழிபாட்டில் ஈடுபட்டுப் பக்தி இயக்கத்தைப் பரப்பியவர். கிருஷ்ணரை வழிபடுவதே முக்திக்கு வழி என்று கருதினார். இவர் "**ஆக்ராவின் பார்வையற்ற கவிஞர்**" எனப்பட்டார். **சூர் சாகர், சாகித்ய ரத்னா** போன்ற நூல்களையும் எழுதினார். இவர் பாடிய கிருஷ்ண பக்திப் பாடல்கள் வட இந்தியாவின் பக்தி மார்க்கத்தில் மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. முகலாயர்களின் மாமன்னர் அக்பர், தம்மைப் புகழ்ந்து பாடுமாறு சூர்தாசரைக் கேட்டுக்கொண்டார். ஆனால், கிருஷ்ணரைப் புகழ்ந்து பாடிய வாயால் யாரையும் புகழ்ந்து பாடமாட்டேன் என்று பணிவுடன் சூர்தாசர் மறுத்தார். அக்பரின் அவையில் கிருஷ்ண பக்திப் பாடலைப் பாடிய சூர்தாசர் மதுரா, கௌஹாட் ஆகிய நகரங்களுக்குச் சென்று கிருஷ்ண பக்தியைப் பரப்பினார். கிருஷ்ணர் மீதான ராதையின் காதலை விளக்கிக் கூறும் **ராதா வல்லபி** என்ற பக்திப் பிரிவைத் தோற்றுவித்தார்.

## மீராபாய்



மீராபாய்

இரஜபுத்திர அரச குடும்பத்தை சார்ந்த இவர், வைணவ சமய மரபில் வளர்க்கப்பட்டார். கிருஷ்ணரிடம் மிகுந்த ஈடுபாடு குழந்தைப்பருவம் முதலே ஏற்பட்டது. தமது கருத்துக்களை வட்டார மொழியான **ப்ரிஜ்** மொழியில் பரப்பினார். பிறப்பு, இறப்பு என்னும் சுழற்சியினின்று விடுபட்டுப் பேரின்ப நிலையை அடைய, கிருஷ்ண பக்தி அவசியம் என்றார். இவரது பக்திப்பாடல்கள் இனிமையானவை. பக்திநெறியை சுவையான பாடல்கள் மூலமாகப் பரப்பினார். எளிய பக்தியும் நம்பிக்கையுமே வீடுபேற்றினை அடைய நல்வழி என்றார். பிறப்பால் எவரும் உயர்ந்தவரில்லை. உயர்வுக்குக் காரணம் அவரவரது செயல்களே என்று கூறினார்.

## குரு ராம்தாசர்



சிவாஜியும் இராமதாசரும்

மகாராஷ்டிராவைச் சேர்ந்த இவர் சத்ரபதி சிவாஜியின் ஆன்மிக குருவாக விளங்கினார். சாதாரண மக்களும் வாழ்க்கைத் தத்துவத்தை அறியும் வகையில் '**தசபோதா**' என்ற நூலை எழுதினார். சமூக சமத்துவத்திற்கு இராம வழிபாடு, அனுமன் வழிபாடு ஆகியவற்றைப் பரப்புவதன் மூலம் உதவ முடியும் என்றார். பகவான்ராம் என்பவரைத் தம் குருவாகக் கொண்டு மகாராஷ்டிரம் முழுவதும் ராம



XII Ethics_Lesson 6.indd 167 05-04-2019 11:09:36

வழிபாட்டையும்,சமத்துவக்கோட்பாடுகளையும் பரப்பினார்.

குரு ராம்தாஸ் மீது அளவற்ற அன்பைக் கொண்டிருந்த மராத்திய மன்னன் சத்ரபதி சிவாஜி உருவாக்கிய பகுதி சஜ்ஜன்காட் என்பதாகும். இச்சொல்லிற்குத் துறவிகளின் கோட்டை என்று பொருள்.

## ஏக்நாதர்

இவர் மகாராஷ்டிர மாநிலத்தில் பைத்தான் என்னும் ஊரில் பிறந்தவர். சிறுவயதிலேயே கிருஷ்ணபக்தி மிகுந்து காணப்பட்டார், அனைத்து பிரிவினரையும் நேசித்தார்.

## துக்காராம்

மகாராஷ்டிராவில் பிறந்த இவர் சிவாஜி, ஏக்நாத் ஆகியோரின் சமகாலத்தவர். பக்தியின் மூலமாகத் தம் போதனைகளைப் பரப்பினார். விஷ்ணுவை **விட்டலா** என்ற பெயரில் வழிபட்டுத் தம் கொள்கைகளை வடிவமைத்தார். தம் ஆன்மிகக் கோட்பாட்டின் மையமாக பந்தர்பூர் என்ற இடத்தைத் தேர்ந்தெடுத்தார். இவர் மராத்தி மொழியில் பாடிய பாடல் '**அபங்கம்**' என்ற பெயரில் அமைக்கப்பட்டது. இவருடைய பாடல் தொகுப்பு **கீர்த்தனை** எனப்பட்டது. இசைப் பாடலுடன் கூடிய பக்தியின் மூலம் மக்களை ஒருங்கிணைக்க முயன்றார். வேத வேள்விகள், சடங்குகள், புனிதப் பயணங்கள், உருவ வழிபாடு போன்றவற்றை நிராகரித்தார். கடவுள்பற்று, மன்னிக்கும் பக்குவப்பட்ட மனநிலை, மனஅமைதி ஆகியவற்றைப் போதித்தார். சமத்துவம், சகோதரத்துவம் போன்ற கோட்பாடுகளையும் பரப்பினார்.

## சூபியிசம்

சூபியிசம் – என்பது அன்பு, ஆழ்ந்த அறிவு, அறநெறி வழிபாட்டை மட்டுமே கொண்ட இஸ்லாமின் பக்திப் பிரிவு ஆகும். இஸ்லாமிய மதத்தை அடிப்படையாகக் கொண்டு பக்திச் சீர்திருத்தங்களைப் பரப்பியது. இஸ்லாமிய சமயநூல் கூறும் சமயச் சடங்குகளைப் புறக்கணித்தது, சாதி, சமய வேறுபாடுகளை எதிர்த்தது, அசைவ உணவு, உயிர்களைப் பலியிடுதல் போன்றவற்றையும் புறக்கணித்தது. " இறைவனை மனக் கண்ணால் அழகு ஆராதனை வடிவமாகக் காண்பதே சூபியிசம்" என்று கே.டி. பார்கவா குறிப்பிடுகிறார்.

## சூபியிசத்தின் தோற்றம்

சூஃபி என்ற சொல் சஃபா என்ற சொல்லிலிருந்து வந்தது. இதற்குத் "தூய" என்பது பொருளாகும். ஒழுக்கமான தூய நெறிகளுடைய வாழ்க்கையை வலியுறுத்துகிறது. இஸ்லாமிய சமயத்தில் தாராள ஆன்மிகத்தை மையப்படுத்திய கோட்பாட்டைக் கூறுகிறது. இதன் மூலம் இந்து முஸ்லீம் ஒற்றுமையைச் சூபிக்கள் நிலைநாட்டினர்.

### சூபியிசத்தின் பிரிவுகள்

சூபியிசத்தில் பக்தியின் அடிப்படையில் ஐந்து பிரிவுகள் உள்ளன. அவையாவன: 1) சிஸ்தி 2) சுகவார்தி 3) குவாதிரி 4) நக்சாபந்தி 5) ஷாதாரி ஆகியவையாகும். இப்பிரிவுகள் இந்தியாவில் இந்து மற்றும் இஸ்லாமியப் பண்பாட்டு இணைப்பிற்குப் பாலமாகச் செயல்பட்டன.

குவாஜா மொய்னுதீன் சிஸ்தி, ஷேக்ஃபரீத், ஷேக் நிசாமுதீன் அவுலியா ஆகியோர் புகழ்பெற்ற சூபி ஞானிகள் ஆவர்.

## சூபியிசத்தின் முதன்மையான கொள்கைகள்

- கடவுள் ஒருவரே
- உலகம் இறைவனின் பிரதிபலிப்பு
- மனிதர்களுக்குச் சேவை செய்வதே உயரிய ஆன்மிகம்
- அன்பே கடவுள், அச்சம் தவிர்க்கும் சொற்களைவிட அச்சம் தவிர்க்கும் செயல்களே முக்கியம்

www.tntextbook.org

- இறைவனை அடைய மனிதன் உலகப் பற்று, பாசங்களிலிருந்து விடுபட வேண்டும்.
- அனைவருமே அன்பே உருவான இறைவனின் குழந்தைகள் என்ற கருத்தை ஏற்க வேண்டும்.

## சூபியிசத்தின் தாக்கம்

- சமூகம் மற்றும் சமயத்தில் தாராளமயக் கருத்துகள் உருவாக வழிவகுத்தது.
- மனிதநேயத்துடன் கூடிய தேசப்பற்று, சமயப்பற்று போன்றவற்றை மக்களிடம் வளர்த்தது.
- சூபியிசத்தைப் பின்பற்றியோர், ஆதரவற்றோர், விதவைகள், ஏழைகள், போன்றோருக்கு சேவை செய்தனர். அதனால், ஆன்மிக உணர்வையும் மக்களிடத்தில் கொண்டுவந்தனர்.
- இசை, இலக்கியம், கட்டடக்கலை, வட்டாரமொழிகள், புதிய சமய முறைகள் போன்றவை இவர்களால் வளர்ச்சி பெற்றன.
- இந்தியாவில் பன்முகப்பண்பாடு பரவ அடித்தளமிட்டது சூபி இயக்கமாகும்.

> இந்துஸ்தானத்தின் பறவை எனப்பட்ட அமீர்குஸ்ரு சிறந்த கவிஞராகவும் சூபியிச ஞானியாகவும் திகழ்ந்தார். பாரசீக, பிரஜ் (Parji) மொழிகளில் இசைப்புலமை பெற்ற இவர் குவாலிஸ் என்ற இசை முறையை உருவாக்கிப் பயன்படுத்தினார். சிதார் என்ற இசைச் கருவியை உருவாக்கினார். சூபியிச வழிபாடு முறை மக்களிடையே பரவ, இசை முக்கியப் பங்காற்றியது.

## நாத யோகா

### யோகா

யோகா என்பது நம் முன்னோர்களான ஞானிகளும், முனிவர்களும், சித்தர்களும் பின்பற்றிய ஒரு வாழ்வியல் நெறியாகும். உடலையும், உயிரையும் ஒன்றாக இணைத்து பரம்பொருளுடன் ஒன்றிணையச் செய்யும் செயல் எனவும் இது கருதப்படுகிறது. யோகாவில் பல்வேறு முறைகள் இருந்தாலும் சிறப்புமிக்க யோகமுறை நாதயோகாவாகும்.

### நாத யோகா

இறைவனை வழிபடும்போது, குரல் நாண்களின் மூலம் மந்திரங்களை ஒலியாக எழுப்பி ராகத்துடனோ, சப்தமாகவோ, மனத்திற்குள்ளேயோ பாடி ஆன்மா, உடல், மனம் ஆகிய மூன்றையும் ஒன்றாக இணைக்கின்ற செயலே நாதயோகா எனப்படும்.

### நாதயோகாவினால் ஏற்படும் பயன்கள்

நாதயோகா பயிற்சியை மேற்கொள்வதால், பிராணம் என்ற உயிராற்றல் அதிகரிக்கிறது. மன அமைதி பெற்று உடல் நலத்தைப் பேணுவதற்கு உதவுகிறது.

- தீர்க்க முடியாத மனப் பிரச்சனைகளைத் தீர்க்கிறது.
- வலது மற்றும் இடப்பக்க மூளைப் பகுதியின் செயல்பாட்டைச் சமன்செய்து, மன அழுத்தத்தைக் கட்டுப்படுத்தித் தடையில்லா உறக்கம் ஏற்பட உதவுகிறது.
- நாளமில்லாச் சுரப்பிகளின் செயல்பாட்டைத் தூண்டச் செய்கிறது.
- சுயவெளிப்பாட்டை தைரியத்துடன் வெளிப்படுத்திப் பேசுகின்ற ஆற்றலைத் தருகிறது.
- சமூகத்தில் தூண்டப்படுகின்ற தவறான நிகழ்வுகளிலிருந்து மனிதன் விடுபட உதவுகிறது.
- தனிமனிதனின் ஒட்டுமொத்த உடலையும் புரிந்துகொண்டு செவித்திறன் அதிகரிக்க உதவுகிறது.
- செவிப்புலன் புரிதலை முழு உடல் கவனிப்பிற்கு ஏதுவாக்குகிறது (இசைக்குத் தகுந்த உடலசைவுகள்)
- நனவுநிலையை அதிகரிக்கச் செய்கிறது (பாடலுக்கேற்ற உடல் அசைவுகளை நினைவில் வைத்து ஆடல் அசைவை



XII Ethics_Lesson 6.indd 169 05-04-2019 11:09:36

வெளிப்படுத்தும் தன்மையை மேம்படுத்துதல்)

- தன்னையறிதல் என்ற நிலையை மேம்பட்டதாக்க உதவுகிறது.
- ஒருவர் தனித்திருக்காமல் தெய்வீகத் தன்மையுடன் இணைந்திருக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.
- பாலினப் பாகுபாட்டுத் தன்மையை நடுநிலைப்படுத்துகிறது (நடன அசைவுகள், அபிநயங்கள் மூலம்)

## பக்தி இயக்கத்தின் விளைவுகள்

நாடுமுழுவதும் பரவிய பக்தி இயக்கத்தால் பல்வேறு விளைவுகள் ஏற்பட்டன அவை

- பக்தி இயக்கத்தின் மூலம் ஆழ்வார்கள், நாயன்மார்கள், இராமானுஜர், இராமானந்தர், கபீர், குருநானக் உள்ளிட்ட பலரது போதனைகளும், பக்தி நெறிகளும் மக்களைக் கவர்ந்தன.
- விசிஷ்டாத்வைதம், துவைதம், சுத்த அத்வைதம் போன்ற பக்திக்கோட்பாடுகள் இந்து சமயத்தில் புதிய சீர்திருத்தத்தை உருவாக்கின.
- பக்தி இயக்கத்தின் விளைவாகப் பஞ்சாபில் கபீரின் சீடர் குருநானக் என்பவரால் சீக்கிய சமயம் தோற்றுவிக்கப்பட்டது.
- சமய, சாதி வன்முறைகள் குறைந்து சமூக நல்லிணக்கம் ஏற்படத் தொடங்கிய நிகழ்வு பக்தி இயக்கத்தின் முக்கிய விளைவுகளில் ஒன்றாகும்.
- வட்டாரமொழிகளின் வளர்ச்சியும், கலை, கட்டடக்கலை போன்றவற்றின் வளர்ச்சியும் பக்தி இயக்கத்தின் முக்கிய விளைவாகும்.
- கோயில்களில் அறுபத்துமூன்று நாயன்மார்களின் சிலைகளும், பன்னிரு ஆழ்வார்களின் சிலைகளும் அழகுற அமைக்கப்பட்டன.
- சமபந்தி உணவுமுறை, ஆலய வழிபாட்டில் சம உரிமை போன்றவைகளைச் சீர்திருத்த முறையில் பக்தி இயக்கம் முன்னெடுத்தது.
- இந்து – முஸ்லீம் ஒற்றுமைக்குப் பாடுபட்ட பக்தி இயக்கம் மன்னர்களுக்கு ஆன்மிக நம்பிக்கை வளரக் காரணமானது.
- மக்களிடையே ஆன்மிக நம்பிக்கை வளரவும், சமூக நடவடிக்கைகளில் அவர்களைப் பங்கேற்கச் செய்யவும் பக்தி இயக்கம் வழி வகுத்தது.
- மக்களிடையே அறக்கோட்பாடுகள் அடிப்படையிலான வாழ்வியல் நெறிகளை வளர்க்க பக்தி இயக்கம் உதவியது.
- இந்து மக்களிடையே பக்தி இயக்கத்திற்குக் கிடைத்த வரவேற்பானது பிற்காலத்தில் இந்தியா மதச்சார்பற்ற, ஒன்றுபட்ட நாடாக, மாறுவதற்கு வழி வகுத்தது.



## நிறைவுரை

இந்தியாவில் சமயம், சமூகம், இலக்கியம் ஆகியவற்றிற்குப் பக்தி இயக்கம் மிகுந்த தொண்டாற்றியுள்ளது. சமணம், பௌத்தம், இஸ்லாம் சமயங்கள் வேகமாகப் பரவிய காலத்தில் இந்து சமயத்தின் மறுமலர்ச்சிக்கும் இவ்வியக்கம் வித்திட்டது. வேதங்களின் தத்துவம் மொழிபெயர்க்கப்பட்டு, மக்களிடம் சென்றடைய, பக்தி இயக்கம் காரணமாயிற்று. சமூகத்தில் நிலவிய வேற்றுமைகள் களையப்பட்டு, கடவுள் முன் அனைவரும் சமம் என்ற கோட்பாடு பரவவும், சமூகத்திலுள்ள மூடநம்பிக்கைகள் அகலவும் பக்தி இயக்கம் அடித்தளமிட்டது. பக்தி இயக்கச் சிந்தனைகளே பிற்காலத்தில் சமூக சமய சீர்த்திருத்த இயக்கங்கள் உருவாக வழிவகுத்தன எனலாம்.



XII Ethics_Lesson 6.indd 170 05-04-2019 11:09:36

www.tntextbook.org

# பயிற்சி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. அறுபத்துமூன்று நாயன்மார்களின் வரலாற்றைக் கூறும் நூல்

அ) திருவிளையாடற் புராணம் ஆ) காஞ்சிப்புராணம் இ) கந்தபுராணம் ஈ) பெரிய புராணம்

2. உழவாரப் படையை அமைத்தவர்

அ) திருஞான சம்பந்தர் ஆ) சுந்தரர் இ) திருநாவுக்கரசர் ஈ) மாணிக்கவாசகர்

3. திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்

அ) ஜி.யு.போப் ஆ) சீகன்பால்க் இ) கால்டுவெல் ஈ) வீரமாமுனிவர்

4. கீழ்க்காண்பனவற்றுள் சுந்தரருக்குப் பொருந்தாத கூற்றைக் குறிப்பிடுக.

1) தம்பிரான் தோழர் என்றழைக்கப்பட்டமை

2) சடையனார் – இசைஞானியாருக்கு மகனாகப் பிறந்தமை

3) திருப்புகலூரில் செங்கல்லைப் பொன்னாக மாற்றியமை

4) நரிகளைப் பரிகளாக மாற்றியமை

UUJN2V

5. பின்வரும் கூற்றையும் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று: இறைவனருளால் திண்ணன், கண்ணப்பனாக மாறினார்.

காரணம்: சிவபெருமான் கண்களில் ஏற்பட்ட பழுதினை நீக்குவதற்காகத் தம் கண்களை அப்பியதால், கண்ணப்பர் என்றழைக்கப்பட்டார்.

அ) கூற்று சரி, காரணம் தவறு. ஆ) கூற்று, காரணம் இரண்டும் தவறு

இ) கூற்று, காரணம் இரண்டும் சரி. ஈ) கூற்று தவறு, காரணம் சரி.

6. பொருத்துக.

அ. நாச்சியார் திருமொழி – 1. திருமங்கையாழ்வார்

ஆ. பெருமாள் திருமொழி – 2. நம்மாழ்வார்

இ. திருவாய்மொழி – 3. ஆண்டாள்

ஈ. பெரிய திருமொழி – 4. குலசேகர ஆழ்வார்

அ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3 ஆ) அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2

இ) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 3 ஈ) அ – 3, ஆ – 4, இ – 2, ஈ – 1

7. பின்வரும் கூற்றுக்குப் பொருந்தக்கூடிய விடைக்குறிப்பைக் கண்டறிக.

'தமிழ் செய்த மாறன்' என்று நம்மாழ்வார் அழைக்கப்படக் காரணம்,

அ) எல்லாச் சமயத்திற்கும் உரியவராகத் திகழ்ந்தமை

ஆ) நால்வகை வேதங்களையும் தமிழில் பாடியமை

இ) மாறன் என்னும் குடிப்பெயருடன் விளங்கியமை

ஈ) திருவாய்மொழி, திருவிருத்தம் போன்ற பக்தி நூல்களை இயற்றியமை



XII Ethics_Lesson 6.indd 171 05-04-2019 11:09:36

www.tntextbook.org

8. விப்ரநாராயணர் என்ற இயற்பெயர் கொண்டவர்

அ) பொய்கையாழ்வார் ஆ) பேயாழ்வார்

இ) பூதத்தாழ்வார் ஈ) தொண்டரடிப் பொடியாழ்வார்

9. பொருந்தும் இணையைத் தேர்ந்தெடுக்க.

1) மத்துவர் – வதவாலி

2) ஞானேஷ்வர் – ஞானேஷ்வரி

3) ஜெயதீர்த்தர் – வேதாந்த சங்கிரகம்

4) இராமானுஜர் – சர்வமூலம்

10. அக்பரின் அவையில் இடம்பெற்றிருந்த பக்தி இயக்க ஞானி

அ) கபீர் ஆ) சூர்தாசர் இ) மீராபாய் ஈ) குருநானக்

## சிறுவினா

1. அபரபக்தி என்றால் என்ன ?
2. காரைக்காலம்மையார் பற்றிக் குறிப்பு வரைக.
3. மங்களா சாசனம் பற்றிச் சிறுகுறிப்பு வரைக.
4. பரபக்தி என்றால் என்ன ?
5. வடதளி பூசை என்றால் என்ன ?
6. நாதயோகா என்றால் என்ன ?

## குறுவினா

1. சுந்தரரின் பதிகங்கள் மூலம் அறியும் செய்திகள் யாவை ?
2. நிம்பார்க்கர் யார் ? இவரது பணிகள் யாவை ?
3. சூபியிசத்தின் முதன்மைக் கொள்கைகள் யாவை ?
4. புறச் சந்தானம் என்றால் என்ன ?
5. ஞானேஷ்வர் குறிப்பு வரைக.
6. வீரசைவர்களை ஏன் லிங்காயத்துகள் என்று அழைத்தனர் ?

## நெடுவினா

1. பக்தி இயக்கம் தோன்றக் காரணங்கள் யாவை ?
2. திருநாவுக்கரசரின் அருஞ்செயல்களை விளக்குக.
3. நாயன்மார்களின் சமயத் தொண்டுகளைக் கூறுக.
4. நாத யோகாவின் பயன்கள் யாவை ?
5. பக்தி இயக்கத்தின் விளைவுகள் யாவை ?



XII Ethics_Lesson 6.indd 172 05-04-2019 11:09:36

# அலகு 7

# சமூக – சமய சீர்திருத்த இயக்கங்கள்

7R6HRR

## கற்றல் நோக்கங்கள்

- 19–ஆம் நூற்றாண்டில் சமூக – சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றக் காரணங்களை அறிதல்
- பிரம்ம சமாஜக் கோட்பாடுகள் அவற்றின் சமூக – சமயப் பணிகள் பற்றி அறிதல்
- ஆரிய சமாஜத்தின் கோட்பாடுகள் அவற்றின் சமூக சமயப் பணிகள் பற்றிப் புரிந்துகொள்ளுதல்
- ஸ்ரீஇராமகிருஷ்ண இயக்கத்தின் சமூக மற்றும் கல்வித் தொண்டுகள் பற்றித் தெரிந்துகொள்ளுதல்
- 19ஆம் நூற்றாண்டின் சமூக–சமய சீர்திருத்தவாதிகளின் பங்களிப்பு பற்றித் தெரிந்துகொள்ளுதல்

### நுழைவு வாயில்

கி.பி.(பொ.ஆ.) 7–ஆம் நூற்றாண்டுமுதல் 17–ஆம் நூற்றாண்டுவரை இந்தியாவில் பக்தி இயக்கங்கள் தோன்றின. இவ்வியக்கங்கள் இடைக்கால இந்திய வரலாற்றில் சமூக மற்றும் சமய மறுமலர்ச்சியில் முக்கிய பங்காற்றின. இதன் தொடர்ச்சியாக வங்காளத்தில் சமூக–சமயச் சீர்திருத்த இயக்கம் இராஜாராம் மோகன்ராய் என்பவரால் தொடங்கப்பட்டு, அதன்பின் இந்தியா முழுவதும் பல சீர்திருத்த இயக்கங்கள் தோற்றுவிக்கப்பட்டு, சமூக – சமய, மறுமலர்ச்சிக்கு வித்திட்டன.

### பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய சமூக–சமயச் சீர்திருத்த இயக்கங்கள்:

### இந்தியாவின் நிலை

ஆங்கிலேய ஆட்சியில் இந்திய அரசர்களுக்கிடையே நிருவாகத்தில் பல சீர்கேடுகள் காணப்பட்டன. இந்தியர்கள் மேலைநாட்டு நாகரிகத்தைப் பின்பற்றினர். கிறித்துவ சமயப்பரப்புக் குழுவினர்களும், இந்திய ஆட்சியாளர்களும், இந்தியரின் மொழிகளையும், இலக்கியங்கள், பண்பாடு, கலைகள் போன்றவற்றைப் போற்றினர். ஆனால், அதன் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் அளிக்கவில்லை.

18 மற்றும் 19–ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவின் சமூகநிலை உலக நாடுகளுக்கிடையில் பின்தங்கியிருந்தது. குறிப்பாக அரசியல், பொருளாதார, சமூக, சமய, பண்பாடு, இலக்கியம், கல்வி போன்ற துறைகளில் வளர்ச்சி பெறவில்லை, ஏற்கெனவே இருந்த வளர்ச்சி படிப்படியாகக் குறைந்து கொண்டே சென்றது. நம் மக்களின் அறியாமை, அன்னிய ஆட்சியாளர்களின் பேராசை போன்றவை நம்நாட்டுக் கலைகள் அழியக் காரணமாயிற்று. புற்றீசல்போல படர்ந்த மேலைநாட்டு நாகரிகம், நம்முடைய பண்பாட்டை மறக்கச் செய்தது. எனினும்,



XII Ethics_Lesson 7.indd 173 05-04-2019 11:14:52

www.tntextbook.org

19–ஆம் நூற்றாண்டில் மேலைநாட்டுக் கல்வி பயின்றதன் விளைவாக நமது பண்பாடு, இலக்கியம் போன்றவை மீண்டும் துளிர்த்து எழுவதற்கு படித்த இளைஞர்கள் முயற்சி செய்தார்கள். எனவே தீண்டாமை, உடன்கட்டை ஏறுதல் (சதி), பெண்சிசுக் கொலை, பர்தாமுறை, தேவதாசிமுறை, ஆடவர் கடல்கடக்காமை, இன்னபிற மூடப்பழக்க வழக்கங்களைக் களைய சமூக, சமயத்தில் பல இயக்கங்கள் தோன்றின. இக்காலத்தையே **சமூக–சமய விழிப்புணர்வுக் காலம்** என்கிறோம்.

## சமூக–சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றக் காரணங்கள்

### அரசியல் ஒற்றுமை

ஆங்கிலேய ஆட்சியின் விரிவாக்கக் கொள்கை, இந்திய மன்னர்களிடையே அரசியல் ஒற்றுமை ஏற்படக் காரணமாக அமைந்தது. டல்ஹௌசி காலத்தில் கொண்டு வரப்பட்ட வாரிசு இழப்புக்(Doctrine of Lapse) கொள்கையினால் பாதிக்கப்பட்டவர்கள், மீண்டும் தத்தெடுக்கும் உரிமை கொண்டுவர பாடுபட்டனர். **இந்து வாரிசு தத்தெடுக்கும் சட்டத்தை** மாற்றி அமைத்ததின் விளைவாக, இந்து அரசர்கள் ஒன்றிணைந்து தமது நாட்டின் பண்பாட்டைக் காப்பாற்ற ஆங்கிலேய அரசுக்கு எதிராக ஒன்று திரண்டனர்.

### இந்திய செய்தித்தாள்கள்

இந்தியாவில் அச்சு இயந்திரம் ஐரோப்பியர்களால் அறிமுகம் செய்யப்பட்டதால் செய்தித் தாள்கள் மற்றும் வார இதழ்கள் வெளிவந்தன. பல்வேறு மொழிகளில் செய்தித்தாள் மற்றும் புத்தகங்களும் அச்சிடப்பட்டன. **அமிர்தபஜார் பத்திரிக்கா, தி இந்து, சுதேசமித்திரன், இந்தியா, கேசரி, மராத்தா** போன்ற செய்தித்தாள்கள் நம் நாட்டின் பண்பாட்டை அறிந்துகொள்ள உதவியாக அமைந்தன.

### மேலைநாட்டுக் கல்வி

இந்தியாவில் ஆங்கிலக்கல்வி அறிமுகம் செய்யப்பட்டதால் மேலைநாட்டு கருத்துகளான **ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம், தேசியஉணர்வு** போன்றவை மேலோங்கின. கி.பி (பொ.ஆ.) 1835–ஆம் ஆண்டு **மெக்காலே** (Macaulay) முயற்சியால் ஆங்கிலம் இந்தியாவில் பயிற்று மொழியாக்கப்பட்டது, கி.பி (பொ.ஆ.) 1854 ஆம் ஆண்டு **சார்லஸ் உட்**(Charles wood) அறிக்கையின் படி **கல்கத்தா, பம்பாய், சென்னை** ஆகிய இடங்களில் பல்கலைக்கழகங்கள் தோற்றுவிக்கப்பட்டன. இப்பல்கலைக்கழகங்கள் வாயிலாக, ஆங்கில வழிக்கல்வி இந்தியர்களுக்குப் பயிற்றுவிக்கப்பட்டன. இதன் விளைவாக மேலை நாடுகளுக்குக் கல்வி கற்கவும், பணி நிமித்தமாகவும், வெளிநாடு சென்று இந்தியா திரும்பியவர்கள், தங்கள் நாட்டின் சமூக நிலைமையை அறிந்து மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முற்பட்டனர்.

### கிறித்துவ சமயப் பரப்புக் குழுக்களின் தாக்கம்

இந்தியாவில் கிறித்துவ சமயப்பரப்புக் குழுக்கள் கல்வி நிறுவனங்களை நிறுவி, அதன் மூலம் தங்கள் சமயத்தையும் பண்பாட்டையும் புகுத்தின. இக்குழுக்கள் இந்து சமயத்தில் உள்ள குறைபாடுகள், மூடநம்பிக்கைகள் மற்றும் சமுதாய ஏற்றத்தாழ்வுகளைக் களைய முற்பட்டன.

### அறிவியல் தொழில் நுட்பம்

19–ஆம் நூற்றாண்டில், இந்தியா உலகநாடுகளின் அறிவியல் தொழில்நுட்பத்தோடு இணைந்திருந்தது. இதனால், முற்போக்குச் சிந்தனை, பொருளாதாரம், தொழில்துறை போன்ற நிலைகளில் முன்னேற வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்கியிருந்தது. எ.கா. தொலைத் தொடர்பு, போக்குவரத்துத் துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் உலக நாகரிக மாற்றங்கள் இந்தியாவில் மாற்றத்தை ஏற்படுத்தின.



XII Ethics_Lesson 7.indd 174 05-04-2019 11:14:52

### அயல் நாட்டவரின் பங்களிப்பு

**மாக்ஸ்முல்லர்** (Max Muller) மற்றும் **வில்லியம் ஜோன்ஸ்** (william Jones) போன்றோர் இந்தியாவின் கடந்த கால பண்பாடுகளை **மறு உயிர்ப்பிப்பு** செய்தனர். இந்தியாவின் பாரம்பரிய நூல்களைக் கற்றுணர்ந்து இந்தியப் பண்பாட்டுக்கு முக்கியத்துவம் அளித்தனர். அவர்கள் இலக்கியம், சமயம் சார்ந்த நூல்களை மேற்கத்திய மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்தனர். இஃது உலகளவில் வரவேற்பையும் அங்கீகாரத்தையும் பெற்றுத்தந்தது. படித்த இந்தியர்கள் தங்கள் நாட்டின் பண்பாட்டை அறிந்து கொண்டனர். அவர்கள் மேற்கத்திய நாகரிகத்திற்கு எதிராக இந்திய நாகரிகத்தை மேம்படுத்த விரும்பினர்.

### பிரம்ம சமாஜம்

### இராஜாராம் மோகன்ராய் கி.பி. (பொ.ஆ.) 1772 – 1833



இராஜாராம் மோகன்ராய்

19-ஆம் நூற்றாண்டில் சமூக - சமயச் சீர்திருத்தவாதிகளில் முதன்மையானவர் **இராஜாராம்மோகன்ராய்** ஆவார். இவர் கி.பி. (பொ.ஆ.) 1772 -இல் வங்காளத்தில் பிறந்தார். வைதீக இந்து குடும்பத்தில் பிறந்தவராயிருந்தும் தமது 15-ஆம் வயதில் '**உருவ வழிபாடு மறைநூல்களின் கருத்துக்கு எதிரானது, மாறானது** 'என்று வங்கமொழியில் எழுதி வெளியிட்டு, எல்லாருடைய கவனத்தையும் கவர்ந்தார். உலக சமயங்களைப் பற்றி அறியவும் சமயங்களின் கோட்பாடுகளை அறியவும், சமயங்கள் தோன்றிய இடங்களைக் காணவும், உலக மொழிகளைக் கற்றறிந்தார். இவர் அராபிக், பாரசீகம், சமஸ்கிருதம், வங்கம், ஆங்கிலம், பிரெஞ்சு, இந்தி, இலத்தீன், கிரேக்கம் மற்றும் ஹீப்ரு போன்ற மொழிகளைக் கற்றார். கி.பி. (பொ.ஆ.) 1820-இல் இயேசுவின் போதனைகளைத் திறனாய்வு செய்து இயேசுவின் கொள்கைகள், "**அமைதிக்கும் ஆனந்தத்திற்கும் வழிகாட்டி**" என்ற நூலை வெளியிட்டார். இராஜாராம்மோகன்ராய் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தவை கி.பி. (பொ.ஆ.)1811-ஆம் ஆண்டு நடந்த தன் அண்ணனின் மனைவிக்கு நடந்த சதி என்கின்ற உடன்கட்டை ஏறுதல் ஆகும்.

> உங்களுக்குத் தெரியுமா?
>
> ராம்மோகன்ராய் என்பவருக்கு '**இராஜா**' என்ற பட்டம் அளித்தவர், முகலாய அரசர் இரண்டாம் அக்பர் ஷா (1806-1835) ஆவார். இதன்பின் இவர் **இராஜாராம்மோகன்ராய்** என்று அனைவராலும் அழைக்கப்பட்டார்.

### பிரம்ம சமாஜத்தின் தோற்றம் கி.பி. (பொ.ஆ.) 1828

பிரம்ம சமாஜத்தைத் தோற்றுவித்தவர் இராஜாராம்மோகன்ராய் ஆவார். இவர் இந்து சமயத்தில் காணப்பட்ட பல்வேறு மூடநம்பிக்கைகளை நீக்க பாடுபட்டார். 1815-இல் இவர் கல்கத்தாவில் ஆத்மிய சபாவைத் தோற்றுவித்தார். இதுவே பின்னர் 1828-இல் பிரம்மசமாஜமாக மாறியது. இச்சமாஜம் இந்துசமயத்தில் உள்ள சமூக சீர்கேடுகளையும் கொடுமைகளையும் களைந்து "**ஒரே கடவுள்**" என்ற கொள்கையின் அடிப்படையில் பொது சமயத்தில் நம்பிக்கையை ஏற்படுத்தியது.

### பிரம்ம சமாஜத்தின் கோட்பாடுகள்

'தூய உள்ளமும் தூய வாழ்வும் உய்யும் வழி' என்பதே பிரம்ம சமாஜத்தின் அடிப்படை தத்துவமாகும்.

- இச்சங்கம் **ஒரே கடவுள் சங்கம்** என்று அழைக்கப்பட்டது.
- ஒரே கடவுள் கொள்கையை நிலைநாட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- பல கடவுள், கர்ம விதி, மறுபிறப்பு முதலியவற்றை ஏற்கவில்லை.
- இறைவன் மனித குலத்திற்குப் பொதுவானவர். அதே போன்று சமயமும் மனித குலத்திற்குப் பொதுவானது.



XII Ethics_Lesson 7.indd 175 05-04-2019 11:14:52

- பிரம்மசமாஜக் கோட்பாட்டின்படி, ஆத்ம பலம்பெறும் எவரும் இறைநெறியில் நிற்பர். இந்நெறியில் உயர்வு தாழ்வு இல்லை.
- பிரம்மசமாஜம் எந்தவொரு உருவ வழிபாட்டிலும் நம்பிக்கை கொள்ளவில்லை.
- பிரம்மசமாஜத்தின் உறுப்பினர்கள் "**பிரமோக்கள்**" என்றழைக்கப்பட்டனர். இவர்கள் வழிபட்ட கடவுளுக்கு பெயரோ, சிலையோ கிடையாது.

## பிரம்ம சமாஜத்தின் சமூக பணிகள்

### சதி (உடன்கட்டை ஏறுதல்)

கணவன் இறந்ததும் மனைவி கணவரின் சிதையில் பாய்ந்து இறக்கும் நிகழ்ச்சியே **சதி (அ) உடன்கட்டை ஏறுதல்** என்றழைக்கப்படுகிறது. இந்தியாவில் அன்னியர் படையெடுப்பு காலத்திலிருந்து இப்பழக்கம் இருந்து வந்தது. இதனை இந்தியாவை ஆண்ட ஆப்கானிய சுல்தான்கள், முகலாய மன்னர்கள் மற்றும் போர்ச்சுகீசிய ஆளுநரான அல்புகர்க் ஆகியோர் தடுக்க முற்பட்டனர்.

இராஜாராம்மோகன்ராய்சதியைஎதிர்த்து கி.பி (பொ.ஆ.) 1818-இல் தீவிர சமூக இயக்கத்தைத் தொடங்கி சதி,சாத்திரங்களுக்கும் மறைகளுக்கும் மாறானதென்றும், மனைவி இறந்தால் கணவன் உடன்கட்டை ஏறாமலிருப்பது போல், கணவன் இறந்தால் மனைவி மட்டும் உடன்கட்டை ஏறுவது எவ்வகையில் நியதி என்று கேட்டு பெண் சமத்துவத்திற்காகப் போராடினார், வில்லியம் பெண்டிங் பிரபு இந்தியாவின் தலைமை ஆளுநராகப் பதவி வகித்த போது சதிக்குத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி **கி.பி. (பொ.ஆ.) 1829 ஆம் ஆண்டு டிசம்பர் 4 எண் XVII ன் படி**) சதி தண்டனைக்குரிய குற்றமாகும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், வைதீக இந்துக்கள் இங்கிலாந்து பாராளுமன்றத்தில் முறையிட்டனர். இராஜாராம்மோகன்ராய் சட்டத்தை ஆதரித்தும் செயல்படுத்துமாறும் வாதிட்டார். சட்டம் நிறைவேற்றப்பட்டு, இந்திய சமுதாயத்தில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஆங்கில கிழக்கிந்திய ஆட்சியில் கிறித்துவ சமய பரப்புக் குழுவினர், **வில்லியம்கேரி** தலைமையில் வங்காளத்தில் சதியை ஒழிக்க முயற்சி மேற்கொண்டனர். கி.பி (பொ.ஆ) 1815 மற்றும் கி.பி(பொ.ஆ.) 1818-ஆம் ஆண்டுகளில் வங்காளத்தில் அதிக அளவில் சதி ஒழிப்பு முயற்சிகள் நடைபெற்றன. வில்லியம் கேரி (William Carey) மற்றும் **இராஜாராம்மோகன்ராய்** முயற்சியினால் வங்காள மாகாணத்தில் கி.பி(பொ.ஆ.) 1829-ஆம் ஆண்டில் சதி ஒழிக்கப்பட்டது. கி.பி(பொ.ஆ.) 1861-இல் விக்டோரியா மகாராணி ஆட்சிக்காலத்தில் இந்தியா முழுவதும் இக்கொடிய சமூகப்பழக்கம் தடை செய்யப்பட்டது.

### பெண்சிசுக்கொலை

வரலாற்றாசிரியர் கர்னல் டாட்(Col Tod) கூற்றுப்படி, பெண் குழந்தைகள் பிறந்தவுடன் கொன்று விடும் வழக்கம் இராஜபுத்திர குடும்பத்தில் காணப்பட்டது. இராஜபுத்திரர்கள் குறிப்பிட்ட தங்கள் குலப் பிரிவுக்குள்ளேயே திருமணம் செய்துகொண்டனர். மற்ற பிரிவில் மணம் செய்விக்கும் (அ) செய்து கொள்ளும் பழக்கமில்லை. தங்களது குல மரபு இரத்தத்தைத் தூய்மையுடையதாய் வைத்துக்கொள்ள அதிக பெண் குழந்தைகள் பிறந்தால் கொன்று விடுவார்கள். இது நாளடைவில் பெண் குழந்தை பிறந்தாலே கொன்று விடும் பழக்கமாக மாறியதாகக் கர்னல் டாட் குறிப்பிடுகிறார். 1795-இல் வங்காளத்தில் பெண்சிசு கொலைக்கு தடைச் சட்டம் கொண்டு (**வங்கம் நெறிமுறைப்படுத்தும் சட்டப்படி 1795 XXI-இன் பிரிவு**) வரப்பட்டது.

### பலதார மணம்

இந்தியச் சமுதாயத்தில் ஓர் ஆண் பல பெண்களை மணத்தல் பரவலாகக் காணப்பட்டது. இம்முறையை இராஜாராம்மோகன்ராய் கடுமையாகச் சாடினார். வைதீக இந்துக்கள் பலதார



XII Ethics_Lesson 7.indd 176 05-04-2019 11:14:52

மணத்திற்கு ஆதரவளித்து அவரிடம் வாதிட்டனர். ஒருவயிற்றில் பிறக்கும் ஆணுக்கும் பெண்ணுக்கும் சொத்து, வாழ்வுமுறை, பண்பாடு முதலியவற்றில் சமஉரிமை உண்டு என்பதனை வலியுறுத்தி இவற்றிற்குச் சான்றாக, வேத நூல்களை மேற்கோள் காட்டினார். எனினும், முழுமையான சட்டம் வருவதற்கு நாம் பலகாலம் காத்திருக்கவேண்டியிருந்தது.

## விதவை மணம், குழந்தைத் திருமணம்

மனைவி இறந்தால் கணவனின் மறுதாரத்தை ஏற்றுக்கொள்ளும் சமுதாயம், கணவன் இறந்தால் மனைவி மறுமணம் செய்து கொள்வதை ஏன் ஏற்கக்கூடாது என்று இராஜாராம்மோகன்ராய் வாதிட்டார். எனவே, பெண்கள் மறுமணம் செய்து கொள்வதை ஆதரித்தார். இராஜாராம்மோகன்ராய் இறப்பிற்குப் பின் குழந்தைத் திருமணத்தால் பாதிக்கப்பட்டு கணவனை இழந்த **இளம்பெண்கள் கைம்மை நோன்பால்** பாதிக்கப்பட்டவர்களுக்கு **1856–இல் விதவை மறுமணச்சட்டம்** (widow Remarriage act 1856) கொண்டுவரப்பட்டது. இச்சட்டப்படி, கணவனை இழந்த பெண்கள் மறுமணம் செய்வதற்கும் சுபநிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கும் உரிமைப் பெற்றனர்.

## பிரம்ம சமாஜத்தின் சமயப்பணிகள்

இச்சமாஜத்தைச் சார்ந்தோர் ஒருகடவுள் வழிபாட்டைத்தான் பின்பற்றவேண்டும். இறைவனை இரு கைகளால் மட்டுமன்றி இதயத்தாலும் வழிபடவேண்டும். ஒன்றேகுலம் ஒருவனே தேவன் என்றும், மக்கள் அனைவரையும் சகோதர சகோதரியாக வாழவேண்டுமென்று இவர்கள் வலியுறுத்தினார்கள். இந்து சமயத்தைவிட்டு விலகாமல் அதேநேரத்தில் மேலைநாட்டில் தோன்றிய நல்ல கருத்துகளையும் ஏற்றுக்கொண்டு, பரந்த உணர்வுடன் செயல்பட பிரம்ம சமாஜம் விரும்பியது. இச்சமாஜம் பயனற்ற சமுதாய பழக்கவழக்கங்களைச் சட்டத்திற்குப் புறம்பானது என்று சாடியது.

பிரம்ம சமாஜம் எல்லா மதத்திலும் உள்ள மூடக்கருத்துகளை வெறுத்தாலும் மதங்களையோ, கடவுளையோ, வெறுக்கவோ மறுக்கவோ இல்லை. எல்லா மதத்தையும் இராஜாராம்மோகன்ராய் ஊன்றிக் கற்று உண்மையைத் தெளிந்தார். இவர் **இயேசுநாதரின் கட்டளை** என்ற நூலில் ஏசுநாதரின் ஒழுக்கங்களையும், அன்பான வாழ்க்கையையும், அனைவருக்கும் ஏற்ற கொள்கைகளையும்பாராட்டுகிறார். இஸ்லாமிய மதத்திலுள்ள ஒரே கடவுள் கொள்கையைப் போற்றுகிறார். இந்து மதத்திலுள்ள உருவ வழிபாட்டு முறைகளையும் கர்மவிதி, மறுபிறப்பு, உயர்வு, தாழ்வு ஆகியவற்றை வெறுக்கிறார். ஆனால் அதனிடமுள்ள ஆத்மசாந்தியைப் போற்றுகிறார்.

## இராஜாராம் மோகன்ராய்க்குப்பின் பிரம்ம சமாஜத்தின் செயல்பாடுகள்

இராஜாராம்மோகன்ராய்க்குப்பின் பிரம்மசமாஜம் சமூகத்திற்குப் பெரும் தொண்டாற்றியது. விதவைத் திருமணத்தை விரிவுபடுத்த தீவிர இயக்கத்தைத் தோற்றுவித்தவர் **ஈஸ்வரசந்திர வித்யாசாகர்** ஆவார். பல இலட்சகணக்கான விதவைகள் மறுமணத்திற்கு ஆதரவு அளித்தார். இதன் பயனாக **கி.பி. (பொ.ஆ.) 1856–இல் விதவைகள் மறுமணச் சட்டம்** கொண்டு வரப்பட்டது. கேசவசந்திரசென் என்பவர் முயற்சியால் கி.பி. (பொ.ஆ.) 1872–இல் சிறப்பு திருமண சட்டம் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் குழந்தைமணம், பலதாரமணம் ஆகியவைத் தண்டனைக்குரிய குற்றம் என்றது. கி.பி. (பொ.ஆ.) 1901–இல் பரோடா அரசு குழந்தைத் திருமணத் தடுப்புச் சட்டத்தை கொண்டுவந்தது. கி.பி (பொ.ஆ.) 1930–இல் இந்திய அரசால் **சாரதாச்சட்டம்** (Saradha Act **1930**) கொண்டுவரப்பட்டு பெண்ணின் திருமண வயது 14 –ஆக உயர்த்தப்பட்டது. **பண்டிதகார்வே** என்பவர் பூனாவில் விதவை பெண்களுக்கென இல்லத்தை நிறுவினார். பெண்களின் உரிமையைப் பாதுகாக்க, படிப்படியாகப் பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

www.tntextbook.org

## இராஜாராம் மோகன்ராய் – மதிப்பீடு

இவர் சமுதாயச் சீர்திருத்தவாதி மட்டுமல்லாமல் சிறந்த நாட்டுப்பற்று உடையவராகவும் திகழ்ந்தார். இவரை **இந்து சமயத்தைச் சீர்திருத்திய செம்மல், இந்திய மறுமலர்ச்சியின் தந்தை, இந்தியாவின் விடிவெள்ளி, இந்திய தேசியத்தின் முன்னோடி, இந்தியாவின் புத்துலகச்சிற்பி** என்றும் போற்றுகின்றனர்.மக்களிடையே அரசியல் விழிப்புணர்வைத் தோற்றுவிக்க முயன்றார். இந்தியருக்குத் தாய்மொழிப்பற்றும் தன்னம்பிக்கையும் வளர **சம்வாத்கௌமுகி** (கி.பி(பொ.ஆ.) 1821) என்னும் வங்கமொழி வாரப்பத்திரிகையொன்றைத் தொடங்கினார். பாரசீக வாரப்பத்திரிகையான(Mirat-ul-Akbar) மிராத்-உல்-அக்பர் என்ற பத்திரிகையைத் தொடங்கினார். இவர் கி.பி (பொ.ஆ.) 1833–ஆம் ஆண்டு செப்டம்பர் 27–ஆம் நாள் பிரிஸ்டலில் மறைந்தார். "இவர் உலகிலேயே நவீன முறையில் முதன்முதலாகச் சமயஒற்றுமை நோக்கு உணர்ச்சியினை உண்டாக்கப் பாடுபட்டார்" என்று வரலாற்றாசிரியர் **சர்மோனியர் வில்லியம்** குறிப்பிடுகிறார்.

உலக மனிதாபிமானத்தை ஆன்மிகம், அரசியல் ஆகியவற்றுடன் இணைத்து "பரந்த மனித மதத்தைக் கண்டவர் இராஜராம்மோகன்ராய்" என்று வரலாற்றாசிரியர் **சீல்** குறிப்பிடுகிறார். எனவே மறுமலர்ச்சியின் தந்தையாகிய இராஜராம்மோகன்ராய் இந்திய வரலாற்றில் 19–ஆம் நூற்றாண்டில் சமூகம், சமயம், அரசியல் ஆகிய துறைகளில் சீர்திருத்தம் மலரக் காரணமாகத் திகழ்ந்தார்.

## ஆரிய சமாஜம் கி.பி. (பொ.ஆ.) 1875

### ஆரிய சமாஜம் –விளக்கம்

'**ஆரியா**' என்ற சமஸ்கிருத சொல்லின் பொருள், '**அறிவார்ந்தோர் அமைப்பு**', (Noble Society) மற்றும் 'கடவுளின் குழந்தை' (Arya means son of God) என்பதாகும். அனைத்து ஆன்மாக்களும் கடவுளின் குழந்தைகள் என்றும், அவை **கடவுளுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும்** என்பதும் தயானந்தரின் கருத்துகளாகும்.



தயானந்த சரஸ்வதி

ஆரியசமாஜம், **தயானந்த சரஸ்வதியால்** கி.பி(பொ.ஆ)1875-இல் தோற்றுவிக்கப்பட்டது. இவருடைய இயற்பெயர் **மூல்சங்கர்** (Mulsankar). இவர் கத்தியவாரில் உள்ள மூர்வி என்னுமிடத்தில் கி.பி(பொ.ஆ.) 1824–இல் பிறந்தார். மதுராவிற்குச் சென்று அங்கு சுவாமி விரஜானந்தரின் சீடரானார். வேத நூல்களை ஆழ்ந்து படித்தார். கி.பி (பொ.ஆ.) 1875–இல் பம்பாயில் ஆரிய சமாஜத்தைத் தொடங்கினார். பின் ஆரிய சமாஜத்தின் தலைமையிடம் லாகூருக்கு மாற்றப்பட்டது. இவர் வேதநூல்களை மொழிபெயர்த்தார். அவற்றைச் **சத்தியார்த்தபிரகாஷ்** இந்தியிலும், வேத பாஷ்யங்கள், யஜுர் வேதம் போன்றவற்றைச் சமஸ்கிருதத்திலும் மொழிபெயர்த்தார். வேதங்களின் பகுதிகளான பிராமணங்கள், சம்ஹிதைகள் மற்றும் உபவேதங்களில் காணப்படும் கருத்துகளே ஆரிய சமாஜத்தின் கருவூலங்களாகும். மேற்கத்திய அறிவாலும், பண்பாட்டாலும் சிறிதும் மாற்றம் பெறாதவர். "**வேதங்களை நோக்கிச் செல்**" (Go Back to Vedas) என்பதைத் தாரக மந்திரமாகக் கொண்டவர். அவர், தம் வாழ்நாளை வேதசமயத்தைப் பரப்புவதிலும் இந்து சமய, சமுதாயப் பணிகள் செய்வதிலும் ஈடுபட்டார்.

### ஆரிய சமாஜத்தின் கோட்பாடுகள்:

- அனைவரும் கடவுளின் குழந்தைகள் என்பதால் அவர்களிடம் சாதி, சமய, இனவேறுபாடுகள் அர்த்தமற்றதாகும்.
- தியானம், தன்னலமற்ற நற்செயல்கள் மூலமாகவும் கடவுளின் அருளைப் பெறமுடியும்.
- இறைவன் எங்கும் நிறைந்தவன்.அவனுக்கு முதலும் இல்லை; முடிவுமில்லை.



XII Ethics_Lesson 7.indd 178 05-04-2019 11:14:53

- இறைவன், ஆத்மா, பிரகிருதி ஆகிய மூன்றும் ஒன்றுக்கொன்று தொடர்புடையன.
- ஆன்மா அழியாது, ஆன்மா பிறப்பதும் இல்லை, இறப்பதும் இல்லை, கடவுளைப் போன்றே ஆன்மாவும் நிலையானது.
- ஆன்மாவின் பயணம் முடிவற்றது. இது பல்வேறு பிறப்பு மற்றும் இறப்புகளின் மூலம் மேன்மையடைகிறது.
- தீபம் ஏற்றுதல் என்பது, அதன் ஒளியின் எதிர்காலத்தில் நற்செயல்களைச் செய்வதற்குத் திட்டமிடலாகும்.
- இறைவனிடம் தமது குறைகளை முறையிட எந்தவொரு பிரதிநிதியும் தேவையில்லை.
- உலகிலும், அண்டக்கோள்களிலும் எல்லாப்படைப்புகளிலும் எங்கும் காணப்படும் கடவுளைப் **பரபிரம்மம்** என்கிறோம்.
- மனம்,வாக்கு,உடல்ஆகியவற்றில்தூய்மை வேண்டும். நேர்வழியில் செல்வத்தை ஈட்டி நேர்மையோடு வாழ்பவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், நெறி தவறாத ஆட்சியாளர்களும், தூயவாழ்வு நடத்துபவர்களும் மண்ணில் வாழும் விண்ணவர்கள் ஆவர். இவர்கள் இறைவனோடு நேரடியாக ஐக்கியமானவர்கள், இவர்கள் வாழும் வழிகளே அறவழிகளாகும்.
- ஆணும் பெண்ணும் சரிநிகர் சமம். ஆன்மாவிற்கு பாலின வேறுபாடுகள் கிடையாது.
- அறவழியில் வாழ்பவர்கள் துதித்தல், தியானித்தல், யோகத்தில் மூழ்குதல் ஆகிய நற்செயல்களால் இறைவனை அடைவார்கள். இதன் முடிவில் தன்னில் இறைவனையும், இறைவனில் தன்னையும் காணலாம்.
- புனிதப்பயணம், கோயில்வழிபாடு, விழாக்களைக் கொண்டாடுதல் முதலியவை தேவையற்றவையென்றாலும் மனப்பக்குவம்பெற இவையாவும் துணை நிற்கின்றன.
- ஒருவன்மறுபிறப்பு,கர்மவிதிஆகியவற்றில் நம்பிக்கை கொள்ளவேண்டும்.
- சொர்க்கமும் நரகமும் இப்புவியில்தான் உள்ளன. நாம் செய்யும் செயல்களே அவற்றைத் தீர்மானிக்கின்றன என்பது ஆரிய சமாஜத்தின் நம்பிக்கையாகும்.

### ஆரிய சமாஜத்தின் சமுதாயப் பணிகள்

- **"மறை செழித்த நாடே எம்மகேஸ்வரன் வீடு"** இதனை வணங்குதலே **இறைவனை வணங்குதல்** என்று தயானந்தர் கூறினார். **'இந்தியா இந்தியருக்கே'** (India for Indians) என்று கூறிச் சமுதாய விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.
- பல நகரங்களில் ஆசிரமங்கள் நிறுவப்பட்டு ஆண், பெண், குழந்தைகள் பேணிப் பாதுகாக்கப்பட்டுக் கல்வியறிவு அளிக்கப்படுகிறது.
- ஆரியசமாஜம் தீண்டாமை, சாதிப்பாகுபாடுகள், குழந்தைத்திருமணம் போன்றவற்றை எதிர்த்தது.
- ஆண்களையும், பெண்களையும் சமுதாயத்தின் இரு கண்களாகவே ஆரிய சமாஜம் கருதியது.
- விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்கு ஆதரவற்ற இல்லங்கள் பல அமைக்கப்பட்டுள்ளன. இவர்களுக்குத் தொழிற்கல்வி அளித்து வாழ்விற்குத் தேவையான வருமானத்தைத் தாமே ஈட்டிக்கொள்ள வழிவகுக்கின்றன.
- தொண்டர்படையின் மூலம் குடிநீர்வசதி, மருத்துவ வசதி, யோகா போன்றவற்றை வழங்குதல்.
- சமுதாயத்தில் மிகவும் தீயப்பழக்கமாகக் குழந்தைத் திருமணம் இருந்தது. இதனால் எண்ணற்ற பெண்கள் இளம்வயதிலேயே விதவையாகும் நிலை ஏற்பட்டது. இந்த நடைமுறையை இவ்வியக்கம் முற்றிலுமாக எதிர்த்தது.
- இந்து சமுதாயத்தில் காணப்பட்ட பலதாரமணத்தை ஆரியசமாஜம் தொடர்ந்து எதிர்த்துள்ளது.



XII Ethics_Lesson 7.indd 179 05-04-2019 11:14:53

- ஆரியசமாஜம் தோன்றுவதற்குமுன் பிற சமயங்களுக்குச் சென்ற எவரும், மீண்டும் இந்து சமயக் கோட்பாடுகளை ஏற்று இந்துவாக மாறமுடியாத நிலை இருந்தது. **சுத்தி இயக்கத்தின்** (Sudhi Movement) மூலம் பிற சமயத்தில் உள்ள இந்துக்களைத் தன் சமயத்தில் மீண்டும் இணைத்துக்கொண்டது.

### ஆரிய சமாஜத்தின் செயல்பாடுகள்

இந்து சமயத்தில் நிலவி வந்த காலத்திற்குப் பொருந்தாதச் சடங்குகளைக் களையவும், வேதசமயத்திற்குப் புத்துயிர் அளிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வேதகாலச் சமூகத்தில் மிகவும் நம்பத்தகுந்த செய்திகள் உள்ளடங்கி இருப்பதால், அவற்றை நூற்றுக்கணக்கான போதகர்களும்,துறவிகளும் நாடு முழுமைக்கும் பரப்ப ஏற்பாடுகள் செய்யப்பட்டன. சமஸ்கிருதம் மற்றும் இந்தி மொழிகளில் மக்களுக்குப் புரியும்வகையில் கருத்துகள் எடுத்துரைக்கப்பட்டன.

### கல்வி நிறுவனங்களை உருவாக்குதல்

இந்தியாவில் கி.பி. (பொ.ஆ.) 1886-ஆம் ஆண்டு லாகூரில் ஹன்ஸ்ராஜ் தலைமையில் தயானந்த ஆங்கிலோ வேதப்பள்ளிகள் தொடங்கப்பட்டன. இச்சமாஜம், தயானந்த ஆங்கிலோ வேதப்பள்ளிகளையும் (DAV, Dayananda Anglo Vedic School) கல்லூரிகளையும் நடத்தி வருகின்றது. பள்ளி, கல்லூரிகளில் மாணவ, மாணவிகள் தனித்தனியாகக் கல்வி பயிலவும், இருபாலரும் சேர்ந்து கல்வி பயில்வதற்கென, கல்வி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களில் ஆங்கிலம் முதன்மை மொழியாகவும் இந்தி, சமஸ்கிருதம் இரண்டாம் மொழியாகவும் கற்பிக்கப்படுகின்றன. இதனை, தயானந்த ஆங்கிலோ வேதக்கல்வி நிறுவனங்களின் மேற்பார்வை அமைப்பு (DAVCMC, Dayananda Anglo Vedic College managing Committee) நிர்வகித்து வருகிறது. இது ஓர் அரசுசாரா நிறுவனமாகும். **பிஜி, நேபாளம், மொரீசியஸ், சிங்கப்பூர்** போன்ற நாடுகளிலும் இந்த அமைப்பு செயல்பட்டு வருகின்றது.

### சுவாமி தயானந்த சரஸ்வதி – மதிப்பீடு

சுவாமி தயானந்தர் சிறந்த சமூக சீர்திருத்தவாதிகளுள் ஒருவராவார். இவர் கடந்த காலப்பண்பாட்டிற்கும் நிகழ்காலப்பண்பாட்டிற்கும் பாலமாகத் திகழ்ந்தார். வேதசமயம், நாகரிகம், பண்பாடு இவை மூன்றையும் உலகிலேயே சிறந்தவையாக இவர் கருதினார். இவர் சுயராஜ்ஜியம் என்று கூறி விடுதலை உணர்வை மக்களிடையே தோற்றுவித்தார். இக்கருத்து பிற்காலத்தில் '**சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை**' என்ற திலகரின் கூற்றுக்கு அடிப்படையாக அமைந்தது.

**உங்களுக்குத் தெரியுமா?**

"**சத்யமேவ ஜெயதே**" என்ற சமஸ்கிருத சொல்லின் பொருள் **வாய்மையே வெல்லும்** என்பதாகும். இவ்வார்த்தை **முண்டக உபநிடதத்திலிருந்து** எடுக்கப்பட்டுள்ளது.

**வாய்மையே வெல்லும்** என்னும் தயானந்தரின் தாரகமந்திரம் அகிம்சை முறையில் போராடிச் சுதந்திரம் பெற இந்தியரை ஆயத்தப்படுத்தியது. ஆரிய சமாஜத்தை நிறுவிய 8 ஆண்டுகளிலேயே இவர் இயற்கை எய்தினார். பின் ஆரியசமாஜம் இருபிரிவுகளாகப் பிரிந்தது. இவர் இந்துசமயத்தின் **மார்ட்டின் லூதர்** என்று அழைக்கப்பட்டார்.இவரை 19-ஆம் நூற்றாண்டில் தோன்றிய **இந்திய மறுமலர்ச்சியின் தந்தையென** இரவீந்திரநாத் தாகூர் போற்றுகிறார்.

### இராமகிருஷ்ண பரமஹம்சர் கி.பி. (பொ.ஆ.) 1836 –1886



இராமகிருஷ்ண பரமஹம்சர்

இராமகிருஷ்ணர் கி.பி. (பொ.ஆ.) 1836-ஆம் ஆண்டு பிப்ரவரி 18-ஆம் நாள் கல்கத்தாவில் உள்ள ஹுக்ளி நதிக்கரையில் **கமர்புக்கூர்** என்ற இடத்தில் பிறந்தார். இவரது இயற்பெயர் **கடாதரசட்டர்ஜி** ஆகும். இவர் தக்னேஷ்வரர்



XII Ethics_Lesson 7.indd 180 05-04-2019 11:14:53

காளிகோயில் பூசாரியாகப் பணிபுரிந்தார். இக்கோயில் மிகப்பெரிய செல்வந்தரான ராணி ராஸ்மோனி என்பவரால் கட்டப்பட்டது. துணைவியார் சாரதாதேவி அம்மையார் இவருடைய சமயப்பணியில் உற்றத்துணையாக இருந்தார். இவர் தயானந்த சரஸ்வதியின் சமகாலத்தவர் ஆவார்.

## இராமகிருஷ்ணரின் ஆன்மிக கருத்துகள்

இறையனுபவம் அற்ற தத்துவ உரையாடல்களைத் தவிர்த்தார். இறைவனை அடைய வேண்டுமென்ற ஏக்கம், இறைவனிடத்தில் அன்பு இவற்றைப் பெறவேண்டும் என்பதையும், அனைத்துத் திருவுருவச் சிலைகளிலும் ஆண்டவன் நிறைந்திருப்பதைக் காணலாம் என்பதும் இவருடைய கருத்தாகும். இறைவனை அடைய உருவ வழிபாடு ஒரு வழி, அதுவே முடிந்த முடிவு அன்று என்றும் கூறினார். இவர் எல்லாச் சமயங்களின் சாரத்தையும் அறிந்து, உண்மைகளை உணர்ந்து, வாழ்ந்து காட்டிய ஞானி ஆவார். இனிய நடையில் கதைகள், நீதிக் கதைகள், அன்றாட நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு, சமய தத்துவக் கருத்துகளை அனைவருக்கும் புரியும் வண்ணம் போதித்தார். நாம் தாகத்தைத் தீர்க்கும் தண்ணீரை நீர், பாணி, வாட்டர் போன்ற பல்வேறு வார்த்தைகளால் பல்வேறு மொழிகளில் கூறினாலும் அவை ஒரே பொருளைக் குறிப்பதுபோல், இறைவன் அரி, அல்லா, ஏசு, காளி, மாதா போன்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகின்றார் என்றுகூறி, உலக பொதுச் சமயத்திற்கும், உலக ஒற்றுமைக்கும் வழிவகுத்தார். எனவே இராமகிருஷ்ணரை **'இறைவனும் மனிதனும் கலந்த வியத்தகு கலவை'** என விவேகானந்தர் குறிப்பிடுகின்றார் .

## சுவாமி விவேகானந்தர் கி.பி. (பொ.ஆ) 1863 – 1902

சுவாமி விவேகானந்தர் வேதாந்தத் தத்துவத்தின் செல்வாக்குமிக்க ஆன்மிகத் தலைவர்களுள் குறிப்பிடத்தக்கவராவார். இந்திய மக்களுக்கு ஆன்மிக ஒளியைப் புகட்டுவதில் பெரும்பங்கு வகித்தார், வேதாந்தத் தத்துவங்களை மேற்கத்திய நாடுமுழுவதும் பரப்பி, ஏழை எளியோருக்கு சேவை செய்யவேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருந்தார். விவேகானந்தர் கல்கத்தாவில் கி.பி. (பொ.ஆ.) 1863–இல் விஸ்வநாத் தத்தா-புவனேஸ்வரிதேவிக்கு மகனாகப் பிறந்தார்.



சுவாமி விவேகானந்தர்

**உங்களுக்குத் தெரியுமா?**

இராஜயோகம், கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் போன்றவற்றின் மூலம் மோட்சத்தை அடையலாம் என்று தமது **யோகநெறிகள்** என்ற நூலில் விவேகானந்தர் கூறியுள்ளார்.

இவரது இயற்பெயர் **நரேந்திரநாத் தத்தா**, இவர் துறவியாக மாறியபோது தமது இயற்பெயரை **விவேகானந்தர்** என்று மாற்றிக்கொண்டார்.

இவர் இளம்வயதிலேயே இசைக்கருவி வாசிப்பது, தியானம் செய்வது போன்ற பயிற்சிகளை மேற்கொண்டார். சமூகத்தில் நிலவிய சாதி, சமய பாகுபாடு மற்றும் மூடப்பழக்கங்கள் பற்றிப் பல கேள்விகள் மற்றும் சந்தேகங்களை எழுப்பினார். இவர் மேற்கத்திய தத்துவங்கள், அளவையியல் (Logic) மற்றும் ஐரோப்பிய நாடுகளின் வரலாறுகளைப் படித்தார். கேசவசந்திரசென் தலைமையில் இயங்கிய பிரம்மசமாஜத்தில் உறுப்பினரானார். இராமகிருஷ்ணரை நேரில் சந்தித்து ஆசிப்பெற்றுத் தமது குருவாக ஏற்றுக்கொண்டார். அத்வைத வேதாந்தத்தில் ஐந்து ஆண்டுகள் பயிற்சி மேற்கொண்டார். இராமகிருஷ்ணர் இறப்பிற்குப்பின், அவர் பெயரில் மடம் மற்றும் தொண்டு நிறுவனங்களைத் தொடங்கினார். விவேகானந்தர் ஆன்மிகப்



XII Ethics_Lesson 7.indd 181 05-04-2019 11:14:53

பயணம் மேற்கொண்டு வாரணாசி, அயோத்தி, ஆக்ரா, பிருந்தாவன் மற்றும் ஆழ்வார்கள் வாழ்ந்த இடங்களைத் தரிசித்தார். தம் சுற்றுப் பயணத்தின்போது அரண்மனை, குடிசைகள் போன்ற இடங்களில் தங்கினார். அனைத்துச் சமூக மக்களையும் சந்தித்தார். சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வு மற்றும் சாதிய வேறுபாடுகளைக் கண்டித்தார். இந்தியாவை உயிருள்ள ஒரு தேசமாக உருவாக்க வேண்டுமென்றால், தேசிய புத்துயிர்ப்பு அவசியம் என்பதை உணர்ந்தார். 1892–ஆம் ஆண்டு கன்னியாகுமரிக்குச் சென்று பாறையின் மீது அமர்ந்து தியானத்தைத் தொடங்கினார். அவர் அமர்ந்து தியானம் செய்த பாறையே விவேகானந்தர் பாறை என்ற பெயரில் இன்றும் உள்ளது.

## விவேகானந்தரும் சிகாகோ உலக சமய மாநாடும் (World Religious Conference)



விவேகானந்தரும் சிகாகோ உலக சமய மாநாடும்

1893–ஆம் ஆண்டு செப்டம்பர் 11–ஆம் நாள் அமெரிக்காவின் சிகாகோ நகரில் உலக சமய மாநாடு மதகுரு **கிப்பன்ஸ்** தலைமையில் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கான அமெரிக்கர்களும், ஆன்மிக குருக்களும், பல சமயங்களைச் சேர்ந்தவர்களும் கலந்துகொண்டனர். அப்போது எல்லாரும் வியக்கும் வகையில், சாதி சமயங்களைத் துறந்து **எனது அருமை அமெரிக்க சகோதர சகோதரிகளே** என்று தமது பேச்சைத் தொடங்கினார். உலகின் மிக முக்கியமான சொற்பொழிவுகளில் ஒன்றாக இப்போதும் அது குறிப்பிடப்படுகிறது.

**உங்களுக்குத் தெரியுமா?**

கி.பி. (பொ.ஆ.) 1892–இல் சுவாமி விவேகானந்தரும் மன்னர் பாஸ்கரசேதுபதியும் மதுரையில் சந்தித்தது வரலாற்றுச் சிறப்புமிக்கதாகும். இந்தச் சந்திப்புதான், சுவாமி விவேகானந்தர் அமெரிக்க உலக சமய மாநாட்டிற்குச் செல்ல வழிகோலியது எனலாம்.

அனைத்து மக்களின் அன்னையின் பெயரால் நன்றி கூறுகிறேன் என்று கூறி அவரது உரையில் சமய ஒற்றுமை, ஆன்மிகம் போன்றவைகளை எடுத்துரைத்தார்.

**உலகில் எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம்**
**இறுதியில் கடலில் சென்று**
**சங்கமாம் பான்மையினைப் போன்றுலகோர்**
**பின்பற்றும் தன்மை யாலே**
**துங்கமிகு நெறி பலவாய் நேராயும்**
**வளைவாயும் தோன்றினாலும்,**
**அங்கு அவை தாம் எம்பெரும்! ஈற்றில் உனை**
**அடைகின்ற ஆறே யன்றோ!**

என்று மாநாட்டில் கூறி உலக சமய ஒற்றுமையைத் தெளிவுபடுத்தினார்.

## இராமகிருஷ்ண இயக்கம் கி.பி. (பொ.ஆ.) 1897 (Ramakrisha mission)

விவேகானந்தர் 1896–இல் அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில் **வேதாந்த சங்கம்** (Vedanta Society) என்ற சமய மன்றத்தைத்தொடங்கினார்.பின்கி.பி.(பொ.ஆ.) 1897–இல் வங்காளத்தில் உள்ள பேலூரில் இராமகிருஷ்ண இயக்கம் தொடங்கப்பட்டது. இந்தியப் பண்பாட்டை உலகெங்கும் பரப்புவதே இதன் முக்கிய நோக்கமாகும். ஏழ்மை மற்றும் மூடநம்பிக்கைகளை அறவே நீக்கப் பாடுபடுவது இவ்வியக்கத்தின் முக்கிய கொள்கைகளாக இருந்தன. இந்த இயக்கம் ஆன்மிக வளர்ச்சியில் நாட்டம் கொண்டோருக்குப் பயிற்சி அளித்து



XII Ethics_Lesson 7.indd 182 05-04-2019 11:14:53

அவர்களைக் கல்வி, சமய, சமுதாயப் பணிகளைச் செய்யவும் வேதாந்தக் கருத்துகளைப் பரப்பவும் பாடுபட்டு வருகிறது.

### இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்களும் குறிக்கோள்களும்:

- **துறவறம் மற்றும் மனித சேவையே** முக்கிய நோக்கமாகும்.
- வேதாந்தக் கொள்கைகள் அடங்கிய கல்வியை அளித்தல்.
- கல்வியோடு கலைகள், அறிவியல், தொழில்கள் பிறவற்றையும் மேம்பாடு அடையச்செய்தல்.
- பொதுமக்களுக்கு கல்வியைப் புகட்டும் பணியினைத் தொடர்ந்து செய்தல்
- கிராம முன்னேற்றத்திற்குப் பாடுபடுதல்.
- இவ்வியக்கம் இனம், மொழி, நாடு, சமய வேறுபாடின்றி பூகம்பம் வெள்ளம், தீ, தொற்றுநோய் போன்றவை ஏற்படும் காலங்களில் மக்களுக்குச் சேவையாற்றுதல்.

### இராமகிருஷ்ண இயக்கத்தின் சமூகத் தொண்டுகள்

- கல்வி, உடல்நலம், கிராமப்புற வளர்ச்சி, மலைவாழ்மக்கள் முன்னேற்றம், இளைஞர் நலன் போன்றவற்றிற்காகப் பாடுபட்டுவருகிறது.
- இந்தியா முழுவதும் மருத்துவமனைகள், அறக்கட்டளைகள் நிறுவி, மக்கள் நலன் காக்கும் பணிகள், தாய்சேய் மருத்துவமனைகள், முதியோர், ஆதரவற்றோர் இல்லங்கள், செவிலியர் பயிற்சிப் பள்ளிகள் போன்றவற்றின் மூலம் சேவை செய்து வருகின்றன.
- இவ்வியக்கம் தம் நோக்கங்களை நிறைவேற்றி, எவற்றை விரும்பத்தக்கதெனச் சிந்திக்கின்றதோ அதற்குரிய சஞ்சிகைகளை, பருவ இதழ்களை, நூல்களை, ஆண்டு பிரசுரங்களை அச்சடித்துப் பதிப்பித்து விற்றல் அல்லது **இலவசமாக** வழங்கல் போன்ற பணிகளையும் செய்து வருகிறது.
- மேற்குவங்காளத்திலுள்ள சுந்தரவனப்பகுதியில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி, மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் தோன்றுவதற்கு முக்கிய பங்கு வகித்தது.
- இந்தியா முழுவதும் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள், கல்லூரிகள், தொழிற்கல்வி பயிற்சி மையங்களை நிறுவிக் கல்வி வளர்ச்சிக்கு இன்றும் பாடுபட்டு வருகிறது. இவ்வாறாக, இராமகிருஷ்ண இயக்கம் உலகெங்கும் உயர்ந்த பணிகளை ஆற்றிவருகிறது.

### விவேகானந்தரின் பொன்மொழிகள்:

- உண்மையே தூய்மையானது, உண்மையே அறிவு, உண்மையே பலம் என்று விவேகானந்தர் இளைஞர்களுக்குப் போதித்தார்.
- பெரும் சாதனை செய்வதற்கு மூன்று நிலைகளைக் கடந்தாக வேண்டும் அவை. ஏளனம், எதிர்ப்பு, அகங்காரம் என்பன.
- உயிரேபோகும் நிலை வந்தாலும் தைரியத்தை விடாதே, நீ சாதிக்கப் பிறந்தவன். துணிந்து நில், எதையும் வெல்.
- உண்மைக்காக எதையும் துறக்கலாம்; ஆனால் எதற்காகவும் உண்மையைத் துறக்கலாகாது.
- பொய்சொல்லித் தப்பிக்க நினைக்காதே, உண்மையைச் சொல்லி மாட்டிக்கொள். ஏனென்றால், பொய் வாழவிடாது, உண்மை சாகவிடாது.
- வீரர்களே, கனவுகளிலிருந்து விழித்தெழுங்கள்; தளைகளிலிருந்து விடுபடுங்கள்.
- உடல் பலவீனத்தையோ, மன பலவீனத்தையோ உண்டாக்கும் எதையும் அணுகக் கூடாது.
- என்னிடம் வலிமைமிக்க நூறு இளைஞர்களைத் தாருங்கள். நான் வளமான பாரதத்தை உருவாக்கிக் காட்டுகிறேன்.

- **விழுமின், எழுமின் குறிக்கோளை அடையும்வரை நில்லாது உழைமின்,** பிறரது பாராட்டுக்கும் பழிக்கும் செவி சாய்த்தால் மகத்தான காரியம் எதையும் செய்ய முடியாது என்று கூறினார்.

## பிரம்மஞான சபை (Theosophical Society) கி.பி. (பொ.ஆ.) 1875

பிரம்மஞான சபை ஹெலினா பெட்ரோவ்னா **பிளாவாட்ஸ்கி** அம்மையாரும், **கர்னல் ஆல்காட்** என்பவரும் 1875-இல் அமெரிக்காவில் உள்ள நியூயார்க் நகரில் நிறுவினர். இச்சபை **தியோஸ்சோபி இயக்கம்** என்றும் அழைக்கப்படுகின்றது. இச்சொல் கிரேக்க வார்த்தைகளான **தியோஸ், சோபாஸ்** என்ற இரு சொற்களின் தொகுப்பேயாகும். 'தியோஸ்' என்றால் 'கடவுள்' என்றும் 'சோபாஸ்' என்றால் 'அறிவு' என்றும் பொருள்படும். எனவே, கடவுள் பக்தி மற்றும் உண்மை அறிவைப் பெறுவதற்காகப் பிரம்மஞானசபை நிறுவப்பட்டது. 1882-இல் இதன் தலைமையிடம் சென்னை அடையாறில் தொடங்கப்பட்டது. இவ்வியக்கத்தின் வெற்றிக்கு அன்னிபெசன்ட் அம்மையார் பெரிதும் உதவினார். பின்னர் இவ்வியக்கத்திற்குத் தலைமைப் பொறுப்பையும் ஏற்றார்.

அன்னிபெசன்ட் கி. பி. (பொ. ஆ.) 1847 – ஆம் ஆண்டு அயர்லாந்தில் பிறந்தார். இவர் 1897 – ஆம் ஆண்டு இந்தியா வந்தார். 1898 – ஆம் ஆண்டு காசியில் மத்திய இந்துக் கல்லூரியைத் தொடங்கினார். பின்னாளில் அது பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகமாக வளர்ச்சிப் பெற்றது. சுயமரியாதையும் நம்பிக்கையும் பெருமையும் கொண்டதாக எதிர்காலத்திலும் இருந்தது. அம்மையார் உபநிடதங்களின் அறிவுச்சாரம், கீதை, வீரகாவியங்கள், புராணங்கள், தர்மசாத்திரங்கள், ஸ்மிருதிகள், கதைகள், தொல்மரபுகள் ஆகியவற்றை இந்து, பௌத்த சமயங்களிலிருந்து எடுத்து அதற்கு மிக எளிய உயர்ந்த விளக்கங்களை அளித்தார்.

## பிரம்ம ஞானசபையின் நோக்கம்

- உலக சகோதரத்துவத்தை வளர்த்தல்.
- பழங்கால சமயம் , இலக்கியம், தத்துவம், விஞ்ஞானம் ஆகியவற்றை ஆழ்ந்து கற்றல்.
- இயற்கை நியதிகளை ஆராய்ந்து மனிதனுக்குள்ளே மறைந்து கிடக்கும் ஆன்மிக ஆற்றல்களை வெளிக்கொண்டு வருவதே இச்சபையின் முக்கிய நோக்கமாகும்.
- இந்து சமயக்கோட்பாடுகளான கர்மவினை, மறுபிறவி, ஆன்மாவின் அழியாத இயல்பு, யோகநிலைகள், கடவுளின் அவதாரங்கள் போன்றவை இந்துக்களின் அகக்கண்களைத் திறக்கச் செய்தன.
- அறிவியல் வளர்ச்சியால் ஏற்பட்ட மேலைநாட்டுப் பொருளாதாரக் கோட்பாட்டை வன்மையாகக் கண்டித்தது.
- வேதகால பெருமைகளை நிகழ்காலத்தில் கொண்டு வருவதையே நோக்கமாகக் கொண்டு இயங்கியது.
- இவ்வியக்கம் சாதி, இனம், ஆண்-பெண் பாகுபாடு போன்றவற்றை எதிர்த்தது.

## பிரம்ம ஞானசபையின் சமூகத்தொண்டுகள்

சாதிஒழிப்பு, பெண்கல்வி, நாட்டுவிடுதலை போன்றவற்றிற்காக, நாடு முழுவதும் சொற்பொழிவுகளை அன்னிபெசன்ட் நிகழ்த்தினார். இவருடைய வீரமிக்க உணர்ச்சி சொற்பொழிவுகள் '**இந்தியனே விழித்தெழு**' என்னும் நூலாக வெளியிடப்பட்டது. 1914-இல் '**பொது வாழ்வு**' என்னும் வார வெளியீட்டையும் பின் '**நவ இந்தியா**' என்ற நாளிதழையும் தொடங்கினார். இவ்விரு பத்திரிகைகளும் பகுத்தறிவு வாதங்களையும், மனிதாபிமான அறங்களையும் எடுத்துக்கூறி இந்தியாவிற்குத் தன்னாட்சி வேண்டுமென வலியுறுத்தின.

பிரம்ம ஞானசபையின் கிளைகள் உலகெங்கும் உள்ளன. கீழை நாட்டுச் சமயங்களில் (இந்துசமயம், பௌத்தசமயம்) காணப்படும் அறிவுக் கருவூலங்களின் மதிப்பை வெளிக்கொணர இச்சபை பெரும் பங்காற்றியது. இச்சபை மறைவியல் கல்விப் பணியை

இந்தியாவில் மட்டுமின்றி மேலை நாட்டிலும் பரவச்செய்தது.

பிரம்மஞான சபை பல கல்வி நிறுவனங்களை நிறுவியுள்ளது. அவற்றில் **ஆல்காட் நினைவுப் பள்ளி** (The Olcott Memorial School). ஆல்காட் நினைவு இடைநிலைப் பள்ளி (The Olcott Memorial High School) போன்றவையாகும். இங்கு மாணவர்களுக்குக் கல்வி, சீருடைகள், புத்தகம், இலவச உணவு போன்றவை வழங்கப்படுகின்றன. மேலும், பால்ய விவாகத்தடை, மதுவிலக்கு, அறசமயக் கல்வியைப் பள்ளியில் போதித்தல், மகளிர் கல்வியைப் பரப்புதல், எழுத்தறிவின்மையை அகற்றுதல் மற்றும் பர்தாமுறையை ஒழித்தல் போன்ற அரும்பணிகளை இவ்வியக்கம் செய்து வந்தது.

## சமரச சுத்த சன்மார்க்க சங்கம்

### இராமலிங்க அடிகளார் கி.பி. (பொ.ஆ.) 1823–1874



இராமலிங்க அடிகளார்

ஆன்மநேய ஒருமைப்பாடு எங்கும் தழைக்க, இவ்வுலகமெல்லாம் உண்மை நெறி பெற்றிட எவருக்கும் இறைவன் ஒருவரே, எவ்விடத்தும் எவ்வுயிருக்கும் இலங்கும் சிவம் ஒன்றே அவரே **அருட்பெருஞ்சோதி** என்று கூறினார். **திரு அருட்பிரகாச வள்ளலார்** என்று போற்றப்படும் வடலூர் இராமலிங்க அடிகளார் 1823–அக்டோபர் 5–ம் நாள் இராமையா – சின்னம்மையாருக்கு ஐந்தாவது மகனாகப் பிறந்தார். சிறு வயதில் இருந்தே இறைவனால் ஆட்கொள்ளப் பெற்று நூற்றுக்கணக்கான அருட்பாடல்களை அருளினார். அவ்வாறு அருளிய பாடல்களின் தொகுப்பே **திருவருட்பா** ஆகும். வள்ளலார் தாம் கண்டு அடைந்த வழியை நாம் எல்லாரும் பெறவே 1865 – **இல் சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தை** நிறுவினார். இச்சன்மார்க்க வழி மூலமாக நாம் பெறவேண்டிய அனைத்து ஆன்ம பயனும் பெறலாம். மேலும் இந்த ஊன் உடம்பு ஒளி உடம்பாகி ஒளிரும் என்கிறார். மனிதனைத் துன்பத்திலிருந்து மீட்டு **ஜீவகாருண்ய ஒழுக்கத்தின்** வழிநடத்தி, மனிதன் தெய்வ நிலையை அடையச் செய்விப்பதே சமரசசுத்தசன்மார்க்க சங்கத்தின் முக்கிய நோக்கமாகும்.

சாதிகளிலோ மதங்களிலோ பேதமுற்று அலைந்து வீணே அழியும் இந்த உலகத்தவருக்கு ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை என்னும் சாதனத்தைக் கொண்டு வந்தவர். அமைதியான இயற்கையை ஒட்டிய வாழ்வு பெறவும் நிலையான அழியாத மெய்வாழ்வு பெறவும் வழிவகுத்துக் கொடுத்துள்ளார்.

**இராமலிங்க அடிகளாரின் படைப்புகள்**

**வள்ளலார் பதிப்பித்தவை**

- சின்மய தீபிகை
- ஒழிவிலொடுக்கம்
- தொண்டை மண்டலச் சதகம்

**உரைநடைகள்**

- மனுமுறை கண்ட வாசகம்
- ஜீவகாருண்ய ஒழுக்கம்

**செய்யுள்**

- திருவருட்பா

இவர் பாடிய ஆறாயிரம் பாடல்களின் திரட்டு, திருவருட்பா என்று அழைக்கப்படுகின்றது. இஃது ஆறு திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. இராமலிங்க அடிகளாரின் தலைமைச் சீடரானத் தொழுவூர் வேலாயுதனாரால் முதல் நான்கு திருமுறைகள் வெளியிடப்பட்டன. பின்னர் ஐந்தாம், ஆறாம் திருமுறைகள் வெளியிடப்பட்டன.

## வள்ளலாரின் சமய நெறிகள்

- எவ்வுயிரையும் கொல்லக்கூடாது

www.tntextbook.org

- எல்லா உயிர்களும் நமக்கு உறவுகளே, அவற்றைத் துன்புறுத்தக் கூடாது.
- சிறு தெய்வ வழிபாடு கூடாது. அவற்றின் பெயரால் பலியிடுதல் கூடாது.
- பசித்தவர்களுக்குச் சாதி, சமயம், இனம், மொழி போன்ற வேறுபாடு கருதாது உணவளித்தல் வேண்டும்.
- கடவுள் ஒருவரே அவர் அருட்பெருஞ்ஜோதி ஆவார்.
- மனித இனத்திற்குச் செய்யும் தொண்டே முக்தியை அடைவதற்கான வழி.
- இறைவனை அருட்பெருஞ்ஜோதியாக உணர்ந்து, குறுகிய சமய எல்லைக் கோடுகளைக் கடந்து, சமய ஒருமைப்பாடு காணவேண்டும்.
- இசைக்கருவிகள் தவிர்த்து மனம் ஒன்றிடல் வேண்டும்.
- சன்மார்க்க ஒழுக்கநெறிகளான செயல் ஒழுக்கம், ஜீவஒழுக்கம், ஆன்மஒழுக்கம் போன்றவை முக்கிய ஒழுக்கங்களாகும்.
- மனிதத் தொண்டாற்றல் மூலம் வாழ்வில் முழுப் பயனைப்பெற்று இறையோடு ஒன்றவேண்டும்.
- சமயத்தில் சடங்குகள் பொருளற்றவை என்றுகூறி, வைதீக முறையைத் தவிர்த்து வழிபட வேண்டும்.
- உருவ வழிபாடும் கிராம தேவதைகள் வழிபாடும் தேவையற்றவை.

### சமூக நெறிகள்

- சமூகப்பிரிவும் சாதிப்பிரிவும் பொருளற்றவை, அறியாமையின் வெளித்தோற்றங்களைச் சுட்டிக்காட்டி, சமூக அமைப்பில் மாற்றம் தேவையென்றார்.
- ஜீவகாருண்ய ஒழுக்கம் மூலம் ஆன்மநேய ஒருமைப்பாட்டை உலகத்தோர் அடையலாம் என்றார்.
- மனிதப் பிறவிகளிடத்தும் பிற உயிர்களிடத்தும் அன்பு காட்டவேண்டும் என்றார்.


### இளம் சமூகத்தினருக்கான நெறிகள்

- நல்லோர் மனத்தை நடுங்கச் செய்யாதே
- பசித்தோர் முகத்தைப் பார்த்திராதே
- குருவை வணங்க, தயங்கி நிற்காதே
- வெயிலுக்கு ஒதுங்க, விருட்சம் அழிக்காதே
- தாய் மொழியைத் தள்ளி நடக்காதே என்று கூறினார்.

இராமலிங்க அடிகளார் மனிதருள்ளும் விலங்குகளினுள்ளும் செடி, கொடிகளினுள்ளும் ஆத்மாவின் ஒளியைக் கண்டார். மறைகளால் கூறப்படும் வேள்வி முறைகளும் மற்ற சடங்குகளுமில்லாமல் அன்பெனும் உள்ளத்தால் ஆண்டவனை அடையலாம் என்றும் அவன் ஒளிமயமானவன் என்று கூறினார். சாதி சமய வேறுபாடின்றி சமரசசுத்தசன்மார்க்க நோக்கை மக்களிடையே பரவச் செய்தார்.

## பிற சீர்திருத்தவாதிகள்

### ஸ்ரீ நாராயணகுரு கி.பி. (பொ.ஆ.) 1856 – 1928


ஸ்ரீ நாராயணகுரு

19–ஆம் நூற்றாண்டில் தோன்றிய ஞான குருக்களில் நாராயணகுருவும் ஒருவர். இவர் கேரளாவில் உள்ள திருவனந்தபுரத்திற்கு அருகே **செம்பழுந்தி** கிராமத்தில் பிறந்தவர். பொதுவாக, **நானு ஆசான்** என்று அழைக்கப்பட்டார். **ஆசான்** என்றால் **ஆசிரியர்** என்று பொருள்படும். ஸ்ரீ நாராயணகுரு திருக்குறள், ஈசோ வாஸ்யோ உபநிடதம், ஒளிவில் ஒடுக்கம் ஆகிய நூல்களை மலையாளத்தில் மொழிபெயர்த்துள்ளார். அவரது காலத்தில் வாழ்ந்த மக்கள் இரண்டு பிரிவாக பிரிந்து வாழ்ந்து வந்தனர். அவர்கள் **அவர்ணர், சவர்ணர்** என்றும் குறிப்பிடப்பட்டனர். அவர்ணர்கள் கல்வி கற்கக்கூடாது, சாஸ்திரங்களைக் கற்கக்கூடாது, கோவில்களை நிறுவக்கூடாது,



XII Ethics_Lesson 7.indd 186 05-04-2019 11:14:53

பூஜைகளைச் செய்யக்கூடாது என்ற சவர்ணர்களின் அடக்குமுறைக்கு முடிவு கட்ட நாராயணகுரு உறுதி பூண்டார். எனவே, திருவனந்தபுரத்திற்கு அருகில் **அருவிப்புரத்தில் கோயில் கட்டி** சவர்ணர்கள் மட்டுமே பிரதிஷ்டை செய்ய முடியும் என்ற கட்டுப்பாட்டை உடைத்தெறிந்தார். **கி. பி. (பொ.ஆ.) 1903–இல் நாராயண தர்மபரிபாலன யோகம்** என்ற அமைப்பை நிறுவி இதன் மூலம் ஆன்மீகம், கல்வி, சமூகத்தொண்டு ஆகிய பணிகளைச் செய்துவந்தார்.

## ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தொண்டுகள்

- ஈழவ சமுதாயத்தில் காணப்படும் தீண்டாமை முறையை ஒழித்து, அனைத்து சமூகத்தையும் சமநிலைப்படுத்தப் பாடுபட்டார்.
- எண்ணற்ற கோயில்களைக் கட்டி, அனைத்து மக்களையும் வழிபடச் செய்தார்.
- சமுதாயப் பிரச்சினைகளான திருமணச் சடங்குகள், மதவழிபாட்டுமுறையை எதிர்த்துப் போராடினார். இவருடைய கருத்து – ஒரே சாதி, ஒரே சமயம், மனித குலத்திற்கு ஒரே கடவுள் என்பதாகும் (One caste one religion and one god for mankind).

## வைகுண்டசாமிகள் கி.பி. (பொ.ஆ.) 1809–1851


வைகுண்டசாமிகள்

இவர் கன்னியாகுமரி மாவட்டத்தில் சாமிதோப்பு என்ற ஊரில் பிறந்தவர். **முடிசூடும்பெருமாள்** என்றும் **முத்துக்குட்டி** என்றும் அழைக்கப்பட்டார். தமிழ் நாட்டில், சமயக் குறைபாடுகளைப் போக்கவும், சமூகத் தீமைகளை அகற்றவும் சமய சமூக சீர்திருத்த இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்.

## வைகுண்ட சாமிகளின் கொள்கைகள்

- உருவ வழிபாடு கூடாது
- அன்னதானம் வழங்கப்படவேண்டும்.
- மக்கள் இளைப்பாற நிழல் தரும் மரங்கள் நடவேண்டும்.
- உயிர் பலி கூடாது.
- உடலையும் உள்ளத்தையும் சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.
- கூட்டு வழிபாடு செய்யவேண்டும் என்றார்.

> **உங்களுக்குத் தெரியுமா?**
>
> அகிலத்திரட்டுஅம்மானை என்ற நூல் வைகுண்ட சாமியின் வாழ்க்கை வரலாற்று பற்றிய நூல் ஆகும். இந்நூல் இவரது சீடர் இராமகோபால் என்பவரால் எழுதப்பட்டது.

அன்புநெறியைச் சமய அடிப்படையாகக் காட்டியவர். கொல்லாமையை வெளித் தோற்றமாக்கி, அன்புக் கொடி பிடித்தவர். இறை ஒருமைப்பாட்டைக் உருவாக்கி, உருவச்சிலை இல்லாவழிபாட்டை வகுத்தார். சமய சமரசம் காட்டி, சமய மூடநம்பிக்கைகளையும், சிறுதெய்வ வழிபாடுகளையும் அறிவுக்குப் பொருந்தாதச் செயல்களையும் நீக்கப்பாடுபட்டார். வழிபாட்டில் எளிமை, காணிக்கையிடுதலை ஒழித்தல், இசையையும் நறுமணப்பொருள்களையும் தவிர்த்தல், சந்தனமும், வெண்மண்ணும்

> **நிழல்தாங்கல்கள்**
>
> நிழல்தாங்கல்கள் ஐயா வைகுண்டரின் கொள்கைகளைப் பரப்பும் இடங்களாகவும், சாதி, இனம் கடந்து சமயநல்லிணக்கத்தையும் மனித நேயத்தையும் வளர்க்கும் இடங்களாகவும் விளங்குகின்றன. இவை தருமசாலையாகவும் விளங்கிவருகின்றன.

பயன்படுத்தி வழிபடுதல் ஆகிய முறைகளைப் பின்பற்றினார். பக்தர்கள் தலைப்பாகையணிந்து செய்யும் தியான வழிபாட்டு நெறிமுறைகள், வைதீக முறையில் மாறுபட்டதாகும். ஆடம்பரம் தவிர்த்தும் அன்பு வழிகாட்டுவதும், பகிர்ந்து உண்ணும் பண்பு போன்றனவற்றை வளர்த்தார்.

வைகுண்டசாமிகள் தோற்றுவித்த வழிபாட்டுத் தலங்கள் '**நிழல்தாங்கல்கள்**' என அழைக்கப்படுகின்றன.

மக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்த **துவையல் பந்தி** தொடங்கப்பட்டது. எளிமையான வழிபாட்டு முறையும் கொல்லாமையும், புலால் உண்ணாமை, சிறுதெய்வவழிபாட்டுமுறை தவிர்த்தலும் புதிய மார்க்கத்துக்குப் பெருமை சேர்த்தன.

### ஈஸ்வர சந்திர வித்யாசாகர் கி.பி. (பொ.ஆ.) 1820–1891

வங்காளத்தில் சமூக-சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர் ஈஸ்வர சந்திர வித்யாசாகர் ஆவார். 1820-இல் வங்காளத்தில் பிறந்தவர். இவர் எழுத்தாளர், தத்துவஞானி, கல்வியாளர் மற்றும் சீர்திருத்தவாதியாகத் திகழ்ந்தவர். பெண்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப்பாடுபட்டவர். பொதுவாக வங்காளத்தில் வைதீக இந்துக் குடும்பத்தில் காணப்பட்ட சமூகக்கொடுமைகளைஎதிர்த்தவர். 1856-இல் கொண்டு வரப்பட்ட விதவைகள் மறுமணச்சட்டத்திற்க்கு காரணமாயிருந்தவர். இவர் வங்க அகரவரிசையை மறு உருவாக்கம் செய்தார். இவர் புகழைப் போற்றும் விதமாக வங்காளத்தில் **ஹீக்ளி பாலத்திற்கு வித்யாசாகர் பாலம்** என்று பெயர் சூட்டப்பட்டது.

ஈஸ்வர சந்திர வித்தியாசாகரும், மகாதேவ் ரானடேவும் விதவைகள் மறுமணத்திற்கு ஆதரவாக குரல் எழுப்பினர். இந்நிலையில் விதவைகள் மறுமணச்சட்டம் 1856-இல் டல்ஹௌசி பிரபுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டு கானிங் பிரபு ஆட்சிக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன்படி, 1856 விதி எண் XV-ன் படி **இந்து விதவைகள் மறுமணச்சட்டம்** கொண்டுவரப்பட்டது.

### ஜோதிபா பூலே கி.பி. (பொ.ஆ.) 1827–1890



ஜோதிபா பூலே

ஜோதிபா **பூலே** மராத்திய மாநிலத்தில் பூனாவில் பிறந்தவர். பூத்தொடுக்கும் குடும்பத்தில் பிறந்தமையால் பூலே என்று அழைக்கப்பட்டார். இவர் **புத்வார் பீத்** என்ற இடத்தில் பெண்கள் பள்ளியைத் தொடங்கினார். ஸ்காட்டிஷ் பள்ளியில் ஆசிரியராகச் சேர்ந்த பூலே விவசாயிகளுக்காக இரவு நேரப்பள்ளியைத் தொடங்கினார். அனைத்துப் பிரிவினருக்கும் பொதுவான அனாதை இல்லங்களைத் தோற்றுவித்தார். ஹண்டர் கல்விக் குழுவிடம் தாழ்த்தப்பட்டோருக்குக் கல்வி அளிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி அறிக்கை சமர்ப்பித்தார். 1873-இல் **சத்தியசோதகச்சமாஜம்** என்ற அமைப்பை தோற்றுவித்தார். இதற்கு **உண்மை அறியும் சங்கம்** என்று பொருள். இவ்வமைப்பின் முக்கிய நோக்கம் பெண்கல்வி, குழந்தைத் திருமணத்தைத் தடை செய்தல், விதவைகள் மறுமணம், அனாதைப் பாதுகாப்பு, அனைத்து மக்களுக்கு சமஉரிமை பெறவும், மனித உரிமையைப் பாதுகாக்கவும், மக்களுக்கு சமூகநீதி கிடைக்க வழிசெய்வதே முக்கிய நோக்கமாகும்.

### அயோத்திதாசப் பண்டிதர் கி.பி. (பொ.ஆ.) 1845–1914



அயோத்திதாசப் பண்டிதர்

நவீன இந்தியாவின் சீர்திருத்தவாதிகளுள் அயோத்திதாசப் பண்டிதரும் ஒருவராவார். இவர் தமிழ்-பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்தவர்.

இவருடைய இயற்பெயர் **காத்தவராயன்** என்பதாகும். அத்வைத கோட்டுபாடுகளில் நம்பிக்கை கொண்டவர். வாழ்க்கையின் நடைமுறையில் உள்ள சம்பிரதாயங்களை எதிர்த்தவர். பௌத்த சமயக் கோட்பாடுகளான அன்பு, கருணை, சகோதரத்துவம் போன்றவை சமூகத்தில் மலரப் பாடுபட்டார். 1907-இல் இராயப்பேட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு **அன்றைய காலணா மதிப்பில் ஒரு பைசாத் தமிழன்** என்ற செய்தித்தாளை வெளியிட்டார். இச்செய்தித்தாளில் பௌத்தக் கோட்பாடுகள், அரசின் செய்திகள், பெண்கல்வி, வானிலை, பண்டங்கள் விலை, விழிப்புணர்வுச் செய்திகள் போன்றவை வெளியிடப்பட்டன. பின் ஒரு பைசாத் தமிழன் செய்தித்தாள் பெயர் மாற்றம் செய்யப்பட்டுத் **தமிழன்** என்ற பெயரோடு வெளிவந்தது. இச்செய்தித்தாள் பெண்கல்விக்கு முக்கியத்துவம் அளித்து சமுதாய முன்னேற்றத்திற்குக் காரணமாயிற்று.

## கந்துகூரி வீரேசலிங்கம் கி.பி. (பொ.ஆ.) 1848–1919



கந்துகூரி வீரேசலிங்கம்

**"தெலுங்குமறுமலர்ச்சியின் இயக்கத்தின் தந்தை"** என்று அழைக்கப்பட்டவர் இவர் 1848-இல் ஆந்திராவில் உள்ள ராஜமுந்திரி என்ற இடத்தில் பிறந்தவர். இவர் சமூக சீர்திருத்தவாதி மற்றும் எழுத்தாளர் ஆவார். பெண்கல்வி, வரதட்சணை ஒழிப்பு, விதவைத் திருமணம் போன்றவற்றை ஆதரித்துச் சீர்திருத்தங்களைத் தொடங்கி வைத்தார். பெண்கல்வியை ஊக்குவிக்க 1876-இல் '**விவேகவர்த்தினி**' என்ற செய்திதாளைத் தொடங்கினார். 1874-இல் பொதுப்பள்ளியை நிறுவி சமூக முன்னேற்றம் அடையச் செய்தார். 1908-இல் ஹித்காரினி பள்ளியையும் தொடங்கினார். ஆந்திராவில் விதவைகள் திருமணத்தை 1881-இல் நடத்திவைத்தார்.

அயோத்திதாசப் பண்டிதர், வல்லக்காளத்தி அயோத்திதாசப்பண்டிதரிடம் (1836-1900) கல்விகற்றார். தமிழ், சித்த மருத்துவம், தத்துவம் ஆகியவை பயின்றார். தம் குருவின்மீது கொண்ட மதிப்பால் காத்தவராயன் என்ற தமது இயற்பெயரை அயோத்திதாசர் என மாற்றிக்கொண்டார்.

## ஈ.வெ. ராமசாமி கி.பி. (பொ.ஆ.) 1879–1973

தந்தைப் பெரியார் என்று போற்றப்பட்ட ஈ.வெ. ராமசாமி 1879-ஆம் ஆண்டு செப்டம்பர் 17-இல் ஈரோட்டில் பிறந்தவர். **குடியரசு, புரட்சி, விடுதலை** போன்ற இதழ்கள் மூலம் தமது சுயமரியாதைக் கொள்கைகளை வெளியிட்டார்.

பெரியாரால் சுயமரியாதை இயக்கம் 1925-இல் தோற்றுவிக்கப்பட்டது. இந்த இயக்கத்தின் மூலம் மூடப்பழக்கவழக்கங்களைச் சமூகத்திலிருந்து அகற்றுவது, தீண்டாமை, மூடநம்பிக்கைகள், பெண்களைத் தாழ்வாக கருதும் மனநிலை போன்றவற்றை எதிர்த்து குரல் கொடுத்தார். பெரியார் 1929 முதல் 1932 வரை மலேசியா, சிங்கப்பூர், இலங்கை, பிரான்ஸ், ஜெர்மனி, கிரீஸ் போன்ற நாடுகளுக்குப் பயணம் மேற்கொண்டு தம்முடைய சுயமரியாதைக் கொள்கைகளை விளக்கிக்கூறினார். இவருடைய சமுதாய பங்களிப்பைப் பாராட்டி யுனஸ்கோ (UNESCO) நிறுவனம் (1973) பெரியாரைப் '**புத்துலக தொலைநோக்காளர்' தென்னிந்தியாவின் சாக்ரடிஸ்** எனப் பாராட்டி விருது வழங்கியது.

பெரியாரின் முதலாவது சமுதாயப் போராட்டம் கேரளாவில் உள்ள **வைக்கம்** என்ற இடத்தில் தீண்டாமை ஒழிப்பிற்காகத் திருவாங்கூர் மன்னருக்கு எதிராகப் போராடி வெற்றிகண்டார். கலப்புத் திருமணத்தையும் சீர்திருத்த திருமணத்தையும் ஆதரித்தார். பெயருக்குப் பின்னால் வரும் சாதியின் பெயரை ஒழிக்கப் பாடுபட்டார். பெரியார் தமது பகுத்தறிவு, சுயமரியாதைக் கருத்துகளைப் பரப்புவதற்காகத் தமிழகமெங்கும் நாடகங்கள்,



XII Ethics_Lesson 7.indd 189 05-04-2019 11:14:54

ஊர்வலங்கள், போராட்டங்கள் ஆகியவற்றை நடத்தினார். பெரியாரால் உருவாக்கப்பட்ட சுயமரியாதைத் திருமண முறை எல்லோராலும் போற்றப்பட்டது. சமூகநீதி, சமத்துவம், பெண்கல்வி, பெண்விடுதலை, வரதட்சணை ஒழிப்பு போன்றவற்றிற்காகப் போராடியுள்ளார். தேவதாசி முறையை எதிர்த்துப் போராடினார். சமூகத்தில் சமத்துவம் காண விரும்பினார்.

### சமூக சமயச் சீர்திருத்த இயக்கங்களின் விளைவுகள்:

- இந்திய நாட்டின் பாரம்பரியப் பெருமைகளை உலகறியச் செய்யும் வண்ணம் வேதநூல்களையும், வேதங்களையும், உபநிடதங்களையும், சமஸ்கிருத மொழியிலிருந்து தங்கள் மொழியில் மேலைநாட்டினர் மொழிபெயர்த்தனர். இது நம் நாட்டின் உயரிய பண்பாட்டை உலகறியச் செய்தது.
- இந்து சமயத்தில் நிலவிவந்த பல்வேறு சமூகத் தீமைகள், மூடப்பழக்க வழக்கங்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் போன்றவற்றை மக்கள் அறியத் தொடங்கினர். 19-ஆம் நூற்றாண்டில் நிலவிவந்த மிகக் கொடுமையான சதி என்னும் உடன்கட்டை ஏறும் வழக்கத்திற்குத் தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது.
- ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்ட சமூகச் சட்டங்கள் மூலம் பெண்களின் வாழ்க்கைத்தரம் உயர்ந்தது. எ.கா பெண் சிசுக் கொலை தடுப்புச் சட்டம், விதவைமறுமணச் சட்டம், பர்தா முறை ஒழிப்பு மற்றும் பெண்களின் திருமணவயதை உயர்த்த பல்வேறு சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இதில் 1930-ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட சாரதாச் சட்டம் சமய சமூகச் சீர்திருத்த இயக்கங்களுக்குக் கிடைத்த ஒட்டு மொத்த வெற்றியாகும்.
- நம் நாட்டு இலக்கியங்கள், கல்வெட்டுகள், நாணயங்கள் புதைபொருள் ஆய்வுகள் மூலம் கிடைத்த பொருள்களைக்கொண்டு மேலைநாட்டு வரலாற்றாசிரியர்கள் இந்திய வரலாற்றை ஆதாரங்களுடன் எழுதினார்கள். இவை நம்நாட்டின் பண்பாடுகள் உலகளவில் பரவ முக்கிய காரணமாக அமைந்தன.
- இந்திய நாட்டின் நுண்கலைகளான இசை, ஓவியம், சிற்பம், நாட்டியம், கட்டடக்கலை ஆகியவற்றைச் சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்கள் உலகறியச் செய்தன. நம் நாட்டின் நுண்கலைகள் மேலைநாட்டினர் மூலம் உலகளவில் பரவின.
- இந்தியர்கள் அறிவியல் ஆய்வுகளில் ஈடுபடத் தொடங்கினர். ஆரியபட்டர் எழுதிய ஆரியபட்டீயம் என்ற நூல் அறிவியல் ஆராய்ச்சிக்கு வித்திட்டது.
- சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போன்ற மனப்பான்மைக்குச் சீர்திருத்த இயக்கங்கள் வித்திட்டன. தனிமனிதச் சுதந்திரமின்மை, பிறப்பால் உயர்வு, தாழ்வு போன்ற சமூகப் பிரச்சனைகளை நீங்கின.
- இந்தியாவில் நடைபெற்று வந்த அறிவியல் ஆதாரமற்ற சமயச் சடங்குகளையும் வழிபாட்டு முறைகளையும் நீக்க சமூக-சமயச் சீர்திருத்த இயக்கங்கள் பாடுபட்டன.
- மொழித்துறையில் வியக்கத்தகு முன்னேற்றம் ஏற்பட்டது. ஆங்கில இலக்கியத்தில் உள்ள புதினம், கவிதை, நாடகம்முதலானவைஇந்தியமொழிகளில் மொழியாக்கம்பெயர்க்கப்பட்டன.ஆங்கில முறையில் பின்பற்றப்பட்ட விமர்சனமுறை இந்திய மொழிகளில் எதிரொலித்தன. இலக்கியத்துறையில் உலகம் போற்றும் இலக்கிய மேதைகள் உருவாயினர்.
- 1835-இல் மெக்காலே கல்வி கொள்கை உருவாவதற்கும், 1854-இல் சார்லஸ் உட் கல்விக் கொள்கை உருவாவதற்கும் அதனால், நாடு முழுவதும் ஒரே மாதிரியான கல்விமுறை பரவலாவதற்கும் 19-ஆம் நூற்றாண்டின் சமூக–சமயச் சீர்திருத்த வாதிகள் ஆங்கிலேயர்களுக்கு உதவினர். இதனால், மேற்கத்தியத் தத்துவங்களும், இலக்கியங்களும்,

www.tntextbook.org

அறிவியலும் தாய்நாட்டின் பழைமையான வரலாற்றையும் இந்தியர்கள் அறிந்தனர்.

- ஆங்கிலமொழி வளர்ச்சி பெற்றதைப் போன்று வட்டார மொழிகளும் வளர்ச்சி பெற்றன. வட்டார மொழிகளில் புதிய சிந்தனைகளின் அடிப்படையில் பல இலக்கியங்கள் தோன்றின.
- விவேகானந்தரின் ஆன்மிகச் சிந்தனைகள், ஐரோப்பிய நாடுகளைக் கவர்ந்தன. இதன்காரணமாக சகோதரி நிவேதிதா இவருடைய சீடரானார்.
- இன்றைய இந்தியாவில் இந்தியர்களிடையே தேசிய உணர்வு, தாய்மொழி உணர்வு,சமயசகிப்புத்தன்மை, சமய சமத்துவத்திற்கான கோட்பாடுகள் போன்றவற்றை இந்தியர்கள் மனத்தில் விதைத்தது சமூக சமய சீர்த்திருத்த இயக்கங்களே ஆகும்.
- இன்றைய நாகரிக உலகில் மற்ற நாடுகளோடு பல்வேறு துறைகளில் இந்தியர்கள் உலக நாடுகளுக்குச் சமமாக அறிவிலும் ஆற்றலிலும் முன்னேற வழிவகுத்தது.
- தொழில்துறையில் புதிய மாற்றங்கள் ஏற்பட்டு புதிய தொழிற்சாலைகளும், நூற்பாலைகளும் உருவாக்கப்பட்டன.
- தயானந்த சரஸ்வதியின் இந்தியா இந்தியருக்கே என்ற முழக்கம், தேசிய உணர்வு தோன்ற முக்கிய காரணமாக அமைந்தது.
- சுதந்திரப் போராட்டவீரர்களும், இலக்கியவாதிகளும் தோன்ற, இச்சீர்திருத்த இயக்கங்கள் காரணமாயிற்று.

## நிறைவுரை

19, 20-ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட சமூக, சமயச் சீர்திருத்த இயக்கங்களால் இந்தியச் சமூகத்தில் மாபெரும் முன்னேற்றம் ஏற்பட்டது. சதி என்ற உடன்கட்டையேறுதல், குழந்தைத் திருமணம், பெண்சிசுக்கொலை, பலதாரமணம், பாலின வேறுபாடு, சாதி வேறுபாடு போன்ற சமூகக் கொடுமைகள் இச்சீர்திருத்த இயக்கங்களால் களையப்பட்டன. கி.பி. (பொ.ஆ.) 1829-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சதி என்ற உடன் கட்டையேறுதல் ஒழிப்புச் சட்டமும் கி.பி. (பொ.ஆ.) 1856-ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட விதவைகள் மறுமணச்சட்டமும் இந்தியச் சமூக வரலாற்றில் புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தின. மேலை நாட்டுக் கல்வி, சமயம் தொடர்பான தெளிவான புரிதலை இந்திய மக்களுக்கு இச்சீர்திருத்த இயக்கங்கள் ஏற்படுத்தின. இராஜாராம் மோகன்ராய், சுவாமி தயானந்தர், வள்ளலார், விவேகானந்தர் போன்றோரின் சமயக் கோட்பாடுகள் மக்களின் வாழ்வியல் கோட்பாடுகளாயின. ஆங்கிலேயர்களை எதிர்த்து தேசிய உணர்வு மக்களுக்கு ஏற்பட இவ்வியக்கங்கள் காரணமாயின. இந்தியர்களிடையே கல்வியறிவு, அறிவியல் முறையில் அணுகும் மனப்பாங்கு போன்றவை ஏற்பட இவ்வியக்கங்கள் காரணமாக அமைந்தன. ஒன்றுபட்ட இந்தியா 20 -ஆம் நூற்றாண்டில் நிறுவப்பட, இந்தச் சமூக சமயச் சீர்திருத்த இயக்கங்களே முக்கிய காரணங்களாக அமைந்தன.



XII Ethics_Lesson 7.indd 191 05-04-2019 11:14:54

# பயிற்சி

## சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 19–ஆம் நூற்றாண்டின் சமூக சமய சீர்திருத்தவாதிகளில் முதன்மையானவர்

அ) சுவாமி விவேகானந்தர் ஆ) இராஜாராம் மோகன்ராய்

இ) பிளாவாட்ஸ்கி அம்மையார் ஈ) தயானந்த சரஸ்வதி

2. சரியான விடைக்குறிப்பைத் தெரிவு செய்க.

| | | |
|---|---|---|
| அ. பிரம்ம சமாஜம் | – | 1. சுவாமி விவேகானந்தர் |
| ஆ. ஆரிய சமாஜம் | – | 2. இராஜாராம் மோகன்ராய் |
| இ. இராமகிருஷ்ண இயக்கம் | – | 3. தயானந்த சரஸ்வதி |
| ஈ. பிரம்ம ஞானசபை | – | 4. பிளாவாட்ஸ்கி அம்மையார் |

JMSCGM

அ) அ–2, ஆ–3, இ–1, ஈ–4 ஆ) அ–1, ஆ–2, இ–3, ஈ–4

இ) அ–2, ஆ–1, இ–3, ஈ–4 ஈ) அ–4, ஆ–3, இ–2, ஈ–1

3. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள இணையைத் தேர்ந்தெடுக்க.

| ஆசிரியர் | | இதழ் |
|---|---|---|
| அ) ஜி. சுப்பிரமணிய ஐயர் | – | விவேகவர்த்தினி |
| ஆ) இராஜாராம் மோகன்ராய் | – | சம்வாத் கௌமுகி |
| இ) கந்துகூரி வீரசேலிங்கம் | – | நவ இந்தியா |
| ஈ) அன்னிபெசண்ட் | – | தி இந்து |

4. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ. ஆத்மிய சபை | – | 1. ஆத்மராம் பாண்டுரங் |
| ஆ. பிரார்த்தனை சமாஜம் | – | 2. இராஜாராம் மோகன்ராய் |
| இ. விதவைகள் மறுமணச்சட்டம் | – | 3. இராமலிங்க அடிகளார் |
| ஈ. சமரச சுத்த சன்மார்க்க சங்கம் | – | 4. ஈஸ்வர சந்திர வித்யாசாகர் |

அ) 2, 1, 4, 3 ஆ) 2, 3, 1, 4 இ) 3, 1, 4, 2 ஈ) 4, 2, 3, 1

5. பின்வரும் கூற்றையும், அதன் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

கூற்று: இராஜாராம் மோகன்ராய் 'சதி' ஒழிய முக்கிய காரணமாயிருந்தார்.

காரணம்: தன் அண்ணனின் மனைவிக்கு நடந்த சதிக்கொடுமை இராஜாராம் மோகன்ராய் வாழ்க்கையில் திருப்புமுனையை ஏற்படுத்தியது.

அ) கூற்று சரி, காரணம் கூற்றிற்குச் சரியான விளக்கமன்று.

ஆ) கூற்று சரி, காரணம் கூற்றிற்குச் சரியான விளக்கமாகும்.

இ) கூற்று தவறு, காரணம் கூற்றிற்குச் சரியான விளக்கமன்று.

ஈ) கூற்று தவறு, காரணம் கூற்றிற்குச் சரியான விளக்கமாகும்

6. விடுபட்ட இடத்தில் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

| இயற்பெயர் | – | அறியப்பட்ட பெயர் |
|---|---|---|
| மூல்சங்கர் | – | தயானந்த சரஸ்வதி |
| நரேந்திர நாத் தத்தா | – | விவேகானந்தர் |
| கடாதர சட்டர்ஜி | – | இராமகிருஷ்ண பரமஹம்சர் |
| காத்தவராயன் | – | _______________ |



XII Ethics_Lesson 7.indd 192 05-04-2019 11:14:54

www.tntextbook.org

அ) திருவருட் பிரகாச வள்ளலார் ஆ) தந்தை பெரியார்

இ) அயோத்திதாசப் பண்டிதர் ஈ) முடிசூடும் பெருமாள்

7. "மனிதனைத் துன்பத்திலிருந்து மீட்டு, வழிநடத்தி, தெய்வநிலையை அடையச் செய்வதே சமரச சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய நோக்கம்"என்று கூறியவர்

அ) அயோத்திதாசப் பண்டிதர் ஆ) இராமலிங்க அடிகளார்

இ) வைகுண்ட சுவாமிகள் ஈ) நாராயணகுரு

8. சத்திய சோதக் சமாஜம் என்ற அமைப்பை நிறுவியவர்

அ) கந்துகூரி வீரேசலிங்கம் ஆ) அயோத்திதாசப் பண்டிதர்

இ) ஜோதிபா பூலே ஈ) ஈஸ்வர சந்திர வித்யாசாகர்

9. "உலகில் எங்கெங்கோ தோன்றுகின்ற ஓடையெல்லாம் இறுதியில் கடலில் சென்று சங்கமாம் பான்மையினைப் போன்று உலகோர் பின்பற்றும் தன்மையாலே. .. . " யாருடைய கூற்று?

அ) வள்ளலார் ஆ) இராமகிருஷ்ண பரம்ஹம்சர்

இ) விவேகானந்தர் ஈ) தயானந்த சரஸ்வதி

10. "இந்தியா இந்தியருக்கே" என்று முழங்கியவர்

அ) சுவாமி விவேகானந்தர் ஆ) தயானந்த சரஸ்வதி

இ) இராஜாராம் மோகன்ராய் ஈ) இராம கிருஷ்ண பரம்ஹம்சர்

## குறுவினா

1. பிரம்ம சமாஜத்தின் தோற்றம் குறித்து எழுதுக.
2. இராமகிருஷ்ண பரமஹம்சர் பற்றி எழுதுக.
3. ஸ்ரீ நாராயண குருவின் சமூகத் தொண்டுகள் யாவை ?
4. சமூக முன்னேற்றத்திற்கு அயோத்திதாசப் பண்டிதரின் பணிகளை எழுதுக.
5. "தெலுங்கு மறுமலர்ச்சி இயக்கத்தின் தந்தை கந்துகூரி வீரேசலிங்கம்" – இக்கூற்றை நிறுவுக.
6. 'புத்துலகத் தொலைநோக்காளர்' எனப் பெரியாரை, யுனெஸ்கோ பாராட்டக் காரணம் என்ன?

## சிறுவினா

1. பிரம்ம சமாஜத்தின் கோட்பாடுகள், சமூக – சமய மாற்றத்திற்கு வித்திட்டன என்பதை நிறுவுக.
2. ஆரிய சமாஜத்தின் கட்டளைகள் யாவை ?
3. இராமகிருஷ்ண இயக்கத்தின் நோக்கங்களையும், குறிக்கோள்களையும் எழுதுக.
4. வள்ளலாரின் சமய நெறிகள் பற்றி எழுதுக.
5. ஜோதிபாபூலே தோற்றுவித்த 'சத்தியசோதக்சமாஜத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

## நெடுவினா

1. சமூக – சமய சீர்திருத்த இயக்கங்கள் தோன்றக் காரணங்களை எழுதுக.
2. பிரம்ம சமாஜத்தின் சமூகத் தொண்டுகள் யாவை ?
3. ஆரிய சமாஜத்தின் கோட்பாடுகள் யாவை ?
4. இராமகிருஷ்ண இயக்கத்தின் சமூகத் தொண்டுகள் பற்றி எழுதுக.
5. சமூக சமய சீர்திருத்த இயக்கத்தின் விளைவுகள் யாவை ?



XII Ethics_Lesson 7.indd 193 05-04-2019 11:14:54

## இணையச்செயல்பாடு

# சமூக சமுதாய சீர்திருத்த இயக்கங்கள்

**இந்தியாவின் சமூக சீர்திருத்தத்தைக் கொண்டு வந்த தலைவர்கள் குறித்து அறிந்து கொள்வோமா ?.**




### படிகள்

1. கீழ்க்காணும் உரலி/விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, இச்செயல்பாட்டிற்கான இணையப் பக்கத்திற்குச் செல்க.
2. இந்தியாவின் மறுமலர்ச்சிக்கு காரணமான தலைவர்களை அந்தப் பக்கத்தில் காணலாம்.
3. அதில் ஆன்மிகத் தலைவர்களைச் சொடுக்கி, அவர்களின் பணிகளைக்காணலாம்.

### செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :




படி 1



படி 2



சீர்திருத்த இயக்கத்தலைவர்களின் இணையப்பக்கத்தின் உரலி :

https://play.google.com/store/apps/details?id=nithra.tamil.leaders.celebrities.history&hl=ta

B248_12_ETH_IND_CUL_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

அலகு
8

# யோகம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

WJE76I

## கற்றல் நோக்கங்கள்

- மாணவர்கள் யோகா என்பதன் பொருளை அறிந்து கொள்ளுதல்.
- யோகா வளர்ச்சியின் வரலாறு, பதஞ்சலி காலத்திற்கு முன், பதஞ்சலி கால யோகா, பதஞ்சலி காலத்திற்குப் பின் யோகா என வகைப்படுத்தி அறிந்து யோகாவின் நிலையையும் சிறப்பம்சத்தையும் புரிந்து கொள்ளுதல்.
- யோகாவின் பிரிவுகளையும், இராஜயோகத்தின் எட்டு நிலைகளையும் வேறுபடுத்தி அதன் சிறப்பியல்புகளை அறிதல்.
- யோகப்பயிற்சியை மேற்கொள்ளும்போது, பின்பற்றவேண்டிய வழிகாட்டு நெறிகளை அறிந்து ஆசனப்பயிற்சி மற்றும் பிராணாயாமம் பயிற்சிகளின் நன்மைகளை அறியச்செய்தல்.
- யோகப் பயிற்சியில் குருவின் மேன்மையை அறிதல்.
- யோகப் பயிற்சியின்போது, பின்பற்றவேண்டிய உணவுப்பழக்க முறையை அறியச் செய்தல்.
- யோகப் பயிற்சியினால் விளையும் வாழ்வியல் நெறிமுறைகளைக் கற்றுணர்ந்து வாழ்க்கையில் பின்பற்றச் செய்தல்.

### நுழைவு வாயில்

இயற்கையிலேயே மனிதனுக்கு இறைவனை நோக்கிய உந்துதல் உள்ளது. அதனை நமது முன்னோர்களாகிய யோகிகளும், ஞானிகளும், முனிவர்களும் முறைப்படுத்தி, நமது பாரதத் திருநாட்டிற்கு மட்டுமல்லாது உலகத்திற்கே இறைநெறியில் வாழ அளித்திருக்கும் கொடைதான் யோகா. ஞானிகளும் யோகிகளும் முனிவர்களும் மனிதப் பிறவிப்பயனை, மக்கள் அடையும் நிலைகளை, யோக முறையில் வடிவமைத்துத் தந்துள்ளனர். யோகா என்பது, முனிவர்களுக்கும் ஞானிகளுக்கும் மட்டுமே உகந்தது என்ற கருத்து மாறித் தற்போது உலகிலுள்ள அனைத்து சமயத்தைச் சார்ந்த மக்களாலும் பின்பற்றப்படும் வாழ்வியல் கலையாக மிளிர்ந்துள்ளது.

### யோகா – பொருள்

**யோகா** என்ற சமஸ்கிருத சொல்லானது **யுஜ்** (YUJ) என்ற சொல்லிருந்து தோன்றி யோக் (YOKE) என்ற சொல்லாக மாறி இறுதியில் "யோகா" (Yoga) எனப் பெயர்பெற்றது. யுஜ் மற்றும் யோக் என்ற சொற்கள் "இணைத்தல்" என்று பொருள்படுகின்றன. இதில் **இணைத்தல்** என்பது,

- உடலையும் மனத்தையும் இணைத்தல் முதல் நிலை
- உடலையும் உயிரையும் இணைத்தல் இரண்டாம் நிலை
- உயிரையும் இறைவனையும் இணைத்தல் மூன்றாம் நிலை

### "யோகா பொருள்"

பதஞ்சலி முனிவரின் கூற்றுப்படி யோகா என்பது, "**யோகஹ சித்த விருத்தி நிரோதா**"



XII Ethics_Lesson 8.indd 195 05-04-2019 11:16:33

www.tntextbook.org

என்று அழைக்கப்படுகிறது. இதில் **சித்த** என்பது மனம்; **விருத்தி** என்பது மனச்சஞ்சலம்; **நிரோதா** என்பது கட்டுப்படுத்துதல். எனவே, யோகா என்பது மனம் மற்றும் மனச்சஞ்சலத்தைக் கட்டுப்படுத்துவதாகும்.

## யோகா வரலாறு மற்றும் வளர்ச்சி

யோகா இந்தியாவின் தொன்மையான வாழ்வியல் கலை. இஃது அறிவியல், உடல்நலம், மனநலம் மற்றும் ஒழுக்க நெறிகளை உள்ளடக்கிக் கட்டுப்பாட்டுடன் அறத்தைப் பின்பற்றி வாழும் நெறிமுறைகளை விளக்குகிறது. பதஞ்சலி முனிவர் யோகா வளர்ச்சியடைய அடித்தளம் அமைத்தார். எனவே, இவர் **"நவீன யோகாவின் முன்னோடி"** என அழைக்கப்படுகிறார். யோகக்கலை வல்லுநர்கள் யோகா வளர்ச்சியை நான்கு படிநிலைகளில் வகைப்படுத்தியுள்ளனர். அவை முறையே:

1. பதஞ்சலி காலத்திற்கு முன்பு யோகா
2. பதஞ்சலி கால யோகா
3. பதஞ்சலி காலத்திற்குப் பின்பு யோகா
4. இன்றைய உலகில் யோகா

## பதஞ்சலி காலத்திற்கு முன்பு யோகா

வரலாற்று ஆய்வின் அடிப்படையில், யோகா சுமார் 5000 ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் தோன்றியது எனலாம். இக்காலக்கட்டத்தை பதஞ்சலி முனிவர் காலத்திற்கு முந்திய காலம் என்றும், இஃது இலக்கிய காலத்திற்கு முன்பான யோகா என்றும் அழைக்கப்படுகிறது. இக்காலத்திலிருந்த, வேதங்கள், உபநிடதங்கள், ஸ்மிருதி, பௌத்த சமயம், சமண சமயம், இதிகாசங்கள் மற்றும் புராணங்களிலிருந்து யோகா பற்றிய செய்திகள் அறியப்பட்டுள்ளன.

## வேதங்கள்

ரிக்வேதம், யஜுர்வேதம், சாமவேதம் மற்றும் அதர்வண வேதம் போன்ற நான்கு வேதங்களிலும் யோகா என்ற வார்த்தை நேரடியாக பயன்படுத்தப்படவில்லை. மாறாக, **"தீரா"** என்று குறிப்பிடப்பட்டுள்ளது. தீரா என்பதன் பொருள், **'தன்னை உணர்ந்த நிலையாகும்'** (self realized state). மேலும், வேதங்களில் தியானம் செய்யும் நோக்கிலேயே யோகா விளக்கப்பட்டுள்ளது. இதில் சூரியவணக்கம் அனுதின நிகழ்வாக இருந்தது. யஜுர் வேதத்தில் **அனுலோமா, வயலோமா** என்னும் மூச்சுப்பயிற்சி முறைகள் விளக்கப்பட்டுள்ளன.

## உபநிடதங்கள்

உபநிடதங்களில் யோகா பற்றிய குறிப்பு உள்ளது. இவற்றுள் தைத்ரிய உபநிடதத்தில் பஞ்சகோச கோட்பாடு யோகா என்பது, நோய்களைக் குணமாக்கும் முறையை குறிப்பிடுகிறது. கீனோ உபநிடதம், ஈஸாவஸ்ய உபநிடதம், ஸ்வேதாசுவர உபநிடதம் போன்றவை ஆன்மாவின் பண்புகளையும், கதோபநிடதம் சமாதி அடையும் முறையையும் விளக்குகிறது.

## ஸ்மிருதி

வேதகாலங்களில் எழுதப்பட்ட சமய விதிகளின் தொகுப்பான ஸ்மிருதியில் ஒருவர் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இவற்றில் வாழ்வியல் படிநிலைகளுடன் தியானம் மற்றும் ஆசனப் பயிற்சிகளும் விளக்கப்பட்டுள்ளன.

## சமண சமயம்

சமண சமயம், 'மனம் மற்றும் உடல் ஆன்மாவை நோக்கிப் பயணிப்பது யோகா' என்று குறிப்பிடுகிறது.

## பௌத்த சமயம்

பௌத்த சமயத்தில் யோகா என்பது, தியானமுறைப் பயிற்சியாகும்.

- பாவனா(bhavana) என்பது, மன வளர்ச்சி தியானம்
- ஞானா/தயானா என்பது மனத்தினை அமைதியாக வைத்திருக்கும் தியானம்



XII Ethics_Lesson 8.indd 196 05-04-2019 11:16:33

www.tntextbook.org

## பாணினி

பாணினி என்பவர் சமஸ்கிருத ஆசிரியர் ஆவார். இவர் தாம் எழுதிய **அஸ்டாத்யாயி என்ற நூலில்** யோகா மேற்கொள்ளும் முறையையும் அவற்றின் பயன்களையும் குறிப்பிட்டுள்ளார்.

## இதிகாசங்கள்

இராமாயணம் மற்றும் மகாபாரதம் போன்ற இதிகாசங்களில், யோகா பற்றி விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் **"நிரோத யோகம்"** என்னும் யோக நெறியில் மனித ஆன்மா பரமாத்மாவுடன் இணைவது பற்றி விளக்கப்பட்டுள்ளது. இராமாயணத்தில் ஒழுக்க நெறிகளான யாமம், நியமம் மற்றும் தர்மம் போன்ற யோக நெறிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. யோகாவின் மிகச் சிறந்த புத்தகமான **"யோகவசிஸ்தா"** புராண காலத்தில் எழுதப்பட்டதாகும்.

## பகவத் கீதை

யோகா என்பது, "தவத்தைக் காட்டிலும் சிறந்தது; ஞான முறையைக் காட்டிலும் மேலானது; வேத தர்மங்களைக் காட்டிலும் சிறந்தது என்பது பகவத் கீதையின் கூற்றாகும்.

## பதஞ்சலி கால யோக வளர்ச்சி

வரலாற்று ஆய்வுகளின்படி கி.மு. (பொ. ஆ. மு) 500 முதல் கி.பி (பொ. ஆ) 800 வரையுள்ள காலத்தைப் பதஞ்சலி யோகா வளர்ச்சி நிலை காலமாகக் கருதலாம். யோக வழிகளை மனித இனத்திற்குத் தந்தவர் **'ஹிரண்யகர்பர்'**. அவற்றைச் சூத்திரங்களாக்கி வைத்தவர் மஹரிஷி பதஞ்சலி ஆவார். பதஞ்சலி முனிவர் ஆதிசேஷனின் அவதாரமாகக் கருதப்பட்டார். இவருடைய தந்தை அத்தரி முனிவர், தாய் கோணிகா ஆவார். அத்தரியின் பிள்ளை என்பதால் **'ஆத்திரேயர்'** என்றும், கோணிக்காவின் பிள்ளை என்பதால் **'கோணிகாபுத்திரர்'** என்றும் அழைக்கப்பட்டார். பதஞ்சலி முனிவர் யோக முறைகளைச் சூத்திரங்கள் மூலம் வெளிப்படுத்தினார். இவை பதஞ்சலி யோக சூத்திரங்களாகும். யோக சூத்திரா என்னும் யோக சாஸ்திரம் 196 சூத்திரங்களை உள்ளடக்கியது. இது நான்கு பெரும் அத்தியாயங்களைக் கொண்டது. அவை முறையே,


பதஞ்சலி முனிவர்

1. சமாதி பாதம்
2. சாதன பாதம்
3. விபூதி பாதம்
4. கைவல்ய பாதம்

என்பனவாகும்.

| பதஞ்சலி யோக சூத்திரங்களின் விவரம் | | | |
|---|---|---|---|
| அத்தியாயம் எண். | தலைப்பு | பொருள் | சூத்திரங்களின் எண்ணிக்கை |
| 1. | சமாதி பாதம் | இயற்கைச் சூழ்நிலையில் தியானம் எவ்வாறு செய்வது என்பதை விளக்குகிறது. | 51 |
| 2. | சாதன பாதம் | உடல் தூய்மை, மனத்தூய்மை மற்றும் ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தும் முறைகளை விளக்குகிறது. | 55 |
| 3. | விபூதி பாதம் | யோகாவின் பண்பு நலன்கள், மன ஒருங்கமைப்பு, தியானம் மேற்கொள்ளும் முறை, சூழ்நிலை தியானம் போன்றவற்றை விளக்குகிறது. மேலும் நம்மை மீறிய பேராற்றல் இருக்கும் திறன் (Super natural power) விளக்கப்பட்டுள்ளது. | 56 |
| 4. | கைவல்ய பாதம் | ஆன்மாவில் முழு கவனம் செலுத்துதல் மற்றும் பல்வேறு வகையான யோக நிலைகளும் அவற்றின் விளக்கங்களும் இவற்றில் இடம்பெற்றுள்ளன. | 34 |



XII Ethics_Lesson 8.indd 197 05-04-2019 11:16:33

மேற்கண்ட பதஞ்சலி யோக சூத்திரங்கள் எட்டுப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, அவை **அஷ்டாங்கயோகம்** அல்லது **ராஜயோகம்** என்றும் அழைக்கப்படுகிறது.

## இன்றைய உலகில் யோகா

யோகா பயிற்சியின் பயன்களை 1960-ஆம் ஆண்டுவரை, உலக மக்கள் அறிந்திருக்கவில்லை. தற்போது, யோகா அனைத்து நாடுகளிலும் பிரபலமடைந்துள்ளது. உலகளவில் மக்களிடையே உடல்நலத்தின் முக்கியத்துவம், அமைதியான வாழ்க்கை, உடல்நலம் போன்றவற்றில் விழிப்புணர்வு ஏற்பட்டு, அனைத்து மனிதர்களும் யோக முறைகளைப் பின்பற்றி வருகின்றனர். அனைத்து நாடுகளிலும் யோகா பயிற்சி மையங்கள் அமைக்கப்பட்டு, யோகா பயிற்சியை மேற்கொள்கின்றனர்.

உலக அளவில் யோகா புகழ் பெறுவதற்கு காரணமான சுவாமி சித்தானந்தா, ஸ்ரீ கிருஷ்ணமாச்சாரியார். ஓஷோ, மகரிஷி, மகேஷ் யோகி, யோகி அரவிந்தா, ஸ்ரீ B.K.S ஐயங்கார் மற்றும் வேதாத்ரி மகரிஷி போன்றவர்களது யோகா பணி சிறப்புமிக்கது.

**உங்களுக்குத் தெரியுமா?**

நம் பாரதத் திருநாட்டில் ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 21-ஆம் நாள் அதிக பகல் பொழுதும், குறைந்த இரவுப்பொழுதும் கொண்ட நாளாக உள்ளது. எனவே, உலக மக்களின் கவனத்தை இந்தியாவின்பால் ஈர்க்க, உலக நாடுகளின் ஐக்கிய நாடுகள் சபையிடம் (UNO) சர்வதேச யோகா நாளாக ஜூன் 21 -ஆம் நாளை அறிவிக்கவேண்டும் என்று இந்தியா வேண்டுகோளை வைத்தது. இந்தியாவின் வேண்டுகோள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, **உலக யோகா தினம்** 2015ஆம் ஆண்டு ஜூன் 21 -ஆம் நாள்முதல் உலகெங்கிலும் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

## யோகாவின் பிரிவுகள் (Branches of Yoga)

யோக முறையில் பல்வேறு பிரிவுகள் இருந்தாலும், பக்தி யோகம், கர்ம யோகம், ஞான யோகம், ராஜயோகம் என நான்கு முறைகள் மட்டுமே முதன்மையானதாக கருதப்படுகின்றன.

### 1. பக்தி யோகம்

பக்தி யோகம் என்பது நாயன்மார்களும், ஆழ்வார்களும் மேற்கொண்ட பக்தி நெறியாகும். எல்லாம் இறைவன் செயல். அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்பதை வெளிப்படுத்துவது பக்தி யோகமாகும். உலகில் உள்ள அனைத்துச் சமயங்களும் பக்தி யோகத்தையே வலியுறுத்துகின்றன. எல்லாச் சமயமும் சமமே. மனத்தை நன்னிலைக்குக் கொண்டு வருதலே சமயங்களின் நோக்கமாகும். சமுதாயத்தில் அமைதி வழியில் மனத்தை இறைவன்பால் ஈடுபடுத்த தோற்றுவிக்கப்பட்டவையே சமயங்களாகும்.

### 2. கர்ம யோகம்

மனத்தை முழுவதுமாக ஈடுபடுத்திச் சமுதாயத்தில் தம் நிலைக்கு உகந்த கடமையைச் சிறப்பாகச் செயல்படுத்துவதை, கர்மயோகம் என்று கூறுவர். ஒருவர் மேற்கொள்ளும் செயலில் தடைகள் ஏற்பட்டாலும் அவற்றைத் தகர்த்து, அச்செயலில் வெற்றி அடைவது கர்ம யோகத்தின் நோக்கமாகும்.

### 3. ஞான யோகம்

பேரறிவு பெறுதலே பெரும் ஆற்றல் என்பது, ஞான யோகத்தின் மேன்மையைக் குறிப்பதாகும். ஞானயோகத்தின் கருப்பொருள், **'அறிவே கடவுள்'**. இதில் பல்வேறு நூல்களைக் கற்று, ஒவ்வொரு செயலுக்கும் ஏன், ஏதற்கு, எப்படி, எவ்வாறு என்று பல்வேறு கேள்விகளை எழுப்பி, ஆராய்ந்து பார்த்து, உண்மை நிலையை அறிந்து, தெளிந்து, உணரும் நிலையே, ஞான யோகம் எனப்படும்.

### 4. ராஜ யோகம்

பதஞ்சலி முனிவர் யோக முறைகளை, யோக சூத்திரங்களின் அடிப்படையில் எட்டு நிலைகளாகப் பிரித்து, அவற்றை அஷ்டாங்கயோகம் என்னும் ராஜயோகமாக வெளிப்படுத்தினார்.



XII Ethics_Lesson 8.indd 198 05-04-2019 11:16:33

www.tntextbook.org

## யோகாவின் எட்டு நிலைகள் (அஷ்டாங்க யோகம்)

1. இயமம்
2. நியமம்
3. பிராணாயாமம்
4. ஆசனம்
5. பிரத்தியாகாரம்
6. தாரணம்
7. தியானம்
8. சமாதி

### திருமூலரின் திருமந்திரத்தில் அஷ்டாங்க யோகம்

*இமய நியமமே எண்ணிலா ஆதனம்*
*நயமுறுபிராணாயாமம்பிரத்தியாகாரம்*
*சயமிகு தாரணை தியானம் சமாதி*
*அயமுறும் அட்டாங்கம் ஆவது மாமே.*

(பாடல் எண் – 552)




திருமூலர்

**பொருள்: இயமம், நியமம், அளவில்லா ஆசனம், நலமிக்க பிரணயாமம், பிரத்யாகாரம், வெற்றிமிக்க தாரணி, தியானம், சமாதி ஆகிய எட்டும் யோக உறுப்புகள் ஆகும். இவையே அஷ்டாங்க யோகங்களாகும்.**

## இயமம்

மனத்தில் உள்ள விரும்பத்தகாத எண்ணங்களை நீக்குவதற்கான வழிமுறைகளை இயமம் வெளிப்படுத்துகிறது. இது சமூகக் கடமைகளை வலியுறுத்தும் 5 வகையான பிரிவுகளைக் கொண்டது. அவை முறையே,

1. அஹிம்சை – வன்முறை இல்லாமை
2. சத்தியம் – உண்மை
3. அஸ்தேயம் – திருடாமை
4. பிரம்மச்சரியம் – தன்னடக்கம்
5. அபரிக்ரஹம் – அதிகபொருள் சேர்க்காமல் மகிழ்ச்சியாக இருத்தல்.

### திருமூலரின் கூற்று – இயமம்

*கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்*
*நல்லான் அடக்கம் உடையான் நடுச்செய்ய*
*வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கள்காமம்*
*இல்லான் இயமத் திடைநின்றானே.*

*(திருமந்திரம் – பாடல் எண்:554)*

**பொருள்:** கொலைத் தொழில் செய்யாதவன், பொய் சொல்லாதவன், பிறர் பொருளைத் திருடும் எண்ணம் இல்லாதவன், எதையும் எண்ணிப்பார்த்து ஆராய்ந்தறியும் குணம் உடையவன், நல்ல பண்புகளை உடையவன், அடக்க உணர்வுடையவன், நடுநிலை தவறாது இருப்பவன், தானே உண்டு களிக்காது பிறர்க்கும் தந்து பகுத்துண்டு மகிழ்பவன், மன மாசு அகன்றவன், கள் குடிக்காதவன், பெண் பித்து இல்லாதவன் போன்ற பண்புகளையுடைவர்கள் தீயவை விலக்கிய நல்லதே செய்யும் மேலான தவ நெறியில் நிற்பவராவார்

நியமம் என்பது அற்புதமான ஐந்து சொந்த கடமைகளை உள்ளடக்கியுள்ளது. அவை

| | | |
|---|---|---|
| லௌச்சனம் | – | தூய்மை |
| சந்தோசம் | – | திருப்தி |
| தபஸ் | – | கண்டிப்பான எளிமை |
| ஸ்வாத்யாமம் | – | தன்னைப் பற்றிய எளிமை |
| ஈஸ்வரப் பரணிதாரம் | – | இறைவனிடத்தில் பக்தி |

போன்ற கூற்றின் அடிப்படையில் மனம், மொழி, மெய் இம்மூன்றும் தூய்மை அடைவது **திரிகரண சுத்தி** ஆகும்.



XII Ethics_Lesson 8.indd 199 05-04-2019 11:16:33

www.tntextbook.org

## நியமம்

உடலால் மேற்கொள்ள வேண்டிய கட்டுப்பாட்டுச் செயல்களுக்கு நியமம் என்று பொருள்.

**திருமூலரின் கூற்று – நியமம்**

*"தூய்மை அருள்ஊண் சுருக்கம் பொறைசெவ்வை*
*வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றுஇவை*
*காமம் களவு கொலைஎனக் காண்பவை*
*நேமி ஈர்ஐந்து நியமத்தன் ஆமே.*

*(திருமந்திரம் – பாடல் – 556)*

**பொருள்:** உள்ளத்தில் தூய்மையுடையவரே உண்மையான மனத்தூய்மை உடையவராவார். பிறர்பால் அருளுடையராகவும், மூன்று வேளையும் உண்ணாமல், குறைந்த உணவு உண்பதினால், எவ்வளவு இடர்கள் தோன்றினாலும் அவற்றைப் பொறுமையுடன் கையாள்பவராகவும், செம்மை உடையவராகவும், பிறன்மனை நோக்காத பேராண்மை, காமம், களவு, கொலை போன்றவற்றைத் தவிர்த்து வாழ்க்கையை நடத்துபவராக உள்ளவரே, நியமத்தன் ஆகின்றார்.

## பிராணாயாமம்

பிராணாயாமம் என்ற சொல் **"பிரணம்"** மற்றும் **"அயமம்"** என்ற இரண்டு சொற்களால் உருவானது. பிரணம் என்றால் "உயிர் மூச்சு" என்றும் அயமம் என்றால் "கட்டுப்படுத்துதல்" என்றும் பொருள்படும். எனவே பிராணாயாமம் என்பது, **'உயிர் மூச்சைக் கட்டுப்படுத்துதல்'** என்று பொருள்படுகிறது.

சுவாசக்காற்றை ஒழுங்குபடுத்துவதே பிராணாயாமப் பயிற்சியின் நோக்கமாகும். முகத்திற்கு வசீகரமும், மனத்திற்குத் திறனும், உடலுக்கு உணவை ஏற்றுக் கொள்ளும் சீரண சக்தியும் காற்றால் தான் ஏற்படுகிறது.

## I. பிராணாயாமம் பயிற்சி முறைகள்

**இயற்கையான சுவாசம்** (Natural breathing)

*ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்*
*ஆறுதல் கும்பகம் அறுபத்தி நாலதில்*
*ஊறுதல் முப்பத் திரண்டதில் ரேசகம்*
*மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகம் ஆமே.*

(திருமந்திரம் – பாடல் –568)

**பொருள்:** இடப்பக்க நாசி வழியே வந்துபோகும் காற்றானது, இடகலை எனப்படும். வலது நாசி வழியே செல்லும் காற்று பிங்கலை எனப்படும். உள்ளுக்கு இழுத்தலை பூரகம் என்றும் வெளியிடும் மூச்சை ரேசகம் என்றும் மூச்சை உள்ளிழுத்து நிறுத்தலை கும்பகம் என்றும் திருமூலர் கூறுகிறார்.

- **சுழிமுனை:** பிங்கலையும் இடகலையும் சமமாக ஓடுவதற்குச் சுழிமுனை என்று பெயர்.
- **சுழிமுனை சுவாசம்:** இடப்பக்க மூச்சும், வலப் பக்க மூச்சும் ஒன்று சேர்ந்து இரண்டு பக்கத்திலும் சமமாக மூச்சு உள்ளே செல்வதற்குச் சுழிமுனை சுவாசம் என்று பெயர்.
- **அந்தரக்கும்பகம்:** உள்ளிழுத்த சுவாசத்தை நிறுத்துதல்
- **பாகிரகும்பகம் அல்லது சூன்யகம்:** சுவாசத்தை வெளியிட்டு நிறுத்துதல்

- கால்களை மடக்கி முதுகு தண்டுவடத்தை நேராக வைத்துத் தளர்வாக அமர வேண்டும்.
- இயற்கையான மற்றும் தன்னிச்சையான சுவாசத்தை உற்றுநோக்குதல் வேண்டும்.
- சீரான சுவாசத்தைப் பற்றிய விழிப்புணர்வு பெறுதல் வேண்டும்.
- உள்சுவாசம் மற்றும் வெளிசுவாசத்தை உணர்தல் வேண்டும்.
- மூச்சைக் கட்டுப்படுத்தாமல் மூக்கின் துவாரத்தின் வழியாகச் செல்லும் உள்சுவாசக்காற்றானது குளிர்ச்சியாகவும்,



XII Ethics_Lesson 8.indd 200 05-04-2019 11:16:34

வெளிசுவாச காற்றானது வெப்பமானதாக இருக்கிறதா என உணர்தல் வேண்டும்.

## நாடிசோதனா பிரணயாமா (Nadi Shodhana Pranayama)

1. ***தயாரிப்பு பயிற்சி – 1***

- பத்மாசன நிலையில் அமர்ந்து முதுகுத் தண்டுவடம் மற்றும் தலைப்பகுதியை நேராக வைக்க வேண்டும்.
- சில மணித்துளிகள் உள்மூச்சு மற்றும் வெளிமூச்சினை மேற்கொள்ள வேண்டும்.
- வலது கையின் கட்டை விரலை வலது நாசி துவாரத்தை அடைத்துக் கொள்ள வேண்டும்.
- இடது நாசித்துவாரத்தின் மூலம் உள்மூச்சு மற்றும் வெளி மூச்சை எடுத்து விடவேண்டும்.
- ஐந்து சுவாசம் நிறைவு பெற்ற பிறகு, வலதுக் கையின் கட்டை விரலை எடுத்துவிட்டு வலக் கையின் மோதிர விரலின் மூலம் இடது நாசித்துவாரத்தை மூடுதல்வேண்டும்.
- வலது நாசித்துவாரத்தின் மூலம் உள் மூச்சு மற்றும் வெளிமூச்சு எடுக்கவேண்டும்.
- வலக் கையைத் தளர்த்த வேண்டும். இஃது ஒரு சுற்று. இதைப் போன்று குறைந்தது மூன்று சுற்றுகள் இப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.



நாடிசோதனா

2. ***நாடிசோதனா இரண்டு பக்க சுவாசப்பயிற்சி (Alternate Nostril Breathing)***

- இப்பயிற்சியின் மூலம் உள்சுவாசம் மற்றும் வெளி சுவாசத்தின் அளவைக் கட்டுப்படுத்துதல்.
- வலது நாசி துவாரத்தை வலதுக்கை கட்டைவிரலின் மூலம் அடைத்து இடது நாசித் துவாரத்தின் மூலம் உள் சுவாசத்தை மேற்கொள்ளும்போது 1,2,3,4 என்ற எண்ணிக்கை நிறைவு பெறும் போது உள் சுவாசம் நிறைவு பெறுகிறது.
- இடப்பக்க நாசித்துவாரத்தை மோதிரவிரலால் அடைத்து, வலப் பக்க நாசித்துவாரத்திலிருந்த கட்டைவிரலை எடுத்து 1, 2, 3, 4 என்ற எண்ணிக்கைக்கு வெளி சுவாசம் நிறைவு பெறுகிறது.
- உள் சுவாசமும் வெளி சுவாசமும் சமமாக அமைந்திருக்க வேண்டும் இஃது ஒரு சுழற்சி இதே போன்று குறைந்தது மூன்று முறை இப்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.

3. ***நாடி சோதனா அந்தரக் கும்பகம் (உள் சுவாசத்தைத் தக்க வைத்தல்)***

- வலது நாசியை அடைத்து, இடது நாசியின் மூலம் 5 எண்ணிக்கைக்கு மெதுவாக உள்சுவாசத்தை மேற்கொள்ள வேண்டும்.
- உள்சுவாசம் நிறைவு பெறும்போது, இரண்டு நாசித் துவாரங்களையும் அடைத்துச் சுவாசித்த காற்றினை நுரையீரலில் 5 எண்ணிக்கை அளவிற்குத் தக்க வைக்கவேண்டும்.
- வலது நாசி துவாரத்தைத் திறந்து, மெதுவான ஓர் உள்சுவாசத்தை மேற்கொண்ட பிறகு 5 எண்ணிக்கைக்குச் சீராக மெதுவாக வெளிசுவாசத்தை மேற்கொள்ள வேண்டும்.
- வெளிசுவாசம் நிறைவு பெறும்போது, இடது நாசி துவாரத்தை அடைத்து, உடனடியாக உள்சுவாசத்தை வலது நாசி துவாரத்தின் மூலம் 5 எண்ணிக்கைக்கு மேற்கொள்ள வேண்டும்.
- இரண்டு நாசி துவாரத்தையும் அடைத்து உள்சுவாசத்தை 5 எண்ணிக்கைக்குத் தக்க வைக்க வேண்டும்.
- இடது நாசி துவாரத்தைத் திறந்து ஓர் உள்சுவாசத்தை மெதுவாக எடுத்து, வெளி



XII Ethics_Lesson 8.indd 201 05-04-2019 11:16:34

சுவாசத்தினைச் சீராக 5 எண்ணிக்கைக்கு வெளியே விடவேண்டும். இஃது ஒரு சுழற்சியாகும்.


- இதேபோல் 3 சுழற்சிகள் இப்பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.

**4. நாடிசோதனா அந்தர மற்றும் பாகிரக கும்பகம்**

- வலது நாசித்துவாரத்தை அடைத்து, இடது நாசித்துவாரத்தின் மூலம் உள்மூச்சு எடுத்தல் வேண்டும்.
- உள்சுவாசம் நிறைவு பெற்றபிறகு, இரண்டு நாசித்துவாரத்தையும் அடைத்து, ஐந்து எண்ணிக்கைக்கு உள்சுவாசத்தை நிலை நிறுத்துதல் வேண்டும்.
- வலது நாசித் துவாரத்தின் மூலம் வெளி சுவாசத்தை மேற்கொள்ளவேண்டும். வெளி சுவாசம் முழுவதுமாக நிறைவு பெற்றபிறகு இரண்டு நாசித்துவாரத்தையும் ஐந்து எண்ணிக்கைக்கு மூடிவிடவேண்டும்.
- வலது நாசித் துவாரத்தில் ஒரு வெளிசுவாசத்தை நிறைவேற்றியவுடன் உள்சுவாசத்தை ஐந்து எண்ணிக்கைக்கு சீராக வைக்கவேண்டும். இரண்டு நாசித் துவாரத்தையும் மூடி, ஐந்து எண்ணிக்கைக்கு உள் சுவாசத்தை நிலைநிறுத்த வேண்டும்.
- வெளி சுவாசத்தை இடது நாசித் துவாரத்தின் மூலம் ஐந்து எண்ணிக்கைக்கு சீராக வெளியிட்டு, இரண்டு நாசித்துவாரத்தையும் மூடி, ஐந்து எண்ணிக்கைக்கு வெளிசுவாசம் நிறுத்தப்பட வேண்டும். இஃது ஒரு சுற்றாகும்.
- இதேபோல் குறைந்தது மூன்று சுற்று பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.

## சீத்தலி பிராணாயாமம் (Sheetali Pranayama)


- கால்களை மடக்கி, பத்மாசன நிலையில் அமர்ந்து, உடலைத் தளர்வாக வைக்கவேண்டும்.
- நாக்கைக் கூடுமான வரையில் வெளியே நீட்டவேண்டும்.
- நாக்கின் இரண்டு பகுதியையும் சுழற்றி, ஒரு குழாய்போல் வைக்க வேண்டும்.
- குழாய் போல் வைத்த நாக்கின் மூலம், உள்சுவாசத்தை மேற்கொள்ள வேண்டும்.
- உள்சுவாசம் நிறைவுற்ற பிறகு, நாக்கை வாயினுள் கொண்டுவந்து, வாயை மூடி, வெளி சுவாசத்தை மூக்கின் வழியே வெளிவிட வேண்டும்.
- இஃது உடலுக்கு குளிர்ச்சி ஏற்படுத்துகின்ற பிராணாயாமம். இதில் நாக்கு மற்றும் வாயின் மூலம் உள் சுவாசம் மேற்கொள்கின்ற பொழுது, குளிர்ந்த காற்று நாக்கு மற்றும் வாய்ப் பகுதி மூலம் செல்வதை உணரலாம்.



சீத்தலி பிராணாயாமம்

## சீத்கரி பிரணயாமா (Seetkari Pranayama) ("ஸ்ஸ்" என்ற ஓசையுடன் பயிற்சி செய்யவும்)

- உடலைத் தளர்வாக வைத்துக் கால்களை மடக்கிப் பத்மாசன நிலையில் அமர வேண்டும்.
- மேல்பற்கள், கீழ்ப்பற்களை இலகுவாக இணைக்கவும். நாக்கைப் பின்புறம் மடித்து, நாக்கின் நுனியால் வாயின் உட்பகுதியில் உள்ள மேல் அண்ணத்தைத் தொட வேண்டும்.



சீத்கரி பிரணயாமா



XII Ethics_Lesson 8.indd 202 05-04-2019 11:16:34


- பற்களுக்கு இடையே மெதுவாக நீண்ட மூச்சை ஸ்ஸ் என்ற ஓசையுடன் உள் இழுக்கவும் வேண்டும்.
- உள் மூச்சு நிறைவு பெற்ற பிறகு, வாயை மூடி நாக்கை மேலண்ணலத்தில் இருந்து எடுத்து, மெதுவாகச் சுவாசத்தை மூக்கின் மூலம் வெளிவிட வேண்டும்.
- இஃது ஒரு சுழற்சி. இதே போல் குறைந்தது ஐந்து சுழற்சி மேற்கொள்ள வேண்டும்.

### பிரம்மாரி பிராணாயாமா (Bhramari Pranayama)

பத்மாசன நிலையில் அமரவும். முதுகு தண்டுவடம், கழுத்துப்பகுதி நேராக இருக்க வேண்டும். தாடைகள் தளர்வாக இருத்தல் வேண்டும்.

இரண்டு கைகளையும் பக்கவாட்டில் உயர்த்தி, இரண்டு முட்டிகளையும் மடக்கி, இரண்டு ஆள்காட்டி விரல்களை மடக்கி, காது துவாரத்தின் நடுமடலை மூட வேண்டும்.

மூக்கின் வழியாக நீண்ட நெடுமூச்சை எடுத்து வெளிமூச்சினை மெதுவாகக் கட்டுப்படுத்தித் தேனீ ஒலி எழுப்புவதைப் போல மெதுவாக வெளி மூச்சை விடவேண்டும் ஒரு சுற்று ஆகும். இதைப்போல் குறைந்தது மூன்று சுற்று மேற்கொள்ள வேண்டும்.



பிரம்மாரி பிராணாயாமா

**திருமூலரின் கூற்று : ஆசனம்**

*வருந்தித் தவம்செய்து வானவர் கோவாய்த்*
*திருந்து அமராபதிச் செல்வன் இவன்எனத்*
*தருந்தண் முழவம் குழலும் இயம்ப*
*இருத்தின்பம் எய்துவர் ஈசன் அருளே.*

(திருமந்திரம் – பாடல்: 634)

**பொருள் : ஆசனங்களை வருத்தித் தவம் செய்து இதனால் இவ்வாசன பயிற்சியுடையவன் தேவர்களின் தலைவன் எனக் கூறும் வண்ணம், அரிய இனிய மத்தள ஒலியும், புல்லாங்குழல் ஒலியும் இசைக்க இறைவன் அருளால் இன்பம் அடைவான்.**

### ஆசனம்

ஆசனம் என்கின்ற சமஸ்கிருத சொல்லுக்கு "அமர்தல்"அல்லது "உட்காருதல்" என்றும் உடலைப் பல்வேறு நிலைகளில் இருத்துதல் என்றும் பொருள். எனவே, யோகாசனம் என்பது, உடலைப் பல்வேறு நிலைகளில் குனிந்து, வளைந்து, நீட்டி, மடித்து, மடக்கிச் சுவாசத்தை முறையாகப் பின்பற்றி, மேற்கொள்ளும் உடற்பயிற்சியேயாகும். இதில் உடலை குறிப்பிட்ட தோரணையில் வைத்து மனத்திற்கும் உடலுக்கும் உறுதித்தன்மை கொண்டு வருவதாகும்.

### 1. அமர்ந்த நிலை ஆசனங்கள்


### பத்மாசனம்

**பொருள்:** பத்மாசனம் என்ற சொல், 'பத்மா' என்ற சமற்கிருதச் சொல்லிலிருந்து உருவானது. பத்மா என்பது, தாமரை என்று பொருள் தரும். பத்மாசனம் என்பது உடல் தாமரை வடிவில் (Lotus Pose) நிலைநிறுத்தி மேற்கொள்ளும் ஆசனமாகும். இது, 'கமலாசனம்' என்றும் அழைக்கப்படுகிறது.



XII Ethics_Lesson 8.indd 203 05-04-2019 11:16:34

www.tntextbook.org



பத்மாசனம்

**செய்யும் முறை**


- சமமான தரையில் இரண்டு கால்களையும் நீட்டி அமர்தல் வேண்டும்.
- இடது காலை இரண்டு கைகளாலும் பிடித்து, மெதுவாக மடக்கி, வலதுகால்மேல் வைக்க வேண்டும். வலது கால் பாதத்தை மடக்கி, இடதுகால் தொடை மீது வைக்கவும். இரண்டு குதிகால்களும் அடிவயிற்றைத் தொட்டுக்கொண்டு இருக்கவேண்டும். இரண்டு கால் முட்டிகளும் தரையைத் தொடவேண்டும். தலை, கழுத்து, முதுகுத்தண்டு ஆகியவை நேராக இருக்க வேண்டும்.
- கைகள் இரண்டையும் முழங்கால் மூட்டுகளின் மீது 'சின்' முத்திரையில் வைக்கவேண்டும்.
- ஐந்து இயல்பான மூச்சுவிடும் நேரம் இருந்தபின் முன்நிலைக்கு வரவும். பின்பு கால்களை மாற்றியமைத்துப் பயிற்சியை மேற்கொள்ளவேண்டும்.

**பயன்கள்**

- தியானம், பிராணாயாமம், நாடிசுத்தி போன்ற பயிற்சிகளை மேற்கொள்ள உகந்த ஆசனம்.
- மன ஒருமைப்பாடு ஏற்படுகிறது.
- முதுகுத்தண்டு நேராக அமைவதால் அடிவயிறு மற்றும் உள்ளுறுப்புகளின் இயக்கம் சீர்படுகிறது.
- பதற்றம், படபடப்பு, மனஇறுக்கம் தவிர்க்கப்படுகிறது.

## மச்சியாசனம்

**பொருள்:** மச்சியாசனம் என்ற சொல், 'மச்சம்' என்ற சமற்கிருதச் சொல்லிலிருந்து உருவானது. மச்சியா என்றால் மீன் என்று பொருள். எனவே, மச்சியாசனம் என்பது, மீன் வடிவத்தில் (Fish Pose) உடலை வளைத்து மேற்கொள்ளும் ஆசனமாகும்.



மச்சியாசனம்

**செய்யும் முறை**

- முதலில் பத்மாசன முறையில் அமர்தல்
- மெதுவாக பின்பக்கமாக மல்லாந்த நிலையில் சாய்ந்து கொள்ள வேண்டும். இதே நிலையில் கைகள் இரண்டையும் பின்பக்கமாக இடுப்புக்குக் கீழ் இருக்க வேண்டும்.
- கழுத்து, மார்பு இவற்றை உயர்த்தி முதுகை வளைக்கவும்.
- மூச்சை உள் இழுத்துத் தலையைப் பின்பக்கம் வளைத்து, உச்சந்தலையைத் தரையில் பதிய வைக்கவும். கைகளால் இருகால் பெருவிரல்களை பிடித்துக் கொண்டு மூச்சை வெளியே விடவும்.
- மூச்சை ஐந்து முறை வெளியே விட்டவுடன் இயல்பு நிலைக்கு வரவும்.

**பயன்கள் :**

- இடுப்பு, மார்பு, கை, தோள்பட்டை, தண்டுவடம் போன்றவற்றை வலுபெறச் செய்கிறது.




XII Ethics_Lesson 8.indd 204 05-04-2019 11:16:35

- வயிற்றில் உள்ள அனைத்து உள்ளுறுப்புகளின் பணியைச் செம்மையாக்குகிறது.
- தைமஸ், தைராய்டு, பிட்யூட்டரி மற்றும் பீனியல் சுரப்பிகளைத் தூண்டி, பல்வேறு நோய்களில் இருந்து பாதுகாக்கிறது.
- சுவாச மண்டலத்தை விரிவடையச் செய்து, சுவாசக் கோளாறுகளை நீக்குகிறது.
- கழுத்துவலி நீங்குகிறது.

## பச்சி மோத்தாசனம்

**பொருள் :** பச்சி மோத்தாசனம் என்ற சொல், 'பச்சிமா' மற்றும் 'உத்தானா' என்ற இரண்டு சமஸ்கிருதச் சொல்லிலிருந்து உருவானது. பச்சிமா என்பதன் பொருள், உடலின் பின்பகுதி. (Back of body) உத்தானா என்பது, நீட்டுதல் அல்லது நீட்சி என்று பொருள். எனவே, பச்சிமோத்தாசனா என்பது, அமர்ந்த நிலையில் முதுகை முன்பக்கமாக வளைத்தல் (Seated forward bend) எனப் பொருள்படும்.



பச்சி மோத்தாசனம்

### செய்யும் முறை

- சமமான தரையில் இரண்டு கால்களையும் நீட்டி அமர்தல் வேண்டும்.
- கைகள் பக்கவாட்டில் இருக்க வேண்டும்.
- மூச்சை இழுத்தபடி இரண்டு கைகளையும் பின்பக்கமாகக் கொண்டு வந்து, நேராக தலைக்கு மேல் உயர்த்தவும் மூச்சை வெளிவிட்டபடி மெதுவாக முன்பக்கம் குனிந்து கால் முட்டிகளை மடக்காமல், கால் பெருவிரல்களைப் பிடிக்கவும். நெற்றிப்பகுதி முழங்காலைத் தொட வேண்டும். இந்த நிலையில் இயல்பான ஐந்து சுவாசம் மேற்கொண்ட பின்பு முதல் நிலைக்கு வரவேண்டும்.

### பயன்கள்

- சர்க்கரை நோய் வராமல் தடுக்கிறது.
- சிறுநீரக பிரச்சனைகள் வராமல் தடுக்கிறது.
- அடிவயிற்றின் பெருக்கத்தைக் (தொப்பை) குறைக்கிறது.
- இடுப்பு வலி, மூலவியாதியைச் சரி செய்கிறது.
- உடலில் நெகிழ்வுத் தன்மையை மேம்படுத்துகிறது.
- ஜீரண சக்தியை அதிகரிக்கிறது.

## 2. நின்ற நிலை ஆசனங்கள்

நின்றநிலையில்செய்யும்ஆசனங்களான திரிகோண ஆசனம், பாதஹஸ்தாசனம், தாடாசனம் போன்றவையாகும்.



திரிகோண ஆசனம்

## திரிகோண ஆசனம்

**பொருள்:** திரிகோண ஆசனம் என்பது, 'திரிகோண' என்னும் சமஸ்கிருதச் சொல்லிலிருந்து உருவானது. 'திரிகோண' என்பதன் பொருள், 'முக்கோணம்' என்பதாகும். முக்கோண வடிவத்தில் உடலை நிறுத்தும் ஆசனமாகும்.

### செய்யும் முறை

- இரண்டு கால்களையும் 2 அடி தூரம் இருக்குமாறு அகற்றி நிற்கவேண்டும்.
- இரு கைகளையும் பக்கவாட்டில் மேலே உயர்த்தித் தோள்களுக்கு மட்டமாக வைத்துக்கொள்ளவேண்டும்.
- மூச்சை விட்டுக்கொண்டு இடப்பக்கம் வளைந்து இடதுகை விரல்களை இடதுபாதத்தின் வெளிப்புறத்தைத் தொடுமாறு வைத்துக்கொள்ளவேண்டும்.



XII Ethics_Lesson 8.indd 205 05-04-2019 11:16:36

இந்த நிலையில் சில விநாடிகள் இருக்கவேண்டும். இந்நிலையில் முகமானது, மேல்புறமாகத் திருப்பப்பட்டு வலதுகை விரல் நுனியைப் பார்க்கவேண்டும்.


- பிறகு மூச்சை இழுத்துக் கொண்டே உடலை நேராக நிமிர்த்திப் பழைய நிலைக்குக் கொண்டு வரவேண்டும்.
- வலது கைவிரல் நுனியால் வலது பாதத்தின் வெளிப்புறத்தைத் தொடுமாறு வலப்புறமாக வளைய வேண்டும். இந்நிலையில் சில விநாடிகள் இருந்து மீண்டும் மூச்சை இழுத்துக்கொண்டே நிமிரவேண்டும்.
- இம்மாதிரி மூன்றிலிருந்து ஆறுமுறை செய்யவேண்டும்.

**பயன்கள்**

- உடல் எடையைக் குறைக்க உதவுகிறது.
- முதுகுவலியை நீக்குகிறது.
- குழந்தைகள் உயரமாக வளர்ச்சி அடைய உதவுகிறது.
- கணுக்கால், முட்டி கால்களை வலுபெறச் செய்கிறது.
- சீரண மண்டலத்தை வலுபெறச் செய்கிறது.
- உடலில் சமநிலையைச் சீர்படுத்துகிறது.

## தாடாசனம்

**பொருள்:** 'தாடாசனம்' என்னும் சொல், சமஸ்கிருத சொல்லிலிருந்து உருவானது. 'தாடா' என்பது, 'மலை' (Mountain) என்று பொருள். எனவே, 'தாடாசனம்' என்பது, உடலை மலைபோன்ற அமைப்பில் நிறுத்தும் நிலையாகும்.



தாடாசனம்

**செய்யும் முறை**


- கால்கள் இரண்டையும் இணையாக வைத்துக் கொண்டு நிற்கவேண்டும்.
- குதிகால்களை உயர்த்தி நின்று கொண்டு மூச்சை இழுத்துக் கொண்டே இரண்டு கைகளையும் தலைக்கு மேலே உயர்த்த வேண்டும்.
- இதே நிலையில் ஐந்து அல்லது ஆறு வினாடிகள் நேரம் இருந்து மூச்சை விட்டுக் கொண்டே கைகளையும், குதிகால்களையும் இறக்க வேண்டும்.

**பயன்கள்**

- வளரும் பருவத்தினர் இப்பயிற்சியை மேற்கொள்வதால் உயரம் அதிகரிக்கும்.
- நுரையீரல் நன்கு விரிவடைகிறது.
- மார்பு பகுதி தசைகள் நன்கு வலுபெறுகிறது.
- தொடை மற்றும் குதிகால் தசைகள் வலுபெறுகிறது.
- தட்டை பாதம் குறைபாடு சரி செய்யப்படுகிறது.
- முழங்கால் வலி குறைகிறது.

## பாதஹஸ்தானம்

பொருள்: பாதஹஸ்தாசனம் என்ற சொல், 'பாதா' மற்றும் 'ஹஸ்தா' என்ற சமஸ்கிருதச் சொற்களால் ஆனது. பாதா என்பது பாதம் (Foot), ஹஸ்தா என்பது கை (Hand) எனப் பொருள்படும். எனவே, பாதஹஸ்தாசனம் என்பது பாதமும் கைகளும் இணைந்த ஆசனமாகும். பாதஹஸ்தாசனம் என்பது (Hand to Footpose) உடலை முன்னோக்கி வளைத்துப் பாதத்தைக் கைகளால் இணைத்து நிற்கும் நிலையாகும்.



பாதஹஸ்தானம்

**செய்யும் முறை**

- கால்களைச் சேர்த்து நேராக நிற்கவேண்டும்.
- கைகளை வணக்கம் செய்வதுபோல் வைத்துக் கண்களை மூடிக்கொண்டு, மனத்தைத் தளர்வாக வைக்க வேண்டும்.



XII Ethics_Lesson 8.indd 206 05-04-2019 11:16:36


- கைகளைத் தலைக்கு நேராக உயர்த்தி, உடம்பைப் பின்புறமாக வளைக்கவும். பின்பு மெதுவாக வெளிமூச்சை விட்டுக்கொண்டே முன்பக்கமாகக் குனியவும். கால் முட்டிகள் இரண்டும் வளையாமல் நேராக நிற்கவேண்டும்.
- இரண்டு கைகளின் உள்ளங்கைகளை இரண்டு கால்களின் பாதத்திற்கு அடியில் வைக்க வேண்டும். மூச்சை உள் இழுத்துக் கொண்டே உடலின் நடுப்பகுதியை மெதுவாக உயர்த்த வேண்டும்.
- கைகளை மெதுவாகப் பாதத்தின் அடியில் இருந்து எடுத்து, மூச்சை உள்ளே இழுத்துக் கொண்டு, நிமிர்ந்து பின்னோக்கி வளைந்து, முதல் நிலைக்கு மீண்டும் வரவேண்டும்.

**பயன்கள்**

- ஜீரண மண்டல உறுப்புகளின் செயல்திறனை மேம்படுத்துகிறது.
- கல்லீரல், மண்ணீரல் மற்றும் கணையம் இவற்றின் செயல்திறன் செம்மை அடைகிறது.
- நரம்புமண்டலம் மற்றும் தசைமண்டலங்களின் ஒருங்கிணைப்பு மேன்மையடைகிறது.
- உடலின் நெகிழ்வுத்தன்மை அதிகரித்துச் சமநிலை சீர்படுகிறது.

## 3. படுத்தநிலையில் செய்யும் ஆசனங்கள் (Lying Postures)

### சலபாசனம்



சலபாசனம்

**பொருள்:** 'சலபாசனம்' என்பது, 'சலப்' (Shalabh) என்ற சமஸ்கிருதச் சொல்லிலிருந்து உருவானது. 'சலப்' என்பதற்கு வெட்டுக்கிளி (Grasshopper or Locusts) என்று பொருள். வெட்டுக்கிளி போல் உடலை வைக்கும் ஆசனமாகும்.


**செய்யும் முறை**

- முதலில் குப்புறப்படுத்துக் கால்களைச் சேர்த்து, நேராக நீட்ட வேண்டும்.
- தாடையைத் தரையில் படும்படி வைத்து, இரண்டு கைகளையும் உடம்போடு ஒட்டித் தரையில் வைக்க வேண்டும்.
- பெருவிரலை உள்வைத்து, விரல்களை மடக்கி, ஆதி முத்திரையில் கைகளைத் தொடைக்கு அடியில் வைத்து, மூச்சை இழுத்துக் கொண்டே முழங்கால்களை மடக்காமல், இருகால்களையும் முடிந்தவரை மேலே உயர்த்தவேண்டும்.
- மூச்சை அடக்கி அதேநிலையில் சிறிது நேரம் இருக்கவும். பின்பு மூச்சை விட்டபடி முதல் நிலைக்கு மெதுவாக வர வேண்டும்.

**பயன்கள்**

- முதுகு, தண்டுவடம், இடுப்புப்பகுதி, கை, கால் தசைகள் வலுபெறுகின்றன.
- உடல் நன்னிலை மேம்படுகிறது
- மலச்சிக்கல் நீங்குகிறது.
- முதுகின் பின்பகுதி வலி சரியாகிறது.
- கல்லீரல், கணையம், சிறுநீரகம் போன்றவை வலுவடைகின்றன.

### தனுராசனம்



தனுராசனம்

**பொருள்:** தனுராசனம் 'தனுரா' என்னும் சமஸ்கிருதச் சொல்லில் இருந்து உருவானது. 'தனுரா' என்ற வார்த்தைக்கு 'வில்' என்று பொருள். எனவே தனுராசனம் என்பது உடலை



XII Ethics_Lesson 8.indd 207 05-04-2019 11:16:36

வில் போன்ற அமைப்பில் நிலைநிறுத்தும் ஆசனப் பயிற்சியாகும்.

**செய்யும்முறை**


- வயிற்றின் அடிப்பகுதி தரையில் படுமாறு படுத்தல் வேண்டும்.
- இரண்டு அல்லது மூன்று மூச்சுகளுக்கு உடலைத் தளர்வாக வைக்கவேண்டும்.
- உள்சுவாசத்தை எடுத்துக்கொண்டு, கால்களைப் பின்பக்கமாக மடக்கி, இரண்டு கணுக்கால்களையும் இரண்டு கைகளால் பிடிக்க வேண்டும்.
- மூச்சை இழுத்துக் கொண்டு தலை, மார்பு, தொடை மற்றும் கால்பகுதிகளை ஒரு சேர உயர்த்தி, உடலை வில்போன்று வளைக்க வேண்டும். இதே நிலையில் ஐந்து இயல்பான மூச்சு நேரம் இருந்து முன் நிலைக்கு வரவேண்டும்.

**பயன்கள்**

- உடல் பருமன் குறைக்கப்படுகிறது.
- சீரண மண்டலம் வலுபெற்று உடல் வலுவடைகிறது.
- முதுகெலும்பின் இறுக்கம் தளர்த்தப்பட்டு வளையும் தன்மை அதிகரிக்கப்படுகிறது.
- கூன் முதுகு சரிசெய்யப்படுகிறது.
- பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகள் சீராகின்றன.
- சர்க்கரை நோயைக் கட்டுப்பாட்டில் வைக்கிறது.

**குறிப்பு : இதய நோய் உள்ளவர்கள், கர்ப்பிணிப் பெண்களும் இந்த ஆசனம் செய்தல் கூடாது.**

## புஜங்காசனம்



புஜங்காசனம்

**பொருள்:** புஜங்காசனம் 'புஜங்கா' என்ற சமஸ்கிருத சொல்லிலிருந்து உருவானது. 'புஜங்' என்றால் பாம்பு (snake or serpent) படம் எடுப்பதுபோல் உடலை நிலைநிறுத்தும் ஆசனமாகும்.

**செய்யும்முறை**

- கவிழ்ந்து படுத்த நிலையில் கால்கள் சேர்ந்து இருக்க வேண்டும்.
- கைகளை மடக்கி உள்ளங்கைகளை மார்புக்கு அருகில் இருபுறத்திலும் வைத்துக் கொள்ளவேண்டும்.
- மூச்சை இழுத்துக் கொண்டே தலை, கழுத்து, மார்புப்பகுதியை தொப்புள் வரை மேலே உயர்த்தி பின்னோக்கி வளைக்க வேண்டும். அடிவயிறு தரையில் பதிந்து இருக்க வேண்டும்.
- மூச்சை வெளியேவிட்டு, ஐந்து இயல்பான மூச்சு நேரமிருந்து முதல் நிலைக்குத் திரும்ப வேண்டும்.

**பயன்கள்**

- கூன் முதுகு ஏற்படாமல் உடல் நன்னிலை மேம்படுத்துகிறது.
- முதுகுவலி நீங்குகிறது.
- மார்பு விரிவடைகிறது
- நுரையீரல் பிரச்சனைகளைச் சரிசெய்து, அதிகளவில் ஆக்சிஜனைச் சுவாசிக்கச் செய்கிறது.
- நரம்பு மண்டலத்தைச் சீராக்குகிறது.

## ஹாலாசனம்



ஹாலாசனம்



XII Ethics_Lesson 8.indd 208 05-04-2019 11:16:36

**பொருள்:** "ஹாலாசனா" என்ற சமஸ்கிருத வார்த்தையில் இருந்து உருவானது. இதன் பொருள் உழவு மேற்கொள்ள உதவும் கருவியான ஏர் கலப்பை போன்றதாகும் ஆகும். எனவே ஹாலாசனம் என்பது ஏர் வடிவத்தில் உடலை நிலைநிறுத்தும் ஆசனமாகும்.

**செய்யும் முறை**

- மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டும்.
- மூச்சை இழுத்தபடி இரண்டு கால்களையும் ஒன்று சேர்த்து 90 டிகிரி மேலே உயர்த்தவும்.
- இரண்டு உள்ளங்கைகளையும் விரிப்பில் அழுத்தி வைக்க வேண்டும்.
- தலைக்கு மேல் கால்களைக் கொண்டு சென்று முதுகை வளைத்துப் பாதத்தைத் தலைக்கு பின்புறம் தரையில் வைக்க முயற்சி செய்யவேண்டும்.
- ஐந்துஇயல்பானமூச்சுவிடும்நேரம்இருந்து, பின் ஆரம்ப நிலைக்கு வரவேண்டும்.


**பயன்கள்**

- நாளமில்லாச் சுரப்பிகள் அனைத்தும் தூண்டப்பட்டு அவற்றின் இயக்கம் சீரடைகிறது.
- சர்க்கரை நோய் கட்டுப்பாட்டில் வைக்கப்படுகிறது.
- தண்டுவடம் வலிமை பெற்று உடல் நெகிழ்வுத்தன்மை பெறுகிறது.
- இனப்பெருக்க உறுப்புகளின் செயல்திறன் அதிகரிக்கிறது.
- அதிக உடல் எடையைக் குறைக்கிறது.

**குறிப்பு: ஹெர்னியா, முதுகு தண்டுவடத்தின் தட்டு விலகியவர்கள், அதிக இரத்த அழுத்தம் உள்ளவர்கள், கழுத்தெலும்பு பாதிக்கப்பட்டவர்கள், தீவிர முதுகுவலி உள்ளவர்கள் இந்த ஆசனப் பயிற்சியை மேற்கொள்ளக்கூடாது.**

## பவனமுத்தாசனம்

**பொருள்:** 'பவனமுத்தாசனம்'என்பது பவனா மற்றும் முத்தா என்ற இரண்டு சமஸ்கிருத சொல்லில் இருந்து உருவானது. பவன் என்றால் காற்று, முத்தா என்றால் வெளியேற்றுதல் என்று பொருள். எனவே பவனமுத்தாசனம் என்பது, குடலில் உள்ள காற்றை வெளியேற்றும் ஆசனமாகும்.



பவனமுத்தாசனம்

**செய்யும்முறை**

- மல்லாந்து படுத்துக் கொள்ள வேண்டும்.
- இரண்டு முழங்கால்களை மடக்கி உடலோடு ஒட்டி வைத்துக் கொள்ள வேண்டும்.
- மூச்சை இழுத்துக் கொண்டு இரண்டு கால்களையும் கைகளால் இறுக்கமாகக் கட்டிக் கொள்ளவேண்டும்.
- மூச்சைவிட்டுக் கொண்டே தலையையும், மார்பையும் உயர்த்தி, முகவாய்க்கட்டை முழங்கால்களைத் தொடும்படி செய்யவேண்டும்.
- இந்த நிலையில் இருந்து ஐந்து மூச்சுகள் விட்ட பின் முதல் நிலைக்கு வரவேண்டும்.

**பயன்கள்**

- ஜீரணமின்மை மற்றும் மலச்சிக்கலை நீக்குகிறது.
- வாயுக்கோளாறுகளை நீக்குகிறது.
- முதுகுத்தசையை வலுபெறச் செய்து முதுகுவலியை நீக்குகிறது.
- இனப்பெருக்க மண்டலத்தை வலிமையுறச் செய்கிறது.
- மாதவிடாய் பிரச்சனையை நீக்குகிறது.
- ஹெர்னியா (குடல் இறக்கம்) வராமல் தடுக்கிறது.




XII Ethics_Lesson 8.indd 209 05-04-2019 11:16:36

**குறிப்பு: இரத்த அழுத்தம் உள்ளவர்கள், தண்டுவடம் விலகியவர்கள், குடல்புண் உள்ளவர்கள், பேறுகாலம் மற்றும் மாதவிடாய் காலங்களில் உள்ளவர்கள் இந்தப் பயிற்சியைச் செய்யக்கூடாது.**

## விபரீதகரினி

**பொருள்:** 'விபரீதா' என்னும் சொல், சமஸ்கிருத சொல்லிலிருந்து உருவானது. 'விபரீதா' என்றால் 'தலைகீழ்', 'கரினி' என்பது செய்தல் என்று பொருள்படும். விபரீதகரினி என்பது, தலைகீழாகச் செய்தல் என்று பொருள். எனவே விபரீதகரினி என்பது, கால்களை மேலே உயர்த்தி நிற்கும் ஆசனமாகும்.



விபரீதகரனி

**செய்யும்முறை**

- தலை மற்றும் கை, கால்கள் வானத்தைப் பார்த்தபடி படுக்க வேண்டும்.
- கால்கள் இரண்டையும் இடுப்புக்குச் செங்குத்தாக $90^0$ இல் வைத்துக்கொண்டு, கைகளை இடுப்புக்குத் துணையாகப் பிடித்துக் கொள்ளவேண்டும்.
- தலையின் பின்பகுதி உடலின் நடுப்பகுதியோடு தரையில் இருக்கவேண்டும்.
- இதேநிலையில் ஒரு நிமிடம் சீராக சுவாசித்துக் கொண்டு இருக்கவேண்டும். பின்பு மூச்சை வெளியே விட்டுக்கொண்டு தொடக்க நிலைக்கு வரவேண்டும்.

**பயன்கள்**

- இரத்த ஓட்டத்தைச் சீராக்குகிறது.
- மாதவிடாய் காலங்களில் ஏற்படும் தசைப்பிடிப்புகளை நீக்குகிறது.
- சுருங்கிய கணுக்கால்களையும், வெரிக்கோஸ் நரம்புகளையும் விடுவிக்கிறது.
- இனப்பெருக்க மண்டலத்தின் செயல்திறனை அதிகப்படுத்துகிறது.
- சீரண மண்டலத்தின் பணியைச் சீராக்குகிறது.
- கண் மற்றும் காதுகளின் பிரச்சனைகளைச் சீராக்குகிறது.
- சாதாரண முதுகுவலியைக் குணமாக்குகிறது.
- ஒற்றைதலைவலியிலிருந்து விடுவிக்கிறது.
- முகச் சுருக்கத்தை நீக்கி முதுமையைக் குறைக்கிறது.

**குறிப்பு: முதன்முதலில் பயிற்சி எடுப்பவர் சுவரின் அருகில் இருந்து அல்லது தனிநபர் உதவியுடன் மேற்கொள்ளவேண்டும்.**

## பிரத்யாகாரம் (உலக ஆசையில் இருந்து விடுபடுதல்)

பிரத்யாகாரம் என்னும் பிரிவு நம் ஐம்புலன்களைப் பயன்படுத்தி, மனத்தைப் புறத்திலிருந்து நீக்கி, ஒருமுகப்படுத்தி இதயத்தாமரையில் ஒரு கணம் நிலை நிறுத்துவதேயாகும். ஐம்புலன்களில் ஏற்படும் தூண்டலைத் தவிர்த்து, மனத்தைக் கட்டுப்படுத்தி ஒருநிலைப்படுத்தும் செயலாகும். இதில், இரண்டு புருவங்களுக்கு இடையே மனத்தை ஒருநிலைப்படுத்தி நிலை நிறுத்துதல். இரண்டு புருவங்களுக்கு இடையே உள்ள பகுதி 'அஞ்ன சக்ரா' (Ajna Chakra) அல்லது மூன்றாவது கண் என்று அழைக்கப்படுகிறது.

**திருமூலரின் கூற்று – பிரத்யாகாரம்**

*கண்டுகண்டு உள்ளே கருத்துற வாங்கிடில்*

*கொண்டுகொண்டு உள்ளே குணம்பல காணலாம்*

*பண்டுஉகந்து எங்கும் பழமறை தேடியை*

*இன்றுகண்டு இங்கே இருக்கலும் ஆமே.*

*(திருமந்திரம் – பாடல் எண் :578)*

கண்டு கண்டு உள்ளே கருத்துற வாங்கிடில் – மனமானது ஒரு நிலையில் இருப்பதில்லை. அலைந்து கொண்டிருக்கிறது. மரத்திற்கு மரம் தாவும் குரங்கைப்போல வெளியே அலையும் மனத்தை உள்ளே உணர்வோடு பொருத்தி இருக்கச் செய்தால்



XII Ethics_Lesson 8.indd 210 05-04-2019 11:16:36

கொண்டு கொண்டு உள்ளே குணம் பல காணலாம். இதனால் பல நன்மைகள் உண்டாவதை அறிய இயலும்.

## தாரணம்

தாரணம் என்பது முதல் உள்யோகமாகும். இதில் உருவ வழிபாட்டை மனத்தில் இருத்தி அதன்பால் கவனத்தை ஊன்றி இருத்தல் ஆகும். உள்யோகம் என்பது, உடம்பிற்கு உள்ளே நமது மன ஒருமைப்பாட்டைச் செலுத்துதலாகும்.

**திருமூலரின் கூற்று – தாரணம்**

*நல்வழி நாடி நமன்வழி மாற்றிடும்*

*சொல்வழி யாளர் சுருங்காப் பெருங்கொடை*

*இல்வழி யாளர் இமையவர் எண்திசைப்*

*பல்வழி எய்தினும் பார்வழி ஆகுமே.*

*(திருமந்திரம் – பாடல் எண் :637)*

**பொருள்:** நல்வழியாகிய தாரணைப் பயிற்சியினை நாடி, அம்முறைப்படி நடக்க யமன் வரும்போதும் அவன் வரும்வழி தடைபடும். தாரணையாளர் தேவலோகத்தில் எங்கும் சென்று வரும் புகழினை பெறுவர்.

## தியானம்

தியானம் என்பது மனதை ஒரு பொருளின் மீது குவித்து, ஒருமுகப்படுத்தும் செயல்ஆகும். மனம் எங்கிருந்து புறப்படுகிறதோ, அது புறப்படுகின்ற இடத்திலேயே மனத்தைக் கொண்டுவந்து நிலைநிறுத்திப் பழகுவதாகும். மனம் என்பது நமது உயிராற்றல். உயிர் சக்தியினுடைய படர்க்கை நிலைதான் மனமாக இருக்கிறது. அந்த மனத்தை உயிர் மேலேயே லயிக்கச் செய்வது தியானமாகும்.

**திருமூலரின் கூற்று – தியானம்**

*தூங்க வல்லார்க்கும் துணைஏழ் புவனமும்*

*வாங்க வல்லார்க்கும் வலிசெய்து நின்றிட்டுத்*

*தேங்க வல்லார்க்கும் திளைக்கும் அமுதமும்*

*தாங்க வல்லார்க்குத் தான்இடம் ஆமே.*

*(திருமந்திரம் – பாடல் எண் :638)*

தியான சித்தி பெற்றவன் இடமானவனாவான். தியானம்கைகூடியவர்கள் ஏவலுக்குத் தேவரும் மூவரும் கட்டுப்படுவர் என்பது பொருள்.

## சமாதி

ராஜயோகத்தின் எட்டு நிலைகளில் சமாதி இறுதிநிலையாகும். சமாதி என்ற சமஸ்கிருத சொல்லிற்கு ஒன்றுபடுதல் அல்லது ஒன்றிணைதல் என்று பொருள். சமாதி நிலையில் ஒருவரது உடல் மற்றும் ஐம்புலன்கள் ஓய்வு நிலைக்கு வருகின்றன. இது சுய விழிப்புணர்வு பெற்ற அமைதியான உணர்வு நிலையாகும். எனவே சமாதி நிலை என்பது, இறப்பு அல்ல; உச்ச நிலை அனுபவமாகும்.

**திருமூலரின் கூற்று – சமாதி**

*காரியம் ஆன உபாதியைத் தான்கடந்து*

*ஆரிய காரணம் எழும்தன் பால்உற*

*ஆரிய காரணம் ஆய தவத்திடைத்*

*தார்இயல் தற்பரம் சேர்தல் சமாதியே*

*(திருமந்திரம் – பாடல் எண் : 639)*

### ஹதயோகா

ஹதயோகாவானது யோகாப் பிரிவுகளில் ஒன்று. 'ஹத' என்பதன் பொருள் "ஆற்றல்" (Force). இது உடல் நுட்பத்தின் மறைமுக ஆற்றல் எனப் பொருள்படுகிறது.

ஹதயோகா நமது உடலுக்கு வலிமையும், பொலிவும் தூய்மையையும் பெறுவதற்குரிய ஓர் உன்னத சாதனமாகும். "ஹத" என்னும் சொல்லில் உள்ள "ஹ" என்னும் எழுத்து சூரியனையும் "த" என்னும் எழுத்து சந்திரனையும் குறிப்பதாகும். "ஹதயோகம்" என்பது சூரியனையும் சந்திரனையும் இணைக்கின்றது என்று பொருள்படுகிறது.



XII Ethics_Lesson 8.indd 211 05-04-2019 11:16:36

www.tntextbook.org

உயிர்களைப் பற்றியுள்ள ஆணவ மலத்தால் உண்டாகும் ஏழு துன்பங்களைத் தாண்டி, பரம்பொருள் சிந்தனையில் ஒன்றி, முறையாக புலனடக்கி, யோக நிட்டையில் தன்னை மறந்து, புறத்தை மறந்து இருப்பதே சமாதியாகும்.

## சூரிய நமஸ்காரப் பயிற்சிகள்

எல்லா உயிர்களுக்கும் சூரியனே ஆதாரமாகும். யோகாசனத்தில் முறைப்படுத்தப்பட்டுள்ள சூரிய நமஸ்காரப் பயிற்சிகளை மேற்கொண்டால், பல்வேறு பலன்களைப் பெறலாம். சூரிய நமஸ்காரம் காலை, மாலைப் பொழுதுகளில் செய்யலாம்.

யோகாசனமும், பிராணாயாமமும் இணைந்ததுதான் சூரிய நமஸ்காரம். இதை ஆசனப் பயிற்சிகளுக்கு முன்பு செய்வதால் உடலில் தளர்வும், இறுக்கமும், விறைப்பும் நீங்கித் தயார் நிலைக்கு கொண்டு வருகிறது. இது 12 ஆசன நிலைகளைக் கொண்ட ஒரு சுழற்சியாகும். இதனை 3 முறை, 4 முறை செய்யத் தொடங்கி 12 முறை வரை செய்யலாம்.

செய்முறை விளக்கம்

## சூரிய நமஸ்காரத்தின் 12 நிலைகள்



சூரிய நமஸ்காரம்

**1. பிராணமாசனம் (நிலை : 1 )**

விரிப்பின் மீது கிழக்குத் திசை நோக்கிக் கைகளைக் கூப்பி, நமஸ்கார முத்திரையுடன் கால்கள் இரண்டையும் சேர்த்து இயல்பான மூச்சுடன் நிற்க வேண்டும்.

**2. ஹஸ்த உத்தாசனம் (நிலை : 2)**

மூச்சை இழுத்துக் கொண்டே கைகள் இரண்டையும் தலைக்குமேல் தூக்கி, உடல் பகுதியை முட்டி மடங்காமல் பின்னோக்கி வளைக்க வேண்டும்.

**3. பாத ஹஸ்தாசனம் (நிலை : 3)**

மூச்சை விட்டுக்கொண்டே கால்களை மடக்காமல், முன்புறமாகக் குனிந்து கைகளைப் பாதங்களின் பக்கவாட்டில் தரையில் வைத்துக் கொண்டு நெற்றி முழங்காலைத் தொட முயற்சிக்க வேண்டும்.

**4. அஸ்வ சஞ்சலான ஆசனம் (நிலை : 4)**

மூச்சை விட்டுக்கொண்டே வலது காலை எடுத்துப் பின்னால் தள்ளி வைக்க வேண்டும். இடது காலை இரண்டு கைகளுக்கு இடையில் வைத்து, முகம் நேராகப் பார்க்கவேண்டும்.

**5. பர்வதாசனம் (நிலை : 5)**

இடது காலை எடுத்துப் பின்னால் வலது காலுடன் சேர்க்கவேண்டும். மூச்சை விட்டுக்கொண்டே கைகளையும், கால்களையும் இருந்த இடத்திலிருந்து நகர்த்தாமல், இடுப்பை மேலே தூக்கித், தலையைத் தரையை நோக்கிக் கொண்டு வரும்போது பாதம் தரையில் பதிந்திருக்க வேண்டும். கவிழ்க்கப்பட்ட ஆங்கில எழுத்து V போன்று இருக்க வேண்டும்.

**6. அஸ்டாங்க நமஸ்காரம் (நிலை : 6 )**

மூச்சை விட்டுக்கொண்டே கைகளை நகர்த்தாமல் உடலை முன்புறம், எடுத்துச் சென்று நெற்றி, முழங்கால், மார்பு ஆகியவற்றை மட்டும் தரையில் படும்படி செய்யவும். புட்டங்களை மேலே உயர்த்தி நிறுத்தவும். இரு உள்ளங்கைகள், இருபாதங்கள், இருமுழங்கால் மூட்டுகள் மற்றும் நெற்றி, மார்பு ஆகிய 8 பகுதிகள் தரையில் பட வேண்டும்.



XII Ethics_Lesson 8.indd 212 05-04-2019 11:16:37

*7.* **புஜங்காசனம் (நிலை : 7)**

குப்புறப்படுத்த நிலையிலிருந்து மூச்சை இழுத்துக்கொண்டே கைகளை முன்பக்கமாக ஊன்றிப் பாம்பு படம் எடுப்பதுபோல் தலையையும் மார்புப் பகுதியையும் மேலே தூக்க வேண்டும். அடி வயிற்றுப் பகுதி தரையில் இருக்க வேண்டும்.

*8.* **பர்வதாசனம் (நிலை : 8)**

மூச்சை விட்டுக்கொண்டே கைகளையும் கால்களையும் இருந்த இடத்திலிருந்து நகர்த்தாமல் இடுப்பை மேலே தூக்கித் தலையைத் தரையை நோக்கிக் கொண்டு வரவும். பாதம் தரையில் பதிந்திருக்க வேண்டும். கவிழ்க்கப்பட்ட ஆங்கில எழுத்து V போன்று இருக்கவேண்டும். (இங்கு ஐந்தாம் நிலையை ஒப்பிடுக.)

*9.* **அஸ்வ சஞ்சலான ஆசனம் (நிலை : 9)**

மூச்சை இழுத்துக்கொண்டே இடது காலை எடுத்துப் பின்னால் தள்ளி வைக்கவேண்டும். வலது காலை இரண்டு கைகளுக்கு இடையில் வைத்து, முகம் நேராகப் பார்க்க வேண்டும். (நான்காவது நிலையை ஒப்பிடுக.)

*10.* **பாதஹஸ்தாசனம் (நிலை : 10)**

மூச்சை விட்டுக்கொண்டே இடது காலை முன் காலுடன் இணைத்துக் கால்களை மடக்காமல் முன்புறமாகக் குனிந்து கைகளைப் பாதங்களின் பக்கவாட்டில் தரையில் வைத்துக் கொள்ளவும். நெற்றி முழுங்காலைத் தொட முயற்சிக்க வேண்டும். (மூன்றாவது நிலையை ஒப்பிடுக.)

*11.* **ஹஸ்த உத்தாசனம் (நிலை : 11)**

மூச்சை இழுத்துக்கொண்டே கைகளைத் தலைக்குமேல் தூக்கி, உடலைப் பின்புறமாக வளைக்க வேண்டும். (இரண்டாவது நிலையை ஒப்பிடுக.)

*12.* **பிராணமாசனம் (நிலை : 12)**

நிமிர்ந்து நின்று இரு கைகளையும் கூப்பியவாறு வணங்கிப்பின் உடலை தளர்த்திக் கொள்ளவும் (முதல் நிலையை ஒப்பிடுக) இரண்டாம் முறை செய்யும்பொழுது நிலை 4 மற்றும் 9 –இல் காலை மாற்றிச் செய்ய வேண்டும்.

## யோகப் பயிற்சியினை மேற்கொள்வதால் ஏற்படும் நன்மைகள் (Benefit of Yoga)

யோகா என்பது உடல், மனம் மற்றும் ஆன்மாவை இணைத்தல் என்ற போதிலும் யோகாவைக் கற்றுணர்ந்த வல்லுநர்கள் தங்களது ஆராய்ச்சியின் மூலம் யோகப் பயிற்சியின் நன்மைகளைக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்துகின்றனர். அவை:

- உடலியல் நன்மை [Physiological Benefits]
- உளவியல் நன்மை[Psychological Benefits]
- நோய் நீக்கும் மருத்துவப் பயன் [Therapeutic Benefits]
- உடல் நலப் பயன்[Physical Benefits]

## உடலியல் நன்மை [Physiological Benefits]

**1. உடல் உறுப்பு மண்டலங்களில் ஏற்படும் நன்மைகள்**

- இரத்த ஓட்ட மண்டலம் சீரடைகிறது
- தசை மண்டலம் வலுப்பெறுகிறது.
- சுவாசத் திறன் அதிகரித்துச் சுவாச மண்டலம் மேன்மையடைகிறது.
- நரம்பு மண்டலம் வலுப்பெற்று தசை மற்றும் நரம்புகளின் ஒருங்கிணைப்பு வலிமையடைகிறது.
- ஜீரண மண்டலச் செயல்பாடுகள் மேன்மையடைந்து உடல் வளர்ச்சி சீராக அமைகிறது.
- நாளமில்லாச் சுரப்பிகளின் சுரப்புத் தன்மை சீராக அமைகிறது.

## உளவியல் நன்மை [Psychological Benefits]

- எண்ணங்கள் சிதறடிக்கப்படாமல் மனம் ஒருநிலைப்படுத்தப்படுகிறது.
- மன இறுக்கம், மன அழுத்தம், படபடப்பு போன்றவைகள் ஏற்படாமல் தடுத்து மனபாதிப்பைக் குறைக்கிறது.



XII Ethics_Lesson 8.indd 213 05-04-2019 11:16:37

www.tntextbook.org

### திருமூலரின் கூற்று: யோகாசனப் பயிற்சியின் பயன்

*அஞ்சனம்போன்று உடல்ஐஅறும் அந்தியில்*

*வஞ்சக வாதம் அறும்மத்தி யானத்தில்*

*செஞ்சிறு காலையில் செய்திடில் பித்தறும்*

*நஞ்சறச் சொன்னோம் நரைதிரை நாசமே.*

*(திருமந்திரம் – பாடல் :727)*

பொருள்: நமது உடலில் இருக்கின்ற கப நோயானது, மாலையில் செய்யப்படும் யோகாசனப் பயிற்சியால் நீங்கும். நடுப்பகலில் யோகாப் பயிற்சியினை மேற்கொண்டால் வாத நோய் தீரும். அதிகாலை செய்யக்கூடிய யோகப் பயிற்சியால் பித்த நோய் தீரும். இவ்வாறு யோகாசனப் பயிற்சியால் கப நோய், பித்த நோய், வாத நோய் இவை நீங்கும் என்பது மட்டும் அல்லாது நரையும், கண்பார்வையில் ஏற்படும் குறைகளும் நீங்கும் என்கிறார் திருமூலர்.

- மனவெழுச்சியைத் திறம்பட கையாள உதவுகிறது.
- நிதானத்தை இழக்காமல், சுயமாகத் தெளிவான சிந்தனையுடன் முடிவு எடுக்கும் திறன் வளர்கிறது.
- அன்றாடப் பணிகளை சுறுசுறுப்பாகவும், புத்துணர்வுடனும் செயல்பட உடல் மற்றும் மனம் தயாராகிறது.
- மனம் ஒருநிலைப்படுத்தப்பட்ட செயல்களின் இலக்கை அடைய உதவுகிறது.
- நினைவாற்றல் மேம்படுகிறது.

### நோய் நீக்கும் மருத்துவப் பயன் [Therapeutic benefits]

- வாயுக் கோளாறு, ஜீரணக் கோளாறு மற்றும் மலச்சிக்கலைக் குணப்படுத்துகிறது.
- இரைப்பை, குடல் நோய்களைத் தீர்க்கிறது.
- உடல் பருமன், அனைத்து வகை நோய்களுக்கும் அடிப்படையாக விளங்குவதால் தொப்பை பெருக்கத்தைக் குறைக்கிறது.
- தைராய்டு பிரச்சனைகளுக்குத் தீர்வு கிடைக்கிறது.
- சர்க்கரைவியாதியைக்கட்டுப்படுத்துகிறது.
- ஆஸ்துமா என்னும் சுவாச நோய் குணமாகிறது.
- ஆண்மை குறைபாடு நீங்குகிறது.
- ஒற்றைத் தலைவலி, இரத்தக் கொதிப்பு போன்றவற்றைக் குணமாக்குகிறது.

### தியான பலன் திருமூலரின் கூற்று

*நயனம் இரண்டும் நாசிமேல் வைத்திட்டு*

*உயர்வெழா வாயுவை உள்ளே அடக்கித்*

*துயர்அற நாடியே தூங்க வல்லார்க்குப்*

*பயன்இது காயம் பயம்இல்லை தானே.*

*(திருமந்திரம் – பாடல் :605)*

பொருள்: கண்கள் இரண்டையும் மூக்கு நுனியில் வைத்து, பிராணனை உள்ளே நிறுத்தித் தொடர்ந்து நீங்காத நாடியில் அசையாது நிலைத்து இருப்பவர்களுக்குச் சரீரம் அழியுமே என்ற பயம் கிடையாது. இதுவே தியான பலன் ஆகும்.

### உடல் நலப் பலன் [Physical Benefits]

- உடல் தோற்றப் பொலிவுடன் காணப்படுகிறது.
- உடலைச் சுறுசுறுப்பாக இயங்க வைக்கிறது.
- சோர்வின்றிச் செயல்பட உதவுகிறது.
- உடலின் சமநிலை சீர்படுகிறது.
- உடலின்நெகிழ்வுத்தன்மைஅதிகரிக்கிறது.
- உடலில் சோர்வின்றி நீண்ட நேரம் பணிகளைச் செய்ய உதவுகிறது.



XII Ethics_Lesson 8.indd 214 05-04-2019 11:16:37

- நோய் எதிர்ப்புச் சக்தியை ஏற்படுத்துகிறது.
- உடல் ஆரோக்கியம் மேம்படுகிறது.
- கண்பார்வை குறைபாடு நீங்குகிறது.
- நரம்பு தளர்ச்சி மற்றும் ஹெர்னியா குறைபாடு நீங்குகிறது.

### மனம் மற்றும் உடல் வளர்ச்சியில் யோகாவின் பங்கு

இன்றைய நவீன அறிவியல் காலத்தில், மனிதர்களின் மனப்போக்குகளும் எண்ணங்களும் முற்றிலும் மாறுபட்டு இயந்திரநிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றன. இந்த இயந்திர உலகத்தில், மனிதர்கள் பொருட்செல்வத்தைச் சேர்ப்பதிலேயே தம் வாழ்நாள்களைச் செலவிடுகிறார்கள். இதனால் அவர்கள் கலை, பண்பாடு, நாகரிகம் மற்றும் ஆன்மிகம் போன்றவற்றில் ஈடுபடாமல் பதற்றமான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களின் மனம் சிதறிச்சீரழியும் நிலையிலிருந்து, அதன் பேராற்றலை ஒன்று திரட்டி ஒருமுகப்படுத்தி, இலக்கை நோக்கிச் செலுத்தி, மன அமைதி பெற உதவும் மிகப்பெரிய கருவியாகத் தியானம் விளங்குகிறது.

நமது இந்திய யோகக்கலைகளில் பல்வேறு வகையான உடற்பயிற்சிகள் உள்ளன. அவற்றில் யோகாசனம் இயற்கையான, சிறந்த, ஒரு வாழ்வியல் கலையாகும். இக்கலை, ஒவ்வொரு தனி மனிதனுக்கும் நலத்தையும் மனத்தூய்மையையும் பெற்று வாழ உதவுகின்றது. இவ் 'யோகக் கலைப் பயிற்சியானது சாதி, சமயம், இனப் பாகுபாடின்றி அனைவராலும் மேற்கொள்ளப்படும் நல்வாழ்விற்கு உகந்த யோகமுறைகளாகும். அறிவியல் முறைப்படி மேற்கொள்ளப்பட்ட யோகக்கலை ஆராய்ச்சியானது, மனிதர்களது உடல் நெகிழ்வுத்தன்மையையும் உடல்தகுதித் திறனையும் மேம்படுத்தி வருகிறது. மனம், குழப்பம் அடையாமலும், மன அழுத்தமில்லாமலும் வாழ உதவுகிறது. ஐம்புலன்களைக் கட்டுப்படுத்தி, ஒழுக்க நெறியுடன் வாழவும், நினைவாற்றலுடன் கூடிய அறிவை மேம்படுத்தவும் இக்கலை உதவுகின்றது. அழகிய முகத்தோற்றப் பொலிவைப் பெறவும் வயோதிகத் தோற்றப்பொலிவைத் தள்ளிப்போடவும் யோகக் கலைகள் உதவுகின்றன.

### யோகா பயிற்சியினை மேற்கொள்ளும்போது, பின்பற்ற வேண்டிய வழிகாட்டு நெறிமுறைகள் [Guidelines for Practicing Yoga]

பொதுவாக யோகா பயிற்சியில் ஆசனம், பிராணயாமம் மற்றும் தியானப் பயிற்சிகளே அதிக அளவில் மேற்கொள்ளப்படுகின்றன. இவ்வகை யோகாப் பயிற்சிகளை மேற்கொள்ளும் போது பின்பற்ற வேண்டிய வழிமுறைகள்:

- அதிகாலையில் காலைக் கடன்களை முடித்துவிட்டுக் காற்றோட்டம் உள்ள இடத்தைத் தேர்வு செய்து பயிற்சியை மேற்கொள்ள வேண்டும்.
- சமமான தரையில் துண்டு அல்லது விரிப்பின் மேல் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.
- ஆசனப் பயிற்சியை மேற்கொள்ளும் முன்னர், தசைகளுக்குச் சூடேற்றும் பயிற்சியினை [Warming up Exercises] மேற்கொள்ள வேண்டும்.
- முதன்முதலில் ஆசனப்பயிற்சியை கற்றுக்கொள்பவர்கள் எளிமையான ஆசனப் பயிற்சிகளை மேற்கொள்ளவேண்டும் [Simple to complex]
- ஆசனப்பயிற்சியினை மேற்கொள்ளும்போது, சுவாசத்தை உணர்ந்து உள்மூச்சு மற்றும் வெளிமூச்சு சுவாசத்துடன் செய்ய வேண்டும்.
- ஆசனப்பயிற்சிகளை முறையாகக் கற்றுணர்ந்த ஆசான்களின் வழிகாட்டுதலின்படி பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.
- ஆசனப்பயிற்சியினை உணவு உண்பதற்கு முன்னரும், உணவு உண்டபின் குறைந்தது

மூன்று மணி நேரம் கழித்தே மேற்கொள்ள வேண்டும்.

- ஆசனப்பயிற்சிகளை விரைவாக செய்யக்கூடாது.
- பத்மாசனம் அல்லது வஜ்ராசனம் நிலையிலிருந்து பிராணாயாமம் பயிற்சி மேற்கொள்ள வேண்டும்.
- நாசிகளைச் சுத்தம் செய்தபின்னரே, பிராணாயாமப் பயிற்சியினை மேற்கொள்ள வேண்டும்.
- உள்மூச்சும் வெளிமூச்சும் சம நேரத்தில் இருக்குமாறு பயிற்சி செய்ய வேண்டும்.
- காலை மாலை இருவேளைகளிலும் பிராணாயாமப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.
- உடலில் உள்ள உறுப்புகளைத் தளர்த்திக் கண்களை மூடித் தியானத்தைத் தொடங்க வேண்டும்.
- சுவாசத்தின் மீது கவனத்தைச் செலுத்தித் தியானம் மேற்கொள்ள வேண்டும்.
- மனம் ஒருநிலைப்படுவதற்குக் கருப்பொருளாக நாம் வணங்கும் தெய்வ வடிவை அல்லது பிடித்த உருவத்தை மனதில் ஒருநிலைப்படுத்தி நிறுத்துதல் வேண்டும்.
- இறை மந்திரங்களை உச்சரித்துத் தியானத்தை மேற்கொள்ளவேண்டும்.
- ஒரு நிலைப்படுத்திய பின்பு, தியான நேரத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும்.

## குருவின் மேன்மை

ஞானிகளும், முனிவர்களும் தம்மிடம் சீடராக வரும் மாணவர்களின் உடல், மனம், உயிரோட்டம் போன்றவற்றை மேம்படுத்த பல்வேறு முறைகளைப் பின்பற்றி வந்தனர். வேத காலத்தில் கல்வி **"குருகுலம்"** முறையில் கற்பிக்கப்பட்டது. அக்காலத்தில் கல்வியின் நோக்கம் ஆன்ம விடுதலையேயாகும். கல்வி முறையில் செவிவழியாகச் சூத்திரங்கள் கற்பிக்கப்பட்டன.குருகுலக்கல்வியில் குரு–சீடன் உறவு போற்றத்தக்கதாக இருந்தது. மாதா, பிதா, குரு, தெய்வம் என்ற வரிசையில் தெய்வத்திற்கு முன்பாக வைத்து, குரு வணங்கப்படுகிறார். குருவின் ஆசியோடும் மேற்பார்வையின் கீழும் கல்வி கற்பதே சாலச் சிறந்ததாகும்.

குரு என்றால் 'ஒளி' என்று பொருள், இருளில் இருக்கும் மாணவனின் மனதை வெளிச்சத்திற்குக் கொண்டு வருபவர் குரு ஆவார். ஒரு மாணவன் குருவிடம் 12 ஆண்டுகள் கல்வி கற்கவேண்டும். அதற்குப் பிறகுதான், குரு தனது நுட்பங்களைச் சீடனுக்குக் கற்றுக் கொடுப்பார். புத்தரின் வாழ்க்கையில் குரு சிஷ்யன் முறை மிகவும் போற்றப்படக்கூடியதாக இருந்தது. புத்தரின் சீடர்கள் வாழ்க்கையில் அதிகம் வெற்றி அடைந்தவர்களாகவே காணப்பட்டனர், அவர்கள் மனத்தைத் தியானத்தால் வெற்றி கண்டு இன்றும் உலகமெங்கும் பரவி இருக்கிறார்கள். ஒரு மாணவன் குருவிடம் கற்றுக் கொள்வது மிகவும் குறைவாக இருந்தாலும், அவன் கற்ற கல்வி வாழ்க்கையில் எந்தச் சூழ்நிலையிலும் அவனுக்கு உதவியாக அமையும். அவன் கனவிலும்கூட, குருவை மறக்கமாட்டான். யோகக் கலையில் உள்ள குருசிஷ்யன் முறை, எந்தக் காலத்திலும் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

## யோகா பயிற்சியும் உணவு முறைகளும்

நாம் உட்கொள்கின்ற உணவுப் பொருட்களில் பல வேதிப் பொருள்கள் உள்ளடங்கி இருக்கின்றன. இந்த வேதிப் பொருட்கள் வளர்சிதை மாற்றத்தின் மூலம் உடல் வளர்ச்சிக்கும் செயல்பாட்டிற்கும் தேவையான ஆற்றலை வழங்குகின்றன. உணவூட்டமானது உணவை உள்ளிழுத்தல், செரித்தல், உட்கிரகித்தல் மற்றும் தன்வயமாக்குதல் போன்ற பல்வேறு நிலைகளை உள்ளடக்கியதாகும். எனவே, உணவூட்டம் என்பது நாம் உண்ணும் உணவு எவ்வாறு உடலுக்கு பயனுள்ளதாக மாறுகின்றது என்ற செயல்பாட்டைக் குறிப்பதாகும்.

பொதுவாக உணவைத் தேர்ந்தெடுப்பது சுவையின் அடிப்படையிலும், ஊட்டச்சத்தின் அடிப்படையிலும், சமயம் மற்றும் கலாச்சார



XII Ethics_Lesson 8.indd 216 05-04-2019 11:16:37

அடிப்படையிலும், உளவியல் மற்றும் சமூகவியல் அடிப்படையிலும் இவற்றுக்கும் மேலாக அவரவர் தம் பொருளாதார நிலையிலும் உணவுப் பொருள்களைத் தேர்ந்தெடுக்கின்றனர். எனவே, உணவு என்பது உணர்வைத் தருவதாய் அமைய வேண்டும்.

## உணவின் வகைகள்

கீரை, காய்கறி, பழங்கள், தானியங்கள், தேங்காய், வாழைப்பழம் போன்றவை இயற்கையில் கிடைக்கும் உணவுப்பொருள்களாகும். இவற்றை உணவாக எடுத்துக் கொள்வதால் நலம் மேன்மையடைவதுடன் நோய் எதிர்ப்பு ஆற்றலும் பெருகுகிறது. பச்சைக் காய்கறிகளை உண்பதால், நார்சத்துகளும் தாது உப்புகளும், உயிர்சத்துகளும், உடலுக்கு நேரடியாய்க் கிடைக்கின்றன.

வேர்க்கடலை, எள், தேங்காய் போன்ற எண்ணெய் வித்துகளை முளைகட்டிச் சாப்பிடும்போது, கருப்பட்டி அல்லது வெல்லம் சேர்த்துச் சாப்பிடவேண்டும். முளைகட்டிய தானியங்களைக் காலை உணவோடுதான் உண்ணவேண்டும். தெங்கு, மா, பலா, நெல்லி, பேரீச்சை, இலந்தை, நாவல், சப்போட்டா, வாழை, பப்பாளி, மாதுளை, கொய்யா, எலுமிச்சை, சாத்துக்குடி, திராட்சை, தக்காளி போன்றவகையில் வரிசைப்படுத்தி, முதல் தரமானவைகளை அதிகம் பயன்படுத்துவது மிகச்சிறந்தது.

பழங்கள் உயர்வாகச் சொல்லப்பட்டாலும்,சிலகிழங்குவகைகளையும் உட்கொள்ளலாம் எனப் **பதார்த்த சிந்தாமணி** கூறுகிறது. அவை, மஞ்சள், இஞ்சி, கருணைக் கிழங்கு போன்றவைகளாகும். புலால் உணவைத் தவிர்த்துக் "**கனிகளை உண்போம், பிணிகளை வெல்வோம்**".

## யோகாவும் அறவியலும்

யோகாவும் அறவியலும் ஒன்றோடு ஒன்று உள்ளார்ந்தவை. எனவே, அறவியலைப் பின்பற்ற வேண்டுமென்றால் யோகா முறைகளை அறிந்திருக்க வேண்டும். யோக முறைகளைப் பின்பற்ற, பதஞ்சலி முனிவரின் யோக சூத்திரங்களையும், திருமூலரின் திருமந்திரத்தையும், அடிப்படையில் அமைந்த அறநெறிகளையும் நாம் பின்பற்றவேண்டும்.

- **அகிம்சை:** வன்முறையில் ஈடுபடாமல் மகாத்மா காந்தி போல் அகிம்சையைப் பின்பற்றிச் செயல்படும் நிலையைக் குறிப்பிடுகிறது.
- **சத்தியம்:** மனம், மொழி, உடல் மூன்றிலும் உண்மையைப் பின்பற்றி, இறைவனின் குணத்தைப் பெறும் நிலை ஏற்படுகிறது.
- **அஸ்தேயம்:** அஸ்தேயம் என்பதற்குத் "திருடாமை" என்று பொருள். மனிதன் தமக்கு உரிமையில்லாதவற்றைத் தன்னுரிமைப்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதே திருடாமை. இதில், மனத்தால்கூட பிறர் பொருளை அடையக் கூடாது என்ற எண்ணம் உருவாகிறது.
- **பிரம்மச்சரியம்:** மனிதன் ஐம்புலன்களையும் தன்னடக்கத்துடன் கட்டுப்படுத்தி இச்சைகளை ஒழித்து வாழும் அறநெறிப் பண்பு உருவாகிறது.
- **அபரிக்கிரஹம்:** அபரிக்கிரஹம் என்றால் தேவைக்கு அதிகமான பொருள்கள் சேர்க்காமல் மகிழ்ச்சியாக இருத்தல். இதில், வறுமையிலும் நேர்மை; ஏழ்மையிலும் உண்மையைப் பின்பற்றி வாழும் அறநெறி பண்பு உருவாகிறது.
- **லௌச்சனம்:** லௌச்சனம் என்பதற்குத் தூய்மை என்று பொருள். இதில் உடல், உடை, இருப்பிடத்தைச் சுத்தமாக வைத்திருக்கும் பண்பு வளர்க்கிறது.
- **சந்தோசம்:** சந்தோசம் என்பதற்கு, அளவற்ற ஆசை இல்லாமல் கிடைத்தவற்றில் மனநிறைவுடன் மகிழ்ச்சியாக வாழும் பண்பை வளர்க்கிறது.
- **தபஸ்/தவம்:** தபஸ் அல்லது தவம் என்பது, உடலை வருத்திச் சுகங்களைக் குறைத்துக் கொள்வதும் நோன்பை மேற்கொண்டு எளிமையாக வாழும் பண்பையும் வளர்க்கிறது.

- **ஸ்வாத்தியாமம்:** ஸ்வாத்தியாமம் என்பதற்குத் தன்னைப்பற்றி அறிவது எனப் பொருள்படும். மனிதன் தன்னைப் பற்றி அறிவதில் ஒரு பகுதியாக ஆன்மிகப் புத்தகங்கள், வேத நூல்கள், இறைவன்பால் பாடப்படும் தோத்திரப்பாடல்கள் மற்றும் ஆன்மிக சொற்பொழிவுகளைக் கேட்பது போன்ற நற்பண்புகளை வளர்க்கிறது.
- **ஈஸ்வரப்பரணிதாரம்:** இதற்கு இறைவனிடத்தில் பக்தி அதிகரித்தல் எனப் பொருள்படும். இதனால், மனிதனுக்கு ஏற்படும் அடிப்படை இயற்கை வேட்கைகளான ஆசை, கோபம், காமம் போன்றவற்றை அகற்றித் தன்னை இறைவனுக்காக தொண்டாற்றுதல் என்ற பண்பை வளர்க்கிறது.
- யோகா பயிற்சி மேற்கொள்ளும் ஒருவர், தம் உடல் தகுதியைப் பேணிக்காத்து, மனித வளத்தையும் தேசப்பற்றையும் வளர்க்க இயலும்.
- பணிவுடன் கீழ்ப்படியும் தன்மையையும் ஒழுக்கக் கட்டுபாட்டையும் வளர்க்கிறது.
- யோகா பயிற்சியைச் சகமாணவர்களுடன் இணைந்து மேற்கொள்வதால், அன்பும் சகோதரத்துவமும் வளர்கின்றன.
- கடினமான ஆசனப் பயிற்சிகளை மேற்கொள்வதால் உடல் பலமும் சகிப்புத்தன்மையும் மேம்படுகின்றன.
- சூரிய நமஸ்காரம் செய்வதால், இயற்கையை நேசிக்கும் பண்பு வளர்கிறது.
- தீயப்பழக்கங்களைத்தவிர்த்து அறவழியில் நின்று, மகிழ்ச்சிகரமான வாழ்க்கை வாழ்தல் என்னும் மனப்பான்மையை வளர்க்கிறது.
- யோகப் பயிற்சிகளை சகமாணவர்களுடன் இணைந்து மேற்கொள்வதால், தன்னலம் கருதாது பிறர் நலம் கருதும் சமூகவியல் பண்புகள் மேம்படுகின்றன.
- விருந்தோம்பல் பண்பு மற்றும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்க்கிறது.
- யோகாப் பயிற்சியின் மூலம் மாணவரின் உடல் உறுப்புகளை ஆற்றல் வாய்ந்ததாகவும், புலன்களைக் கட்டுப்பாடு உடையனவாகவும், மனத்தை ஒரு நிலைப்படுத்தவும், உணர்வுகளைச் சமநிலையிலும், சுவாசத்தினை ஒழுங்கு முறையிலும், அறிவினைப் பலமானதாகவும் மாற்றமுடியும். மேலும், மாணவர்களை அஹங்காரம், வெறுப்பு போன்ற தீய குணங்களிலிருந்து விடுவித்து, ஆத்மாவிற்குத் தூய்மையை அளிக்கிறது. யோகா கல்வியின் மூலமாக, கடவுள் பக்தி, பெரியவர்களிடம் மரியாதை, தொண்டு மனப்பான்மை, நன்னடத்தை, சமுதாயஅறம், தனிமனிதஅறம், விருந்தோம்பல்பண்பு, நட்புணர்வு போன்ற நற்குணங்களை வளர்க்க முடியும்.
- யோகா கல்வி, மாணவர்களிடையே நற்செயல்களைத் தடையின்றி மேற்கொள்ள வழிவகை செய்கிறது. உதாரணமாக செடிகள், மரக்கன்றுகள் நடுதல், செடிகளுக்கு நீர் வார்த்தல், பறவைகளுக்கும், எறும்புகளுக்கும் உணவு அளித்தல், தம்மைவிடச் சிறியவர்களிடத்தில் அன்பு காட்டுதல், உதவி செய்தல் போன்ற நற்பண்புகளை அவர்களிடையே வளர்க்க யோகா கல்வி துணை புரிகின்றது. மாணவர்கள் மனதை ஒருமுகப்படுத்தி, நல்லறிவு, பெற்று மனவளர்ச்சி அடைந்து, கடமை உணர்வு, நாட்டுப்பற்று, காலந்தவராமை என்ற இலக்கை நிர்ணயித்துச் செயல்படுதல் போன்ற வாழ்வியல் நெறிகள் மேம்படுகின்றன.



XII Ethics_Lesson 8.indd 218 05-04-2019 11:16:38

## நிறைவுரை

உலக சுகாதார மையம்(WHO), உடல்நலம் என்பது, நோயிலிருந்து விடுபடுதல் என்பது மட்டுமல்லாது உடல், மனம், சமூக நலம் போன்றவற்றைப் பேணிக்காப்பதுமாகும் என விளக்குகிறது. ஒருவர், தம் உடலில் எவ்வித நோயும் இல்லாத நிலையுடன் நல்ல உடலமைப்பைப் பெற்று நலமுடனும் மனநலத்துடனும் சமூகத்தில் அனைவரிடமும் ஒழுக்கநெறிகளோடு வாழும் முறையை யோகா கல்வி நமக்குக் கற்றுத் தருகிறது. மேலும், இந்தியாவின் பண்பாட்டைப் பேணிக் காக்கவும் அறநெறிகளை வாழ்வில் கடைப்பிடிக்கவும் யோகா கல்வி நமக்கு உதவுகிறது.

# பயிற்சி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இந்தியாவின் தொன்மையான வாழ்வியல் நெறிமுறை_________

அ) தர்க்கவியல் ஆ) சித்தாந்தம் இ) வேதாந்தம் ஈ) யோகா

2. யோகவழிகளை மனித இனத்திற்குத் தந்தவர்

அ) ஹிரண்ய கர்பர் ஆ) ஆதிசேஷன் இ) அத்தரிமுனிவர் இ) பதஞ்சலி முனிவர்

3. முதன்முதலில் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்பட்ட நாள்

அ) 25 ஜுன் 2015 ஆ) 25 ஜுன் 2016 இ) 21 ஜுன் 2015 ஈ) 21 ஜுன் 2016

9G11VE

4. பொருத்துக.

அ. பக்தியோகம் - 1. அறிவே கடவுள்

ஆ. கர்ம யோகம் - 2. எல்லாம் இறைவன் செயல்

இ. ஞான யோகம் - 3. எட்டுப் பிரிவுகள்

ஈ. ராஜயோகம் - 4. செயல்களின் மூலம் இலக்கை அடைதல்

அ) அ - 3, ஆ - 4, இ - 2, ஈ -1 ஆ) அ - 1, ஆ - 3, இ - 2, ஈ - 4

இ) அ - 4, ஆ - 1, இ - 3, ஈ - 2 ஈ) அ - 2, ஆ - 4, இ - 1, ஈ – 3

5. பொருத்துக.

அ. அஹிம்சை - 1. பொருள் சேர்க்காமை

ஆ. சத்தியம் - 2. திருடாமை

இ. அஸ்தேயம் - 3. உண்மை

ஈ. அபரிக்ரஹம் - 4. வன்முறை இல்லாமை

அ) அ - 4, ஆ - 3, இ - 2, ஈ - 1 ஆ) அ - 3, ஆ - 2, இ - 1, ஈ -4

இ) அ - 2, ஆ - 1, இ - 4, ஈ - 3 ஈ) அ - 1, ஆ - 4, இ - 3, ஈ – 2

6. தவறான இணையைச் சுட்டிக்காட்டுக.

அ) லெளச்சனம் - தூய்மை

ஆ) சந்தோசம் - திருப்தி

இ) தபஸ் - ஆடம்பரம்

ஈ) ஸ்வத்யாமம் - தன்னைப்பற்றிய எளிமை



XII Ethics_Lesson 8.indd 219 05-04-2019 11:16:38

www.tntextbook.org

7. இராஜயோகத்தின் இறுதிநிலை _________ ஆகும்.

அ) சமாதி ஆ) தியானம் இ) தாரணம் ஈ) விபரீதகரினி

8. தவறாகப் பொருத்தப்பட்டுள்ள இணையைச் சுட்டிக்காட்டுக.

அ) மச்சியாசனம் – மீன் போன்ற அமைப்பு

ஆ) தாடாசனம் – மலை போன்ற அமைப்பு

இ) தனுராசனம் – வில் போன்ற அமைப்பு

ஈ) விபரீத கரினி – தாமரை போன்ற அமைப்பு

9. பொருத்துக.

அ. ஏர்வடிவம் போன்ற உடல் தோற்றம் – 1. சலபாசனம்

ஆ. பாம்பு படம் எடுப்பதுபோல உடல் தோற்றம் – 2. தனுராசனம்

இ. வில் போன்ற அமைப்பில் உடல் தோற்றம் – 3. புஜங்காசனம்

ஈ. வெட்டுக்கிளி போன்று உடல் தோற்றம் – 4. ஹாலாசனா

அ) அ – 1, ஆ – 4, இ – 3, ஈ – 2 ஆ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3

இ) அ – 3, ஆ – 2, இ – 1, ஈ – 4 ஈ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1

10. கால்களை மேலே உயர்த்தி நிற்கும் ஆசனம் _________

அ) விபரீதகரினி ஆ) பவன முத்தாசனம் இ) சலபாசனம் ஈ) பாதஹஸ்தாசனம்

## சிறுவினா

1. யோகாவின் பிரிவுகள் யாவை?
2. யோகா / அஸ்டாங்க யோகாவின் நிலைகள் யாவை?
3. பிரணாயமம் என்றால் என்ன?
4. அமர்ந்தநிலை ஆசனங்கள் யாவை?
5. வஜ்ராசனம் குறிப்பு வரைக.
6. நின்றநிலை ஆசனங்கள் யாவை?
7. சுழிமுனை சுவாசம் யாது?

## குறுவினா

1. பக்தி யோகம் என்றால் என்ன?
2. மச்சியாசனத்தின் பயன்கள் யாவை?
3. பாதஹஸ்தானம் மனித வாழ்விற்குத் தரும் பயன்களைக் குறிப்பிடுக.
4. வஜ்ராசனத்தின் முக்கியத்துவம் யாது?
5. பிராணாயாமத்தின் நோக்கம் யாது?

## நெடுவினா

1. யோகா முறை மாணவர்களுக்கு எவ்வகையில் பயனுடையதாக விளங்குகிறது?
2. யோகா சாஸ்திரம் கூறும் உணவு முறைகளை விவரி?
3. யோக முறைகளின் மூலம் வளர்க்கப்படும் அறநெறிகளை விளக்குக.
4. யோகப் பயிற்சி மேற்கொள்வதால் ஏற்படும் நன்மைகள் வகைப்படுத்துக.
5. சூரிய நமஸ்காரம் மேற்கொள்ளும் நிலைகளைப் படிநிலைகளுடன் விளக்குக.
6. எவையேனும் ஐந்து ஆசனங்களைச் செய்யும் முறைகளை எழுதுக.
7. எவையேனும் ஐந்து பிராணாயாமம் பயிற்சிகள் மேற்கொள்ளும் முறையை விளக்குக.




XII Ethics_Lesson 8.indd 220 05-04-2019 11:16:38

www.tntextbook.org

## இணையச்செயல்பாடு

# யோகம் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

யோகாசனங்கள் குறித்து அறிந்து கொள்வோமா ?





### படிகள்

1. கீழ்க்காணும் உரலி/விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்குச் செல்க.
2. அங்கு யோகாசனத்திற்கான பலவித செயல்விளக்கப் படங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.
3. அதைப் பார்த்து நீங்களும் செய்து பார்க்கலாம்.

### செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :




படி 1



படி 2




படி 3

யோகாசனங்கள் இணையப்பக்கத்திற்கான உரலி :
https://play.google.com/store/apps/details?id=com.yogaexercises.juliusapps

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.

B248_12_ETH_IND_CUL_TM



XII Ethics_Lesson 8.indd 221 05-04-2019 11:16:38

அலகு
9

# இந்தியப் பண்பாடும் சுற்றுச்சூழலும்

EYSL71

## கற்றல் நோக்கங்கள்

- சுற்றுச்சூழல் வளர்ச்சியில் இந்தியப் பண்பாட்டின் பங்கினை அறிந்துகொள்ளுதல்
- இந்தியர்கள் வாழ்வு இயற்கையோடு இயைந்தது என்பதை அறிதல்.
- மலை, நதி, கடல், காடு போன்ற இயற்கை அமைப்புகளைத் தெரிந்துகொள்ளுதல்
- பஞ்சபூதங்களே சுற்றுச்சூழலுக்கு அடிப்படை என்பதைப் புரிந்துகொள்ளுதல்
- இயற்கை வளங்களைப் பாதுகாக்க அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளைப் பற்றி அறிந்துகொள்ளுதல்
- சுற்றுச்சூழல் மாசுபாடுகள் – அவற்றிற்கான காரணங்கள் ஆகியவற்றைத் தெரிந்துகொண்டு மாசில்லா பாரதத்தை உருவாக்க முயற்சி மேற்கொள்ளுதல்.

### நுழைவு வாயில்

நாம் வாழும் உலகமானது, பஞ்சபூதங்களின் சேர்க்கையால் உருவானது. மேலும், இவ்வுலகிலுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்ற பொருள்கள் அனைத்திலுமே பஞ்சபூதங்கள் நிறைந்துள்ளன. எனவே, இவை இல்லாத உலகை நம்மால் காண இயலாது.

**உலகத்தோற்றம்**

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் ஆகிய ஐவகை இயற்கைப் பொருள்களைக் கொண்டு இவ்வுலகம் தோன்றியது என்ற கருத்தைத் தொல்காப்பியர் வெளிப்படுத்தியுள்ளார்.

*"நிலம், நீர், தீ, வளி, விசும்போடு ஐந்தும் கலந்த மயக்கம் உலகம்"*

என்று உலகத் தோற்றம் பற்றி அறிவியல் அடிப்படையில் கூறியுள்ளார்.

பஞ்சபூதங்களின் சேர்க்கையே இவ்வுலக உருவாக்கம் என இந்தியத் தத்துவங்களும் வலியுறுத்தியுள்ளன.

பகுத்தறிவுள்ள மனித சமுதாயம், பஞ்சபூதங்களுக்கும் உலகிலுள்ள மற்ற உயிரினங்களுக்கும் பாதிப்பு ஏற்படுத்தாத வகையில், அவற்றைப் புனிதமாக மதித்துப் போற்றி பாதுகாக்கவேண்டும் என்று இந்தியப்பண்பாடானது வலியுறுத்துகிறது. சுற்றுச்சூழலின் அங்கங்களாக இருக்கின்ற பரந்து விரிந்த காடுகள், வானளாவிய மலைகள், குன்றுகள், பல்வேறு வகையான மரங்கள், தாவரங்கள், செடிகொடிகள், கடல்கள், ஆறுகள், நீர்நிலைகள், புல்வெளிகள், மலர்கள், விலங்குகள், பறவைகள், பூச்சி இனங்கள் என இவை அனைத்தையுமே இந்தியப்பண்பாடானது இறைவனோடு இணைத்து புனிதமாக வணங்குகிறது. இதன்மூலம் இந்தியப்பண்பாடானது இயல்பாகவே சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு அடிப்படையாக விளங்குகிறது என்பது தெளிவாகிறது.



XII Ethics_Lesson 9.indd 222 05-04-2019 11:19:29



இயற்கைக் காட்சிகள்

## சுற்றுச்சூழல்

**'ஆய்காஸ்'** என்ற கிரேக்கச் சொல் 'வீடு' எனப் பொருள்படும். **'லோகாஸ்'** என்ற கிரேக்கச் சொல் 'கற்றல்' எனப் பொருள்படும். ஆய்காஸ், லோகாஸ் என்ற இவ்விருசொல்லும் இணைந்து **'யிகோலஜி'**(Ecology) என்ற சொல் உருவானது. உயிருள்ளவையும், (Biotic) உயிரற்றவையும் (Abiotic) அடங்கிய இயற்கையின் தொகுப்பிற்கு **சூழ்மண்டலம்** அல்லது **சூழ்நிலைத் தொகுப்பு** (Ecosystems) என்று பெயர்.

மனித வாழ்க்கைக்கு இன்றியமையாதவை சுவாசிப்பதற்குத் தூயகாற்று, பருகுவதற்குத் தூய்மையான நீர், ஊட்டச்சத்துமிக்க உணவு போன்றவையாகும். இவை அனைத்தையும் கொண்டதே தூய்மையான சுற்றுச்சூழலாகும்.

## சுற்றுச்சூழல் கல்வி விளக்கம்

சுற்றுச்சூழல் கல்வி என்பது, **"சூழ்நிலையியல்"** (Ecology) என்ற அறிவியல் பிரிவாகும். சுற்றுச்சூழல் கல்வி, தனிநபருக்கும் மனிதச் சமுதாயத்திற்கும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது. இஃது இயற்பியல், பண்பாட்டுச் சூழ்நிலை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, இயற்கையான வாழ்க்கைச் சூழ்நிலைக்கு ஏற்புடையது என்பதையும் உணரச்செய்கிறது.

மலை, நதி, கடல், சூரியன், ஆகாயம், காற்று, விலங்கினங்கள் முதலியவற்றைப் பற்றி அறிவதும், இவற்றில் மனிதனின் பங்கினைப் பற்றித் தெரிந்து கொள்வதும் சுற்றுச்சூழல் கல்வியாகும். அதாவது, இயற்கையோடு இயைந்த வாழ்வைப் பற்றி அறிந்துகொள்வதே சுற்றுச்சூழல் கல்வியாகும்.

## சுற்றுச்சூழல் கல்வியின் தேவை

சுற்றுச்சூழலானது பஞ்சபூதங்களால் உருவாக்கப்பட்டுள்ளது என்பது நாம் அறிந்ததே. இவற்றுள் ஏதேனும் ஒன்றில் ஏற்படும் மாற்றம், ஏனைய அமைப்புகளின் சமநிலையைப் பாதிக்கிறது. மாறிவரும் சுற்றுச்சூழல், பிற உயிரினங்களை மட்டுமன்றி, மனிதனையும் ஒவ்வொரு நாட்டையும் பாதிக்கிறது. மக்கட்தொகை பெருக்கம், இயற்கை வளங்கள் குறைதல் போன்ற அனைத்தும் சுற்றுச்சூழலுக்குக்கேடு விளைவிப்பவையாகும். எனவே, சுற்றுச்சூழல் கல்வி அளித்தல், விழிப்புணர்வூட்டுதல் முதலியவை தற்காலத்தின் இன்றியமையாத தேவையாகும்.

## இந்தியாவின் சுற்றுச்சூழல்

இந்தியாவின் சுற்றுச்சூழல் அம்சங்களே பண்பாட்டைத் தீர்மானிக்கின்றன. மலைகள், காடுகள், நதிகள், கடல்கள் போன்ற சுற்றுச்சூழலின் உட்கூறுகளுக்கும் இந்தியப் பண்பாட்டிற்கும் நெருங்கியத் தொடர்புள்ளது. இதன் அடிப்படையில், இந்தியாவின் தென்பகுதி மிதவெப்பமண்டலப் பகுதியாகவும், வடபகுதி வெப்பமண்டலப் பகுதியாகவும் விளங்குகிறது. நமது நாட்டின் இயற்கைப் பிரிவுகள் சிந்துகங்கைச் சமவெளி, தக்காணப் பீடபூமி, கடற்கரைச் சமவெளிகள் என மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன.

சிந்துகங்கைச் சமவெளிகள், பழைமையான வடஇந்தியப் பண்பாட்டின் மையமாகத் திகழ்கின்றன. சிந்துவெளி நாகரிகம், சிந்து மற்றும் அதன் துணை நதிகளான ஜீலம், சீனாப், ராவி, பியாஸ், சட்லெஜ், சரஸ்வதி ஆகியவற்றின் பகுதிகளில் தோன்றிப் பரவியது. சுற்றுச்சூழலுக்கு மிகுந்த முதன்மை தந்த சிந்துவெளி மக்கள், மூடப்பட்ட பாதாள சாக்கடை, நேரான, வரிசையான சாலைகள், வீடுகள் போன்றவற்றிற்கும் முக்கியத்துவம் அளித்தனர். வேதகால மக்களும் கங்கை



XII Ethics_Lesson 9.indd 223 05-04-2019 11:19:29

www.tntextbook.org

நதி, அதன் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் தந்தனர்.

மௌரியர்கள் காலத்தில் கௌடில்யர் எழுதிய 'அர்த்தசாஸ்திரம்' என்ற நூல் வனவளம், வனவளத்தின் தேவை, அவற்றைப் பாதுகாப்பதன் அவசியம் போன்றவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது. மாமன்னர் அசோகரின் கல்வெட்டுகளில் வனங்கள், அவற்றைப் பாதுகாக்கும் முறைகள், பாதுகாப்பதின் தேவை முதலியன குறித்த செய்திகள் காணப்படுகின்றன. கி.பி. (பொ.ஆ) 5ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட 'யக்ஞவால்கிய ஸ்மிருதி' மரங்களை வெட்டுதல், தண்டனைக்குரிய குற்றம் எனக் குறிப்பிட்டுள்ளது.

**கங்கைநதி**

*கங்கைநதி இமயமலையிலுள்ள கங்கோத்திரியில் பனியாறாக உருவாகிறது. இந்நதி, வங்கதேசத்தில் பத்மாநதி என்று அழைக்கப்படுகிறது. இது, வேதகாலப் பண்பாட்டின் மையமாக விளங்குகிறது. இந்த நதி சிவபெருமானின் சடாமுடியிலிருந்து தோன்றியதாகப் புராணங்களில் கூறப்பட்டுள்ளதால், சிவனைக் **கங்காதரர்** என்று அழைக்கின்றனர்.*

## தமிழர் பண்பாடும் சுற்றுச்சூழலும்

சங்ககாலத் தமிழகத்தின் தலைசிறந்த புலவர்களில் ஒருவரான கபிலர், இயற்கையின் அம்சங்களான காற்று, நீர், வானம், வனங்கள் போன்றவற்றைப் போற்றியுள்ளார். சங்ககாலத் தமிழக மக்கள், சுற்றுச்சூழலுக்கு அதிக முக்கியத்துவம் தந்தனர். ஐவகை நிலங்களைப் பிரித்து, அவற்றின் சுற்றுச்சூழல், புவியியல் கூறுகள் அடிப்படையில் தமது பண்பாட்டை வரையறுத்தனர். இதனடிப்படையில், மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி என்றழைக்கப்பட்டது. காடும், காடுசார்ந்த இடம் முல்லை என்றழைக்கப்பட்டது. வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் என்றும், கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் என்றும், மணலும் மணல்சார்ந்த இடம் பாலை என்றும் அழைக்கப்பட்டன. சங்ககால மன்னர்களான மூவேந்தர்கள் சுற்றுச்சூழலின் அம்சங்களான நதிகள், கடல்கள், மலைகள், வனங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்கு முதன்மையளித்ததுடன், அவற்றைப் பாதுகாப்பதற்குத் தனிப்படைகளையும் வைத்திருந்தனர்.

நீர்ப்பாசனத்தின் முக்கியத்துவத்தை அறிந்த சங்ககாலச் சோழ மன்னனான கரிகால் வளவன், கல்லணையைக் கட்டி, நீரைச் சேமித்து, வேளாண்மையைப் பெருக்கினான்.

சுற்றுச்சூழலின் அம்சங்களான மலைகளிலிருந்து ஏராளமான பயன்கள் மக்களுக்குக் கிடைக்கின்றன. மலைப்பாறைகளே அக்காலத்தில் கோயில்கள், அரண்மனைகள், கட்டடங்கள் போன்றவை கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டன. காடுகளிலிருந்து கிடைத்த மூலிகைகள் நோய் தீர்க்கப் பயன்பட்டன.

நீண்ட கடற்கரையைக் கொண்டிருக்கும் இந்தியாவில் கடல், கடலியல் வளங்கள் ஆகியவற்றின் பாதுகாப்பிற்குப் பழங்கால மக்கள் மிகுந்த முக்கியத்துவம் அளித்தனர். அக்கால அயல்நாட்டு வாணிகம், கடல்வழியே நடைபெற்றது. கிரேக்கம், ரோம், சாவகத்தீவு, ஈழம் உள்ளிட்ட பல நாடுகளுடன் சங்ககாலத் தமிழர், கடல்வழியே வாணிகம் செய்தனர். கடற்கரைச் சமவெளிப்பகுதியின் தொழில்களான முத்துக்குளித்தல், மீன் பிடித்தல் போன்றவற்றின் வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் அளித்ததை நம்மால் அறிந்துகொள்ள முடிகிறது.

இடைக்காலத்தில் வாழ்ந்த சித்தர்கள், ஆழ்வார்கள், நாயன்மார்கள், பக்தி இயக்க ஞானிகள் போன்றோர் சுற்றுச்சூழலுக்கும் அதன் பாதுகாப்பிற்கும் முக்கியத்துவம் அளித்துள்ளனர். இவர்கள், தமது பாடல்களில் இயற்கை அம்சங்களான சுற்றுச்சூழல் கூறுகளைப்பஞ்சபூதத்துடனும்இறைவனுடனும் ஒப்பிட்டுப் பாடிப் போற்றியுள்ளனர். கோயில்



XII Ethics_Lesson 9.indd 224 05-04-2019 11:19:29

தூய்மைப்பணி என்ற அடிப்படையில், கோயில்களைத் தூய்மைப்படுத்தியதுடன் அதன் சுற்றுப்புறத்தையும் மிகவும் தூய்மையாக வைத்திருந்தனர். அதன்மூலம், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு இவர்களின் பங்கு அளப்பரியது எனலாம்.

ஐரோப்பியர், இந்தியாவை ஆட்சி செய்த காலத்திலும் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கப் பல்வேறு சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இப்பகுதிகளில் மக்கள் கொண்டாடும் விழாக்கள், அன்றுமுதல் இன்றுவரை சுற்றுச்சூழலுக்கும், இந்தியப் பண்பாட்டிற்குமுள்ள மேன்மையை வலியுறுத்துகின்றன.

சுற்றுச்சூழலின் முக்கிய அம்சமான நதிகள், மக்களின் அடிப்படைத் தேவைகளுள் ஒன்றான நீரை வழங்குகின்றன. இந்நீரே, உயிர்கள் உயிர்வாழ இன்றியமையாத தேவையாக விளங்குகிறது. வேளாண்மை, கட்டடம் கட்டும் தொழில் உள்ளிட்ட பல தொழில்களுக்கு நதிகளின் நீரே ஆதாரமாகத் திகழ்கிறது. ஆகவேதான், அந்நதிகளை மக்கள் தாயாகப் போற்றும் பண்பாட்டை இன்றுவரை கடைப்பிடித்து வருகின்றனர். அதன் அடிப்படையிலேயே பெரும்பாலான நதிகளுக்குச் சிந்து, கங்கை, நர்மதை, காவிரி போன்ற பெண்களின் பெயரே சூட்டப்பட்டுள்ளது. இவ்வாறு நதிகளே பண்பாட்டின் மையமாகத் திகழ்கின்றன.

## இந்திய மலைகள்

பரந்து விரிந்த மலைத்தொடர்களே நமது நாட்டின் பருவநிலையைத் தீர்மானிக்கின்றன. இமயமலைத் தொடர், ஆரவல்லி மலைத்தொடர், விந்திய சாத்பூரா மலைத்தொடர், மேற்குத்தொடர்ச்சி மலைகள், கிழக்குத் தொடர்ச்சி மலைகள் போன்றவை நமது நாட்டில் உள்ளன. ஜம்மு காஷ்மீர், இமாச்சலப் பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம், மேற்கு வங்காளம், அருணாச்சலப் பிரதேசம், மகாராஷ்டிரா, நாகலாந்து, மேகலாயா, கர்நாடகா, தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் மேற்குறிப்பிட்ட மலைத்தொடர்கள் உள்ளன.



பழனி முருகன் கோயில்

மலைகள் இந்தியப் பண்பாட்டில் சிறப்பிடம் பெறுகின்றன. மலைவாழ் மக்களின் உணவு, உடை, உறைவிடம், பயன்படுத்தும் கருவிகள், கொண்டாடும் விழாக்கள் போன்றவை நமது நாட்டின் தொன்மையான பண்பாட்டை எடுத்தியம்புகின்றன. மலைவாழ் மக்கள் பயன்படுத்தும் தேன், பழங்கள், அரிசி போன்றவற்றாலான உணவுகள் நோய் தீர்க்கும் தன்மை கொண்டவை. மேலும், ஆதிகால மலைவாழ் மக்கள் ஈட்டி, வேல், வில், அம்பு ஆகியவற்றை ஆயுதங்களாகப் பயன்படுத்தினர். அவற்றைக்கொண்டு, விலங்குகளை வேட்டையாடி, அவற்றின் இறைச்சியை உண்டனர்.



இமயமலைத் தொடர்

குளிர்காலத்திலும் கோடைகாலத்திலும் அவர்கள் அணிந்த உடைகள், இவ்வாடைகள் காலநிலைக்கேற்றவாறு அமைந்திருந்தன. அவர்களின் வீடுகள்



XII Ethics_Lesson 9.indd 225 05-04-2019 11:19:29

மரத்தால் உருவாக்கப்பட்டன. எளிமையாக அமைக்கப்பட்ட அவ்வீடுகள், நல்ல காற்றோட்டமானவசதிகளைக்கொண்டிருந்தன.

மலைவாழ் மக்களால் கொண்டாடப்படும் திருவிழாக்கள் புகழ்பெற்றவை. அரிய மூலிகைகள், யூகலிப்டஸ் எண்ணெய் போன்றவை மலைப்பகுதியிருந்தே கிடைக்கின்றன. சங்ககாலத் தமிழகத்தில் மலைப்பகுதியான குறிஞ்சிநிலத்தில் வாழ்ந்த மக்கள், முருகப்பெருமானைக் கடவுளாக வழிபட்டனர்.



கேதார்நாத் கோயில்

குலு, டார்ஜிலிங், நைனிடால், முசௌரி, கொடைக்கானல், உதகமண்டலம், ஏற்காடு போன்ற கோடை வாழிடங்கள் மலைகள்மீது அமைந்துள்ளன. இவை மக்களுக்கு இனிமையான சுற்றுலாத் தலங்களாகத் திகழ்கின்றன. இவை பண்பாட்டோடு தொடர்புடைய விழாக்களின் மையமாகவும் விளங்குகின்றன.

மலைகளில் மனிதன் மட்டுமன்றிப் பிற உயிரினங்களும் வாழ்கின்றன. மலைவாழ் மக்கள், அப்பகுதியிலுள்ள விலங்குகளை வீட்டு விலங்குகளாகப் பழக்கித் தமது தேவைக்குப் பயன்படுத்தினர். மலைகளிலுள்ள அடர்ந்த வனப்பகுதிகள், முனிவர்கள் தவம் செய்யும் இடங்களாகவும் இருந்துள்ளன. இமயமலை, விந்திய சாத்பூரா மலைகள், பழனிமலை, திருவேங்கடமலை, சாமுண்டி மலை போன்றவை முக்கிய ஆன்மிகத் தலங்களாக இன்றவும் மக்களால் போற்றப்படுகின்றன. இம்மலைகளில் கடவுளர்களுக்குக் கோயில்கள் எழுப்பப்பெற்றுள்ளன.



பத்ரிநாத் கோயில்

### வைஷ்ணவதேவி கோயில்

இக்கோயில் காஷ்மீரிலுள்ள வைஷ்ணவதேவி மலையில் அமைந்துள்ளது. இங்குள்ள இறைவி **மாதாராணி வைஷ்ணவி** என்று அழைக்கப்படுகிறார். இக்கோயிலின் மூலவருக்கு மற்றொரு பெயர் **சிரோபலி** என்பதாகும். இக்கோயிலில் மகாகாளி, மகாலட்சுமி, சரஸ்வதி ஆகிய மூவரும் ஒரே இடத்திலிருந்து அருள் பாலிக்கின்றனர்.



வைஷ்ணவதேவி கோயில்

## நதிகள்

இந்தியப்பண்பாட்டில் நதிகள் அனைத்தையும் இறைவனாகவும், தாயாகவும் போற்றுகிறோம். கிருஷ்ணா, பிரம்மபுத்திரா



XII Ethics_Lesson 9.indd 226 05-04-2019 11:19:29

போன்ற நதிகளுக்கு இறைவனின் பெயரையே சூட்டியுள்ளனர். நதிகளோடு இறைவனின் பெருமையையும் இணைத்துக் கூறுகின்றோம்.

### பிரம்மபுத்திரா

பிரம்மபுத்திரா நதி ஆசியாவின் பெரியநதிகளில் ஒன்றாகும். இந்நதி திபெத்திலுள்ள கயிலை மலையில் ஸாங் – போ என்ற பெயரில் தோன்றி அருணாச்சல பிரதேசத்தில் சியாங் என்ற பெயரில் நுழைந்து சமவெளிப் பகுதியை அடைகிறது. இந்நதி அஸ்ஸாம் மாநிலத்தில் துப்ரி நகர் அருகே சந்கோசு ஆறு இதனுடன் கூடுமிடத்திலிருந்து தெற்கு நோக்கி வங்காளதேசத்தில் பாய்கிறது. அங்கு இந்நதி ஜமுனா என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

இந்துக்களின் புனிதத் தலமான காசி, கங்கை நதியோரத்தில் அமைந்துள்ளது. இங்குள்ள விஸ்வநாதர் ஆலயத்திற்கு வரும் பக்தர்கள் கங்கையில் புனிதநீராடி வழிபடுகின்றனர். திருமாலின் திருவடிகள் கங்கையால் தூய்மைப்படுத்தப்படுகிறது என்று மக்கள் நம்புகின்றனர். கங்கையும், யமுனையும் இணையும் பகுதியான அலகாபாத்தில், புகழ்பெற்ற **கும்பமேளா திருவிழா** கொண்டாடப்படுகிறது. சிவனின் தலையில் கங்கை உருவாகிறது என்ற ஆன்மிக நம்பிக்கை மக்களிடையே இன்றும் உள்ளது. யமுனை நதியோரத்தில் கண்ணன் கோபியருடன் விளையாடினார் என்றும், சரயு நதிக்கரையிலுள்ள அயோத்தியில் இராமன் தோன்றினார் என்றும் மக்கள் நம்புகின்றனர். நர்மதை நதியில் இருக்கும் கூழாங்கற்கள் சிவனின் சொரூபங்களாகக் கருதப்படுகின்றன.

துங்கபத்ரா நதிக்கரையில் ஏற்படுத்தப்பட்ட விஜயநகரப் பேரரசு தென்னிந்தியப் பண்பாட்டைப் போற்றி வளர்த்தது. காவிரிநதி தமிழகத்தின் புனிதமான நதியாகும். இந்நதிக்கரையில்தான் வைணவப் புனிதத் தலமான திருவரங்கம், சைவத் தலமான மயிலாடுதுறை ஆகியவை அமைந்துள்ளன. இந்நதியில் நீராடுவதை மக்கள் புனிதமாகக் கருதுகின்றனர்.

### கும்பமேளா

கும்பமேளா (கிண்ணத்திருவிழா) இந்து சமயத்தினரால் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகிறது. இவ்விழா அலகாபாத், ஹரித்துவார், உஜ்ஜயினி மற்றும் நாசிக் ஆகிய நான்கு இடங்களிலுள்ள ஆற்றுப்படுகையில் நடைபெறுகிறது.

கும்பகோணத்தில் நடைபெறும் **மகாமக விழா**, மயிலாடுதுறையில் நடைபெறும் காவிரி **புஷ்கரம்** போன்றவை புனிதமானதாகக் கருதப்படுகின்றன. நெல்லை மாவட்டம் தாமிரபரணி புஷ்கரமும், மதுரை மாவட்டத்தில் **கள்ளழகர்** வைகை **ஆற்றிலிறங்குவதும்** புனிதமானதாகக் கருதப்படுகின்றன.

### கிருஷ்ணாநதி புஷ்கரவிழா

கிருஷ்ணாநதி புஷ்கரலு என்று அழைக்கப்படும் கிருஷ்ணாநதி புஷ்கர விழா 12 ஆண்டுகளுக்கொருமுறை 12 நாள்கள் கொண்டாடப்படுகிறது. கோள்களின் சுழற்சியை மையப்படுத்தி இவ்விழா கொண்டாடப்படுகிறது.

## காடுகள்

இந்தியப்பண்பாட்டில் மலைகளுக்கும், நதிகளுக்கும் அடுத்து போற்றப்படுவன காடுகளாகும். பண்டைய தமிழகத்தைக் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலமாகப் பாகுபடுத்தினர். இவற்றுள் முல்லை என்பது, காடும் காடு சார்ந்த பகுதி என்றும் அந்நிலத்திற்குரிய கடவுள் **திருமால்**



XII Ethics_Lesson 9.indd 227 05-04-2019 11:19:29

என்றும் அறிகிறோம். தொடக்க காலத்தில், மனிதன் காடுகளில்தான் வாழ்ந்தான். நவீன காலத்தில் பல அறிவியல் முன்னேற்றங்களைக் கடந்து, நவநாகரிக வாழ்க்கை வாழும் மனிதர்களுக்கிடையே இன்றும் காடுகளில் மனிதர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஒரு நாட்டின் முக்கிய வளங்களில் இயற்கை வளமே முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இவற்றில் வனவளம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. காடுகள், அனைத்து உயிரினங்களுக்கும் பயன்களை வழங்குகின்றன.

இந்தியா **தருமபூமி, புண்ணியபூமி, ஆன்மிகபூமி** என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் காடுகளாகும். அமைதியான இக்காட்டுப்பகுதியில்தான் ரிஷிகள், முனிவர்கள், மகான்கள், ஞானிகள் ஆகிய அனைவரும் ஞானம்பெற்று, வேத உபநிடதங்களை உலகிற்கு அளித்தார்கள். வேதங்கள், நான்குவகை ஆசிரம தர்மங்களை மனித இனத்திற்கு வழங்கியுள்ளன. அவை; **பிரம்மச்சரியம், கிரகஸ்தம், வனபிரஸ்தம், சன்னியாசம்** என்பனவாகும். வனபிரஸ்த நிலை என்பது, காடுகளில் தவவாழ்க்கை மேற்கொள்ள வேண்டுமென்கிற இறைநிலையாகும். இந்நிலையை அடைந்த சித்தர்கள், வனப்பகுதியிலே பல்வேறு மரங்களாக உருமாறி இருப்பதால், காடுகளிலுள்ள அனைத்துத்தாவரங்களையும் இந்தியப்பண்பாடு புனிதமாகப் போற்றுகிறது. **நமது வாழ்வில் காடுகள் குருகுலங்களாகவும், நம் முனிவர்களின் வாழ்விடங்களாகவும், கல்வி பயிலும் இடங்களாகவும் விளங்கின.** சிந்துவெளி மக்களால் மரவழிபாடு பின்பற்றப்பட்டுள்ளதையும் அறிகிறோம். வேத இலக்கியமான சம்ஹிதைகள், ஆரண்யகத்தில் காட்டில் தவம் மேற்கொண்டவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன. இராமாயணத்திலும் ஆரண்யகாண்டமே முக்கியத்துவம் பெறுகிறது.

### அரசமரம்

அரசமரம் இந்தியப்பண்பாட்டில் முக்கிய இடம் வகிக்கிறது. சிந்துவெளி நாகரிக மக்கள் இம்மரத்தை கடவுளாக வழிபட்டனர். புத்தர் அரசமரத்தின்(போதிமரம்) அடியில் ஞானோதயம் பெற்றார். பகலிலும் இரவிலும் மனிதனுக்குத் தேவையான பிராணவாயுவை வெளியிடுவதால், இம்மரம், 'மரங்களின் அரசன்' என்றும் அழைக்கப்படுகிறது.

காடுகளில் வாழும் மக்கள் காடுகளைவிட்டு வெளியேவந்து வாழவிரும்பவில்லை. அவர்கள் காடுகளையே தெய்வமாக வழிபடுகின்றனர். காடுகளே நாட்டின் செல்வங்கள் என்பதை உணர்ந்த மௌரிய மன்னர் அசோகர், நாடெங்கிலும் நிழல்தரும் மரங்களை நட்டு இயற்கையைப் பேணிப் பாதுகாத்தார். குப்தர்கள் இயற்கைக் காட்சிகளை ஓவியங்களாகத் தீட்டியதன் மூலம் இயற்கைக்கு அவர்கள் கொடுத்த முக்கியத்துவத்தை அறிய முடிகிறது. சீனப்பயணியுவான்சுவாங்குறிப்புகளில்விந்திய சாத்பூராக் காடுகளில் வாழ்ந்த "**சபார்கள்**" என்ற மலைவாழ்மக்கள், மகிழ்ச்சியாக வாழ்ந்தார்கள் என்ற குறிப்பு உள்ளது. ஆதிமனிதனின் முதல் வீடாக இருந்தவை காடுகளில் உள்ள பெரிய மரங்களேயாகும். இதன் அடையாளமாக அரசமரத்தை ஒவ்வோர் ஊரிலும் வளர்த்துப் பாதுகாக்கின்றனர்.

*("மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழல்*

*காடும் உடையது அரண்" (குறள் எண்: 742)*

ஒரு நாட்டில் மணிபோல தெளிந்த நீரும், பரந்து விரிந்த நிலப்பரப்பும், வானளாவிய மலையும் அணி அணியாய் நிழல் தரக்கூடிய அடர்ந்த மரங்களை உடைய காடும் அமையப்பெற்றால் அதுவே, அந்நாட்டிற்குப் பாதுகாப்பாக அமையும் என்கிறார் வள்ளுவர்.

www.tntextbook.org

காட்டில் தவவாழ்க்கை மேற்கொண்ட ரிஷிகள், ஞானிகள் தாங்கள் உணர்ந்த யாவற்றையும் இறைவடிவமாகக் கண்டனர். இராமாயணத்தில் இராமபிரான் பதினான்கு ஆண்டுகள் காட்டில் வாழ்ந்ததால், காட்டையே இறைவனாக இந்துக்கள் கருதினர். மேலும், வனதேவதைகள் என்றழைக்கப்படும் காவல் தெய்வங்கள் இந்தியப்பண்பாட்டில் போற்றப்படுகின்றன. இவ்வனப்பகுதியை வனதேவதை ஆட்சி செய்வதாகக் கருதுவதால் காட்டிலுள்ள எந்தப் பொருளுக்கும் தீங்கு விளைவிப்பதில்லை. பல இடங்களில், வனதுர்க்காதேவி காவல் தெய்வமாக வழிபடப்படுகிறார். இவ்வகையில் இந்தியச் சுற்றுச்சூழலுக்குக் காடுகள் துணை நிற்கின்றன என்பதில் ஐயமில்லை.

## மரங்கள்

மரங்கள், பூமிக்குக் கிடைத்த வரங்கள். ஆதிமனிதனுக்கு அடைக்கலமாக இருந்தவை மரங்களாகும். பசிக்கு உணவாகக்கனி, பிணிக்கு மருந்து, உறங்க உறைவிடம் போன்ற பல நன்மைகளைத்தரும்அமுதசுரபிகளாகமரங்கள் திகழ்கின்றன. ஆதிமனிதர்கள் இயற்கையோடு இணைந்திருந்தபோது, நோயற்ற மகிழ்ச்சியான வாழ்க்கை வாழமுடிந்தது. தொடக்கக்காலத்தில் மனிதனின் ஆடைகளாக இருந்தவை இலைகளும் மரப்பட்டைகளுமாகும். மரங்கள் இல்லையேல் மழை ஏது? மண்ணில் உயிர்கள் ஏது? மனிதனுக்கு மகிழ்ச்சிதான் ஏது? அதனால்தான், மரங்களைக் கடவுள்களாக மனிதர்கள் வழிபட்டனர். பயன்தரும் மரங்களையும், கனிதரும் மரங்களையும் தம் இருப்பிடத்திற்கு அருகிலேயே வைத்துப் பாதுகாத்து வளர்த்தனர். மண்ணிலுள்ள அனைத்து மரங்களும் மனிதனுக்கு மகத்தான நன்மைகளைத் தந்துகொண்டு இருக்கின்றன. மரங்கள், மனிதனுக்கு மட்டுமல்லாது விலங்குகள், பறவைகள் என அனைத்துவகை உயிரினங்களுக்கும் நன்மைகளைத் தருகின்றன.

இந்தியப்பண்பாட்டில் மரம் மட்டுமல்லாது செடிகள், கொடிகள், புற்கள், பூக்கள், கனிகள் என அனைத்தும் போற்றப்படுகின்றன. இந்துசமயத்தில், ஒவ்வொரு கடவுளையும் ஒவ்வொரு மரத்தோடு சேர்த்து வணங்குகிறார்கள். ஆலமரத்தைப் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய கடவுளோடு சேர்த்து வணங்குகிறார்கள். வேப்பமரத்தைச் சக்தியாக வணங்குகிறார்கள். இது சிந்துவெளி காலம் முதல் மக்கள் மரங்களைக் கடவுளாக நினைத்து வணங்கியமையை உணர்த்துகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

**சிப்கோ இயக்கம்**

இந்தியாவில், காடுகளிலுள்ள மரங்களை வெட்டிச் சாய்க்கும் செயலுக்கு எதிராக முதல் எதிர்ப்புக் குரலெழுப்பியவர், **அம்ரிதாதேவி** என்ற பெண்மணியாவார். அதற்காகத் தம் குடும்பத்தோடு உயிர் நீத்த முதல்நபராவார். இவர் ஜோத்பூருக்கு அருகிலுள்ள கெஜாரிலி கிராமத்தைச் சேர்ந்தவர். இவரைத் தொடர்ந்து 1972-இல் **பகுகுணா** என்பவரால் உத்திரப்பிரதேச மாநிலத்தில் **சிப்கோ இயக்கம்** தொடங்கப்பட்டது. சிப்கோ என்னும் இந்தி சொல்லுக்குக் **'கட்டியணைத்தல்'** என்று பொருள். இந்திய மாநிலங்களில் உள்ள கிராம மக்கள், காட்டிலுள்ள மரங்களை வெட்டுபவர்களின் கோடரியைத் தடுக்கும்பொருட்டு, மரங்களைக் கட்டிப்பிடித்துக் காப்பாற்றும் செயலே சிப்கோ இயக்கமாகும். இதன் முக்கிய நோக்கம், வனங்களைப் பாதுகாப்பதாகும். இவ்வியக்கம் கர்நாடகா, ராஜஸ்தான், இமாச்சலப்பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கும் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து, காடுகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் 1988-ஆம் ஆண்டு **இந்திய வனக்கொள்கையை** மத்திய அரசு வெளியிடப்பட்டது.



சிப்கோ இயக்கம்



XII Ethics_Lesson 9.indd 229 05-04-2019 11:19:29

www.tntextbook.org

**சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986**

*1972 – ஆம் ஆண்டு ஸ்டாக்ஹோம் மாநாட்டில் சுற்றுச்சூழல் பாதுகாப்புத் தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்குச் செயல்வடிவம் தரும்வகையில், இந்திய அரசு பாராளுமன்றத்தில் சட்டம் இயற்றியது. இதன்மூலம், மனித இனத்திற்கும், பிற உயிரினங்களுக்கும், தாவரங்களுக்கும், உடைமைகளுக்கும் சட்டத்தின் வழியாகப் பாதுகாப்புச் செய்யப்பட்டுள்ளன.*

- தூய்மையான காற்று, நீர், நிலம் போன்றவற்றை வழங்குதல்
- குறிப்பிட்ட அளவில் மாசுபடுதலைக் கட்டுப்படுத்துதல்
- உயிர்க்குத் தீங்குவிளைவிக்கும் பொருள்களைப் பாதுகாப்பான முறையில் கையாளுதல்
- பல்வேறு பகுதியில் தொழிற்சாலைகள் தொடங்குவதைத் தடை செய்தல்
- விபத்துகள் ஏற்படா வண்ணம் தகுந்த வழிமுறைகள் மற்றும் குறைகளைத் தவிர்க்க முயற்சிகளை மேற்கொள்ளுதல்.

தமிழகத்தில் வேப்பமரம் இல்லாத மாரியம்மன் ஆலயங்கள் இல்லை எனலாம். திருவேற்காட்டில் வேப்பமரத்தை அம்மனாகக் கருதி வழிபடுகிறார்கள். வில்வமரம் சிவனுக்கு உகந்த மரமாதலால், ஒவ்வொரு சிவாலயங்களிலும் இம்மரத்தை வளர்க்கிறார்கள். விநாயகரோடு அரசமரமும், காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் ஆலயத்திலுள்ள மாமரமும் புனிதமாக வணங்கப்படுகின்றன. மேலும் கடம்பமரம், புன்னைமரம், வன்னிமரம், பனைமரம், நெல்லிமரம், பலாமரம் போன்ற மரங்களும் தெய்வங்களுக்கு இணையாக வணங்கப்படுகின்றன. இந்தியாவிலுள்ள அனைத்து இந்து ஆலயங்களிலும் உள்ள ஒவ்வொரு மரமும் **ஸ்தலவிருச்சமாகப் (கோயில் மரம்)** போற்றப்படுகிறது.

வெற்றிலை, துளசியிலை, வேப்பிலை, வில்வஇலை, அருகம்புல் போன்றவை மருத்துவ குணம் கொண்டவை. இவை ஆன்மிகத்தில் முக்கியத்துவம் பெறுகின்றன. இவைமட்டுமின்றி வெண்தாமரை, செந்தாமரை போன்ற மலர்களும் வாழைப்பழம், எலுமிச்சைபழம், மாம்பழம், விளாம்பழம் போன்றவை ஆன்மிகத்திலும் சித்த மருத்துவத்திலும் பயன்படுகின்றன. .

சங்க இலக்கியங்கள் சிவபெருமானை **'ஆல் அமர் செல்வன்'** என்று குறிப்பிடுகின்றன. குலசேகரஆழ்வார் திருவேங்கடமலையில் செண்பகமரமாகப் பிறக்கவேண்டும் என்று வேண்டுகிறார். திருச்செந்தூரில் திருநீற்றை இலையில் வைத்துதான் பிரசாதமாகத் தருகிறார்கள். தஞ்சைமாவட்டம் சூரியனார் கோயிலில் எருக்கு இலையில்தான் தயிர்சாதம் பிரசாதமாக வழங்கப்படுகிறது. சங்ககால மன்னர்கள், மரங்களைத் தங்கள் வாழ்க்கையோடு இணைத்துப் பார்த்தனர். வேப்பம்பூபாண்டியமன்னர்களின்சின்னமாகும். ஆத்திப்பூ சோழ மன்னர்களின் சின்னமாகும். பனம்பூ சேர மன்னர்களின் சின்னமாகும். அரசமரம் தொண்டை மண்டல மன்னர்களின் சின்னமாகும். தமிழகப் பேரரசர்களின் கோட்டை வாயிலில், காவல்மரங்கள் என்ற பெயரில் பல மரங்கள் நடப்பட்டிருந்தன. இம்மரங்களைக் **'காவல்மரம்'** அல்லது **'கடிமரம்'** என்றழைத்தார்கள். இக்கடிமரத்தை வீரர்கள் எப்பொழுதும் காவல் காப்பார்கள். கடிமரத்தை மாற்றான் வீழ்த்தினால், மன்னன் வீழ்ந்தான் என்பது பொருளாகும். இவ்வாறாக மரங்கள் மிகப் பழங்காலத்திலிருந்து மனிதனோடும், மனித நம்பிக்கைகளோடும் முதன்மையாக இருந்து வருகின்றன.

மரம் அனைத்துச் சமயங்களிலும் முக்கிய இடத்தை வகிக்கிறது. இந்து மதத்தில் **கற்பக விருட்சம்** என்றும், கிறித்துவ மதத்தில் **கிருஸ்துமஸ் மரம்** என்றும்(அறிவுமரம்)



XII Ethics_Lesson 9.indd 230 05-04-2019 11:19:29

பௌத்தத்தில் **போதிமரம்** என்றும் போற்றுகிறார்கள். இஸ்லாம் சமயத்தில் முகமது நபி 'நாளை உலகம் அழிவதாக இருந்தாலும், இன்றைக்கு மரம் நடுவதை விட்டுவிடாதே' என்று மரத்தின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளார். ஆகவே, மரத்தின் மதிப்பை மனிதன் மட்டுமல்லாது சமயங்களும் போற்றுவதால், இந்தியச் சுற்றுச்சூழலுக்கு மரங்கள் பெரும்பங்காற்றுகின்றன என்று கூறலாம்.

## பறவைகள்

காட்டில் வாழும் பலவகை உயிரினங்கள் அடர்ந்தகாடுகளுக்கு அழகு சேர்கின்றன. இவ்வுயிரினங்களுக்கெல்லாம் மகுடமாய் இருப்பவை பறவைகளே. அப்பறவைகள் பலவகைக் கனிகளை உண்டு, அதன் எச்சங்களின் மூலம் விதைகள் மண்ணில் விழுந்து, மரங்களாக வளர்கின்றன. ஒரு பறவை, தம் வாழ்நாளில் ஆயிரக்கணக்கான விதைகளை மண்ணிலிடுகிறது. எனவே, பறவைகள், தாம்வாழ்ந்த காட்டுக்கு நன்றி செலுத்தும் விதமாக காடுகளை நிலைக்கச்செய்கின்றன.

*"காக்கை குருவி எங்கள் சாதி-நீள்*

*கடலும் மலையும் எங்கள் கூட்டம்"* என்றார் பாரதி.

குருவி உட்பட எல்லாப் பறவைகளையும் விலங்குகளையும் மனித சமுதாயத்தோடு இணைத்துக் கொள்ளும் மனப்பாங்கு இந்தியப்பண்பாட்டின் இயல்பாகும். குழந்தைப் பருவம் முதற்கொண்டே விலங்குகளையும் பறவைகளையும் நேசிக்க வேண்டும்; அவற்றிடம் அன்புகாட்ட வேண்டும் என்பதைச்

*"சின்னஞ்சிறு குருவிபோலே-நீ*

*திரிந்து பறந்துவா பாப்பா"* - என்று பாரதி கூறுகிறார்.

எனவே, முதலில் நம்மைச் சுற்றியுள்ள சின்னஞ்சிறு உயிரினங்களிடத்தில் நாம் காட்டும் உயிர்நேயம் சமுதாயத்தில் மனித நேயமாக மலரும் என்பதில் ஐயமில்லை.

இந்தியப்பண்பாட்டில் கடவுளோடு சேர்த்துப் பறவைகளும் வணங்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாகப் பறவைகளின் அரசனாகக் கருதப்படும் கருடன், திருமாலின் வாகனமாகும். வைணவத் தலங்களில் கருடாழ்வாரைத்தான் முதலில் பக்தர்கள் வணங்குவார்கள். மதுரை மீனாட்சியுடன் கிளியையும், இலட்சுமியுடன் ஆந்தையையும், சரஸ்வதியுடன் அன்னப்பறவையையும் சேர்த்து இறைவனாக வணங்குகிறார்கள். மேலும், தமிழ்க்கடவுள் முருகப்பெருமானின் வாகனமாக மயிலைப் பார்க்கும் முருகபக்தர்கள், அதனையும் முருகனாகவே கருதி வணங்குகிறார்கள். சனிபகவானின் வாகனம் காகமாகும். சனிக்கிழமை தோறும் காகத்திற்கு உணவளித்த பிறகே, பக்தர்கள் உணவு உண்பார்கள். மேலும், இந்துக்களின் பண்டிகைகளில் முதலில் காகத்திற்கு உணவிட்ட பிறகே உணவுண்ணும் பழக்கம் இன்றும் நடைமுறையில் உள்ளது. ஆகவே, சுற்றுச்சூழலின் ஓர் அங்கமாக விளங்கக்கூடிய பறவைகள் இந்தியப்பண்பாட்டில் பக்தியுடன் வணங்கப் படுகின்றன.

## விலங்குகள்

தொடக்கக் காலத்தில் எருது, பசு, குதிரை, நாய், பன்றி உள்ளிட்ட விலங்குகளை வளர்த்த மனிதர்கள், அவற்றை இறைவனின் வாகனமாகவும் வழிபட்டனர். சிவனின் வாகனமாகக் காளை அல்லது நந்தி, பராசக்தியின் வாகனமாகச் சிங்கம், பிள்ளையாரின் வாகனமாக மூஷிகம், திருமாலின் அம்சமாக ஆதிசேஷன் என்ற பாம்பு, ஐயனாரின் வாகனமாகக் குதிரை, பைரவரின் வாகனமாக நாய், ஐயப்பனின் வாகனமாகப் புலி, எமனின் வாகனமாக எருமை, இந்திரனின் வாகனமாக யானை போன்றவற்றை இன்றும் மக்கள் வழிபட்டு வருகிறார்கள். மீன், சிங்கம், ஆமை, பன்றி போன்ற உயிரினங்கள் திருமாலின் பத்து அவதாரங்களில் இடம்பெற்றுள்ளன. காஞ்சிபுரம் வரதராஜர்கோயிலில் பல்லியையும், இராஜஸ்தானிலுள்ள கோயில்களில் எலிகளையும், திருவானைக்காவல் கோயிலில் சிலந்தியையும் தெய்வத்தோடு சேர்த்து மக்கள்

வணங்குகிறார்கள். இவ்வாறு விலங்குகள், பறவைகள் உட்பட அனைத்து உயிர்களுமே தெய்வத்தன்மை பெற்றவை என்ற ஆன்மிகக் கருத்தை இந்தியப் பண்பாடு எடுத்துரைக்கிறது.

**உங்களுக்குத் தெரியுமா?** இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 51-A-இன் படி "காடு, ஏரி, ஆறு போன்ற இயற்கைச் சூழல்களை மேம்படுத்துவதும் பாதுகாப்பதும், பறவை, விலங்கு போன்றவற்றிடம் அன்பு பாராட்டுவதும் அவற்றால் ஏற்படும் நன்மைகளை உணர்வதும் கருணை காட்டுவதும், ஒவ்வொரு குடிமகனின் கடமையாகும்.

## கடல்

பண்டைய காலம் முதலே, கடலையும் கடலில் நீராடுவதையும் மக்கள் புனிதமாகக் கருதினர். இலங்கையில் இராவணனைக் கொன்ற இராமன் இராமேஸ்வரம் கடலில் நீராடித் தம் பாவத்தைப் போக்கிக் கொண்டார் என்று நம்பப்படுகிறது. சங்ககாலத்தில் கடலும் கடல் சார்ந்த பகுதியும் **நெய்தல்** என்றும் அழைக்கப்பட்டது. இப்பகுதி மக்கள் **வருணனைக் கடவுளாக** வழிபட்டனர். நெய்தல் நிலமான பூம்புகார் பகுதியில் நடைபெறும் இந்திரவிழா, சங்ககாலத்தில் புகழ்பெற்றிருந்ததாகவும், மக்கள் கடலில் நீராடியதாகவும் சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கூறுகின்றன. காக்கும் கடவுளான மகாவிஷ்ணு, பரந்தாமனாக லட்சுமிதேவியுடன் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டுள்ளதால் கடலைக் கடவுளாக வைணவர்கள் வழிபடுகின்றனர். கடலில் இலட்சுமி தோன்றியதால் அவர் **கடல்மகள்** என்றும் போற்றப்படுகிறார். வேதாரண்யம், கோடியக்கரை, பூம்புகார், இராமேஸ்வரம், கன்னியாகுமரி, திருச்செந்தூர் போன்ற இடங்களில் கடலில் நீராடுவதைப் புனித நீராடலாக இன்றும் மக்கள் கருதுகின்றனர். இவ்விடங்களில் ஆடி, தை மாத அமாவாசையன்று நீராடுவது, இந்துக்களிடம் புனிதமாகக் கருதப்படுகிறது.



திருச்செந்தூர் முருகன் கோயில்

முருகனின் அறுபடைவீடுகளுள் கடற்கரையோரம் உள்ள ஒரே தலம் திருச்செந்தூராகும். இங்குதான், சூரபத்மன் என்ற அசுரனை முருகக் கடவுள் வதம் செய்ததாகக் கருதப்படுகிறது. இந்த நிகழ்வை நினைவு கூறும்வகையில் ஆண்டுதோறும் **கந்தசஷ்டிவிழா** சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

கடலுக்கடியிலுள்ள பவளப்பாறைகள் முக்கியமான இயற்கை வளங்களாகும். கடலில் கிடைக்கும் முத்து விலைமதிப்புடையதாகக் கருதப்படுகிறது. எனவே, கடல் தெய்வமாக வழிபட படுகிறது. **"சமுத்திரராஜன்"** என்ற பெயரில் கடல் வணங்கப்படுகிறது. ஆற்றைத் தாயாகவும் கடலைத் தந்தையாகவும் கருதுவது நமது பண்பாடாகும்.

## பஞ்சபூதத் தலங்கள்

ஆகாயம், நெருப்பு, நீர், காற்று, நிலம் ஆகிய ஐந்தும் பஞ்சபூதங்கள் எனப்படுகின்றன. பண்டைக்காலத்திலிருந்தே மக்கள் இவற்றைக் கடவுளாக வழிபட்டு வருகின்றனர். இதன் அடிப்படையில் ஆகாயத்திற்குச் சிதம்பரம் நடராஜர் கோயிலும், நெருப்பிற்குத் திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயிலும், நீருக்குத் திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர் கோயிலும் காற்றுக்கு ஸ்ரீகாளஹஸ்தியிலுள்ள காளஹஸ்தீஸ்வரர் கோயிலும், நிலத்திற்குக் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலும் பஞ்சபூதத் தலங்களாகக் கருதப்பட்டு பண்பாட்டின் முக்கியத்துவம் பெறுகின்றன.



XII Ethics_Lesson 9.indd 232 05-04-2019 11:19:29

www.tntextbook.org

## இயற்கையோடு இயைந்த வாழ்வு

இந்தியப் பண்பாட்டின் அடிப்படையில் புழு, பூச்சி முதல் மனிதன் வரை அனைத்து உயிரினங்களுக்கும் நிலையான மதிப்புமிக்க ஓர் இடமுண்டு. மனிதன் வாழ்வதற்கு எப்படி உரிமை உண்டோ, அதைப்போலவே துளசிச்செடிக்கும், அருகம்புல்லுக்கும், வில்வமரத்துக்கும், நச்சுத்தன்மையுடைய ஜீவராசிகளுக்கும் வாழ்வதற்கான உரிமையுண்டு.

மனிதன் மதிக்கத் தகுந்தவனாக இருப்பதைப்போல, இயற்கையின் படைப்புகளான கடல், நதி, காடு, மலைகளும், உயிரினங்களும் போற்றத்தக்க இறைத்தன்மை வாய்ந்தனவாக உள்ளன. இவையனைத்தும் தமக்குள் இருக்கும் இறையம்சத்தை வெளிக்காட்ட வல்லவை என்று இந்தியப்பண்பாடு எடுத்துரைக்கின்றது.

புராணங்களில் பசுக்களும், யானைகளும், பாம்பும், எலியும் கடவுளை வணங்கிப் பெருமை அடைந்ததாக நாம் அறிகிறோம். இதன்மூலம், இயற்கையோடு இணைந்து மனிதன் வாழவேண்டும் எனப் பாரத பண்பாடு வலியுறுத்துகிறது. இயற்கையை இயற்கையின் போக்கில் விடுவது நலம். அதனை போற்றுதல் நமது கடமையாகும். மனிதன் தன்னுடைய அன்பை, தன்னலமின்றி, சுற்றத்தை மீறி, மனிதகுலம் முழுவதும் செலுத்தவேண்டும். உயிருள்ள அனைத்தையும் போற்றிப் பாதுகாத்தல் வேண்டும். படைப்புகள் அனைத்தையும் நேசிக்க வேண்டும். இதனையே **வள்ளலாரும் "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்,"** என்று மனம் வருந்தி கூறுகிறார். இப்படிப் படைப்பு முழுவதிலுமே மனிதநேயத்தைக் கற்றுத்தருவது இந்தியப் பண்பாடாகும்.

நாம் எல்லாரும் விரும்புவதும் வேண்டுவதும் வாழ்க்கையில் மகிழ்ச்சியாக, இன்பமாக இருக்க வேண்டும் என்பதுதான். உடலும், உள்ளமும், நலமாகவும் வாழ்வு வளமாகவும் இருந்தால் இன்பத்திற்குக் குறையிருக்காது. சுற்றுச்சூழலையும் பண்பாட்டையும் நாம் பாதுகாப்போமெனில் நம் வாழ்வு மட்டுமல்லாது நம் வருங்காலச் சந்ததியினர் வாழ்வும் நலமடையும் என்பதில் ஐயமில்லை.

## மரபு வாழ்க்கையும் இயற்கையும்

நம் முன்னோர்கள், நமது மனித சமுதாயத்திற்கு வழிவழியாகப் பல நன்மைகள் தரும் செயல்களைக் கற்றுத் தந்துள்ளார்கள். மனிதன் காலையில் துயில் எழுந்ததுமுதல் இரவு உறங்கும்வரை அவனின் அன்றாடச் செயல்பாடுகளுக்கு விதிமுறைகளை வகுத்துள்ளார்கள். விடியற்காலையில் எழவேண்டும், கதிரவனை வணங்க வேண்டும், குளிர்ந்த நீரில் குளிக்க வேண்டும், தூய ஆடை அணிய வேண்டும், இயற்கை உணவை உண்ண வேண்டும், அன்றாடக் கடமைகளை உற்சாகத்துடனும், ஊக்கத்துடனும் பக்தியுடனும் செய்யவேண்டும் என்று குறிப்பிட்ட நெறிமுறைப்படி வாழ மனிதர்க்குக் கற்றுக்கொடுத்தார்கள். அக்கால மக்கள் வானவியல் சாஸ்திரங்களை நன்கு அறிந்திருந்தார்கள்; பருவநிலைமாற்றம், காலநிலைகளுக்கேற்பத் தங்களுடைய வாழ்க்கை நெறிமுறைகளை மாற்றியமைத்துக் கொண்டு நலமான வாழ்வு வாழ்ந்தார்கள், ஒவ்வொரு மாதமும் அமாவாசை, பவுர்ணமி மற்றும் கிரகணத்தின் போதும் உண்ண வேண்டிய உணவுமுறைகள், உபவாச முறைகள் இவை அனைத்துமே மனித உடல் ஆரோக்கியத்தோடு தொடர்புடையது என்பதை அறிந்திருந்தார்கள்; மழைக்காலம், குளிர்காலம், கோடைகாலம் போன்ற காலங்களில் எப்படிப்பட்ட உணவுவகைகள் உண்ண வேண்டும், எந்த உணவு வகைகளை உண்ணக் கூடாது என்பதையும் அறிந்திருந்தார்கள். உணவுக்காகத் தங்கள் வசிப்பிடத்திலேயே காய், கனிகள், கிழங்குகள், கீரைகள் போன்றவற்றை அன்றாடத் தேவைக்கேற்பப் பயிரிட்டார்கள். மண்பாண்டங்களில் சமைத்துண்ணும் பழக்கமிருந்தது. ஒருநாள் சமைத்த உணவை மறுநாள் சேமித்து வைத்து உண்ணும் பழக்கம் அவர்களுக்கு இல்லை. ஆகவே, பண்டையமக்கள் உணவிலும், உறைவிடத்திலும், நாகரிக வாழ்க்கையிலும்



XII Ethics_Lesson 9.indd 233 05-04-2019 11:19:30

இயற்கையோடு இயைந்த எளிய வாழ்வையே வாழ்ந்தார்கள்என அறிகிறோம்.

**உங்களுக்குத் தெரியுமா?**

ஐ.நா. சபை 1992 –இல் சுற்றுச்சூழல் வளர்ச்சி மாநாட்டுக்கு ஏற்பாடு செய்தது. இம்மாநாட்டில் உலக நாடுகள் அனைத்தும் கலந்து கொண்டன. இதில் சுற்றுச்சூழல் கல்வியை எல்லா நிலைகளிலும் கொண்டுவரவேண்டும் என்று உறுதி எடுக்கப்பட்டது. இதற்கு "அஜண்டா-21"(Ajantha) என்று பொதுப் பெயரிடப்பட்டது. இதன் மூலம் கல்வி, பொது விழிப்புணர்வுப் பயிற்சி போன்றவற்றைச் சுற்றுச்சூழலை மேம்படுத்த வேண்டிய காரணிகளாகக் கொள்ளவேண்டும் என்று முடிவானது. மேலும் சுற்றுச்சூழல் கல்வி, கல்வி நிறுவனங்களில் கட்டாயமாக்கப்பட்டது.

### மாசுபடுதல்

மாசு என்பது சுற்றுப்புற சூழலுக்கு கேடு விளைவிக்கும் பொருள்களைச் சுற்றுப்புறத்தில் வெளியிடுவதாகும். பொதுவாக, மனிதனின் செயல்பாடுகளால் சுற்றுப்புறத்திற்குக்கேடு விளைவிக்கும் பொருள்களை மாசுபடுதல் அல்லது மாசடைதல் என்கிறோம்.

### மாசடைய காரணங்கள்

இரசாயனத் தொழிற்சாலைகள், எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள், அணுக்கரு உலைக் கழிவுகள், எரிப்பான்கள், பிவிசி தொழிற்சாலைகள், கார் உற்பத்தித் தொழிற்சாலைகள் போன்றவற்றின் கழிவுகள் சுற்றுச்சூழலை மாசடையச் செய்கின்றன.

- விபத்துகள் ஏற்படும்போது அணுக்கரு உலைகளும் எண்ணெய்க் கொப்பரைகளும் அதிக அளவில் மாசினை ஏற்படுத்துகின்றன.
- முக்கிய மாசுப் பொருள்களான குளோரினேட், ஹைட்ரோ கார்பன்கள், உலோகங்களான லெட் (பெயிண்ட் உள்ள பொருள்) காட்மியம், குரோமியம், பென்சீன் போன்றவை மாசுக்களை உண்டாக்குகின்றன.
- இயற்கைப் பேரிடர்களின்போது, மாசுபடுதல் அதிகளவிலான பாதிப்பை ஏற்படுத்துகின்றது. பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் கடற்கரையோர எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் போன்றவையும் மாசு ஏற்படுத்துகின்றன.
- பெருகிவரும் மக்கள்தொகைப் பெருக்கத்தின் விளைவாகக் காற்று, ஒலி போன்ற மாசுக்களும் ஏற்படுகின்றன.

### சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் மாணவர்கள் பங்கு

- மாணவர்கள் தங்கள் வகுப்பறையையும் விளையாட்டு மைதானத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். இச்செயல்பாடு அவர்களின் தலையாயக் கடமையாகும்.
- மக்கள்தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் விளைவுகளை மாணவர்கள் உணர்தல்வேண்டும்.மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள்பற்றி, மக்களிடையே எடுத்துரைத்தல் வேண்டும். சுற்றுச்சூழல்கேடு அடைவதற்கு மக்கள்தொகைப் பெருக்கமும் ஒரு காரணம் என அறிந்திருத்தல் வேண்டும்.
- "வீட்டுக்கு ஒரு மரம்" "நட்டு மரக்கன்றுகளைக் காப்போம்" என்ற அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்கவேண்டும். புதிய காடுகளை உருவாக்கவேண்டும்.
- 'மரம் நடுவோம் மழை பெறுவோம்' என்பதற்கேற்ப மாணவர்கள் தங்கள் வீட்டில் சிறுசெடியாவது வளர்க்கவேண்டும்.
- புகை கக்கும் வண்டிகளின் பயன்பாட்டைக் குறைத்தல்வேண்டும். அருகிலுள்ள இடங்களுக்கு நடந்து செல்லப் பழகவேண்டும். முடிந்தவரை மிதிவண்டிகளைப் பயன்படுத்துதல் நல்லது.
- மின்சக்தியின் பயன்பட்டை முடிந்தவரைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.



XII Ethics_Lesson 9.indd 234 05-04-2019 11:19:30

www.tntextbook.org

- அறிவியல் முன்னேற்றத்தாலும் தேவைகளாலும் கண்டுபிடிப்புகள் அதிகரித்துவிட்டன. இதன்காரணமாகத் தொழிற்சாலைகள் பெருகிவிட்டன. இத்தொழிற்சாலைகள் ஏற்படுத்தும் கழிவுகள் சுற்றுப்புறத்தை மாசடையச் செய்கின்றன. எனவே தேவைகளைக் குறைத்து, எளிய வாழ்வு வாழப்பழகிக் கொள்ளவேண்டும்.
- சுற்றுப்புறத் தூய்மை பற்றிய விழிப்புணர்வை மக்களுக்குக் கொண்டுச் செல்லவேண்டும்.

  "சுத்தம் சோறு போடும்"

  "கந்தையானாலும் கசக்கிக் கட்டு"

  "கூழானாலும் குளித்துக் குடி"

போன்ற பழமொழிகளின் பொருளை மக்களுக்கு உணர்த்துதல் வேண்டும்.

- நாம் மட்டும் தூய்மையாக இருந்தால் போதாது. நாம் வாழும் உலகத்தையும், சுற்றுச்சூழலையும் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டியது நமது கடமையென உணர்தல் வேண்டும்.
- உலகப் பூமி தினம், உலகச் சுற்றுச்சூழல் தினம், உலகச் சுகாதாரதினம் போன்ற தினங்களை மாணவர்கள் கொண்டாடி, அதன் முக்கியத்துவத்தைப் பிறருக்கு எடுத்துரைக்க வேண்டும்.
- குப்பைகளை முறையாக அப்புறப்படுத்தும் வழிமுறைகளைக் கடைப்பிடிக்கவேண்டும்.
- நெகிழிப்(பிளாஸ்டிக்) பொருள்களின் பயன்பாட்டை முற்றிலும் தவிர்க்கவேண்டும்.
- நீர்நிலைகள் மாசுபடுவதைத் தவிர்க்கவேண்டும்.

## இயற்கை வளங்களைப் பாதுகாக்க அரசு எடுக்கும் நடவடிக்கைகள்:

அழிந்து வரும் வன உயிரினங்களைக் காக்கவும், அவற்றின் எண்ணிக்கையைப் பெருக்கவும் அரசு பல்வேறு சட்டங்களைக் கொண்டுவந்துள்ளது.

- 1980 –இல் கொண்டுவரப்பட்ட 'காடுகள் பாதுகாப்புச்சட்டம்', வனங்களிலுள்ள மரங்கள் வெட்டப்படுவதைத் தடைச்செய்கிறது.
- வனங்கள், உயிரினங்களைக் காப்பாற்ற அரசு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது. எ.கா. கேரளாவில் **'ஆரோக்ய பச்சை'** என்ற மருத்துவத் தாவரத்தின் பயனையறிந்து, வெப்பமண்டலத் தாவரவியல் பூங்கா ஆராய்ச்சி நிறுவனம், இயற்கை வளங்களைப் பாதுகாக்க முயற்சிகள் எடுத்து வருகின்றது.
- ஸ்டாக்ஹோம் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு, உலகில் பல நாடுகள் தாமாக முன்வந்து சுற்றுச்சூழல் தொடர்பான சட்டங்களை வகுத்துக்கொண்டன. இந்திய அரசியலமைப்புச் சட்டம் 1976–ஆம் ஆண்டு 42–ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தின்படி, சுற்றுச்சூழலைப் பாதுகாப்பது அரசு மற்றும் மக்களின் கடமை என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- உயிரியல் பல்வகை சட்டம் 2002–இன்படி, ரியோ–டி–ஜெனிரோவில் உயிரியல் பல்வகை மீதான ஐ.நா. உடன்படிக்கையிலும் இந்தியா கையொப்பமிட்டுள்ளது. இதன் நோக்கம் உயிரியல் பல்வகை பாதுகாப்பு அதாவது, காடுகளிலுள்ள தாவரங்கள், விலங்குகள். நுண்ணுயிரிகள் அவற்றின் மரபுப் பொருள்கள், அவற்றின் இயல்பான வழித் தோன்றல்கள், திறன் சார்ந்த அறிவு சமன்பாடு போன்றவற்றைப் பாதுகாக்க சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.
- பள்ளிகள்தோறும் தேசியப் பசுமைப்படை ஏற்படுத்தப்பட்டு, மாணவர்கள் மூலம் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.



XII Ethics_Lesson 9.indd 235 05-04-2019 11:19:30

www.tntextbook.org

## நிறைவுரை

இயற்கையின் கூறுகளான மலைகள், காடுகள், கடல்கள், சமவெளிகள், பீடபூமிகள், பாலைவனப்பகுதிகள் போன்றவை பஞ்ச பூதங்களின் இணைப்பாகும். இவற்றை உள்ளடக்கிய சுற்றுச்சூழலின் மாசற்ற தன்மையே பூமியில் உயிரினங்கள் வாழ்வதற்குக் காரணமாகின்றன. எனவே, இவற்றைப் பாதுகாப்பது நமது கடமையாகும்.

# பயிற்சி

### சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. ஆய்காஸ் என்பது எந்த மொழிச் சொல் ?
   அ) இலத்தீன் ஆ) பிரெஞ்சு இ) கிரேக்கம் ஈ) ஸ்பானிஷ்
2. உலகச் சுற்றுச்சூழல் தினம் அனுசரிக்கப்படும் நாள்
   அ) ஜூன் 5 ஆ) ஜூலை 5 இ) ஆகஸ்ட் 5 ஈ) செப்டம்பர் 5
3. வைஷ்ணவதேவி கோவில் இடம்பெற்றுள்ள மாநிலம்
   அ) காஷ்மீர் ஆ) தமிழ்நாடு இ) இமாச்சலப்பிரதேசம் ஈ) சிக்கிம்
3. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ. மகாமகம் | – | 1. அலகாபாத் |
| ஆ. கும்பமேளா | – | 2. மதுரை |
| இ. கள்ளழகர் ஆற்றில் இறங்கும் விழா | – | 3. மயிலாடுதுறை |
| ஈ. காவிரி புஷ்கரவிழா | – | 4. கும்பகோணம் |

| | | | |
|---|---|---|---|
| அ) அ – 2 | ஆ – 3 | இ – 4 | ஈ – 1 |
| ஆ) அ – 4 | ஆ – 1 | இ – 2 | ஈ – 3 |
| இ) அ – 3 | ஆ – 4 | இ – 1 | ஈ – 2 |
| ஈ) அ – 2 | ஆ – 4 | இ – 3 | ஈ – 1 |

RVEFVW

5. ---------- சிப்கோ இயக்கத்தைத் தோற்றுவித்தவர்
   அ) சுனிதா நரேன் ஆ) பகுகுணா
   இ) அனில் அகர்வால் ஈ) அம்ரிதா தேவி
6. சங்க இலக்கியங்களில் 'ஆல் அமர் செல்வன்' என்று குறிப்பிடப்படுபவர்
   அ) சிவபெருமான் ஆ) முருகப்பெருமான் இ) மகாவிஷ்ணு ஈ) பிரம்மா
7. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சகம் ஏற்படுத்தப்பட்ட ஆண்டு
   அ) 1962 ஆ) 1985 இ) 1972 ஈ) 1988
8. பொருத்துக.

| | | |
|---|---|---|
| அ. பராசக்தி | – | 1. மயில் |
| ஆ. ஆதிசேஷன் | – | 2. யானை |
| இ. முருகன் | – | 3. பாம்பு |
| ஈ. இந்திரன் | – | 4. சிங்கம் |



XII Ethics_Lesson 9.indd 236 05-04-2019 11:19:30

www.tntextbook.org

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | அ – 3 | ஆ – 4 | இ – 1 | ஈ – 2 |
| ஆ) | அ – 2 | ஆ – 1 | இ – 4 | ஈ – 3 |
| இ) | அ – 4 | ஆ – 2 | இ – 1 | ஈ – 3 |
| ஈ) | அ – 4 | ஆ – 3 | இ – 1 | ஈ – 2 |

9. தவறான சொற்றொடரைத் தேர்ந்தெடுக்க.
   அ) பஞ்சபூதத் தலங்களில் ஆகாயத்தின் அம்சமாக விளங்குவது, சிதம்பரம் நடராஜர் கோயில்.
   ஆ) நீரின் அம்சமாக விளங்குவது, திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர்கோயில்.
   இ) நெருப்பின் அம்சமாக விளங்குவது, திருவண்ணாமலை அண்ணாமலையார் கோயில்.
   ஈ) நிலத்தின் அம்சமாக விளங்குவது, காளஹாஸ்தி காளாஹாஸ்திநாதர் கோயில்.

10. கந்தசஷ்டி விழா, எந்தக் கடவுளருக்காகக் கொண்டாடப்படுகிறது?
    அ) முருகன் ஆ) சக்தி இ) திருமால் ஈ) ஐயப்பன்

## குறுவினா

1. உலகத் தோற்றம் பற்றித் தொல்காப்பியர் கூறுவது யாவை ?
2. சுற்றுச்சூழல் கல்வி என்றால் என்ன ?
3. மாசடைதல் என்றால் என்ன ?
4. யிகோலஜி (Ecology) – விளக்கம் தருக.
5. சிப்கோ இயக்கம் விரிவுப்படுத்தப்பட்டுள்ள மாநிலங்கள் யாவை ?
6. மரத்திற்கும் சமயத்திற்கும் உள்ள தொடர்பினைக் கூறுக.

## சிறுவினா

1. இந்தியாவில் புகழ்பெற்ற மலைப் பிரதேசங்கள் அமைந்துள்ள மாநிலங்கள் யாவை ?
2. வைஷ்ணவதேவி கோயில் – குறிப்பு வரைக.
3. சிப்கோ இயக்கம் என்றால் என்ன ?
4. பஞ்சபூத தலங்கள் என எவற்றைக் குறிப்பிடுகிறோம் ?
5. சுற்றுச்சூழல் கல்வியின் தேவையைக் குறிப்பிடுக.
6. இந்தியப் பண்பாட்டில் மலைகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் யாது ?
7. கும்பமேளா – சிறு குறிப்பு வரைக.
8. ஒரு நாட்டிற்கு அரணாகத் திகழ்வன குறித்து, வள்ளுவர் கூறுவது யாது ?

## நெடுவினா

1. இந்தியப் பண்பாட்டில் மலைகளுக்கு அளிக்கப்படும் சிறப்பினைக் கூறுக.
2. இந்தியப் பண்பாட்டில் நதிகளுக்கு அளிக்கப்படும் முக்கியத்துவத்தை விவரிக்க.
3. இந்தியப் பண்பாட்டில் காடுகள் எவ்வாறு போற்றப்படுகின்றன?
4. இயற்கை வளங்களைப் பாதுகாக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவை ?
5. சுற்றுச் சூழலைப் பாதுகாக்க மாணவர்கள் மேற்கொள்ள வேண்டிய பங்கினை விவரிக்க.



XII Ethics_Lesson 9.indd 237 05-04-2019 11:19:30

# அலகு 10

# உலகிற்கு இந்தியப் பண்பாட்டின் கொடை

4S1AKS

## கற்றல் நோக்கங்கள்

- இந்தியா பண்பாட்டு மேன்மைகள் மற்றும் அறக்கோட்பாடுகள் பற்றி அறிதல்.
- இந்தியாவின் ஆன்மிகம் அதன் அடிப்படையிலான யோகா பற்றி அறிதல்.
- இந்தியாவின் பஞ்சசீலக் கொள்கை பற்றிப் புரிந்து கொள்ளுதல்.
- உலகிற்கு இந்தியா அளித்த கொடைகளான கணிதம், வானவியல், மருத்துவம் பற்றி தெரிந்து கொள்ளுதல்.
- இந்தியாவின் கலை மற்றும் கட்டடக்கலை நுட்பங்களைப் பற்றி புரிந்து கொள்ளுதல்.
- இந்தியப் பண்பாட்டின் மேன்மைகளையும், சிறப்புகளையும் அறிந்து பின்பற்றல்.

## நுழைவு வாயில்

நமதுநாடு பழைமையான பண்பாட்டைத் தன்னகத்தே கொண்டுள்ளது. வாழ்வியல் முறைகள், இலக்கியம், கணிதம், வானவியல், இசை, ஓவியம், நடனம், சிற்பம், கட்டடக்கலை போன்றவற்றில் உலகிற்கு முன்னோடியாகத் திகழ்கிறது. தேசிய ஒருமைப்பாட்டை மையப்படுத்தும், ஆன்மிக உணர்வு, இந்தியாவின் பலம் என **சுவாமி விவேகானந்தர்** குறிப்பிட்டுள்ளார். "உலகப்பொதுமறை" என்றழைக்கப்படும் திருக்குறள், தமிழர் வாழ்வியல் மற்றும் பண்பாட்டு நெறிகளைக் கூறும் சங்க இலக்கியம், இராமாயணம், மகாபாரதம், கௌதம புத்தர் தோற்றுவித்த பௌத்தசமயம் போன்றவை, உலகிற்கு இந்தியா வழங்கிய அளப்பரிய பண்பாட்டுக் கொடையாகும்.

## இந்தியப் பண்பாட்டின் மேன்மைகள்

இந்தியப் பாரம்பரியத்தின் உயரியப்பண்பு சகிப்புத்தன்மையும் பன்முகத்தன்மையுமாகும். யூதர்கள், கிறித்துவர்கள், முஸ்லீம்கள், பார்சிக்கள் போன்றோர் இந்தியாவில் குடியேறி, இந்தியப் பன்முகத்தன்மையை ஏற்றுக்கொண்டு, இந்தியப்பண்பாட்டுடன் தம்மை இணைத்துக் கொண்டார்கள். மதநல்லிணக்க அடிப்படையில் அனைத்துச் சமயங்களிலுமுள்ள நல்ல கருத்துகளை ஏற்றுக்கொள்ளல், பிற சமயத்தினருக்கும் மதிப்பளித்தல் போன்ற உணர்வுகளைத் தன்னகத்தே கொண்டு, சகிப்புத் தன்மையுடன் நடப்பது இந்தியர்களின் தலைசிறந்த பண்பாடாகும்.

நம் சமுதாயம், தருமம் என்ற அறக்கருத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. எல்லாச் சமயங்களும் எல்லா இனங்களும் சரிசமம். இஃது ஆண் – பெண் சமத்துவம் போன்ற சிறந்த கொள்கைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. நம் பண்பாடு இயற்கையிலுள்ள அனைத்து உயிர்களையும் உயிரற்றவைகளையும் நேசிக்கும் பண்பைக் கொண்டுள்ளது. மரம், செடி, கொடி, நதி என எல்லாவற்றையும் வணங்கும் பாங்கு, நமது உயரிய நற்பண்புகளை எடுத்துக்காட்டுவதாய் அமைகிறது.



XII Ethics_Lesson 10.indd 238 05-04-2019 11:21:32

www.tntextbook.org

இந்தியப் பண்பாட்டில் கட்டடக்கலை, மிகச் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. எடுத்துக்காட்டாக எல்லோரா குகைக்கோயில், அஜந்தா ஓவியம், குடைவரைக்கோயில் (மகாபலிபுரம்), லிங்கராஜா கோயில் (புவனேஸ்வர்), சூரியனார் கோயில் (கோனார்க்), நடராஜர் கோயில் (சிதம்பரம்), தஞ்சைப் பெரியகோயில் போன்றவற்றைக் கூறலாம். மேலும் சிற்பங்கள், ஓவியங்கள், நடனங்கள், நாடகங்கள், இசை போன்றவற்றில் உலகிற்கே முன்னோடியாக இந்தியப்பண்பாடு திகழ்கிறது.

"உண்மையில்லா நிலையிலிருந்து உண்மையையும், இருட்டிலிருந்து வெளிச்சத்தையும், ஒழுக்கக் கேட்டிலிருந்து விடுதலையையும்பெற்றுத்தரும்ஒருசாதனமாக அமைந்துள்ளது இந்தியப் பண்பாடாகும் ".

## அறக்கோட்பாடுகள்

**'அறம்'** என்ற சொல்லுக்குச் சான்றோர்கள் பல்வேறு பொருள்களைக் குறிப்பிடுகிறார்கள். தமிழ் இலக்கிய அகராதி, அறம் என்னும் சொல்லுக்கும் **புண்ணியம், தருமம், வாழ்வியல் விதி, ஒழுக்கம்** எனப் பல பொருள்களைக் குறிப்பிடுகின்றது.

"மனிதன் தனக்கென வரையறுத்துக் கொண்ட ஒழுக்க முறைகளின் நிறை வடிவமே அறம்" என **க. அரங்கசாமி** குறிப்பிடுகின்றார்.

**உங்களுக்குத் தெரியுமா?** 'சனாதனதர்மம்' என்பதற்கு **முடிவில்லா அறம்** என்று பெயர். மனிதன் இயற்கையோடு ஒன்றிய நல்வாழ்விற்கு அடிப்படையாக விளங்குவது தர்மமேயாகும். சடங்குகளைவிட ஒழுக்கமே முக்கியம் என்று தருமம் கூறுகிறது. மனிதனின் குடும்பக்கடமைகள் சமூகக்கடமைகளாகப் போற்றப்படுகின்றன.

## நான்கு புருஷார்த்தங்கள்

வாழ்வின் உறுதிப் பொருள்களான அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய நான்கையும் புருஷார்த்தங்கள் என்று அழைக்கிறோம். இவற்றில் வீடுபேற்றை அடைவதையே மனிதன் தம் குறிக்கோளாகக் கொள்ளவேண்டும். அதனை அடைய, வேதங்களில் சொல்லப்பட்டுள்ள வாழ்வியல் நெறிக்கோட்பாடுகளை முறையாகப் பின்பற்றிட வேண்டும் என்று நம் முன்னோர்கள் அறிவுறுத்துகின்றனர்.

## தொல்காப்பியரின் அறக்கோட்பாடு

**தொல்காப்பியர்** அகத்திணையியல் களவியல், கற்பியல், பொருளியல் முதலிய அகப்பொருள் கோட்பாடுகளையும், புறத்திணையியல் மரபியல் பற்றிய அறக்கோட்பாடுகளையும் வழங்கியுள்ளார். பழைமையான மரபையே பின்பற்றச் சொல்லும் பிற்போக்கு எண்ணம் இல்லாத தொல்காப்பியர், **'கடிசொல் இல்லைக் காலத்துப் படினே'** எனக்கூறி பழைமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்தார்.

## இதிகாசங்களில் அறக்கோட்பாடு

**வால்மீகி முனிவரால்** எழுதப்பட்ட **இராமாயணமும், வேதவியாசரால்** எழுதப்பட்ட **மகாபாரதமும்** இதிகாசங்களாகும். இராமாயணம் 'ஒருவனுக்கு ஒருத்தி' , 'பெரியோருக்குக் கீழ்ப்படிதல்', 'கற்புநெறி', 'நன்றிமறவாமை', 'பிறன்மனை நோக்காதிருத்தல்', 'உண்மையே வெல்லும்' போன்ற உயரிய அறநெறிக் கோட்பாடுகளை உலகிற்கு வழங்கியுள்ளது.

மகாபாரதம் அறம், பொருள், இன்பம், வீடுபேறு என்னும் மனிதன் பின்பற்ற வேண்டிய நால்வகை நோக்கங்களைப்பற்றிக் கூறுகிறது. தனிப்பட்டவர்களுக்கு உரிய சிறந்த குணங்களையும், சூது வாழ்க்கைக்குக் கேடு, மண்ணாசை வேண்டாம், தர்மம்வெல்லும், நன்றிமறவாமை, சகிப்புத்தன்மை, தியாகம், செஞ்சோற்றுக் கடன்தீர்த்தல் போன்ற அறங்களையும் இவ்வுலகிற்கு எடுத்தியம்புகிறது.

## சமண அறக்கோட்பாடுகள்

**வர்த்தமானமகாவீரர்** 'திரிரத்தினங்கள்' என்ற மும்மணிகளையும் வாழ்வியலுக்கான இல்லறக் கோட்பாடுகளையும், கர்மவினை



XII Ethics_Lesson 10.indd 239 05-04-2019 11:21:32

www.tntextbook.org

போன்ற அறக்கோட்பாடுகளையும் சமண சமயத்தின் மூலம் நமக்கு அளித்துள்ளார்.

### பௌத்த அறக்கோட்பாடுகள்

**கௌதம புத்தர்** மனித வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நால்வகை உயரிய உண்மைகளையும், எண்வகை பாதைகளையும் வகுத்தளித்துள்ளார். மேலும் இல்லறத்தார், துறவறத்தார் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகளையும் வழங்கியுள்ளார்.

### ஔவையாரின் அறக்கோட்பாடுகள்

ஔவையார் தமது **ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை, நல்வழி** போன்ற அறநூல்கள் வாயிலாக வாழ்வியல் அறங்களான கற்பு, தர்மம், கல்வி, பிறருக்கு உதவும் மனப்பான்மை போன்றவற்றை எளிமையாகக் கடைப்பிடிக்கும் நோக்கில் விளக்கியுள்ளார். மேலும், நல்வழி என்ற அறநூலில் 'சாதி இரண்டே இதுவே நீதி', 'வருவது வரும் வாடாதே', 'ஏர் பிடித்தோர்க்கு இணையில்லை', 'பசி வந்தால் பத்தும் பறந்து போகும்' போன்ற உயர்ந்த அறக்கருத்துகளை மனித சமூகத்திற்கு வழங்கியுள்ளார்.

### திருக்குறள் கூறும் அறக்கோட்பாடு


திருவள்ளுவர்

தமிழரின் பெருமையை உலகுக்கு உணர்த்திய அறநூல் திருக்குறள். இந்நூல் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றிய தமிழரின் பண்பாட்டைப் பறைசாற்றுகிறது. இந்நூலில் இடம்பெற்றுள்ள அறக்கருத்துகள் நடைமுறை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய நெறிகளை எடுத்துரைக்கின்றன.

திருவள்ளுவர், வாழ்வியல் நெறியை அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பகுதிகளாகப் பிரித்துள்ளார். திருக்குறளின் தத்துவமே அறவழியில் வாழ்ந்து, அறவழியில் பொருள் சேர்த்து இன்பமாக அறவழியில் வாழ்வதேயாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

'எல்லாப் பொருளும் இதன்பால் உள' என்பதற்கேற்ப திருக்குறளில் அறக்கருத்துகள் நிறைந்துள்ளன. அவை, உலக மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளபடுவதால் இந்நூலைப் பிற மொழிகளிலும் மொழிபெயர்த்துள்ளனர்.

| மொழிபெயர்ப்பு | மொழிபெயர்ப்பாளர்கள் |
|---|---|
| ஆங்கிலம் | ஜி.யு.போப் |
| இலத்தீன் | வீரமாமுனிவர் |
| ஜெர்மன் | டாக்டர் கிரௌல் |
| பிரெஞ்சு | ஏரியல் |

திருக்குறள் நீதிநூல் மட்டுமன்று; அஃது ஒரு வாழ்வியல் நூலாகும்; இயற்றப்பட்ட காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு மட்டுமன்றி இந்நூற்றாண்டின் புதிய தலைமுறையினருக்கும் வழிகாட்டும் அறநூலாக விளங்குகிறது. வள்ளுவத்தின் பொருண்மை, காலந்தோறும் புதிய கருத்தாக்கங்களைத் தந்து இனம், மொழி, நாடு என்ற எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது. இவ்வாறு, பல சிறப்பியல்புகள் கொண்ட அறக்கோட்பாடுகளை உலகிற்குத் திருக்குறள் வழங்கியுள்ளது.

### ஆன்மிகம்

ஆன்மிகம் என்பது பொதுவாகப் **'புலன்கடந்த அனுபவநிலையாகும்'.** மனிதன், தன்னுள் இருக்கும் ஆத்ம ஞானத்தை உணர்வதுதான் ஆன்மிகமாகும். **ஞானயோகம், கர்மயோகம் மற்றும் பக்தியோகம்** என்பன ஒவ்வோர் உயிரும் அதன் கர்ம வினைகளின்படி, அதன் தற்போதைய நிலையின்படி, ஏற்ற வழியைப் பின்பற்றித் தமது குறிக்கோளான வீடுபேறு அல்லது ஆன்மாவின் உண்மை நிலையை அறிவதே ஆன்மிகம் எனலாம்.

சமயக் கோட்பாடுகளின்படி, உயிரினங்கள் அனைத்தும் தெய்வீகத் தன்மை கொண்டவை எனலாம். தெய்வீகத்தின் அங்கமாகத்தான் இவ்வுலகம் அமைந்துள்ளது. அந்தத் தெய்வீகத் தன்மையை உணர்த்துவதுதான் ஆன்மிகமாகும். மனிதன் இவ்வுலகில்



XII Ethics_Lesson 10.indd 240 05-04-2019 11:21:32

இயற்கையோடு இணைந்து வாழ்வதே ஆன்மிகம். இதுவே இந்தியப் பண்பாட்டின் ஆணிவேராகும்.

## யோகா

சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் பாரத நாட்டில் தோன்றிய பழைமையான 'வாழ்வியல் பயிற்று முறை' யோகாவாகும். உடல், மனம், அறிவு, உணர்வு ஆன்மிகம் ஆகியவற்றின் வளர்ச்சிக்கும் சமன்பாட்டிற்கும் உதவிடும் கலை யோகக்கலையாகும். இஃது உடலையும் உள்ளத்தையும் நலத்துடன் வைத்துப் போற்றும் ஒழுக்கங்களைப் பற்றிய நெறியாகும். 'யோகா' என்பது, ஒரு சமயம் அன்று; அஃது ஒரு பெருந்தத்துவம்; ஒரு கலை; ஓர் அறிவியல் மற்றும் வாழ்க்கை நெறிமுறையாகும். (Yoga in short, is not a religion but a great philosophy, an art, a science and a way of life)

யோகநிலையில்தான் மற்ற உயிர்களையும் தன்னுயிர் போலவே நேசிக்க முடியும். இதனையே **இராமலிங்க அடிகளார் ஜீவகாருண்ய ஒழுக்கம்** என்றார். கிறித்துவ புனித நூலான பைபிள் **"உன்னைப் போல பிறரையும் நேசி"** என்று குறிப்பிடுகின்றது. இஸ்லாமிய புனித நூலான திருக்குரான் **"நீ பிறரிடம் இரக்கம் காட்டினால் நான் உன்னிடம் இருமடங்கு இரக்கமுடையவனாய் இருப்பேன்"** என்கிறது. இந்த ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை, யோகமுறையை மேற்கொள்வதால் அடையமுடிகிறது.

## பஞ்சசீலக் கொள்கை

சமஸ்கிருத மொழியில் '**பஞ்ச**' என்றால் 'ஐந்து', '**சீலம்**' என்றால் ஒழுக்கம்(நற்பண்புகள்). எனவே **பஞ்சசீலம்** என்றால் **ஐந்து நற்பண்புகள்** எனப்படுகிறது. இஃது இந்திய வெளியுறவுக் கொள்கையின் ஓர் அங்கமாகத் திகழ்கிறது. பஞ்சசீலக் கொள்கையை உலகிற்கு அளித்தவர் **ஜவஹர்லால் நேரு** ஆவார். பஞ்சசீலக் கோட்பாடு, இந்தியப்பண்பாட்டு உணர்வை அடித்தளமாகக் கொண்டே உருவாக்கப்பட்டது.

1. ஒரு நாடு மற்றநாட்டின் ஒற்றுமையையும் இறையாண்மையையும் மதிக்க வேண்டும்.
2. ஒரு நாடு பிறநாட்டின் எல்லைகளை அத்துமீறக் கூடாது.
3. ஒரு நாடு பிறநாட்டு உள்விவகாரங்களில் தலையிடக் கூடாது.
4. சமத்துவ மற்றும் சகோதரத்துவ நலனுக்காகப் பாடுபடவேண்டும்.
5. சமாதான சகவாழ்வு

### பாண்டுங் மாநாடு – அணிசேரா இயக்கம்

இரண்டாம் உலகப்போர் முடிவில் அமெரிக்கா தலைமையில் முதலாளித்துவ நாடுகள் ஓரணியாகவும், சோவியத்ரஷ்யா தலைமையில் பொதுவுடைமைக் கொள்கையைக் கொண்ட நாடுகள் மற்றொரு அணியாகவும் செயல்பட்டன. இவைகளுக்குள், ஆயுதங்களை பெருக்கும் போட்டியும் மறைமுகமாக நடைபெற்றது. இந்நிலையில் இந்த இரு அணியிலும் இல்லாத நாடுகளை ஜவஹர்லால் நேரு தனது வெளியுறவுக்கொள்கையின் அடிப்படையில் ஓர் புதிய அணியை உருவாக்கினார்.

இந்நாடுகளின் மாநாடு இந்தோனேசியாவில் 1955–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18முதல் 24 ஆம் தேதி வரை பாண்டுங் நகரில் ஆசிய – ஆப்பிரிக்க நாடுகளின் மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் 29 நாடுகள் கலந்து கொண்டன. இந்தியாவின் சார்பாக ஜவஹர்லால் நேரு, சீனாவின் சூ–யென்–லாய், இந்தோனேசியாவின் சுகர்னோ, யுக்கோஸ்லோவியாவின் மார்ஷல் டிட்டோ, எகிப்தின் கர்னல் நாசர் ஆகியோரும் கலந்து கொண்டனர் .

## இந்திய வானவியல்


குப்தர்கள் காலத்தில் கணிதம், வானவியல், மருத்துவம், ஜோதிடம் போன்ற துறைகளில் இந்தியா வளர்ச்சி பெற்றிருந்தது. இவர்கள் காலத்தில் வாழ்ந்த '**ஆரியபட்டர்**' வானவியல் மற்றும் கணிதத்தில் சிறந்து விளங்கினார். **"ஆரிய சித்தாந்தம்"** என்ற தமது வானவியல்



XII Ethics_Lesson 10.indd 241 05-04-2019 11:21:32

www.tntextbook.org

நூலில், 'உலகம் உருண்டையானது, பூமி தனது அச்சில் சுழலுவதால் இரவு, பகல் ஏற்படுகிறது' என்றார். இவர் சூரிய, சந்திர கிரகணங்கள் தோன்ற உண்மையான காரணங்களை விளக்கிக் கூறியுள்ளார். ஆனால், மேலைநாட்டு வானவியல் அறிஞர்கள் பிற்காலத்தில்தான் இவ்வுண்மைகளை அறிந்தனர். ஆரியபட்டர் எழுதிய **'ஆரியபட்டீயம்'** என்ற நூல் உலகமே வியக்கும் வானவியல் நூலாகப் போற்றப்படுகிறது.



ஆரியபட்டர்

## வராகமிகிரர்

இவர் **'பஞ்ச சித்தாந்திகா, 'பிருகத் சம்ஹிதா'** முதலான ஜோதிட, வானவியல் நூல்களையும் எழுதியுள்ளார். மேலும் **'லகு ஜாதகம்', 'பிரிக ஜாதகம்'** போன்ற ஜோதிட, வானவியல் நூல்களையும் எழுதியுள்ளார். இவர் தம் நூல்களில் கோள்கள் யாவும் மனித வாழ்வோடு எவ்வாறு தொடர்பு கொண்டுள்ளன என்பதை விளக்கிக் கூறியுள்ளார்.

## பிரம்மகுப்தர்

வானவியலிலும் கணிதவியலிலும் வல்லுநரானர் பிரம்மகுப்தர், **பிரம்மஸ்பு சித்தாந்தம், காரணகண்டாக்கடியகா** முதலிய நூல்களை எழுதியுள்ளார். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே புவி ஈர்ப்பு விசை பற்றித் தமது நூல்களில் குறிப்பிட்டுள்ளார்.

## பாஸ்கரர்



பாஸ்கரர்

வானவியலிலும் கணிதத்திலும் சிறந்த விளங்கிய அறிஞர் பாஸ்கரர். இவர், **காரண குதூகலா** என்ற நூலையும் **தட்கலிகத்தி** என்ற நூலையும் எழுதியுள்ளார். இந்நூல்கள் கிரகங்களின் இயக்கங்களைப் பற்றிக் கூறுகின்றன. இதன்மூலம் அக்காலத்திலேயே வானவியலில் இந்தியா சிறந்து விளங்கியிருந்தது என்பதை அறியமுடிகிறது.

### இந்தியச் செயற்கைக் கோள்கள்

இஸ்ரோ நிறுவனம் (ISRO), இந்தியாவின் சார்பில் ஆரியபட்டா, பாஸ்கரா, ரோகிணி, ஆப்பிள் போன்ற செயற்கைக் கோள்களையும் IRS -1A,1B ஆகிய தொலையுணர்வு செயற்கைக் கோள்களையும் பாதுகாப்பு அடிப்படையிலான செயற்கை கோள்களையும் விண்ணில் செலுத்தியுள்ளது. இந்தச் செயற்கைகோள்களுக்கு இந்தியாவின் வானவியல், கணித வல்லுநர்களான ஆரியபட்டர் பெயரும் பாஸ்கரர் பெயரும் சூட்டியது குறிப்பிடத்தக்கது.

## இந்திய மருத்துவம்

இந்திய மருத்துவம், சிந்துவெளி நாகரிகம் காலந்தொட்டு வளர்ந்திருக்க வேண்டும். ஆனால், போதிய தகவல்களும் ஆதாரங்களும் இல்லாமையால், ஆயுர்வேதம் தோன்றுவதற்குமுன் பழங்குடியினர்களின் மருத்துவம் இருந்திருக்கலாம். கி.மு.(பொ.ஆ.மு) எட்டாம் நூற்றாண்டுவரை, வேதகால மருத்துவம் நடைமுறையில் இருந்தது. அதன்பின் ஆயுர்வேத மருத்துவம் வளர்ச்சி பெற்றிருக்கவேண்டும். கி.மு.(பொ.ஆ.) ஆறாம் நூற்றாண்டுக்கு முன்பே காம்பில்யா, வாரணாசி, தட்சசீலம் ஆகிய இடங்களில் மருத்துவக் கல்வி நிறுவனங்கள் இயங்கி வந்துள்ளன.

இந்தியர்கள் அறுவைசிகிச்சை முறையில் மிகவும் தேர்ச்சி பெற்றிருந்தனர். வயிற்றுப் புறத்தோலில் செய்யப்படும் அறுவைசிகிச்சை(Lab Parotomy), சிறுநீரகக் கற்களைஅகற்றும்அறுவைசிகிச்சை(Lithicotomy), ஒட்டுறுப்பு அறுவை சிகிச்சை (Plastic Surgery) ஆகியவற்றில் இந்திய மருத்துவர்களின் பணிகள் பாராட்டுக்குரியவையாகும்.

இந்தியா முழுவதும் இப்போது ஆயுர்வேத – யூனானி மருத்துவர்கள்



XII Ethics_Lesson 10.indd 242 05-04-2019 11:21:33

www.tntextbook.org

பயன்படுத்தி வரும் சிலாசித்துவேர் மொகஞ்சதாரோவில் கிடைத்துள்ளது. இவ்வேர் வயிறு, குடல், நுரையீரல் போன்றவற்றில் உருவாகும் நோய்களையும் குணமாக்கும் தன்மை உடையது.

## இந்திய மருத்துவ வளர்ச்சி

மௌரியர் ஆட்சிக் காலத்தில் மருத்துவப் பராமரிப்புக்கும், சுகாதாரத்திற்கும் முன்னுரிமை அளிக்கப்பட்டது. முதியோர், ஆதரவற்றோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்காக சிறப்பு மருத்துவமனைகள் இயங்கிவந்தன. கால்நடைகளுக்கெனத் தனியாக மருத்துவமனைகளும் இருந்தன.

வாக்பட்டரின் **அஷ்டாங்கசங்கிரகம், அஷ்டாங்கஹிருதயா** என்னும் இரு மருத்துவ நூல்கள் புகழ்பெற்றவையாகும். **'அஷ்டாங்கஹிருதயா'** என்ற மருத்துவநூல், நோய் தீர்க்கும்முறை, சுகாதாரம், உடலுறுப்பு அமைப்பியல் அறுவைசிகிச்சை, தாய்மை மருத்துவம், கண் மருத்துவம் பற்றிக் குறிப்பிடுகின்றது. சரகர் எழுதிய **சரக சம்ஹிதா** என்னும் நூல் உடல், உள மருத்துவத்தையும், சுசுருதர் எழுதிய **சுசுருத சம்ஹிதா** அறுவைசிகிச்சை முறையைப்பற்றிக் கூறுகின்றன.

## ஆயுர்வேத மருத்துவம்



ஆத்ரேயர்

கி.மு.(பொ.ஆ.மு) எட்டாம் நூற்றாண்டில் **'ஆத்ரேயர்'** என்ற மருத்துவர் வாழ்ந்தார். அவர், தமது சீடர்களுக்குத் தொகுத்தளித்த ஆய்வேடுகளும், அக்னி வேசர் எழுதிய **'அக்னி வேச தந்தரா"** என்ற நூலும் ஆயுர்வேதம் பற்றிக் கூறுகின்றன. ஆத்ரேயர் ஆயுர்வேத மருத்துவத்தைப் பற்றி வரிசையாக தம் ஆய்வேடுகளில் குறிப்பிட்டுள்ளார்.

## சித்த மருத்துவம்

உயரிய பண்பாடும், அறிவுத்திறனும், சிறந்த ஆற்றலுடனும் விளங்கிய சித்தர்களால் உருவாக்கப்பட்டது சித்தமருத்துவமாகும். இவர்கள் எல்லாவகை நோய்தீர்க்கும் மருந்துகளையும், தாதுக்களையும் வேதியியல் பொருள்களையும் ஆராய்ந்து பயனுள்ளவை எவை, பயனற்றவை எவை என்று கண்டறிந்துள்ளனர். பாதரசத்தை அடிப்படையாகக்கொண்டு, நீண்ட ஆயுள்பெற **இரசவாத முறையில்** மருந்து தயாரிக்கும் முறையை அறிந்து வைத்திருந்தனர். இது தமிழ்நாட்டுக்கு உரித்தான மருத்துவ முறையாகும்.

> *திருமூலர், இடைக்காடர், போகர், அகத்தியர், பதஞ்சலி, தன்வந்திரி, மச்சமுனி முதலானோர் பதினெண் சித்தர்களுள்* குறிப்பிடத்தக்கவர்கள்.

### பண்டைய கால மருத்துவமனைகள்

- ஆந்திரா – விஜயபுரி, நாகார்ஜுனா கொண்டா
- தமிழ்நாடு – தஞ்சாவூர், திருமுக்கூடல், திரிபுரந்தகம், திருப்புகலூர், திருவரங்கம்
- கர்நாடகா – கௌடியமடம்
- பீகார் – ஷிபாக்கனா மருத்துவமனை
- கேரளா – ஆலப்பூர், புலிமந்தாள், வயங்கரை, வெள்ளோடு, சோட்டானிக்கரை, குருவாயூர்

## இந்தியக் கணிதம்



பிரம்மகுப்தர்

குப்தர்கள் காலத்தில் வாழ்ந்த ஆரியபட்டர், ஆரியபட்டீயத்தில் வட்டத்தின் பரப்பைக் கண்டுபிடிக்க உதவும் $\pi$ உண்மையான மதிப்பை 3.1416 எனத் துல்லியமாகக் கூறியுள்ளார். இலட்சம்,



XII Ethics_Lesson 10.indd 243 05-04-2019 11:21:33

www.tntextbook.org

கோடி போன்ற மிகப்பெரிய எண்களைச் சுருக்கமாகக் குறிப்பிடும் வகையை ஆரியபட்டர் பயன்படுத்தினார். இயற்கணிதம் (Algebra) பயன்படுத்திய முதல் இந்தியர் இவரேயாவார்.

பிரம்மகுப்தர் ஆற்றிய மிகப்பெரிய பணி பூஜ்யத்தின் பயனை எடுத்துக்காட்டியதாகும். இவர் குப்தர் காலத்தில் வாழ்ந்த சிறந்த கணித மேதையாவார். இவர் எழுதிய நூல், **சித்தாந்த சிரோன்மணியாகும்.** இதில் எண்ணியல், எடை, கொள்ளளவு, கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல், பரப்பு, கனஅளவு பற்றியும் பூஜ்யம் இயற்கணிதம் பற்றியும் குறிப்பிட்டுள்ளார்.

## நுண்கலைகள்

### இசை

இசை, மனித மனத்திற்கு அமைதி தருவதாகும். இசையானது காலத்திற்கேற்றாற்போலப் பரிமாணத்தைப் பெற்று வருகிறது. இயற்கையினின்றே முதல் இசை தோன்றியது எனலாம். இதனை ஓசை என்றழைப்பர். அதன்பின்னர், இசை புதிய வளர்ச்சியைப் பெற்றது. இந்திய இசையின் சாரமாகத் திகழ்வது சாமவேதமாகும். பிற்காலத்தில் சாம வேதத்தைத் தழுவி, வட இந்தியாவில் தோன்றிய இசைப்பாணி **இந்துஸ்தானி இசை** (Hindustani Music) எனப்பட்டது. அதே காலக்கட்டத்தில், தென்னிந்தியாவில் **கர்நாடக இசை**(karnatic Music) புகழ் பெறத் தொடங்கியது. மௌரியர்கள், குப்தர்கள் போன்ற வட இந்திய வம்சாவழி மன்னர்களும் தமிழகத்தில் சங்ககாலம்முதல் பிற்காலப் பாண்டியர்கள் வரையிலான மன்னர்களும், இசைக்கலையையும் இசைக்கலைஞர்களையும் ஆதரித்துள்ளனர். கி.பி.(பொ.ஆ.) பத்தாம் நூற்றாண்டின் இறுதியில், இஸ்லாமியர்களின் இசை இந்தியாவில் மெல்ல மெல்ல பரவத் தொடங்கியது. இஸ்லாமியத் துறவிகளான சூபிக்கள் **குவாலிஸ்** (Qualis Music) என்ற இசைமுறையை உருவாக்கிப் பரப்பினர். ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர், **மேற்கத்தியஇசை** (Western Music) இந்தியாவில் புகுத்தப்பட்டது. தமிழிசை, கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை ஆகியவை இந்தியா உலகிற்கு அளித்த கொடைகளாகும்.

**உங்களுக்குத் தெரியுமா?**

**தமிழிசை மூவர்**

முத்துத்தாண்டவர், அருணாச்சலக் கவிராயர், மாரிமுத்தாப்பிள்ளை ஆகிய மூவரும் தமிழிசை மூவர் எனப்படுகின்றனர். கிருதி எனப்படும் கீர்த்தனைகளை மையப்படுத்தித் தமிழ்ப் பாடல்களைப் சரணம், பல்லவி, அனுபல்லவி ஆகிய இசையம்சங்களுடன் இயற்றினர். இவர்களின் தமிழ்ப்பணியைப் பாராட்டித் தமிழக அரசு, சீர்காழியில் மணிமண்டபத்தை அமைத்துள்ளது.

### பஞ்சமுக வாத்தியம்


பஞ்சமுக வாத்தியம்

பழங்காலத் தொன்மையான இசைக்கருவிகளுள் பஞ்சமுக வாத்தியமும் ஒன்று. இது வெண்கல வார்ப்பால் உருவாக்கப்பட்ட உயரமான குடமாகும். இதில் மூடப்பட்ட ஐந்து வாய்கள் இருக்கும். ஒவ்வொரு வாயில் இருந்தும் தனித்துவமான இசை வெளிவரும். இதுவே பஞ்சமுகவாத்தியமாகும். இவ்வாத்தியம் திருவாரூர் தியாகராஜர் கோயிலிலும் திருத்துறைப்பூண்டி பிறவிமருந்தீஸ்வரர் கோயிலிலும் மட்டுமே உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## செவ்வியல் நடனங்கள்

### பரதநாட்டியம்

தமிழ்நாட்டுக்குரிய சிறந்த நடனங்களில் முக்கியமானது பரதநாட்டியம். இது, புராணவியல் அடிப்படையில் **பரத முனிவரால்** உருவாக்கப்பட்டதால் '**பரதம்**' எனப் பெயர் பெற்றது. மிகத்தொன்மை வாய்ந்த இந்நடனம் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் புகழ் பெற்று விளங்குகிறது.



XII Ethics_Lesson 10.indd 244 05-04-2019 11:21:33

www.tntextbook.org



பரதநாட்டியம்

**உங்களுக்குத் தெரியுமா?**

**கருநாடக இசையின் மூவர்**

*தியாகராஜர், சியாமா சாஸ்திரிகள், முத்துசுவாமி தீட்சிதர் ஆகியோர் கர்நாடக இசையின் மும்மூர்த்திகளாவர். இவர்களுடைய பாடல்கள், பரதநாட்டியத்திலும் ஆன்மிக இசை நிகழ்வுகளிலும் முக்கியத்துவம் பெறுகின்றன. திருவாரூரில் இவர்களுக்கு நினைவிடம் அமைக்கப்பட்டுள்ளது.*

பரதம் என்ற சொல் **ப – பாவம், ர – ராகம், த – தாளம்** என்ற மூன்றையும் குறித்து நிற்பதாகச் சொல்லப்படுகிறது. **பாவம் உணர்ச்சியையும், ராகம் இசையையும் குறிக்கும்** இவற்றுடன் **தாளம்** சேர்ந்த நடனமே **பரதநாட்டியமாகும்.** வரலாற்று நோக்கில் இந்தியாவின் செவ்வியல் ஆடல் வகையில் ஒன்று பரத நாட்டியமாகும். இந்த நடனத்தை ஆடுபவர்கள் பெரும்பாலும் பெண்களே என்றாலும், ஆண்களும் இதனை ஆடுவதுண்டு. சிவபெருமான் ஆடும் நடனம் **'தாண்டவம்'** என்று சொல்லப்படுகிறது. மகிழ்ச்சியின் உச்சியில் அவர் ஆடும் நடனம் **ஆனந்ததாண்டவமென்றும்,** அழிக்கும் கடவுளாக அவர் ஆடும் நடனம் **'ருத்ரதாண்டவம்'** என்றும் அழைக்கப்படுகிறது. மேலும், பெண்கள் மென்மையான அசைவுகளுடன் ஆடும் நடனம் **'லாஸ்யம்'** என்றும் அழைக்கப்படுகிறது.

## கதகளி

**'கதகளி'** கேரள மாநிலத்தின் பாரம்பரிய நடனமாகும். இந்நடனம், கேரள மக்களின் பண்பாட்டினை எடுத்துக்காட்டும் தெய்வீக நடனக்கலையாகும். கதகளி என்றால் 'கதையை அடித்தளமாகக் கொண்ட ஆடுதல்' என்று பொருள். **ஆட்டக்கதை** என்ற மற்றொரு பெயரும் இதற்குண்டு. இராமாயணம், மகாபாரதம் போன்ற காவியங்களில் சொல்லப்பட்ட சமயம் சார்ந்த நிகழ்வுகள், இந்த நடனத்திற்குக் கருப்பொருளாக அமைகின்றன.

## மோகினி ஆட்டம்



மோகினி ஆட்டம்

**மோகினி ஆட்டம்** கேரளாவின் பாரம்பரிய நடனங்களில் ஒன்று. மோகினி என்ற சொல், ஓர் அழகான பெண்ணென்றும் ஆட்டம் என்றால் நடனம் என்றும் பொருள்படும். பாற்கடலிலிருந்து தோன்றிய அமிர்தத்தைக் கொடுக்கும் திருமாலின் அவதாரம் மோகினியாக மையப்படுவதால் மோகினியாட்டம் என்று பெயர் பெற்றது.

## குச்சிப்புடி

**குச்சிப்புடி** ஆந்திரப்பிரதேச மாநிலத்தில் உருவான நடனமாகும். இப்பெயர் ஆந்திர மாநிலத்தின் கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள



XII Ethics_Lesson 10.indd 245 05-04-2019 11:21:33

**குச்சிலாபுரம்** என்ற கிராமத்துடன் தொடர்புடையது. 17ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் தொடங்கிய இக்கலை, இன்று இந்தியாவிலும் உலகளவிலும் ஆடப்பட்டு வருகிறது.

## யக்ஷகானம் (யசக்கானம்)



யக்ஷகானம்

கர்நாடகாவின் மாநில நடனமாகக் கருதப்படுவது யக்ஷகானமாகும். கி.பி. (பொ.ஆ.) 16 ஆம் நூற்றாண்டுமுதல் இந்நடனம் மக்களால் விரும்பி பார்க்கப்படுகிறது. கர்நாடக மாநிலத்தில் பெல்லாரி மாவட்டத்தில் குருங்கோடு என்றோர் இடமுள்ளது. அங்குள்ள சோமசுந்தரர் ஆலயத்தில், இந்நாட்டிய நாடகம் அரங்கேற்றப்பட்டதாக வரலாற்றுத்தகவல்கள் தெரிவிக்கின்றன. இசை, உரையாடலோடு கூடிய இந்நடனத்தின் மூலம் இராமாயணம், மகாபாரதத்தின் முக்கிய காட்சிகள், சமணக் கதைகள், மக்களின் ஆன்மிக நம்பிக்கைகள் போன்றவை விளக்கப்படுகின்றன.

## ஒடிசி

ஒடிஸா மாநிலத்தின் பாரம்பரிய நடனம், ஒடிசி. இது கோயில்களில் நடைபெற்று வந்த ஒரு பாரம்பரிய நடனக்கலையாகும். 17ஆம் நூற்றாண்டில் **கோட்டிப்புகழ்** எனப்படும் சிறுவர்கள் இந்நடனத்தை பெண்ணுடை தரித்து கோயில்களில் ஆடினர்.

## கர்பா, தாண்டியா



ராஜபுதனம் ஓவியம்

குஜராத் மாநிலத்தின் பாரம்பரிய நடனங்கள் **கர்பா மற்றும் தாண்டியாவாகும்.** இவை நவராத்திரி விழாவின்போது, கலாச்சார உடையணிந்து ஆடி மகிழும் நடனங்களாகும். இந்தியா மட்டுமன்றி, வெளிநாடுகளிலிருந்தும் நவராத்திரி திருவிழா நடனங்களைக் காண, பலரும் நம் பாரத திருநாட்டிற்கு வருகை புரிகின்றனர்.

இது போன்று பீகாரின் **பிதஸியநடனம்**, மேற்கு வங்காளத்தின் **காத், ஜாத் நடனங்கள்**, மகாராஷ்டிரத்தின் **தமாஸா, லாவனி** போன்ற நடனங்களும் உலகிற்கு இந்தியாவின் பண்பாட்டை எடுத்தியம்புகின்றன.

## ஓவியக்கலை

இந்தியாவில் ஓவியக்கலை இயற்கையை மையமாக வைத்து தோற்றுவிக்கப்பட்டது. பழங்கால மனிதர்கள் இயற்கையின் அம்சங்களான மேகம், மழை, மரங்கள், விலங்குகள், மனித உருவங்கள் போன்றவற்றைக் குகைகளிலும், இறந்த விலங்குகளின் தோல்களிலும் வரைந்தனர். கரித்துண்டுகளைத் தொடக்கக் காலத்தில் ஓவியம் வரைய பயன்படுத்தினர். பிற்காலத்தில் மன்னர்கள் ஆட்சி நடைபெற்றபோது, ஓவியங்கள் பரிணாம வளர்ச்சி பெற்றன. இவர்களின் காலத்தில் கோயில்களின் சுவர்களில் ஓவியங்கள் தீட்டப்பட்டன. வண்ணத் தூரிகைகளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது.



XII Ethics_Lesson 10.indd 246 05-04-2019 11:21:34

பல்லவ மன்னனான முதலாம் மகேந்திரவர்மன் ஓவியக்கலைக்குப் பேராதரவு தந்தார். தட்சணசித்திரம் என்ற ஓவிய நூலுக்கு உரை எழுதினார். இவர், இக்கலையில் வல்லவராதலால் 'சித்திரகாரப்புலி' என்ற விருதினைப் பெற்றார்.

காலத்திற்கேற்றார்போல் நமது நாட்டில் பல்வேறு ஓவிய பாணிகள் தோன்றி வளர்ந்தன. அவையாவன,

1. மதுபானி ஓவியங்கள்
2. இராஜபுதன ஓவியப்பாணி
3. தஞ்சாவூர் ஓவியப்பாணி
4. முகலாய ஓவியப்பாணி
5. பசோஹ்லி ஓவியப்பாணி என்பவாகும்.

### மதுபானி ஓவியப் பாணி

பீகார் – நேபாள எல்லையில் உள்ள மதுபானி என்ற மாவட்டத்தில் இவ்வோவியக்கலை தோன்றியதால் மதுபானி ஓவியங்கள் எனப் பெயர் பெற்றது. நன்கு மெழுகப்பட்ட மண்சுவர்களில் இவ்வகை ஓவியங்கள் அதிகமாக வரையப்பட்டன. தாவர இலைகளிலிருந்து பெறப்படும் ஒருவகைச்சாறு நிறம்தரும் மூலப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டது. இராமாயணத்தின் முக்கியக் காட்சிகள் இவ்வகை ஓவியங்களில் முக்கியத்துவம் பெற்றன.

### இராஜபுதன ஓவியங்கள்

கி.பி. (பொ.ஆ.) 18–ஆம் நூற்றாண்டில் இராஜஸ்தான், மத்திய பிரதேசப்பகுதிகளில் தோன்றி வளர்ச்சி பெற்ற ஓவியங்களே இராஜபுதன ஓவியங்களாகும். இந்த ஓவியங்கள் சிற்றோவியங்கள் (Minature) என்றழைக்கப்பபட்டன. இவை பெரும்பாலும் அரண்மனை மற்றும் கோட்டை சுவர்களில் வரையப்பட்டன. இவ்வோவியம் வரைவதற்கான நிறங்கள் தாவரங்களின் சாறு, சிப்பி போன்றவற்றிலிருந்து பெறப்பட்டன. சிறிய வகை வண்ணத்தூரிகைகள் இவ்வோவியம் வரைய பயன்படுத்தப்பட்டன. அரசன், அரசவை நிகழ்வுகள், மக்களின் தொழில், அரசனின் போர் முறைகள் போன்றவை இவ்வோவிய உருவாக்கத்தின் கருப்பொருளாக அமைந்தன.

### தஞ்சாவூர் ஓவியப் பாணி

கி.பி. (பொ.ஆ.) 17–ஆம் நூற்றாண்டில் தஞ்சை நாயக்க மன்னர்கள் காலத்தில் வளர்ந்த இவ்வகை ஓவியங்கள் கி.பி பதினெட்டாம் நூற்றாண்டில் மராட்டியர்கள் காலத்தில் புகழ்பெற்றன. தஞ்சை மராட்டிய மன்னரான சரபோஜி காலத்தில் ஆந்திராவிலிருந்து தஞ்சைக்குக் குடியேறிய 'மூச்சி' (Moochy) என்ற பெயர் கொண்ட ஓவியக்கலைஞர்கள் பரம்பரைத் தொழிலாகவே இவ்வோவியத்தை வரைந்தனர். இவ்வோவியர்கள் புராணங்களில் கூறப்படும் கடவுளரின் உருவங்களை ஓவியமாகத் தீட்டினர். இவ்வகை ஓவியங்களின் பின்புல வண்ணம் கரும்பச்சை, அடர்நீலம், ஒளிர் சிவப்பு ஆகியவற்றைக் கொண்டிருக்கும்.

### முகலாய ஓவியப் பாணி

கி.பி. (பொ.ஆ.) 16–ஆம் நூற்றாண்டில் முகலாயர்கள் ஆட்சிக் காலத்தில் தோன்றி வளர்ந்த ஓவியங்கள் இவ்வகை ஓவியங்களாகும். முகலாய மன்னரான ஹுமாயூன் ஆட்சிக் காலத்தில் இந்தியாவில் பாரசீக பாணியிலான ஓவியங்கள் வளர்ச்சி பெறத் தொடங்கின. முகலாயர் கால ஓவியர்கள் பாரசீக பாணியில் ஓவியங்களை வரையத் தொடங்கி இந்திய ஓவியப் பாணியையும் அதனோடு இணைத்தனர். எனவே பாரசீக, இந்திய ஓவியப் பாணிகளின் இணைப்பாக முகலாய ஓவியப் பாணி அமைந்தது. முகலாய மன்னரான ஜஹாங்கீர் ஓவியக்கலைக்கு முக்கியத்துவம் தந்ததுடன் சிறந்த ஓவியராகவும் விளங்கினார். இவ்வோவியங்களில் அரசர், அரசியர், அரண்மனைக் கொண்டாட்டங்கள், அரசவை நிகழ்வுகள், இயற்கை காட்சிகள், இளவரசர் மற்றும் இளவரசியர் ஆகியோரின் வீரச்செயல்கள் போன்றவை முக்கியத்துவம் பெற்றன.

### பசோஹ்லி ஓவியப்பாணி

கி.பி. (பொ.ஆ.) 17–ஆம் நூற்றாண்டில் காஷ்மீரில் ராவி நதிக்கரையில் அமைந்துள்ள பசோஹ்லி என்ற இடத்தில் தோன்றி வளர்ந்த



XII Ethics_Lesson 10.indd 247 05-04-2019 11:21:34

ஓவியக்கலையாகும். இவ்வகை ஓவியங்களில் புராணங்களில் குறிப்பிடப்பட்ட கடவுளர்களின் உருவம் முக்கியத்துவம் பெற்றது.

இவ்வாறு, இந்திய வரலாற்றில் ஓவியங்கள், இயற்கையையும், கடவுளையும், அரசர்களையும், அரசவை நிகழ்ச்சிகளையும் உலகிற்கு உணர்த்துகின்றன.

**உங்களுக்குத் தெரியுமா?** அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் வரையப்பட்ட ஓவியங்கள் இந்திய ஓவியத்தின் சிறப்புகளை வெளிப்படுத்துகின்றன. இலங்கை நாட்டில் சிகிரியா என்ற இடத்திலுள்ள ஓவியங்களில் இந்திய ஓவியங்களின் சாயல்கள் காணப்படுகின்றன.

## சிற்பக்கலை

சிற்பம் எனப்படுவது, ஒரு முப்பரிமாணக் கலைப் பொருளாகும். இது கடினமான அல்லது நெகிழ்வுத் தன்மையுள்ள பொருள்களுக்கு உருவம் கொடுப்பதன் மூலம் உருவாக்கப்படுகிறது. சிற்பங்களை உருவாக்குபவர் சிற்பியென அழைக்கப்படுகிறார்.

சிற்பக்கலையின் வாயிலாக இந்தியாவின் தொன்மை வரலாற்றையும் மக்களின் பண்பாட்டையும் அறிந்து கொள்ள முடிகிறது. சிற்பக்கலையைப்பற்றி அறிந்து கொள்வதற்குத் தொல்பொருள்சின்னங்கள், நாணயங்கள், கல்வெட்டுகள், இலக்கியங்கள் முதலியன சான்றுகளாக உள்ளன.

திருநெல்வேலி மாவட்டம், ஆதிச்சநல்லூரில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் தாய்க்கடவுளின், செப்புத் திருமேனிகள் கண்டெடுக்கப்பட்டன. இவை அனைத்தும் பழந்தமிழகத்தில் உலோகத் திருமேனிகள் இருந்தன என்பதை எடுத்தியம்புகின்றன. மொகஞ்சதாரோவில் கண்டெடுக்கப்பட்ட வெண்கலத்தினால் செய்யப்பட்ட நடனமாதுவின் உருவச்சிற்பம், நமக்குச் சிந்துவெளி மக்களின் சிற்பக்கலையைப் பறைசாற்றுகிறது. இந்தியாவில் பௌத்த சிற்பக்கலை, கி.மு. (பொ.ஆ.மு) மூன்றாம் நூற்றாண்டில் மௌரியர் ஆட்சியில் தொடங்கி கி.பி. (பொ.ஆ.) 12-ஆம் நூற்றாண்டில் பீகார், வங்காளத்தை ஆண்ட பாலர், சேனர் ஆட்சிவரை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வந்துள்ளது. இதைத் தவிர பௌத்த சமய கலைக்கூறுகள் ஜாவா, தாய்லாந்து, இலங்கை, சீனா, ஜப்பான், கொரியா, பர்மா, திபெத், நேபாளம் போன்ற ஆசிய நாடுகளிலும் பரவியுள்ளன.

### பௌத்தச் சமயத்தோடு தொடர்புடைய நாடுகளும் கட்டடங்களும்

| | | |
|---|---|---|
| ஜாவா | - | போரோபுதூரில் உள்ள ஸ்தூபி |
| இலங்கை | - | அனுராதபுரம், பொலனருவா |
| சீனா | - | உலகிலேயே மிகப்பெரிய செப்புத் திருமேனி |
| கொரியா | - | பாப்ச்சுசா |
| பர்மா | - | பகானின் ஆனந்த கோயில் |
| நேபாளம் | - | பாதனில் உள்ள தங்க விகாரம் |

குஷாணர் காலத்தில், லிங்கவழிபாட்டின் தொடர்ச்சியாக லிங்கத்தை ஒருமுகத்துடனும், நான்கு முகத்துடனும் படைத்து வழிபடும் மரபினைக் கொண்டிருந்தனர்.

இந்திய வரலாற்றில் சிற்பக்கலையின் வியத்தகு வளர்ச்சியினை குப்தர்கள் கால சிற்பங்களின் மூலம் நாம் அறியலாம். சாரநாத்திலும், மதுராவிலும் புத்தருக்குச் சிலைகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. தியோகர் என்னுமிடத்தில் விஷ்ணுவிற்குக் கற்கோவில், வடமதுராவில் உள்ள திருமாலின் சிற்பம், உதயகிரி குகைவாயிலில் உள்ள

தமிழ்நாடு பள்ளிக்கல்வித்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் **"தொன்மைப் பாதுகாப்புமன்றம்"** தொடங்கப்பட்டு நம் பண்பாட்டு அடையாளத்தையும் பாரம்பரியத்தையும் தொன்மையையும் பாதுகாத்து வருகிறது.



XII Ethics_Lesson 10.indd 248 05-04-2019 11:21:34

திருமாலின் வராக அவதார புடைப்புச்சிற்பம், பித்தார்கான்கோயிலில் காணப்படும் புராணக்கதைகள் கூறும் சுடுமண் சிற்பங்கள், தசாவதாரக் கோயிலின் நுழைவாயிலில் இருபுறமும் உள்ள கங்கை, யமுனை சிற்பங்கள் போன்றவை குப்தர் கால சிற்பங்களுக்குச் சான்றுகளாகத் திகழ்கின்றன.

இராஷ்டிரகூடர் காலசிற்பங்கள் புகழ்பெற்றவையாகும். எல்லோரா, எலிபெண்டா குகைகளில் காணப்படும் பைரவர், கைலாயமலையை இராவணன் தூக்கும் காட்சி, நடனமாடும் சிவன், பாடல் கேட்டு மகிழும் விஷ்ணு மற்றும் லெட்சுமி சிற்பங்கள் இந்திய சிற்பக்கலையின் மேன்மையைப் போற்றுகின்றன.



தியோகர்

## இந்தியக் கட்டடக்கலை

### லிங்கராஜா கோயில்

ஒடிசா மாநிலத்தின் தலைநகரான புவனேஸ்வரில் கி.பி.(பொ.ஆ.)11-ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கோயிலாகும். அனந்தவர்மன் காலத்தில் இக்கோயில் கட்டுவதற்கான நிலம் கொடையாக வழங்கப்பட்டது. இக்கோயிலின் வழிபாட்டுக்கூடம் ஜெக்மோகனா என்றழைக்கப்படுகிறது. இக்கோயில் அமைந்துள்ள புவனேஸ்வர் நகரம் ஒடிசாவின் கோயில் நகரம் என்று அழைக்கப்படுகின்றது.

மனித நாகரிக வளர்ச்சியின் சிறப்பு கூறுகளில் ஒன்று, கட்டடக்கலை. மனித இனத்தின் பண்பாட்டினை அவ்வினத்தின் கலையமைப்பினைக் கொண்டே கணக்கிடலாம். கட்டடக்கலை சின்னங்களே மனித இனத்தின் பல்வேறு கால வளர்ச்சியினை எடுத்துக் காட்டுகின்றன. இந்தியக் கட்டடக்கலையானது, பெரும்பாலும் அந்தந்தப்பகுதிகளைச் சார்ந்த சமூக பண்பாட்டின் வெளிப்பாடாக அமைந்துள்ளது.



பொம்மலாட்டம்

பொதுவாக இந்தியக் கட்டடக்கலை வடஇந்தியக் கட்டடக் கலை, தென் இந்தியக் கட்டடக்கலை என்று பிரிக்கப்படுகிறது. இந்த இரு கட்டடக் கலைகளுக்கு இடையில் பல்வேறு விதமான வேறுபாடுகள் காணப்படுகின்றன. தென்னிந்தியக் கட்டடக்கலையின் சிறப்பம்சம் உயர்கோபுரங்களும், சிற்பங்களும், மண்டபங்களும், தூண்களுமேயாகும். இச்சிறப்புமிக்க கோயில் கட்டமைப்புகள் திடீரென்று வந்தவை அல்ல. இவை, சுமார் 1500 ஆண்டு காலம் சிறிது சிறிதாக முன்னேறி வந்துள்ளன. இந்தியக் கட்டடக்கலை வளர்ச்சிக்கு முதலில் வித்திட்டவர்கள் பௌத்தர்களும், சமணர்களும் ஆவர். மௌரியர்கள், இந்தியாவில் பௌத்த கட்டடக்கலையைத் தொடங்கி வைத்தனர்.



XII Ethics_Lesson 10.indd 249 05-04-2019 11:21:36

www.tntextbook.org

பின்னர் வந்த குப்தர்களும் சமயம்சார்ந்த கோயில்கலையை வளர்த்தனர். தமிழகத்தில் இப்பணியைத் தொடங்கியவர்கள் பல்லவர்களேயாவர்.

### நாட்டுப்புறக் கலைகள்

ஒரு நாட்டின் கலை மற்றும் பண்பாடு அச்சமூகத்தினை வெளிப்படுத்தும் சிறந்த கருவியாகும். கலை என்பது பொழுதுபோக்கிற்காக மட்டுமன்றித் தகவல் ஊடகமாகவும், பண்பாட்டு ஊடகமாகவும் திகழ்கின்றது. கலை என்பது, மன உணர்வுகளின் வெளிப்பாடாகும். குறிப்பாக, நாட்டுப்புறக்கலைகள் நமது வாழ்வியலோடு தொடர்புடையவை, நமது பாரம்பரியத்தைப் வெளிப்படுத்துபவை கலை, சமூக வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் சிறந்த கருவியாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

நமது முன்னோர்களின் நம்பிக்கைகள், எண்ணங்கள், சிந்தனைகள், பழக்கவழக்கங்கள் ஆகியவற்றை நாட்டுப்புறக் கலைகளின் வாயிலாக அறிய முடிகிறது.

மலேஷியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு தமிழகத்திலிருந்தே கரகாட்டம், காவடியாட்டம், அலகு குத்தியாடுதல் போன்ற கலைகள் சென்றன. தமிழகத்திலிருந்தே தைப்பூசம், பொங்கல் போன்ற பண்பாடு பண்டிகைகளும் அங்குச் சென்று, அங்குள்ள தமிழர்களால் கொண்டாடப் படுகின்றன.

### பிறகொடைகள்

உலகிற்கு இந்தியா வழங்கிய கொடைகள் அளப்பரியன. உலக அமைதிக்கும், மகிழ்ச்சிக்கும் ஊன்றுகோலாய் அமைந்தது. மேலும், இது பல கொடைகளை வழங்கியுள்ளது. நறுமணப் பொருள்களான மஞ்சள், ஏலக்காய், சந்தனம், கிராம்பு போன்ற பொருள்களையும், மருத்துவப் பொருட்களையும் கண்டறிந்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்தது.

ஜனநாயக முறைப்படி தேர்தலை நடத்திப் பெருமை பெற்றுள்ள இந்தியா, பிறநாடுகளுக்கு வழிகாட்டியாகவும் திகழ்கின்றது. சோழர்காலத்தில் ஜனநாயக முறைப்படி **"குடவோலை தேர்தல் முறை"** நடைபெற்றுள்ளதை உத்திரமேரூர் கல்வெட்டு கூறுகிறது. இஃது இந்தியாவிற்கு மேலும் பெருமை சேர்க்கிறது.

அறிவியல், இலக்கியம், அமைதி, மருத்துவம் போன்ற துறைகளில் உலகப் புகழ்பெற்ற அறிஞர் பெருமக்களைக் கொண்டது இந்தியாவாகும். சர்.சி.வி. இராமன், ஹர்கோவிந்தகொரானா, சுப்ரமணியம்சந்திரசேகர், வெங்கட்ராமன் ராமகிருஷ்ணன் போன்றவர்கள் மருத்துவம் மற்றும் அறிவியலிலும், இரவீந்திரநாத் தாகூர் இலக்கியத்திலும், அமர்த்தியாசென் பொருளாதாரத்திலும், அன்னை தெரசாவுக்கு அமைதிக்காகவும் நோபல் பரிசு பெற்று இந்தியாவிற்குப் புகழ் சேர்த்தனர். தாவரவியலில் ஜெகதீஸ்சந்திரபோஸும், பூஜ்யத்தின் மதிப்பைப் பரப்பிய சீனிவாசஇராமானுஜமும், இசைக்காக ஏ.ஆர்.ரஹ்மானும் விளையாட்டுத்துறையில் விஸ்வநாதன் ஆனந்த்தும் இந்தியாவின் பெருமையை உலகறியச் செய்தனர்.



### நிறைவுரை

உலக மக்களுக்கு அமைதி, ஆனந்தம், சகிப்புத்தன்மை மற்றும் முழுமையான வாழ்க்கையை ஏற்படுத்தித் தந்தது இந்தியப் பண்பாட்டின் மிகப்பெரிய கொடையாகும். இந்தியப் பண்பாட்டின் மிகமுக்கிய கூறு **"தன்னை அறிதல்"** (Know Yourself) என்ற வாழ்க்கையின் குறிக்கோளை அடைவதேயாகும். எவ்வளவு பொருள், செல்வம் இருப்பினும் சாதாரண வாழ்க்கை முறை (Simple Life) இயற்கையோடு இணைந்த வாழ்வு, அனைத்துயிர்களும் இறைவனின் அம்சம், உலக மக்கள் அனைவரும் 'ஒரே குடும்பம்' என்ற கொள்கையும் உலகிற்கு இந்தியா அளித்துள்ளது என்று சொல்வதில் நாம் பெருமையடையலாம்.



XII Ethics_Lesson 10.indd 250 05-04-2019 11:21:36

www.tntextbook.org

# பயிற்சி

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

1. இந்தியப் பண்பாட்டின் 'ஆணிவேர்' எனக் குறிப்பிடப்படுவது

   அ) கலை　ஆ) ஆன்மிகம்　இ) யோகா　ஈ) மருத்துவம்

2. விடுபட்ட இடத்தில் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

   1) சரகர் – சரகசம்ஹிதா　2) சுசுருதர் – சுசுருதசம்ஹிதா

   3) அக்னி வேசர் – அக்னிவேச தந்திரா　4) வாக்பட்டர் – _________

   அ) ஆயுர்வேதம்　ஆ) அஷ்டாங்கஹிருதயா

   இ) இரசவாதமுறை　ஈ) யுனானி

3. பின்வரும் கூற்றுகளில் **பிரம்மகுப்தருக்குப்** பொருத்தமில்லாததைச் சுட்டிக்காட்டுக.

   அ) இயற்கணிதம் பயன்படுத்திய முதல் இந்தியர்

   ஆ) பூஜியத்தின் பயனை உலகுக்கு உணர்த்தியவர்

   இ) சித்தாந்த சிரோன்மணி என்னும் நூலை எழுதியவர்

   ஈ) குப்தர் காலத்தில் வாழ்ந்த கணிதமேதை

4. இந்திய இசையின் சாரமாகத் திகழும் வேதத்தைத் தேர்ந்தெடுக்க.

   அ) ரிக்　ஆ) யஜூர்　இ) சாமம்　ஈ) அதர்வணம்

5. பின்வரும் கூற்றுகளைப் படித்துச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று – 1: தமிழ்நாட்டுக்குரிய சிறந்த நடனங்களுள் ஒன்று பரதம்

   கூற்று – 2: பரத முனிவரால் உருவாக்கப்பட்டதால், இந்நடனம் பரதம் எனப் பெயர் பெற்றது.

   அ) கூற்று 1, கூற்று 2 தவறானவை　ஆ) கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

   இ) கூற்று 1, கூற்று 2 சரியானவை　ஈ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

6. பின்வரும் கூற்றையும் காரணத்தையும் படித்துச் சரியான விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   கூற்று : பஞ்சமுக வாத்தியம் என்பது, காரணப்பெயராக அமைந்துள்ளது. 'பஞ்ச' என்றால், ஐந்து என்பது பொருள்.

   காரணம் : குடம் வடிவத்திலுள்ள இவ்வாத்தியத்தில் மூடப்பட்ட ஐந்து வாய்கள் இருக்கும்.

   அ) கூற்று சரி, காரணம் போதுமானதன்று　ஆ) கூற்று, காரணம் இரண்டுமே தவறு

   இ) கூற்று, காரணம் இரண்டுமே சரி　ஈ) கூற்று சரி, காரணம் தவறு

7. வானவியலிலும் கணிதத்திலும் சிறந்து விளங்கியவர்களைத் தேர்ந்தெடுக்க.

   1) ஆரிய பட்டர்　2) வராகமிகிரர்　3) பிரம்மகுப்தர்　4) பாஸ்கரர்

   அ) 1, 2, 3 சரியானவை　ஆ) 2, 3, 4 சரியானவை

   இ) 1, 3, 4 சரியானவை　ஈ) 1, 2, 4 சரியானவை

8. சரியாகப் பொருத்தப்பட்டுள்ள விடைக்குறிப்பைத் தேர்ந்தெடுக்க.

   அ) கதகளி – 1) கேரளா　ஆ) யக்ஷகானம் – 2) பீகார்

   இ) குச்சிப்புடி – 3) கருநாடகா　ஈ) பிதஸியம் – 4) ஆந்திரா

   அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4　ஆ) அ – 2, ஆ – 3, இ – 4, ஈ – 1

   இ) அ – 4, ஆ – 1, இ – 2, ஈ – 3　ஈ) அ – 1, ஆ – 3, இ – 4, ஈ – 2



XII Ethics_Lesson 10.indd 251　05-04-2019 11:21:36

www.tntextbook.org

9. பின்வரும் தொடருக்குப் பொருத்தமான விளக்கத்தைக் கண்டறிக.

முதலாம் மகேந்திர வர்மன் 'சித்திரகாரப்புலி' என்று அறியப்படுகிறார். காரணம்,

1) ஓவியக்கலைக்கு ஊக்கமளித்தார்

2) தட்சணசித்திரம் என்ற ஓவிய நூலுக்கு உரை எழுதினார்

3) சித்திரம் வரைவதில் வல்லவராக விளங்கினார்

4) இதிகாச நிகழ்வுகளை ஓவியங்களாக வரையச்செய்தார்

அ) 1, 2, 3 சரியானவை ஆ) 1, 3, 4 சரியானவை இ) 1, 2, 4 சரியானவை ஈ) 2, 3, 4 சரியானவை

10. பொருத்துக.

அ) சர். சி. வி. இராமன் – 1) கணிதம்

ஆ) இரவீந்திர நாத தாகூர் – 2) பொருளாதாரம்

இ) அமர்த்தியாசென் – 3) இலக்கியம்

ஈ) சீனிவாச இராமானுஜம் – 4) அறிவியல்

அ) அ – 1, ஆ – 2, இ – 3, ஈ – 4 ஆ) அ – 2, ஆ – 1, இ – 4, ஈ – 3

இ) அ – 4, ஆ – 3, இ – 2, ஈ – 1 ஈ அ – 3, ஆ – 4, இ – 1, ஈ – 2

## சிறுவினா

1. 'அறம்' என்ற சொல்லுக்குத் தமிழ் இலக்கிய அகராதி கூறும் பொருள்களைக் குறிப்பிடுக.
2. 'சனாதனதருமம்' என்றால் என்ன?
3. இந்திய வானவியலுக்கு ஆரியபட்டர் அளித்த கொடை யாது?
4. பதினெண்சித்தர்களுள் நால்வர் பெயரைக் குறிப்பிடுக.
5. இந்தியக் கணிதவியலுக்குப் பிரம்மகுப்தர் ஆற்றிய பங்களிப்பை எழுதுக.
6. மோகினி ஆட்டம் – குறிப்பு வரைக.
7. குஜராத் மாநிலத்தின் பாரம்பரிய நடனங்கள் யாவை?
8. இந்திய ஓவியக்கலையின் சிறப்பை வெளிப்படுத்தும் இடங்களுள் எவையேனும் இரண்டைக் குறிப்பிடுக.
9. உத்திரமேரூர் கல்வெட்டு குறிப்பிடும் செய்தி யாது?
10. லிங்கராஜா கோவில் எங்கு அமைந்துள்ளது? அதன் சிறப்பு யாது?

## குறுவினா

1. தொல்காப்பியரின் அறக்கோட்பாட்டை விளக்குக.
2. 'எல்லாப் பொருளும் இதன்பால் உள' எனச் சிறப்பிக்கப்பெறும் அறநூல் யாது? அதன் சிறப்புகளைப் பட்டியலிடுக.
3. 'பஞ்சசீலக் கொள்கை' – குறிப்பு வரைக.
4. பஞ்சமுக வாத்தியத்தின் சிறப்பு யாது?
5. 'யக்ஷகானம்' எந்த மாநிலத்தின் நடனமாகும்? அந்நடனத்தின்வழி விளக்கப்படும் கருத்துகள் யாவை?
6. இந்திய ஓவியக்கலைக்கு முகலாய ஓவிய பாணியின் பங்களிப்பை விவரிக்க.

## நெடுவினா

1. உலகிற்கு இந்தியப் பண்பாட்டின் கொடைகளுள் 'அறக்கோட்பாடுகள்' பெறுமிடத்தை விளக்குக.
2. 'யோகப் பயிற்சியினால் ஆன்மநேய ஒருமைப்பாட்டு உரிமை பெறமுடிகிறது' – இக்கூற்றை நிறுவுக.
3. இந்திய வானவியலிலும் கணிதவியலிலும் சிறந்து விளங்கிய அறிஞர்களையும் அவர்களின் பங்களிப்பையும் தொகுத்து எழுதுக.
4. இந்திய மருத்துவம், உலகிற்கு அளித்த கொடைகளைப் பட்டியலிடுக.
5. 'இந்தியாவின் தொன்மை வரலாற்றையும் பண்டைக்கால மக்களின் பண்பாட்டையும் சிற்பக்கலைகள் வாயிலாக அறிந்துகொள்ளலாம்' – இக்கூற்றை விளக்குக.



XII Ethics_Lesson 10.indd 252 05-04-2019 11:21:36

## இணையச்செயல்பாடு

# உலகிற்கு இந்தியப் பண்பாட்டின் கொடை


இந்தியாவின் கலை மற்றும் கட்டடக்கலை பற்றி அறிவோமா?




### படிகள்

1. கீழ்க்காணும் உரலி/விரைவுக்குறியீட்டைப் பயன்படுத்தி, இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்குச் செல்க.
2. அந்தப்பக்கத்தில், இந்தியாவின் கட்டடக்கலையின் சிறப்பைத் தெரிந்து கொள்ளலாம்.
3. தங்களுக்குத் தேவையான பக்கத்திற்குச் சென்று, மேலும் அறிந்து கொள்க.

### செயல்பாட்டின் படிநிலைக்கான படங்கள் :




படி 1




படி 2

இந்தியாவின் கலை, கட்டடக்கலை இணையப்பக்கத்திற்கான உரலி :
**http://www.tamilvu.org/tdb/arts_tamildb/pdf/rkannan/11.parai_oviyam_matturm_kugaikalai.pdf**

B248_12_ETH_IND_CUL_TM

* படங்கள் அடையாளத்திற்கு மட்டுமே.



XII Ethics_Lesson 10.indd 253 05-04-2019 11:21:37

# கலைச்சொற்கள்

| | |
|---|---|
| Abiotic | உயிரற்றவை |
| Aboriginal | பழங்குடியினர் |
| Administration | நிர்வாகம் |
| Adoption | மகவேற்பு |
| Antiquity | பழங்கால பொருள்கள் |
| Archaeology | தொல்லியல் |
| Architecture | கட்டடக்கலை |
| Architect | கட்டடக் கலைஞர் |
| Asceticism | துறவறம் |
| Autobiography | சுயசரிதம் |
| Bhakti movement | பக்தி இயக்கம் |
| Bio diversity | பல்லுயிரினம் |
| Biotic | உயிருள்ள |
| Bond | பந்தம் |
| Cavalry | குதிரைப்படை |
| Cave Temple | குகைக்கோயில் |
| Cemetery | கல்லறை |
| Chariortry | தேர்ப்படை |
| Chief tains | குறுநில மன்னர்கள் |
| Chronology | காலவரிசை |
| Civilization | நாகரிகம் |
| Contemporary | சமகாலம் |
| Culture | பண்பாடு |
| Custom | பழக்கவழக்கம் |
| Detachment level | பற்றற்ற நிலை |
| Diversity | பன்முகத்தன்மை |
| Document | ஆவணம் |
| Ecology | சுற்றுப்புறவியல் |

| | |
|---|---|
| Elephantry | யானைப்படை |
| Empire | பேரரசு |
| Enormous | அளப்பரியது |
| Epics | காப்பியங்கள் |
| Epigraphy | கல்வெட்டியல் |
| Ethnic | இனக்குழு |
| Ethnic Museum | இன அருங்காட்சியகம் |
| Feudal System | நிலமானியம் |
| Fine Arts | நுண்கலைகள் |
| Flexibility | நெகிழ்வுதன்மை |
| Franchise | வாக்குரிமை |
| Genealogy | மரபியல் |
| Green constant plants | பசுமைமாறாத் தாவரங்கள் |
| Harmony | நல்லிணக்கம் |
| Human Environment | மனிதச் சூழல் |
| Humanity | மனிதநேயம் |
| Iconography | படிமவியல் |
| Immigration | குடியேற்றம் |
| Imperialism | ஏகாதிபத்தியம் |
| Individual duty | தனிமனிதக்கடமை |
| Inscription | கல்வெட்டு |
| Interregnum | இடையாட்சி காலம் |
| Legacy | மரபுரிமை |
| Logical | தருக்கவியல் |
| Manuscript | கையெழுத்துப்பிரதி |
| Meditation | தியானம் |
| Miniature | சிறிய உருவம் |



Kalachorkal.indd 254 28-03-2019 10:37:39

| | |
|---|---|
| Moanarchy | முடியாட்சி |
| Modestly | தன்னடக்கம் |
| Monasteries | மடங்கள் |
| Monotheism | ஒரு கடவுள் கோட்பாடு |
| Natural calamities | இயற்கைப் பேரழிவுகள் |
| Natural resources | இயற்கை வளங்கள் |
| Non–violence | அகிம்சை |
| Numismatics | நாணயவியல் |
| Optimism | நன்னம்பிக்கை |
| Origin | தோற்றம் |
| Ornaments | ஆபரணங்கள் |
| Passes | கணவாய் |
| Philosophy | தத்துவம் |
| Physiological | உடற் செயலியல் |
| Pilgrimage | புனிதப் பயணம் |
| Polytheism | பல கடவுள் கோட்பாடு |
| Pranayama | உயிர் மூச்சைக் கட்டுப்படுத்துதல் |
| Psychological | உளவியல் தொடர்பான |
| Reflection | பிரதிபலிப்பு |
| Reform | சீர்திருத்தம் |
| Reincarnation | மறுபிறவி |
| Religious principle | சமயக் கோட்பாடு |
| Renaissance | மறுமலர்ச்சி |
| Reformist | சமூகச் சீர்திருத்தவாதி |
| Rituals | சடங்குகள் |
| Sacrifice | தியாகம் |
| Saint | மகான் |
| Salvation | வீடுபேறு |
| Sanity | நல்லறிவு |

| | |
|---|---|
| Sati | உடன்கட்டையேறுதல் |
| Sculptor | சிற்பி |
| Sculpture | சிற்பம் |
| Secular | மதச்சார்பற்ற |
| Sigillography | முத்திரையியல் |
| Skyscrapers | வானளாவியக் கட்டடக் கலை |
| Social duty | சமூகக்கடமை |
| Soul | ஆன்மா |
| Spirituality | ஆன்மிகம் |
| Spread | பரவல் |
| Superstition | மூடநம்பிக்கை |
| The five elements | பஞ்ச பூதங்கள் |
| The five senses | ஐம்புலன்கள் |
| Therapeutic | நோய் நீக்கும் |
| Tolerance | சகிப்புத்தன்மை |
| Topography | நில அமையியல் (நில உருவ இயல்) |
| Tourism | சுற்றுலாவியல் |
| Treasury | கருவூலம் |
| Universe | பிரபஞ்சம் |
| Western Civilization | மேலைநாட்டு நாகரிகம் |
| Weather | காலநிலை |
| Western thoughts | மேற்கத்திய சிந்தனைகள் |
| WHO | உலகச் சுகாதார நிறுவனம் |
| Wisdom | ஞானம் |
| World Religious Conference | உலக சமய மாநாடு |
| Worship | வழிபாடு |
| Western Education | மேற்கத்திய கல்வி |

www.tntextbook.org



# பார்வை நூல்கள்


1. அறிவியல் தொழில் நுட்ப வரலாறு : **Dr. தங்கசாமி**
2. ஆசானா, பிராணயாமா, முத்ரா, பந்தா, பீகார் யோகா பாரதி, முங்கர் **– சுவாமி சத்தியானந்தா சரஸ்வதி (1997).**
3. ஆக்ஸ்போர்டின் இந்திய வரலாறு – Vol – II– V.A. ஸ்மித் – **தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்**
4. ஆரோக்கிய வாழ்வு **– இரா. ஆண்டியப்பன், (2001), பாரதி பதிப்பகம், சென்னை – 17.**
5. இந்துசமய இணைப்பு – சைவம், வைணவம் – **ஆறுமுக நாவலர்**
6. இந்தியக் கலை வரலாறு – **கோ. தங்கவேலு – தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்**
7. இந்தியச் சமயங்களும் தத்துவங்களும் அறிமுகம் **துரை. சீனுச்சாமி**
8. இந்தியாவின் சிறப்பு வரலாறு – **R.C. மஜும்தார், H.C. ராய்சௌதுரி, K. தத்தா, மொழியாக்கம்** – **தி.வெ.குப்புசாமி – தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்**
9. இந்திய தேசியப் பண்பாடு – Habid Hussian
10. இந்தியப் பண்பாடு பழைய பாடநூல் **–1996 தமிழ்நாட்டுப் பாடநூல்** கழகம்
11. இந்திய வரலாறு **– கோ. தங்கவேலு**
12. இந்தியப் பண்பாட்டு வரலாறு – **ந. சுப்பிரமணியன்**
13. இந்திய வரலாறு இரண்டாம் பகுதி – **கி.ர. அனுமந்தன், ந.க. மங்கள முருகேசன்**
14. இராசராசேச்சுரம் – **நடன காசிநாதன் தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை வெளியீடு**
15. சுற்றுச் சூழல்கல்வி – **த. சம்பத்குமார் – உதவிப் பேராசிரியர்**
16. சுற்றுச்சூழல் பாதுகாப்பு – **முனைவர் ந.க.மங்களமுருகேசன்**
17. சுற்றுச் சூழல்கல்வி – **ABM மீனாகுமாரி பேராசிரியர்**
18. டில்லி சுல்தானியத்தின் வரலாறு Vol – I– T.R. ராமச்சந்திரன் – **தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்**
19. தமிழ்க் கோவில்கள் தமிழர் பண்பாடு **– தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்**
20. தத்துவமும் பண்பாடும் – **பாஸ்கரன்.க**
21. தமிழர் வரலாறும் பண்பாடும் **– நா. வானமாமலை**
22. தமிழர் பண்பாடும் தத்துவமும் **– நா. வானமாமலை**
23. தமிழ்நாட்டு வரலாறு – **சோழ பெருவேந்தர் காலம் (கி.பி 900 முதல் – 1300 வரை) தமிழ் வளர்ச்சி துறை வெளியீடு**
24. தியானயோகம் **– S. ஜனார்த்தன், (2000),** RKM எண்டர் பிரைசஸ், சென்னை –6.
25. திருமந்திரம் **–** ஞா. **மாணிக்கவாசகன்** பத்தாம் பதிப்பு 2016 உமா பதிப்பகம்
26. பஞ்சபூதப் பாதுகாப்பு – **முனைவர் ச.மி. ஜான்கென்னடி**
27. பண்பாட்டு மானிடவியல் **– பக்தவத்சல பாரதி**
28. பண்டைய இந்தியா D.D. கோசாம்பி தமிழாக்கம் R.S. நாராயணன் என்கிற S.R.N. சத்யா.




Kalachorkal.indd 256 28-03-2019 10:37:39

www.tntextbook.org

29. பிற்கால சோழர் சரித்திரம் – **தி. வை. சதாசிவ பண்டாரத்தார்**
30. புதிய கால இந்தியவரலாறு – **சத்திய நாத அய்யர்** Vol III
31. பௌத்தமும் தமிழும், சமணமும் தமிழும் – **மயிலை சீனி. வேங்கடசாமி**
32. வட இந்திய வரலாறு – (ஹர்ஷரது மரணம் முதல் கி.பி. 1206 வரை) – **தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்**
33. விஜயநகரப் பேரரசின் வரலாறு – **டாக்டர். அ. கிருஷ்ணசாமி, தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.**
34. யோகாசனமும் இயற்கை உணவும், **தாமரை பப்ளிகேஷன்**(Pvt Ltd), அருணாசல சாமிகண்ணு, (2006) **சென்னை** – 98.
35. யோகா – உடல்நலம் மற்றும் உடற்கல்வி **– முனைவர் ச. பீட்டர் ஆனந்த்**, சம்யூத்தா (2016) பப்ளிகேஷன், சேலம்–04.
36. A consise History of South India – Noberu Karashima Oxford press
37. An Advanced History of India – R.C. Majumdar – Raychudhary – Trinity Press
38. An Advanced History of India – R.C. Majumdar, Raychaudari, Trinity press
39. Contemparary Indian Philosophy – Basant Kumar LAL.
40. Evolution of Indian Culture – Luniya .B.L
41. Evolution of Indian Culture – Pandey and Singh
42. History of Ancient India – J.L Metha – Lotus Press
43. History of Ancient India – L.P Sharma – Konark Publication
44. History of Ancient India – V.D. Mahajan – Chand Publication
45. History of Medieval India – 1000 – 1761 – L.P.Sharma – Konark Publications
46. History of Medival India – Sathish Chandra
47. History of Modern India – BL. Grover. Alka Metha (p.p 273–291)
48. History of Religion – Pramod Thakur.
49. http://mathi accademy.blog sport.com.
50. http://www.tamilvu.org/library/nationalized/PDF
51. Inidan cultural and Heritage – Binod Bihari Satpatay
52. Oxford History of India –V.A Smith – Tamilnadu text book corporation publication
53. Scott (2001) P.6 citing Harris Marvin (2001) Our kind; who we are where we came from. P.P 213–226.
54. South Asian Politics and Religius – V.A. Smith
55. The Cultural Heritage of India – DR. Sarvepalli Radha Krishnan/
56. The Hidhu view of life – Dr. S. Rathakrishnan
57. The Mughal Empire – Dr. A. L. Srivastava – Shiva Lal Agarwala & Co Pvt LTD, Agra
58. The oxford history of India – V.A. Smith Vol III
59. The Repressentation of Sati; by Robert. L; Hard Grave . Jr

www.tntextbook.org




மேலாய்வாளர் குழு

**திரு. ம. கலியமூர்த்தி,**
மேனாள் வரலாற்றுத்துறைத் தலைவர்,
மாநிலக் கல்லூரி, சென்னை.

**முனைவர் பொன். குமார்,**
இணை இயக்குநர் (பாடத்திட்டம்)
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

பாடநூல் வல்லுநர் குழு

**முனைவர் கே. சம்பத்குமார்,**
மேனாள் பேராசிரியர், தத்துவவியல் துறை,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

**முனைவர் அப்பன் இராமானுஜம்,** மேனாள் பேராசிரியர்,
தத்துவவியல் துறை, இராமகிருஷ்ணா மிஷன்
விவேகானந்த கல்லூரி, மைலாப்பூர், சென்னை.

**முனைவர் பி. எஸ். இராஜேந்திரன்,**
மேனாள் பேராசிரியர்,
பூம்புகார் கல்லூரி, மேலையூர், நாகப்பட்டினம்.

**முனைவர் ஏ. செல்லப்பெருமாள்,** பேராசிரியர் மற்றும்
துறைத்தலைவர், மானுடவியல் துறை,
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி.

ஒருங்கிணைப்பாளர்

**ந. இராமலிங்கம்,** உதவிப் பேராசிரியர்,
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

**கோ. பாக்கியலட்சுமி,** முதுகலை ஆசிரியர்,
வ.உ.சி அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஒட்டப்பிடாரம்,
தூத்துக்குடி.

**வடிவமைப்புக் குழு**

ஒருங்கிணைப்பு

ரமேஷ் முனிசாமி

பக்க வடிவமைப்பாளர்

காமாட்சி பாலன் ஆறுமுகம்

தரக் கட்டுப்பாடு

மனோகர் ராதாகிருஷ்ணன், ராஜேஷ் தங்கப்பன்

தட்டச்சு

ஆ. அஸ்வினி, போளூர்

பாடநூல் ஆசிரியர்கள்

**முனைவர் ச. பீட்டர் ஆனந்த்,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
உத்தமசோழபுரம், சேலம்.

**பா. மலர்விழி,** விரிவுரையாளர்,
மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்,
திருவூர், திருவள்ளூர்.

**கி. முரளி,** தலைமை ஆசிரியர், அரசினர் மேல்நிலைப்பள்ளி,
ஆண்டிபந்தல் பனங்குடி, திருவாரூர்.

**இரா. ஜெனமேஜெயன்,** முதுகலை ஆசிரியர்,
அரசினர் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி,
பொன்னேரி, திருவள்ளூர்.

**கி. அன்பழகன்,** முதுகலை ஆசிரியர்,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, பேரளம், திருவாரூர்.

**த. முத்து,** முதுகலை ஆசிரியர்,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, லாடாவரம்,
திருவண்ணாமலை.

**ப. வேதபுரீசன்,** முதுகலை ஆசிரியர்,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஆழியூர், நாகப்பட்டினம்.

**தி. ஞானவேல் ,** முதுகலை ஆசிரியர்,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஓங்கூர், விழுப்புரம்.

**ரெ. கொளஞ்சிநாதன்,** முதுகலை ஆசிரியர்,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, கா. அம்பாபூர், அரியலூர்.

விரைவுக் குறியீடு மேலாண்மைக் குழு

**இரா. ஜெகநாதன்,** இ.நி.ஆ, ஊ.ஒ.ந.நி.பள்ளி,
கணேசபுரம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.

**மு.சரவணன்,** ப.ஆ, அ.ம.மே.நி.பள்ளி, புதுப்பாளையம்,
வாழப்பாடி, சேலம்.

**ம. முருகேசன்,** ப.ஆ, ஊ.ஒ.ந.நி. பள்ளி,
பெத்தவலங்கோட்டகம், முத்துப்பேட்டை, திருவாரூர்

கணினித் தொழில்நுட்பம்

பா. ரூபி பாக்கியம்
ஊ. ஒ. நடுநிலைப் பள்ளி
கே. கே. நகர் திருத்தணி

நூலக வளம்

இரா. ஜெயந்தி, நூலகர்
மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும்
பயிற்சி நிறுவனம், சென்னை.

இந்நூல் 80 ஜி.எஸ்.எம். எலிகண்ட் மேப்லித்தோ தாளில்
அச்சிடப்பட்டுள்ளது. ஆப்செட் முறையில் அச்சிட்டோர்: